# தமிழக மகளிரியல்

பதிப்பாசிரியர்

**முனைவர் அன்னி தாமசு**

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

# தமிழக மகளிரியல்

பதிப்பாசிரியர்

முனைவர் அன்னி தாமசு


உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

**International Institute of Tamil Studies**

*C.P.T. Campus, Taramani,*

*Chennai - 600 113*

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | | Tamilaka makaliriyal |
| Editor | : | Dr. Annie Thomas<br>Professor<br>Faculty of Sociology, Art and Culture<br>International Institute of Tamil Studies |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.P.T. Campus, Chennai - 600 113. |
| Publication No. | : | 418 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2002 |
| Paper Used | : | 18.6 kg TNPL Super Printing |
| Size of the Book | : | 22 x 14 cms |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | xxx iv + 315 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 80/- |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Chennai - 600 004 |
| Subject | : | Women's Studies |

முனைவர் **சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

மானிட வாழ்வில் பெண் இல்லையென்றால் அவ்வாழ்க்கை உயிரற்றதாகக் கருதப்படும். பெண் இல்லாத மனித வாழ்க்கை 'மாலுமி இல்லாத மரக்கலம்' போன்றது. சமுதாயத்தின் சரிபாதி அங்கமான பெண்கள் காலங்காலமாகச் சமுதாயத் தாக்குதலுக்கு ஆட்பட்டு உரிமை இழந்து வந்திருக்கிறார்கள். அதனால்தான் பாரதி, பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் அனைவரும் பெண் விடுதலையைப் பற்றிச் சிந்தித்தனர். ஆணுக்கு இணையாக அனைத்து நிலைகளிலும் பெண் இருக்க வேண்டும் என்ற தேவையை இவர்கள் தம் கவிதை வாயிலாக எடுத்துக்கூறி வந்துள்ளனர். பெண்களைப் பற்றி, பெர்னாட்ஷா கூறியதாகப் பாரதிதாசன், "கல்வியில் உரிமையில்லை, பெண்களுக்குக் கடைத்தேற வழி இல்லை" என்று கூறுவதால் பெண் இனத்தின் நிலையைப்பற்றி அவர் கொண்ட கவலையை உணரமுடிகின்றது. இதனால், பாரதிதாசன் மூடத் திருமணத்தைச் சாடியதோடு குழந்தைத் திருமணக் கொடுமையையும், கைம்மைக் கொடுமைகளையும், கைம்பெண் நிலையையும் எடுத்துக் கூறிப் பெண்ணினம் அனைத்து உரிமைகளையும் பெறுகின்ற நிலை வரவேண்டும் என்பதை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.

ஆண் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடியதோடு பெண் குழந்தைக்கும் தாலாட்டுப் பாடியிருப்பதால், பாரதிதாசன் பெண் இனத்தை எந்த அளவிற்கு உயர்வாக நினைத்துள்ளார் என்பதை அறியலாம்.

இத்தகைய பெண்ணினத்தின் உயர்விற்காக எழுச்சிச் சிந்தனையுடைய பலரும் குரல் எழுப்பியுள்ளனர்; போராடியுள்ளனர். தமிழக மகளிரின் நிலையைப் பல்வேறு காலக் கட்டங்களில் இருந்து ஆராய்ந்து பார்ப்பதால் அவர்களது வாழ்வுக்கும், மேம்பாட்டுக்கும் ஏற்ற பல்வேறு சிந்தனைகளைக் காண முடியும். அந்த வகையில் 'தமிழக மகளிர்' என்ற தலைப்பில் 1983இல் தொடங்கி, திசம்பர் 1984இல் முடிவுற்ற திங்கள் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பினை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இப்போது நூலாக வெளியிடுகிறது. இக்கருத்தரங்குகளில் பெண்ணியச் சிந்தனையுடைய சான்றோர் பலரும் கட்டுரை வழங்கியுள்ளனர். அவர்கள் வழங்கியுள்ள கட்டுரைகளில் பெண்கள் மேம்பாட்டிற்குரிய ஆக்கபூர்வமான சிந்தனைகளையும், சீர்கேடுகளைக்

களையும் சிந்தனைச் சிதறல்களையும், தாழ்மைக்குணம் போக்கும் தகுதிசான்ற கருத்துகளையும் காணலாம்.

8 ஆண்டுகளுக்குப் பிறகு 'தமிழக மகளிரியல்' என்ற பெயரில் இந்நூல் வெளிவருகின்றது. இந்நூலை வெளியிடுவதில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பெரு மகிழ்ச்சி அடைகிறது. இன்றைய பெண்ணியச் சிந்தனை ஆய்விற்கும், பெண்ணியம் பற்றி மேலாய்வு செய்வோர்க்கும் இந்நூல் ஒரு கருத்துக்களமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் முனைவர் மு. தம்பிதுரை அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு பி.ஏ. இராமையா, இ.ஆ.ப அவர்களுக்கும், கூடுதல் இணைச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன், இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி. இந்நூலினை ஒளியச்சுக் கோப்புச் செய்த கணிப்பொறியாளர் திரு ஸ். கோபிநாத்திற்கும் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி.

**இயக்குநர்**

# முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து *1993* சனவரி முதல், 'தமிழக மகளிர்' என்ற தலைப்பில் திங்கள் கருத்தரங்குகளை நடத்தியது. பல்கலைக் கழகத்தின் அப்போதைய துணைவேந்தர் டாக்டர் சு. லட்சுமி அவர்களும், அப்போதைய தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் வி.பி. தேவதத்தா அவர்களும் இக்கருத்தரங்கத்திட்டத்திற்கு மிக உற்சாகமான வரவேற்பும் ஒத்துழைப்பும் கொடுத்தது சிறப்பாகக் குறிப்பிடற்குரியது. கருத்தரங்குக்கு ஏற்ற ஆய்வுத் தலைப்புகளைத் தேர்ந்து தருதல், கட்டுரை வழங்கத் தகுதியானவரை அடையாளங் கண்டு ஏற்படுத்தல், உரையாற்றல் எனப் பன்முகநிலையில் ஒருங்கிணைப்பு வழங்கப்பெற்றமையும் சுட்டற்குரியது. அப்பல்கலைக் கழகம் சென்னையில் இருந்த காலகட்டத்திற்குப் பின்பும், அன்னாரின் ஈடுபாடு இக்கருத்தரங்கில் காட்டப்பட்டு வந்தமையும் குறிப்பிடற்குரியது.

இக்கருத்தரங்கத்தின் தொடக்க விழா, *20.1.93* அன்று சென்னை அண்ணாசாலை, பாவாணர் மாவட்ட மைய நூலகத்தின் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் அப்போதைய துணைவேந்தர் டாக்டர் சே. சாதிக் அவர்கள் இவ்விழாவுக்குத் தலைமையேற்று, இத்தகு கருத்தரங்கத்தின் முக்கியத்துவத்தைப் பாராட்டிப் பேசினார். அதைத் தொடர்ந்து, டாக்டர் சு. லட்சுமி அவர்கள் 'பெண்ணியம்' குறித்து விரிவாக உரையாற்றினார்.

*24* திங்கள் தொடர்ந்து நிகழ்ந்த இக்கருத்தரங்கின் முதல் *22* திங்கள் நிகழ்வுகளை டாக்டர் அன்னி தாமசும் (அப்போதைய இயக்குநர் பொறுப்பு) தொடர்ந்த திங்கள் கருத்தரங்குகளை அப்போதைய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர். ச.சு. இராமர் இளங்கோ அவர்களும் பொறுப்பேற்று நடத்தினர். பேராசிரியப் பெருமக்களும், கல்வியாளரும், துறை வல்லுநரும் சமூகத் தளத்திலும், இலக்கியக் களத்திலும் தம் ஆய்வுப் பார்வையைச் செலுத்திக் கட்டுரைகள் வழங்கினர்; கால அட்டவணை கீழ்வருமாறு அமைந்தது.

| வ.எண் | நாள் | கட்டுரையாளர் | தலைப்பு |
|---|---|---|---|
| 1. | 20.1.1993 | வி.பி. தேவதத்தா | மகளிரியல் |
| 2. | 10.2.1993 | வ. கீதா | தமிழகத்தில் பெண் விடுதலை சிந்தனையும் மகளிர் அமைப்புகளும் - ஒரு பார்வை |
| 3. | 10.3.1993 | இரா. பிரேமா | இந்தியப் பெண்ணியமும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியும் |
| 4. | 21.4.1993 | பி.என். பிரேமலதா | சுதந்திரப் போராட்டத்தில் தமிழக மகளிர் |
| 5. | 12.5.1993 | அ. மங்கை | பெண்ணிய நோக்கில் இலக்கியப் படைப்பும் வாசிப்பும் |
| 6. | 9.6.1993 | வீ. அரசு | தமிழ் அச்சுச் சாதனமும் பெண் நாவலாசிரியைகளும் (1920-க்கு முன்) |
| 7. | 14.7.1993 | இ. மறைமலை | பெண்ணியத் திறனாய்வு |
| 8. | 11.8.1993 | கே. சுப்பம்மாள் | தமிழக மகளிரும் உயர் கல்வியும் |
| 9. | 8.9.1993 | நேன்சி டேவிட் | பணிச் சந்தையில் பால் அடிப்படைபேதம் |
| 10. | 13.10.1993 | ச. சிவகாமி | பெண்ணியப் பார்வையில் கம்பராமாயணம் |
| 11. | 10.11.1993 | ச முத்துச்சிதம்பரம் | சமூக மதிப்புகளும் மகளிரும் |
| 12. | 8.12.1993 | தி. கமலி | திரு.வி.க. அவர்களின் பெண்மைக் கோட்பாடுகள் - ஒரு பெண்ணியப் பார்வை |
| 13. | 12.1.1994 | வேனிலா ஸ்டாலின் | பெண்ணியத்தில் ஔவையின் போக்கு |
| 14. | 9.2.1994 | அரங்க.இராமலிங்கம் | பாரதிதாசன் பெண்ணியச் சிந்தனைகள் |

| வ.எண் | நாள் | கட்டுரையாளர் | தலைப்பு |
|---|---|---|---|
| 15. | 9.3.1994 | ப. மகாலிங்கம் | பாரதியாரின் பெண்ணியச் சிந்தனைகள் |
| 16. | 13.4.1994 | இரா. கஸ்தூரி | பட்டுக்கோட்டையாரின் பெண்ணியச் சிந்தனைகள் |
| 17. | 11.5.1994 | பா. தமிழ்ச்செல்வி | ஜீவாவின் பெண்ணியச் சிந்தனைகள் |
| 18. | 8.6.1994 | கோ.வெ. கீதா | வ.ரா. அவர்களின் பெண்ணியச் சிந்தனைகள் |
| 19. | 13.7.1994 | ர. விஜயலட்சுமி | மகளிரியல் குறித்த சில ஆய்வுநெறிமுறைகள்-ஒரு நோக்கு |
| 20. | 10.8.1994 | ஆர். அம்பிகா | கிராமச் சுகாதாரச் செவிலியர் நடைமுறை வாழ்க்கையும் பெண்ணியக் கோட்பாடும் |
| 21. | 14.9.1994 | பாக்யவதி சங்கரலிங்கம் | பெண்ணிய நோக்கில் பெருங்கதை |
| 22. | 12.10.1994 | ம.ப. சித்ரா | பகுத்தறிவு இயக்கத்தின் பெண் குறித்த பார்வை |
| 23. | 9.11.1994 | ந. கடிகாசலம் | பழமொழிகளில்............ |
| 24. | 14.12.1994 | பா. புவனேஸ்வரி | ஈ.வெ.ரா. பெரியார் அவர்களின் பெண்ணியச் சிந்தனைகள் |

பெண்ணியம் பற்றிய பன்முகநோக்கு இக்கட்டுரைகளில் வெளிப்பட்டது. இவற்றைத் தொகுத்து நூலாக்கும் பணி அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. மூன்று பார்வையினவாக இக்கட்டுரைகள் அமைவதால் அதற்கேற்ப வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. மகளிரியல், பெண்ணியம் தொடர்பான தகவல்கள், இத்துறையின் வரலாற்று வளர்ச்சி, ஆய்வு அணுகுமுறை என்பன முதல் வகைப்பாட்டில் உட்படுகின்றன. வரலாறு, சமூகம், பொருளியல், கல்வியியல் ஆகிய துறைச் சார்பின் நோக்குடைய ஆய்வுகள் மற்றொரு வகைப்பாட்டில் இணைகின்றன. இலக்கியம், இயக்கம் என்ற பாங்கிலமைவன பெரும்பான்மையாகப் பிறிதொரு வகைப்பாட்டில்

பொருந்துகின்றன. இவ்வாறு இந்நூலமைப்பு பன்முக அறிநிலையில் பெண்ணியத்தை வழங்கும் சிறப்புக் கொள்கின்றது. அறிமுக நிலையினருக்கும், ஆய்வு விருப்பினருக்கும், ஆழ்பாங்கினருக்கும் ஒருங்கு பயன்தரும் பான்மை பெறுகின்றது.

**'மகளிரியல்'** என்ற தலைப்புக் கட்டுரையில், மகளிரியல் தோற்றம், பெண்ணியம் உந்துசக்தியாக அமைந்தமை, இந்தியாவில் மகளிரியல் வளர்ச்சிக்கான முதன்மைக் காரணங்கள் ஆகியவை குறிப்பிடப் படுகின்றன. மகளிரியல் என்பது சமூக மாற்றத்திற்கான ஒரு கருவி; கல்விமுறை மூலமே இதனைச் செயற்படுத்த முடியும்; உயராய்வு - கல்வி நிறுவனங்களில் மகளிரியலை அறிமுகப்படுத்தியிருப்பது இம்மாற்றத்தைக் கருதியாகும்; மகளிரியல் இன்னும் பரவலாகவும் ஆழமாகவும் கற்க, ஆயப்பட வேண்டும் என்பன இதில் குறிக்கப்படுகின்றன.

**'பெண்ணியத் திறனாய்வு'** என்றால் என்ன என முழுமையாகத் தெரிந்து கொள்ள இத்தலைப்பில் அமைந்த கட்டுரை உதவுகின்றது. மேனாட்டு அறிஞர் தரும் விளக்கங்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன. பெண்ணியத் திறனாய்வின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குவன அன்பு, சீற்றம் எனும் இரு உணர்வுத் துடிப்புகளாகும்; பெண்ணியம் ஒரு அரசியல் செயல்திட்டம்; அதன் வெற்றிக்கு வழிவகுக்கும் பணிகளுள் ஒன்றாகப் பெண்ணியத் திறனாய்வு விளங்க வேண்டும்; அதற்கேற்ற வழிமுறைகளை எவ்வாறு கண்டு மேற்கொள்வது என்ற கருத்துரைகளையும் இக்கட்டுரை வழங்குகின்றது.

மகளிருக்காகவும் மகளிர் மேம்பாட்டிற்காகவும் தனியாரும் நிறுவனங்களும் ஆய்வு செய்யும் நிலை பெருகிவருகின்றமையால் அதற்கான நெறிமுறைகளை வகுக்கும் முயற்சி **'மகளிரியல் ஆய்வு நெறிமுறைகள்'** எனும் கட்டுரையில் அமைகின்றது. *1970* ஆம் ஆண்டுக்குப் பின், ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் இத்துறையில் மிகுதியாக ஈடுபடுகின்றனர். கல்லூரி, பல்கலைக்கழகம், மகளிரியல் மையம் போன்றவற்றால், பெண்களின் நிலையை உயர்த்தும் திட்டங்கள், மகளிரின் திறன்களை வெளிக்கொணரும் வாய்ப்புகள், அவற்றை இருட்டடிக்கும் காரணங்களை அடையாளங்கண்டு விலக்குதல், மகளிர் அனுபவிக்கும் அடக்கு முறைகளை இனங்காணல் ஆகிய ஆய்வுகள் மேற்கொள்ளும்போது கையாளப்படவேண்டிய நெறிமுறைகள் எவை எனக் காட்டுவது இக்கட்டுரையின் இலக்காகும். பொதுவாக, இந்தியப் பெண்களின் துயரங்களுக்கு அடிப்படைக் காரணமாக அமையும் பொருளாதாரச்

சமச்சீரின்மை, சமயக் கோட்பாடுகள், மரபுவழிச் சிந்தனைகள், பெண்ணை ஆணுக்கு அடுத்த நிலையிலும் - ஆணைச் சார்ந்த நிலையிலும் வைத்துள்ளமை ஆகியன அமைகின்றன. இவ்விரு நிலையிலும் வேண்டப்படாதன களையப்பட்டு, மகளிர் மேம்பாடு அடைதற்குப் பல்கலைக் கழக நிலையில் மகளிரியல் ஆய்வாளர் திட்டங்களையும் வழி வகைகளையும் வகுப்பதுடன், மகளிரியல் மேம்பாட்டிற்காகச் சமூக ஊழியர் நடைமுறையில் கைக்கொள்ளும் வழிகளையும் அறிந்து, அவருடன் தொடர்பு கொண்டு ஏற்புடைய செயன்முறைகளை மேற்கொள்வதும் தகும் என்பதையும் இக்கட்டுரை கருத்துரையாக வழங்கும்.

தமிழகத்தில் பெண் கல்வி, பெண்கள் முன்னேற்றம் ஆகியன குறித்து சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்பிருந்தே பலர் பேசவும் அக்கறை காட்டவும் தொடங்கினர். பெண்கள் நலம் பற்றித் தோன்றிய சமூக அக்கறையைத் தேசிய அக்கறையாக வகுத்த பெருமை காந்தியடிகளைச் சாரும். அவரது விளக்கங்களைத் தமிழ்ச் சூழலுக்கு ஏற்ப வடிவமைத்தவர் திரு வி.க. அவர்கள். *1930*-களில் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம், பெண் விடுதலை என்ற கருத்திற்குப் புதிய, புரட்சிகரமான விளக்கங்களை அளித்தது. இக்கருத்துகளும், இயக்கங்களும் தமிழக மகளிர் சமூகத்தில் என்ன தாக்கங்களை ஏற்படுத்தின, தமிழகத்தில் பெண் விடுதலை பற்றி என்னென்ன சிந்தனைப் போக்குகள் நிலவி வந்தன, எத்தகு மகளிரமைப்புகள் இத்தகு பணியை மேற்கொண்டன என்பன குறித்த ஆய்வுகளின் தேவையை '**தமிழகத்தில் பெண்விடுதலைச் சிந்தனையும் மகளிர் அமைப்புகளும்**' எனும் உரை முன்வைக்கின்றது.

இந்தியப் பெண்ணியவாதிகளை இனங்காண்பதும், அதன் வழி தமிழகப் பெண்ணியவாதியாக டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்களை இனங்காண இயலுமா என்பதை ஆய்வதுமாக, '**இந்தியப் பெண்ணியமும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியும்**' என்ற கட்டுரை அமைகின்றது. பெண்ணியம் என்பதன் விளக்கம், பெண்ணியவாதிகள் என்பதன் வரையறை, மேலை நாட்டுப் பெண்ணியவாதிகளுக்கும் இந்தியப் பெண்ணியவாதிகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடு என்பன கட்டுரைக்கு அடித்தளம் வழங்குகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை, பாரதி, வ.ரா., பெரியார் ஆகியோரைப் பெண்ணியவாதிகளாக அனைவரும் ஏற்கின்றனர்; டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்களையும் இவ்வடிப்படையில் ஒரு பெண்ணியவாதியாகக் கொள்ளமுடியும் என்பதை அவர் ஆற்றியுள்ள

பல்வேறுபட்ட அரசியல், சமூகப் பணிகளை ஆதாரங்காட்டிக் கட்டுரையாளர் நிறுவுகின்றார்.

சுதந்திரப் போராட்டத்தில் தமிழக மகளிர்' பங்கினை ஆய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது, **'விடுதலைக்கு வித்திட்ட வீரத்தமிழ் மங்கையர்'** என்ற கட்டுரை. சமூகக் கட்டுப்பாட்டிற்குள் அடைபட்டுக் கிடந்த தமிழக மகளிரை அரசியலுக்கு ஈர்த்தது, அன்னி பெஸன்ட் என்ற அயர்லாந்து அம்மையாரால், காங்கிரஸ் ஆதரவோடு, *1916*இல் சென்னையில் தொடங்கப்பட்ட 'ஹோம் ரூல்' இயக்கமாகும். 'சட்ட மறுப்பு இயக்க'த்தில் பெண்கள் அதிக அளவு ஈடுபடலாயினர். 'உப்பு சத்தியாகிரகப்' போராட்டத்தில் பங்குபெற்றமையால் கைதானவரில் குறிப்பிடத்தக்க தமிழ்ப் பெண்மணி ருக்மணி லட்சுமிபதி ஆவர். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின்போது அந்தோணி அம்மாள், பேச்சியம்மாள், கோவையைச் சார்ந்த குட்டியம்மாள், சோலையம்மாள் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். 'தீண்டாமை ஒழிப்பு' இயக்கத்தில் ஈடுபட்டமையால் சௌந்தரம் இராமசந்திரன் கைது செய்யப்பட்டார். இவ்வாறு, இந்தியா சுதந்திரம் அடைய வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் தங்களைப் போராட்டங்களில் அர்ப்பணித்துக் கொண்ட தமிழக மகளிர் பற்றிய தகவல்கள் இக்கட்டுரையில் வழங்கப்பெறுகின்றன.

தமிழ்ச் சமுதாயத்தில் வழங்கும் மதிப்புகள் மகளிரின் வாழ்க்கை முறையினை எவ்வாறு நிர்ணயிக்கின்றன என்பதைச் **'சமூக மதிப்புகளும் மகளிரும்'** என்ற கட்டுரை ஆராய்கின்றது. ஒரு சமூகத்தில் நிலவும் மதிப்புகளுக்கும் அந்நாட்டு மக்களின் வாழ்க்கை முறைக்கும் உள்ள தொடர்பு சமூகவியலாரின் கோட்பாடுகள் மூலம் விளக்கம் பெறுகின்றது. சமூக மதிப்புகள், நகரங்களில் மட்டுமல்ல, கிராமங்களில் வாழும் மகளிரையும் மிகுதியாகப் பாதிக்கின்றன. இன்றைய சமுதாயத்தில், மகளிரின் நடைமுறை வாழ்வைப் பாதிப்பவை என்று மகளிர் கருதும் மதிப்புகள், சமூகவியலாளரும் மகளிரியல் வல்லுநரும் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படுகின்றன. திருமணம், மகப்பேறு, ஆண் குழந்தை என்று அடிப்படையிலேயே சில கட்டுகளால் மகளிர் பிணிப்புண்டமை காட்டப்படுகின்றது. இச்சமூக மதிப்புகள் மாறாதவரை, சட்டங்களினால் பயன் ஏற்படாது; ஆண் பெண் இருபாலாரும் மனித உரிமைகளோடு அன்பால் இணைந்து வாழ்ந்து சமூகம் முன்னேற, விழுமியம் பற்றிய கருத்தில் மாற்றங்கள் தேவை என்று கட்டுரை கருத்துரைக்கின்றது.

**'தமிழக மகளிரும் உயர் கல்வியும்'** என்ற கட்டுரை பண்டைக் காலம் முதல் இன்று வரையிலான மகளிர் கல்வி நிலையைக் கருத்தில் கொண்டு இன்றைய உயர்கல்வியில் அவர்கள் பெறும் வாய்ப்பைப் புள்ளி விவரங்களுடன் இயம்புகின்றது. சங்ககாலத் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்பாற் புலவர் சிலர் அமைந்தமை, பெண்களுக்கு அக்காலத்தில் கல்வி வாய்ப்பு அளிக்கப்பெற்றதற்குச் சான்றாகும். ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கிய பிற்காலத்தில், பெண்களின் கல்விக்கு ஓரளவு இடம் ஒதுக்கப்பட்டது. சுதந்திரத்திற்குப் பின்பே தமிழகத்தில், பெண்கல்வியில் பெரும் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. *1962*இல் தமிழ்நாட்டில் மகளிர் கல்வி நிலையை உயர்த்தவும், வேலை வாய்ப்பு வழிவகைகளை ஆயவும், மகளிர் கல்விக்குழு அமைக்கப்பெற்றது. அறுபதுகளில், மகளிர் எண்ணிக்கை, உயர்கல்வியில் விரைந்து வளரத் தொடங்கியது. தொழிற்கல்வி, சட்டக் கல்வி, மருத்துவம், உடற்பயிற்சியியல் ஆகிய துறைகளில் பெண்களின் கல்வி முன்னேற்றம் புள்ளிவிவரம் வழியாகப் புலப்படுகின்றது. தமிழக மகளிர் உயர்கல்வியில் ஆண்களைப் போன்றே ஒத்த நிலையில் கல்விபெற உளவியல், சமுதாயவியல் காரணிகள் எடுத்தியம்பப்படுவதுடன், மகளிர் உயர்கல்வி வளர்ச்சிக்கான வழிமுறைகளும் முன்வைக்கப்பெறுகின்றன.

பெண்ணியக் கோட்பாடுகளின் பின்புலத்தில் கிராமச் சுகாதாரச் செவிலியரின் வாழ்வியல் எவ்வாறமைகிறது என ஒத்தும் உறழ்ந்தும் உரைத்தும் பார்ப்பதாக, **'கிராமச் சுகாதாரச் செவிலியர் நடைமுறை வாழ்க்கையும் பெண்ணியக் கோட்பாடும்'** என்ற கட்டுரை உருவாகியுள்ளது. தமிழ்நாடு அரசு மருத்துவப் பணி – கிராம சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து இயக்ககத்தின் கீழ், சுகாதாரப் பணியாளராக அமையும் கிராமச் சுகாதாரச் செவிலியர், தாய் சேய் நலம் காத்தலும், நோய் தடுப்பு மருத்துவமும் தங்களின் பொறுப்பு என எண்ணிச் செயலாற்றுகின்றனர். பணியாற்றுவதில் இப்பெண்களுக்கு ஏற்படும் பல்வகையான இடைஞ்சல்கள், தடைகள், சிக்கல்களைக் கட்டுரை எடுத்தியம்புகின்றது. இச்செவிலியர், வேலைத் தளத்தில் தங்களுக்கு ஏற்படும் பல பிரச்சினைகளிலிருந்து விடுபடத் தனிப்போராட்டங்கள் நடத்தத் தொடங்கியிருப்பது பெண்ணிய நோக்கில் குறிப்பிடத்தக்கது. 'இப்போது பெண்ணியம், ஆண்களையும் சேர்த்துக் கொண்டு, பிற கோட்பாடுகள் காட்டத் தவறிய இலக்கைச் செய்துகாட்டுவதற்கான புறநிலை உண்மைகளையும் அகநிலை உண்மைகளையும் ஒன்றுபடுத்தி, பொருளாதாரம், சமூகம், அரசியல், பண்பாடு போன்ற அனைத்துக் கோணங்களிலும் ஒரு தொலைநோக்குத் திட்டத்தை உருவாக்க முயன்று கொண்டிருக்கிறது' எனவும்; அதன்

விளைவாக உருவாகும் சமூகம், மகளிருக்கு எல்லா வளமும் வளர்ச்சியும் பெற வாய்ப்பானதாக அமையும் எனவும் கட்டுரை கூறுகின்றது.

ஆண்-பெண் என்ற பால் அடிப்படையில் வேறுபாடு காட்டும் பொருளாதாரக் கோட்பாடு, பணித்தளத்தில் பெண்களின் பங்கு ஆண்களை விட வேறுபட்டும், குறிப்பாகக் குறைவாகவும் உள்ளது என்பதை எடுத்துரைக்கின்றது. ஒரே தொழில் – அல்லது ஒத்த தொழில் செய்தாலும் ஆண் பெண்ணிடையே வருமானத்தில் இடைவெளி பெரும் அளவில் காணப்படுகின்றது. இந்த இடைவெளிக்கான காரணக் கூறுகளை, தனிமனிதனால் உருவாக்கப்பட்டது, அமைப்புகளால் ஏற்படுத்தப்பட்டது, சமுதாயத்தாலானது என மூன்று நிலைகளில் அணுகுகிறது, **'பணிச் சந்தையில் பால் அடிப்படை பேதம்'** என்ற கட்டுரை. உற்பத்திப் பணியிலும் பிற பணிகளிலும் ஈடுபட்ட பெண்கள் பற்றிய புள்ளி விவரத்தின் அடிப்படையில், பெண்களுக்கான வேலைப் பகுப்பில் பேதம், வாய்ப்பில் பேதம், வேலை கிடைப்பதில் பேதம் ஆகியன காட்டப்படுகின்றன. ஆண்-பெண் ஊதிய வேறுபாடும் அட்டவணையில் தரப்படுகின்றது. பணிச்சந்தையில் பேதம் பாராட்டாமல் இருக்க வேண்டுமாயின், பாலடிப்படை பேதம் உருவாகின்ற சமுதாயத்தின் அடிப்படை அமைப்பான குடும்பமும் அதன் பணிகளும் மாறுபட்ட நோக்கில் காணப்பட வேண்டும் என்கிறார் கட்டுரையாளர்.

பெண்ணியம் என்பது குறித்த வேறுபட்ட வரையறைகள், புரிதல்கள், விளக்கங்கள் உள்ள சூழலில், 'பெண்ணியம் - சமூக மாற்றத்திற்கான அரசியல் இயக்கம்' என்ற விளக்கத்தை எல்லையாக்கி, அந்த அடிப்படையில் இலக்கியத்தில் பெற்றுள்ள புதிய வெளிச்சங்களைக் கண்டு காட்டுவதாக, **'பெண்ணிய நோக்கில் இலக்கியப் படைப்பும் வாசிப்பும்'** என்ற கட்டுரை அமைகின்றது. பெண்ணியப் பார்வையில் இலக்கியத்தை அணுகும்போது, பெண்ணிய இலக்கிய வரலாறு, பெண்ணிய இலக்கிய விமர்சனம், பெண்ணிய இலக்கியக் கோட்பாடு ஆகிய தளங்கள் ஆழ்ந்து காண்பதற்குரியன. இன்றைய இலக்கியக் கல்வியில் பெண்ணிய நோக்கு இல்லாதது மட்டுமல்ல, பெண்களது இருப்பையே தவிர்க்கின்ற போக்குக் காணப்படுகிறது. பெண்களுக்கும் இலக்கிய உலகுக்குமிடையே சிக்கலான உறவே நிலவுகின்றது. எழுத்தாளராக, வாசகராகப் பெண்டிரை ஏற்கின்ற இவ்வுலகம், வாழ்நிலையில், பெண்தன்மைகளை, ஆண்நோக்குடனேயே பதிவு செய்துவருகின்றது. இந்தப் பின்புலத்தில், பெண்களின் பங்களிப்பு, இருபால் பொதுமைப் பண்புகளை முன்னெடுத்தல், பெண்களைப் பலியாடுகளாகச் சித்திரித்தல் ஆகியன இக்கட்டுரையில் ஆயப்படுகின்றன.

ஔவையாரின் பற்றற்ற மனப்பண்பு, தன்னம்பிக்கை, அச்சம் மடம், நாணம் ஆகியவற்றிற்கு மேம்பட்ட இயல்பு வாழ்க்கைப் போக்கு, பால் வேறுபாடு கருதா நட்பு மாண்பு, அமைச்சருக்குரிய அறிவாற்றல், தூதுவருக்குரிய சொல்லாற்றல், ஆளுமைத்திறன், மன்னவனையும் நெறிப்படுத்தும் பாங்கு ஆகிய இயல்புகள், தற்காலப் பெண்ணியக் கோட்பாடுகளின் போக்காக அமைந்தமை, **'பெண்ணியக்கத்தில் ஔவையின் போக்கு'** என்ற தலைப்பில் வலியுறுத்தப்படுகின்றன. பிற்கால ஔவையாரின் கருத்துகள் சில பெண்ணியப்போக்குக்கு மாறுபட்டமைவதும் காட்டப்படுகின்றது. பாட்டாளிகளின் அடிமைப் போக்கை மகளிர் மறுத்து, முதலாளித்துவப் போக்கை ஏற்பது அவரையும், பெண்ணியத்தையும் வெற்றி பெறச் செய்யும் என்பது கட்டுரையாளர் முடிபு.

**'பெண்ணிய நோக்கில் பெருங்கதை'** என்ற கட்டுரை, இக்காப்பியத்தில் வரும் குறிப்பிடத்தக்க மகளிரின் பண்பு நலன் பற்றிய அறிமுகப்பகுதியுடன் தொடங்குகிறது. தொடர்ந்து, திருமணம், கற்பு, கொடைப் பொருள், பெண்ணின் உயர்வு மதிக்கப் பெறாமை, பெண் பற்றிய இழிந்த மதிப்பீடு, சொத்துரிமை, உடன்கட்டை ஏறல், கைம்மை நோன்பு, கைவிடப்பட்ட மகளிர் எனப் பெண்ணின் பாதிப்புகளைக் கட்டுரை பதிவு செய்கின்றது. அடுத்து, பெண்ணுக்குச் சாதகமாய் அமையும் பெண்கல்வி, தொழில், அரசாட்சியில் பெறும் பங்கு ஆகியன குறித்த தரவுகள் வழங்கப்படுகின்றன. மகளிர், ஆடவரது கற்புப் பற்றிச் சிந்திக்காது தம் கற்பில் மட்டும் உறுதியாய் நின்றமை; இரங்கத்தக்கதாய் உள்ள தம் நிலையை உணராததால் தாழ்வைத் தாமாக ஏற்றுக் கொண்டமை; ஆணாதிக்கம் குறித்து எண்ணாததால் பெண்விடுதலை பெறவேண்டும் என்ற விருப்பு எழாமை போன்ற செய்திகளையும் கட்டுரை வழங்குகின்றது.

**'பெண்ணியப் பார்வையில் கம்பராமாயணம்'** என்ற கட்டுரை, பெண்ணிய ஆய்வாளருக்குப் பழங்கதைகளின் மறுவாசிப்பும் துணையாகும் என்ற கருதுகோளின் அடிப்படையில் எழுந்துள்ளது. பெண் காட்சி தருநிலை, பெண்ணியப் பார்வையில் சில கதை நிகழ்வுகள் - கதை மாந்தர், கம்பரும் பெண்ணியச் சிந்தனையும் என மூன்று கோணங்களில் ஆய்வுப் பார்வை அமைந்துள்ளது. பொது நிலையில் பெண் "என்பவள் யார், அவள் எவ்வாறு மதிக்கப்பட்டுள்ளாள், அவளது உரிமைகள், கடமைகள் யாவை, எதிர்கொள்ளும் சிக்கல்கள் யாவை, சமுதாயத்தில் அவளுடைய இடம் எது என்பன போன்ற வினாக்கள் எழுப்பி விடை வழங்கப்படுகிறது. கம்பன் காட்டும் பெண்மை பாராட்டுக்குரியதாகவோ முழுநிலையில் பின்பற்றத்தக்கதாகவோ இல்லை. பெண்ணடிமைத் தளையிலிருந்து

மீளவேண்டும் என்ற தன்னுணர்வின்றி ஆணாதிக்கத்தில் கட்டுண்டு நிற்றலே பெண்காட்சிதருநிலையாகிறது. வில்லொடித்தவனுக்கு மணம் செய்யப்படல், தூய்மை நிலைநாட்ட எரிமூழ்கல் போன்ற நிகழ்வுகளும், இராமன் சூர்ப்பணகை உரையாடல் காட்சியும், பெண்டிர் ஆடவரால் உயிருள்ள உணர்ச்சியுள்ள தன்மதிப்புள்ள மானிடமாகக் கருதப்படவில்லை என்பதையும், ஆணுக்கு ஒரு நீதி - பெண்ணுக்கு ஒரு நீதி என்ற சமநிலையின்மையையும் தெளிவாக்குகின்றன. பெண்ணின் பெருமை, பெண் முன்னேற்றம், பெண்ணுக்குப் பொருளாதார உரிமையும் கல்வியும் ஆகியன பற்றிய அருகிய அரிய சிந்தனைகளையும் காப்பிய ஆசிரியர் வழங்கியதைக் கட்டுரை எடுத்தியம்புகின்றது.

தமிழ்ப் **'பழமொழிகளில்....'** பெண்களைப் பற்றிய தனி மனித, சமுதாயப் பார்வையின் பதிவுகள் தனிச் சிந்தனை வழங்குகின்றன. பெண்ணின் பெருமை தாய், இல்லாள் என்ற நிலைகளில் இயம்பப்படுகின்றது. ஆயின் பெண் பிறப்பு உயர்வானதாகக் கருதப்படவில்லை. ஆண்-பெண் சமம் எனும் எண்ணமும் முழுமையாக நிலவவில்லை. நகரப் பெண்கள் இழிக்கப்படுதலும் கிராமப் பெண்கள் சிறப்பிக்கப்படுதலும் உண்டு. மணமான பெண்ணின் வாழ்க்கையில் உறவுச் சிக்கல்கள் உருவாவது பழமொழிகளில் பதிவு பெறல் காணப்படுகிறது. பெண் கல்வி, கற்புக் கோட்பாடு, உரிமை மறுப்பு, கைம்மை, மறுமணம் போன்றன குறித்த கருத்துகளும் தமிழ்ப் பழமொழிகளில் இடம்பெறல் எடுத்தியம்பப்படுகின்றது.

*1920*க்கு முன் தமிழ்ப் புதினங்கள் எழுதிய பதின்மூன்று நாவலாசிரியைகளுள் மூவர் படைப்புகள் பெண்ணிய ஆய்வுக் களத்திற்கு என்ன கொடையளித்தன என்பதனை, **'தமிழ் அச்சுச் சாதனமும் பெண் நாவலாசிரியைகளும் (1920க்கு முன்)'** என்ற கட்டுரை வழங்குகின்றது. அச்சு வடிவத்தில் இலக்கிய உருவாக்கம் வந்தபோது, கதை எனும் உருவம் நீதி புகட்டுதலை அடிப்படையாகக் கொண்டது; இதழ்கள் வழி வெளிப்பட்ட பெண்கள் தொடர்பான கதைகளும், பெண்களுக்காக வெளியான இதழ்களும் அவரை மையமாக்கி, அவர்கட்கு அறிவு புகட்டுதலை நோக்கமாகக் கொண்டன; விதவைக் கொடுமை, குழந்தை மணக் கொடுமை போன்றனவற்றை நீக்கச் சீர்திருத்தக் கொள்கைகள் எடுத்தியம்பப்பட்டன. இதழாசிரியராக, படைப்பாளராக இக்கால கட்டத்தில் எத்தனைப் பெண்கள் இருந்தனர் என்பது முழுமையாகக் கண்டறியப் படுவது தேவை என்பதையும் கட்டுரை உணர்த்துகின்றது.

**'வ.ரா. அவர்களின் பெண்ணியச் சிந்தனைகள்'** குறித்து அறிய, அவரது படைப்புகளில் குறிப்பிடத்தக்க சிறப்புடைய நான்கு நாவல்களும் ஐந்து சிறுகதைகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. பெண்ணை இன்ப நுகர்வுப் பொருளாக அல்லாமல், உண்மையான பெண்ணிய உணர்வுடன் இனங்காட்டியவர் வ.ரா. அவர், பெண்ணின் உணர்வுடன் பெண்ணிற்காக வாதாடிய வழக்கறிஞர்; பெண்களுக்காக-பெண்ணுரிமைச் சிந்தனைகளுக்காகப் பெண்ணிலக்கியம் படைத்த நாவலாசிரியர். இன்று, பெண்கள், கல்வியும் பொருளாதார உரிமையும் ஓரளவு பெற்றிருந்தாலும், அனைத்திலும் சம உரிமை இல்லாத நிலையில், ஆணாதிக்கம் தன் வலுக்குறைந்து வருவதற்கு வித்திட்டவரில் இவரும் ஒருவர். பெண்களுக்கு நியாயம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் இயற்கைக்கு ஒத்த நியாயமான கருத்தாக்கம் அவருக்காக வகுக்கப்பட வேண்டும் என்பதும் விழையப் படுவதைக் கட்டுரை உணர்த்துகின்றது.

சுப்பிரமணிய பாரதியாரின் கவிதை, கட்டுரை, கதை எனும் மூவகைப் படைப்புகளிலும் பெண்ணுரிமை குறித்த உரத்த சிந்தனைகள் இழையோடி நிற்பதை, **'பாரதியாரின் பெண்ணியச் சிந்தனைகள்'** எனும் கட்டுரை தெளிவுபடுத்துகின்றது. அரசியல் விடுதலைக்காகக் காத்திராமல், பெண் விடுதலை உடனடியாக மலர வேண்டும் என்று நினைத்தவர் பாரதி. பெண் உரிமைக்காகப் போராட மகளிருக்கு அழைப்புவிடுத்தவர். பெண் விடுதலை, சாத்வீக வழிமுறைகளைக் கைக்கொண்டு குடும்பத்திலிருந்து தொடங்க வேண்டும் என வலியுறுத்தியவர். சுவாமி விவேகானந்தர், இராசாராம் மோகன்ராய் போன்றோரின் பெண்ணியச் சிந்தனைகளின் வழி நின்றவர். உலக நாடுகளிலெல்லாம் பெண்ணியம் எவ்வாறு விளங்குகின்றது என எடுத்துக்காட்டியவர். பத்திரிகைப் பணி பாரதியாருக்குப் பெண்ணியக் கருத்துகளை வழங்க நற்களம் வகுத்திருந்தது. இந்திய, தமிழகப் பண்பாட்டுக்கு உகந்த நிலையில் பெண்விடுதலையும் பெண்ணுரிமையும் வேண்டும் என்ற இவரது தற்சிந்தனையையும் அறியமுடிகிறது.

இன்றைய பெண்ணியவாதிகளும், திறனாய்வாளர்களும் கூறும் பெண்ணியக் கருத்தோட்டங்கள் முழுமையும் பாரதிதாசனிடம் காணமுடியவில்லையெனினும், பெண்ணியச் சிந்தனைகளின் வேர்கள் அவர் படைப்பில் வேரூன்றியுள்ளன என்பதை **'பாரதிதாசனின் பெண்ணியச் சிந்தனைகள்'** என்னும் கட்டுரை கூறுகின்றது. உடல், உணர்வு, பால் என்ற மூன்று நிலைகளில் பெண்ணியச் சிந்தனைகள் இவர் பாடலில்

அணுகிக் காணப்படுகின்றன. கட்டுரை, பெண்மைக்கும் பெண்ணியத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடு, ஆணாதிக்க சமுதாயத்தின் போக்கு, பெண்ணுரிமை இயக்கம், பெண் நிலை வாதம் தோன்றி இலக்கியத்தில் நுழைந்தமை, பெண்ணியப் பார்வை கொணர விரும்பும் இலக்கு ஆகிய கருத்துகளை முதற்கண் எடுத்துரைக்கின்றது. பெண்கள் அணிவகுக்கும் படை ஒன்று உருவாக வேண்டும், பெண்களுக்குத் தனியுரிமை வேண்டும், ஆண்பெண் சமத்துவமும் சம உரிமையும் வேண்டும் என்பார் கவிஞர். வெளியே செல்லும் பெண்ணைச் சந்தேகப்படும் பாலியல் வேறுபாடு, பொருந்தா மணம், குழந்தை மணம் ஆகியன அகற்றப்பட்டு, விதவை மறுமணம், கலப்பு மணம், பெண் கல்வி, இல்லப் பொறுப்பை இருபாலரும் பகிர்ந்து கொள்ளுதல் ஆகியன போற்றப்படும்போது, பெண்ணியம் மலரும் என்பதைக் கட்டுரை வழி உணர இயல்கின்றது.

**'பட்டுக்கோட்டையாரின் பெண்ணியச் சிந்தனைகள்'**, என்ற கட்டுரை, கவிஞர் பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம் அவர்களின் பாடல்களை அடிப்படையாக்கி எழுதப்பட்டுள்ளது. பெண்களின் நிலை உயர, பெண் விடுதலை வேண்டும் என்ற எண்ணம் கவிஞரிடம் காணப்படுகிறது. உலகத் தோற்றத்திற்கு, மனித இனத் தொடர்ச்சிக்கு இன்றியமையாதவள் பெண். பெண் கல்வி காரணமாகச் சமுதாயம் அறியாமையற்றதாக உருவாக முடியும். இல்வாழ்விலும் பெண்ணுக்கு சம அந்தஸ்தும் சம உரிமையும் வேண்டும். திறமையுடைய பெண்ணுக்கு முதன்மைதரல் தேவை. கற்பு, தாலி, கருத்தடை என்பனவற்றைப் பெண்ணுக்கு மட்டும் வலியுறுத்தல் கூடாது. இவற்றில் பொதுமைக் கண்ணோட்டம் இன்றியமையாததாகும். மறுமண வாய்ப்பு பெண்ணுக்கு மறுக்கப்படலாகாது. பெண்மைக்கு இழிவு வராது காத்தல் சமுதாயத்தின் கடமையாகும். இத்தகு கருத்துகளுக்குக் கவிஞரின் பாடல்கள் களமமைக்கின்றன.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களை 'ஆண் பெண்ணிய வாதி'யாகக் காட்டுகின்றது, **'திரு.வி.க. அவர்களின் பெண்மைக் கோட்பாடுகள் - பெண்ணியப் பார்வை'** என்ற கட்டுரை. ஆண்-பெண் என்ற உயர்வு-தாழ்வு இல்லாத சமத்துவம் வேண்டுகிறார் திரு.வி.க. பெண்ணைப் பாலியல் கவர்ச்சிப் பொருளாகக் கருதுதல், பால்வேறுபாடு குறித்த கருத்தாக்கங்கள், மகளிருக்கு எதிரான அநீதிகள் ஆகியன அகற்றப்பட்டு, சமன்மை விதிகளும் சமன்மைப் பண்புகளும் ஏற்படுவதை விரும்புகிறார். இவை பெண்ணியக் குறிக்கோளை ஒத்ததாக அமைகின்றன. எனினும் அவரது காலத்திற்கேற்ப பெண் குறித்த மரபு சார்ந்த கருத்துகளும் அவரிடம் அமைகின்றன. மனைவியின் பண்பு நலம்,

பொருந்தாக் கணவனாயினும் விலகாமை, பெண்டிர் அறஞ்சார் நல்வாழ்வு நெறிநிற்றல் என்பன போன்ற இவரது எண்ணங்களே இவரை ஆண்பெண்ணியவாதி எனும் தளத்தில் நிறுத்துகின்றன என இக்கட்டுரை வழி உணரலாம்.

**'ஜீவாவின் பெண்ணியச் சிந்தனைகள்'**, நாஞ்சில் நாட்டில் வாழ்ந்த கவிஞர் தோழர் ப. ஜீவானந்தம் அவர்களின் படைப்புகளின் தரவுகள் வழி பெண்ணியக் கருத்துகளை எடுத்தியம்புகின்றது. இலட்சியப் பெண்ணாக, அடிமை விலங்கொடிக்க விழைபவளாக, நாட்டுப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டவளாக, வீராங்கனையாக, மூடத்தனம் அற்றவளாக, பெண்ணுரிமைக்குக் குரல் கொடுப்பவளாக, ஏழை எளியோரிடம் இரங்கிய மனம் கொண்டவளாக, அஞ்ஞானம் ஒழித்து விஞ்ஞான வேகம் ஏற்பவளாகப் பெண் இருக்க வேண்டும் என்று ஜீவா தன் கவிதைகளில் புலப்படுத்துகிறார். பெண்ணடிமைத்தனத்தை நீக்கும் வழிமுறைகளையும் சுட்டிச் செல்கிறார். அவருடைய 'புதுமைப் பெண்' பல நல்ல இலட்சியங்களை உடையவளாக, சீரிய சிந்தனையின் கொள்கலமாக இலங்குகிறாள். இவை இக்கட்டுரைச் செய்தியாகும்.

**'பகுத்தறிவு இயக்கத்தின் பெண்குறித்த பார்வை'** என்ற தலைப்பிலான கட்டுரை, *1920*களில் தோற்றம் பெற்று, தமிழகத்தில் மிகுந்த தாக்கம் ஏற்படுத்திய பகுத்தறிவு இயக்கம், அதன் உயிர்நாடியான பெரியாரின் கருத்து, அவ் இயக்கச் செயற்பாடுகள் ஆகியனவற்றின் அடிப்படையில் தகவல்களைத் தருகின்றது. மனித சமூக வளர்ச்சிக்கு இருபாலினர் குணங்களும் சமமாய் இருக்க வேண்டும் என்பது இயற்கை வழிப்பட்ட கருத்தாகும். பிள்ளை பெறுதல் தவிர பிற அனைத்தும் இருபாலருக்கும் ஒன்றாகவே அமைகின்றன. 'ஆண்மை' என்ற தத்துவம் அழிக்கப்படல் வேண்டும். சமயக் கட்டுகளிலிருந்து விலகி, கல்வி, பகுத்தறிவின் வழி செயல்படும்போது பெண்ணியம் வெற்றி பெற முடியும். பெரியாரது இயக்கத்தில் சுயமரியாதைத் திருமணங்கள், மாநாடுகளில் பெண்களுக்குத் தலைமைப் பொறுப்பு, பெண்களுக்கு ஏற்றம் தரும் தீர்மானங்கள் அம்மாநாடுகளில் எடுக்கப்படல் எனப் பெண் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கப்பெற்றது. இத்தகு கருத்துகள் இக்கட்டுரையில் தரப்படுவதுடன், தொடரும் கட்டுரையும், பெரியாரின் சிந்தனைகளை வழங்குகின்றது.

**'ஈ.வெ.ரா. பெரியார் அவர்களின் பெண்ணியச் சிந்தனைகள்'**, விடுதலை, குடிஅரசு, பகுத்தறிவு ஆகிய இதழ்கள் வழி ஈ.வெ.ரா.

வெளிப்படுத்திய பெண்ணியச் சார்புடைய கருத்துகளைத் தொகுத்தும் பகுத்தும் வழங்குகின்றது. அறிவு வளர்க்கும் கல்வி பெண்ணுக்குத் தேவையானது. சொத்துரிமையும், மணவிலக்குப் பெறும் உரிமையும் வேண்டும். விதவை மணம் ஏற்கப்பட வேண்டும். சட்டங்களால் குழந்தை மணத்தையும், விலை மாதராக அமையும் நிலையையும் அரசு தடுத்துள்ளது. பெண்கள் தங்கள் நிலையை உணர்ந்து, அடிமைத் தன்மையை உதறி நீங்கும் மனநிலை பெற வேண்டும் எனப் பெரியாரின் பல கருத்துகளைக் கட்டுரை தருகிறது.

## II

தமிழக மகளிர் என்பது மிக விரிந்த களமாகும். காலப் பரப்பு ஒருபால் என்றால் இடப்பரப்பு மறுபால் அமைகின்றது. இலக்கியம் மற்றும் பிற ஊடகங்களில் இவர் எவ்வாறு காட்டப்படுகின்றனர் என்பது தொல்காப்பியம் முதல் இன்றைய பல்வகையான ஒலி, ஒளி ஊடகங்கள் வரை காணத்தக்கதாகும். இக்காலப்பரப்புள்ளும் புறத்தும் இடவிரிவு அமைகின்றது. வடவேங்கடம் தென்குமரி குணகுட கடல் எல்லையின் விரிந்த தமிழகமும், இன்றைய தமிழ்நாடு எனும் மாநிலமும் என இடவிரிவு பாகுபடுகின்றது. இலக்கியம் போன்ற தரவுக்களனன்றி, இன்றைய நிலையில், தமிழக மகளிரை நேரில், களப்பணியில் கண்டு தகவல் திரட்டுவது என்பது கோட்பாட்டுக்கும் உண்மைநிலைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமையைப் புரிந்து கொள்ள உதவும். தமிழக மகளிர் என்பதன் ஒரு புலமாக, புறமாகவே பெண்ணியம் என்பதும் மகளிரியல் என்பதும் அமையும்; தமிழக சமூகத்தில் மகளிர் நிலை என்பது முழுமையும் அதனுள் உட்படாது விரியும்.

'சமூகத்திலும் வேலைத் தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுபூர்வமான நடவடிக்கைகளும்'* என்று அமையும் பெண்ணியம் பற்றிய விளக்கம், பெண் எதிர்கொள்ளுகின்ற - கொள்ள வேண்டிய சவால்களையும் சிக்கல்களையும் முதன்மைப்படுத்தி, அதனை மேற்கொள்ள அவளும், தனிநபரும், நிறுவனங்களும், சமுதாயமும் எடுக்கும் - எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முன்னிறுத்துகின்றது. இங்கு, பெண்ணியம்

---

* தேவதத்தா, பெண்ணியம் ஒரு வரலாற்றுப் பார்வை, பெண்ணியம், (தொகு.) சு. சண்முக சுந்தரம், காவ்யா, பங்களூர், *1994*, ப.*10*.

ஒரு இயக்கமாக, பிரச்சினைகளை மையப்படுத்திய செயற்பாட்டுக் களனாக உருவாகின்றது.

இதற்குள் சற்றும் உட்படாது, எழுத்து ஒலி ஒளி ஊடகங்களும் வாழ்வியலும் பெண்ணைக் காட்டும் நிலைகள் பல அமைவது பெரும்பரப்புக் காட்டுகின்றது. உணர்வு பூர்வமாக மகளிரும், சமுதாயத்தினரும் அவற்றைக் கண்டு கொள்ளாது செல்வது ஒருபாலும், பழகிய தடமாக அவ்வாறே ஏற்றுக்கொண்டு அமைந்துவிடுவது மறுபாலும் அமைவதால், பெண்ணியச் சிந்தனை இங்கெல்லாம் பதிவுபெறாமல் போய்விடுகின்றது. இதனால், ஒரு சிறு விழுக்காட்டினரே இப்பிரச்சினையின் முழுப் பரிமாணத்தை உணர்ந்தவராகின்றனர். ஒரு சிறு குழு ஒரு பெரிய சமுதாயத்தைப் புதிய சிந்தனைக்கும் செயற்பாட்டுக்கும் நேராகத் திருப்ப முனைவதால், பணிப்பளுவோடு கூடிய மிகுந்த போராட்டத்தின் பின்பே சிறிதளவு மாற்றங்கள் ஏற்பட முடிகிறது.

பெண்ணியம் பற்றிய விழிப்புணர்வு, பெண்ணைச் சந்தைப் பொருளாகக்கொள்பவரிடம் எடுபடுவதில்லை. உலக அறிவும், கல்வியும், சுயசிந்தனையும் பெறாதவரை பின் தங்கிய சமுதாயத்திலுள்ளவரிடமும், குறிப்பாக அந்நிலைப் பெண்களிடம் கூட இவ்விழிப்புணர்வு இல்லை எனவே கூறலாம். இச்சூழல் தொடரும்போது பெண்ணியம் விரைந்து வெற்றிப் படிகளில் ஏறமுடியாது போகிறது. தீவிரப் பெண்ணியவாதிகளை மட்டுமல்ல, மிதவாதப் .பெண்ணியவாதிகளையும், கல்விக்காகவும் ஆய்வுக்காகவும் பெண்ணியம் பேசுபவர்களையும் கூட வேறுபட்ட கண்ணோட்டத்துடனேயே சமுதாயம் பார்க்கிறது.

'தமிழகத்தில் மகளிரின் நிலை எப்படி இருந்தது, சமுதாயத்திலும், குடும்பத்திலும் அவர்களுடைய பங்கும் பணியும் எவ்வாறமைந்தது, இல்லத்துக்கு வெளியே பெண்ணின் இடம் என்னவாகக் காணப்பட்டது, பெண்பால் என்பதாலேயே அவள் ஒதுக்கப்பட்டாளா ஒடுக்கப்பட்டாளா, பெண் என்பதால் தோற்றுவாயாக்கப்பட்ட விழுமியங்கள் என்னென்ன, பெண்ணைப் பெண்ணாகக் காண, காட்ட முடியாமைக்கான காரணங்கள் எவையேனும் உளவா, அதற்குச் சமயம், நம்பிக்கை, மரபு போன்று என்ன அடிப்படைகள் அமைந்தன, இவற்றைப் பற்றிச் சிந்தித்தவர் தமிழகத்தில் யார், இன்று போல் அன்றும் இத்தகையோர் இருந்தனரா, அவர்களால் என்ன சாதிக்க முடிந்தது, கோட்பாடுகளாக அமைந்த தீர்வுகள் நடைமுறைக்கு உகந்ததாக அமைந்தனவா-நடைமுறைப்படுத்தப்பட்டனவா-வெற்றி விழுக்காடு என்ன, இலக்கிய மகளிருக்கும் இன்றைய வாழ்வியலின்

மகளிருக்கும் உள்ள இடைவெளி யாது'- என்ற பாங்கின் பார்வைகள் இன்னும் முழுமையாக வெளிவர வேண்டும்.

படைப்பாளர் சிலரே பெண்களாக அமைகின்றனர். பெரும்பாலோர் ஆண்களாக அமைவதால் பெண் படைப்பு ஆண்பார்வையிலேயே தரப்படுகிறது. சிலராக அமையும் பெண் படைப்பாளரும் கூட, தம் ஆக்கங்களில் தனித்த பெண்ணியப் பார்வையில் பெண்களைப் படைத்தாரிலர். சொல்லிலும் கருத்திலும் பண்புருவாக்கத்திலும் ஆண் நோக்கே வெளிப்படும் பொது நிலை இக்காலத்தும் பெரும்பான்மையிடத்து மாறவில்லை தான். பெண்ணுக்கு ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றிப் பேசப் புகுபவர் கூட, பெண்ணுக்கு அல்ல, பெண்ணால் ஏற்படும் பிரச்சினைகள் என்று திரித்தே நோக்கப் பழக்கம் கொள்கின்றனர். நேர்நிலையில் வரும் பெண்ணின் எந்தப் பண்பையும் சிறப்பையும் ஆண் சார்த்தியே பார்க்கும் சமூகம், எதிர் நிலையில் வருவன ஏதேனும் இருப்பின் அவற்றை அவளைச் சார்த்தியே காரணம் கூற முனையும். வழிவழி வந்த சிந்தனைகளான, நல்ல மனைவி, சிறந்த அன்னை போன்ற விழுமியங்களும் கணவனுக்கு மனைவி தாயாக, தாரமாக, தாசியாக அமைய வேண்டும் எனப் புகலும் சித்தாந்தங்களும்; கொடி கொழுகொம்பைச் சார்வது போல பிறப்பு முதல் இறப்பு வரை ஆண் சார்ந்து பெண் வாழல் தான் சரி-இயற்கை எனும் சிந்தனைகளும் இன்றளவும் மாறாது நீங்காது நிற்கத்தான் செய்கின்றன. தன் காலில் தனித்து நிற்கப் பெண்ணால் முடியம் என்றோ அவ்வாறு நிற்பவள் 'பெண் தான்' என்றோ நினைக்கவோ, அத்தகு நினைவைச் சீரணிக்கவோ முடியாதபோது சித்தாந்தங்கள் வளர்ச்சியில்லாக் கறளை ஆகிவிடுகின்றன. கணவனுக்கு மனைவி எவ்வாறிருக்க வேண்டும் என்று வகுக்கும் சமுதாயம், மனைவிக்கு அவன் எப்படியிருக்க வேண்டும் என்று மற்ற எல்லையிலிருந்து சிந்திக்க அறியவில்லை. பெண்ணைப் பொருளாகக் கொள்ளும் சமுதாயம் அவளைப் பொருட்டாகக் கருதவில்லை. பெண் என்றால் துன்பம்-துயரம்- பாரம் என்ற கருத்தைத் தாண்டி வர சமுதாயம் பழகிக் கொள்ள வேண்டியிருக்கிறது. தாதியாக-வேலைக்காரியாக அவளை ஏற்கும்-விரும்பும் சமுதாயம் அவளை மேலதிகாரியாக, ஆளுமை நிலையினளாக ஏற்றுக் கொள்ள மனக்கடினம் கொள்கிறது. தனி வாழ்வில் பெண்துணை நாடும் பாங்கு காணப்படினும், பொது வாழ்வில் மேனிலையில் பெண் அமைவது பற்றி மனநிறைவு கொள்வதில்லை. பெண்ணின் பயன்படு நிலையைச் சாறாகப் பிழிந்து கொள்ளும் சமுதாயம் அவள் பற்றிய பொறுப்பை முகமுகமாகச் சந்திக்க அஞ்சிப் பின்வாங்குகிறது. மனித உரிமைகள்

என மேடையிட்டு முழங்கினும் அதில் பெண்ணுக்கு முழுஉரிமை-சமஉரிமை உண்டு என்பதை மறந்துவிடுகிறது; ஒதுக்கீட்டு நிலைக்குத் தள்ளி விடுகிறது. பேச்சு, பெரும்பேச்சாக அமைகிறதே தவிர, செயற்பாட்டுப் பாங்கு உருவாகாமல் தடைபடுகிறது. கல்வி, தொழில், பொருளாதாரத் தன்னிறைவு, தானாக முடிவெடுத்து நடைமுறைப்படுத்தும் திறம், தற்சிந்தனைத் தெளிவு என்பன காரணமாக அறிவுபூர்வமான தன்னியக்கம் பெறும் மகளிரின் பாங்கு எண்ணிக்கையில் பெருக்கம்கொள்ள வேண்டும். உழைப்பு, ஊழியம், 'பிறருக்காகத் தான்' எனும் வரைகோட்டுக்குக் கீழே, தன்னை 'நிறுத்துக்' கொள்ளும். 'நிலை நிறுத்திக் கொள்ளும்' பெண்நிலை மாறுவதும் வேண்டும். புரட்சி, தலைகீழ் மாற்றம் என்ற புரட்டிப் போடலல்ல தீர்வு, பழுது நீக்கும் சமுதாயப் புடமிடலே தேவை.

பெண்ணுக்குரிய பண்பு என்ன செயற்பாடு என்ன பெண்ணுக்குப் பெருமை யாது என்று பெண்ணே சிந்தித்து வகுக்க வேண்டும். அச்சமும் மடமும் நாய்களுக்கு வேண்டுமாம் என உதறி பாரதி காட்டிய திசையைத் தீர்க்கமாகக் கருதலாகும். 'செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும் பெண்பாலான' *(1155)* எனத் தொல்காப்பிய வரிகளை விதியாக ஏற்கலாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் பின்பும் வரைந்த இந்த நெறிகளும், இந்த இருபது நூற்றாண்டுகளுக்குப் பின்பும் காட்சிப் பொருளாகக் கால அடுக்குகளில் உறைந்து கிடக்க மட்டும் தான் செய்கின்றன. அவற்றின் சிந்தனைச் செயற்பாட்டைப் பரவலாக்கிப் பயன்கொள்ளல் எதிர்காலத்தை நோக்கி நிள்கிறது. கானலாக நீங்குகிறது.

எனினும், கால மாற்றத்தால் சமுதாய மாற்றம் என்பது உறுதி. கல்வியும் அறிவும் விரிந்து விகசிக்கும் போக்கில் புதிய வானங்கள் தெளிகின்றன. பொய்யாய்-பழங்கதையாய்-கனவாய்த் தோன்றியன கூட பருமமாகப் புலப்பட்டுப் பரிமாணங் காட்டத் தொடங்கியுள்ளன. இலக்கிய உள்ளீடும் புறப்புலப்பாடும் கூட வளர்முகமாக மாறும் நாள் அதிகம் தொலைவில் இல்லை என்ற எதிர்பார்ப்பு, இப்பொருண்மையின் இயக்கங்களாலும் கல்வி நிறுவனங்களாலும் ஏற்படுகின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்கள், தொழில் முனைவோர் என அடித்தளத்திலிருந்து மேல் மட்டம் வரை இவ்உயிர்ப்புடைக் குருதியின் வெம்மை பாயும்போது வாடியது விரிந்து வற்றியது நிமிர இயலும்.

## III

எழுத்து, ஒலி, காட்சி ஊடகங்கள் பெண்களை எப்படிச் சித்திரித்தாலும் சமூகமோ, தனி மனிதரோ அதைக் 'கண்டு கொள்வது'

இல்லை. தம்மைப் பற்றியல்லவோ சுட்டுகிறது - கூறுகிறது - சாடுகிறது என்ற சுயபோதம் இன்றி, யாரோ கேவலப்படுத்தப்படுவதாக-மூன்றாம் நபர் கேலிக்குட்படுத்தப்படுவதாகக் கருதி அமைந்து விடுகிறது. அரங்க மேடைக் காட்சியின் பொழுதுபோக்கு அம்சமாகப் பார்த்துவிட்டு, மறந்து, விட்டுவிட்டு, விட்டேத்தியாகச் சென்றுவிடுகிறது. இதனால் அதனையே வியாபாரமாக்கிப் பிழைக்கிறது ஒரு பாதிச் சமூகம். ஒதுக்கித் தள்ளப்பட்ட சிறுபான்மையின் ஒரு மிகச் சிறு விழுக்காடு எழுப்பும் எதிர்க்குரல், சமூகப் பேரொலிக்கிடையே கேட்கப்படாமல் அமுங்கிவிடுகிறது. குன்று முட்டிய குரீ இயாகவன்றி, பெருங்கல் பெயர்க்கும் சிற்றுளியாக மாறுங்காலமே மீட்சி வழங்கும்.

படித்த எல்லார் கையிலும் தவழ்ந்து, காசுப் பெறாது, விரைந்து கசங்கி மூலையில் குப்பைத் தொட்டியில் பதுங்கும் பத்திரிகை, பெண்ணை என்னமாய்ப் பாடாய்ப்படுத்துகிறது. அட்டை முதல் விளம்பரம் வரை, கதை முதல் துணுக்கு வரை, செய்தி முதல் சித்திரம் வரை, எள்ளல்- இளமை-பேதைமை-மடன் என நகைப்புக்குரியதாகப் பெண்மை அல்லல்படுத்தப் படுகிறது. தமிழ் இதழ்களைக் களனாகக் கொண்டு, பெண்ணிய நோக்கில் மகளிர் சித்திரிப்புக் குறித்து எழுந்த ஆய்வுகள் இப்பொருண்மை பற்றிய தெளிந்த கருத்துகளை வழங்குகின்றன.* இதழில் ஓவியங்கள், புகைப்படங்கள் போன்றன பெண்களைக் கேவலப்படுத்தும் முறையில் அமைக்கப்படுகின்றன. விளம்பரம், நகைச்சுவை, கேள்வி-பதில் போன்ற எல்லாவற்றிலும் பெண்ணைக் கொச்சைப்படுத்திக் காட்டுதல் பெருமளவிற்கு இடம்பெறுகிறது. பெண்களை அலங்காரப் பதுமையாக்கி, போகப் பொருளாகக் காட்டிச் சிந்திக்கத் தெரியாதவளாகச் சித்திரிக்கின்றன.

---

* ஓவியா, தமிழ் இதழ்களில் பெண்கள் பிரச்சனை, **பெண்ணியப் பார்வைகள்**, தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை, *1996*, பக். *75-86*.

சசிகலா, வே. மகளிர் இதழ்களில் பெண்ணியம், **தமிழியல் பெண்ணியம்**, ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றம், மதுரை, *1996*, பக். *64-68*.

சசிரேகா, சிவ. **தமிழ் இதழ்கள் காட்டும் மகளிர் நிலை**, பார்த்திபன் பதிப்பகம், மதுரை, *1988;* தமிழ் இதழ்களில் பெண்ணியம், **தமிழியல் பெண்ணியம்**, மு.சு., பக். *69-73*.

சிவகாமி, ச. மகளிர் இதழ்களும் பெண்ணியமும், **பெண்ணியப் பார்வைகள்**, மு.சு., பக். *107-118*.

தேவதத்தா, இதழியல் வளர்ச்சியில் மகளிர், **தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மகளிர் பங்கு** *(1970* முதல் *1990* வரை*)*, தமிழ்த்துறை ஆய்வு மையம், இராணி மேரி கல்லூரி, சென்னை, *1992*, பக். *145-164*.

மீனாகுமாரி கனகராஜ், வாரமலர் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனை, **தமிழியல் பெண்ணியம்**, மு. சு, பக். *58-63*.

கதை, கட்டுரை, கவிதை, துணுக்கு போன்றவற்றிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பெண்ணை இச்சைப் பொருளாக, இரண்டாந்தரப் பிரஜையாகக் காட்டுவதையே வெளியிடுகின்றன. வணிக நோக்கில் லாபத்திற்காக நடத்தப்படும் பத்திரிகைகளில் பெண்ணின் தனித்தன்மை, மேன்மை, தன்மானம், திறன் போன்ற பல்வேறு பரிமாணங்களுக்குப் பெரும்பாலும் இடமில்லாமல் போகிறது. பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புப் பற்றிய தகவல்களும் கூட பலபோதும் விற்பனைக்கான உணர்ச்சியூட்டும் செய்தியாகவே இதழ்களில் இடம்பெறுகின்றன - என்பன போன்ற கருத்துகளைப் பெறமுடிகிறது.

சமய இதழ், அரசியல் இதழ், இலக்கிய இதழ், பெருவிருப்பு இதழ் போன்ற பல்வகை இதழ்களையும் களனாகக் கொண்டு நோக்கும் போதும், மரபு ரீதியான சிந்தனைகளே மேலோங்கி நிற்கின்றன.** மகளிர் இதழ்களிலும், சில மட்டுமே காலத்திற்கேற்ற புதிய சிந்தனைகளைப் பதிவு செய்து, பெண்ணிய நோக்குப் புலப்படுத்தி, மகளிர் முன்னேற்றத்திற்காகக் குரல் கொடுக்கின்றன.

முழுமையான சுதந்திரமுடையவராக மகளிரைச் சமயங்கள் அனுமதிப்பதில்லை. கட்டுப்பாடுகள், நெறிமுறைகள் என்ற சட்டத்திற்குள் வைத்து வணங்கவும் வதைக்கவும் தயாராகின்றது. சமய இதழ்களின் கதைகளும் இதற்கு விலக்கு அல்ல. மரபு ரீதியான பெண் சித்திரிப்புக்கு இங்கு அமையும் இடம், அவரைப்பற்றிய புதுச் சிந்தனைக்கு இடம் கிடையாது என்பதை வெளிப்படுத்தும். தீர்ப்பு என்னும் சிறுகதை (ஓம்சக்தி, *98, ப.108)*, போதைப் பழக்கத்திற்கு அடிமையான, வேதியியல் பட்டதாரியான கணவனைத் தட்டிக்கேட்ட மனைவியை அவன் தீர்த்துக் கட்டுவதைத் தருகிறது. மற்றொரு கதை, முரடனான மகனுக்குத் தாய் மணஞ்செய்ய ஏற்பாடு செய்த பெண் பற்றி, 'லட்சுமி. நெசவுத் தொழில் கற்றவள். அயராது நெசவு செய்து சுயமாகச் சம்பாதிக்கக் கூடியவள். அழகும் குணமும் சாமர்த்தியமும் கொண்டவள். திருமணமாகி வீட்டுக்கு வந்துவிட்டால் எப்படியும் முத்துவைத் தன்வசப்படுத்தி நல்லவனாக்கி விடுவாள்' என *(ப.21)* அமைக்கிறது. மேலும், 'சின்னஞ் சிறு வயசு. வாழ வேண்டிய பொண்ணு...... *(இந்தப் பணத்தை)* அவளுக்குக் கொடுத்து நகை நட்டு புடவையெல்லாம் வாங்கி வேறொரு *(நல்ல)* மாப்பிள்ளையைப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வையுங்க' *(ப.26)* என்பதிலும் பெண், வரதட்சணை-

---

** பார்க்க *:* அன்னி தாமசு, இதழ்களில் பெண் சித்திரிப்பு, தகவல் தொடர்பு ஊடகங்களில் பெண், கிறித்தவக் கல்லூரி, சென்னை, *1999*, பக். *87-95.*

திருமணம்- மாப்பிள்ளை என்ற வட்டத்திலேயே சித்திரிக்கப்படுவதும்; கணவனை இழந்த ஏழைத்தாய், நூல் நூற்று, கைராட்டை சுற்றிப் பிழைப்பது தரப்படுவதும் வேறு சான்றுகளாம்.

அரசியல் இதழ்கள் சிலபோதேனும் மகளிர் நிலை பற்றி எண்ணத் தான் செய்கின்றன. அடிமட்ட வகுப்பில் நாடோறுமுள்ள வாழ்க்கையே பிரச்சினை தான்- அதுவும் பெண்களுக்குப் பெரும் பிரச்சினைதான் என்பதை உணர்த்துகின்றன. "இந்தியப் பெண்கள் பிரச்சினைகள்: பெண்களுக்கு எழுத்தறிவு, குடும்பக் கட்டுப்பாடு, உடல்நலம், குடிநீர், விறகு ஆகியவைகள் தான் (பிரச்சினைகள்). வாழ்க்கையில் பாதி நாட்கள் தண்ணீரையும் சுள்ளியையும் தேடித் தேடியே படிக்காமல் போனாள் இந்தியப் பெண்" *(இந்தியா டுடே, ஜூலை 29, 1998, ப.16)* என்பது சான்று.

இலக்கிய இதழின் போக்கு, இரு முனையையும் தொட்டுச் செல்கிறது. '(மனிதன்) பெண்ணை அழகுணர்ச்சியோடு நெருங்கினான். அவனுடைய இன்பமே தன் இன்பம் என்று அவள் தன்னை அர்ப்பணித்தாள். தன்னிடம் வாழ்வை முழுமையாக்கிய பெண்ணுக்காகத் தன் உடல் பொருள் ஆவியெல்லாம் துறக்கத் துணிந்தான் மனிதன். அன்பு உதித்தது' *(மஞ்சரி, ஜூலை 1998, பக். 37-38)* என்ற வரிகள் பழமரபு வழிப்பட்ட சிந்தனையைத் தாங்குகின்றன. இவ்விதழின் 'ஜமுனா' என்ற *(மராட்டிய)* கதை *(பக். 17-18)*, தென் பிகார் கிராமமொன்றில் கையில் குழந்தையுடன், கணவனை இழந்த நிலையில், பெண் ஒருத்தி, வறுமை பற்றி விற்கப்படுவதையும், பிரிந்த மகளைப் பார்க்கப் போனவளை ஓடிவிட்டாள் எனக் கேவலப்படுத்துவதையும், இரவு முழுவதும் பனியில் ஆடையின்றி முற்றத்தில் நிற்கும் தண்டனை வழங்கப்படுவதையும், மூவாயிரம் ரூபாய்க்கும், இரண்டாயிரம் ரூபாய்க்குமாகப் பலர் கை மாறுவதையும், பேய்-ராக்ஷஸி எனப் பழிக்கப்படுவதையும், வீசியெறிந்த சப்பாத்தியைப் பொறுக்கித் தின்றே பசியாறி மாட்டுக் கொட்டகையில் முடங்க வேண்டிய நிலையையும் காட்டுகிறது. அவளை வாங்கும் ஒருவன் கூறும் கூற்று பெண் கொடுமையின் உச்சத்தைக் காட்டுகிறது:

> இரண்டாயிரம் ரூபாய் என்றால் சும்மாவா! வீட்டில் எல்லா வேலைகளையும் செய்யணும். ஹுக்கா நிரப்பணும். அறுவடையாகி வந்த கடலைகளை அலம்பணும். தினமும் பூட்ஸைப் பளபளவென்று துடைத்து வைக்கணும். சாயங்காலமானால் குடிக்க பாட்டில் கிளாஸுகளைத்

> துடைத்து வைக்கணும். கூடச் சாப்பிட மொர மொரப்பான நொறுக்குத் தீனி செய்து வைக்கணும். தவிர தினமும் வயலுக்குப் போகணும். இருந்த ஒருகாளை மாடும் செத்துவிட்டது. அதற்குப் பதிலாக அவள் நுகத்தடியைப் பிடித்துக் கொண்டு ஏர் உழணம். இல்லையென்றால் கசையடிதான். வக்காலத்திற்கு ஒருத்தரும் கிட்டே வரக் கூடாது. சமயம் வந்தால் குழந்தையையும் உண்டாக்குவேன்....

கதையே ஆனாலும், இத்தகு சூழலிலுள்ள பெண்களின் பரிதாப நிலையை இது புலப்படுத்தும். பெருவிருப்பு இதழொன்று இத்தகு கதையொன்றிற்கு இடம் தருமா என்பது ஐயமே.

உயர்ந்த நிலைகளைக் கைப்பற்றியுள்ள பெண்களையும் இதழ்கள் காட்டத் தவறவில்லை. கலைமகள் *(ஜூன், 1988)* நிர்வாகத் துறையைப் பெண்கள் கைப்பற்றி ஆள்வதைத் தருகிறது. 'எழுபதுகளில் பெண்கள் மெதுவாகப் பல்வேறு அரசுப் பணிகளில், தொழில்களில் முதன்மை நிலையை அடைய ஆரம்பித்தனர். இது வேகமாக வளர்ந்து எண்பதுகளில் பெண்கள் வேலைக்குப் போவது நிர்வாகத்தில் ஈடுபடுவது மிகமிக அதிகமாகித் திருமணத்தின் பொழுது பெண் வேலைக்குச் செல்பவளாக இருக்க வேண்டும் என்ற நிலை தோன்றியது. தற்பொழுது தொண்ணூறுகளில் நமது பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்ட பிறகு பல வெளிநாட்டுக் கம்பெனிகளும் நம் நாட்டின் தொழில் அதிபர்களும் பல புதிய துறைகளில் ஈடுபட ஆரம்பித்தார்கள். இதில் ஈடுபடப் பல பெண்கள் முன்வந்து இன்று பல கம்பெனிகளைப் பெண்களே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்' *(பக். 78-80)* என அமைகிறது. வளர்ச்சி எதுவாயினும், இங்கும் பெண்ணின் நிலை திருமணம்- அலுவல் எனத் தொடர்புபடுத்தியே தகுதிப்படுத்தப் படுவது, பழைய சட்டகத்திலிருந்து முற்றும் மீளாமையையே காட்டுகிறது.

பெண்ணின் புற வாழ்வு, கட்டுரைகளிலும், அக வாழ்வு, கதைகளிலும் சித்திரிக்கப்படுவதும் வெளிப்படுகிறது. கலைமகளின் *(மு.க., பக்.61-64)* 'மகளே மகளே' என்ற கதை, காதலுக்காகப் பெற்றோரை உதறிவிட்டுச் சென்ற மகளாயினும், பிரசவத்தில் அவள் குழந்தை இறந்தபோது, தான், முதிர் வயதில் பெற்ற குழந்தையை அவளுக்கு அளிக்கும் தாயைக் காட்டுவதும்; 'எங்கே அவள்' *(பக்.25-29)* என்ற கதை, கணவன், முன்பு காதலித்துக் குழந்தையுடன் கைவிட்ட பெண்ணுக்கு மனைவி மறுவாழ்வு அளிப்பதாகக் காட்டுவதும், தியாகப் பெண்மையை, மாதிரியாகச் சித்திரிக்கின்றன. இவை பழமை நோக்கின.

மற்றொரு இலக்கிய இதழான அமுத சுரபி *(ஜூன், 1998)*யின் கதைகள் பலவகையான பெண்களைக் காட்டும். படிப்பறிவு இல்லாத தாய், வேற்று சாதிப்பையனை மணக்க விரும்பும் மகளைப் புரிந்துகொள்ள முடியாமல் கடிகின்றாள்; திருமண வாழ்வினரின் துன்பம் கண்ட பெண் ஒருத்தி 'தனிமையில் இனிமை கண்டேன்' என முடிவுக்கு வருகிறாள் *(ப.24)*. மாற்றாந்தாய் பற்றிய மரபுச் சித்திரிப்பு 'இன்னொரு தாய்' என்பதில் வெளிப்படுகிறது *(ப.35)*. ஜேப்படித் திருடரான இரு பெண்கள், ஒரு சூழலில் மனிதாபிமானத்துடன், ஒருவர் தவறவிட்ட தொகையை அவர் இல்லத்தில் கொண்டு சேர்ப்பது, 'தவிப்பு' *(பக். 40-43)* என்ற கதையில் வருகிறது. மனிதரில்-ஆணாயினும் பெண்ணாயினும் நல்லவரும் அல்லாதவரும் உண்டு என்பதை இவை காட்டும். 'சர்க்கரை இல்லாமல் இரண்டு காபி' *(பக். 57-55)*, திருமணமாகி, கணவனோடு எண்ண மாறுபாடு கொண்டதால், மணவிலக்கு நிலையிலிருக்கும் படித்த திறமையான இளம் பெண், பல நடுத்தர ஆண்களுடன் 'நட்பு'க் கொண்டு மலர்தாவும் வண்டாக அமைவதைத் தருகிறது. இலக்கிய இதழ்களின் இந்தச் சித்திரிப்புகள், வாசகருக்கு, ஒரு நடுநிலையான, உண்மையான, புள்ளிவிவரம் சார்ந்த பதிவை வழங்க முடியாது. எனினும் பெண்ணியம் தொடர்பான ஒரு காலப் படைப்பாளரின் மனச் சாய்வை (inclination) உணர்த்த உதவும்.

பெருவிருப்பு *(ஜனரஞ்சக)* இதழ்கள், விற்பனையின் பெரும் எல்லைகளைத் தொடும் வியாபார நோக்கமே கொண்டு அமைவதால், பொதுவாக, எல்லாத் தர மக்களாலும் செரித்துக் கொள்ளவோ ஏற்றுக் கொள்ளவோ புரிந்து கொள்ளவோ விரும்பவோ முடியாத விஷயங்களைத் தொடாதே அமைந்துவிடுகின்றன. பெண்ணியமும், இன்னும் எல்லா மக்களாலும் விரும்பி வரவேற்கத்தக்க பொருண்மையாக உருவாகவில்லை. எனவே இதன் ஆழங்களை அடையாளங் கண்டு காட்ட, பெருவிருப்பு இதழ்கள் முன்வருவதில்லை. அருகி, அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தொட்டுச் செல்கின்றன. பெண்களைப் பற்றிய தகவல்களும் வெளிப்பாடுகளும் இவ்விதழினருக்குப் பக்க நிரப்பியாக, ஈர்ப்பு விசையாகப் பயன்படுமாற்றை மறைப்பதற்கில்லை.

கல்லூரி மாணவிகள், தாம் 'அப்பாவாக இருந்தால்......' எனக் கருத்துத் தெரிவிக்கும் பகுதி கல்கியில் *(13998, பக். 28-30)* அமைவது, பெண், தானும் ஆணாக இருப்பதை விரும்புதல், ஆண் தலைமையை மறுக்காமல் ஏற்றல் என்ற பாங்கினது. புதிய சிந்தனை வழங்குவதாக எண்ணிச் சில மாணவியர் பேசுவனவும் கூட, மரபுக் கண்ணோட்ட எல்லையைத் தாண்டாமலேயே நிற்கின்றன. டௌரி வாங்காத அப்பாவாக

நானிருப்பேன்; பெண் இழிவைப் பிரம்பெடுத்துத் துரத்துவேன்; கட்டிய மனைவியை நிச்சயமாக அடிக்கவே மாட்டேன்...... என இவை நீளும்.

ஆனந்தவிகடனின் *(2.8.98)* கதைகள், ஆண்-பெண் நட்பு எல்லையைப் புரிந்துகொள்ள முடியாத ஆணையும்; பெண் படித்தவளாக திறமையானவளாக இருந்தபோதும் அவளைப் பெண்பார்க்கும் சூழலில் தன்முனைப்போடு பேசும் ஆண்மகனையும் காட்டுகின்றன. 'சகோதரன் தானே? இல்லை' *(பக். 36-42)* எனும் கதையில், "ஒரு பெண்ணைப் பெண்ணாப் பாத்துத்தான் பேசுவாங்க. எந்தப் பெண்ணைப் பார்க்கும் போதும் 'இவள் சகோதரி', 'இவள் மச்சினி', 'இவள் பெண்டாட்டி'னு முடிவு பண்ணிக்கிட்டு யாரும் பேசறது இல்லை"; "உங்களை ஒரு சகோதரனைப் போல் எண்ணித் தான் நான் பேசிக்கிட்டு வாரேன்... நீங்களும் என்னை ஒரு சகோதரி மாதிரி எண்ணிக்கொண்டு தானே பேசி வருகிறீர்கள்" - என்ற ஆண்-பெண் குரல்கள் ஒலிக்கக் கேட்கலாம். 'ஒண்ணும் தெரியாத சின்னப் பொண்ணு' *(பக். 64-65),* வந்த மணமகனை மறுத்துரைப்பதில் புதுமை நோக்கு வெளிப்படுத்தும் முயற்சி தொனிக்கிறது- 'நான் படிச்சது மெரிட் ஸ்காலர்ஷிப்ல! வேலையும் பதவி உயர்வும் கிடைச்சது என் திறமை. ஆனா உங்களால எந்த வேலையிலயும் நிலைச்சு நிக்க முடியலை. உங்க பொண்டாட்டி நிறைய நகையோட வரணும். கல்யாணச் செலவைக் கூட மிச்சம் பிடிச்சு, உங்க கையிலே ரொக்கமா தரணும். அதை வெச்சு நீங்க பிஸினஸ் தொடங்குவீங்க. நாளைக்கு அதையும் ஒழுங்கா செய்யத் தெரியாம பிஸினஸ்ல தோத்துட்டு வந்து ஓட்டாண்டியா நின்னா, அப்பவும் ஒண்ணும் தெரியாத இந்தச் சின்னப் பொண்ணுதான் உங்களுக்குத் தோள் கொடுத்துத் தாங்கணும். ஸாரி..... என்னால அது முடியாது' என்ற ஆக்ரோஷமான மறுப்பு, யதார்த்த நிலையாகுமா என்பதை ஆய்ந்து காணவேண்டும்.

குமுதம் *(13.8.98)* இதழின் கதையொன்று, கைக்குழந்தையோடு, கணவனை இழந்த நிலையிலும், அவன் உடம்பை, தன்னை ஏற்காத அவன் பெற்றோர் வீட்டிற்கு எடுத்துச் செல்லும்படி தனித்து முடிவெடுக்கும் துணிவினளாக, துவண்டுவிடாதவளாக ஒரு பெண்ணைக் காட்டுகிறது *(பக். 36-39;* 'மாவிலைத் தோரணம்'*).* இதுவும், கற்பனையின் எல்லையைத் தாண்டாது, யதார்த்தத்தைத் தொடும் திறனாய்வு நோக்கை வெளிப்படுத்துகின்றது.

மகளிரிதழ்கள், எத்தகு பார்வையைக் கொண்டுள்ளன என்பதும் பெண்ணிய நோக்கில் அணுகத்தக்கதாகும். எல்லா மகளிரிதழ்களும் பெண்ணியம் பேசுவதில்லை. இங்கும் வியாபார நோக்கமே காரணம்.

வாசகர் யார், அவர்கள்-ஆடவராயினும், மகளிராயினும் என்ன வாசிக்க விரும்புகிறார்கள் எனக் கருதி, அதற்கேற்பவே உள்ளீடு அமைக்கப் பெறுகின்றது. தகவல்கள் தந்து, விழிப்புணர்வூட்டும் நோக்கு ஒவ்வொரிடத்துக் காணப்படுகின்றது. தனிமனித அனுபவங்களும் வழிகாட்ட முடியும் என்ற உணர்வும் தெரியவருகின்றது.

ராஜம் *(ஜூன், 98)* இதழ், அப்பா-மகள் உறவின் பாதிப்புகள் *(ப.12)*, குடும்பக் கட்டுப்பாடு *(ப.14)*, பிசியான பெண்கள் எப்படி சமாளிக்கிறார்கள் *(ப.20)*, அந்தக் காலத்து அரசிகளின் அவல நிலை *(ப.34)*, நம்நாட்டுப் பெண்களின் நிலை உயர *(பக்.45-46)*, மகளிர் காவல் நிலையம், மனைவிக்கு ஜீவனாம்சம் *(ப.84)* எனப் பெண்ணைச் சுற்றியுள்ள வலைப்பின்னலான பிரச்சினைகளையும், அவற்றிலிருந்து வெளியேறி விடுபடும் வாய்ப்புகளையும் முன்வைக்கிறது. 'எந்த வயதிலும் பெண்கள் மனதுவைத்தால் சிக்கென்று டிரிம்மாக உடலையும் மனதையும் புத்துணர்ச்சியுடன் வைத்துக் கொள்ள முடியும்' *(ப.77)* என்ற கருத்து எந்தளவு பெண்ணிய நோக்குக்கு உகந்தது எனச் சிந்திக்க வேண்டும். சௌகார் ஜானகியின் சில கருத்துகள், பெண் துவண்டு விடாமல் செயலாற்றினால் வெற்றி நிச்சயம் என்பதை உள்ளுறுத்தும். 'எப்படியும் குடும்ப வாழ்க்கை சரியில்லாமல் போயிடுச்சு. நமக்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். நாம் எந்தத் துறையிலாவது சாதிச்சே ஆகணுங்கற என் வெறி தான் என்னுடைய *(அந்த)* வெற்றிக்குக் காரணம். ஒன்று போய்விட்டால் முடங்கிப்போய்விடுகிற ரகம் நான் இல்லை. சரி அடுத்தது என்ன என்று என்னைத் தேற்றிக்கொண்டு எழுந்துவிடுவேன். பெண்களுக்கு இருக்க வேண்டிய முக்கிய குணங்களில் இதுவும் ஒன்று' *(ப.68)* என்பது அந்தக் கூற்று. ராஜம் ஆகஸ்ட் *('98)* இதழ், பெண்ணின் வாழ்வில் ஆண் அவசியமா *(பக். 29-34)* என்ற கேள்வியை முன்வைத்து ஆய்கிறது. திருமணமாகாத ஒரு பெண்ணும் கூட, குழந்தையொன்றைத் தத்தெடுக்க முடியும் என்பதைத் 'தத்தெடுத்தேன் ஒரு மகள் கிடைத்தாள்' *(ப.9)* என்பதிலிருந்து அறிய இயல்கிறது. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டுச் சட்டமும் இயற்றப்பெற்றும் கூட, பூரி ஜகன்நாதர் ஆலயத்தில் *45* ஆண்டுகளாகக் கோகிலா பிரபா எனும் மாது அந்நிலையிலமைவதை 'நடு இரவு நேரம் நடனம் ஆடுவேன்' *(ப.19)* என்ற பகுதியில் காண முடிகிறது. சமூக வாழ்க்கையின் நிதரிசனங்களை வெளிப்படுத்தும் இந்நோக்கம், கேட்போர்க்குச் செயல்படத் தூண்டும் உணர்ச்சி ஊட்டுவதாகும்.

பெண்மணி எனும் மகளிர் இதழ் *(ஆகஸ்ட், 98),* மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதா நிறைவேறாமையும், இருட்டடிப்புச் செய்யப்படுவதும் பற்றிக் கூறுகிறது *(பக். 22-23).* பெண் விடுதலைச் சிந்தனையும் *(ப.9),* விழிப்புணர்ச்சி தான் பெண்களுக்குச் சுதந்திரம் *(ப.72)* என்பதும் முன்வைக்கப்படுகின்றன. இந்தியப் பெண்களின் பிரச்சினைகளை ஆழமாய் அணுகி, அவற்றிற்குத் தீர்வு காணும் நோக்கு, 'ஒரு பெண்..... பெண்களுக்காக' *(பக்.36-39)* என்பதில் விளக்கமாகத் தென்படுகின்றது.

'பெண்களால் எழுத முடியாது' *(பக். 30-33)* எனும் பகுதி, அக-புற நிலையில் இன்னும் ஆண்-பெண் சமத்துவம் ஏற்பட்டுவிடவில்லை என்பதையே உணர்த்துகிறது :

> இந்திய நாட்டுச் சூழலில், பெண்கள் அவர்கள் நினைத்ததை வெளிப்படுத்த முடியாது. அது அவர்களைப் பாதிக்கும். ஆனால் நாவல் சிறுகதையென்றால் ஒரு கேரக்டர் வழியாகத் தப்பித்துக் கொள்ளலாம். கவிதை கவிஞன் தன் உணர்வுகளைச் சொல்வது. இதில் ஆண் வெளிப்படையாகச் சொல்வது போல பெண்களால் முடியாது. கல்யாணத்திற்கு முன்பு எழுதினால் அவளது கல்யாணம் பாதிக்க வாய்ப்பு அதிகம். திருமண வாழ்க்கையில் எழுத முயன்றால் அது பெரிய பிரச்சனைகளை உண்டுபண்ணிவிடும். மற்றொன்று பெண்ணுக்கு இயல்பாகவே இருந்துவரும் தாழ்வுணர்ச்சி. அதனால் இலக்கியத்தில் பயற்சி எடுத்துக்கொள்ளத் தயங்குவதால் அவளது படைப்பின் தரம் குறைந்து காணப்படுகிறது.

என்ற கருத்து, தொடர்ந்த இதழில் கண்டனத்திற்குரியதாகிறது. 'பெண்கள் படைப்பில் தரமில்லை என்றும் இந்தியச் சூழலில் பெண்களால் எழுத முடியாது என்றும் ஆழ்மன வக்ரங்களை அள்ளி வீசிய அப்துல் ரகுமானை வன்மையாகக் கண்டிக்கிறோம்' (பெண்மணி, செப்டம்பர் *'98, ப.71)* என்பது அது. இந்த இதழின் தலையங்கம், 'பெண்களால் மட்டுமே முடியும்' என்ற தலைப்பில், 'குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைக்கவும், பெண் சிசுவதையைத் தடுக்கவும், சமுதாய நோய்களான வரதட்சணை, பெண் இழிவுச் செல்கள், புகுந்த வீட்டுக் கொடுமைகள் எனப் பலவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தப் பெண்மணிகளால் மட்டுமே முடியும்' *(ப.3)* என்பது வழி, பெண்களைக் கடமையுணர்த்தி ஊக்கமூட்ட முயல்கிறது. பெண்ணியம் *(ப.48),* பெண்ணுரிமை *(பக்.49,57)* என்பன அலசப்படுகின்றன.

'பிரபஞ்சனின் பெண்' (ப70), நூல் மதிப்புரையாக அமைவதுடன், இதழின் பெண்ணியப் பிரச்சார நோக்கையும் காட்டுகிறது. 'பெண் விடுதலை சாத்தியப்படாமல் ஆண் விடுதலையும் மண் விடுதலையும் சாத்தியப்படாது..... தாய் வழிச் சமூகமாக, பெண்ணைத் தலைவியாகக் கொண்டு வளர்ந்த சமுதாயத்தில், தாசியாக, அடிமையாக, சார்ந்து வாழும் சார்பு பிராணியாக, இரண்டாம் தர பிரஜை என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்ட பெண்களின் சார்பாகக் குரல் எழுப்பியிருக்கும் நூல்.... தெய்வப் பெண்கள், கற்புக்கரசிகள் என்ற முத்திரையில் அவர்கள் வலியை மறைத்து வணங்கும் போலிச் சமூகத்திற்கு, பெண்களின் வேதனையை ரத்தமும் வலியுமாக எடுத்துச் சொல்லியிருக்கிறது' என்று கருத்து அமையும்.

இதழ்கள், தமிழக மகளிரை - இந்திய உலக மகளிரையும் கூட எப்படித் தருகின்றன என்பதற்கு ஒரு பதச் சான்றாக இவை அமைகின்றன. அரசியல், சமய, பொருளாதார, சமூகக் காரணங்களால் மனிதன் அடக்கப்பட்டு, மனித உரிமைகள் பறிபோகும் சூழலில், பெண்ணின் நிலையும் வளர்ச்சியை எதிர்நோக்கிப் போராடி முயலவேண்டியுள்ளமை தெரிய வருகின்றது.

## IV

பல்வகைக் கோணங்களில், பெண்ணியம், மகளிரியல், கள ஆய்வு, இலக்கியத்தின் பதிவு எனப் பார்வைகளமைந்தமைக்கு இணைப்பாக இவ்விதழியல் களம் அணுகித் தரப்படுகின்றது.

விரிந்த பரப்பும், பரந்த களனும், இப்பொருண்மை பற்றி இன்னும் பல சிந்தனைகளை வழங்க இயலும். இத்துறை நூல்களும், ஆய்வுகளும் தொகைப்படுத்தப்படுதல் இப்பணிக்கு அடித்தளம் வழங்கலாம்.

தமிழக மகளிர் திங்கள் தொடர் கருத்தரங்கில் கட்டுரை வழங்கிக் கலந்து கொண்ட அறிஞர், பேராசிரியர், வல்லுநர் ஆகியோர்க்கு எம் பாராட்டும் நன்றியும்.

"தமிழக மகளிரியல்" என்ற தலைப்புடன் தற்போது இக்கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு நூலாக்கம் பெறுகின்றது.

இந்நிலையில், நிறுவனத் தலைவர், ஆளுநர்குழு, இயக்குநர், மதிப்பீட்டுக் குழு ஆகியோருக்கும்; ஒளிக்கோர்வை செய்த தொழில் நுட்பவியலாளருக்கும்; அச்சகத்தாருக்கும் எம் நன்றி.

**அன்னிதாமசு**
(பதிப்பாசிரியர்)

# கட்டுரையாளர்

**முனைவர் ஆர். அம்பிகா**
பேராசிரியர்
ஆங்கிலத்துறை
அம்பேத்கர் அரசு கலைக்கல்லூரி
சென்னை - *600 039*

**முனைவர் வீ. அரசு**
பேராசிரியர்
தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - *600 005.*

**முனைவர் அரங்க. இராமலிங்கம்**
பேராசிரியர்
அஞ்சல்வழி கல்வித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - *600 005*

**முனைவர் ந. கடிகாசலம்**
இணைப்பேராசிரியர் (அயல்பணி)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - *600 113*

**முனைவர் தி. கமலி**
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அன்னை தெரசா மகளிர்
பல்கலைக்கழக விரிவு மையம்
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
வளாகம், சைதாப்பேட்டை
சென்னை - *600 015*

**திருமதி இரா. கஸ்தூரி**
தமிழ்த்துறை
அண்ணா ஆதர்ஸ் மகளிர்
கல்லூரி
சென்னை - *600 040*

**செல்வி கோ.வெ. கீதா**
தமிழ்த்துறை, அரசுக் கல்லூரி,
சித்தூர், பாலக்காடு
கேரளம் - *678 104*

**திருமதி வ. கீதா**
எண்.*4*, ரங்கன் தெரு, தி. நகர்,
சென்னை - *600 017*

**முனைவர் ச. சிவகாமி**
இணைப்பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - *600 113*

**திருமதி ம.ப. சித்ரா**
விரிவுரையாளர்
வைணவக் கல்லூரி
சென்னை - *600 106*

**முனைவர் கே. சுப்பம்மாள்**
பேராசிரியர் மற்றும் தலைவர்
கல்வியியல் துறை
அன்னை தெரசா மகளிர்
பல்கலைக்கழக விரிவு மையம்
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
வளாகம், சைதாப்பேட்டை
சென்னை - *600 015*

**திருமதி பா. தமிழ்ச்செல்வி**
முதுநிலை தமிழாசிரியர்
அரசு மகளிர் மேனிலைப் பள்ளி
அரக்கோணம்

**முனைவர் வி.பி. தேவதத்தா**
எம்-*40*-எல், யுனைட்டட் காலனி
மேற்கு அவென்யூ, திருவான்மியூர்
சென்னை - *600 041*

**முனைவர் நான்சி டேவிட்**
பொருளியல் பேராசிரியர் (ஓய்வு)
10, சுரேந்திர நகர், ஆதம்பாக்கம்,
சென்னை - 600 088

**முனைவர் பாக்யவதி சங்கரலிங்கம்**
தேர்வுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை
செல்லம்மாள் மகளிர் கல்லூரி
கிண்டி, சென்னை - 600 032

**முனைவர் இரா. பிரேமா**
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
எத்திராஜ் மகளிர் கல்லூரி
சென்னை - 600 008

**முனைவர் பி.என். பிரேமலதா**
இணைப்பேராசிரியர்
வரலாற்றுத்துறை
அன்னை தெரசா மகளிர்
பல்கலைக்கழக விரிவு மையம்
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
வளாகம், சைதாப்பேட்டை
சென்னை - 600 015

**முனைவர் பா. புவனேசுவரி**
தலைவர், தமிழ்த்துறை
செல்லம்மாள் மகளிர் கல்லூரி
கிண்டி, சென்னை - 600 032

**முனைவர் ப. மகாலிங்கம்**
விரிவுரையாளர், தமிழ்த்துறை
மாநிலக் கல்லூரி
சென்னை - 600 005

**முனைவர் அ. மங்கை**
விரிவுரையாளர், ஆங்கிலத்துறை
ஸ்டெல்லா மேரி கல்லூரி
சென்னை - 600 086

**முனைவர் இ. மறைமலை**
பேராசிரியர், தமிழ்த்துறை
மாநிலக் கல்லூரி
சென்னை - 600 005

**முனைவர் சா. முத்துச் சிதம்பரம்**
இணைப்பேராசிரியர்
சமூகவியல் துறை
மனோன்மணீயம் சுந்தரனார்
பல்கலைக்கழகம்
திருநெல்வேலி - 627 012

**முனைவர் ர. விஜயலட்சுமி**
இணைப்பேராசிரியர் (ஓய்வு)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

**திருமதி வேனிலா ஸ்டாலின்**
தமிழ்த்துறை
அண்ணா ஆதர்ஸ் மகளிர் கல்லூரி
சென்னை - 600 040

# உள்ளே


1. மகளிரியல் — 1
   *- வி.பி. தேவதத்தா*

2. பெண்ணியத் திறனாய்வு — 7
   *- இ. மறைமலை*

3. மகளிரியல் ஆய்வு நெறிமுறைகள் — 29
   *- ர. விஜயலட்சுமி*

4. தமிழகத்தில் பெண்விடுதலைச் சிந்தனையும் மகளிர் அமைப்புகளும் — 39
   *- வ. கீதா*

5. இந்தியப் பெண்ணியமும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியும் — 41
   *- இரா. பிரேமா*

6. விடுதலைக்கு வித்தட்ட வீரத்தமிழ் மங்கையர் — 51
   *- பி. என். பிரேமலதா*

7. சமூக மதிப்புகளும் மகளிரும் — 61
   *- ச. முத்துச் சிதம்பரம்*

8. தமிழக மகளிரும் உயர்கல்வியும் — 77
   *- கே. சுப்பம்மாள்*

9. கிராமச் சுகாதாரச் செவிலியர் நடைமுறை வாழ்க்கையும் பெண்ணியக் கோட்பாடும் — 87
   *- ஆர். அம்பிகா*

10. பணிச்சந்தையில் பால் அடிப்படை பேதம் — 101
    *- நேன்சி டேவிட்*

11. பெண்ணிய நோக்கில் இலக்கியப் படைப்பும் வாசிப்பும் — 111
    *- அ. மங்கை*

12. பெண்ணியக்கத்தில் ஔவையின் போக்கு — 121
    *- வேனிலா ஸ்டாலின்*

13. பெண்ணிய நோக்கில் பெருங்கதை 129
*- பாக்யவதி சங்கரலிங்கம்*

14. பெண்ணியப் பார்வையில் கம்பராமாயணம் 147
*- ச. சிவகாமி*

15. பழமொழிகளில் ___ 167
*- ந. கடிகாசலம்*

16. தமிழ் அச்சுச்சாதனமும்
பெண் நாவலாசிரியைகளும் (1920க்கு முன்) 181
*- வீ. அரசு*

17. வ.ரா. அவர்களின் பெண்ணியச் சிந்தனைகள் 193
*- கோ.வெ. கீதா*

18. பாரதியாரின் பெண்ணியச் சிந்தனைகள் 213
*- ப. மகாலிங்கம்*

19. பாரதிதாசனின் பெண்ணியச் சிந்தனைகள் 227
*- அரங்க. இராமலிங்கம்*

20. பட்டுக்கோட்டையாரின் பெண்ணியச் சிந்தனைகள் 243
*- இரா. கஸ்தூரி*

21. திரு.வி.க. அவர்களின் பெண்மைக் கோட்பாடுகள்
- பெண்ணியப் பார்வை 259
*- தி. கமலி*

22. ஜீவாவின் பெண்ணியச் சிந்தனைகள் 275
*- பா. தமிழ்ச்செல்வி*

23. பகுத்தறிவு இயக்கத்தின் பெண்குறித்த பார்வை 295
*- ம.ப. சித்ரா*

24. ஈ.வெ.ரா.பெரியார் அவர்களின் பெண்ணியச்
சிந்தனைகள் 305
*- பா. புவனேசுவரி*

# மகளிரியல்

**வி.பி. தேவதத்தா**

**உலகளாவிய நிலையில் எழுந்துள்ள புதிய கல்வித் துறையாக மகளிரியல் அமைகின்றது.**

## மேலை நாடுகளில் மகளிரியல் தோற்றம்

மேலை நாடுகளில் குறிப்பாக அமெரிக்காவில் இரண்டாவது உலகப்போருக்குப் பின் பெண்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்பினை மிகுதியாகப் பெற்றனர். குழந்தை பெறுதல்-வளர்த்தல்-குடும்பப்பணி ஆகிய பாரம்பரியத் தொழில்களைத் தவிர வேறுபல பணிகளையும் செய்யமுடியுமென்ற நம்பிக்கை தோன்றியது. ஆண்களுக்கான பல வாய்ப்புக்கள் பெண்களுக்கு இல்லாமற் போனது கேள்விக்குட்படுத்தப் பட்டது. எல்லா வகையிலும் பெண் இரண்டாம் நிலையில் இருக்கக் காரணம் என்ன என்று சிந்திக்க ஆரம்பித்தனர். பெட்டி ஃபிரிடைன் போன்றோரின் செயல்பாடு, அவர் எழுதிய 'Feminine Mystique' என்ற நூல், அதன் தாக்கம் பரவலாகியது.

*1960*களில் பல முற்போக்கு இயக்கங்கள் தோன்றிச் செயல்பட்டன. சமத்துவத்திற்கான போராட்டம் ஆங்காங்கு வெடித்தன. சிறுபான்மையோர், பெண்கள் சமவாய்ப்புக்கான கிளர்ச்சி, வியட்நாம் போருக்கு எதிரான போக்கு, தீவிரமான மனித உரிமைப் போராட்டத்திற்கு அடிகோலின.

பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டத்தை எதிர்த்தும், கல்விக் கொள்கையை எதிர்த்தும், அரசியல் அமைப்பில் மாணவர்களின் பங்கு மிகுதியாக இருக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தும், போராட்டங்கள் இடம்பெற்றன. மாணவியரும் தங்கள் நிலை பற்றித் தீவிரமாகக் கேள்வி கேட்கலாயினர்.

## பெண்களின் வாசகர் வட்டக் குழு

மகளிர் தங்களைப் பற்றிய பரிசீலனையில் ஈடுபட்டனர். இளைய பெண்கள் ஒன்றிணைந்து செயல்பட ஆரம்பித்தனர். பெண்கள் ஏன்

வேறுமுறையில் நடத்தப்படவேண்டும்? பெண்களால் இது முடியும், இது முடியாதென்ற கருத்தாக்கம் தங்களுக்குப் பாதிப்பை உண்டாக்கியமையை உணர்ந்தனர். இவர்கள் அடிக்கடி தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். பல்வேறிடங்களிலும் இப்படிப்பட்ட குழுக்கள் கலந்துரையாடின. இந்தக் குழுக்கள் உள்ளுணர்வைத் தூண்டி (Consciousness raising) எழுப்பும் குழுக்களாயின. இவர்கள் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தைக் கவனிக்க ஆரம்பித்தனர். வரலாறு பயிலும்போது பெண்களைப் பற்றிப் பயிலுவதில்லை. இலக்கியத்தில் ஆணே மையப்படுத்தப்பட்டு முக்கியமானவனாகக் கருதப்படுகிறான். உளவியல், பெண்களைப் பலமற்றவர்களாக, பொதுவாழ்வில் செயல்படாதவர்களாகக் காட்டுகிறது. இவை எதனால் என்ற கேள்வி எழுந்தது. பெண்களின் புறக்கணிக்கப்பட்ட நிலை கேள்விக்குட்பட்டது.

பணிகள் கிடைப்பதிலும் சமத்துவமில்லை. நிதியுதவியும் ஆண்களுக்கே தரப்பட்ட உண்மையைக் கண்டறிந்தபோது பெண்களுக்குச் சமவாய்ப்பு தரப்பட வேண்டுமென்ற தீவிர எண்ணம் தோன்றியது.

பொருளாதார நிலை, சமூகம், அரசியல் ஆகிய எல்லா தளங்களிலும், எல்லா நிலைகளிலும் ஏற்றத் தாழ்வோடு மகளிர் நடத்தப்படுவதை அறிந்தபோது மேலும் தீவிரமடைந்தது போராட்ட எண்ணம்.

அதன் விளைவே மகளிரியலின் அறிமுகம். ஆரம்பத்தில் தேவையான தகவல்கள் இல்லை. ஆய்வின் தேவை மேலும் உணரப்பட்டது. இதுவரை அக்கறை காட்டப்படாத பல செய்திகள் மீது அக்கறை காட்டப்பட்டன. ஆய்வுகள் பெருகின.

ஆய்வு, நூலகம், சிறுகுறிப்புகள் இவை செய்தி மலர்களில் வெளியிடப்பட்டன. சிந்தனை பரவலாகியது. பயில வருவோர் வெள்ளையராக இருந்தனர். சிறுபான்மையோரும் கறுப்பினத்தாரும் வராததின் காரணம் என்னவென்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பல புது உத்திகளும் புதிய ஆய்வு முறைகளும் வளர்ந்தன.

வரலாற்றில் பெண்கள் நிலை, பொருளாதாரத்திற்கு அவர்கள் பங்கு, மரபு என்பவை உண்மையில் மரபுகளா? என்பவை ஆராயப்பட்டன. இவை பெண் அடங்கியவள், பாதிக்கப்பட்டவள் என்ற நிலையிலிருந்து, செயல்படுபவள் என்ற கருத்து நிலையில் மாற்றம் ஏற்பட வழி வகுத்தன.

### இந்தியாவில் மகளிரியல்

மகளிரியல் என்ற சொல் மேலை நாட்டாரிடமிருந்து கடன் வாங்கப்பட்டது. இந்தியாவில் மகளிரியல் வழக்கில் வந்து ஏறக்குறைய

பதினைந்து ஆண்டுகளாகின்றன. பத்தாண்டிற்குப் பிறகுதான் நாம் இந்தத் தொடரை அடிக்கடி பயன்படுத்த ஆரம்பித்துள்ளோம்.

பெண்களைப் பற்றிய ஆய்வு நமக்குப் புதியதன்று; ஆனால் பார்க்கும் நோக்குதான் புதியது.

*1981*இல் பம்பாயில் நடந்த மகளிரியலுக்கான தேசிய மாநாட்டின் முக்கியத்துவம், பல்கலைக்கழக மானியக் குழுவின் ஊக்கம் ஆகிய காரணங்களால் உயராய்வு கல்வி நிறுவனங்களில் "மகளிரியல்" அறிமுகப்படுத்தப்பட்டது.

வரலாற்றாசிரியர், மானுடவியலார், சமூகவியலார் ஆகியோர் பெண்களைப் பற்றி ஆய்வு செய்துள்ளனர். ,மேட்டுக்குடி மக்கள், நகர மக்கள் பற்றியே அவை அமைந்தன. குடும்பத்தில் அவள் பங்குநிலை, பணிபுரியும் நடுத்தரப் பெண்களின் பங்குநிலை, போராட்டம் ஆகியவையே ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. கிராமத்துப் பெண்கள், அடிமட்டத்துப் பெண்கள் பற்றிய ஆய்வு ஏதுமில்லை. இந்நிலை அறுபதுகள் *(1960)* வரை நீடித்தது. ஆயினும் அதற்கான காரணம் ஆராயப்படவில்லை. பெண்ணின் நிலையைக் கேள்விக்குட்படுத்தவுமில்லை.

எழுபதுகளில்தான் பெண்களைப் பற்றிய ஆய்வும் குறிப்பிடத்தக்க நிலையில் மாற்றம் பெற்றது.

இந்திய மகளிரின் நிலை பற்றிய அறிக்கை வெளியீடு (Towards Equality) பெண்களின் நிலை பற்றிய ஆய்வுக்கு மேலும் இடமளித்தது.

இந்திய அரசியல் சாசனம் சமத்துவத்தை வற்புறுத்தி நிற்க, மகளிர் நிலை பற்றிய அறிக்கை பெண்களின் தாழ்ந்த நிலையை மிக அழுத்தமாக எடுத்துரைத்தது.

அதனால் மேலும் பல ஆய்வுகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டன. பல்கலைக்கழக மானியக் குழு (U.G.C.), இந்தியச் சமூகவியல் ஆய்வுக்குழு (ICSSR) மற்றும் அறிவியல் தொழில் நுட்ப ஆய்வுக்குழு (CSIR), பிற தேசிய, சர்வதேச நிறுவனங்கள் பெண்களைப் பற்றிய ஆய்வினை ஊக்குவித்தன; தொடர்ந்து செயல்படுகின்றன.

பல்வேறு தன்னார்வக் குழுக்களும் மிகுந்த ஈடுபாட்டோடு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன.

பம்பாயில் உள்ள SNDT பல்கலைக்கழகத்தில் மகளிர் கல்விக்கான ஆய்வுப் பிரிவும், டில்லியில் உள்ள மகளிர் முன்னேற்ற ஆய்வு மையமும், மகளிர் பிரச்சினைகளை ஆராய்வதில் முன்னோடிகளாக உள்ளன.

தமிழ்நாட்டில் மகளிர் மேம்பாட்டுக்கெனவே ஆரம்பிக்கப்பட்ட அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் மகளிர் பிரச்சினைகளை மையமிட்டு ஆய்வுகளை மேற்கொண்டு செயல்படுவதும் குறிப்பிடத்தக்கது.

மகளிர் மேம்பாட்டிற்கான கருவிதான் மகளிரியல் என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும். இது ஆண்கள் மீது ஏற்பட்ட வெறுப்பின் வெளிப்பாடன்று; பெண்கள் மீதான அக்கறையின் வெளிப்பாடு.

பெண்கள் வாழ்க்கையினின்றும் கிடைக்கும் அனுபவங்களைப் புள்ளி விவரங்களாக வைத்துக் கொள்வது மேலும் தீவிரமாகவும் ஆழமாகவும் பெண்களைப் புரிந்துகொள்ள இயலும். இதுவரை கவனிக்கப் படாத பெண்கள் பார்வையையும் மையப்படுத்துவதின் மூலம் சமூக யதார்த்தத்தை அதன் முழு பரிமாணத்தோடு பார்க்க இயலும்.

மகளிரியல் சமூக மாற்றத்திற்கான ஒரு கருவி. கல்வி முறையின் மூலமே இது சாத்தியம். உயராய்வு கல்வி நிறுவனங்களில் மகளிரியலை அறிமுகப்படுத்தியிருப்பது இம்மாற்றத்தைக் கருதியே.

மகளிரியல் இன்னும் பரவலாகவும் ஆழமாகவும் அறிமுகப்படுத்தப் பட்டுத் தொடர்ந்து செயல்பட வேண்டும்.

இத்துறையின் சுருக்க வரைவு கீழ் வருமாறு அமையும். மகளிரியல் தோற்றம் - பெண்ணியம் உந்துசக்தியாக அமைந்த நிலை - இந்தியாவில் மகளிரியல் வளர்ச்சிக்கு முக்கிய காரணிகள் :

1. உலகளாவிய நிலையில் பெண் விடுதலைக்கான இயக்கங்கள்.
2. ஐக்கிய நாட்டுச் சபையின் 'பெண்கள் பத்தாண்டு' பிரகடனம்.
3. பெண்களின் நிலையை மேம்படுத்த அமைக்கப்பட்ட தேசிய மகளிர்க் குழு.
4. மகளிரைப் பற்றிய ஆய்வுகளுக்கு வெளிநாட்டாரின் நிதி உதவி.
5. தன்னார்வக் குழுக்கள் அடிமட்டத்து மகளிர் மீது கொண்ட அக்கறை-மகளிரியல் அறிமுகத்தால் மேற்கொண்ட ஆய்வுகள்.

துவக்க நிலையில்,

1. வாழ்க்கை, அறிவின் பல்வேறு பிரிவுகள் ஆகிய அனைத்தும் ஆணை மையமிட்டதாகவே அமைந்தது.
2. ஆணின் அநுபவமே எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் அமைந்தது.
3. ஆண் பார்வையிலேயே சமுதாய விதிமுறைகள் அமைக்கப் பட்டன.

ஆனால் சமுதாயத்தின் ஒரு பாதியாக இருக்கும்

1. பெண்களையும் மையமிட்டதாக அமைய வேண்டும்.
2. பெண்கள் பார்வையில் சமூக யதார்த்தத்தைப் பார்த்தல் வேண்டும்.
3. பெண்களின் அநுபவம், புரிதல் ஆகியவற்றையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் மகளிரியல் அறிமுகம் செய்யப்பட்டது.

மகளிரியல் வழி,

1. மகளிர் புறக்கணிக்கப்பட்ட நிலையைப் போக்கல்;
2. பெண்களின் பிரச்சினைகளுக்கு அழுத்தம் தருதல்;
3. பெண்களுக்கெதிரான சமத்துவமின்மை, அநீதி, அடக்குமுறை ஆகியவற்றைப் போக்கும் எண்ணம் தீவிரமடையச் செய்தல் ஆகியன இயலும்.

**மகளிரியலின் நோக்கம்**

1. அனைத்து நிலைகளிலும் பாலியல் வேறுபாடுகளைப் போக்குவது.
2. இறுதி நோக்கம், பெண் விடுதலையோடு சமூக விடுதலையை நோக்கியதாகும். பெண்ணின் பிரச்சினை மானுடத்தின் பிரச்சினை; பெண் விடுதலை மக்கள் விடுதலை.

இன்னுமொரு முக்கிய அம்சம், சமூக மாற்றத்திற்குக் கல்வி முறையே அடிப்படை என்பதாகும். உயராய்வு கல்வி நிறுவனங்களில் மகளிரியல் அறிமுகப்படுத்த அது காரணமாகிறது.

**மகளிரியலின் பிற நோக்கங்கள்**

1. பெண்களின் இருப்பை வெளியுலகு அறியுமாறு செய்தல்.
2. தொன்மக் கதைகளைப் பற்றிய மறுபரிசீலனை - பெண்களைத் தாழ்த்தும் ஊகங்களைக் கேள்விக்குட்படுத்தல்.
3. பெண், ஆண் இருவரிடையேயும் விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்தல்.
4. பெண்களின் மானுட வளத்தைத் தேசிய வளர்ச்சிக்கான மூலதனமாகப் பயன்படுத்தல்.
5. மறு உற்பத்தி பங்குநிலையினின்றும் உற்பத்தி நிலையில் அவர்தம் பங்கை ஊக்குவித்து அவர்களின் தாழ்நிலையை உயர்த்துதல்.

6. செயல்பட ஊக்குவிக்கும் வகையில் மகளிரியல் ஆய்வுகளை மேற்கொள்ள வகை செய்வதோடு கற்பித்தலிலும் மாற்றம் செய்தல்.

7. பெண்களைப் பற்றிய தகவல்களை முறைப்படுத்திவைத்துப் பயன்பட வகை செய்தல், புதிய தகவல்களைச் சேகரித்து, முறைப்படுத்தி, ஒன்றிணைத்துச் செயல்பட வைத்தல். அவற்றை எளிதாகப் பிறர்க்குக் கிடைக்குமாறு செய்தல்.

8. பாலியல் வேற்றுமைக்கான காரணங்களைச் சமூக அமைப்பு முறை, மதம், கலாச்சாரம் ஆகியவற்றின் வழி கண்டறிதல்.

9. பாலிய வேறுபாட்டைச் சமூகத்தினின்றும் போக்க, பெண்களின் பிரச்சினைகளைப் பற்றி இளையோர்க்கு விழிப்புணர்ச்சியூட்டல்.

10. அறிவு ரீதியான விளக்கங்களில் பெண்கள் புறக்கணிக்கப் பட்டு கணக்கில் கொள்ளாததற்கான அமைப்பு முறைகளையும் வேர்களையும் கண்டறிதல்.

11. சமத்துவமின்மையை எதிர்த்துப்போராடும் பெண்களின் போராட்டத்திற்கு ஊக்கமளித்தல்.

12. ஏற்கனவே நிலைத்துள்ள சில கோட்பாடுகள், கருத்தாக்கங்கள், நெறி முறைகள் ஆகியவற்றைக் கேள்விக் குட்படுத்தல்; அத்துடன் மாற்றுக் கருத்தாக்கங்கள், அணுகுமுறைகள், வளர்ச்சிக்கான புதிய வழிமுறைகளைக் கண்டறிதல்.

13. சமூக யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதில் ஏற்படும் இடைவெளிகளையும் குறைகளையும் நிரப்புதல்.

14. ஆண் மேலாண்மையை முடிவு கட்டிப் பாலிய வேறுபாட்டை மாற்றுதல்.

**பெண்ணியம் - மகளிரியல்**

பெண்ணியம்- இயக்க ரீதியானது.

மகளிரியல் - கல்விப் புலஞ்சார்ந்தது (Academic discipline); இரு, பல் துறை சார்பினது (Inter disciplinary + Multi disciplinary); செயலொடு இணைந்திருப்பது (Action oriented). அனைத்துத் துறைகளுடனும் மகளிரியல் ஒருங்கிணையும்போது, அடிப்படைக் கோட்பாடுகளையே மாற்றக் கூடிய ஆற்றல் மிக்கது.

# பெண்ணியத் திறனாய்வு

இ. மறைமலை

ஓர் அறிதுறை (Discipline)யைப் பற்றிய விளக்கமும் தெளிவும் பெறுவதற்கு மற்றோர் அறிதுறையை வழித்துணையாக/வழிகாட்டும் ஒளிவிளக்காகப் பயன்படுத்துதல் பல்துறைசார் அணுகுமுறை (Interdisciplinary approach) என்று அழைக்கப்படும். இலக்கியம் என்னும் அறிதுறையில் ஆழ்ந்த கல்வியும் விளக்கமும் பெறுதற்குச் சமூகவியல் (Sociology), மானிடவியல் (Anthropology), உளவியல் (Psychology) எனப் பல்வேறு அறிதுறைகளின் துணைநாடல் இலக்கிய ஆய்வுலகில் இன்று பெருவழக்காக நிலவி வருகிறது.

பெண்ணிய இலக்கியத் திறனாய்வு (Feminist Literary Criticism) இத்தகைய பல்துறை சார் அணுகுமுறைகளுள் ஒன்றாக விளங்குகிறது. இது, பாலினம் (Gender) அடிப்படையாகக் கொண்டு இலக்கிய அனுபவத்தை ஆய முற்படுகிறது. இத்தகைய ஆய்வு பாலினத்தைப் பற்றிய இரு அடிப்படைக் கூற்றுக்களைத் தனக்கு அடித்தளமாகக் கொண்டமைந்துள்ளது. அவையாவன:

1. இரு பால்களுள் ஆண்பாலை உயர்வாகவும் பெண்பாலைத் தாழ்வாக அல்லது உயர்வற்றதாகவும் கருதுவது பிழையாகும். உயிரியல் அடிப்படையில் (Biological) இருபால்களுக் கிடையிலும் எத்தகைய ஏற்றத்தாழ்வும் இல்லை. ‘இறைவன் தீர்ப்பு’ எனச் சொல்லித் தப்பித்துக் கொள்வதும் பொருந்தாது. ‘பண்பாடு’ என ஒன்று கட்டியமைக்கப் பெறும்பொழுதே இத்தகைய தவறான கருத்து விதைக்கப்பட்டு அதனடிப் படையில் பண்பாடு நிறுவப்பெறுகின்றது. எனவே, இதனை முறையாக ஆய்வதே மானிடவியல் அறிதுறைகளில் கருப் பொருளாக விளங்க வேண்டும்.

2. ஆண்களின் பார்வையும் அணுகுமுறையும் உலகளாவியதாக, உலகப் பொதுமை வாய்ந்ததாகக் கருதப்பட்டு அனைத்து

அறிதுறைகளிலும் மேலாதிக்கம் பெற்று விளங்குகிறது. அவற்றின் வாய்பாடுகளையும் நெறிமுறைகளையும் வகுத்தளித்துள்ளது. அவற்றைத் திருத்தியமைக்கவோ அல்லது முற்றிலும் மாற்றியமைக்கவோ பாடுபட வேண்டும்.

மேற்கண்ட இரு கூற்றுக்களும் பெண்ணியத் திறனாய்வின் கட்டுமானத்திற்கு அடித்தளமாக விளங்கின. எனினும், பெண்ணியத் திறனாய்வின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்கியவை மிகச் சுருக்கமாகச் சொன்னால் அன்பு, சீற்றம் என்னும் இரு உணர்வுத் துடிப்புகளேயாகும்.

பெண் எழுத்தாளர்களிடம் ஏற்பட்ட அன்பும் அத்தகைய அன்பை வெளிப்படுத்தும் வகையில் பெண் எழுத்தாளர்களின் படைப்புகளைத் திறனாய்வு செய்து அவற்றின் தனித்தன்மைகளை வகைப்படுத்தியுரைக்க முனைந்த முயற்சிகள் பெண்ணியத் திறனாய்வின் வளர்ச்சிக்கு வழிவகுத்தன. அதே நேரத்தில் பெரும்பாலான பெண் திறனாய்வாளர்கள் ஆண் படைப்பாளிகளின் படைப்புகளை ஆய்ந்து அப்படைப்புகளின் மூலம் அறியலாகும் பெண்ணின் துயர்மிகு நிலையை விளக்க முற்பட்டனர். அப்படைப்புகளில் காணலாகும் பெண் பாத்திரப் படைப்புகள் ஆணாதிக்கத்தால் அல்லலுறும் பெண்களின் அடிமை நிலையை எங்ஙனம் எடுத்துரைக்கின்றன எனவும், மேலாதிக்கம் பெற்று விளங்கும் தந்தை வழிச் சமூக அமைப்புமுறை மரபுகளால் பெண்மை எங்ஙனம் தவறுதலாக உருத்தரித்துக் காட்டப்பட்டது என்பதையும், பெண்மைக்கு இழைக்கப்பட்ட புன்மைகளையும் விரிவாக ஆய்ந்து வெளிக்கொணர்வதே இவர்கள் பணியாக அமைந்தது. ஆணாதிக்கத்தின் மேல் ஏற்பட்ட சீற்றமே இப்பணிக்கு உந்து சக்தியாக விளங்கியது. வேறு சொற்களில் கூறினால், படைப்பாளிகளில் பெண்படைப்பாளிகள் மேல் ஏற்பட்ட தனிப்பட்ட அன்பு முதல்வகை ஆய்வுக்குக் காரணமாக விளங்கியது. பெண் பாத்திரப் படைப்புகளோடு தம்மையும் சார்புபடுத்திக் கொண்டு (Identification) ஆண் எழுத்தாளர்களின் படைப்புகளில் அவை அனுபவிக்கும் அல்லலையும் அலைக்கழிப்பையும் பரிவோடு எடுத்துக்கூற முயன்றமை இரண்டாம் வகை ஆய்வுக்குக் கால்கோள் நிறுவியது.

பெண்ணியத் திறனாய்வு பல்வகை அணுகுமுறைகளுக்கு வழியமைத்துப் பெரும்பாலான இடங்களில் ஒருமையுற்று விளங்குவதற்கு அடிப்படையாக விளங்குபவை மேற்கூறிய அன்பும் சீற்றமும் (அல்லது கண்ணோட்டமும் சார்பு நிலைப்பாடும்) எனலாம்.

பெண் படைப்பாளிகளின் படைப்புகளில் காணலாகும் பெண்பாத்திரப் படைப்புகள் அல்லது பெண்ணின் படிம வார்ப்புகள் (Images

of Women) மூலமாகவும் மகளிர் ஒடுக்குமுறை குறித்து அறிந்துகொள்ளும் வாய்ப்புள்ளது. தந்தைவழிச் சமூக அமைப்பின் பெறுமதிகளில் (Values) ஊறித்திளைத்த ஒரு பெண் படைப்பாளி அதன் விளைவாகத் தமது கதைமாந்தர்களையும் (பெண்), சமூக அமைப்புக்கு ஏற்ப நடப்பவர்களாகச் சித்திரித்தும் இருக்கலாம், அல்லது ஆண் படைப்பாளிகள் தமது படைப்புகளில் அழுத்தமிக்க பெண்பாத்திரப் படைப்புகளை, பெண்ணிய நோக்குடைய எழுச்சிமிக்க கதைமாந்தரையும் படைத்திருக்கலாம்.

இதுகாறும் நிலவிவந்த இலக்கிய வகைமை குறித்த வரையறைகளை மாற்றியமைக்க முனையும்போதும், இதுவரை புறக்கணிக்கப்பட்டுவந்த பெண் எழுத்தாளர்களின் படைப்புகளை நாடறிய வெளிப்படுத்த முயலும்போதும், மேற்கூறிய இருவகை உணர்வுத் துடிப்புகளும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன.

அறுபதுகளில் (ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில்) செல்வாக்குப் பெற்றிருந்த 'புதிய திறனாய்வின்' குறைபாடே 'பெண்ணிய ஆய்வு'க்கு வழி வகுத்ததாகக் 'காப்ளான்' குறிப்பிடுகிறார். ஒரு படைப்பின் மூலத்திற்கே (Text) முதன்மையளித்து, புறச்சார்புகளைப் புறக்கணித்தொதுக்கிய 'புதிய திறனாய்வு' படைப்பாளிகளின் மேதைமையை (Creative genius) முழுவதும் விளங்கிக்கொள்ள இயலாது தடுக்கும் தடைக்கல்லாக விளங்கியது. பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களில் பெண் படைப்பாளிகள் ஒதுக்கித் தள்ளப்பட்டனர். எங்கேனும் நூல்களின் அடிக்குறிப்புகளில் மட்டுமே அவர்களையும் அவர்களது படைப்புகளையும் பற்றிய குறிப்புகள் கிடைக்கப் பெற்றன. பாடத்திட்டங்களில் புறக்கணிக்கப்பட்ட பெண் படைப்பாளிகளின் படைப்புகளை ஆர்வம் காரணமாக அரிதின் முயன்று தேடிப் பெற்ற காப்ளான் அப்படைப்புகளைப் படித்ததும் மேலும் பல செய்திகளை அறிய முயன்றுள்ளார். பெண் படைப்பாளிகள், "எழுத்தாளர்கள் என்னும் வகையில் படிநிலை வளர்ச்சியடைதற்குக் காரணமாக விளங்கிய அனுபவங்கள் யாவை?" என்னும் வினா அவரை அலைக்கழித்த வினாக்களுள் முதன்மையாக விளங்கியது. இவ்வினாவுக்கு விடை காண்பதற்குப் 'புதிய திறனாய்வு' பயன்படாது. புதிய திறனாய்வு புறக்கணித்து வந்த புறச்சார்புகளே பயனளிக்கும் என அவர் கருதினார். "கடிதங்கள், நாட்குறிப்புகள், வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு அல்லது தன் வரலாற்றுத் துணுக்குகளாக விளங்கும் தன் விவரக் குறிப்புகள், சமூக மற்றும் பண்பாட்டுப் பகுப்பாய்வுகள், வரலாறுகள், மானிடவியல் நூல்கள், சமூகவியல், மெய்ப்பொருளியல்-சுருங்கக் கூறினால் பெண்ணிய ஆய்வுகள் பெரிதும் துணைநாடி நிற்கின்ற அறிவு, ஆய்வு முறைமைகள் மற்றும் கோட்பாடுகள் என்பனவற்றின் துணைகொண்டு 'காப்ளான்' பெண்

படைப்பாளிகளை ஆய்வு செய்ய முயன்று, ஆற்றல்மிக்க பெண்ணிய இயக்கத்துடன் ஒருங்கிணைந்ததாகக் கூறுகிறார்.

பல்கலைக்கழகப் பாடத்திட்டங்கள் இலக்கிய உலகில் பெண்களின் பங்களிப்பைப் பெரிதும் புறக்கணித்து வந்தன. தப்பித்தவறிப் பெண் எழுத்தாளர்களின் படைப்புகள் பாடத்திட்டத்தில் இடம்பெற்றாலும் அவற்றை ஆய்வதற்குரிய திறனாய்வு முறைகள் 'ஆண்' வாசகர்களை அடிப்படையாகக் கொண்ட ஆணிய நோக்குடையனவாகவே இருந்தன. பெண் வாசகர்கள் தமது அனுபவங்களை உரைகல்லாகக் கொண்ட ஆய்வு முறைமையின் தேவையை உணர்ந்தார்கள். இந்நிலையில் பல்கலைக் கழகங்களில் இலக்கிய மாணவிகள் கேட்ட கேள்விகளும், அவர்களுக்கு ஏற்பட்ட ஐயங்களும், அவற்றின் அடிப்படையில் ஏற்கெனவே நிலவிவந்த திறனாய்வுக் கருத்துகளை மாற்றியமைத்து வழிவகுத்தன. இத்தகைய மாற்றியமைக்கும் முயற்சிகள் ஜூடித் பெட்டர்லி (Judith Fetterly), பேட்ரிசியா மேயர் (Patricia Meyer) ஆகியோரின் ஆய்வுக்கு வித்திட்டன. மாணவிகள் கேட்ட கேள்விகள், எழுப்பிய ஐயங்களுக்கு விடைகாணும் முகமாகவே பேட்ரிசியா மேயர், 'பெண் கற்பனை' (The Female Imagination) என்னும் நூலை ஆக்கியளித்தார் *(1975)*.

பெண் எழுத்தாளர்களின்மீது ஏற்படும் அளவற்ற ஈடுபாடும், அவர்களைப் பற்றிய திறனாய்வுக்குக் காரணமாக விளங்கியது. சில்வியா பிளாத் (Sylvia plath) என்னும் பெண் படைப்பாளரின்மீது பெரிதும் ஈடுபாடு கொண்ட சாந்திரா கில்பர்ட்டு (Sandra Gilbert) என்னும் திறனாய்வாளர், அத்தகைய ஈடுபாட்டின் காரணமாகவே அவரைப் பற்றி எழுதுவதில் மகிழ்வடைந்தார். பெண் எழுத்தாளர்களின் அனுபவங்களோடு தமது அனுபவங்களை ஒத்து நோக்கி ஒற்றுமைகளைக் காண்பதும், இத்தகைய அனுபவங்கள் ஏனைய ஆண் திறனாய்வாளர்களுக்கு ஏற்படும் வாய்ப்பில்லை எனக் கருதுவதும் இத்தகைய ஈடுபாடு வழித்திறனாய்வுக்கு அரண் செய்தன.

திறனாய்வாளரின் சொந்தப் பார்வைக்கும் மூலத்திற்கும் உள்ள தொடர்பை விளக்குவதாகவே பெரும்பான்மையான பெண்ணியத் திறனாய்வுகள் விளங்கின. இத்தகைய தொடர்பு நிலையே பெண்ணியத் திறனாய்வின் எழுச்சிக்கு மூல ஊற்றாகவும், உந்து திறனாகவும் விளங்கியது. தொடக்கத்தில் கூறப்பட்ட இருவகை உணர்வுத் துடிப்புகளுள் எவ்வகையான உணர்வுத் துடிப்பால் திறனாய்வாளரின் சொந்த ஈடுபாடு ஏற்படுகின்றது என்பதைப் பற்றிக் கவலையில்லை. பெரும்பாலான பெண் திறனாய்வாளர்கள் பல்வேறு நிலைகளில் பல்வேறு வழிகளில் இந்த ஈடுபாட்டைப் பகிர்ந்து கொண்டார்கள். தொடக்கத்திலிருந்தே பெண்ணியத்

திறனாய்வு, பெண்ணுரிமை இயக்கத்தோடு கொண்டிருந்த தொடர்பு, கூட்டு முயற்சிகளை, பலர் இணைந்து செய்யும் திறனாய்வை ஊக்கப்படுத்தும் வகையில் செயற்பட்டது.

"பெண்ணியத் திறனாய்வு என்பது ஓர் அரசியல் செயல்திட்டம், அதன் குறிக்கோள் உலகிற்கு விளக்கமளிப்பது அன்று; உலகை மாற்றியமைப்பதாகும். அங்ஙனம் மாற்றியமைப்பதன் மூலம் வாசகர்களின் மனநிலையை மாற்றியமைக்கவும், வாசகர்களுக்கும் அவர்கள் படிக்கும் படைப்புகளுக்கும் உள்ள தொடர்பு நிலையை மாற்றியமைக்கவும் வினையாற்றுவதே இதன் குறிக்கோள் ஆகும்" என ஜூடித் பெட்டர்லி என்னும் பெண்ணியத் திறனாய்வாளர் கூறுகிறார்.

பெண்களின் படைப்புகளை ஆய்தற்கு உரிய உரைகல்லாக விளங்கக்கூடியது அவற்றைப் படிக்கும் பெண்களின் அனுபவமே என்னும் கருத்தை வலியுறுத்தும் தொடராகிய 'அனுபவத்தின் அதிகாரம்' (The Authority of Experience) என்னும் தலைப்பில் பலரது திறனாய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்ட *(1977)* ஆர்லின் டைமண்டு, லீ எட்வர்டு என்னும் இரு பெண் திறனாய்வாளர்களின் முயற்சி குறிப்பிடத்தக்கது. இவர்கள் இத்தொகுப்பு நூலுக்கான தமது முன்னுரையில்,

> "இத்தொகுப்புக்குக் கட்டுரை வழங்கியுள்ள அனைவரும் கலை ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுச் சூழலின் விளைவு எனக் கருதுகிறார்கள். சில சமயங்களில் கலை ஒரு சமுதாயத்தில் ஆழ்ந்து விளங்கும் நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதாக அமைகிறது. வேறுசில சமயங்களில் இத்தகைய நம்பிக்கைகளையும் சமுதாயம் போற்றும் விழுமியங்களையும் (Values) ஓர் உலுக்கு உலுக்கிக் கேள்விக் கணைகளால் துளைப்பதாக அமைகிறது. மற்றும் சில சமயங்களில் இதுதொடர்பான நிலைகளில் ஒரு கலைஞன் கொண்டிருக்கும் இரட்டை நிலையை மூடிமறைப்பதாக விளங்குகிறது. ஆனால், எச்சமயத்திலும் காலத்துடனும் சமூக அமைப்புடனுமான தொடர்பு நிலையைத் துண்டித்துக் கொண்டதில்லை"

என்று குறிப்பிடுகின்றனர்.

ஒரு திறனாய்வாளரின் அந்தரங்கப் பார்வை பலராலும் பகிர்ந்து கொள்ளப்படும்போது, அதன் அந்தரங்கத் தன்மை மேலும் கூர்மைடைகிறது.

பலரும் தங்கள் அந்தரங்க அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்போது, தாங்கள் இதுவரை கருதிவந்த 'அந்தரங்கம்' என்பது ஒரு பொதுத் தன்மை வாய்ந்தது என்பதையும், 'தமக்கு மட்டுமே உரியதன்று' என்பதையும் கண்டுகொள்கிறார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு பெண் திறனாய்வாளர் தமக்கு எழுச்சியும் வேகமும் ஊட்டியதாக அல்லது தமக்கு உரிய நேரத்தில் விழிப்புணர்ச்சியூட்டியதாக ஒரு பெண் படைப்பாளரைக் கருதியிருக்கலாம். இக்கருத்து பலராலும் பகிர்ந்து கொள்ளப்படும்போது, அக்கருத்தின் நம்பகத் தன்மை மேலும் வலுவடைகிறது.

பெண் படைப்பாளரின் அனுபவ விளக்கமாக அமையும் படைப்பைத் திறனாய்வாளர் ஆய்ந்து அந்த அனுபவத்தின் தனித்தன்மையையும், அவ்வனுபவத்தின் கலை நயமிக்க வெளிப்பாடாகப் படைப்பை உருவாக்கிய அவரது ஆற்றலையும் ஆய்ந்து கூறுகிறார். ஆண் திறனாய்வாளர்கள் இங்ஙனம் ஆய்வு செய்ய முயலாமையையும், பெண் படைப்பாளர்களைப் புறக்கணித்து அல்லது குறைத்து மதிப்பிட்டு வந்தமையையும் எதிர்மறுக்கும் வகையிலான இத்தகைய ஆய்வே நடைமுறையில் நிலவிவரும் திறனாய்வு மரபுகளுக்கு எதிரான பெண்ணியத் திறனாய்வாளரின் புரட்சிக்கு முதற்படியாக அமைகிறது.

இத்தகைய புரட்சிகரத் திறனாய்வாளர் அவரது மனத்தைக் கவர்ந்த புத்தகம் ஏன் பாடமாக வைக்கப்பெறவில்லையென்றோ, இன்றியமையா நூல்களின் பட்டியலில் ஏன் இடம்பெறவில்லையென்றோ கேள்வி எழுப்பலாம். இத்தகைய கேள்விகள் இன்றியமையாச் சிறப்பு வாய்ந்த இரு வினாக்களுக்கு வழிவகுக்கின்றன. அவை:

1. இலக்கிய நெறிமுறை என்பதனை **யார்** நிறுவுகிறார்கள்?

2. **யாருடைய** நலன்களுக்கு அந்நெறிமுறை பாடுபடுகின்றது?

என்பன. ஒரு பெண் எழுத்தாளரின் படைப்பு புறக்கணிக்கப்படும்பொழுது பெண்ணியத் திறனாய்வாளர் இரு நிலைகளில் செயற்படலாம். முதலாவதாக, அத்தகைய புறக்கணிப்புக்கான காரணங்கள் யாவை எனக் கண்டறியலாம். இலக்கிய மரபில் கட்டுக்கோப்பைப் பற்றிய கருத்தியலை ஆய்ந்து வெளிப்படுத்தலாம். இரண்டாவதாக, புறக்கணிப்புக்கான அப்படைப்பு அவரைக் கவர்ந்தமைக்கான காரணங்களை விளக்கியுரைக்கலாம். இந்த இரண்டாவது நிலையை மேற்கொள்பவர் பெண்ணியத் திறனாய்வை பெண் எழுத்தாளர்களின் படைப்பை ஆய்வு செய்யும் திசையில் திருப்பிவிடுகிறது. இத்தகைய ஆய்வு பல்வகைத் தேடல்களுக்கு வழி வகுக்கிறது. இதுபோன்றே புறக்கணிக்கப்பட்டு வந்துள்ள பெண் எழுத்தாளர்களைக் கண்டறியத் தூண்டுகிறது. பெண்

எழுத்தாளர்களின் படைப்புகளில் காணப்படும் அடிக்கருத்துகள், படிமங்கள், குறிப்பொருள்கள் ஆகியவற்றை ஆய்வு செய்ய வழியமைக்கிறது. இதுவரை நிலவிவந்த இலக்கிய மரபுக்கு ஒரு மாற்றாக மகளிர் இலக்கிய மரபு ஒன்றினை நிறுவுவது குறித்தும், முற்றிலும் புதிய இலக்கிய வரலாறு ஒன்றினை உருவாக்குவது குறித்தும் உழைத்திடச் செய்கிறது.

மறந்துபோய்விட்ட அல்லது காலவெள்ளத்தில் காணாமற் போய்விட்ட பெண் எழுத்தாளர்களை மீண்டும் 'கண்டுபிடிப்பது' பெண்ணியத் திறனாய்வின் வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கியது. இத்தகைய பணியை, ஆனிஸ் பிராட் (Annis Pratt) என்னும் திறனாய்வாளர் முன்னோடித் திறனாய்வு (Spadework Criticism) எனக் குறிப்பிடுகிறார். 'பெரும்பான்மையான பெண் எழுத்தாளர்கள் கவனக்குறைவால், 'மறந்துவிடப்பட்டவர்கள்' அல்லர்; வேண்டுமென்றே 'மறைத்துவிடப்பட்டவர்கள்' என்கிறார் பிராட். 'செல்வாக்கு மிக்க ஆண் திறனாய்வாளர்களின் தணிக்கைக்குத் தப்பிப் பிழைக்க இயலா வகையில் சமகாலப் பாலியல்-மரபுகளைக் கடிந்துரைக்கும் வகையில் அவர்களின் (பெண் எழுத்தாளர்களின்) படைப்புகள் விளங்கியமையால் அவர்களின் படைப்புகள் புதையுண்டு போயின" என்பது பிராட் கூறும் துணிபுரை ஆகும்.

ஐரோப்பா மற்றும் அமெரிக்காவைப் பொறுத்தவரையில் ஒரு புத்தகத்தைப் பற்றிய திறனாய்வு அதன் விற்பனை, வெளியீடு மற்றும் மறுபதிப்பைப் பாதிக்கும் என்பதால் பெண்ணியத் திறனாய்வாளர்கள், பெண் எழுத்தாளர்களின் புத்தக வெளியீட்டு முயற்சிகள் அவற்றின் பின்புலமாக விளங்கும் பொருளியல் மற்றும் அரசியல் நிலைகள் பற்றி விரிவாக ஆய்கிறார்கள். எத்தகைய புத்தகங்கள் அச்சாகின்றன; எத்துணைக் காலம் அவை அச்சில் நிலவுகின்றன; பல நூல்கள் ஏன் மறைந்து போகின்றன என்பது குறித்த ஆய்வை நிகழ்த்துகின்றனர்.

பெண் எழுத்தாளர்களின் புத்தக வெளியீட்டைப் பற்றிக் கூறவேண்டிவந்தமையால் இவ்விடத்தில் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் முன்னோடியாக விளங்கிய இரு வெளியீட்டு முயற்சிகளைக் கூறுவது பொருத்தமாக விளங்கும். அமெரிக்காவில், 'பெண்ணிய வெளியீட்டகம்' (Feminist Press) 'வேண்டுமென்றே அச்சில் கொண்டுவராமல் மறைத்து வைக்கப்பட்ட' நூல்களை அச்சில் கொணர்ந்து பெண்ணிய எழுத்தாளர்களுக்கும், சிந்தனையாளர்களுக்கும் அறிவு விருந்தளித்தது. இதேபோல, பிரிட்டனில், விராகோ பதிப்பகம் (Virago Books) பல நூல்களை வெளியிட்டது. இவற்றுள் டோரத் ரிச்சர்டுசனின், 'புனிதப் பயணம்' என்னும் புதினம் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மகளிர் எழுதிய கவிதைகள் மற்றும் சிறுகதைகளின் தொகுப்புகளும் மிகுதியாக

வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. இவை மகளிர் எழுத்துத் திறனை மாணவரும் மற்றவரும் அறிந்து கொள்ளத் துணைபுரிகின்றன.

அச்சில் கிடைக்காத மகளிர் படைப்புகளைக் கண்டுபிடிப்பதும், அச்சில் கொணர்வதும் தேவையே. எனினும் பெண்ணிய ஆய்வின் இறுதிக் குறிக்கோளாகிய இலக்கிய ஆய்வில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த இத்தகைய 'கண்டுபிடிப்புகள்' மட்டும் போதுமானவை அல்ல. ஏலெயின் ஷோவால்டர் இது குறித்துக் கூறும்போது, "கண்டுபிடிப்பு முயற்சிகள் தொடக்க நிலையானவை, சிறுபான்மைப் பெண் எழுத்தாளர்கள் வரலாற்று நிலையிலும், திறனாய்விலும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அவர்கள் ஒருவரோடொருவர் பெற்றுள்ள தொடர்பு முறைகளும் மகளிர் இலக்கிய மரபுடன் கொண்டுள்ள தொடர்பும் வெளிக்கொணரப்பட வேண்டும். பெண்ணிய இலக்கிய வரலாறு உருவமைக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் மகளிர் படைப்புகளுக்கிடையிலான தொடர்பும் ஒருங்கிணைவும் விளங்கிக் கொள்வது எளிதாகும். இத்தகைய வரலாறு வழங்கும் கருதுகோளின் அடிப்படையில் ஒவ்வொரு எழுத்தாளரும் மதிப்பிடப்படுதல் முறையாக விளங்கும்" என்கிறார்.

மகளிர் படைப்புகளின் கண்டுபிடிப்புகளும் தொகுப்பு முயற்சிகளும் இலக்கிய ஆய்வில் புரட்சிகரமான மாற்றத்தைச் சாதிக்க இயலாது எனக் கண்டோம். இதுபோலவே, பெண்ணியத் திறனாய்வின் ஆய்வுப் பரப்பைப் புகழ்பெற்ற சில பெண் எழுத்தாளர்களை ஆழமாக ஆய்வதுடன் குறுக்கிக் கொள்வதும் எத்தகைய் மாற்றத்தையும் விளைவிக்காது. இவ்வாறு சில பெண்களின் படைப்புகளை மட்டும் ஆய்வது பண்பாட்டுப் படிவ வார்ப்புகளை (Cultural Stereotypes) வலியுறுத்தும் நிலைக்கே வழிவகுக்கும்.

ஷோவால்டர் அறிவுறுத்தியதைப் போல மகளிர் இலக்கிய மரபை எடுத்துக்கூறும் முயற்சிகளும் சிலரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெண் எழுத்தாளர்களை, 'மகளிர் இலக்கிய மரபில்' முறைமைப்படப் பொருத்திக் காட்டும் முன்னோடி முயற்சிகளுள் 'பேட்ரிசியா மேயர் ஸ்பாக்ஸ்' (Petricia Meyer Spacks) எழுதிய, 'பெண் கற்பனை' (The Female Imagination) குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பெண்களின் அனுபவத்திலும் அதனை எழுத்தில் வடிவமைக்கும் முறையிலும் நிலவும் ஒற்றுமைகளை இவர் ஆய்ந்தார். இவரது ஆசிரியர் தொழில் பட்டறிவு இந்நூலுக்கு அடிப்படையாக அமைந்தது. வகுப்பறைக் கலந்துரையாடல்கள், குறிப்பாக மாணவிகள் தங்கள் சொந்த வாழ்க்கை அனுபவங்களைப் பெண் எழுத்தாளரது புதினங்களின், பெண் பாத்திரப் படைப்புகளது அனுபவங்களோடு பொருத்திப் பார்த்தமை இந்நூலுக்கு அடித்தளமாக அமைந்தது. இத்தகைய புதினங்கள் ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு

முற்பட்டவையாக இருந்தாலும் இத்தகைய பொருத்தம் விளங்குவதை மாணவிகள் வலியுறுத்தினர். அதிகாரம் மற்றும் செயலற்ற நிலை, வாலைப்பருவ நிலை வளர்ச்சி, பெண் கலைஞர், தன்னிச்சையான பெண்கள் போன்ற பெண் அனுபவங்களைப் ஸ்பாக்ஸ் கூர்ந்து நோக்கினார். "சமூக மாற்றத்தையும் மீறி நிலைத்திருக்கக்கூடிய பெண் உணர்வுகள் மற்றும் துலங்கல் நிலை வெளிப்பாடுகள் யாவை?" என அவர் காண முற்பட்டார். தன்னை உள்நோக்கியறிதல் போன்ற பண்புநிலை வார்ப்புகள் ஏதேனும் படைப்பாற்றலை வடிவமைக்கிறதா? என ஆய்ந்தறிய விழைந்தார். இத்தகைய அணுகுமுறை எத்தகைய வரலாற்று நோக்குமின்றி பொதுமைப்படுத்தலையே குறிக்கோளாகக் கொண்டுள்ளமை வெளிப்படை. 'பெண் கற்பனை' என்னும் தொடரின் பயன்பாடே கூறியது கூறல் குற்றங்களுக்கு வழிவகுக்கக்கூடிய ஒன்றாகும். எனினும், இந்தத் தொடரை ஸ்பாக்ஸ் நெகிழ்வு நிலையிலே பயன்படுத்துகிறார். இலக்கியத்தில் பெண்களின் போக்குகளையும் மனப்பான்மைகளையும் பற்றிய நயமிக்க பார்வைகள் அனைத்தையும் தழுவிய நிலையில் இத்தொடரைப் பயன்படுத்துகிறார் எனலாம். எனினும் இத்தொடர் வரையறை செய்யப்படாமையால், பெண்ணின் உள்ளார்ந்த இயல்பைப் பற்றிய கருத்து நிலைகளை முன்மொழியாமல், இத்தொடரைப் பயன்படுத்துவது இடர்ப்பாடான செயலாகவே விளங்குகிறது. ஸ்பாக்ஸ் தமது கவனம் முழுவதையும் 'புகழ்பெற்ற' எழுத்தாளர்கள் மீதே செலுத்தியிருப்பதால், அவரது வரையறைகளின், 'பொதுத் தன்மை' சிக்கல் மிக்கதாகவும், பெண்ணியக் கோட்பாடு குறித்த விளக்க நிலைகளுக்கு எதிர்நிலையானதாகவும் அமைந்துள்ளது.

"சமூக மாற்றத்தையும் மீறி நிலைத்திருக்கும் நடப்புகள்" என்று அவர் கூறுவதே இயல்புக்குப் பொருந்தாததாக விளங்குகிறது. வகுப்பு, இனம், இனக்குழு, பாலியல் சார்புநிலை, வரலாற்றுச் சூழ்நிலை ஆகியவற்றால் கற்பிக்கப்படும் வேறுபாடுகளைப் பெண்ணியத் திறனாய்வு கடுமையாக வெறுத்தொதுக்க வேண்டும் எனக் கருதுவோர் ஸ்பாக்சைக் கடுமையாகத் திறனாய்வு செய்கின்றனர். அடிப்படையான மகளிர் அனுபவத்தை விளக்குவதாகக் கூறிக்கொண்டு, 'நடுத்தர வகுப்பு மகளிரின்' அனுபவங்களையே தமது ஆய்வுக்கு மையமாகக் கொண்டுள்ளார் எனக் குற்றஞ்சாட்டுகின்றனர். தமது நூலில் ஸ்பாக்ஸ் ஆதாரமாகக் கொண்டிருப்பது வெள்ளையர் இனத்தைச் சேர்ந்த, நடுத்தர வகுப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டு மகளிரின் அனுபவங்களையேயாகும். ஸ்பாக்ஸ் கருப்பர் இன மக்களின் அனுபவங்களை எங்ஙனம் அறியமாட்டாரோ அதேபோல பத்தொன்பதாம் நூற்றாண்டு மகளிரின் அனுபவங்களையும் அறிய இயலாதவர் என்பதில் ஐயமில்லை. எனவே, அவரது ஆய்வு முயற்சி பயனற்றதாகவும் பொருளற்றதாகவும் முடிந்தது.

ஆனிஸ் பிராட் என்னும் திறனாய்வாளர் பெண்கள் எழுதிய முந்நூற்றுக்கும் மிகுதியான புதினங்களைப் படித்து, இவையனைத்தையும் ஒரு தன்னிறைவான தொகுப்பாகக் கொண்டு, இவற்றின் அமைப்புமுறைக் கோட்பாடுகளை ஆய்ந்தறிந்து, இவற்றை ஓர் இலக்கிய வகைமைக்குட் பட்டதாக அறுதியிட்டுக் கூற முயன்றார். இத்தகைய முயற்சி வெற்றி பெறும் வகையில் மிகப்பரவலான நிலையில் விரிந்து பரந்த புதின இலக்கியப் பரப்பைத் தமது ஆய்வுக்களமாகக் கொண்டார். எனவே, அவர் புகழ்பெற்ற எழுத்தாளர்களுடன் மட்டும் தமது ஆய்வைக் குறுக்கிக் கொள்ளவில்லை. அதே போல நடுத்தர வர்க்க மகளிரின் பட்டறிவை மட்டும் எல்லையாக வரையறுத்துக் கொள்ளவுமில்லை. உழைக்கும் வர்க்க மகளிரைப் பற்றிய புதினங்களையும் தமது ஆய்வுக்கு எடுத்துக்கொண்டார். அவரது பல்வேறு கருத்து முடிவுகளுக்குக் கருப்பர் இன மகளிர் எழுதிய புதினங்களே அடிப்படையாக விளங்கின. காதல் மற்றும் பாலுறவு ஆகியவற்றை விவாதிக்கும் பொழுதும் இருபாலினர் (Hetero Sexuals) உறவை மட்டும் எடுத்துக்கொள்ளாமல் ஓரினக் கலவியாளர் (Lesbians) உறவு முறைகளையும் எடுத்துக்கொண்டுள்ளார். மகளிர் ஒருவர்மீது ஒருவர் காட்டும் அன்பும் 'காதலே' எனக் கொண்டு இத்தகைய காதலே உணர்வுநிலை ஆதாரமாகவும், தன்னுறுதி வாய்ந்த கருத்து வெளிப்பாட்டுக்கு மூல ஊற்றாகவும் விளங்கும் எனக் குறிப்பிட்டார். அவரது 'மகளிர் புதினத்தில் மூலப்படிம வார்ப்புகள்' (Archetypal Patterns in Women's Fiction) என்னும் இயல் ஓரினக் கலவியாளர் புதினங்களை (Lesbian Novels) விரிவாக ஆய்கிறது எனக் கூற முடியாது. எனினும், பெண்களின் தன்மை, விழுமியங்கள், பாலுறவு மற்றும் அரசியல் கோட்பாடுகள் ஆகியவற்றை வரையறுக்கும்போது, ஓரினக் கலவியாளரின் பட்டறிவுகளையும் ஒருங்கிணைத்துக் கொள்கிறது.

பிராட், தமது நூலில் தலைப்புக்கேற்ப, மகளிர் தம் பட்டறிவுகளிடையே காணப்படும் ஒற்றுமைகளை அல்லது ஒத்த பண்புகளைத் தொகுத்துக் கூறவே முயல்கிறார். மகளிர் புதினங்களை அடிப்படையாகக் கொண்டு பெண்களின் தனிநிலையை ஆய்ந்தறிய விரும்புகிறார். மூலப்படிவத் திறனாய்வாளர்களின் கோட்பாடுகளை-அவை ஆணாதிக்கச் சார்புநிலை உடையன என்னும் விழிப்புணர்வு தவறாமல் - தமது ஆய்வுக்கு அடிப்படையாகக் கொள்கிறார்.

"மூலப் படிவங்களில் நம்பிக்கையுள்ளமைக்காக ஓரிருமுறை நான் குற்றம் சாட்டப்பட்டுள்ளேன். இதை ஏதோ மத மாற்றம் போலத் திடீரென்று மனம் மாறி நான் இந்த அணுகுமுறையை மேற்கொண்டதாகக் கருதப்படுகிறது. என்னுடைய அணுகுமுறையின் பயன்பாட்டுச் சிறப்பை

நான் வலியுறுத்த விரும்புகிறேன். மூலப்படிவ வார்ப்புகள் (Archetypal Patterns) என்பவை செய்திகளின் வகைப்பாடுகளைக் காட்டுவன. இத்தகைய வகைப்பாடுகளை ஒரு குறிப்பிட்ட நூலில் அல்லது இன்னும் விரிவான ஓர் இலக்கியத் தொகுதியின் ஒன்றுடன் ஒன்று கொள்ளும் உறவின் அடிப்படையில் விளக்கலாம். எனினும், இத்தகைய வகைப் பாடுகளை அல்லது மூலப்படிவ வார்ப்புகளைக் கற்பனை செய்துகொண்டு ஓர் இலக்கியத் தொகுதியில் இவை இருக்கின்றனவா? எனத் தேடிப் பார்த்தல் இலக்கியப் பகுப்பாய்வை உருச்சிதைத்துவிடும். பல்வேறு வகையில் குறிப்பிடத்தக்க இலக்கியப் படைப்புகளின் தொகுதியில் காணலாகும் படிமங்கள், குறியீடுகள், கதை நவில் முறைமைகள் ஆகியவற்றிலிருந்து இத்தகைய மூலப்படிவ வார்ப்புகளை இனங்கண்டு தொகுக்க வேண்டும்" என்கிறார் பிராட்.

பிராட் மேற்கொள்ளும் அணுகுமுறை முற்றிலும் நிறைவளிக்கும் வகையில், அறிவியல் பாங்கானதாக அமைந்ததெனக் கூறல் இயலாது. ஏனைய மூலப்படிவ அணுகுமுறையாளர்களாகிய யுங் (Yung), கேம்ப்பெல் (Campbell), பிரை (Frye) ஆகியோரின் கருத்துக்களையும் அவர் பயன்படுத்தியுள்ளார். எனினும், இந்த 'ஆண்' திறனாய்வாளர்களிடமிருந்து பிராட் ஒருவகையில் சிறப்பாக வேறுபட்டு நிற்கிறார். சமுதாயத்தில், ஆடவர் எவற்றையெல்லாம் சாதித்துக்கொள்ள முடிகிறது; அதே நேரத்தில் பெண்களுக்கு எவற்றை மட்டும் அனுமதிக்கின்றது என்பதைச் சிறப்பாக வேறுபடுத்திக் காட்டுகிறார். இவையிரண்டிற்கும் இடையிலான நெருக்கடி அல்லது மோதல் நிலவுவதை நூற்றுக்கணக்கான புதினங்களிலிருந்து சான்று காட்டி நிறுவுகிறார்.

பிராப்டின் 'தொல்படிவ வார்ப்புகள்', ஸ்பாக்ஸின், 'பெண் கற்பனை' என்னும் இரண்டுமே, 'மகளிர் இலக்கிய மரபைப் புலப்படுத்தும் ஒரு கோட்பாட்டுக் கட்டமைப்பை உருவாக்கப் போதுமானவை அல்ல. ஷொவால்டர் வலியுறுத்திய இந்தக் கோட்பாட்டுக் கட்டமைப்பைப் படிமம், அடிக்கருத்து, அமைப்பு ஆகியவற்றில் நிலவும் ஒற்றுமைகளைக் கணித்தறிவதன் மூலம் உருவாக்கிட முடியாது. மகளிர் எழுத்துக்களைக் குறிப்பிட்ட சமூக-பண்பாட்டு நடப்புகளுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குரிய அல்லது ஒரு கருத்துக்குழுவுக்குரிய படைப்புகள் பற்றித் தெளிவு பெறலாம். நினாபேம் எழுதிய 'மகளிர் புதினம்'; பெண்களால் எழுதப்பெற்ற மற்றும் பெண்களைப் பற்றி எழுதப்பெற்ற அமெரிக்கப் புதினங்களுக்கு வழிகாட்டி' (Woman's Fiction: A Guide to Novels by and about Women in America, 1820-1870) என்னும் ஆய்வு இவ்வகையில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பெண்களின் வரலாறு பற்றிய

விழிப்புணர்வுடன் நினாபேம், இலக்கியத் திறனாய்வாளர்களால் நீண்ட காலமாகப் புறக்கணித்தொதுக்கிவிடப்பெற்ற அல்லது மறந்துபோய் விடப்பட்ட புதினங்களை இந்நூலில் ஆராய்கிறார். இவை ஆண்களின் அனுபவங்களே படைப்பிலக்கியத்தின் கருப்பொருளாகக் கொள்ளப்பட்டு வந்த காலத்தில், பெண்களின் அனுபவங்களும் கவனத்திற்குரியவை என்னும் கண்ணோட்டத்தில் படைக்கப்பெற்றவை. காலத்தின் தேவையை நிறைவுசெய்த இப்புதினங்கள் 'இலக்கியத்தரம் அற்றவை' எனக் கருதப்பட்டன. இது குறித்து நினாபேம் கூறுவதைக் காண்போம்.

> "சிறந்த படைப்புகளை இனங்காண்பதற்குரிய (அமெரிக்க) இலக்கிய ஆய்வு அளவைகள், 'ஆண்' பார்வையில் அமைந்திருந்தன. இலக்கியங்களில் மகளிர்க்குரிய செயல்களைக் காட்டிலும் ஆடவர்க் குரிய செயல்களே மனித இனத்தைக் குறிக்கும் குறியீடுகளாகப் பயன்படுத்தப்பட்டன. அடக்கியாளும் தாய்மார்களையும், அடங்காப்பிடாரி மனைவிகளையும், காட்டிக்கொடுக்கும் காதலியையும் இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. ஆனால், கொடுங்கோன்மை மிக்க தந்தைமார்களையும், மனைவிகளைக் கீழ்மைப்படுத்தும் கணவர்மார்களையும், ஊர் சுற்றித் திரியும் பெண் பித்தர்களையும் இலக்கியங்கள் எடுத்தியம்புவதில்லை. விடலை இளைஞர்களின் உணர்வு நெருக்கடிகளை வெளிப்படுத்தி அவர்கள் மீது பரிவு ஏற்படுத்த முயல்வதே இலக்கியங்களின் கடமையாக உள்ளது. இதே போன்று உணர்வுச் சிக்கல்களுக்கு ஆளாகும் வாலைக் குமரிகளை இலக்கியம் கண்டுகொள்வதில்லை."

நினாபேம் அமெரிக்க இலக்கிய மரபைப் பற்றி மேற்கண்டவாறு திறனாய்வு செய்திருந்தாலும் - நமது இலக்கிய மரபு உட்பட-அனைத்து மொழிகளின் இலக்கிய மரபுக்கும் பொதுத்தன்மை வாய்ந்ததாக இத்திறனாய்வு விளங்குகிறது.

சி.ஜே. காப்ளான் எழுதிய, 'இக்காலப் பிரிட்டிஷ் புதினத்தின் பெண்மை விழிப்புணர்ச்சி' ((Feminine Consciousness in the Modern British Novel) என்னும் புத்தகம் *(1975)* இந்நூற்றாண்டின் முதற் பத்தாண்டுகளில் எழுச்சியுற்ற பெண்ணிய இயக்கத்திற்கும், அதே காலகட்டத்தில் வளர்ச்சிபெற்ற பெண்மை விழிப்புணர்ச்சிப் புதினங்களுக்கும் இடையிலான தொடர்பைப் பற்றிய ஆய்வாகும். பெண்களின்

எதிர்பார்ப்புகளில் ஏற்பட்ட திடுமென்ற மாற்றங்களுக்கேற்ப எழுதும் எழுத்தாளர்களையும், அத்தகைய மாற்றங்களை உணர்ந்தாலும் பெண்மை பற்றிய தொன்மையான வரையறைகளை ஏற்றுக்கொண்டமையால் இம்மாற்றங்களை முறையாக ஏற்றுக்கொள்ள இயலாமல் தவிக்கும் எழுத்தாளர்களையும் இந்நூலில் நன்கு ஆய்ந்துள்ளார்.

பெண்களின் எழுத்துக்களை ஆய்வுசெய்த நூல்களைப் பற்றிப் பார்த்தோம். எழுதுகின்ற பெண்களை ஆய்வுசெய்த ஒரு நூலைக் காண்போம். எலன் மோயர்ஸ் (Ellen Moers) என்பவர் எழுதிய, 'இலக்கியப் பெண்டிர்' ((Literary Women) என்னும் நூல், எழுதுகின்ற பெண்களைப் (பெண் எழுத்தாளர்களைப்) பற்றி ஆய்கிறது. இந்நூல் பல்வேறு எதிர்முரண்களை உள்ளடக்கியது; குறிப்பிட்ட சிலரைப் பற்றி மட்டுமே ஆய்கிறது; எத்தகைய முறைமை வாய்ந்த கட்டுக்கோப்பையும் உடையதன்று, என்னும் குறைகள் இந்நூலுக்குரியன எனினும் மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க நூல் என்பதில் ஐயமில்லை. இந்நூல் ஒரு பாராட்டு முறைத் திறனாய்வே. குறிப்பிட்ட ஒருசில பெண் எழுத்தாளர்களை மட்டுமே ஆய்கிறது. எனினும், பெண் எழுத்தாளர்களை 'மகளிர் இலக்கிய மரபு' ஒன்றினை உருவாக்குபவர்கள் என்னும் கண்ணோட்டத்தையுடைய முன்னோடி நூல் இதுவேயாகும். புகழ்பெற்ற பெண் எழுத்தாளர்கள் மிகச்சிலர் மட்டுமே காணப்படுவது ஏன்? எனவும், திறமைவாய்ந்த ஏனைய மகளிர் ஏன் எழுத்துத் துறையில் ஈடுபடவில்லை எனவும் மோயர்ஸ் வினாக்களை ஒளிரச்செய்யும் பொறுப்பை ஏற்று நூலாசிரியர் மோயர்ஸ் சிறப்புற நிறைவேற்றியுள்ளார். ஜேன் ஆஸ்டின், ஹேரியட் பீச்சர் ஸ்டோலே, ஜார்ஜ் எலியட், சார்லட் பிராண்ட், விலா கேத்தியர், ஜெட்ருட் ஸ்டெயின் முதலான புகழ்பெற்ற பெண் எழுத்தாளர்களைப் பற்றி இந்நூலில் எழுதியுள்ளார். அவர்களைக் குறையுடையவர்களாகவோ, தனித்தொதுக்கி யோராகவோ கருதாமல் செயலூக்கம் பெற்ற முன்னோடிகளாகவும் புதுமைநெறி படைத்தோராகவும் காண்கிறார்.

இலக்கியத்தில் மகளிர் பங்களிப்பை ஒரு துணைப்பண்பாடாகக் (Sub-culture) கொண்டு, அதன் வடிவமைப்பு முறைகள், அடிக்கருத்துகள், படிமங்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து, அதன் தனித்தன்மையை வரலாற்று நிலையில் ஆய்வதே ஆக்கவழியான அணுகுமுறையாகும். இத்தகைய அணுகுமுறையை ஷொவால்டர் தமது நூலில் (A Literature of their own; British women novelists from Bronte to Lessing, 1977) மிகச் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார். 'மகளிர் இலக்கிய மரபு என்பது பெண் எழுத்தாளர்களுக்கும் சமுதாயத்திற்கும் இடையிலான இடையீடற்ற ஊடாட்டத்தின் விளைவாக உருவாகித் தொடர்ந்து வரும் ஒன்று' என்னும்

ஷொவால்டரின் கூற்று அவரது பகுப்பாய்வின் சீர்மையைக் காட்டுகிறது. பண்பாடு, வரலாறு, மரபு ஆகியவற்றைப் புறக்கணித்துவிட்டு எத்தகைய வரலாற்றுக் கண்ணோட்டமுமின்றி, தனிப்பட்ட பெண் எழுத்தாளர்களை, அவர்களது மனப்போக்கு மற்றும் படைப்புத் திறன்களை ஆய்வதால் குறிப்பிடத்தக்க பயன் எதுவும் விளையாது. எனவே, ஷொவால்டர் சமூகவியற் பார்வையுடன் கூடிய ஒரு கோட்பாட்டை உருவாக்கியளிக்கிறார். பெண் எழுத்தாளர்கள் தமது தன்மதிப்புணர்வை, தன்விழிப்புணர்வை ஒரு குறிப்பிட்ட இடச் சூழல் மற்றும் காலச் சூழலுக்கு ஏற்ப எங்ஙனம் இலக்கிய வடிவம் அளிக்கிறார் எனவும், இத்தகைய தன்மதிப்புணர்வும் தன்விழிப்புணர்வும் எங்ஙனம் மாற்றமடைந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது எனவும், எத்தகைய இலக்கை நோக்கிச் செல்கிறது எனவும் ஆயவேண்டுமென்பதே ஷொவால்டரின் ஆய்வுக் கோட்பாடாகும். "மகளிரின் தன்விழிப்புணர்வின் படிமுறை வளர்ச்சியையும், ஒரு சிறுபான்மைச் சமூகம் தனது தன்வெளிப்பாட்டை மேலாதிக்கம் பெற்ற ஒரு சமூக அமைப்பில் எங்ஙனம் வெளிப்படுத்தமுடிகின்றது என்பதையும் ஆய்ந்தபின்னரே மகளிர் இலக்கிய மரபு பற்றிய தெளிந்த பார்வை பெறல் இயலும்" என்னும் ஷொவால்டரின் கூற்று அவரது சமூகவியல் நோக்கிற்குச் சான்றாகிறது.

மகளிர் இலக்கிய வரலாற்றைச் சமூகவியல் நோக்குடன் ஆயும் ஷொவால்டர் மரபுவழி இலக்கியக் காலகட்டங்களுக்கு எத்தகைய மதிப்பும் அளிக்கவில்லை. அவற்றிற்கு மாறாக, மகளிர் இலக்கிய வரலாற்றுக்கே தனிச்சிறப்பாக உரிய மூன்று காலகட்டங்களைக் குறிப்பிடுகிறார். அவை பெண்களின் விழிப்புணர்வில் ஏற்பட்ட மூன்று படிநிலைகளை அடிப்படையாகக் கொண்டவை. பெண்மைநிலை, பெண்ணியநிலை, பெண்நிலை என்பனவே அம்மூன்று படிநிலைகளாகும்.

"தொடக்கத்தில் மேலோங்கி நின்ற மரபில் செல்வாக்குப்பெற்று விளங்கிய இலக்கியப் படைப்பு நெறிகளே நீண்ட காலமாகப் பின்பற்றப்பட்டு வந்தன. மேலாதிக்கம் பெற்று விளங்கிய ஆணாதிக்கச் சமூக அமைப்பில் கலை மற்றும் இலக்கியம் குறித்து நிலவிவந்த வரையறைகளும் கோட்பாடுகளும், சமூகநிலை குறித்த பார்வைகளும் தன்மயமாக்கிக் கொள்ளப்பட்டமையே மகளிர் இலக்கிய வரலாற்றின் தொடக்கக் காலத்தில் காணப்படுகின்றது. அடுத்ததாக, அத்தகைய நெறிமுறைகளுக்கும் விழுமியங்களுக்கும் எதிராக ஒரு போர்க்குரல் எழுந்தது. சிறுபான்மையினர் உரிமைகளுக்கும் விழுமியங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்னும் வாதமும் தன்னுரிமை வேட்கையும் எழுந்தன. இறுதியாக இத்தகைய போராட்ட நெறிக்கு மாறாக, தங்களைத் தாங்களே நிலைநிறுத்திக் கொள்ளத்தக்க தற்சார்பு நெறிகளைப் பற்றிய தேடலும், ஆக்க வழியில்

தன்னிலை உயர்வு பெறுதற்கான அணுகுமுறைகளைப் பற்றிய சிந்தனையும் வளரத் தொடங்கின" என்னும் ஷொவால்டரின் கூற்று பிரிட்டிசு இலக்கியப் பரப்பைப் பற்றிய ஆய்வின் வெளிப்பாடு என்றாலும் ஏனைய மொழி இலக்கியங்களுக்கும் பொருத்தமானதாகவே காணப்படுகிறது. 'மகளிர் பண்பாடு' இன்னது என நுனித்தறிவது, அதனை அடிப்படையாகக் கொண்டு பெண்ணியத் திறனாய்வை நிகழ்த்தவேண்டுமென்பது ஷொவால்டரின் நோக்கம் என்பதனை அவரது கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன. 'மகளிர் பண்பாடு' என்பதனைக் குறித்த ஒரு கருத்துக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அக்கருத்துக் கட்டமைப்பு, மகளிரின் உடல், உள்ளம், மனநிலை, மொழி போன்றவை குறித்த கருத்துக்களை, அவை நிலவும் சமுதாயச் சூழலுடன் தொடர்புறுத்தி விளக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும்" என்று ஷொவால்டர் குறிப்பிட்டுள்ளார். இதுபோலவே, ஜோசபின் டோனாவான் என்பவரும், "வருங்காலத்தில் உருவாகவிருக்கும் கருத்துக்கள் அனைத்தும் மகளிர் பண்பாடு குறித்ததாகவே இருக்கும்" என்கிறார்.

"மகளிர் செய்யும் வேலையை ஆடவர் செய்யும் வேலையினின்று வேறான தன்மையுடையதாகக் கருதும்போது, அவர்களுடைய வேலை நேரம் வேறுபட்டவகையில் கணக்கிடப்படும்பொழுது, மகளிரின் வாய்மொழிக் கருத்துத் தொடர்பு வேறுபட்ட நடைகளில் அமையும்போது அழகைப் பற்றியும், இன்பத்தைப் பற்றியும் மகளிர் தமக்கென ஒரு கோட்பாட்டை வைத்துக் கொள்வதில் தவறிருக்க முடியாது" என்கிறார் செரி ரெஜிஸ்டர்.

அண்மைக் காலத்தில் (எண்பதுகளின் தொடக்கத்திலிருந்து) பெண்ணியத் திறனாய்வாளர்கள் பெண்களுக்குகிடையிலான உறவு முறைகளை, தொடர்புகளை ஆய்வதில் பெரிதும் நாட்டம் செலுத்தி வருகிறார்கள். தாய்மார்களுக்கும், அவர்களின் புதல்விகளுக்கும் இடையிலான உறவு முறைகள், சகோதரிகளுக்கிடையில், தோழியர்களுக் கிடையில், ஓரினக் கலவியாளர்களாக விளங்கும் பெண்களுக்கிடையில் (Lesbians), பெண்கள் அடங்கிய குழுக்களுக்கிடையில் என இவ்வுறவு முறைகள் விரிந்து செல்கின்றது. இத்தகைய உறவு முறைகள் பற்றிய ஆய்வு பெண்ணியத் திறனாய்வாளர்களிடையே புதிய எழுச்சியை ஏற்படுத்தியது என்பது உண்மையே. எனினும், இத்தகைய திறனாய்வு பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான உறவு முறைகளை அறவே புறக்கணித்து விடுகிறது. மகளிர் வாழ்வின் கட்டுத்திட்டங்களை, அவை புதினங்களிலும் நடைமுறை வாழ்விலும் எத்துணைக் கடுமையாக எதிர்க்கப்பட்டாலும் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், பெண்ணியத் திறனாய்வும், பெண்ணிய வரலாறும் விவரமாக வெளிக்கொணர வேண்டும்.

இங்ஙனம் வெளிக்கொணரும் பணியில் ஈடுபடவேண்டிய பெண்ணியத் திறனாய்வு, பெண்களுக்கிடையிலான உறவுமுறைகளைப் பற்றிய ஆய்வை மட்டும் தனது பணியாகக் கொண்டு எல்லையைக் குறுக்கிக்கொள்வது முறைதானா? என்னும் வினா எழுகிறது.

இவ்வகையில், "முழுமையும் பெண்களை மையமாகக் கொண்ட, தற்சார்புடைய, அறிவுநிலையில் ஒருங்கிணைவான" அணுகுமுறையே மகளிர் பண்பாட்டை விளங்கிக் கொள்ளத் துணைபுரியும் என ஷொவால்டர் கருதினார். பெண்களை, "எழுத்தாளர்கள் என்னும் நிலையில் ஆய்வு செய்யும் ஆய்வுமுறையை 'பெண்மையத் திறனாய்வு' (Gynocriticism) என ஷொவால்டர் குறிப்பிடுகிறார்.

"இலக்கியத்தின் பெண்களின் படிமங்கள் (Images), மாறாநிலைப்பாடுகள் (Stereotypes) குறித்தும், பெண்களைப் பற்றிய திறனாய்வில் நிகழும் தவறான கோட்பாடுகளும், கூறாது விடப்பட்ட செய்திகளும், குறியீட்டு நிலைக் கருத்தமைப்பில் பெண்கள் குறியீடுகளாலே கருதப்படும் நிலைகளும் பெண்ணியத் திறனாய்வின் (Feminist Criticism) ஆய்வுக்குரியவையாக விளங்குகின்றன. இத்திறனாய்வு இக்காலத்தில் நிலவிவரும் கருத்துக் கட்டமைப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு குறையை நிறைவுசெய்யும் நோக்குடன் செயற்படுகிறது.

ஆண்களின் திறனாய்வுக் கோட்பாடுகளில் நிலவும் குறைகளைத் திருத்தவும், மாற்றியமைக்கவும், முறையானவற்றைக் கொண்டு ஈடுசெய்யவும், புதிய முறையில் புதுக்கியும், மனித நேயமிக்கதாக்கியும் புதிய கோட்பாட்டுக்கு வழிவகுக்கிறது. பெண்ணியத் திறனாய்வு, பல நேரங்களில் ஆண்களின் திறனாய்வுக் கோட்பாட்டைக் கடுமையாகத் தாக்குகின்றது. இவற்றைக் காணும்போது, பெண்ணியத் திறனாய்வு தனது முழுமையான செயற்பாட்டுக்கும் ஆண்களின் திறனாய்வுக் கோட்பாட்டையே சார்ந்திருப்பது புலனாகின்றது. இங்ஙனம், சார்ந்து நிற்பதால் பெண்ணியத்திற்கென ஒரு தனிக்கோட்பாட்டை உருவாக்கிடல் கடினமாகிறது என ஷொவால்டர் கருதுகிறார்.

பெண்ணியத் திறனாய்வுக்கு அடிப்படையான உணர்வுத் துடிப்புகளாக அன்பு, சீற்றம் என்னும் இரண்டையும் இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டோம். அவற்றுள், முதலாவதாகிய அன்பு என்னும் உணர்வுத் துடிப்பு பெண்மையத் திறனாய்வுக்கு (Gynocriticism) உந்துசக்தியாக விளங்குகிறது. பெண் எழுத்தாளர்களின் மீது பெண் திறனாய்வாளர்களுக்கு ஏற்படும் அன்பு, அவ்வெழுத்தாளர்களின் சிறப்பியல்புகளை, படைப்புத்திறனை, தனித்தன்மையை வெளிக்கொணரத்

தூண்டுகின்றது. இதேபோல மற்றோர் உணர்வுத் துடிப்பாகிய சீற்றம், இந்நாள்வரை பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு போர்க்குரல் ஒலிக்கக் காரணமாகிறது. இலக்கியங்களில் ஆண் படைப்பாளர்கள், பெண்களை எத்தகைய தவறான நிலைகளில் வெளிப்படுத்தியுள்ளனர் என ஆய்ந்தறிய வழிவகுக்கிறது. ஆண்மையச் சிந்தனையை மூல ஊற்றகாகக் கொண்டு, தந்தைவழிச் சமூக அமைப்பைக் கட்டிக் காப்பதற்குரிய, ஆண்மையக் கருத்தியலைப் பொதுமை வாய்ந்ததாகப் போற்றும் போலித்தனங்களைக் கடிந்துரைக்கக் கிளர்ந் தெழுகிறது.

இரண்டு அணுகுமுறைகளும் இன்றியமையாதனவே. மகளிர் பண்பாடு முகிழ்த்திட, முனைந்து வினையாற்றும் பெண்மையத் திறனாய்வை மட்டும் வரவேற்று ஆடவர் புன்மைச் செயல்களை அம்பலப்படுத்தும் பெண்ணியத் திறனாய்வைப் புறக்கணித்தொதுக்கும் போக்கு ஷொவால்டர் போன்ற திறனாய்வாளர்களிடம் காணப்படுகிறது.

இவ்விரு திறனாய்வு முறைகளும் மேலும், பல்வேறு துறை வகைமைகளாகக் கிளைத்துப் பல்வேறு அணுகுமுறைகளை உருவாக்குகின்றன. ஒவ்வொரு திறனாய்வாளரும் தமது சொந்தப் பட்டறிவை அடிப்படையாகக் கொண்டு கோட்பாடு வகுக்க முற்படும்போது, திறனாய்வு மேலும் சிக்கல் மிக்கதாகிறது. ஒரு திறனாய்வாளர் வகுக்கும் கோட்பாடு மற்றொரு திறனாய்வாளரின் சொந்தப் பட்டறிவோடு மாறுபடும்போது, அவர் வேறொன்றை வகுக்க முற்படுகிறார்.

பெண்ணியத் திறனாய்வு இங்ஙனம் பல்வேறு கிளைகளும் கவடுகளுமாய்ப் பிரிந்து செல்வதை ஆனட் கொலோத்னி என்னும் பெண்ணியத் திறனாய்வாளர் சுட்டிக்காட்டுகிறார். ஒவ்வொரு திறனாய்வாளரும் கட்டமைப்பியல் நோக்கில் இலக்கியங்களை ஆய முற்படும்போது, வெவ்வேறு விளக்கங்களை அளிக்க முற்படுவதையும், இவ்விளக்கங்களின் அடிப்படையில் மூலங்களை அணுகினால் வெவ்வேறு வகையான இலக்கிய அனுபவம் ஏற்படுவதையும் அவர் எடுத்துரைக்கிறார். இத்தகைய பல்வேறு அணுகுமுறைகளை உதறித் தள்ளிவிட்டு ஒற்றைத் தனி அணுகுமுறையாக ஒன்றே ஒன்றை மட்டும் வரையறுத்துக்கொள்வது கொலோத்னிக்கு உடன்பாடானதன்று. பெண்ணியத் திறனாய்வு பன்முகப் பாங்கானது (Pluralistic) என்பதனை அவர் வலியுறுத்திக் கூறுகிறார்.

ஷொவால்டர் இத்தகைய பன்முகப்பாங்கு (Pluralism) என்னும் பணியை அடியோடு மறுக்கிறார். 'கோட்பாட்டளவில் ஒரு பொதுக்கருத்து' (Theoretical Consensus) ஒன்றினை நிலைநிறுத்தி, ஒரே

அணுகுமுறையை அனைவரும் பின்பற்றினால்தான் திறனாய்வு செழிக்கும் என்பது ஷொவால்டர் துணிபு.

பொதுக்கருத்து என்னும் போர்வையில் பெண்ணியத் திறனாய்வின் பல்வேறு வகைகளை ஒதுக்கித் தள்ளிவிடுவதைக் கரோலின் ஆலன் என்னும் மற்றொரு திறனாய்வாளரும் வன்மையாக எதிர்க்கிறார். பெண்ணியம் சாரா ஏனைய கருத்தாடல்கள் (Non-Feminist Discourses) பல்வேறு ஆய்வு முறைகளைப் பெற்று விளங்கும்போது, பெண்ணியக் கருத்தாடல்களுக்கு மட்டும் ஓர் ஆய்வு முறை போதுமானது என வரையறுத்துக்கொள்ள வேண்டிய தேவை என்ன? என்பதே கரோலின் ஆலன் எழுப்பும் வினாவாகும்.

ஏனைய திறனாய்வு முறைகளிலிருந்து பெண்ணியத் திறனாய்வு முறையைப் பிரித்தறிய உதவும் வகையில் பெண்ணியத் திறனாய்வுக்கு ஒரு தனிக்கோட்பாடு இன்றியமையாதது என ஷொவால்டர் கருதுகிறார். பெரும்பாலான பெண்ணியத் திறனாய்வாளர்கள் எத்தகைய கோட்பாடும் தேவையில்லை என்னும் கருத்திலேயே தமது திறனாய்வை நிகழ்த்தியுள்ளனர். ஆண்களின் 'புலமைத் திறத்தில்' விளங்கும் நார்சிசத் தன்மையை எடுத்துரைப்பதுடன் தமது பணி நிறைவுற்றதாகக் கருதினர். தமது திறனாய்வை ஒரு கோட்பாட்டுக்கு எதிரான செயலாக, நிலவிவரும் வரையறைகளையும் நெறிமுறைகளையும் தாக்கும் போர்முறையாகவே கருதினர். இத்தகைய, 'கோட்பாட்டு எதிர்நிலை' பெண்ணியத் திறனாய்வைத் தனித்ததொரு துறையாக வளர்த்ததற்குப் பயன்படாது எனக் கருதியமையாலேயே ஷொவால்டர் ஒரு கோட்பாட்டை வரையறுத்துக் கொள்ள வேண்டும் என வாதாடுகிறார்.

போதுமான ஆர்வத்துடனும் உண்மை காணும் நாட்டத்துடனும் பெண்ணியத் திறனாய்வாளர்கள் மனங்கலந்து கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்தினால், இத்தகைய போராட்டங்களும் ஆய்வுலக விவாதங்களும் தெளிவான முடிவுக்கு வழிகாட்டும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

உலகெங்கும் நிகழ்ந்துவரும் மாற்றங்கள் நமது எண்ணப் போக்கிலும், படைப்பு நெறியிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதில் வியப்பில்லை. பெண்ணியத் திறனாய்வு தமிழில் பேசப்பட்டுவரும் துறையாக இன்று விளங்கி வருகின்றது. ஆயினும், கோட்பாடுகளைப் பற்றிய கட்டுரைகள் வெளிவருமளவு ஆய்வுக் கட்டுரைகள் வெளிவருவதாகக் கூற இயலாது. எனினும், இலக்கிய உலகில் படைப்பாளிகளைக் குற்றவாளிக்கூண்டில் ஏற்றுவதற்குப் பெண்ணியத் திறனாய்வை சிலர் துணை கொள்கின்றனர். திருவள்ளுவர் கூறும் 'பெண்வழிச் சேறல்' அவரது ஆணாதிக்கப் போக்கை

அடையாளம் காட்டுவதாகவும், புரட்சிக் கவிஞரின் குடும்ப விளக்கு பெண்ணை 'ஏவற்பணியாளாகக் கருதும் பழம்பஞ்சாங்கப் போக்கை' எடுத்தியம்புவதாகவும் வழக்காடப்படுகின்றது. இந்நிலையில பெண்ணியத் திறனாய்வு தமிழ் இலக்கியத்தை ஆய்வதற்கு எவ்வகையில் பயன்படும்? பயன்படுத்தப்பட வேண்டும்? என்னும் வினாக்கள் எழுதல் இயல்பு. அவ்வினாக்களுக்குரிய விடைகளைக் காண முயலுதலே தமிழ்மை சான்ற பெண்ணியத் திறனாய்வை நிலைநிறுத்த உதவும்.

நாம் முதலில் கூறியவாறு பெண்ணியம் ஓர் அரசியல் செயல்திட்டம் என்பதையும், அதன் வெற்றிக்கு வழிவகுக்கும் பணிகளுள் ஒன்றாகப் பெண்ணியத் திறனாய்வு விளங்கவேண்டும் என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். எனவே, இச்செயல்முறை வெற்றிபெறும் வகையிலேயே ஆய்வின் போக்கை அமைத்துக்கொள்ளல் வேண்டும். அங்ஙனமாயின் பெண்ணியத் திறனாய்வாளர் எத்தகைய வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்னும் வினா எழுகின்றது. சில பரிந்துரைகளை முன்மொழிகின்றோம்.

1. நூலாசிரியர்களைத் தாக்குதல், நூலாசிரியர்களின் மேல் குற்றம் கூறல் அறவே தவிர்க்கப்பெறல் வேண்டும். வள்ளுவரையும் இளங்கோவடிகளையும் கம்பரையும் குறைகூறுதல் வீண் குழப்பங்கட்கும், தேவையற்ற சண்டைகளுக்கும் வழிவகுக்கும். நூலாசிரியர்கள் தாம் வாழ்ந்தகாலச் சமூகச் சூழலைப் பிரதிபலிப்பவர்கள். சிலர் இன்னும் மேம்பட்ட சமூக அமைப்பின் மலர்ச்சிக்கு வழிமுறைகளைக் கூறுபவர்கள். பரிவு கலந்த பாகுபாட்டுணர்வுடன் படைப்புகளை அணுகும்பொழுது காலத்தின் கோலமும், கவிஞர்தம் கொள்கையும் தெற்றெனப் புலப்படும். நூலாசிரியர் வழிநின்று அவர்காலச் சமூகச்சூழலில் பெண்ணினம் பெற்றிருந்த நிலையைத் திண்ணிதின் கூறலாம். ஒருவேளை அந்நிலை மாறுதற்குரிய வழிமுறைகளை அவர் எடுத்துரைத்திருப்பாரேயானால் அவரது சார்பு நிலைமையையும் விளக்கலாம்.

2. காலந்தோறும் இலக்கியங்கள் வலியுறுத்திக் கூறவந்த கருத்தாக்கங்கள் தொகுத்தளிக்கப்பெறுதலும் தேவையான ஒன்றாகும். முறையான விழிப்புணர்வைப் பெறுதற்கு இது துணைபுரியும். எடுத்துக்காட்டாக இரண்டாயிரம் ஆண்டுக்கால வரலாற்றை உடைய தமிழ் இலக்கியங்கள் குடும்பத்தில் பெண் பெறுமிடத்தைப் பற்றிய கருத்தாக்கங்களாக எவற்றை முன்மொழிகின்றன எனக் காணும்போது கவிதை பழம்போக்கு நிலையையும், சிறுகதை, புதினம் ஆகியவை காலத்திற்கேற்ற மாற்றத்தைத் தழுவிச்செல்லும் முற்போக்கு

நிலையையும் எடுத்தியம்பல் ஆய்வாளருக்கு மட்டுமன்றி இலக்கிய ஆர்வலர்களுக்கும் புதிய விளக்கத்தை அளிக்கலாம்.

3. மகளிர் படைப்புகளை முழுமையாகத் தொகுத்து நோக்கி 'பெண் கற்பனை' என ஒன்று தனித்தன்மை வாய்ந்ததாகக் காணப் படுகின்றதா என ஆய்வு நிகழ்த்தலாம்.

4. பெண்களுக்கென தனித்ததொரு மொழிப் பயன்பாட்டு நெறி அமைந்துள்ளதா என்பதையும், அதேபோல இலக்கியப் படைப்பு நெறிகளுள் மகளிர்க்கென தனித்தன்மை வாய்ந்தவையாக அமைந்தவை ஏதேனும் உண்டா எனக் காணலாம். எனினும், இத்தகைய ஆய்வு பெண்களைத் தனிமைப்படுத்திக் காணும் ஒன்றாக அமைந்து விடக்கூடாது. ஒட்டுமொத்தமாக மகளிர் படைப்புகளைக் காணும் பொழுது அவற்றினூடே இழையோடிச்செல்லும் பொதுமைப் பண்புகளைக் கண்டறிதலே இத்தகைய ஆய்வின் நோக்கமாக விளங்கவேண்டும்.

5. ஆணாதிக்கக் கருத்தாக்கங்களுக்கு அடிமையாகப் போய்விட்ட பெண் எழுத்தாளர்களையும், பெண்ணியக் கருத்தாக்கங்களை முன்மொழியும் ஆண் படைப்பாளர்களையும் தக்க சான்றுகளோடு சுட்டிக்காட்டும் பணியும் இன்றியமையாத ஒன்றாகும். சில வேளைகளில் ஆடவரைக் காட்டிலும் மகளிரே ஆணாதிக்கச் சமூக அமைப்பை அரண் செய்து காக்கும் நிலை இத்தகைய ஆய்வின் மூலம் வெளியாகும்.

**பின்னிணைப்பு**

**தொடர்புடைய பிற குறிப்புகள்**

1. இக்கட்டுரை பெண்ணியத் திறனாய்வைப் பற்றிய அறிமுகம் மட்டுமேயாகும். பெண்ணியத் திறனாய்வு ஏனைய அறிதுறைகளைக் கூர்ந்தாய்வு செய்து அவற்றின் ஆணாதிக்க அடித்தளத்தை எதிர் மறுக்க நேரும்போது பல பிரிவுகளாகப் பிரிந்து புதிய கோட்பாடுகளுக்கு வழி வகுக்கிறது. சமவுடைமை மற்றும் பொதுவுடைமைப் பெண்ணியவழி நோக்கும்போது சமவுடைமை மற்றும் மார்க்சிய வழி பெண்ணியம் Socialist/Marxist Feminism என்னும் புதிய துறை உருவாகின்றது. ஜூலியட் மிஷல், ஷீலா ரொபோத்தம், ஹெய்டி ஹார்ட்மண்ட், மிஷல் பேரட், கேத்தரின் மேக்கினன் எனப் பலர் சமவுடைமை/மார்க்சியப் பெண்ணிய கோட்பாடுகளை வகுத்தளித்துள்ளனர். கறுப்பர் இனம் எனக் கடிந்தொதுக்கப்பட்டவர்கள் துன்புற்ற வேளையில் அவ்வினத்துள்ளும் பெண்களே மிகுதியான கொடுமைகளைச் சந்திக்க நேர்ந்தது; இன்றும் சந்தித்து வருகின்றனர். இந்நிலையில்

பெண்ணியம் என்பது வெள்ளையர் இன நடுத்தர வர்க்க மகளிர் நலனுக்காகவே பாடுபடுகின்றது என்னும் குரல் எழுந்தது. இக்குறையைப் போக்குவதற்கு முயன்றோர் கறுப்பர் இனப் பெண்ணியவாதிகள் எனப்பட்டனர். இவர்களின் கோட்பாடுகள் கறுப்பர் இனப் பெண்ணியம் என அழைக்கப்பட்டு பல்வேறு சிந்தனைகளைத் தூண்டியது. ஜாய்ஸ் லேட்னர், அஞ்சலா டேவிஸ், ஹாலிஸ் வாக்கர், குளோரியா அன்சில்துவா முதலிய பலரும் இத்துறையில் குறிப்பிடத்தக்கவராவர். ஆணினத்தின் பேரில் வரம்பிலா வெறுப்பைக் கொண்டோர் தமது வாழ்க்கை முறையையே மாற்றியமைத்துக் கொண்டு ஓரினக் கலவி முறையை மேற்கொண்டு ஆணினத்தின் பிடியிலிருந்து ஒதுங்கவும், ஆணாதிக்கத் தளையை ஒதுக்கித் தள்ளவும் விழைந்தனர். இத்தகையோரை முறைபிறழ்ந்தோராகக் கருதிய அறிஞருலகு நாளடைவில் இவர்களை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை எனக் கொண்டுவிட்டது. அட்ரியன் ரிச் இருபாலினக் கலவிமுறை என்பது ஆண்களால் பெண்கள்மீது திணிக்கப்பட்ட ஒன்றே எனக் கூறினார். பெண்கள் தொடக்கத்திலிருந்தே தங்கள் தாய்மார்களிடம் அன்பு செலுத்துபவர்களாக விளங்குகிறார்கள் எனவும், இருபாலினக் கலவிமுறை இத்தொடர்பைத் துண்டிக்கப் பயன்படுகிறது எனவும் கருதினார். திருமணம், மகப்பேறு, பாலியல் வன்முறை என்பவை ஆடவரால் நிறுவப்பெற்ற சமூக நிறுவனங்கள் எனவும், இவை பெண்ணின் ஓரின விழைவை (Homo Sexuality) ஒடுக்கி அடக்குதற்குப் பெரிதும் பயன்படுகின்றன எனவும் குறிப்பிட்டார். தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism) அமைய வழிவகுத்த ஓரின விழைவுப் பெண்ணியவாதிகள் மேரிடாலி, சார்லட் பஞ்ச், அட்ரியன் ரிச் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

ஃப்ராய்டின் உளவியல் பகுப்பாய்வை முழுமையாக ஆய்ந்து அதன் பொருந்தாமைகளையும், பாலினவாதப் போக்கையும் சுட்டிக்காட்டிப் பெண்ணிய நோக்குடன் கூடிய உளவியல் பகுப்பாய்வை முன்மொழிந்தவர்கள் உளவியல் பகுப்பாய்வுநிலைப் (Psycho analytic Feminism) பெண்ணியம் உருவாகவழி அமைத்தனர். பிலிஸ் செய்லர், டோரதி டின்னர்ஸ்டெயின், சாராகாப்மென், ஜூலியட் மிஷல் முதலிய பலர் இத்துறையில் குறிப்பிடத் தக்கவராவர். இங்ஙனம் பெண்ணியம் ஓர் அரசியல் - சமூகவியல் பொருளியல் ஆய்வு நெறியாக அமைந்து பல்வேறு புதிய கோட்பாடுகளும் ஆய்வுத் துறைகளும் செழித்தோங்க வழி வகுக்கின்றது.

2. தமிழில் பெண்ணியச் சிந்தனையின் தோற்றமும் வளர்ச்சியும் தனியாக ஆய்த்தக்கன. தந்தை பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள் உலகளவில் ஒப்புநோக்கிப் பார்க்கும்போது முன்னோடியாக விளங்குகின்றது.

3. அண்மைக் காலத்தில் பெண்ணிய நோக்கில் சமகால வாழ்க்கையை ஆய்வு செய்யும் சிறுகதைகள் மிகுதியாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. புதினங்களிலும் சூடாமணி, வாஸந்தி, ஹம்சா தனகோபால் முதலிய எழுத்தாளர்கள் குறிப்பிடத்தக்கவராவர்.

## பயன்நூற் பட்டியல்


1. Andrea Nye, **Feminist theory and the philosophics of man,** Routledge, New York, 1988.
2. Janice Wood Wetzel (Ed.), **The World of Women,** Macmillan, New York, 1993.
3. Magie Humm (Ed.), **Feminisms : A Reader,** Harvester/ Wheatsheaf, London, 1992.
4. Rehana Gnadially (Ed.), **Women in Indian Society : A Reader,** Sage Publications, New Delhi, 1988.
5. Susheela Kaüship (Ed.), **Women's Oppression : Patterns and Perspectives,** Shakti Books, New Delhi, 1985.
6. Terry Lovell (Ed.), **British Feminist Thought : A Reader,** Basil Blackwell, London, 1991.

# மகளிரியல் ஆய்வு நெறிமுறைகள்

ர. விஜயலட்சுமி

மனிதன் அறிந்த காலமுதல், மாறாது நிலைபெற்று வந்துள்ள ஒரு பாகுபாடு ஆடவர், மகளிர் என்ற பால்பாகுபாடு ஆகும். உடலமைப்பின் அடிப்படையில் எழுந்த இப்பாகுபாடு, அவர்கள் ஆற்றும் செயல்களிலும், அவர்கள் மனித சமுதாயத்தில் பெறும் மதிப்பு நிலையிலும் கூட வேறுபட்டு நிற்கும் நிலையை உருவாக்கிவிட்டது. பெண், இனப்பெருக்கி (Reproducer) என்ற ஆற்றலைப் பெற்றிருந்தமையால் அவளைச் சுற்றி அவள் பெற்ற குழந்தைகள் வாழ்ந்தது இயல்பானதே. இந்நிலை அளித்த சூழ்நிலையால், அவள் இல்லம், குழந்தைகள், கணவன் என்ற குடும்ப வட்டத்துக்குள் மட்டும் சுழல, ஆடவர்கள் குடும்பத்திற்கு வேண்டிய பொருளாதார நிறைவை அளிக்கும் பங்கை ஏற்றுக் கொண்டனர். இந்தத் தொடக்ககால செயல்பாடுகள், பிற்காலத்தில் நிரந்தர பாகுபாடுகளாகி, அவற்றின் அடிப்படையில் சமுதாய எதிர்பார்ப்புகளும், சமுதாய மதிப்புகளும் (Social values) ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறாக ஏற்பட்டன.

பொருளாதார வளத்தை ஆடவர்களே குடும்பத்திற்கு அளிப்பவர்களாக இருந்தமையால், அவர்கள் பெண்களை விட இன்றியமையாத்தன்மை பெற்றவர்களாக மாறியதுடன், பெண்கள் அவர்களைச் சார்ந்து தங்கியிருக்கும் நிலையும் ஏற்பட்டது. அத்துடன் பெண்களே இனப்பெருக்கிகளாக இருந்தமையால், சமுதாயத்தில் இருந்த பல்வேறு இனங்களின், குழுக்களின் தூய்மையை நிலை நிறுத்தவேண்டிப் பெண்களுக்காய சமுதாயக் கட்டுப்பாடுகளும் பெருகின. இந்தக் கட்டுப்பாடுகளை, விதிமுறைகளை, பெண்கள்மேல் ஆடவர்களே விதித்தனர். அத்துடன் இத்தகைய விதிமுறைகளுக்கு வரலாற்று வளர்ச்சியில் சமயச் சாயங்களும் ஏற்பட்டன. இந்தச் சமயச் சாயங்கள், மேலும் பெண்களுக்கு இவ்விதிமுறைகளிலிருந்து வெளியேற முடியாத ஒரு இறுக்கமான சூழ்நிலையை உருவாக்கின.

இத்தகைய சூழ்நிலை இந்திய மண்ணில் ஏனைய நாடுகளைவிட அதிகமாகவே வலுப்பெற்றது எனலாம். மனுஸ்மிருதி போன்ற சமய சாத்திரங்கள் பெண்கள் சுதந்திரமாக மூச்சுவிட முடியாத அளவிற்கு, அவர்களுக்குப் பாதுகாப்பு என்ற நிலையில் பல்வேறு சட்டதிட்டங்களை

நிலை நிறுத்தின. இவற்றின் தாக்கம் இந்தியா முழுமையும் நன்கு பரந்து வேரோடியது. சாதியால், இனத்தால், குழுக்களால் வேறுபட்டாலும், பெண் ஆடவனுக்கு அடுத்த நிலையில் வாழ்வதிலும், ஆணைச் சார்ந்து வாழ்வதிலும் மாறுபடவில்லை.

ஆங்கிலக் கல்வி அளித்த விழிப்புணர்வுகளும், மேலை நாடுகளில் எழுந்த பெண்ணிய இயக்கங்களும் இந்தியாவில் மகளிர் குறித்து இதுவரை இருந்த எண்ணங்களை ஓரளவு தளர்த்த உதவின.

*1970* இலிருந்து மகளிரியல் தொடர்பான ஆய்வுகள் இந்தியாவில் பெருமளவில் எழுந்தாலும், வளர்ச்சிபெற்ற ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது குறைவானதாகவே இருக்கின்றன. இத்தகைய ஆய்வுடன் இன்று பல்கலைக்கழக நிலையிலும் வந்துள்ளமை வரவேற்கத்தக்கதே. எனினும் இந்தியாவில் மகளிர் நிலை குறிப்பிடத்தக்க அளவில் பின்தங்கியே உள்ளது. மகளிரைப் பற்றி, ஆடவர்கள் ஆய்வுக் கட்டுரை எழுதிய நிலை மாறி மகளிருக்காக, மகளிர் மேம்பாட்டிற்காக மகளிரே ஆய்வு செய்யும் நிலை இன்று பெருகி வருகின்றது. அதாவது மகளிரைப் பற்றிச் செய்த ஆய்வுகள் குறைந்து, மகளிருக்காகச் செய்கின்ற ஆய்வுகள் பெருகி வருகின்றன. இத்தகைய ஆய்வுகளுக்கு வழிவகுத்த முதல் நிலையாக இந்தியாவில் இந்திய அரசின் அறிக்கையான "பெண்கள் நிலை, சம உரிமை நோக்கிப் பெண்கள்'' என்ற *1975* ஆம் ஆண்டு வெளிவந்த அறிக்கையைக் குறிப்பிடலாம். (Report of the committee on the status of women 'Towards Equality' - Government of India (1975) இவ்வறிக்கைக்குத் துணை பலம் சேர்க்கும் வகையில் *1976* முதல் இந்திய நிதியுதவியுடன் செய்யப்படும் ஆய்வுகள் அமைந்தன. அத்துடன் *1975* முதல் *1985* வரை மகளிருக்கான பத்தாண்டுகளில் (ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட மகளிர்க்கான பத்தாண்டுகளில்) மகளிர் குறித்து எழுந்த ஆய்வுகளும் மகளிர் மேம்பாட்டிற்கான ஆய்வுகளின் வேகத்தை மேலும் விரைவுபடுத்தின. *1981*இல் கான்பூரிலுள்ள மகளிரியல் மையமும் (Women's Studies Center), பம்பாயிலுள்ள எஸ்.என்.டி.டி. மகளிர் கல்லூரியும் (SNDT. Womens College), புதுடெல்லியிலுள்ள மகளிர் முன்னேற்ற கல்வி மையமும் (Center for Womens' Development Studies) சேர்ந்து எடுத்துக்கொண்ட முயற்சியினால் நடைபெற்ற கருத்தரங்கமும் மகளிரியல் கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஆசிரியர்கள், மாணவர்கள், ஆய்வாளர்கள், சமூக நலம் நாடுவோர், அரசாங்கப் பிரதிநிதிகள் ஆகிய நானூறு பேராளர்கள் கலந்துகொண்ட இந்தக் கருத்தரங்கத்தில் இந்திய மகளிரியல் ஆய்வுகளுக்கான சங்கம் ஒன்று நிறுவப்பட்டது. இதைத் தொடர்ந்து *1983*ஆம் ஆண்டு நவம்பர் *28* ஆம் தேதி முதல், டிசம்பர் *18* ஆம் தேதிவரை எஸ்.என்.டி.டி. மகளிர் பல்கலைக்கழகத்தில் மகாராஷ்டிராப் பல்கலைக்கழகம், குஜராத்

பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து ஒரு ஆய்வுப்பட்டறையை (Workshop) நடத்தின. இக்கருத்தரங்கின் மையப் பொருளாக மகளிரியல் ஆய்வுகள், பெண்கள் சமுதாயத்தில் வகிக்கும் நிலையை உயர்த்த உதவும் வகைகள், மகளிரின் திறன்களை இருட்டடிக்கும் காரணிகளை இனங்கண்டு தவிர்த்தல்; மகளிர் அனுபவிக்கும் அடக்குமுறைகளினதும் துன்பங்களினதும் அளவுகளைக் கண்டு அவற்றை அகற்ற முயலுதல், மகளிரியல் ஆய்வுகளுக்குரிய வரையறைகளை நிர்ணயித்தல், மகளிரியல் கல்விகளுக்குரிய பாடத்திட்டங்களை உருவாக்கல், மகளிரியல் கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாக மட்டுமன்றிச் செயல்முறைப்பாடுகளிலும் ஈடுபடும் கல்வியாக இருப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்தல் ஆகியன இருந்தன. இத்தகைய தொடக்ககால முயற்சிகள் மகளிரியல் ஆய்வுகள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் ஆர்வமுடன் மேற்கொள்ளப்படுவதற்குக் கால்கோளாயின. இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்போது மனதிற் கொள்ளத்தக்க சில ஆய்வு நெறிமுறைகளை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பொதுவில் இந்திய மகளிரைப் பின்னணியிற்கொண்டு இந்நெறிமுறைகள் குறித்து பேசப்பட்டாலும், குறிப்பாகத் தமிழக மகளிரையே முன்னணியில் வைத்து இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

'மகளிரியல்' (Women Studies) என்ற சொல் மகளிர் பற்றிய அனைத்து அறிவுகளையும் உள்ளடக்குகிறது. எனினும், சிறப்பாக மகளிர் தேவைகளை முன்னணிப்படுத்திய அறிவினையே சுட்டுகின்றது. மகளிரியல் கல்விக்குத் துணை நின்ற பெண்ணியக் கருத்துக்களையும் (Feminism) இங்கு நோக்குவது உகந்ததே. பெண்ணியம், கற்றறிந்த மக்களிடையே ஒருவகை விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. மேல்நாட்டில் இவர்கள் பெண்களுக்குச் சம உரிமை, கருக்கலைப்புத் தொடர்பான சட்டங்கள், பாலியல் பலாத்காரம், பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஆகிய பெண்கள் தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி எடுத்துரைத்து அதற்கான தீர்வுகளைக் காண முயன்றனர். இவர்களுடைய செயல் வெளிப்பாடுகளைப் பல்கலைக்கழக நிலையில் மகளிரியல் ஆய்வாளர்கள் பயன்படுத்திக் கொண்டு ஒரு தனிப்பட்ட துறையை மகளிரியலுக்காக ஒதுக்க வேண்டினர். பல இடங்களில் அவர்கள் வெற்றியும் பெற்றனர்.

மகளிரியல் ஆய்வு மையங்கள் நம் நாட்டிலும் ஒரு சில தோன்றினாலும் இன்னும் இத்தகைய ஆய்வு மையங்கள் வேண்டப்படுகின்றன. இதுவரை ஆண்களை மையமாகக் கொண்டே ஆய்வு மையங்கள், ஆய்வுத் திட்டங்கள், ஆய்வுக் கொள்கைகள், கருத்துருக்கள் (Doctrines), ஆய்வு நெறிமுறைகள் ஆகியன எழுந்துள்ளன. பெண்களின் சாதனைகள், ஆண்கள் சாதனைகள் வரலாற்றில் இடம் பெற்றதுபோல் இடம் பெறவில்லை. இதற்குக் காரணம் பெண்கள் சாதனை எதுவும்

சாதிக்கவில்லை என்பதா? அன்றேல் அவர்கள் சாதனைகள் இருட்டடிக்கப் பட்டனவா? பெண்களின் திறன்கள் எதுவும் வெளிச்சத்திற்கு வராத காரணங்களால்தான் பெண்கள் "இருட்டடிக்கப்பட்ட பெண்கள்" (Hidden Women) என்ற தொடரால் அழைக்கப்படுகின்றனர்.

பொதுவாகப் பெண்களின் தேவைகள் இந்தியாவில் மேல்நாடுகளை விட வேறுபட்டனவாகவும், மிகச் சிக்கல் வாய்ந்த பிரச்சினைகளை உள்ளடக்கியனவாகவும் அமைகின்றன. மேல்நாட்டு மகளிரியலாளர் எதிர்கொள்ளும் சிக்கல்கள், பொருளாதார நிறைவின்மேல் எழுந்த சிக்கல்களாகவே பெரிதும் இருக்கின்றன. ஆனால் இந்தியாவில் பொருளாதார நிறைவின்மையே மகளிர் பிரச்சினைகள் பலவற்றின் அடித்தளமாக அமைந்து விடுகின்றன. அத்துடன் இந்திய சமயங்கள் பலவும், குறிப்பாக இந்து சமயம், பௌத்த சமயம், சமண சமயம் ஆகியன மகளிரை ஆணுக்கு அடுத்த நிலையில்தான் வைத்துள்ளன. சமயச் சாத்திரங்கள் கூறும் பெண்களுக்கான விதிமுறைகள் பல மக்கள் மனதில் ஆழப்பதிந்துவிட்டபடியால், பெண்களே தமது சுதந்திரத்தை உணராத அளவிற்கு அவர்கள் உணர்வுகளை மரத்துப்போக வைத்துவிட்டன. மகளிரின் பொருளாதார நிறைவின்மை மேலும் இவற்றை சிக்கல் படுத்துகின்றன. அத்துடன் இந்திய மண்ணிலுள்ள சாதி, மொழி, இனப் பிரிவினைகளும், அவற்றிற்குரிய மரபு சார்ந்த பழக்க வழக்கங்களும் 'மகளிர்' என்ற ஒரு நோக்கில் எல்லா மகளிரையும் பார்ப்பதற்குத் தடைகளாகின்றன. இது தவிர பொருளாதாரம் நிர்ணயிக்கும் வெவ்வேறு படிநிலைகளும் மகளிரியல் ஆய்வுகளில் வேறுபட்ட அளவு கோல்களைப் பயன்படுத்த வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்துகின்றன.

அண்மைக்காலம் வரை எல்லாத் துறைகளிலுமுள்ள (Qualitative and Quantitaive Research) ஆய்வுகள் போலவே மகளிரியல் ஆய்வுகளும் தன்மை ரீதியான (Qualitative) ஆய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டே எழுந்தன. எடுத்துக்காட்டாக "வரதட்சணைக் கொடுமையால் மணமாகாத பெண்கள்" குறித்து ஒரு ஆய்வு மேற்கொள்வதானால், வரதட்சணை நம் நாட்டில் பழக்கத்தில் வந்த வரலாறு, அதன் செயல் முறைப்பாட்டால் பெண்கள் பாதிக்கப்படும் நிலை, அதன் விளைவாக எழும் சமூகச் சீர்கேடுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகளைத் தன்மை அடிப்படையிலான ஆய்வுகள் (Qualitative) என்று கூறலாம். பெரும்பான்மையான மரபுவழி ஆய்வு நெறிமுறைகள் இவ்வாறாகத்தான் அமைகின்றன. ஆனால் அண்மைக் காலங்களில் இந்த முறையுடன் அளவு ரீதி அடிப்படையிலான ஆய்வுகளும் (Quantitative) மகளிரியல் ஆய்வுகளில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. இம்முறை ஆய்வுகளில் புள்ளி விபரங்கள் இன்றியமையாதன ஆகின்றன.

காட்டாக, "கணவர்களால் அடிபடும் மகளிரைக்" குறித்து அவர்கள் நிலை, அவர்களை அத்தகைய கொடுமையிலிருந்து மீட்பதற்குரிய

வழிவகைகள் - போன்றவற்றை ஆய்வு செய்ய முயலும் ஒருவர் தன்மை அடிப்படையிலான ஆய்வு முறையுடன் அளவுரீதி அடிப்படையிலான ஆய்வு முறைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட பரப்பளவுள்ள (Area) ஊரை எடுத்துக் கொண்டு அங்குள்ள கணவர்களால் அடிபடும் பெண்களைப் பற்றி பின்வரும் அளவுரீதியான ஆய்வினை மேற்கொள்ளும்போது பின்வரும் செய்திகள் குறித்த புள்ளி விபரங்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

1. ஊரின் பரப்பளவு.
2. திருமணமான பெண்களின் எண்ணிக்கை.
3. திருமணமான பெண்களுள் கணவர்களால் அடிபடும் பெண்களின் எண்ணிக்கை.
4. கணவர்களால் அடிபடும் பெண்கள் எத்தகைய சூழ்நிலையில் எத்தகைய காரணங்களால் அடிபடுகிறார்கள்; எவ்வெப்போது அடிபடுகிறார்கள்.
5. அடிக்கும் கணவர்களின் தொழில்.
6. ஆடவர்கள் குடிபோதையில் தன் புலன்களை அடக்க முடியாத நிலையில் அடிக்கிறார்களா? அன்றேல் புலன்கள் நன்கு செயல்படும் நிலையிலேயே அடிக்கின்றார்களா?
7. அடிபடும் பெண்களுள் பொருளாதார நிலையில் ஆண்களைச் சார்ந்தவர்களாக இருக்கின்ற பெண்களின் எண்ணிக்கை.
8. அதே போல் வெளியே சென்று பொருள் ஈட்டி வரும் நிலையில் இருந்து கொண்டும் கணவர்களால் அடிபடும் பெண்களின் எண்ணிக்கை.

இத்தகைய தரவுகளைக் திரட்டிக்கொண்டு, புள்ளிவிபரங்கள் துணையுடன் ஆய்வு செய்வது குறிப்பிட்ட ஒரு நிலையை ஆழமாகத் தெரிந்து கொள்ளத் துணையாகின்றது. இந்த புள்ளி விபரங்களின் அடிப்படையில் இத்தகைய பெண்களைக் கணவர்களின் கொடுமையிலிருந்து மீட்டு, பாதுகாப்பாக இவர்களுக்காக அமைக்கப்பட்ட ஒரு இல்லத்தில் இவர்களை வாழவைக்கலாம். அதற்கான ஒரு சூழ்நிலையை அரசிடம் புள்ளி விபரங்களைக் காட்டித் துணை கோரலாம். நாட்டிலுள்ள ஏனையோருக்கும் இது ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும்.

தன்மையடிப்படையிலான (Quantitative & Qualitative)அளவு அடிப்படையிலான ஆய்வு நெறிமுறைகளும் இணைந்த ஆய்வுகளை மேற்கொள்ளும்போது ஒரு குறிப்பிட்ட நிலையின் முழுப்பரிமாணமும் புலனாகின்றது.

இந்தியா போன்ற ஒரு நாட்டில் அளவு அடிப்படையிலான மகளிரியல் ஆய்வுகள் பெரிதும் வேண்டப்படுகின்றன.

மகளிரியல் ஆய்வுகளில் இந்த மேற்கூறிய இரு வகையிலான ஆய்வுகளும் அடிப்படையானவை. இன்றியமையாதவை. இவற்றின் துணைகொண்டு மேலும் சில ஆய்வு நெறிமுறைகளை மனதில் கொள்ளலாம்.

*1.* மரபு வழி வந்த, பெண்கள் குறித்த ஆய்வுகள் ஆண்களாலும், பெண்களாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெரும்பாலான ஆய்வுகள் சமூகவியல், உளவியல், வரலாற்றியல் போன்றவற்றின் பின்னணியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அவை ஆண்களைப் பற்றி எழுதப்பட்டன போலவே பெண்களைப் பற்றியும் எழுதப்பட்டு வந்துள்ளன. அதாவது பெண் மரபுவழி உயர்த்திக் கூறப்பட்ட பண்புகளான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய பண்புகள் உள்ளவளாக மதக் கோட்பாடுகள், சமய சாத்திரங்கள் பெண்ணிற்கு வகுத்த குணநலன்களுடன் வாழ்கிறாளா? என்ற திறனாய்வு நோக்குடன்தான் பெண்களைப் பற்றிய ஆய்வுகள் அண்மைக்காலம் வரை செய்யப்பட்டு வந்துள்ளன. ஆனால் இன்றைய நிலையில் பெண்களுக்காக, அவர்கள் சமூக நிலை மேம்பாட்டிற்காகவே ஆய்வுகள் செய்யப்படுவதால் அதற்கேற்ற ஆய்வு நெறிமுறைகள் பெரிதும் வேண்டப்படுகின்றன. ஆண்களால் பெண்களுக்கு நிறுவப்பட்ட **அளவுகோல்களைப்** பெண்கள் மேம்பாடு என்ற நிலையில் ஆய்ந்து, பொருந்தாதவை, ஆண்கள் நலனுக்காக மட்டும் நிலைநிறுத்தப்பட்டவை களையப்பட வேண்டும். இத்தகைய ஆய்வு நெறிமுறைகளில் **பெண்களுடைய அனுபவங்களும்** உட்படுத்தப்பட வேண்டும். அதாவது இத்தகைய ஆய்வுகளில் ஒரு பெண் ஆய்வாளராக மட்டுமன்றி (Researcher) ஆய்வு செய்யப்படும் பொருளாகவும் ஆகின்றாள் (Researched). அத்தகைய நிலையில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளில்தான் உண்மையான பெண்ணின் நிலை வெளிப்படுத்தப்படுகின்றது.

மகளிரியல் ஆய்வாளர்கள் தாம் ஆய்வுக்குட்படுத்தப்படும் பெண்களை 'ஆய்வுப் பொருளாக' (Research Objects) மட்டும் கொள்ளாது அவர்களை தம் சகோதரிகளாக அவர்களின் பிரதிபிம்பமாக, தம்மில் ஒருவராக நோக்க வேண்டும். ஆய்வுக்குட்படுவோர் தம்மை ஆய்வாளர்கள் வெறும் களப்பணிக்காக மட்டும் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்ற எண்ணம் கொள்ளும் நிலையை ஏற்படுத்தக்கூடாது. இத்தகைய ஆய்வுகளை மகளிரியல் ஆய்வாளர் 'inter subjectivity' எனக் கொள்வார். இவ்வாறு செய்யப்படும் ஆய்வுகள் மகளிர் பற்றிய கோட்பாடுகளை வகுத்துக்கொள்வதற்கும் உதவியாகும்.

*2.* பல்கலைக்கழக நிலையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்போது அத்தகைய ஆய்வுகள், மகளிர் மேம்பாட்டிற்காக நடைமுறையில்

போராடும் சமூக அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டனவாக அமைய வேண்டும். வெறும் பார்வையாளராக இருந்து அதன் துணையாக (Spectator knowledge) மகளிரியல் கோட்பாடுகளை வகுத்து விடமுடியாது. இன்று மகளிரியல் கல்வி, பெருமளவில் கற்றறிந்த நடுத்தர வகுப்புப் பெண்களிடையேயே பரவியிருப்பதுடன் அவர்களிடையேதான் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. கல்வியறிவில்லாத பெண்களிடமும் தொழிலாளப் பெண்களிடையேயும் போதிய அளவு விழிப்புணர்வு இன்றைய நிலையில் ஏற்படவில்லை. இவர்கள்தான் பெருமளவில் ஆண்களின் அடக்கு முறைகளுக்கும், சமுதாயத் துன்பங்களுக்கும் ஆளாகின்றார்கள். இவர்களுக்குத் தாம் இருக்கும் துன்ப நிலையிலிருந்து விடுபட்டு வாழ முடியும் என்ற எண்ணம் கூடத் தோன்றுவதில்லை. எப்பொழுதும் ஒடுக்கப்பட்ட ஒரு சமூகமோ, இனமோ, குழுவோ அன்றேல் ஒரு பகுதி மக்களோ, அவர்களாகவே தம் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றிற்குத் தீர்வுகாண முயலும்போதுதான் அவர்கள் பிரச்சினைக்களுக்கு முடிவு ஏற்படும். இத்தகைய வகையில் நலிவுற்ற பெண்களுக்கு, அவர்கள் தம் பிரச்சினைகளை உணர்ந்து விழிப்புணர்வு கொண்டு, அவற்றிலிருந்து அவர்கள் மீள அவர்களுக்காக அவர்களால் மேற்கொள்ளப்படும் போராட்டங்களில் மகளிரியல் ஆய்வாளர்கள்தாம் அவர்களுக்குத் துணை நிற்கலாம்.

இந்தியாவில் இன்று மகளிரைப் பொறுத்தவரை நலிவுற்ற பெண் தொழிலாளர்களாக, நிலமற்ற விவசாயப் பெண் தொழிலாளர்கள், கட்டிடத் தொழிலாளப் பெண்கள், சிறு தொழில்களை மேற்கொண்டுள்ள பெண்கள், தொழிற் கூடங்களில் குறைந்த ஊதியத்திற்குத் தொழில் புரியும் பெண்கள், நகர சுத்திகரிப்பில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் போன்றோரைக் கொள்ளலாம். இவர்களின் பொருளாதார நிலையின் வறட்சி எத்தகைய ஊதியத்திற்கும் தன் கடின உழைப்பை அளிக்கும் நிலைக்குத் தள்ளுகின்றது. இத்தகைய பெண்களுக்கு ஆண்களுடன் சம ஊதியம் பெற வாய்ப்பளித்தல், அவர்களுடைய வேலை ஒப்பந்தங்களை அவர்களை ஏமாற்றாத வகையில் நிறைவேற்றி வைக்க உதவுதல், இரவுப் பாடசாலைகளை அமைத்து அவர்களுக்கு அடிப்படை அறிவுகளைப் பெறவைத்தல் முதலியவற்றில் மகளிரியல் ஆய்வாளர்கள் முயற்சி எடுக்கலாம். மேலை நாடுகளில் மகளிரியல் ஆய்வாளர்களின் கோரிக்கைகள் வெற்றி பெற்றனவென்றால் அவற்றிற்கு முக்கிய காரணம் அவர்களுடைய பொருளாதார பலம்தான். மேலை நாட்டு மகளிரியல் ஆய்வு நெறிமுறைகளில் பல நம் நாட்டுப் பெண்களின் உயர்விற்காக ஆற்றும் ஆய்வுகளுக்குப் பொருந்தாதன ஆகிவிடுகின்றன.

இந்திய சமுதாயத்தில் இன்று,

1. பொருளாதார பலமின்றி ஆதரவற்ற பெண்கள் நிலை.
2. வரதட்சணைக் கொடுமையால் மணமாகாத பெண்கள் படும் வாழ்க்கைத் துன்பங்கள்.
3. பெண்களுக்குச் சொத்துரிமை.
4. விதவைகள் திருமணம்.
5. விதவைகளுக்குச் சமூகத்தில் இழைக்கப்படும் அநீதிகள்.
6. பெண்களின் பொருளாதார தனித்துவம் வேண்டிப் பணியிடங்களில் பெண்களுக்குக் குறிப்பிட்ட இட ஒதுக்கீடு.
7. குடும்பத்தினரால் புறக்கணிக்கப்பட்ட முதிய பெண்களின் துயரநிலை.
8. கணவர்களால் அடித்துத் துன்பப்படும் பெண்களின் அவல நிலை.
9. வரதட்சணைப் பெருக்கம் வேண்டிய மாமியார், மாமனார் அவர்கள் குடும்பத்தினரால் துன்புறுத்தப்படும் பெண்களின் நிரந்தர அல்லல்கள்.

போன்றன, பெண்களுக்கு ஏற்படும் துன்பங்களில் முக்கியமானவை களாகக் காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளை அணுகுவதற்கு அந்தந்தச் சூழலுக்குத் தகுந்த ஆய்வு நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அத்துடன் இத்தகைய நிலைகளுக்குப் பெண்ணைத் தள்ளிய சமூகக் கோட்பாடுகள், மரபுச் சிந்தனைகள், சமய கட்டுப்பாடுகளின் வரலாற்று விளக்கங்கள் இவையனைத்தும் முழுமையாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டியனவாக இருக்கின்றன.

3. குறிப்பிட்ட சில சூழல்களில் பெண்கள் தாம் காலம் காலமாகக் கொண்ட மரபு வழிச் சிந்தனைகளால் தாம் அனுபவிக்கும் உண்மையான துன்பங்களையே வெளியிற் கூறத் தயங்குகின்றனர். இத் துன்பங்களிலிருந்து வெளியேறப் பெண்கள் வேறெங்கும் சமுதாயத்தில் செல்லமுடியாத நிலையும் இதற்குக் கூட்டாக அமைகின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றில் கடந்த காலத்தில் பெண்கள் ஆடவர்களால் தாம் அடைந்த துன்பங்களை வெளிப்படுத்திப் பாடிய பாடல்களோ உரைநடைப் பகுதிகளோ மிக மிகக் குறைவு. பௌத்தப் பெண் துறவிகளின் பாடல்களான பாலி மொழியிலான தேரிகாதையில்[1] மட்டும் கணவன் துன்பத்திலிருந்தோ ஓயாத வீட்டு வேலைகளிலிருந்தோ மீண்டு வந்து துறவினைச் சார்ந்து மகிழ்ச்சி கொண்ட பெண்களின் பாடல்கள் பல காணக்கிடப்பதை அறிகின்றோம்.

1. Therigatha, VI. Horner I.B.Women under Primitive Buddhism, p.189.

பொதுவில் பெண்கள் தம் துயரங்களை பல சமூகக் காரணங்களுக்காக வெளியிற் கூறுவதில்லை. இத்தகைய மகளிர் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்போது அவர்களிடமிருந்து உண்மையை வரவழைப்பதில் கட்டாய கவனம் செலுத்தப்பட வேண்டும். காட்டாக, கணவர்களால் அடிபடும் பெண்களை எடுத்துக் கொண்டால் பல பெண்கள் உண்மை நிலையைப் பல காரணங்களுக்காக மறைத்து விடுவர். சமுதாயத்தில் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய அவமரியாதை, குடும்பத்தைவிட்டு வெளியேறினால் அவர்கள் சமூகத்தில் எதிர்கொள்ள வேண்டிய ஏனைய பிரச்சினைகள், தம் குழந்தைகள் எதிர்காலம் குறித்த மன ஏக்கம் போன்றவை ஒரு பெண் தனது துன்பங்களை வெளிக் காட்டுவதில் தடைகற்களாக அமையலாம்.

இத்தகைய பெண்களை ஆய்வாளர்கள் அணுகும்போது முதலில் அவர்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். அவர்களிடமிருந்து போலியுணர்வுகள் (Faking) வெளிப்படாவண்ணம், வினாக்களை வினவி செய்திகளைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்யலாம். இந்தியப் பெண்கள் பல நிலைகளில் போலியுணர்வுகளை வெளிப்படுத்தும் சூழல்களுக்குத்தான் தள்ளப் படுகிறார்கள். வீட்டு வேலைகள் அலுவலகப் பணிகள் ஏனைய குடும்பத்துடன் தொடர்பான வேலைகள் இவற்றில் தன்னை முற்றிலுமாய் அர்ப்பணித்துக் கொண்ட பெண், கணவனின் துன்புறுத்தலால் அவள் குடும்பத்திலிருந்து பிரிந்து செல்ல நேரிடும் போதுதான் சமூகத்தில் தனது உண்மைநிலையை உணர்கிறாள். அப்போதுதான் உண்மையான சமூக உறவுகளையும், அதுவரை அத்தகைய உறவுகளில் தன்னை மூழ்கடித்துக்கொண்டு, அத்தகைய உறவுகளிலிருந்து, தான் விடுபட்டால் எத்தகைய நிலையை அடைவாள் என உணராது வாழ்ந்த நிலையையும் தெரிந்து கொள்கிறாள். எல்லாவற்றையும் மரபுவழி ஏற்றுக்கொண்டு, அதில் எந்தத் தவறும் ஏற்படாது செல்லும்வரை பெண்ணிற்குத் தாம் அடக்கப்பட்டிருப்பதோ, அன்றேல் ஆணினத்தால் தாம் அவர்களின் தேவைக்காகப் பயன்படுத்தப்படுவதோ தெரிவதில்லை. அவை தடம் மாறும்போதுதான் பெண்ணின் துன்பநிலை புலப்படுகிறது. இத்தகைய நிலையிலுள்ள பெண்கள் தமக்கு ஏற்பட்ட விபத்துக்களின் விபரங்களை, முழுப் பரிமாண நிலையிலும் மகளிரியல் ஆய்வாளர்களுடன் கலந்து கொள்வதில்லை. இந்த முழுப் பரிமாண நிலையையும் அறிந்து கொள்வதற்கு, ஆய்வாளர்கள் அப்பெண்களுடன் நெருங்கிய தொடர்புடைய அவர்கள் குழந்தைகளிடமும் குறுக்கு வினாக்களை வினவித் தாம் சேகரித்துக் கொண்ட தரவின் உண்மை நிலையைக் கணித்துக் கொள்ளலாம்.

பொதுவில் இந்தியப் பெண்களின் துயரங்களுக்கு அடிப்படைக் காரணங்களாக இரண்டனைக் கொள்ளலாம். ஒன்று பொருளாதார சமச்சீரின்மை, இரண்டு சமயக் கோட்பாடுகள், மரபு வழிச் சிந்தனைகள் பெண்ணை ஆணுக்கு அடுத்த நிலையிலும், ஆணைச் சார்ந்த நிலையிலும் வைத்துள்ளமை.

இவ்விரு நிலையிலும் வேண்டப்படாதன களையப்பட்டு, உதிர்க்கப்பட வேண்டிய எண்ணங்கள் உதிர்க்கப்பட்டு மகளிர் மேம்பாடு அடைவதற்குப் பல்கலைக்கழக நிலையில் மகளிரியல் ஆய்வாளர்கள் திட்டங்களையும் வழிவகைகளையும் வகுக்கலாம். அத்துடன் கூடவே, மகளிர் மேம்பாட்டிற்காக நடைமுறையில் முயற்சிசெய்து கொண்டிருக்கும் பெண்களுடன் தொடர்புகொண்டு ஒரு செயல்முறை அடிப்படையிலான ஆய்வு நெறிமுறைகளைக் குறிப்பிட்ட சூழல்களுக்கேற்ப வகுக்கலாம். இந்திய நாட்டின் வளர்ச்சிக்கு இவை மிக இன்றியமையாத பணிகளாகும்.

**துணை நின்றவை**


1 Atkinson, Clarissa, W. Buchanan. Constance H, Miles. Margaret R. (EDS) SHAPING NEW VISION Gender and Values in American Culture, Harvard, V Series; Harvard Women's studies in religion series, 1987.

2. Chafetz, Janet Saltyman, GENDER EQUALITY An Integrated theory of Stability and change, California, SAGE Publications, Inc., 1990.

3. Dubois Ellencarol, Kelly. Gail paradise, Kennedy Elizabeth Lapovsky, Korsmeyer, Carolyn.W, Robinson, Lillians (Eds.) Feminist Scholarship kinding in the Groves of Academic, Urbana and Chicago, University of Illinois Press, 1985.

4. Farnhan, Chiristie (Ed.) The Impact of Feminist Research in the Academy, America, Indiana University Press, 1987.

5. Guy Poilevin and Hema Rairkar, Indian Peaseant women speak up, Michel Lerar (Trans.) Bombay, Orient Longman Ltd. 1993.

6. Horner, I.B. Women under Primitive Buddhism, Reprinted, Delhi, Motilal Banarsidass Publishers Pvt. Ltd., 1990.

7. Maithreyi Krishnamaraj, Karuna Chanana(eds.), GENDER AND THE HOUSEHOLD DOMAIN Social and cultural Dimensions, California, SAGE Publications, 1989.

8. பிரேமா அருணாசலம், பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும் (தொல்காப்பியர் முதல் சித்தர் வரை- பெண்களின் சித்தரிப்பு) முதற் பதிப்பு, சென்னை, சவுத் ஏசியன் புக்ஸ், 1993.

# தமிழகத்தில் பெண்விடுதலைச் சிந்தனையும் மகளிர் அமைப்புகளும்

வ. கீதா


## கட்டுரைச் சுருக்கம்

பெண் விடுதலை, பெண்கள் முன்னேற்றம், பெண்ணுக்கு சமவுரிமை என்பன போன்ற கருத்துகள் இன்று பல்வேறு வகையான வட்டாரங்களில் பேசப்படுகின்றன. அரசியல் கட்சித் தலைவர்கள் முதல் பெரும் முதலாளிகள் ஈறாகப் பலர் இன்று பெண்களுக்காகக் 'குரல் கொடுக்க' முன்வந்துள்ளனர். இந்தவொரு சமூகப் பண்பாட்டுச் சூழலில் 'பெண் விடுதலை' என்ற கருத்தாக்கத்தை எப்படிப் புரிந்து கொள்வது என்ற கேள்வியும் எழுந்துள்ளது. பெண்கள் நலத்திற்காகவும் விடுதலைக்காவும் பல்வேறு சங்கங்களும் அமைப்புகளும் இயக்கங்களும் நாடெங்கிலும் தோன்றிச் செயல்பட்டு வருவதால் இக்கருத்தாக்கம் பல விளக்கங்களைப் பெற்றுள்ளது. பெண் விடுதலை என்ற கருத்தாக்கம் எந்த வரலாற்றுச் சூழலில் தோன்றியது; இக்கருத்தாக்கம் ஒரு அரசியல் கோரிக்கையாக உருமாறக் காரணமாயிருந்த அரசியல், சமூக நிலைமைகள் யாவை; இக்கருத்தாக்கம் பெற்றுள்ள முக்கியமான பொருள் அழுத்தங்கள் என்னென்ன? இவ்விஷயங்களில் நமக்குத் தெளிவு ஏற்பட வேண்டுமானால் மகளிர் விடுதலை அமைப்புகள்/இயக்கங்கள் ஆகியவற்றின் தோற்றம், வரலாறு, தன்மை, செயல்பாடுகள் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டியவராகிறோம்.


தமிழகத்தில் பெண்கல்வி, பெண்கள் முன்னேற்றம் ஆகியன பற்றி சென்ற நூற்றாண்டின் இறுதி ஆண்டுகள் தொட்டே, இன்னும் சொல்லப் போனால், அதற்கு முன்னதாகவே பலர் பேசவும் அக்கறை காட்டவும் தொடங்கியிருந்தனர். பெண்கள் நலம் தொடர்பாகத் தோன்றிய சமூக அக்கறையை தேசிய அக்கறையாக வரையறுத்த பெருமை காந்தியடிகளைச் சேரும். காந்தியடிகளின் அறைகூவலுக்குச் செவிமடுத்து

சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்க முன்வந்த பெண்கள் ஆயிரமாயிரமாவார்கள். தமிழகத்திலும் இத்தகைய போக்கு நிலவியது. பெண்கள் நலம், முன்னேற்றம், விடுதலை குறித்து காந்தியடிகள் பகர்ந்த விளக்கங்களைத் தமிழ்ச்சூழலுக்கேற்ப வடிவமைத்தவர் திரு.வி. கல்யாண சுந்தரனார். சுதந்தரப் போராட்டக் காலகட்டத்தில் உருவாகிப் பின்னர் வளர்ச்சியடைந்த மகளிர் நலச்சங்கங்கள், அமைப்புகள் ஆகியவற்றின் குறிக்கோள்கள், செயல்பாடுகள் முதலியவற்றை காந்தியடிகளின் சிந்தனையுடன் பொருத்திப் பார்த்தல் அவசியம். சுதந்திரப் போராட்டக் காலகட்டத்தில்தான் தமிழகத்தில் பார்ப்பனரல்லாதோர் இயக்கமும் அரசியல் முதிர்ச்சி பெற்றது. தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் *1930*-களில் தமிழகம் எங்கும் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியதோடு தமிழ்ச் சமுதாயத்தில் சில அடிப்படை மாற்றங்கள் ஏற்படக் காரணமாயிருந்தது. சுயமரியாதை இயக்கமும் தந்தை பெரியாரும் பெண் விடுதலை என்ற கருத்திற்கும் புதிய, புரட்சிகரமான விளக்கங்களை அளித்தனர். பெண்கள் மட்டுமே கலந்து கொண்டு நடத்திய பெண்கள் மாநாடுகள் பல இக்காலகட்டத்தில் கூட்டப்பட்டன. சுயமரியாதை இயக்கம் பெண் விடுதலைப் பிரச்சினையில் காட்டிய அக்கறை எத்தகைய மகளிர் அமைப்புகள், இயக்கங்கள் தோன்றக் காரணமாயிருந்தது? சுயமரியாதை இயக்கமும் பெரியாரும் முன்வைத்தக் கருத்தாக்கங்கள் தமிழகத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன? இக்கேள்விகளுக்கும் நாம் விடைகாணுதல் அவசியம்.

காந்தியடிகள், பெரியார் - இவர்களைத் தவிர பெண் விடுதலை பற்றிப் பேசியவர் பலர்; பொதுவுடைமைக் கட்சியினர்; பாரதி, பாரதிதாசன் போன்ற தனிநபர்கள்; டாக்டர் முத்துலட்சுமி, இராமாமிருத அம்மையார், தருமாம்பாள் போன்ற பெண்கள்— பெண்விடுதலை பற்றித் தமிழகத்தில் நிலவிவந்துள்ள சிந்தனைப் போக்குகள், இவற்றுடன் தொடர்புடைய மகளிர் அமைப்புகள் ஆகியன பற்றிய ஆய்வு தேவையானதாகும்.

# இந்தியப் பெண்ணியமும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியும்

இரா. பிரேமா

'தமிழக மகளிர்' பற்றிய தொடர் கருத்தரங்குகளில் ஒன்றான இன்றைய கருத்தரங்கின் மையப் பொருளாக, மகளிர் நலனுக்காக அயராது உழைத்த தமிழ்ப் பெண்மணி டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அமைந்துள்ளார்.

இந்தியப் பெண்ணியவாதிகளை இனம் காண்பதும், அதன்வழி டாக்டர் திருமதி ரெட்டியைப் பெண்ணியவாதியாக இனம் காண இயலுமா? என ஆய்வதும் இன்றைய கருத்தரங்கின் நோக்கும் போக்குமாகும்.

மேலைநாட்டுப் பெண்ணியம் தனக்கென்று தனித்த வரலாறு உடையது. இந்தியப் பெண்ணியம் என்பது இந்திய வரலாற்றோடு, குறிப்பாகச் சுதந்திரப் போராட்ட வரலாற்றோடு இடைமிடைந்தது. எனவே, இந்தியப் பெண்ணியம் என்பது மேலைநாட்டுப் பெண்ணியப் போக்கிலிருந்து மாறுபட்டது.

மேலைநாட்டுப் பெண்கள் சமுதாயத்தில் தங்களுக்குரிய உரிமைகளை அடைய, நிலைநாட்ட, தங்களை முன்னேற்றிக் கொள்ள போராடி வரலாறு படைத்தனர். இந்தியப் பெண்களோ தங்கள் உரிமைகளை அடைய போராடியதை விட, சமூகத்தில் தங்களின் இருப்பை நிலைநிறுத்திக் கொள்ள போராடிய வரலாறே அதிகம்.

'பெண்ணியம்' என்பதற்கு ஜில் ஜான்ஸ்டன் (Jill Johnston) என்ற அறிஞர் பெண்களின் விடுதலைக்காக, பெண்கள் நடத்தும் இயக்கம் (The liberation of women for women) என்று விளக்கம் அளிக்கிறார். இஃது, மேலை நாட்டுப் பெண்ணிய இயக்கப் போக்கினை அடியொற்றிய விளக்கமாகும்.

மற்றொரு அறிஞர், 'பெண்கள், சமூகத்தில் தங்களின் அந்தஸ்தையும், மதிப்பையும் பெறும் பொருட்டுப் பாடுபடும் இயக்கம்' என்று பெண்ணியத்திற்கு விளக்கம் அளிக்கிறார். இஃது, இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளின் சூழலை ஒட்டிய விளக்கமாகும்.

பெண்ணியவாதிகள் என்பவர்கள் யார்? என்று மேற்கூறிய விளக்கங்களை வைத்து ஆராயும்போது மேலைநாட்டுப் பெண்ணியவாதிகள், பெண்ணியத்தின் அடிப்படையை உருவாக்கும் கோட்பாட்டாளர்களாகவும் (Theorists), செயல்பாட்டாளர்களாகவும் (activist) இனம் காணப்படுகின்றனர். இந்தியப் பெண்ணியவாதிகளோ பெண்களுக்குச் சமூகத்தில் ஓர் இடம்பெற்றுத் தர பாடுபடும் சீர்திருத்தவாதிகளாகவும் (Reformers), அவர்களை மரபுத்தளையிலிருந்து விடுவிக்கப் பாடுபடும் சமூக மறுமலர்ச்சியாளர்களாகவும் (Social Revolutionist) காட்சியளிக்கின்றனர்.

எனவே, இந்தியப் பெண்ணியவாதிகளை இனம் கண்டுகொள்ள, இந்தியப் பெண்ணியத்தின் போக்கினை ஒட்டி, கீழ்க்கண்ட வரன் முறைகளைக் கைக்கொள்ளலாம்.

1. பெண்களின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு, அதற்காகப் பாடுபடுபவர்கள்.
2. பெண்களை, எல்லா நிலைகளிலும் அடிமைத் தளையிலிருந்து விடுவிக்க முயல்பவர்கள்.
3. பெண்களிடையே சமூக/பொருளாதார/கலாச்சார/ஆன்மீக அடிப்படையிலான மாற்றத்தை ஏற்படுத்தித் தந்தவர்கள்.

இந்தியப் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் போராடிய பெண்மணிகளாக வரலாற்றில் முன் நிற்பவர்கள் டாக்டர் அன்னிபெசன்ட், திருமதி எம்.இ. கசின்ஸ், சரோஜினி நாயுடு, திருமதி ஹீராபாய் டாட்டா, செல்வி மிதன் டாட்டா, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, ராஜகுமாரி அமிர்த் கவுர், பேகம் ஹமீது அலி, திருமதி கமலா தேவி சட்டோபாத்தியாயா, பண்டித ரமாபாய், திருமதி விஜயலட்சுமி பண்டிட் போன்றவர்கள் ஆவார்கள். வரலாறு இவர்களைப் பெண்ணியவாதிகளாக இனம் காட்டவில்லை; அரசியல்வாதிகளாகவும், சீர்திருத்தவாதிகளாகவும் இனம் காட்டியுள்ளது.

மேலை நாட்டைச் சேர்ந்த பெண்ணியவாதிகளான மேரி வொல்ஸ்டோன் கிராப்ட் (Mary Wollstone Craft), எம்மா கோல்ட்மேன் (Emma Goldman), ஆலிஸ் பால் (Alice Paul), சைமன்-டி-பௌவாயர் (Simone-de-Beauvoir), பெட்டி ஃபிரைடன் (Betty Friedon), ஷீலா ரோபோத்தம் (Shiela Rowbothem) போன்றவர்களோடு மேற் கூறியவர்களை ஒத்துப் பார்க்க இயலாது என்றாலும், முந்திய வரன்முறைகளின் அடிப்படையில் இவர்களைப் பெண்ணியவாதிகளாக இனம் கண்டு கொள்ள இயலுமா? என்பதை ஆய்தல் வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, முன்கூறிய வரன்முறைகளில் அடிப்படையில் பாரதியையும், வ.ரா.வையும், பெரியாரையும் பெண்ணியவாதிகளாக இனம் கண்டு வருகிறோம். டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியை அந்த அடிப்படையில் ஒரு பெண்ணியவாதியாக ஏன் இனம் காணக் கூடாது? என்பதை வினாவாக இக்கருத்தரங்கில் ஆய்வாளர் முன் நிறுத்துகிறார்.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியின் அரசியல் வாழ்வை விடுத்து, பெண்களுக்காக, அவர்கள் முன்னேற்றத்திற்காக மேற்கொண்ட பணிகளை மட்டும் கருத்தில் கொண்டு, அதைத் தொகுத்துக் காணும்போது அவரின் மற்றொரு பரிணாமத்தின் விஸ்வரூபம் வெளிப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் *1886*-ஆம் ஆண்டு ஜுலை *30*-ஆம் தேதி பிறந்த திருமதி ரெட்டி, *1921*-இல் மருத்துவ துறையில் பட்டம் பெற்ற முதல் இரு பெண்மணிகளுள் ஒருவராவார். தொடக்கத்தில் மருத்துவப் பயிற்சி செய்த இவர், காந்திஜி மீது கொண்ட ஈடுபாட்டாலும், தனக்கே உரிய சமூக விழிப்புணர்வு காரணமாகவும் அரசியலில் புகுந்து, அதன்வழி இந்தியப் பெண்ணினத்திற்குத் தொண்டாற்ற தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

திருமதி ரெட்டி, இதற்கு முதல்படியாக 'இந்திய பெண்கள் கூட்டமைப்பு' (Women's Indian Association) என்ற அமைப்போடு தன்னை இணைத்துக் கொண்டார். அவ்வமைப்பு, திருமதி ரெட்டியைச் சென்னை மாகாண சட்டப்பேரவை உறுப்பினராக்க அப்போதைய பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தை வேண்டியது. அரசாங்கமும் அதைக் கருத்தில் கொண்டு அம்மையாரை *1926*-இல் முதல் பெண் சட்டப்பேரவை உறுப்பினராகத் தெரிந்தெடுத்தது. அப்பொழுது, உலகளவிலான பெண்ணியக்கங்கள், முத்துலெட்சுமி ரெட்டியின் அரசியல் வாய்ப்பும் ஈடுபாடும், வருங்காலத்திற்கான இந்தியப் பெண்கள் முன்னேற்றத்திற்குச் சிறந்த களனாக அமைய முடியும் என்று கருத்துத் தெரிவித்தன.

அக்கூற்றை உண்மையாக்கும் விதமாக, சட்டசபையில் பல ஆண்களிடையே ஒரே பெண்ணாய், தமிழகப் பெண்களின் உண்மையான பிரதிநிதியாக இருந்து, அவர்கள் நலனுக்காகக் குரல் எழுப்பிய திருமதி ரெட்டி, பெண்கள் சம்பந்தமான சீர்திருத்தம் மற்றும் நலசட்டங்கள் நிறைவேற்றப்படத் தூண்டுகோலாகவும், துணையாகவும் நின்றார்.

திருமதி ரெட்டி சமூக நோக்குடையவர்; குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலவாழ்வில் அதிகம் அக்கறை காட்டினார்.

இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில் திரு. வெங்கடரத்னம் என்பார் 'நடனமாடும் தாசியர் ஒழிப்பு' (Anti-nautch Campaign) என்ற போராட்டத்தைத் தொடங்கி வைத்தார். 'ரகசியத்தைக் காணலும், மேற்பூச்சு அல்லது பகட்டுத் தன்மை கொண்ட ஒழுக்கமும்' - என்ற தலைப்பில் *1901*-இல் மிக விரிவாகக் கட்டுரை எழுதியுள்ளார். அக்கட்டுரையில், நம் நாட்டில் தேவதாசியர் குலத்தை ஆதரிப்பதும், அந்தத் தொழிலைப் பாரம்பரியமாக நியாயப்படுத்துவதும் தவறு என்று சுட்டிக் காட்டினார். இப்பழக்கத்திற்குச் சாதிமுறைதான் பொறுப்பு என்றும், கலையும் இசையும் மேற்படி குலவழக்கத்திலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

*1927*-இல் சட்டசபையில் வெங்கடரத்னம் அய்யர், 'விலைமகளிர் ஒழிப்பு' மசோதா கொண்டு வந்தபோது, அதை டாக்டர் திருமதி. முத்துலெட்சுமி ரெட்டி வழிமொழிந்தார். சட்டசபையில் இம்மசோதா குறித்து அவர் பேசும்போது, இந்த மசோதாவை அமுல்படுத்துவதன் மூலம் சமுதாயத்தைச் சீரமைத்து, ஆயிரக்கணக்கான அறியாமை நிறைந்த சிறுவர் சிறுமியர்களின் மன நிலையை மாற்றி, அவர்களிடையே பால்வினை நோய்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களைத் தவறான ஒழுக்கத்திலிருந்து விடுவித்து, நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க முடியும் என்று கூறினார். மேலும், 'இளம் பெண்கள், தவறான தொழிலில் ஈடுபடுகின்ற சூழ்நிலையை மாற்றினால் அப்பெண்கள் உண்மையானவர்களாகவும், சட்டப்படி திருமணம் ஆகி நல்ல மனைவிகளாகவும், நல்ல தாய்மார்களாகவும், வீட்டிற்கும் நாட்டிற்கும் உபயோகமுள்ள குடிமக்களாகவும் மாறுவர்' என்று தீர்க்கமாக எடுத்துரைத்தார்.

தேவதாசிகள் அனைவருமே கோயில்களில் நடனமாடி, தங்களின் வாழ்க்கையை அதோடு இணைத்துக் கொண்டுள்ளனர். அவர்கள் அங்குள்ள கடவுளர்களின் மனைவிகளாகக் கருதப்பட்டனர் (பொட்டுக்

கட்டுதல்). எனவே, அவ்வப்போது கோயில்களைச் சேர்ந்த நிலங்களின் சிறுபகுதிகள் தேவதாசிகளுக்கு வழங்கப்பட்டன. அதைத் தடுக்க சட்டங்கள் இல்லை. எனவே, திருமதி. ரெட்டி, சட்டபூர்வமாக அவர்களுக்கு நிலம் வழங்கி, அதில் அவர்கள் பயனடைய வகை செய்து, அவர்களின் குலத்தொழிலை கைவிடச் செய்யலாம் என்றும் பரிந்துரைத்தார்.

பிறவியிலேயே அவர்கள் ஒழுக்கம் கெட்டவர்கள் அல்லர் என்றும், காலம் காலமாக இருந்து வந்த பரம்பரை வழக்கத்தினாலும், ஒரு குறிப்பிட்ட இனம் அல்லது மதம் தவறாகத் தழுவிய கருத்துக்களாலும் இவர்கள் தேவதாசிகள் என முத்திரைக் குத்தப்பட்டனர் என்றும் எடுத்துரைத்தார்.

'விபசார தடுப்புச் சட்டம்' சட்டசபையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது, சத்தியமூர்த்தி அவர்கள் பொதுமக்கள் கருத்தறிய வேண்டும் என்றார். திருமதி. ரெட்டி இதற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார். 'விபசாரம் என்பது சமூகக் குற்றமாகும். அதை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நசுக்குவதுதான் நல்லது' என்று எடுத்துரைத்தார். இருந்தும் அந்த மசோதா கமிட்டிக்குப் பரிந்துரைக்கப் பட்டது. அந்த கமிட்டியில் திருமதி. ரெட்டியும் உறுப்பினராக இருந்தார். அந்த கமிட்டியின் அதிகபட்ச உறுப்பினர்கள் விபசார தடைச் சட்டத்தை ஒத்துக் கொள்ளவில்லை. திரும்பவும் இம்மசோதா கமிட்டியின் சிபாரிசு அடிப்படையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, திருமதி ரெட்டி துணிவுடன், 'விபசாரம் என்பது ஆண்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியது, பெண்களுக்குப் பெருந்துன்பம் தருவது' என்று கண்டித்துரைத்தார்.

மிகுந்த விவாதத்திற்கும், எதிர்ப்புக்கும் இடையே அம்மையாரின் இடைவிடாது முயற்சியாலும் போராட்டத்தாலும் *1930*-ஆம் ஆண்டு ஜனவரி *31*-ஆம் தேதி இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

சட்டம் நிறைவேற்றப்பட்டு சுமார் ஒரு வருடத்திற்கு மேலாகியும் அரசாங்கம் அதை அமுலுக்குக் கொண்டுவராத நிலையில், திருமதி. ரெட்டியும் இந்திய மகளிர் கூட்டமைப்பின் தலைவியான திருமதி. கசின்ஸ் அம்மையாரும் உள்துறை அமைச்சர் திரு. உஸ்மான் பகதூரைச் சந்தித்து, பொதுமக்களின் நலத்தைக் கருத்தில் கொண்டு சட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தினர். திருமதி. ரெட்டியின் அம்முயற்சிக்குப் பிறகு *1931*-இல் இச்சட்டம் சென்னையில் மட்டும் அமுல்படுத்தப்பட்டது.

'விபசார தடைச் சட்டம்' கொண்டு வந்த அரசாங்கம் அத்தொழிலில் ஈடுபட்ட பெண்களின் புனர்வாழ்வுக்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை, 'தீனபந்து' என்ற பத்திரிகை, அரசாங்கம் 'விபசாரத்தில் ஈடுபட்டிருந்த பெண்களுக்கான அடைக்கல நிலையம்' தோற்றுவிக்க முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியது. 'சுவாதேசாபிமானி' என்ற பத்திரிகை 'மீட்கப்பட்ட பெண்களின் கதி என்ன?' என்று வினவியது.

திருமதி. ரெட்டி அரசாங்கத்தை எதிர்நோக்காமல் தானே முன்நின்று சில கடமைகளைச் செய்தார். சென்னையில் பல கோவில்களில் இருந்த தாசி குல பெண்களைத் திரட்டி, அவர்களுக்காக நிதி திரட்டி, அவர்களின் மறுவாழ்வுக்காகப் பாடுபட்டார். 'இந்தியப் பெண்கள் சமாஜம்' என்ற அமைப்பின் மூலம் அப்பெண்களுக்கு ஆசிரியைப் பயிற்சி, தாதி பயிற்சி, மருத்துவ பயிற்சி, தையல் பயிற்சி போன்றவைகளைக் கொடுத்து, அதன்வழி பொருளீட்டி வாழ ஏற்பாடு செய்தார். மணம் செய்ய விரும்பிய பெண்களுக்கு மணம் செய்வித்து, சமுதாயத்தில் ஏனைய பிறரைப் போல வாழ வழிவகுத்தார். *1937* வரை இப்பணியில் இடைவிடாது ஈடுபட்டு சமுதாயத்தில் அறவே தேவதாசி முறையை ஒழித்தார்.

அரசாங்கம் செய்ய இயலாத/விரும்பாத அப்பணியைத் தனி ஒரு பெண்மணியாக, அயராது நின்று சாதித்த முயற்சியால் அவர் சமுதாயத்தாரால் ஒரு சீர்திருத்தவாதியாக இனம் கண்டுகொள்ளப்பட்டார். இன்று பெண்ணிய நோக்கில் ஆய்வு செய்யும் போது அவரை ஒரு 'செயல்பாட்டுவாதியாக' (Activist) இனம் காண முடிகிறது.

தேவதாசி முறையை ஒழிக்கப் பாடுபட்ட திருமதி ரெட்டி, அக்காலப் பெண்களின் மற்றொரு பிரச்சினையான பால்ய மணத்தின் பாதிப்பை, விளைவுகளைச் சரியான சமயத்தில் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார். பல்லாயிரக்கணக்கான பால்ய மனைவி, பால்ய தாய், பால்ய விதவை இவர்களின் பிரச்சினைகளை வெளியுலகம் அறிய வைத்தார். பால்ய தாய், பால்ய மனைவி இவர்கள் அனுபவித்த கொடுமைகளை மருத்துவ ரீதியாக, டாக்டர் ஐடா ஸ்கட்டர் (Dr. Ida Scudder), டாக்டர் குக்ளர் (Dr. Kugler), டாக்டர் மெக்பெய்ல் (Dr. Macphall) இவர்களின் ஆதாரப் பூர்வமான அனுபவங்களின் மூலம் எடுத்துரைத்தார்.

குழந்தைப்பெண்கள் பால்ய மணத்தால் மிருகவெறி கொண்ட கணவர்களின் தாக்குதலுக்குப் பலியாவதையும், பால்ய தாய்மார்கள் அனுபவிக்கும் நீண்ட நேரக் குழந்தைப் பேறு வலி, கருச்சிதைவுக்கொடுமை,

இரத்த சோகை நோயால் அவதி போன்ற அவலங்களையும் எடுத்துக்காட்டி, 'பால்ய மணத்தைச்' சமூகத்தைப் பிடித்திருக்கும் நோயாகச் சுட்டிக்காட்டினார். இஃது மரபு, மதநம்பிக்கை இவற்றின் பேரால் நடக்கும் சித்ரவதை என்பதையும் துணிந்துரைத்தார்.

அவர் *1928*, மார்ச் *27* அன்று நடந்த சட்டப் பேரவைக் கூட்டத்தில் ஆண், பெண் இவர்களுக்கான திருமண வயது குறைந்த பட்சம் முறையே *21, 16*ஆக அமைந்திருக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார்; பரோடா, பரத்பூர், காஷ்மீர், மைசூர், இந்தூர் போன்ற இடங்களில் ஏற்கனவே கொண்டுவரப்பட்ட திருமண வயது பற்றிய சட்டங்களை எடுத்துக்காட்டி, தமிழ்நாட்டில் பால்ய விவாகத் தடைசட்டம் கொண்டு வர வற்புறுத்தினார்.

இச்சட்டம் நிறைவேறும்பொருட்டு, அப்போதைய ஜனாதிபதிக்கு இது குறித்து நீண்டதொரு விளக்கக் கடிதம் எழுதினார். மதத்தின்பெயரால் இழைக்கப்படும் 'பால்ய விவாகம்' என்ற சமூகக் கொடுமையிலிருந்து இளம் பெண் குழந்தைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்றும், பால்ய மணம் என்பது ஒரு பெண்ணைப் பிறப்புத் தொட்டு சாகும் வரை தொடர்ச்சியாகக் கொடுமைக்கு உள்ளாக்குகிறது என்றும், இது உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய, முக்கியமான, தேசியம் தழுவிய பிரச்சினை என்றும், இதற்கான சட்டம் கொண்டுவரப்பட்டால் லட்சக்கணக்கான நம் தேசப் பெண் குழந்தைகள் தேவையற்ற கொடுமை, காப்பாற்ற இயலாத நோய் மற்றும் சாவிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்றும் அதில் எடுத்துரைத்தார். திருமதி முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள் முன் வைத்த இக்கோரிக்கை தேசிய அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின் அது 'சாரதா சட்டமாக' நிறைவேற்றப்பட்டு சமூக அங்கீகாரம் பெற்றது.

அகில இந்தியப் பெண்கள் மாநாடு *1927*-இல் புனாவில் நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் 'பெண் கல்வி'யின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, திருமதி துர்க்காபாய் தேஷ்முக்கின் ஆந்திர மகிள சபா, பண்டித ரமாபாயின் சாரதா சதன், ரமாபாய் ராணடேயின் சேவா சதன் போன்ற அமைப்புகள் பெண் கல்வியில் அக்கறை காட்டின. திருமதி ரெட்டி அரசாங்கம் பெண் கல்வியில் அக்கறை காட்டினால், அது விரைவான வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்ற எண்ணத்தைக் கொண்டவராக இருந்தார். எனவே, *1929*-இல் சட்டசபையின் பட்ஜெட் மீது நடந்த விவாதத்தின்போது, அவர் பெண் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துப் பேசினார். நாடெங்கும்

தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் பெண்களுக்காகத் தொடங்க வேண்டும் என்று வற்புறுத்தினார். மாவட்டம் தோறும் பெண் கல்வியை முன்னேற்ற சிறு குழுக்களை (Committee) அமைக்க வேண்டினார். பெண்களுக்குக் கட்டாயக் கல்வி கொடுக்கப்பட வேண்டும் என்றும், அதற்காக அரசாங்கம் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்டாயம் ஒதுக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார். மேலும் பெண் குழந்தைகள் அதிக அளவு கல்வி கற்க முன்வரும் பொருட்டு, தொடக்கப் பள்ளிகளில் பெண் ஆசிரியைகளை வேலைக்கு எடுக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார். அரசாங்கம் இவரது கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, பெண்களுக்காக மாவட்டம் தோறும் பள்ளிகளைத் தொடங்கியது. நாட்டில் கல்வியை முன்னேற்றுவதற்காக அமைக்கப்பட்ட ஹார்டாக் கமிட்டியில் (Hartog Committee) உறுப்பினராக இருந்து பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பல அரிய ஆலோசனைகளைக் கூறிய திருமதி ரெட்டி பெண்கள் கல்விக்கு அரசாங்கத்தின் மூலம் விளக்கேற்றிய சிறப்புக்குரியவர் ஆவார்.

*1930*-இல் பம்பாயில், குடிமக்கள் ஒத்துழையாமை இயக்கத்தின் சார்பில் பெண்கள் மதுக்கடை ஏலத்தை எதிர்த்து முற்றுகைப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டனர். இதற்கு, வியக்கத்தக்க அளவில் ஒரு தூண்டுகோலாக அமைந்தவர் திருமதி ரெட்டியாவார்.

இவர், பெண்களின் விழிப்புணர்வுக்காகச் சில மாநாடுகளைத் தானே முன் நின்று நடத்தியுள்ளார். அகில இந்திய ஐந்தாவது பெண்கள் மாநாட்டை *1931*-இல் லாகூரில் தலைமை ஏற்று நடத்தினார். அம்மாநாட்டில் மார்ச்சு ஒன்றாம் தேதியைப் **பெண்கள் தினமாகக்** கொண்டாட வேண்டும் என்ற திட்டத்தை நிறைவேற்றினார்.

*1933*-இல் லண்டனில் நடந்த கூட்டு பாராளுமன்ற தேர்வு குழுவிற்கு இந்தியாவின் சார்பாகச் சென்ற மூவரில் திருமதி. ரெட்டியும் ஒருவர். அதில் அவர் வயது வந்தோர் ஓட்டுரிமைக்காகவும் பெண்களின் ஓட்டுரிமைக்காகவும் வாதாடினார். 'நாங்கள் எங்களின் தனிப்பட்ட கோரிக்கையை முன்வைக்க இங்கு வரவில்லை. எங்கள் தோழிகளான ஆங்கிலப் பெண்களிடத்து இருந்தும்கூட எதையும் கேட்க வரவில்லை. எங்களுக்குத் தேவை வயது வந்தோர் ஓட்டுரிமையும் பெண்கள் ஓட்டுரிமையும்தான்' என்று அம்மாநாட்டில் அவர் பேசியது அனைவரையும் கவர்ந்தது. இவரது தலைமையின் கீழ் இருந்த இந்திய பெண்கள்

கூட்டமைப்பின் முயற்சியால் வயது வந்தோரும் பெண்களும் ஓட்டுப்போடும் உரிமையைப் பெற்றனர்.

டாக்டர் திருமதி. ரெட்டி *1936*-இல் இவ்வமைப்பின் சார்பில் பெண்களின் வருங்காலத்திற்கான பொதுநல அறிக்கை (Status of Women in India-Political, Legal, Economic and Educational) ஒன்று தயாரித்து அரசாங்கத்திற்கு அளித்தார். அதில், பெண்களின் சமத்துவம், அரசியலில் பெண்களின் நிலை, பெண்களுக்கான சட்டப் பிரச்சினைகள், கல்வி மற்றும் பொருளாதார நிலையில் அவர்களின் மேம்பாடு இவற்றைப் பற்றிய செய்திகளும் திட்டங்களும் இடம்பெற்றன.

'அவ்வை இல்லம்' என்ற பெயரில் ஆதரவற்ற மற்றும் வழி தவறிய பெண்களுக்காக அன்னிபெசன்ட் அம்மையாரால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பை திருமதி ரெட்டி, அடையாற்றில் விரிவாக்கினார். இது இளம் பெண்களையும் குழந்தைகளையும் சமூகத் தீமையிலிருந்து காக்கும் அடைக்கல நிலையமாக விளங்கியது.

திருமதி ரெட்டி *1934*-இல் சிகாகோ நகரில் நடந்த உலக பெண்கள் ஒருங்கமைப்பின் கூட்டத்தில் கலந்து கொண்டு, அரிய உரை நிகழ்த்தினர் (World Congress of Women). இது உலக பெண்ணிய வரலாற்றில் மிகவும் போற்றப்படக்கூடியதாக அமைந்தது.

இன்று சென்னையில் இயங்கும் அனைத்து மகளிர் நல அமைப்புகளுக்கும் பின்னால் டாக்டர் திருமதி. ரெட்டியின் உழைப்பும் போராட்டமும் இருந்திருக்கிறது என்பது சரித்திரம் போற்ற வேண்டிய உண்மையாகும்.

மேற்கூறிய வரலாறு, திருமதி ரெட்டியின் பெண்களுக்கான நலவாழ்வு முயற்சிகளை விரிவாக எடுத்துரைக்கின்றது. இந்தியப் பெண்கள் குறிப்பாகத் தமிழகப் பெண்கள் இன்று 'பால்ய மணம்' என்ற அரக்கப் பிடியிலிருந்து விலகி, கல்வி கற்று, விழுமிய மாதர்களாய் விளங்கவும், தேவதாசி குலம் என்ற சமூக சாக்கடை அழிந்து, அக்குலப் பெண்கள் பிற மாதரொடு மாதராய் வாழவும் வழிகாட்டிய அம்மையார் அவர்களின் முயற்சி, அவரை ஒரு பெண்ணியவாதியாக இனம்காட்டுகிறது.

இன்றுவரை, 'இந்தியப் பெண்ணிய வரலாறு' என்பது முழு அளவில் எழுதப்படவில்லை. சிலர் ஒவ்வொரு காலகட்டத்தைப் பற்றிய குறிப்புகளை ஆங்காங்கே எழுதி வருகின்றனர். 'இந்தியப் பெண்ணிய

வரலாறு' என்ற ஒன்று முழுமையாக எழுதப்பட வேண்டும். அதில் பெண்களை மரபின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்து, அவர்கள் அந்தஸ்த்தைப் பல்வேறு நிலைகளில் உயர்த்திய திருமதி முத்துலெட்சுமி ரெட்டியை அவரைப் போன்று பெண்கள் நலனுக்காகப் பாடுபட்டவர்களைப் பெண்ணியவாதிகளாக இனம் காட்ட வேண்டும் என்பதே இக்கட்டுரை வைக்கும் வேண்டுகோளாகும்.

# விடுதலைக்கு வித்திட்ட வீரத்தமிழ் மங்கையர்

பி.என். பிரேமலதா

"இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு எழுதப்படும்போது பெண்கள் செய்த தியாகம் முதலிடம் பெறும்" - மகாத்மா காந்தி

மாறாகப் பெண்கள் பங்கு ஒரு அடிக்குறிப்பு என்ற அளவில் கூட இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றுப் புத்தகங்களில் இடம் பெறவில்லை. ஆகவே இக்கட்டுரை சுதந்திரப் போராட்டத்தில் தமிழக மகளிர் பங்கை ஆய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழக மகளிர் பண்டை காலத்தில் வீர வாழ்க்கை நடத்தியமைக்குப் பல குறிப்புகள் உள்ளன. நாட்டுப் புறக்கதைகள் தமிழகத்தில் பழங்காலத்தில் பெண்ணாட்சி இருந்ததாகத் தெரிவிக்கின்றன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் சந்திர குப்த மௌரிய மன்னனின் அவைக்கு வந்த கிரேக்க தூதன் மெகஸ்தனிஸ், பாண்டிய நாட்டில் அரசி ஒருத்தி ஆட்சி செலுத்தியதைப் பற்றித் தமது 'இண்டிகா'வில் பின்வருமாறு எழுதியுள்ளான். "முன்பு பாண்டிய நாட்டிலே பாண்டேய என்பவள் ஆண்டு வந்தாள். அப்பகுதி *365* கிராமங்கள் கொண்டது. அந்த நாடு தென் கடல் வரை பரந்திருந்தது. அவளிடம் *500* யானைகள், *4000* குதிரைகள், *18,000* ஆள்கள் கொண்ட படை இருந்தது."[1] மேலும் ஆரவல்லி, சூரவல்லி, பவளக்கொடி முதலிய கதைகள் பழங்காலத்தில் பெண்கள் ஆட்சி நடைபெற்றதை நமக்கு விளக்குவனவாய் அமைந்துள்ளன. வேதகாலத்தில் திராவிடப் பெண்கள் படையில் சேர்ந்திருந்ததாக வரலாற்றுப் பேராசிரியர்கள் சான்று காட்டுகின்றனர்.[2]

சங்க காலத்தில் கொற்றவை என்ற பெண் தெய்வம் போருக்குரிய தெய்வமாகப் போற்றப்பட்டது. மகளிர் வீரம் நிறைந்தவர்களாகக்

---

*1.* சோமலே, மதுரை மாவட்டம் (வேதாரண்யம், *1980*), பக்.*19-20*.

*2.* ச.சு. இராமர் இளங்கோ., **பாரதிதாசன் படைப்புக்கலை** (சிவகங்கை, *1983*), ப.*306*.

காணப்படினும் போர்க்காலத்திற்குப் பகைவரோடு பொருவதற்கு வாளேந்திச் செல்லும் வாய்ப்பினைத் தந்தை ஆட்சி சமுதாயம் அவர்களுக்குக் கொடுத்ததை இலக்கியச் சான்றுகள் தெரிவிக்கவில்லை. இருப்பினும் பகைவரிடமிருந்து தாய் நாட்டைக் காக்கத் தம் மக்கள், கணவர் ஆகியோரைத் தியாகம் செய்வதைப் பெருமையாகக் கருதினார்கள். வீரத்திற்கு அவர்கள் சற்றும் குறைந்தவர்கள் இல்லையென்பதை, புறநானூறு,

> "இவளுடைய துணிவு நினைக்கவே அச்சத்தைக் கொடுக்கிறது. மறக்குடிமகள் என்பது முற்றிலும் பொருத்தமே. முன்னர் நடந்த போரிலே தந்தை போர்க்களத்தில் யானையைக் கொன்று வீர மரணம் எய்தினான். நேற்று நடந்த போரில் இவள் கணவன் திரளான ஆநிரைகளைக் காத்து அப்போரிலே மாண்டான். இப்போதும் போர்ப்பறை கேட்டு மகிழ்ந்து தன் ஒரே மகனை அழைத்து அவன் குடுமிக்கு எண்ணெய் தடவி வெள்ளாடை அணிவித்து வெற்றியைத் தரும் வேலினைக் கையில் கொடுத்து போர்முனை நோக்கிச் செல்க'' எனப் போக விடுகின்றாளே, என்னே இவளுடைய வீரம் என்று வியந்து பாராட்டுகிறது.[3]

புறநானூற்றில் வேறோரிடத்தில், "போர்க்களத்தில் புறமுதுகு காட்டி ஓடாத கொள்கையினை உடைய ஒரு வீரனுடைய தாய் தன் மகன் இறந்த திறத்தைக் காணப் போர்க்களஞ் சென்றனள். அங்கு எதிர்த்த பகைவர்களைக் கொன்று முடிவில் உடல் வெட்டுண்டு வேறுபட்டுக் கிடந்த தன் மகனுடைய வீரச் சிறப்பைக் கண்டு அப்பெருமிதத்தால் அவளுடைய வற்றிய மார்புகள் மீண்டும் பாலூறிச் சுரந்தன என்று ஔவையார் கூறுகிறார்."[4]

வயது முதிர்ந்த ஒரு தாயினுடைய மகன் போர்க்களத்திற்குச் சென்றிருந்தான். அவன், பகைவர் படைகண்டு, அஞ்சி முதுகில் புண்பட்டு இறந்தான் என்று சிலர் அத்தாயிடம் கூறினர். இதைக் கேட்டவுடன், "என் மகன் முதுகில் புண்பட்டு இறந்து கிடப்பானானால் அவன் வாய்வைத்து உண்ட என் மார்பை அறுத்தெறிவேன்" என்று அத்தாய் வஞ்சினங்கூறி, போர்க்களத்திற்குச் சென்றாள். அங்கு மார்பில் புண்பட்டுத்

3. ச.சு. இராமர் இளங்கோ., **பாரதிதாசன் படைப்புக்கலை** *(சிவகங்கை, 1983)*, ப. *359.*

4. செ. பழனிச்சாமி, **புறநானூற்றில் தமிழர் பண்பாடு** *(கோவை,1989)*, ப.*74.*

தன் மகன் இறந்து கிடப்பதைக் கண்டவுடன் அவனைப் பெற்றெடுத்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சியைக் காட்டிலும் மிகுதியான மகிழ்ச்சி அடைந்தாள் என்று காக்கைப் பாடினியார் பாடுகிறார்.[5]

பெண்ணொருத்தி ஒரு தாயிடம் சென்று "உன் மகன் எங்குள்ளான்?" என்று கேட்கிறாள். அத்தாய் "புலி தங்கி விட்டுச்சென்ற குகைபோல பெற்றெடுத்த வயிறு இங்கே உள்ளது. ஆனால் அவன் போர்க்களத்தில்தான் காணப்படுவான். ஆதலால் அங்கு சென்று காண்பாயாக", என்று கூறுகின்றாள். மேலும் தன் ஒரே மகனைப் போருக்கு அனுப்பிய தாய் தன் மகன் மார்பில் வேல்பட்டு ஊடுருவிச் சென்ற புண்ணைப் புறப்புண்ணெனக் கருதி நாணிச் சூளுரைத்தது பற்றிய செய்தியும் புறப்பாடலில் காணப்படுகின்றது. எனினும் போர்க்காலத்தில் பசு, அந்தணர், நோயாளிகள், முதியோர் ஆகிய வலுவற்றவர்களுடன் பெண்களும் பாதுகாப்பான அரண்களுக்குள் சேர்க்கப்பட்டனர்.

சங்க காலத்தில் பெண்கள் நிலை மிகச் சிறப்பாக இருந்தாலும் காலப்போக்கில் தலைகீழாக மாறியது. கணவன் இறந்தவுடன் மனைவி உயிரோடு உடன்கட்டை ஏறவேண்டும். கைம்பெண் மறுமணம் ஒழுக்கக்கேடு எனக் கருதப்பட்டது. குழந்தை மணம், பொருந்தா மணம், பன்மகளிர் மணம் ஆகியவை இந்தியப் பண்பாட்டில் வலுவுடன் ஆதிக்கம் செலுத்தின. பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. ஒரு பக்கத்தில் பெண்கள் கற்பைக் காக்க வேண்டுமென்ற பேரில் பல கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். மறு பக்கத்தில் கடவுளரின் பேரில் பெண்களுக்குப் பொட்டுக்கட்டப்பட்டது. விலைமாதர்களாகப் பெண்கள் கற்பு விற்கப்பட்டது. இன்னும் பல கொடுமைகளுக்குள்ளாகிப் பெண்ணுலகம் தத்தளித்துக் கொண்டிருந்தது.

இவ்வாறாக, பெண்கள் நிலை மிக மோசமாக இருந்த போதிலும், பெண்கள் ஆட்சிப்பொறுப்பு வகித்துள்ளமைக்குப் பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. குறிப்பிடத்தக்கவர்கள் மதுரையை ஆண்ட ராணி மங்கம்மாள், ராணி மீனாட்சி, சிவகங்கை அரசியார் வேலு நாச்சியார், மற்றும் வெள்ளாச்சி நாச்சியார் ஆவார்கள்.

ராணி மங்கம்மாள் நாயக்க மரபில் வந்த பேரரசி. அவள் அமைத்த சாலைகளாலும், வெட்டிய குளங்களாலும், செப்பனிட்ட கால்வாய்களாலும், கட்டிய சத்திரங்களாலும் மங்கம்மாள் பெயர் இன்னும் மங்காமல் இருக்கிறது. சாதுரியமாக முகலாயப் பேரரசிடம் நடந்து தஞ்சை நாட்டை அவர்களுடைய படை உதவியால் மீட்டுக் கொண்டாள். திருவாங்கூரும்

5. செ. பழனிச்சாமி, *புறநானூற்றில் தமிழர் பண்பாடு* (கோவை,1989), ப.74.

இவள் ஆட்சிக்கு வந்தது. மதவெறி பிடித்த ஔரங்கசீப் வாழ்ந்த காலத்தில் ஆட்சி செய்த போதிலும் ராணி மங்கம்மாள் எம்மதமும் சம்மதம் என்ற சர்வ சமய சமரசக் கொள்கையைப் பின்பற்றி வரலாற்றில் மங்காத இடத்தைப் பிடித்தார்.

சிவகங்கை தலைநகரான காளையார் கோயிலை கிழக்கிந்திய கம்பெனியின் படை முற்றுகையிட்டபோது சிவகங்கை மன்னனின் மனைவியான வேலு நாச்சியார் வீரத்தோடு எதிர்த்ததன் மூலம் தமிழக மகளிர் வீரத்தில் குறைந்தவர்களில்லை என்பதை நிரூபித்தார். ஆங்கிலேய ஆதிக்கத்திற்கெதிராகப் போராடிய முதல் இந்தியப்பெண் என்ற பெருமையும் வேலு நாச்சியாருக்கே உரித்தாகும்.

தமிழகத்தைச் சார்ந்த தில்லையாடி வள்ளியம்மை காந்தியின் தலைமையில் தென் ஆப்பிரிக்கா போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் நீத்தது தமிழக மகளிரின் வீரத்திற்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டு.

இக்காலக் கட்டத்தில் பல சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. சமூக சீர்திருத்தவாதிகள் பெண்களுக்கெதிரான கொடுமைகளைக் கடுமையாகச் சாடினர். அதன் விளைவு *20*-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே பெண்கள் நிலையில் மாற்றம் காணத் தொடங்கியது; சட்டங்கள் இயற்றப்பட்டன; பெண் கல்வி புகட்டப்பட்டது; நான்கு சுவருக்குள் அடைபட்டிருந்த பெண்கள் வெளியுலகைப் பார்த்தனர்.

ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கெதிராக சுதந்திரப் போராட்டம் வலுப்பெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் சுதந்திரத்திற்காகப் போராடிய தலைவர்கள் பெண்களையும் தங்களோடு போராட்டத்தில் ஈடுபடுத்த வேண்டுமென்று நினைக்கவில்லை. சமூகக் கட்டுப்பாட்டிற்குள்ளாக அடைபட்டுகிடந்த தமிழக மகளிரை அரசியல் ஈர்த்தது. அன்னிபெசண்ட் என்ற அயர்லாந்து நாட்டு அம்மையாரால் காங்கிரஸின் ஆதரவோடு *1916*-இல் சென்னையில் தொடங்கப்பட்டது ஹோம் ரூல் இயக்கமாகும். இதில் பெண்களுக்கென்றே ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்திப் பெண்களுக்கு அரசியல் அறிவைப்புகட்டினார். அம்மையாரே தன் சங்கத்தின் சிறந்த அங்கத்தினர்கள் பெண்கள் என்றும், தன் அமைப்பின் பலம் பெண்களால் பத்து மடங்கு உயர்ந்தது என்றும் கூறியுள்ளார். ஆங்கில அரசை எதிர்த்து இந்தியா சுய ஆட்சி பெற வேண்டுமென்று போர்க்கொடி தூக்கியமையால் இவர் சிறைவைக்கப்பட்டார். இவர் கைது ஏராளமான பெண்களை இவர் இயக்கத்தில் சேருமாறு தூண்டியது. அதில் குறிப்பிடத்தக்கவர் சென்னையைச் சார்ந்த பம்பாய் மருத்துவ கல்லூரி மாணவி சிவகாமு

அம்மாள்.[6] அம்மையார் கைதினைக் கண்டித்து சென்னையைச் சார்ந்த சுமார் 300 பெண்கள் திருமதி. ஜுன ராஜ தாஸர் தலைமையில் செப்டம்பர் 14-ம் நாள் ஒரு பொதுக்கூட்டம் கூட்டினார். அக்கூட்டத்தில் சிவகாமு அம்மாள் சொற்பொழிவு ஆற்றினார். அதைத் தொடர்ந்து அன்னிபெசண்ட் அம்மையார் படமும், ஹோம் ரூல் கொடியும் கையில் ஏந்தித் தடை உத்தரவையும் மீறி பெண்கள் ஊர்வலமாகச் சென்றார்கள். பின்னர் அம்மையார் விடுதலை பெற்று சென்னை வந்தபோது ஏராளமான பெண்கள் அவரைச் சூழ்ந்து வாழ்த்துத் தெரிவித்தனர்.[7] இதுவே நீண்ட நாள் அமைதிக்குப் பிறகு தமிழ்ப் பெண்டிர் அரசியலில் அடி வைத்த சம்பவமாகும்.

அதே சமயத்தில் 1917-இல் சென்னையில் இந்தியப் பெண்கள் சங்கம் என்ற ஒரு தேசிய அமைப்பு பெண்கள் நலனைக் கருதி ஏற்படுத்தப்பட்டது. அன்னிபெசண்ட் அம்மையார் ஒரு சொற்பொழிவின் போது இவ்வமைப்பு எப்போதும் சுதேசிக்கும் சுயராஜ்யக் கொள்கைகளுக்கும் ஆதரவாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இந்தச் சங்கம் பெண்கள் முன்னேற்றத்தை நாட்டு சுதந்திரத்தோடு இணைத்து, பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு ஆதரவு தெரிவித்தது. ஆனால் இந்திய சுதந்திரத்தையே குறிக்கோளாகக் கொண்டுள்ள இந்திய தேசிய காங்கிரஸில் பெண்களுக்கென்று எந்தப் பணியும் கொடுக்கப்படவில்லை. இத்தருணத்தில்தான் நம் தேசத் தந்தை காந்தியடிகள் இந்திய அரசியலில் ஈடுபட்டார். அவர்தான் இந்தியப் பெண்களுக்கும் சுதந்திரப் போராட்டத்திற்கும் ஒரு திடமான இணைப்பை உண்டு பண்ணினார்.

காந்தியின் போராட்டம் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டது. அதற்கு உடல் சக்தி தேவையில்லை. மன உறுதியே போதும். காந்தி பெண்களுக்கு ஏராளம் மன உறுதி இருப்பதாகக் கருதினார். அதன் முதல் படியாக காந்தி தன் மனைவி கஸ்தூரிபாய் காந்தியை தென் ஆப்பிரிக்கா சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுத்தினார்.

1920-ஆம் ஆண்டு காந்தியின் தலைமையில் இந்தியா ஒத்துழையாமை இயக்கத்தைத் தழுவியது. காங்கிரஸ் திட்டங்களான அந்நியத் துணிகளைப் புறக்கணித்தல், அத்துணிக் கடைகள் மற்றும் மதுபானக் கடைகள் இவற்றுக்குமுன் மறியல் செய்தல், கதர்த்துணி நெய்தல்

6. இருவார அறிக்கை (Fortnightly Report) 17 ஆகஸ்ட், 1917.

7. இருவார அறிக்கை (Fortnightly Report) 5 அக்டோபர் 1917.

போன்றவற்றில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டார்கள். தமிழகத்தில் மதுபானக்கடைகள் மறியல் போராட்டத்தில் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் மனைவி நாகம்மாளும் அவர் சகோதரி கண்ணம்மாளும் முன்னணி வகுத்தனர்.[8]

இவ்வியக்கத்தில் இன்னொரு அம்சம் கதர் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் அந்நிய துணிகளைப் புறக்கணித்து அரசுக்குப் பெரும் நஷ்டத்தை உண்டுபண்ண வேண்டுமென்பதோடு நம் மக்கள் பொருளாதாரத் தன்னிச்சை பெற வேண்டும் என்பதாகும். இதை மிகச் சிறப்புடன் நிறைவேற்றியவர் மதுரையைச் சார்ந்த பத்மாசனி அம்மாள் ஆவார். தனக்குச் சாப்பாட்டிற்குப் போதிய வசதியிருந்தும் காலையிலெழுந்து நூல் நூற்று அதில் வரும் வருமானத்தைக் கொண்டுதான் சாப்பிடுவார். மாலையில் வீடு வீடாகச் சென்று கதர் விற்பார். கதர் விற்பதும் வாங்குவதும் தண்டனைக்குரிய செயல்களாக இருந்தும், அரசின் ஆணையை மீறி அரசாங்க உத்தியோகஸ்தராயிருந்தாலும் கண்டிப்பாக ஒரு கஜம் துணியாவது வாங்கும் படி செய்துவிடுவார். இவர் ஏராளமான தேசிய சொற்பொழிவுகள் ஆற்றி, தமிழ் மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியதோடு ஐநூறுக்கும் மேற்பட்ட பெண்களைக் காங்கிரஸ் அங்கத்தினர்களாகவும் ஆக்கினார்.[9]

ஆம். அம்மையாரின் சலியாத உழைப்பே தமிழக மக்களைத் தட்டி எழுப்பியது. தமிழகத்தைச் சார்ந்த முஸ்லீம் மகளிரும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் திருச்சி மாவட்டத்தை சார்ந்த மரியம் பீபி ஆவார். இவர் நாகபுரி கொடி சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதனால் கைதாகி ஆறு மாதம் சிறை வைக்கப் பட்டார்.

பின்னர் *1927*-இல் சென்னையில் நடந்த நீல் சிலை சத்தியாகிரகத்தில் அங்கச்சி அம்மாள், அஞ்சலையம்மாள் மற்றும் அம்மா கண்ணு அம்மாள் என்ற *12* வயது சிறுமியும் கலந்து கொண்டு சிலையை உடைக்க முயன்றதால் கைதாகிச்சிறைவைக்கப்பட்டனர்.[10] இச்சத்தியாகிரகம் சைமன் குழு சென்னை வருகையை முன்னிட்டு நிறுத்திவைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சைமன் குழு எதிர்ப்பு நடவடிக்கைகளை முதலில் எடுத்தவர் அன்னி பெசன்ட் அம்மையார் அவர்களே. நவம்பர் *1927*-ஆம் ஆண்டு, சென்னையில், பெண்கள் அடங்கிய குழு ஒன்றை, சைமன் குழுவை

8. சுதேச மித்ரன், *13* பிப்ரவரி *1922*, ப*177* (Madras Native Newspaper Report).

9. மதுரை ஸ்ரீநிவாஸவரதன் வாக்குமூலம் அரசியல் பிரசித்தி பெற்றவர்கள் வாக்குமூலம் ப*2* (Personal Statement of Political Personalities).

10. அரச ஆணை எண் *2852*, பொதுப் பணித்துறை, *7* டிசம்பர் *1927*.

எதிர்க்கும் பணிக்காகத் தோற்றுவித்தார்.[11] மேலும் ஏராளமான சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அவற்றில் யாமினி பூர்ண திலகம்மா, திருமதி மாசிலாமணி, திருமதி ருக்மணி லட்சுமிபதி மற்றும் பலர் சைமன் குழுவை எதிர்த்துச் சொற்பொழிவாற்றினார்கள்.[12] சென்னையைச் சார்ந்த இந்தியப் பெண்கள் அமைப்பும் சைமன் குழுவை இரண்டு காரணங்களுக்காக எதிர்த்தது. ஒன்று அக்குழுவில் இந்தியர்கள் இடம்பெறாதது. மற்றொன்று பெண்கள் இடம் பெறாதது.

ஆனால் பெண்கள் அதிக அளவு நேரடியாக ஈடுபட்ட போராட்டம் சட்ட மறுப்பு இயக்கமாகும். சட்ட மறுப்புப் போராட்டத்தின் முக்கிய அம்சம் உப்பு சத்தியாகிரகம். தஞ்சாவூரில் உள்ள வேதாரண்யம் கடற்கரையில் நடந்த உப்பு சத்தியாகிரக போராட்டத்தில் மற்ற சத்தியாகிரகிகள் கைதான போது சத்தியாகிரகிகளின் ஒரே பெண் தொண்டரான ருக்மணி லட்சுமிபதி அவர்கள் தலைமை வகித்தார். இவர் இருநூறு ஆண் சத்தியாகிரகிகள் மத்தியில் ஒரே பெண். முகாமில் ஆண்களுடனேயே தங்குவார். இவர் அரசு உத்தியோகஸ்தர்கள் வசிக்கும் பகுதிகளுக்குச் சென்று அவர்கள் அரசாங்கத்திடம் கொண்டுள்ள பற்று குறைந்து தேசபத்தி ஏற்படும் வகையில் துண்டு பிரசுரங்கள் வழங்கினார்.[13] சத்தியாகிரகத்தை அடக்குவதற்காக, மே மாதம் 14-ஆம் நாள் அம்மையார் அவர்கள் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் சாதாரண சிறைத் தண்டனையில் தஞ்சாவூர்ச் சிறையில் வைக்கப்பட்டார்.[14] காந்தியடிகள் உப்பு சத்தியாகிரகத்தின் முக்கிய அம்சம் பெண்கள்தான் என்றும், குறிப்பாக, சென்னையைச் சார்ந்த ருக்மணி லட்சுமிபதி என்றும் குறிப்பிடுமளவிற்கு இவர் சிறப்பாக சத்தியாகிரகத்தை நடத்தினார்.

வேதாரண்யத்தில் சத்தியாகிரகம் நடந்துகொண்டிருந்தபோது சென்னை நகரிலும் தி. பிரகாசம் அவர்கள் தலைமையில் உப்பு சத்தியாகிரகம் நடந்தது. சத்தியாகிரகத்தை அடக்குவதற்காக அரசு உடனே அவரை கைது செய்தது. அதன் பிறகு துர்காபாய் அம்மாள் என்ற பெண் தொண்டர் தலைமை ஏற்று, உதயவரம் என்ற இடத்தில் முகாம் ஏற்படுத்தினார்.[15] அம்மையார் ஏப்ரல் 25-ஆம் நாள் நூறு தொண்டர்களுடன் சென்னை கடலில் உப்பு காய்ச்சுவதற்காக

11. நியூ இந்தியா, 7 நவம்பர், 1927.
12. இந்து, 2 பிப்ரவரி, 1928.
13. சட்ட மறுப்பு இயக்கம் 1930-31 (இரகசியமானது) பக்.164-165, (Civil Disobedience Movement).
14. யங் இந்தியா, 22 மே 1930 (Young India).
15. இந்து, 4 ஜூன், 1930.

ஊர்வலமாகப் புறப்பட்டபோது போலீஸ்படை அவர்களை முன்னேறவிடாமல் தடுத்தது.[16] பின்னர் மே மாதம் இரண்டாம் நாள் இவ்வம்மையார், கிருஷ்ணம்மா, மேலும் சில பெண்கள் உப்புச் சட்டத்தையும், தடையுத்தரவையும் மீறிச் சென்னை சாந்தோம் கடற்கரையில் உப்புக் காய்ச்சத் தொடங்கியபோது போலீஸார் அவ்வுப்புப்பானைகளை உடைத்ததோடு கூட்டத்தையும் கலைத்தனர்.[17] அதன்பின் துர்காபாய் அம்மையார் வட ஆற்காட்டிற்கு சென்று ஏராளமான சொற்பொழிவுகள் ஆற்றினார். பின்னர் மே மாதம் *25*ஆம் தேதி உப்புச் சட்டத்தை மீறி உப்புக் காய்ச்சினார்.[18] இதனால் அடுத்த நாளே கைது செய்யப்பட்டு ஒன்பது மாதம் சிறை தண்டனை அடைந்தார்.[19] இதனைக் கண்டித்து ஆற்காடு மற்றும் வேலூர் பகுதிகளில் பெரும் கலவரம் மூண்டது.[20] உப்புச் சத்தியாகிரகம் கடற்கரைப் பகுதிகளில் மட்டுமே நடத்த முடிந்ததால் ஏராளமான மக்கள் கலந்து கொள்ள முடியவில்லை. அதையும் அரசு தீவிர செயல்களால் அடக்கியது. உடனே காந்தியடிகள் விருப்பத்திற்கிணங்கக் கல்லூரி, கல்விக் கூடங்கள், அந்நிய துணிக் கடைகள், மதுபானக் கடைகள் இவற்றின் முன் மறியல் செய்யும் போராட்டத்திலும் கதர் உற்பத்தியிலும் பெண்கள் ஈடுபட்டனர். இவர்கள் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம் லத்தியாலும், சிறை தண்டனையினாலும் ஒடுக்கியது. இத்தண்டனைகளையெல்லாம் பொருட்படுத்தாது பெண்கள் மேலும் தீவிரமாகப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இவைகளில் குறிப்பிடத்தக்கது அந்நியத் துணிக்கடைகள் மறியல் போராட்டமாகும். இதில் முதன்மை வாய்ந்தவர் சென்னையைச் சார்ந்த எஸ். அம்புஜம்மாள் மற்றும் ஞானம்மாள் ஆவார்கள். இவர்களுள் இதர பெண்களும் சென்னையில் ரட்டன் பஜாரில் உள்ள விதேசி துணிக்கடைகளின் முன்னால் மறியல் செய்தார்கள். இதைத் தடுப்பதற்காக இவர்கள் மீது ரப்பர் குழாய் மூலம் சாக்கடை நீர் வீசியடிக்கப்பட்டது. அப்போதும் அச்சமில்லாமல் தொடர்ந்து மறியல் செய்து கைதானார்கள்.[21]

மற்றொரு அம்சமான கல்லூரி மறியல் போராட்டத்தை டாக்டர் பிச்சை முத்து அம்மாள் *1930*-ஆம் வருடம் செப்டம்பர் மூன்றாம் நாள்

---

*16.* இருவார அறிக்கை, *6* மே *1930;* உதவி செயலாளர் பத்திர கோப்பு எண்*683*ஏ, *30* ஏப்ரல் *1930.*

*17.* யங் இந்தியா, *8* மே *1930.*

*18.* சட்ட மறுப்பு இயக்கம் *1930-31,* ப.*67.*

*19.* இருவார அறிக்கை *4* ஜுன், *1930.*

*20.* சட்ட மறுப்பு இயக்கம் *1930-31,* ப.*67.*

*21.* தளவாய், சுதந்திர போராட்ட தியாகி சொற்பொழிவு, *14* ஆகஸ்ட், *1992,* அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்.

தொடங்கினார். இதனால் கைது செய்யப்பட்டு ஆறு மாதம் சிறைத் தண்டனை அனுபவித்தார். இதைக் கண்டித்து ராணி மேரிக் கல்லூரியைச் சார்ந்த மாணவிகள் கல்லூரியைப் புறக்கணித்தனர்.[22] வா.வே.சு. ஐயர் மனைவி பத்மாவதி அம்மாவும் வேறு சில பெண்களும் தடை உத்தரவை மீறித் தேசிய கொடி வணக்கம் செய்தமையால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டனர்.

பின்னர் *1940*-இல் நடந்த சத்தியாகிரகத்தில் தமிழகத்தைச் சார்ந்த அனைத்து மாவட்டங்களிலும் பல பெண்கள் பங்கு கொண்டு சிறை சென்றனர். அவர்களுள் மதுரையைச் சார்ந்த சொர்ணம்மாள் மற்றும் செல்லம்மாள் பொதுக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றியமைக்காகக் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டனர். தூத்துக்குடியைச் சார்ந்த சி.ஆர். சாரதாம்பாள் அம்மாள் மற்றும் கரூரைச் சார்ந்த பியாரி பீபி, *1941*ஆம் ஆண்டு சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதற்காகக் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டனர். சரஸ்வதி பாண்டுரங்கம் மிகத் தீவிரமாக சத்தியாகிரகத்தில் ஈடுபட்டமையால் கைது செய்யப்பட்டு ஆறு மாத சிறைத்தண்டனை அடைந்து வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். இதனால் இவருடைய இரண்டு வயது மகளையும் ஆறு மாத மகனையும் இழந்தார்.

சுதந்திரப் போராட்டத்தின் கடைசி அத்தியாயம் *1942*-ல் நடந்த 'வெள்ளையனே வெளியேறு' போராட்டமாகும். இப்போராட்டத்தின் முக்கிய அம்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம். அந்தோணி அம்மாளும் பேச்சியம்மாளும் பங்கஜ மில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கு பெற்றமைக்காகக் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் காவலில் வைக்கப்பட்டார்கள். கோயம்புத்தூரைச் சார்ந்த குட்டியம்மாள் மற்றும் சோலையம்மாள் ரயில் தண்டவாளத்தைத் தகர்க்க முனைந்தமையால் கைது செய்யப்பட்டு முறையே மூன்று மாதம், ஆறு மாதம் தண்டனை அடைந்து கோயம்புத்தூர் சிறையில் வைக்கப்பட்டார்கள். சென்னையில் உள்ள அனைத்து கல்லூரி மாணவிகளும் வகுப்பறைகளைப் புறக்கணித்து, போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

தமிழக மகளிர் தமிழகத்தில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் சென்று இந்திய சுதந்திரத்திற்காகப் போராடிய நிகழ்ச்சிகள் உண்டு. குறிப்பிடத்தக்கவர் குடும்பத்தோடு மலேசியாவிற்குச் சென்ற வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த கோவிந்தம்மாள் என்ற வீராங்கனை. இவர் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் இந்திய ராணுவத்தில் சேர்ந்து இந்திய விடுதலைக்காக அரும்பாடுபட்டவர். இவர் இந்திய சுதந்திரத்திற்காக

22. உதவி செயலாளர் பத்திர கோப்பு எண்.*699*, ஜி.*1930*.

தன் ராணுவத்திற்கு நிதி கொடுங்கள் என்று நேதாஜி கூறியதைக் கேட்டு உணர்ச்சி வசப்பட்டு தான் போட்டிருந்த ஆறு பவுன் வளையல்களைக் கழற்றிக் கொடுத்தார். மீண்டும் நேதாஜி பாரத நாட்டுக்காக ராணுவப் படையில் அணிதிரளுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தவுடன் தனக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் ரப்பர் தோட்டத்தை இந்திய தேசிய ராணுவத்திற்கு நன்கொடையாகக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், மகளிருக்கென்று அமைந்த 'ஜான்ஸிராணி ரெஜிமெண்ட்'டில் சிப்பாயாகச் சேர்ந்தார். *1000* பெண்கள் கொண்ட அப்படையில் முதலில் *100* பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்குப் பலரகத் துப்பாக்கிகளைச் சுடும் பயிற்சி தரப்பட்டது. அப்படி முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட *100* பேரில் கோவிந்தம்மாளும் ஒருவர். இவருடைய நேர்மையைப் பாராட்டி நேதாஜி இவருக்கு 'லாண்ட்ஸ் நாயக்' என்று பதவி உயர்வு அளித்தார். *1945*-வரை இவர் அந்த இராணுவத்தில் பணியாற்றினார்.[23]

ஜனவரி *1943*-ல் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் ராதாபாய் சுப்பராயன் தலைமையில் தேசிய கொடியை உயர்த்தி வந்தே மாதரம் பாடி சுதந்திர தினம் கொண்டாடினார்கள். அதனால் ராதாபாயும் அவருடன் இருந்த தமயந்தி என்ற பெண்ணும் கைது செய்யப்பட்டு மூன்று மாதம் சிறையிலடைக்கப்பட்டனர்.

அம்மு சுவாமிநாதனும், மஞ்சுபாசினியும் சென்னையில் ஊர்வலங்கள், கடையடைப்புகள் மற்றும் சொற்பொழிவுகள் நடத்த காரணமாக இருந்தனர். அவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகளிலிருந்து இந்தியா சுதந்திரமடைய வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் தங்களைப் போராட்டங்களில் அர்ப்பணித்த தமிழக மங்கையர்களின் வீரப் போராட்டம் நமக்குத் தெளிவாகிறது. சமூகக் கட்டுப்பாடுகளையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு வீராவேசத்துடன் வெளிவந்து விடுதலைக்கு வித்திட்ட இவ்வீர மகளிர் வரலாறு தமிழக வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும்.

*23.* ஆனந்த விகடன், *23* ஜனவரி *1994*.

# சமூக மதிப்புகளும் மகளிரும்

**ச. முத்துச் சிதம்பரம்**

ஒரு சமுதாயத்து மக்களின் வாழ்க்கை முறைகளை வகுப்பதிலும், வழி நடத்துவதிலும், மாற்றங்களுக்கு வழிவகுப்பதிலும் அச்சமூகத்தில் நிலவிவரும் மதிப்புகள் பெரும்பங்கு வகிக்கின்றன. இக்கட்டுரை தமிழக மகளிரின் வாழ்வைக் கட்டுப்படுத்தும் சமூக மதிப்புகளை ஆராய முற்படுகின்றது.

## 1. சமூக மதிப்புகளுக்கும் மக்களின் வாழ்க்கை முறைக்கும் உள்ள தொடர்பு பற்றிய கோட்பாடுகள்

ஒரு சமூகத்தில் நிலவும் மதிப்புகளுக்கும் அச்சமூக மக்களின் வாழ்க்கை முறைக்கும் உள்ள தொடர்பினைச் சமூகவியலார் கோட்பாடுகளின் மூலம் விளக்க முற்படுகின்றனர். இதில் இரு முக்கிய அறிஞர்களின் கோட்பாடுகள் குறிப்பிடத்தக்கவை.

முதலாவதாக, கார்ல் மார்க்சின் கருத்துப்படி, ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறை அச்சமூகத்தில் பொருட்கள் உற்பத்தி செய்யும் முறைமையைப் பொறுத்து அமையும். பொருளுற்பத்தி என்பது உற்பத்தியின் உந்துதல்கள், உற்பத்தியில் நிலவும் உறவுமுறைகள் என இரு பகுதிகளைக் கொண்டது. கார்ல் மார்க்சின் கருத்துப்படி, ஒரு சமூகத்தின் பொருளாதாரந்தான் அச்சமூகத்தின் அடிப்படை அமைப்பாகும் (Basic Structure). இவ்வமைப்பு அச்சமூகத்தின் மதிப்புகளை வரையறை செய்து, அச்சமூகத்தினரின் உணர்வுநிலைகளையும் (Conciousness) கட்டுப்படுத்துகின்றது. சமூக மதிப்புகளும் அவைபற்றிய கோட்பாடுகளும் பொருளாதாரம் என்ற அடிப்படை அமைப்பின்மேல் எழுப்பப்பட்ட மேல் அமைப்புகள் (Super Structure) என கார்ல் மார்க்சு குறிப்பிடுகின்றார். மேலும் ஒரு சமூகத்தில் பொருளுற்பத்தி செய்யும் முறை அம்மக்களிடையே

வர்க்கப் பிரிவுகளையும் உருவாக்குகின்றது. இது பொருட்களை உரிமை கொள்ளும் வர்க்கம், உழைக்கும் வர்க்கம் என இரு பெரும்பிரிவுகளாக விளங்கும். பழங்காலத்தில் உழைக்கும் வர்க்கத்தினர் அடிமைகளாகவும், நிலவுடைமைச் சமுதாயத்தில் பண்ணையாட்களாகவும், முதலாளித்துவ சமுதாயத்தில் தொழிலாளிகளாகவும் தொடர்ந்து வருகின்றனர். ஒருகால கட்டத்தில் நிலவும் வலிமைமிக்க மதிப்புகளும், கோட்பாடுகளும் அக்கால கட்டத்தில் ஆட்சி செலுத்தும் வர்க்கத்தின் கோட்பாடுகளாகவே விளங்கும். இவை அவ்வர்க்கத்திற்குப் பயனளிப்பவைகளாகவும் இருக்கும். ஆயின் இக்கோட்பாடுகள் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக அமையப்பெற்று செயற்படுவது போன்று தோற்றமளிக்கும். இது ஒரு மாயையான உணர்வுநிலை என்கின்றார் மார்க்சு. இந்நிலையை மாற்ற ஒரு புரட்சி நிகழவேண்டும்; இப்புரட்சி அச்சமூகக் கோட்பாடுகளைப் புரட்சிகரமாக மாற்றுவதன் மூலமே நிகழும். இதைத் தாழ்த்தப்பட்ட வர்க்கமே செயற்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இரண்டாவதாக, இக்கருத்துக்களுக்கு மாறாக, மார்க்வெப்பர் என்னும் சமூகவியல் வல்லுனர் ஒரு சமூகத்தில் வழங்கும் மதிப்புகளும் கோட்பாடுகளும் அச்சமூக மக்களின் வாழ்வை - அச்சமூகத்தின் பொருளாதாரமும் இதில் அடங்கும் - வரையறை செய்கின்றன என்று குறிப்பிடுகின்றார். இக்கருத்தை அவர் தனது "ப்ராட்டஸ்டாண்ட் ஒழுக்கவியலும் முதலாளித்துவத்தின் உயிர்நாடியும்" என்ற ஆய்வின் மூலம் எடுத்துரைக்கின்றார். இதில் அவர் ப்ராட்டஸ்டாண்ட் மதத்தில் உள்ள புதிய சமூக மதிப்புகள் ஐரோப்பாவில் முதலாளித்துவம் உருவாக எவ்வாறு காரணமாக விளங்கின என்பதையும் விளக்குகின்றார். மேலும் இந்து மதம், கன்பூசிய மதம், கத்தோலிக்க மதம், ப்ராட்டஸ்டாண்ட் மதம் முதலிய மதங்களின் மதிப்புகள் அவை அக்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டுவந்த சமூகத்தின் வாழ்வை எவ்வாறு பாதித்தன என்பதனையும், அம்மதிப்புகள் அச்சமூகத்தின் பொருளாதார மாற்றத்திற்கு எவ்வகையில் துணையாகவும் தடையாகவும் இருந்தன என்பதனையும் ஆய்வின் மூலம் விளக்குகின்றார். இதன்மூலம் ஒரு சமூகத்தில் நிலவும் மதிப்புகள் அச்சமூகத்தின் வாழ்க்கை முறைகளை வரையறுக்கின்றன என்றும், அச்சமூக மாற்றங்களுக்கு உறுதுணையாகவும், தடையாகவும் இருக்கின்றன என்றும் விளக்குகின்றார்.

இவ்வாறு மேற்குறிப்பிட்ட அறிஞர்கள் இருவரும் சமூக மதிப்பிற்கும் பொருளாதார மாற்றத்திற்கும் உள்ள தொடர்புகளைப் பற்றி எதிர்மறையான கருத்துக்களைக் கூறினாலும் ஒரு காலகட்டத்தில் ஒரு சமுதாயத்தில்

வழக்கில் இருக்கும் மதிப்புகள் அச்சமுதாய மக்களின் வாழ்க்கை முறைகளைக் கட்டுப்படுத்துகின்றன என்பதனை ஒப்புக் கொள்கின்றனர்.

இக்கட்டுரை தமிழ்ச் சமுதாயத்தில் வழங்கும் மதிப்புகள் தமிழக மகளிரின் வாழ்க்கை முறைகளை எவ்வாறு வரையறை செய்கின்றன என்று ஆராய முற்படுகின்றது. இக்கட்டுரையில் விவரிக்கப்படும் சமூக மதிப்புகள் தமிழ்நாட்டிற்கு மட்டுமன்றிப் பெரும்பாலான இந்திய மகளிருக்கும் பொதுவானவைகளாகும்.

இக்கட்டுரையின் முற்பகுதியில் இச்சமூக மதிப்புகள் தமிழகக் கிராமங்களில் வாழும் மகளிரின் வாழ்வை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பது விளக்கப்படுகின்றது. கிராம மக்களின் வாழ்வை அடிப்படையாகக் கொள்வதற்கு முக்கிய காரணம் இந்தியாவில் இன்னும் 70 சதவிகிதத்திற்கும் மேற்பட்டவர்கள் கிராமங்களிலேயே வாழ்கின்றனர் என்பதாகும். அதனால் கிராம மகளிரின் வாழ்வை வரையறை செய்யும் சமூக மதிப்புகள் இந்தியாவின் பெரும்பான்மையான மகளிரின் வாழ்வை வரையறை செய்யும் மதிப்புகள் என்று உணர வேண்டும். மேலும் கிராமங்களே ஒரு சமுதாயத்தின் தொன்றுதொட்ட கலாசாரத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஆயின் மாறிவரும் சமுதாயத்தில் சமூக மதிப்புகளும் மாறுவது அச்சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டும். அவ்வாறான மாற்றங்கள் சமூகத்தில் மேல் நிலையிலுள்ள மகளிரின் வாழ்வில் முதலில் நிகழ்கின்றன. அத்தகைய மகளிர் சிறுபான்மையினரே ஆவர். அவர்கள் பெரும்பாலும் நகரங்களில் வாழ்கின்றனர். அவ்வாறான மகளிரின் வாழ்வைக் கட்டுப்படுத்தும் சமூக மதிப்புகளும் பிற்பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

## 2. தமிழக மகளிரின் வாழ்வை வரையறை செய்யும் சமூக மதிப்புகள்

தமிழக மகளிரின் வாழ்வை வரையறை செய்யும் சமூக மதிப்புகளைத் தமிழ் இலக்கியங்கள் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு விதமாகச் சித்திரிக்கின்றன. ஆயின் அக்கால கட்டத்தில் தமிழக மகளிரின் நடைமுறை வாழ்வில் அச்சமூக மதிப்புகளின் செயற்பாட்டின் பங்கென்ன என்பது ஆராயப்பட வேண்டிய கருத்தாகும். அவ்வாய்வுக்கு அக்காலகட்ட மகளிரின் நடைமுறை வாழ்வு பற்றிய தகவல்கள் தேவை. அத்தகவல்கள் கிடைக்காதவரைத் தமிழ் இலக்கியங்களில் சித்திரிக்கப்படுகின்ற சமூக மதிப்புகள்தான் நடைமுறையில் மகளிரின் வாழ்விலும் கடைப்பிடிக்கப்பட்டு

வந்தன் என்று கூறுவது தவறான முடிவாகும். இக்கருத்தைத் தற்காலத்தில் மக்கள் தொடர்புச் சாதனங்களில் மகளிர் சித்திரிப்பு பற்றிய ஆய்வு முடிவுகள் வலியுறுத்துகின்றன. தற்காலத்தில் மக்கள் தொடர்புச் சாதனங்களில் பெண்மைச் சித்திரிப்பையும் மகளிரின் நடைமுறை வாழ்வையும் ஒப்புநோக்கி ஆராயும் மகளிரியல் வல்லுநர்கள் பலரும் மக்கள் தொடர்புச் சாதனங்கள் மகளிரின் நடைமுறை வாழ்வைச் சித்திரிக்க வில்லை என்ற முடிவுக்கே வந்துள்ளனர். மக்கள் தொடர்புச் சாதனங்கள் மகளிரைக் குறைகளும் நிறைகளும் அமையப்பெற்ற சாதாரண மனிதர்கள் என்ற நோக்கில் சித்திரிக்காமல் இரு மாறுபட்ட குணங்களைக் கொண்ட வகையினராகச் சித்திரிக்கின்றன. ஒரு வகையினர் நற்குணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற தெய்வங்களாகவும் மறு வகையினர் தீய குணங்கள் அனைத்தும் நிறைந்த கொடியவர்களாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். இவை ஆண்களின் நோக்கில் பெண்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்ற குறிக்கோள்களையே படம்பிடித்துக் காட்டுகின்றன. இவை ஆண்நாயக மதிப்புகளை வலியுறுத்தும் சாதனங்களாகும். இதற்கு மக்கள் தொடர்புச் சாதனங்கள் அனைத்தும் ஆண்களின் கட்டுப்பாட்டில் இருப்பது ஒரு முக்கிய காரணமாகும். அதனால் மக்கள் தொடர்புச் சாதனங்களில் ஒன்றான இலக்கியங்கள் காட்டும் மகளிர் பற்றிய சமூக மதிப்புகளின் மூலம் எவ்வளவு தூரம் அவர்களது நடைமுறை வாழ்வை அறிந்து கொள்ள முடியும் என்பது ஆய்வுக்குரிய கருத்தாகும். இதற்குமாறாக மகளிரின் நடைமுறை வாழ்க்கையைக் கள ஆய்வின் மூலம் தரவுகள் திரட்டி, ஆராய்ந்து, அம்முடிவுகளின் மூலம் மகளிரின் வாழ்வை வரையறை செய்யும் சமூக மதிப்புகளை அறிந்து கொள்வதே சரியான முறையாகும். இவ்வாய்வுகளில் இதுவரை இடம்பெறாத இச்சமூக மதிப்புகள் பற்றிய மகளிரின் கண்ணோட்டத்தையும் ஒருங்கிணைத்துக் காண்பது இம்மதிப்புகள் பற்றிய முழுமையான அறிவை நல்கும்.

மேலைநாடுகளிலும் கீழை நாடுகளிலும் மகளிரியல் விரிவடைந்து கடந்து இருபதாண்டு காலமாக மகளிரைப் பற்றி பல்வேறு துறைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாய்வுகள் மகளிரின் தாழ்நிலைக்குக் காரணம் சமுதாயத்தில் மகளிரின் வாழ்வைக் கட்டுப்படுத்தும் சமூக மதிப்புகளே எனக் கூறினாலும் அச்சமூக மதிப்புகளை முதன்மையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

குறைவு. அவற்றில் துருவராஜன் (Dhruvarajan, 1989), கலைச்செல்வி (Kalaiselvi, 1989) ஆகிய இருவரும் மேற்கொண்ட ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை இவற்றையும் மற்ற ஆய்வுகளையும் ஆதரமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.

இவர்களின் கருத்துப்படி இந்தியப் பெண்களின் வாழ்வில் இரு நிலைகளே முக்கிய இடம் பெறுகின்றன. அவை மனைவி, தாய் என்ற நிலைகள். இவ்விரு நிலைகளின் மூலம்தான் ஒருபெண்ணுக்கு சமூகத்தில் வாழும் தகுதியே கிடைக்கின்றது. அதனால் மகளிரின் மனைவி, தாய் என்ற இவ்விருநிலைகள் குறித்த சமூக மதிப்புகள் மிகவும் முக்கியமானவை. பெண்களின் வாழ்வை வரையறை செய்யும் மற்ற சமூக மதிப்புகள் அனைத்தும் இவ்விரு நிலைகள் குறித்த மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்து இவ்விரு நிலைகளையும் வலுப்படுத்துவதாக அமைகின்றன எனக் குறிப்பிடுகின்றனர். அதனால் இவ்விரு நிலைகள் குறித்த சமூக மதிப்புகள் முதன்மையாக ஆராயப்படுகின்றன.

## 21. கற்பு என்னும் கோட்பாடு

கற்பு என்னும் மதிப்பு காலங்காலமாக புராண இதிகாச காலம் முதல் இன்று வரை பெண்களின் வாழ்வில், அதுவும் குறிப்பாகத் தமிழக மகளிரின் வாழ்வுக்கு இலக்கணமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இதைப் பற்றி ஆராய்ந்த வல்லுனர்கள் பெண்களின் கற்பைப் பற்றிய மதிப்புகள் இந்தியாவில் சாதி, மதம், இனம், மாகாணம் என்ற எல்லைகளைக் கடந்து, மகளிரின் வாழ்வைக் கட்டுப்படுத்தும் முக்கிய மதிப்பாக வழங்கிவருகின்றது என்று குறிப்பிடுகின்றனர். இந்த மதிப்பைக் குறித்த ஆய்வு ஒன்று கர்நாடக மாநிலத்தில் முசிலி என்னும் கிராமத்தில் நிகழ்த்தப்பட்டது (Dhruvarajan, 1989). இதில் கூறப்படும் பல முடிவுகளைத் தமிழ்நாட்டிலுள்ள இருளக்குறிச்சி என்னும் கிராமத்தில் நிகழ்த்தப்பட்ட ஆய்வும் (Kalaiselvi, 1989) உறுதி செய்கின்றது.

கற்பு என்னும் கோட்பாடு அம்மகளிரின் உணர்வு நிலையில் எவ்வாறு உணரப்படுகின்றது என்பதனை ஆய்வாளர் (Dhruvarajan, 1989) விளக்குகின்றார்:

> ஒரு பெண் வாழ்நாள் முழுவதும் தன் கணவனுக்கு
> உண்மையுள்ளவளாக, அவனுக்கு அடிபணிந்து

நடந்து, அவன் தேவைகளை எல்லாம் நிறைவேற்றி, அவனுக்குக் குழந்தைகளைப் பெற்று, அவர்களை வளர்த்து ஆளாக்குவதாகும். இதை இன்னும் விளக்கமாக அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர்; ஒரு பெண் தன் கணவனின் கருத்துக்களோடு ஒத்துப்போக வேண்டும். அவள் கணவன் அவளிடம் உண்மையாக இருப்பினும் இல்லாவிடினும் அதைப் பற்றி அவள் கவலை கொள்ளக்கூடாது. தான் இன்னலுறும் பொழுது தன் கணவன் தன்னைக் கவனிக்க வேண்டுமென எதிர்பார்க்கக்கூடாது. தன்னுடைய விருப்பு வெறுப்புகளைத் துறந்து அவனைத் தவிர பிற ஆடவரை ஏறெடுத்தும் பார்க்காது வாழவேண்டும். அவ்வாறு வாழ்க்கை நடத்தும் பெண்கள் கல்லை உணவாகவும் கடவுளர்களைக் குழந்தைகளாகவும் மாற்ற வல்லவர்கள். இறந்த கணவனைத் திரும்பி உயிர் பிழைக்கவைக்க வல்ல ஆற்றலும் பெறுவர். இவ்வாறு வாழும் பெண்கள் இறந்த பிறகு மோட்சத்தை அடைவர்.

இவ்வாறான மதிப்புகள் பெண்களின் வாழ்வில் இலட்சியங்களாகவே செயற்படுகின்றன. இம்மதிப்புகளை *100* சதவிகிதம் பெண்கள் தங்கள் வாழ்வில் கடைப்பிடிக்க முடியாவிடினும் கூடிய வரையில் கடைப்பிடித்து வாழவே முயற்சி செய்கின்றனர். இவ்வாறு வாழ்வதுதான் சமூக நியதி என்று ஒவ்வொரு ஆண் பெண் குழந்தைகளும் பிறந்தது முதல் அவர்களின் வளர்ப்பு முறையில் ஒவ்வொரு கட்டத்திலும் குடும்பம், சமூகம் முதலிய பல்வேறு நிறுவனங்களின் மூலமும் வலியுறுத்தப்படுகின்றனர். இதற்கு உதவியாக நீதிக்கதைகள், புராணக் கதைகள், சமுதாயச் சடங்குகள் முதலியவைகளும் பயன்படுத்தப் படுகின்றன. இதனால் இச்சமூக மதிப்புகள் மக்களின் உணர்வு நிலைகளில் பதிந்து ஒழுக்கத்தை வலியுறுத்தும் சமூக நியதிகளாக நிலைபெறுகின்றன.

கற்பைப் பற்றிய இவ்வாறான குறிக்கோள்கள் பெண்கள் தங்களது மதிப்பை எல்லாவிதங்களிலும் தாழ்வாக மதித்துக் கொண்டு தங்கள் கணவனுக்காகவே வாழ வேண்டுமென கட்டுப்படுத்துகின்றன. இது

மகளிரின் வாழ்வைப் பல்வேறு விதங்களில் தாக்குகின்றது. இதன் தாக்கம் ஒரு பெண் குழந்தை பிறந்தது முதல் இன்னும் கூறின் பிறக்கு முன்பே ஆரம்பித்து விடுகின்றது.

தனது வயிற்றில் பிறந்த எல்லா குழந்தைகளிடமும் ஒரே மாதிரியான அன்பும் ஆதரவும் அரவணைப்பும் செலுத்த வேண்டிய தாயே தன் ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்குமிடையில் பாகுபாடுகாட்டி வளர்க்கின்றாள். பெண் குழந்தைகள் எதிர்காலத்தில் கற்பு என்னும் மதிப்பின் எதிர்பார்ப்புகளைத் தங்கள் வாழ்வில் நிறைவேற்றத் தகுதி உள்ளவர்களாக வளர்க்கப்படுகின்றனர். தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் செய்யப்பட்ட ஆய்வுகள் (Narmada, 1992; Ramana, 1990; Senthamarai, 1991) பெண் குழந்தைகளின் பராமரிப்பு, மருத்துவ வசதி, உணவு, கல்வி போன்றவற்றில் பெற்றோர் அலட்சியமாக இருக்கின்றனர் என்பதைக் காட்டுகின்றன. தமிழகத்தில் வாழும் சில சமுதாயங்களில் பெண் சிசுக்கொலைகளும் அதிகரித்து வருகின்றன. மருத்துவப் பரிசோதனையின் மூலம் கருவிலிருக்கும் குழந்தை பெண் என்பது தெரியவரின் கருவிலேயே பெண் குழந்தைகளை அழிப்பதும் தற்காலத்தில் ஆரம்பித்திருக்கின்றது. இவ்வாறு அச்சிசுக்களை அழிப்பது பெண் குழந்தைகள் வளர்ந்து, அவர்கள் எதிர்காலத்தில் சமுதாயத்தில் பெண்கள் என்ற முறையில் இன்னல்களை அனுபவிப்பதிலிருந்து தவிர்க்க மேற்கொள்ளப்படும் கருணைக் கொலையாகவே மேற்கொள்ளப்படுகின்றது என்பதும் தெரியவருகின்றது (Ramana, 1990). இவ்வாறான செயற்பாடுகள் சமுதாயத்தில் பெண்களின் வாழ்வைக் கட்டுப்படுத்தும் மதிப்புகளின் காரணமாகப் பெண்களின் வாழ்வு மதிப்பற்ற ஒன்றாகவே கருதப்படுகின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இதைக் கீழ்வரும் புள்ளி விவரம் வலியுறுத்துகின்றது. இந்தியக் கணக்குப்படி ஒரு ஆண்டுக்கு *1,20,00,000 (ஒரு கோடியே இருபது லட்சம்)* பெண் குழந்தைகள் பிறக்கின்றன. ஆயின் அவர்களில் *25* சதவிகிதத்தினர் *15* வயது வரை கூட வாழ்வதில்லை. அவர்களில் *1,50,000 (ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம்)* பெண் குழந்தைகள் முதல் வயது நிறையுமுன்பே இறக்கின்றன. இன்னும் *8,50,000 (எட்டு லட்சத்து ஐம்பதினாயிரம்)* பெண் குழந்தைகள் *5* வயது முடியுமுன்பே இறக்கின்றன. இது இயற்கைக்கு மாறான செயலாகும். இயற்கையில் பெண் குழந்தைகள்தான் ஆண் குழந்தைகளை விட நோய் எதிர்ப்பு சக்தியையும் நீண்டகாலம் வாழக்கூடிய வலிமையையும் பெற்றிருக்கின்றனர். இதையும் மீறிப் பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகரித்து வருவது பெண்களுக்கு அச்சமுதாயம் அளித்திருக்கும் தாழ்வான மதிப்பினாலேயே

ஆகும். இதேபோன்று பெண்கள் ஒவ்வொரு நிலையிலும் புறக்கணிக்கப்படுவதை இந்திய மக்கள் தொகையில் பெண்களின் விகிதாசாரம் குறைந்து கொண்டே வரும் போக்கு தெளிவுபடுத்துகின்றது. *1901*ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகையில் *1,000* ஆண்களுக்கு *972* ஆக இருந்த பெண்களின் விகிதாசாரம் படிப்படியாகக் குறைந்து கொண்டே போய் *1991*ஆம் ஆண்டு *929* ஆக உள்ளது.

ஒரு சமுதாயத்தின் கலாச்சாரம் அதன் முன்னேற்றம் இவற்றின் அளவுகோல் அச்சமுதாயம் மகளிருக்கு அளிக்கும் மதிப்பைப் பொறுத்தே அமையும் என்று புரியர் என்னும் அறிஞர் கூறியுள்ளார். முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் பெண்களின் விகிதாசாரம் ஆண்களின் எண்ணிக்கையைவிட அதிக அளவில் இருக்கும். ஆயின் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்களின் வாழ்விற்கும் உயிருக்கும் அளிக்கப்படும் மதிப்பை நோக்கும்பொழுது தமிழ்ச் சமுதாயம் பின்னோக்கிப் போகின்றது என்றே கூறவேண்டும்.

பெண்களின் வாழ்வில் சமூகம் காட்டும் அலட்சியப்போக்கும், அவர்களின் மேல் ஏற்றிவைக்கும் சுமையும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வருகின்றது. அவர்கள் எதிர்காலத்தில் திருமணமாகிக் குடும்பப் பொறுப்புகள் அனைத்தையும் சுமக்க வேண்டியிருப்பதால் குழந்தைப் பருவம் முதலே குடும்பப்பாரங்கள் அனைத்தையும் சுமக்குமாறு பழக்கப்படுத்தப் படுகின்றனர் (Muthu Chidambaram, 1992). அவர்களுக்குக் கல்வி மறுக்கப்படுகின்றது. அதனால் அவர்கள் வெளி உலக வாழ்வில் பங்கு பெற இயலாது ஒதுங்கி நின்று தங்கள் வாழ்வை அறியாமையில் கழிக்கின்றனர். பூப்படையும் சமயம் பெண்களுக்கு நடத்தப்படும் சடங்குகள் தங்கள் உடல் மாசுபடுத்தும் தன்மை கொண்டது; அருவருக்கத்தக்கது என்ற எண்ணங்களையே அவர்களிடம் உண்டாக்குகின்றன. பின்பு திருமண ஏற்பாடுகள் நடைபெறும்பொழுது நடக்கும் நிகழ்ச்சிகள் தங்கள் பெற்றோருக்குச் சுமையாக வாழ்கின்றோம் என்ற எண்ணத்தையே பெண்களிடம் உருவாக்குகின்றன. தமிழ்நாட்டில் முன்பு பெண்ணுக்குப் பரிசம் கொடுத்து மணம் புரிந்த சாதியினரும் இன்று தங்கள் சமூக மேம்பாட்டின் ஒரு பகுதியாக வரதட்சணை வாங்கும் பழக்கத்தை மேற்கொண்டு வருகின்றனர். இவை யாவும் பெண்கள் சுமையானவர்கள்; பிறரை அண்டியும் அவர்களின் ஆதரவிலும் வாழவேண்டியவர்கள் என்ற எண்ணங்களையே பெண்களின் மனத்தில் வலியுறுத்துகின்றன. பெண்கள் தாம் பிறந்த வீட்டிலும் நிரந்தர நபராக மதிக்கப்படுவதில்லை; கணவன்

வீட்டிலும் முழுமையான நபராக ஆக முடிவதில்லை. திருமணமானபின் கணவன் வீட்டாரின் விருப்பு வெறுப்புகளுக்கு அடிபணிந்து நடப்பதிலேயே பெண்ணின் வாழ்நாள் கழிகின்றது. தன் கணவனின் வீட்டில் என்ன இன்னல்கள் அனுபவித்தாலும், அவள் அங்குதான் வாழவேண்டும். அங்கு அனுபவிக்கும் இன்னல்களைப் பொறுக்க முடியாமல் பெற்றோர் வீட்டிற்குத் திரும்பிவரும் பெண்ணை அவள் பெற்றோரும் சமூகமும் ஏற்றுக் கொள்வதில்லை. (Kalaiselvi, 1989) அவள் கற்பு சந்தேகத்திற் குரியதாகின்றது. இவ்வாறான சமூக மதிப்புகள் ஒரு பெண் தன் கணவன் வீடே கதி என்று வாழ்ந்து அவர்கள் செய்யும் கொடுமைகள் அனைத்தையும் அனுபவிக்குமாறு கட்டாயப்படுத்துகின்றது. அது அவளது மனித மதிப்பை இன்னும் குறைத்து அவளைப் புகலிடமற்றவளாக்குகின்றது.

இவ்வாறு கற்பைப் பெண்களின் வாழ்க்கைக்கு இலக்கணமாக்கும் தமிழ்ச் சமூகம் இதற்கு ஆண்களின் வாழ்வில் எவ்வித முக்கியத் துவத்தையும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆண்கள் திருமணத்திற்கு முன்பு பாலுறவு கொள்வது, தன் மனைவி அல்லாத பிற பெண்களுடன் பாலுறவு கொள்வது, விலைமகளிரிடம் பாலுறவு கொள்வது முதலியவை ஆண்களின் இயல்புகளாக ஒப்புக்கொள்ளப்படுகின்றன. மேலும் இவ்வாறு பாலுறவுகொள்வது அவர்களது ஆண்மையின் சின்னமாகவும், அவர்களுக்கு அதிக மதிப்பளிப்பதாகவும் கருதப் படுகின்றது. இதனால் பெண்களின் வாழ்வில் கற்புக்குப் பெருமதிப்பளித்த அதே சமூகம் விலைமாதர்கள் என்னும் இனத்தையும் ஆண்களின் வசதிக்காகப் படைத்துப் பெண்களை ஆண்களின் போகப் பொருளாக்கியது.

அடுத்து தாய்மை என்னும் சமூக மதிப்பு ஆராயப்படுகின்றது.

## 2.2. தாய்மை என்னும் கோட்பாடு

தாய்மை என்னும் நிலை பெண்களின் வாழ்வில் போற்றுதற்குரிய ஒன்றாகக் கருதப்படுகின்றது. மனுநீதி சாத்திரம் பெண்கள் தாயாவதற்கென்றே படைக்கப்பட்டவர்கள் என்று குறிப்பிடுகின்றது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் அன்னைக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படுகின்றது.

திருமணத்திற்குப்பின் தன் கணவன் வீட்டிற்குப் புதியவளாகவும், அவன் அன்னைக்கும் சகோதரிகளுக்கும் எதிரியாகவும் நுழையும் பெண் தாய்மை அடையும்பொழுதுதான் அந்த வீட்டின் அங்கத்தினராக ஏற்றுக்

கொள்ளப்படுகின்றாள். தாய்மை அடைந்த பிறகுதான் அவளுக்குத் தன் கணவன் வீட்டில் ஒரு இடம் உள்ளது என்பதே உறுதியாகின்றது. இன்றும் தமிழகக் கிராமங்களில் ஒரு பெண் தாய்மை அடையாவிடில், அவள் கணவன் மீது குறையிருப்பினும், அவன் தன் மனைவியை விலக்கி வைத்து வேறொரு பெண்ணை மணமுடிப்பது சாதாரண நிகழ்ச்சியாகும். அதை சமூகமும் ஒப்புக் கொள்கின்றது. ஆயின் கணவன்மேல் குறையிருப்பினும் மனைவி வேறு திருமணம் புரிவதைச் சமூகம் ஏற்றுக் கொள்ளாது. பெரும்பாலான கல்வி அறிவில்லாத தமிழ்க் கிராமங்களில் கணவன் மேல் குறையிருக்க முடியும் என்ற கருத்தே அவர்களுக்குப் புதுமையாகவும், அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாதவொன்றாகவும் உள்ளது. இதை மருத்துவப் பரிசோதனையின் மூலம் அறிந்து கொள்ள முடியும் என்ற உண்மை கூட எட்டாத கிராமங்கள் ஏராளமாக உள்ளன. மேலும் மணமாகிச் சிறிது காலத்திற்குள் தாயாகாத பெண்ணைச் சமூகம் ஒன்றுக்கும் உதவாதவள் என்று தூற்றுகின்றது. கணவனும் அவள் வீட்டாரும் அடித்துத் துன்புறுத்துகின்றனர். பெண்கள் தாங்கள் உயிர் வாழ்வதன் அவசியத்தைக் குழந்தைகள் பெறுவதன் மூலம் - அதுவும் ஆண் குழந்தைகளுக்குத் தாயாவதன் மூலமே நிலைநிறுத்த முடியும். குழந்தை பெறாததற்குப் பெண் மட்டுமே காரணமென்று பழி சுமத்துவதைப் போன்று ஆண் குழந்தைகளைப் பெறாததற்கும் அவள் மட்டுமே காரணம் என்று சமூகம் பழி சுமத்துகின்றது. ஒரு பெண் வரிசையாகப் பெண் குழந்தைகளைப் பெறும்பொழுது ஒரு ஆண் குழந்தையையாவது பெறும்வரை குழந்தைககளைப் பெற்றுக் கொள்ளுமாறு தன் குடும்பத்தினரால் வற்புறுத்தப்படுகின்றாள் (Kalaiselvi, 1989).

மேலே விளக்கப்பட்ட சமூக மதிப்புகள் மூலம் பெண்களுக்குத் தங்கள் உடம்பின் மீதே எந்தவித அதிகாரமும் கிடையாது என்பது தெளிவாகின்றது. கணவரும் அவர் வீட்டாருந்தான் பெண்கள் எப்பொழுது குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்பதையும், எத்தனை குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதையும், எந்தப் பாலினக் குழந்தையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதையும், எந்தக் கருவைக் கலைக்க வேண்டுமென்பதையும் முடிவுசெய்ய வேண்டியவர்களாவர்.

தாய்மை என்பது அதை அடைபவளுக்கு அதைத் தேர்ந்தெடுக்கும் உரிமையோடு கூடிவரும் பொழுதும், குழந்தைகளைப் பெற்றெடுக்கும் இன்பங்களையும், துன்பங்களையும் அனுபவிக்கத் தயாராகும்

நிலையிலும்தான் மகிழ்ச்சியான அனுபவமாக அமையும். ஆயின் தாய்மை ஒரு பெண்ணின் மேல் கட்டாயமாகத் திணிக்கப்படும் பொழுது அது அவளுக்கு மதிப்பை அளிக்கின்றது என்பதை விட அவள் குழந்தை பெறும் இயந்திரமாக்கப்பட்டுள்ளாள் என்பதே உண்மையான நிலையாகும்.

மேலும் திருமண உறவிற்கு வெளியில் ஏற்படும் தாய்மையும் பாராட்டப்படுவதில்லை. ஒரு பெண் தன் கன்னிமையை ஒரு ஆணுக்குக் காணிக்கையாக்கி, திருமண உறவிற்கு உட்பட்டு மட்டுமே குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென சமுதாயம் வரையறுக்கின்றது. இதற்கு மாறுபட்ட நிலைகளில் ஏற்படும் தாய்மை சமூகத்தில் ஒரு பெண்ணிற்கு வீழ்ச்சியையே அளிக்கின்றது. ஆயின் இதற்குக் காரணமான ஆண்களுக்கு அவமதிப்பு கிடையாது.

### 3. கற்பு, தாய்மை என்னும் மதிப்புகள் பெண்களின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள்

மேலே விளக்கியவாறு கற்பு, தாய்மை இவை பற்றிய சமூக மதிப்புகளே தமிழக மகளிரின் வாழ்வின் முக்கியமானவையாகும். இவை மகளிரின் வாழ்வில் இருமாறுபட்ட நிலைகளை உருவாக்கக் காரணமாகின்றன. கற்பின் இலக்கணங்களைத் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்து வாழ முயற்சிக்கும் பெண்கள் கற்புடையவர்கள். அவற்றை எவ்விதத்திலாவது கடைப்பிடிக்காமல் சுதந்திர உணர்வுடன் வாழ முயற்சிப்பவர்கள் விலைமக்கள். இதற்கிடையில் அவர்களுக்கு மனிதர்கள் என்ற முறையில் மதிப்புகளும் உரிமைகளும் அளிக்கப்படவில்லை. ஒரு பெண் என்பவள் கற்புடையவளாக வாழ வேண்டும். கற்பிற்கு இலக்கணமான அடக்கம், ஒடுக்கம், மற்றவர்களைச் சார்ந்து வாழ்வது, மற்றவர்களுக்குத் தொண்டு செய்வது போன்ற கூறுகளை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். அவர்கள் மனிதர்களுக்குரிய உரிமைகள் எதையும் கேட்கவோ அனுபவிக்கவோ தகுதியற்றவர்கள். அவ்வாறு உரிமைகளைக் கேட்பதும் அனுபவிப்பதும் விலைமக்களின் வாழ்க்கை முறையாகும். உதாரணமாகத் தமிழ்நாட்டில் சொத்துரிமை பெற்று கல்விகேள்விகளைக் கற்க அனுமதிக்கப்பட்டவர்கள் சமீப காலம்வரை விலைமக்களே ஆவர். அதனால் சமீப காலம்வரை பெண்களுக்கு மனிதவாழ்வின் அடிப்படை உரிமைகள் அளிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் கூட எழவில்லை. இதற்கு மாறாக ஆண்கள் மனிதர்கள் என்ற தகுதியின் அடிப்படையில் மதிக்கப்பட்டு மனித உரிமைகள் அனைத்தையும் அனுபவிக்கத் தகுதி உள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர்.

கற்பு, தாய்மை என்ற இரு மதிப்புகள் தமிழக மகளிரின் வாழ்வை வரையறுத்ததன் விளைவாகப் பெண்களின் வாழ்வை மங்கலம் அமங்கலம் என்ற இரு நிலைகள் கட்டுப்படுத்துகின்றன. இந்நிலைகளும் ஒரு பெண்ணின் தனிமனித குணங்களைப் பொறுத்து அமையாமல், அவளது கணவன், குழந்தைகள் இவர்களது குணநலன்களைப் பொறுத்து கூட அமையாமல், அவர்களது உயிர்வாழ்க்கையின் அடிப்படையில் அமைந்துள்ளன. இவற்றில் கணவனது உயிர்வாழ்க்கை முதலிடத்தையும் குழந்தைகளது உயிர்வாழ்க்கை இரண்டாமிடத்தையும் பெறுகின்றன. திருமணமாகித் தன் கணவனோடு வாழும் பெண் சுமங்கலி என்றும், அவள் கணவனைப் பிரிந்து வாழ்ந்தால் அவள் வாழ்வு வீண் என்ற பொருளில் அவள் வாழாவெட்டி என்றும் அழைக்கப்படுகின்றாள். கணவன் இறந்துவிட்டாலோ அவள் வாழத் தகுதியற்றவளாகித் தனது விருப்பு வெறுப்புக்கள் அனைத்தையும் துறந்து விதவைக் கோலம் பூணவேண்டும். அவள் மங்கலமற்றவளாகக் கருதப்படுகின்றாள். இதே போன்று ஒரு பெண்ணுக்குக் கணவன் உயிருடன் இருந்து அவள் பெரும் எண்ணிக்கையில் ஆண் குழந்தைகளுக்கும் தாயாகி இருந்தால் அவள் மங்கலமானவளாகக் கருதப்பட்டு சமூகத்தில் நிகழும் எல்லா சுபகாரியங்களையும் முன்னின்று நடத்தி வைக்க அழைக்கப்படுகின்றாள். கணவனும் பெண் குழந்தைகளும் இருந்தால் அவளுக்குச் சமூகத்தில் இரண்டாமிடம் அளிக்கப்படுகின்றது. கணவன் இருந்து குழந்தைகள் எதுவும் இல்லாவிட்டால் அவளுக்கு சமூகத்தில் இடம் இல்லை. இவ்வாறு ஒரு பெண் தனது குடும்ப வாழ்க்கையிலும் பொது இடங்களிலும் பெறும் மதிப்புகள் அவளது தனிமனிதத் தகுதியின் அடிப்படையில் அமையாமல், அவளது கணவன், குழந்தைகள் இவர்களது உயிர் வாழ்க்கையைப் பொறுத்து அமைகின்றன என்பது வெளிப்படையாகின்றது.

கற்பின் மதிப்பீடும் தாய்மையின் மதிப்பீடும் என்னவெனில் ஒரு பெண் எவ்வளவுக்கெவ்வளவு தன்னைத் தாழ்வாக மதிப்பீடு செய்து கொள்கிறாளோ அவ்வளவுக்கவ்வளவு குடும்பத்தினராலும் சமூகத்தினராலும் புகழப்படுகின்றாள். அவள் பிறருக்காகவும் பிறர் மூலமும் வாழ்பவள்; அவள் மாசுபடுத்தும் உடலையும், நிலையற்ற மனத்தையும் உபயோகமற்ற வாழ்க்கையையும் உடையவள் என்று அவளைப்பற்றி அவளே உறுதியாகக் கருதுமாறு நம்ப வைக்கப்படுகின்றாள். வாழ்க்கை முழுவதும் அவள் மற்றவர்களைச் சார்ந்து வாழுமாறே அறிவுறுத்தப்படுகின்றாள். இந்நிலைகளினால் பெண்கள் சுயமதிப்பும் தன்னம்பிக்கையும் அற்றவர்களாக வாழ்கின்றனர்.

இவ்வாறான சமூக மதிப்புகள் பெண்களின் உலகம் வீட்டிற்கு உள்ளே என்றும், ஆண்களின் உலகம் வீட்டிற்கு வெளியே என்றும் வரையறை செய்தன. பெண்களின் இயல்புகள் குடும்பத்தில் மனைவி, அன்னை என்ற பங்கு நிலைகளைச் செயற்படுத்தத்தக்கவாறு அமைதல் வேண்டுமென வலியுறுத்தின. அவர்கள் மென்மையாகவும், விட்டுக்கொடுக்கும் இயல்பினராகவும், மற்றவர்களுக்கு சேவை செய்பவர்களாகவும், அன்பு, தியாகம் இவற்றின் உறைவிடமாகவும் இருக்க வேண்டும் என்று வரையறை செய்தன. அதனால் பெண்களுக்கு வெளி உலகம் பாதுகாப்பற்றதாயிற்று. பெண்கள் வீட்டிற்குள்ளே அடைபட்டு காலை முதல் இரவு வரை மற்றவர்களுக்காகச் செய்யும் வேலைகளும் தாழ்வான மதிப்பைப் பெற்றன. அவைகள் பொருளாதார முக்கியமற்றதாகக் கருதப்பட்டன. ஒரு பெண்ணின் வாழ்வில் திருமணமும், குழந்தைப் பேறுமே குறிக்கோளாயின.

## 4. பெண்ணியவாதிகளின் விளக்கம்

பெண்ணியவாதிகள் சமுதாயத்தில் பெண்களின் தாழ்நிலைக்குப் பல்வேறு காரணங்களைக் குறிப்பிடுகின்றனர். ஏஞ்சல்சின் கோட்பாட்டின்படி கற்பு என்னும் மதிப்பு ஆண் இனம் பெண் இனத்தை அடிமை கொள்வதற்காக ஏற்படுத்திய சமூக நியதியாகும். பொது உடைமைச் சமுதாயம் மாறி, தனிநபர் சொத்துரிமை வழக்கில் வந்த காலகட்டத்தில் ஆண் இனம் தன்னுடைய சொத்துக்களைத் தன்மூலம் பிறந்த குழந்தைகளுக்கு மட்டுமே கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கற்பைப் பெண்களின் வாழ்க்கை நெறியாக்கி, பெண் இனத்தின் சுதந்திரத்தைப் ப்றித்து, அவர்களை வீட்டிற்குள் அடைத்து வைத்தது. இந்நிலையை வலியுறுத்த கற்பைப் பற்றிய கோட்பாடுகளையும் ஏற்படுத்தியது என்று விளக்குகின்றார். மேலும் அவர்களைக் குழந்தைகள் பெறும் இயந்திரமாக்கி, அவர்கள் வீட்டினுள் செய்யும் வேலைகளுக்கு பொருளாதார மதிப்பைக் கொடுக்க மறுத்தது என்றும் குறிப்பிடுகின்றார். தீவிரப் பெண்ணியக் கோட்பாட்டின்படி சமூக நியதிகள் ஆண்களின் வசதிக்காக ஆண்களால் பெண்களின் நலனைக் கருத்தில் கொள்ளாது உருவாக்கப்பட்டவையாகும். சமூகத்தில் பெண்களின் தாழ்நிலைக்கும், நசுக்குதலுக்கும், சுரண்டலுக்கும் ஆதாரமாகச் செயற்படும் மதிப்புகள் அனைத்தும் ஆண் மேலாண்மையின் கூறுகளாகும். இவ்வாறான சமூகங்களில் பெண்களும் ஆண் மேலாண்மைக் கோட்பாடுகளைப் பரப்பும்

கருவிகளாகச் செயற்படுவது ஆண் மேலாண்மையின் வெற்றியாகும் என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

## 5. தமிழக மகளிரின் வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள்

இன்று தமிழக மகளிர் கல்வி, பணி, பொருளாதாரம் முதலிய நிலைகளில் முன்னேறி வருகின்றனர். ஆயின் சமூகத்தில் மேம்பட்ட நிலையிலிருப்பவர்கள் மட்டுமே இவ்வாறான நிலைகளை அடைந்திருக்கின்றனர். பெண்களுக்கான சட்டங்கள் பல இயற்றப்பட்டு அவர்களுக்குப் பல உரிமைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிலைமை பற்றிய ஆய்வுகள் கூறும் முடிவுகளைக் காணலாம்.

சமூகம் அளித்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு வெளி உலகில் பல்வேறு துறைகளிலும் பணியாற்றும் பெண்கள் மாறுபட்ட சமூக மதிப்புகளிடையே நிகழும் ஒவ்வாமையால் இன்னலுறுகின்றனர் என்பதனை ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன. பெண்கள் மனைவி, தாய் என்ற பங்குகளை ஆற்ற ஏதுவாகச் சமூகம் அவர்களின் இடம் குடும்பத்திற்குள் எனவும், ஆண்களின் இடம் வீட்டிற்கு வெளியில் எனவும் வகுத்துள்ளது. பெண்கள் தங்கள் பங்குகளைச் செயற்படுத்துவதற்கு ஏதுவாகப் பெண்களின் தன்மைகள் என்று அடங்கிப் போதல், பரிவுகாட்டுதல், பொறுமை, அடுத்தவர்களைச் சார்ந்திருத்தல் என்பவைகளை வரையறுத்தது. ஆண்கள் வெளியுலகப் பணிகளை ஆற்றுவதற்குத் தக்கவாறு. ஆண்களின் தன்மைகளாக சுயநலம், அதிகாரம் செலுத்துதல், சுதந்திர உணர்வு என்பவைகளை வகுத்தது. இவ்வாறான ஆண் பெண் தன்மைகள் இரண்டும் ஆண்களின் வசதிக்காக ஆண்களால், பெண்களின் நலனைக் கருத்தில் கொள்ளாது வகுக்கப்பட்டவையாகும். பெண்கள் கல்வி பயின்று வெளியுலகில் பங்காற்றும்பொழுது அப்பணியின் எதிர்பார்ப்புகளுக்கிணங்க ஆண்களின் தன்மைகளோடு செயற்பட வேண்டியிருப்பதால் பெண்கள் என்னும் முறையில் சமூகம் அவர்களிடம் எதிர்பார்க்கும் தன்மைகளினின்றும் மாறுபட்டு அவர்கள் செயற்படுகின்றனர். அத்தகைய பெண்கள், பெண்கள் என்ற முறையில் எதிர்பார்க்கப்படும் தன்மைகளுக்கும் பணியில் எதிர்பார்க்கப்படும் தன்மைகளுக்குமிடையே உள்ள ஒவ்வாமையால் இன்னலுறுகின்றனர் (Muthu Chidambaram, 1989).

வெளி உலகப் பணிகளில் ஈடுபடும் பெண்களுக்கும் மனைவி, தாய்மை பற்றிய சமூக மதிப்புகள் மிகவும் முக்கியமானவை. குடும்பப் பணிகள் என்பது முழுநேர வேலையாகும். இதேபோன்று வெளியுலகப்பணி என்பதும். வெளியுலகில் பங்கேற்கும் பெண்களிடையேயும் அவர்களது முதன்மையான பணி குடும்பம் சார்ந்ததே என்னும் பழமையான மதிப்பீடு இன்னும் மாறவில்லை. அதனால் வெளியுலகில் பங்கேற்கும் பெண்கள் தங்கள் குடும்பக் கடமைகளை ஆற்றாதிருப்பது அவர்களது பெண்மைக்கு இழுக்கு எனக் கருதுகின்றனர். இதன் காரணமாக வெளியுலகப் பணிகளில் ஈடுபடும் பெண்கள் குடும்பம் சார்ந்த பணிகளையும் ஆற்றி இருபணிச் சுமைக்கும் இலக்காகின்றனர். மேலும் அவர்கள் தங்களது மனைவி, தாய் என்ற பங்குகளைச் சரிவர ஆற்ற இயலவில்லை என்ற குற்ற உணர்விற்கும் ஆளாகின்றனர் (Muthu Chidambaram, 1989).

இந்நிலையிலிருந்து விடுபட திருமணம் புரிந்து கொள்ளாமல் வாழும் பெண்களுக்குச் சமூகத்தில் மதிப்பில்லை. அவர்களின் கற்பை சமூகம் சந்தேகக் கண்கொண்டே நோக்குகின்றது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் என்னதான் பெண்களுக்குச் சம உரிமை அளித்தாலும் அவைகளை நிறைவேற்றத்தக்கவாறு சமூக மதிப்புகள் மாறாதவரை அச்சட்டங்களினால் பலன் எதுவும் இல்லை. உதாரணமாக மண விலக்குச் சட்டங்கள், விதவைத் திருமணச் சட்டங்கள் இவைகளைப் பெரும்பாலான பெண்கள் பயன்படுத்திக்கொள்ள முன்வருவதில்லை. கற்பு, தாய்மை இவை பற்றிய பழமையான சமூக மதிப்புகள் மாறாதவரை இச்சட்டங்களினால் பலனேதுமில்லை.

## 6. முடிவுரை

சமூகம் என்பது ஆண் பெண் இருபாலினத்தாரையும் கொண்டது. இதில் இருபாலருக்கும் மனித உரிமைகளும் சுதந்திரமும் தேவை. கற்பு, தாய்மை பற்றிய மதிப்புகள் பெண்களுக்கு சுதந்திரம் அளிக்காமல் அவர்களை அடிமைகளாக்குகின்றன. பெண்களை இழிவுபடுத்தும், சுரண்டும் சமூக மதிப்புகள் மாறித்தான் ஆக வேண்டும். இதற்கு இருபாலினரிடையேயும் கருத்து மாற்றங்கள் நிகழ்தல் வேண்டும்.

## துணை நூல்கள்

1. Dhruvarajan, Vanaja. **Hindu Women and the power of Ideology**, New Delhi : Vistaar Publications India Pvt. Ltd. 1989.

2. Kalaiselvi, K.T. **The Value of Motherhood : A Study in Irulakkurichi Village.** Unpublished M.Phil. Dissertation, Madras: Department of Sociology, Mother Teresa Women's University, December, 1991.

3. Muthu Chidambaram, S. **Professional Women : A Comparative Study of Women Doctors and Engineers.** Unpublished Ph.D. Dissertation, Kodaikanal : Department of Sociology, Mother Teresa Women's University, 1989.

4. Muthu Chidambaram, S. "Women Construction Workers of Kodaikanal" in **Indian Journal of Social Science - Women's Studies Special.** Vol. V, No. 1, 1992, pp. 111-136.

5. Narmada, D. **Parental Attitude towardes Children and Self-concept of Children at the Primary level in the Fishing Community.** Unpublished M.Phil. Dissertation. Madras : Department of Education, Mother Teresa Women's University, April 1992.

6. Ramana. **The Girl child in India.** New Delhi : National Institute of Nutrition, Indian Council of Medical Research, 1990.

7. Senthamarai, P. **Status of Girl Children in the Pulaiyar Community of Kodaikanal.** Unpublished M. Phil. Dissertation. Madras : Department of Family Life Management, Mother Teresa Women's University, 1991.

# தமிழக மகளிரும் உயர்கல்வியும்

கே. சுப்பம்மாள்

அற்றங்காக்கும் கருவியான அறிவை வளர்க்கும் கல்வி இருபாலார்க்கும் பொதுவான ஒன்றாக இருப்பினும், மகளிர்க்குப் பல காலமாக அது மறுக்கப்பட்ட, அல்லது கிடைக்கப் பெறாத ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது. மகளிர் கல்வி எதுவும் உயர்கல்வி நடைமுறையில் எளிதாக இருக்கவில்லை; சமுதாயத்திற்குச் சுமையாகக் கருதப்பட்ட மகளிருக்குக் கல்வி மறுக்கப்பட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. மனிதர்களைப் புரிந்து கொள்ளவும், நவீனமயமாக்குதலுக்குத் தூண்டு கோலாகவும், அமைதியைக் காக்கவும், உலகின் மற்ற நாடுகளுடன் தொடர்பு கொண்டு தாய் நாட்டின் நிலையினை உயர்த்திடவும் வழி வகுக்கிறது உயர்கல்வி. புதிய சமுதாயத்தை உருவாக்க உயர்கல்வி ஒரு நுழைவாயிலாக அமைகிறது. *50* விழுக்காடு மகளிரைக் கொண்ட சமுதாயத்தில் அவர்களுக்கும் உயர்கல்வியில் சமவாய்ப்பு அளித்திடல் வேண்டும் என்பது அதன் கடமையாகிறது. தமிழ் சமுதாயத்தில் பெண்களின் நிலை ஆண்களுக்குச் சமம் என்று வரையறுக்கப்பட்டிருந்தாலும், நடைமுறையில் எந்தத் துறையிலும் சமமாக இல்லை என்பதே உண்மை. வேத காலத்தில் பெண்களுக்குச் சம உரிமை இருந்ததாக அறிகிறோம். அதன்பின் இந்நிலை மாறியது. வேதங்களைக் கற்பதும், வேத காரியங்களைச் செய்வதும் பெண்களுக்கு மறுக்கப்பட்டுவிட்டன. ஆனால் பின்னர் புத்த மதமும், சைவ மதமும் தோன்றியகாலை மகளிர் உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் முகமதியர் இந்நாட்டிற்கு வந்தபோது பெண்களின் நிலை மிகவும் சீர் குலைந்து போயிற்று. பர்தா முறை அமுலுக்கு வந்தபோது பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. பின்னர் வந்த மிஷினரிகளே பெண்கள் கல்வியின் மறுமலர்ச்சியின் முன்னோடியாகத் திகழ்ந்தனர். கிறிஸ்துவ மிஷன்கள் பெண் ஆசிரியர்களைக் கொண்ட பல பள்ளிகளை நாடெங்கிலும் தொடங்கின. இதில் குறிப்பாகத் தமிழகத்தில் பள்ளிகளின் எண்ணிக்கையும் சேர்க்கையும் அதிகமாயின. கல்விக் குழுக்கள் அமைக்கப்படலாயின. முதலாவது

கல்விக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு *1854*. இக்குழுவே முதன்முறையாக, பெண் கல்வியை வரையறுத்தது. பெண்ணிற்குக் கல்வியே இல்லாதபோது உயர்கல்வி என்பது அப்போது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக இருந்தது. இக்குழு பெண்கல்வியின் ஆரம்ப, இடைநிலை அளவிலேயே தன்னுடைய பரிந்துரைகளை வழங்கியது. இதன் அடிப்படையில் முதன் முறையாகத் தனிப்பட்டவர்கள் பெண்கல்வியிலும், கல்விக் கூடங்கள் நிறுவுவதிலும் தங்கள் எண்ணத்தைத் திருப்பினர். *1857*-ஆம் ஆண்டு நிகழ்ந்த முதல் சுதந்திரப் போராட்டத்திற்குப் பின்னர் இந்தியா பிரிட்டனின் ஆட்சிக்குட்பட்டபோது பெண்கல்வியில் சிறிது கவனம் செலுத்தப்பட்டது. பெண்களுக்கென தனி கல்விநிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. இச்சமயத்தில்தான் சமூகப் புரட்சியாளர்களான ராஜாராம் மோகன்ராய், பண்டிட் ஈஸ்வர், பண்டிட் ரமாபாய் ரானடே, பாரதியார் முதலானோர் பெண் மறுமலர்ச்சிக்கு வித்திட்டனர். பெண் விடுதலைக்குக் கல்வி அவசியம் என முழங்கினர். பிரிட்டிஷ் அரசு பெண்களின் உயர்கல்வியினைத் தங்கள் கருத்தில் கொள்ளவில்லை. *1857*-ஆம் ஆண்டு கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டபோது, பெண்கள் இவற்றில் அனுமதிக்கப்படவில்லை. இவ்விதி முதன் முதலில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் *1876*-ஆம் ஆண்டு தளர்த்தப்பட்டு பெண்கள் உயர்கல்வி கற்க அனுமதிக்கப்பட்டனர். நாடு சுதந்திரம் அடைந்த போது பெண்களின் உயர்கல்வியில் தனிக்கவனம் செலுத்தப்பட்டது. *1949*-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ராதாகிருஷ்ணன் கல்விக்குழு உயர்க்கல்வியினைப் பரிசீலனை செய்தது. இக்குழுவின் பரிந்துரைகளில் பெண்கல்வி முக்கிய இடத்தைப் பெற்றது. ஆயினும் இக்குழு, இருபாலருக்கும் எல்லாத் துறைகளிலும் சம உரிமையினை எடுத்துரைக்கவில்லை. *1958*-ஆம் ஆண்டு பெண்கல்விக்கென்றே ஒரு தனிக்கல்விகுழு துர்காபாய் தேஷ்முக் தலைமையில் நிறுவப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைப்படி, பெண்கள் தொழிற் கல்வியினை மேற்கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டன. இதனை அடுத்துவந்த கோத்தாரிக் குழு *(1964-'66)* பெண்களின் உயர்கல்விக்கான வழிமுறைகள் வகுத்தது. நிதியுதவி, விடுதி வசதி, ஆராய்ச்சிக் கூடங்களை நிறுவுதல் போன்றவை அவற்றுள் சில. *1960*-இல் இருந்துதான் உயர்கல்வியில் பெண்களின் எண்ணிக்கை அதிகமாகத் தொடங்கியது. இருப்பினும் ஆரம்ப, இடைநிலை கல்வியோடு ஒப்பிடும்போது உயர்கல்வியில் பெண்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விடுகிறது. மற்ற மாநிலங்களை விடத் தமிழகம் பெண்கள் உயர்கல்வியில் முன்னேறியிருந்தாலும், ஆண்களுடன் ஒப்பிடும்போது விகிதாச்சாரம் மிகக் குறைவாகவே இருக்கிறது. இதனைக்

கருத்திற் கொண்டு பெண்கள் கல்லூரிகள் தவிர, ஆண்கள் கல்லூரியிலும் 30 விழுக்காடு இடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விட ஒதுக்கீட்டினால் தமிழகத்தில் பொதுக் கல்வியில் எண்ணிக்கை அதிகமாகி உள்ளதே தவிர, தொழிற் கல்வியில் இந்த இடங்கள், மருத்துவம், கல்வியியல் தவிர முழுவதும் நிரப்பப்படாமலேயே இருக்கின்றன.

## தமிழகத்தின் மகளிர் உயர்கல்வியின் வளர்ச்சி

பண்டைத் தமிழக மகளிர் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருந்தனர் என்பதை நாம் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். அவ்வையார், ஆதிமந்தியார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், ஒக்கூர் மாசாத்தியார், பெருங்கோப்பெண்டு முதலானோர் புலவர்களாகவும் இருந்து இலக்கியத் தொண்டாற்றியுள்ளனர். இதிலிருந்து பெண்களுக்குக் கல்வி அப்போது அளிக்கப்பட்டது என்பதனை அறியலாம். ஆனால் பின்னர் புத்த, சைன சமய எழுச்சிக் காலங்களில் தமிழகத்தில் மகளிர் கல்விக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. முகமதியர்கள் வந்தபோது தமிழ் நாட்டில் மகளிர் கல்வி நிலை மேலும் சீர் குலைந்து போயிற்று. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்றெல்லாம் எண்ணத் தொடங்கினர். பின்னர் ஆங்கிலேயர்கள் ஆதிக்கம் தொடங்கியபோது பெண்கள் கல்விக்கு ஓரளவு இடம் ஒதுக்கப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனி சென்னை, தரங்கம்பாடி, திருநெல்வேலி முதலிய இடங்களில் பெண்களுக்கான கல்விக் கூடங்களை நிறுவியது. சமுதாய மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்கள், பெண்விடுதலைக்கும், பெண் கல்விக்கும் உதவும் வகையில் செயற்பட்டனர். சுதந்திரத்திற்குப் பிறகே தமிழ்நாட்டில் பெண்கல்வியில் பெரும் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. துர்காபாய் தேஷ்முக் குழுவினைத் தொடர்ந்து, 1962-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மகளிர் கல்விக் குழு ஒன்று மகளிர் கல்விநிலையை உயர்த்தவும் அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தர வழிவகைகளை ஆராயும் நிறுவப்பட்டது. 1965-இல் அந்நாள் முதன்மத்திரி பக்தவச்சலம் தலைமையில், தமிழகத்தில் பெண்கள் கல்வியின் பிரச்சினைகளை ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டது. மகளிர் எண்ணிக்கை உயர்கல்வியில் வேகமாக வளரத் தொடங்கியது.

## உயர்கல்வியின் நோக்கங்கள்

நம் நாட்டில் உயர்கல்வியின் நோக்கங்களைக் கல்வியாளர்கள் வரையறுத்தபோது, ஆண் பெண் என பாகுபடுத்தவில்லை. அவற்றைச் செயற்படுத்தும்போதுதான் இடர்பாடுகள் வருகின்றன. சம உரிமை, சம வாய்ப்பு என்பதுடன் அடிப்படையிலேயே நோக்கங்கள் உருவாக்கப் படுகின்றன. கல்வி நிறுவனங்கள் சமுதாயத்திலிருந்து தனித்தியங்க

முடியாது. சமுதாய முன்னேற்றத்திற்குக் கல்வி ஏதுவாகிறது. அதேபோல் பல்கலைக்கழகங்களுக்கும், உயர்கல்வி நிறுவனங்களுக்கும், சமுதாயப் பொறுப்பு இருக்கிறது. இக்கல்விக் கூடங்கள் வெறும் பட்டதாரிகளை உருவாக்கும் தொழிற்சாலைகளாக மாறிவிடக்கூடாது. மாணவர்களின் அறிவுப் பெருக்கம், தர்க்க ரீதியான சிந்தனைக்குத் தங்களை உட்படுத்திக் கொள்ளுதல், அறிவியல் கண்ணோட்டத்தை வளர்த்தல் இவையே உயர்கல்வியின் முக்கியமான நோக்கங்களாகும். இம்மூன்று நிலைகளிலான அறிவுப் பெருக்கம் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றத் துணை புரிகின்றன.

1. தனித்தன்மையை வளர்த்துக் கொள்ளல்.
2. சகிப்புத் தன்மை.
3. பண்பாட்டைச் சிதைக்காமல் அதைப் பேணி உயர்கல்வி அறிவை வளர்த்தல்.
4. மனித மதிப்புக்களை வளர்த்தல்.
5. ஆளுமையை வளர்த்து அதன்மூலம் சமுதாய உணர்வுகளை ஏற்படுத்துதல்.
6. புறவயத் தன்மையோடு பிரச்சினைகளை ஆராய்தல்.
7. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் பங்கேற்றல்.
8. ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்த்தல்.
9. நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுத்தல்.

**உயர்கல்வியின் பிரிவுகளில் மகளிர்**

பெண்கள் தொழிற்கல்வியில் மிகுந்த ஆர்வத்துடன் நுழைந்தது 1965-ஆம் ஆண்டிற்குப் பின்னரே ஆகும். அதற்கு முன்னர் பெண்களுக்கேற்ற தொழிற்கல்வி ஆசிரியர் கல்வியும், மருத்துவக் கல்வியுமே ஆகும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

**வேளாண்மை இயல்**

சுதந்திரத்திற்குப் பின் பெண்கள் வேளாண்மை இயலில் சேர்ந்து பயிலத் தொடங்கினர். மதுரை மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மையியல் கல்லூரிகளில் பயிலத் துவங்கினர். பின்குறிப்பிட்டுள்ள அட்டவணையின் மூலம் வேளாண்மைத்துறையில் பெண்களின் சேர்க்கையின் வளர்ச்சியை அறிந்து கொள்ளலாம்.

வேளாண்மை இயலில் பெண்கள் சேர்க்கை

| ஆண்டு | சேர்க்கை | | | நிறுவனங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1952-53 | 449 | 7 | 456 | 2 | - | 2 |
| 1957-58 | 558 | 15 | 603 | 1 | - | 1 |
| 1962-63 | 996 | 13 | 1009 | 1 | - | 1 |
| 1972-73 | 1434 | 3 | 1437 | 2 | - | 2 |
| 1977-78 | 1248 | 22 | 1270 | 2 | - | 2 |
| 1982-83 | 1142 | 248 | 1390 | 3 | - | 3 |
| 1987-88 | 1229 | 301 | 1530 | 3 | - | 3 |

கடந்த பத்தாண்டு காலக்கட்டத்தில்தான் வேளாண்மைத் துறையில் பெண்களின் சேர்க்கை எண்ணிக்கை அதிகரித்திருப்பதை இவ்வட்டவணையின் மூலம் அறியலாம். ஆயினும் ஆண்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு நோக்கின் இன்றும் அவர்களுக்கு இணையாகப் பெண்கள் இத்துறையில் முன்னேறவில்லை என்பது தெரிகிறது.

**கல்வியியல்**

தமிழகக் கல்வித்துறையின் வரலாற்றில் *1937-'67*க்கு இடைப்பட்ட காலக்கட்டத்தில்தான் ஆசிரியர்களின் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஆரம்ப காலக்கட்டத்தில் ஆரம்பக் கல்விக்கும், இடை நிலைக் கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டன. ஆயினும் *1947*-ஆம் ஆண்டிற்குபின் உயர்நிலைக் கல்வி ஆசிரியர்களின் பயிற்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்த அரசாங்கம் பெண்களுக்காகத் தனிப்பட்ட கல்வியியல் கல்லூரிகளை ஆரம்பித்தது. கல்வியியல் கல்லூரிகளின் பெண்களின் சேர்க்கை எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டன. *1952-53* இல் உயர்நிலைக் கல்வி பயிற்சிக் கல்லூரிகளில் இருந்த பெண்களின் எண்ணிக்கை *294*. *1987-'88* இல் இது மூன்று மடங்காக அதிகரிக்கப் பட்டுள்ளது. இதேபோல் பெண்களுக்கான கல்லூரிகளும் நான்கிலிருந்து ஏழாகத் தமிழகத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

**தொழிற்கல்வி**

தமிழகத்தில் *1951*-ஆம் ஆண்டு அழகப்பா செட்டியார் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமும், *1952*-இல் திருச்சியில் சேஷாய் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமும் தொடங்கப்பட்டவுடன் பெரும்பான்மையான பெற்றோர்களுக்கு ஏற்பட்ட விழிப்புணர்வின் காரணத்தினால் தங்களுடைய பெண்களைத் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பத் துவங்கினர். *1962* இல்

தனியாகத் தொழில் நுட்பக் கல்வியியல் இயக்குநரகம் ஆரம்பிக்கப் பட்டவுடன், அரசு தரப்பிலும் பெண்களுக்கான தொழிற் நுட்பக்கல்வி பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தது. இதன் விளைவாக, பெண்களின் எண்ணிக்கை தொழில்நுட்பக் கல்விக் கல்லூரிகளில் அதிகரிக்கத் துவங்கியது. *1952-'53* ஆம் ஆண்டு வெறும் ஆறுபேர்களே இக்கல்லூரியில் சேர்ந்து பயின்றனர். *1987-'88* ஆம் ஆண்டில் *789* பெண்கள் தமிழகத்தில் இக்கல்லூரிகளில் சேர்ந்து பயின்று வெளிவந்துள்ளனர். இந்த நாற்பது ஆண்டு காலத்தில் இது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். ஆயினும் அதே சமயத்தில் இன்று பெண்களுக்காக ஒரு தொழிற்நுட்பக் கல்லூரிகூட இல்லை என்பதும் உண்மை.

### சட்டக் கல்லூரி

சட்டத் துறையில் பெண்களின் வளர்ச்சி என்று நோக்கும் பட்சத்தில் *1970*ஆம் ஆண்டிற்குப் பிறகே குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்படுகிறது. அதுவரை அத்துறை ஆண்களுக்கே உரியதாக இருந்தது. *1977*இல் பெண்களின் சேர்க்கை இத்துறையில் உயர்ந்து, பின் *1982*இல் மீண்டும் குறைந்து, *1987*இல் சேர்க்கை எண் அதிகரித்திருப்பதைப் பின்வரும் அட்டவணையில் மூலம் காணலாம்.

**சட்டக்கல்வித் துறையில் பெண்களின் சேர்க்கையில் வளர்ச்சி**

| ஆண்டு | சேர்க்கை | | | நிறுவனங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| *1952-53* | *1177* | *21* | *1198* | *1* | - | *1* |
| *1957-58* | *1082* | *14* | *1096* | *1* | - | *1* |
| *1962-63* | *1010* | *33* | *1043* | *1* | - | *1* |
| *1972-73* | *2251* | *113* | *2364* | *1* | - | *1* |
| *1977-78* | *3172* | *252* | *3424* | *2* | - | *2* |
| *1982-83* | *2305* | *163* | *2468* | *4* | - | *4* |
| *1987-88* | *3099* | *399* | *3498* | *4* | - | *4* |

### மருத்துவக் கல்வி

மற்றத் துறைகளைக் காட்டிலும், மருத்துவத் துறையில் பெண்களின் நுழைவு சுதந்திரத்திற்கு முன்பே ஓரளவிற்கு அதிக எண்ணிக்கையில் காணப்படுகிறது. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மருத்துவத் துறையில் பெண்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார்கள். *1952-53*இல் மருத்துவத் துறையில் பெண்களின் எண்ணிக்கை *712*. இதுவே சென்ற பத்தாண்டில் ஐந்து மடங்காக உயர்ந்துள்ளது *(3815)*. இது ஆண்களின் எண்ணிக்கையில் *50* விழுக்காடாகக் காணப்படுகிறது.

**உடற்பயிற்சியியல்**

மற்றத் துறைகளை ஒப்பிட்டு நோக்கும் பட்சத்தில் உடற்பயிற்சிக் கல்வியில் பெண்களின் நுழைவு இன்னும் குறைந்த அளவிலேயே காணப்படுகிறது. பொதுவாக இத்துறையில் ஆண்களின் எண்ணிக்கையும் குறைந்து காணப்படுகிறது. *1970* ஆம் ஆண்டு வரை பெண்களின் சேர்க்கை இத்துறையில் பத்து பேருக்குள் அடங்குவார்கள். *1970*-க்குப் பிறகே இத்துறையில் பெண்கள் சேரத் துவங்கினர். இன்னும் மொத்தத்தில் *200* பெண்களே இக்கல்லூரிகளில் பயில்கின்றனர். இது குறிப்பிடத்தக்க வளர்ச்சி அல்ல.

**கால்நடை மருத்துவ இயல்**

உடற்பயிற்சியியல் போன்றே கால்நடை மருத்துவ இயலிலும் பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து காணப்படுகிறது. ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்களின் சேர்க்கை இக்கல்லூரியில் *5%* மட்டுமே. பெண்கல்வி வளர்ச்சியடையாத துறைகளில் மிகவும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய துறை இத்துறையாகும். மொத்தம் *43* பெண்களே தமிழகத்தில் இன்று இக்கல்லூரிகளில் படிக்கின்றனர்.

**உயர்கல்வியில் மகளிர் பங்கேற்பு குறைவிற்கான காரணிகள்**

தமிழ்நாட்டில் மகளிர் உயர்கல்வியில் ஆண்களைப் போலவே சமவிகிதத்தில் கல்வி பெறாததற்கான காரணிகளை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று சமுதாயக் காரணிகள். இரண்டு உளவியற் காரணிகள். ஒன்றாவது வகுப்பில் மாணவர்களின் சேர்க்கைத் தகுதியாக வயது ஒன்றை மட்டுமே நாம் கொண்டிருக்கிறோம். இது சரியான முறையும் கூட. ஆனால் அடுத்தடுத்து வகுப்பிற்குத் தேர்ச்சித் தகுதி பெற்றிருத்தல் வேண்டும். கல்வி வாய்ப்பு அரசால் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு வழங்கப்பட்டிருந்தாலும் பள்ளி, கல்லூரி செல்லும் வயதுடைய அனைவரும் அவ்வாறு செல்வதில்லை. ஒவ்வொரு நிலையிலும் பல காரணங்களை நாம் பார்க்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு பையனோ, பெண்ணோ உயர்கல்வியைத் தேர்ந்தெடுப்பது கீழ்க்காணும் காரணிகளைப் பொறுத்து அமைகிறது. இதனை ஒரு சமன்பாட்டின் மூலம் விளக்கலாம்.

உயர் கல்வி பெறும் வாய்ப்பு = a *(அறிவுத்திறன்)* - b *(சமுதாய எதிர் பார்ப்பு)* + c *(தனியார் ஊக்கம்)* + d *(வாழ்க்கை நோக்கங்கள்)* + e *(நிதி நிலைமை வசதி)* + f *(கல்விக் கூடங்கள் இருப்பிட தூரம்)*

உளவியற் வல்லுநர்களின் கொள்கைகளின்படி அறிவுத்திறனில் ஆண், பெண் வேறுபாடில்லை. ஒரே மரபுநிலையும், சூழ்நிலையும் அமையப் பெற்ற ஆண், பெண் இருவரின் நுண்ணறிவிலும் வேறுபாடில்லை. இது தமிழ்ச் சமுதாயத்திலுள்ள ஆண் பெண் இருவருக்கும் பொருந்தும். இது இங்குச் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் முடிவேயாகும். எனவே மேற்கூறிய சமன்பாட்டில் உயைத்தவிர மற்றவையே மகளிர் உயர்கல்வி பெறும் வாய்ப்பினின்று ஆண்கள் பெறும் வாய்ப்பை விடக் குறைவதற்கான விளக்கங்களாக அமைகின்றன. சமுதாய எதிர்பார்ப்பு, வாழ்க்கை நோக்கங்கள், நிதி நிலைமை, கல்விக் கூடங்கள் இருக்குமிடம் இவை சமூகக் காரணிகளாக மகளிர் உயர்கல்விக்குத் தடையாக விளங்குகின்றன. நம் தமிழ் சமுதாயம் இன்றும் பெண்ணிடம் எதிர்பார்ப்பது என்ன? கல்வி பற்றிய விழிப்புணர்ச்சி ஓரளவு ஏற்பட்டிருந்தாலும், இன்னொருவர் வீட்டிற்கு அனுப்பப்பட வேண்டியவர்; அதற்காகப் பெண்ணைத் தயார் செய்தல் வேண்டும்; புகுந்த வீட்டில் அவள் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்பதையே சமூகம் எதிர்பார்க்கிறது. சமூக ஆக்கத்திறனுக்குப் பெண் உறுதுணையாவாள் என்ற உணர்வு இன்றும் முழுமையாக ஏற்படவில்லை. வாழ்க்கை நோக்கங்களைச் சமுதாயமும், பெற்றோர்களுமே தேர்ந்தெடுக்கின்றனர். இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற நியதியுடனேயே வளர்க்கப்படுவதால் *80%* பெண்களிடையே வாழ்க்கை நோக்கங்களைத் தாங்களே வரையறுத்துக் கொள்ள முடியும் என்ற உணர்வு இல்லை. இதற்கு நம் சமுதாயத்தில் முக்கிய காரணம், சமயம், நிதி வசதி, கல்விக்கூடங்கள் அமைந்திருக்கும் இடம் முதலியன. நகர்ப்புறங்களிலுள்ள பெண்களுக்கு விழிப்புணர்ச்சியும், சூழ்நிலையின் தாக்கமும் இருப்பதால் அவர்கள் உயர்கல்வியின் இன்றியமையாமையை நன்கு புரிந்துள்ளனர். ஓர் இலக்கை நிர்ணயித்துக் கொண்டு, தங்கள் கல்வியை அதற்கேற்றவாறு அமைத்துக் கொள்கின்றனர். உயர்கல்விக்குச் செல்லும் மகளிரிடையே ஓர் ஆய்வு நடத்திய போது, உயர்மட்டத்தில் இருப்பவர்கள் உயர்கல்வி ஒரு சமுதாயக் குறியீடு எனவும், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களில் *80%* பேர் வேலைக்குப் போவதற்காகவும், தனக்குப் படித்த வசதியுள்ள கணவர் வாய்க்க வேண்டும் என்பதற்காகவும் உயர்கல்வி அவசியம் என்று கூறியுள்ளனர். சமுதாய முன்னேற்றத்திற்கு உங்கள் உயர்கல்வி எவ்வாறு பயன்படுகிறது எனக் கேட்டபோது, தங்களை உயர்த்திக் கொள்ள தாங்கள் கல்வி கற்றலும் சமுதாயத்தில் ஓர் அங்கமான தாங்கள் உயர்ந்தால் சமூகம் உயரத்தானே செய்யும் எனப் பதிலுரைக்கப்பட்டது. இக்கருத்தினை ஆண்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். உயர்கல்விக்குச் செல்லாத பெண்களும், உயர் கல்விக்குச் செல்லும் பெண்களில் பலரும் கல்வியும் வரதட்சணையும் நேர்விகிதப் பொருத்தத்தில் அமைகிறது என்கின்றனர். பெண் கல்வியின் நிலைக்கேற்றவாறு

ஆண்களின் கல்வி நிலை உயர்ந்திருக்க வேண்டும். கல்வி நிலை உயர உயர வரதட்சணையின் அளவு அதிகமாகிறது. இக்காரணத்திற்காக உயர்கல்வி வாய்ப்புக் கிடைத்தும் அதனைப் பெற விருப்பமில்லாத பெண்களும் இருக்கின்றனர். கிராமப்புறத்திலுள்ள பெண்களின் உயர்கல்வி விகிதம் குறைய முக்கிய காரணம் அருகில் கல்விக் கூடங்கள் இல்லாமையும், உயர்கல்வியின் நோக்கங்களையும் இதனால் ஏற்படும் பயன்களையும் அறியாததுமேயாகும். நிதி வசதியும் மகளிர் உயர்கல்வியில் பெரும்பங்கு வகிக்கிறது. ஒரு வீட்டில் ஆண், பெண் இருவரும் இருந்து போதிய பண வசதி இல்லையாயின். ஆண்களுக்கு உயர்கல்வி அளிப்பதையே பெரிதும் விரும்புகின்றனர் என்பதை விட அதை ஒரு சமுதாயப் பழக்கமாகவே நாம் கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை. அதனால் தமக்கு மிகப்பெரிய இழப்பு ஏதும் இருப்பதாகப் பெண்கள் உணரவில்லை. இச்சமூகக் காரணிகள் தவிர பெண்ணிற்குள்ளேயே ஏற்பட்டுள்ள சில உளவியற் காரணிகளும் அவர்களின் உயர்கல்விக்குத் தடையாக விளங்குகின்றன. பார்க்கப் போனால் இவ்வுளவியற் காரணிகள் கூட சமுதாய அமைப்பால் பெண்ணிற்கு வரையப்பட்ட இலக்கணத்தால் அமையப்பட்டவையே ஆகும். மேலே சொல்லப்பட்ட உயர்கல்விக்கான வாய்ப்பில் அமைந்துள்ள காரணிகளுள் ஒன்றான தனியாள் ஊக்கம் இதனையே கூறுகிறது. தனியாள் ஊக்கம் தடைப்பட சமூகம் மட்டுமின்றி, தன்னைவிட அதிகக் கல்வியறிவுடைய கணவனை அடைய முடியாமற்போய் விடுமோ என்ற அச்சம்; தங்களுடைய வெற்றியினால் ஆண்கள் மனதிற் தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு, அது தங்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் என்ற எண்ணம்; வழி வழியாக வந்த பழக்கங்களினால் வந்த தயக்கம்; வெற்றி பெறாவிட்டால் மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற அச்சம் (Fear of Failure); கல்விக்காக வேறு இடங்களுக்குச் செல்லும் துணிச்சல் இல்லாமை; தன்னாலும் முடியும் என்ற நம்பிக்கையின்மை; குறிக்கோள்களை ஏற்படுத்தத் தெரியாமை முதலியன காரணங்களாக அமைகின்றன.

**மகளிரின் உயர்கல்வி வளர்ச்சிக்கான பரிந்துரைகள்**

சமுதாய இடர்ப்பாடுகள் எத்தனை இருந்தாலும், சமுதாய மாறுதல்களினால் தமிழக மகளிர் ஓரளவிற்கு உயர்கல்வியின் அவசியத்தை உணர ஆரம்பித்து விட்டனர். மகளிரால் இவ்வளவுதான் முடியும் என்ற சமுதாய நம்பிக்கையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. தொழிற் கல்வியில் மாணவிகளின் பங்கேற்பு அதிகமாகத் தொடங்கி உள்ளது. இடைநிலைக் கல்வித் தேர்விலும், மேல்நிலைக் கல்வித் தேர்விலும் மாணவர்களை விட மாணவிகளின் தேர்வு விழுக்காடு அதிகமாக இருப்பினும், கணிதம், அறிவியல் போன்ற துறைகளில் பெண்களுக்குப்

புலமை குறைவு என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. இது ஆராய்ச்சி மூலம் இப்பொழுது உண்மை அல்ல என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது. மகளிர் கல்வி உயர்ந்திட அரசு வழி முறைகளை மேற்கொண்டாலும் சமுதாய உணர்வினை மாற்றுதலே அதன் தலையாய கடமையாக இருக்க வேண்டும். உயர்கல்வியின் வாய்ப்பைப் பெருக்குவதோடு, எந்தெந்தத் துறைகளில் மாணவிகளின் சேர்க்கைக் குறைவாக உள்ளதோ அதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்ய முயன்றிட வேண்டும். *30%* வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலும் வேலை வாய்ப்பினை இன்னும் பெருக்குதல் வேண்டும். ஒரே மாதிரியாக *30%* என்றில்லாமல் எங்கெங்கு தேவை அதிகமாக உள்ளதோ அதற்கேற்றவாறு விகிதாச்சாரத்தை மாற்றி அமைத்தால் பெண்களுக்கு உயர்கல்வியில் ஊக்கம் ஏற்படும். மகளிர்க்கென நிறுவப்பட்ட அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்கள் மகளிரும் உயர்கல்வியும் என்ற பிரச்சினையை எடுத்துக்கொண்டு, பரிந்துரைகளை வழங்குதல் வேண்டும்.

பள்ளிக்கல்வியிலேயே மகளிர்க்கு உயர்கல்வியில் ஊக்கத்தை வளர்த்திட்டால் மகளிர் உயர்கல்வியில் மேலும் நாட்டமுறுவர். கிராமப்புறத்திலுள்ள மகளிர்க்குக் கல்விக்கூடங்களில் ஆலோசனை மையங்களை நிறுவிச்சரியான வழி காட்டினால் அவர்களின் உயர்கல்விப் பங்கேற்பு அதிகமாகும். மகளிர்க்கெனக் குறைந்த செலவில் தனி விடுதி வசதிகள் போன்றவை ஓரளவிற்கு எதிர்பார்க்கும் பலனை அளிக்கும். அனைத்திற்கும் மேலாக, பெண்களின் மனங்களிலும், பெற்றோர்களின் மனங்களிலும் மாற்றம் ஏற்படுதல் அவசியம். இதனை அடைய உளவியற் பயிற்சி அளிக்கப்படலாம்.

உயர்கல்வியில் மொழி ஒரு பிரச்சினையாக இருத்தல் கூடாது. அநேக மாணவிகள் மேல்நிலைக் கல்வி வரை தமிழைப் பாட மொழியாகக் கொண்டிருப்பர். ஆகையால் உயர்கல்வி, மொழியினால் தடை ஏற்படா வண்ணம், தமிழ் மொழி வழி கற்கும் வாய்ப்பும் வசதியும் தேவையானோர்க்கு ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியம். செய்தித் தொடர்பு சாதனைகளைப் பயன்படுத்தியும் மகளிர் உயர்கல்வியின் நோக்கங்களைப் புரிய வைக்கலாம்; உயர்கல்வியினை முறையான கல்விக் கூடங்களுக்குச் சென்று கற்க இயலாத மகளிர்க்கு, முறைசாராக் கல்வி முறை ஓர் அரிய வாய்ப்பாகும். இதனைப் பயன்படுத்தும் முறையையும் தெளிவுபடுத்துதல் வேண்டும்.

"ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை" என்பது எல்லாத் துறைகளுக்கும் பொருத்தமே; கல்வி இதில் விதிவிலக்கல்ல. பெண் கல்வியின் நோக்கங்கள் பாரதிதாசன் பாடல்களில் நன்கு இயம்பப் பட்டுள்ளன. பெண்ணை மட்டுமல்லாமல் உலகினைப் பேணி, கல்வியையும் பேணுவதற்கு, பெண்ணிற்கு உயர்கல்வி அவசியமன்றோ!

# கிராமச் சுகாதாரச் செவிலியர் நடைமுறை வாழ்க்கையும் பெண்ணியக் கோட்பாடும்

ஆர். அம்பிகா

**"பெண்ணுக்குப் பேசும் உரிமை இல்லாதவரை இங்கு எதுவுமே பிரச்சினையாகத் தெரியவில்லை"**

கிளை சுகாதார நிலையத்திலிருந்து அந்தக் கிராம சுகாதாரச் செவிலி தன்னுடைய சகல தளவாடங்களுடன் புறப்படுகிறார். ஒரு குழந்தைக்கு ஒரு ஊசி, ஒரு தனி குழல் என்ற நியதியில் தடுப்பூசிகள், குழல்கள் இவற்றிலிருந்து கிருமி நீக்கம் செய்யப்பட உபயோகப்படும் பிரஷர் குக்கர், தடுப்பூசி மருந்துகளைக் குளிர்பதன நிலையில் வைத்திருக்கச் சின்ன குளிர் பதனப்பெட்டி, எடை காட்டும் கருவி, குடும்ப அட்டை, தடுப்பூசி அட்டை, சத்துணவு உருண்டைகள் இத்தனை சுமைகளோடு எத்தனை தூரம் நடப்பது? ஒற்றையடிப் பாதை நடையை, கால்நடையின் வேகத்தைக் கட்டுப்படுத்தும். அவளைச் சுதந்திரமாக அசையவிடாமல் பிணைத்துப் போடும் புடவை. இவ்வளவு சுமையும் தேவைதானா? புரட்சி செய்யும் மனத்தைப் புறந்தள்ளிவிட்டு தன்னை மறந்து இயந்திர கதியில் இயங்க எண்ணி எட்டை எட்டிப் போடுகிறார்.

"டாக்டரம்மா வந்தாச்சு, டாக்டரம்மா வந்தாச்சு", தங்களுடைய தேவையை நிறைவேற்றுகின்ற தேவதையைக் கண்ட மகிழ்ச்சி அந்தக் கிராமத்து மக்களுக்கு, டாக்டரம்மா கொண்டுவந்த சுமைகளை இறக்கிக் கொண்டே தங்கள் சுவையான சுமைகளை, அவர்கள் குழந்தைகளை அவர்களால் டாக்டரம்மாவாக்கப்பட்ட செவிலியிடம் சேர்க்கின்றனர். "டாக்டரம்மாதான் உனக்கு மொத்தல்ல அம்மா, அம்மா போடுகிற ஊசியை வாங்கிக்கோ போ"; ஒரு கருவுற்ற பெண்ணுக்கு கர்ப்ப காலத்திலும் குழந்தை பிறந்த பின்னும் இந்த செவிலிதான் உற்ற துணை; அவளுடைய நல வாழ்விற்கு வழிகாட்டி; தான் பெற்ற கணவனை விடவும், தன்னைப் பெற்ற தாயைவிடவும், தன்னுடைய நெருங்கிய சிநேகிதியை விடவும், நெருக்கமானவள் இந்தச் செவிலி; தன்னுடைய உடல், உயிர், உணர்வு,

உணவு பற்றிய சகல பிரச்சினைகளின் பரிமாணங்களையும் புரியவைத்து பிரச்சினைகளில் பங்கு பெறும் பாத்தியமுடையவள் இவள்.

கிளை சுகாதார நிலையங்களில் தங்கியிருந்து தமிழக கிராமங்களில் வளைய வந்து வைத்தியம் செய்யும் இவர்கள் எண்ணிக்கை *20,000* என்று திருச்சி மாவட்ட கிராம சுகாதாரச் செவிலியர் சங்கச் செயலர் செல்வி. கோமதி அவர்கள் தெரிவிக்கிறார். மருத்துவரைத் தேடிக் கிராம மக்கள் செல்வதற்குப் பதிலாக மருத்துவம் அவர்கள் கதவைத் தட்டுகிறது.

எல்லோருக்கும் நல வாழ்வு என்ற நோக்கில் உலக சுகாதார அமைப்பு குடும்ப நலத்தை-முக்கியமாகக் குழந்தை நலத்தை வலியுறுத்தியது. இதன் வழியில் இந்திய அரசு நோய்கள் வராமல் தடுத்துக் குழந்தைகளைக் காத்து உயிர் வாழச் செய்ய திட்டமிட்டது. இதை அனுசரித்து தமிழ்நாடு அரசு மருத்துவப்பணி, கிராமச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம் மாவட்ட சுகாதார அலுவலர்களை நியமித்தது. இவர்களின் மேற்பார்வையில் பலநோக்கு சுகாதாரப் பணியாளர் பணியமர்த்தப்பட்டனர். இச்சுகாதாரப் பணியாளர் கிராமச் சுகாதாரச் செவிலியர் என்ற பெயர் மாற்றம் பெற்றனர்.

தாய்-சேய் நலம் காத்தலும், நோய்த் தடுப்பு மருத்துவமும் தங்களின் பொறுப்பு என்று எண்ணி இவர்கள் பணியாற்றுகிறார்கள். ஒரு பெண் கர்ப்பமானது தெரிந்ததுமே கிராம சுகாதாரச் செவிலியர் தன் பதிவேட்டில் பதிவு செய்கிறார். தொடர்ந்து அவர் செய்யும் பணிகள் வருமாறு:

1. கர்ப்ப காலத்தில் தாயையும் சேயையும் இரண ஜன்னியில் இருந்து பாதுகாக்க முதல் தவணை தடுப்பூசி போடுதல்.
2. அதன் பிறகு ஒரு மாத கால இடைவெளிக்குப் பின் இரண்டாவது தவணை இரண ஜன்னி தடுப்பூசி போடுதல்.
3. குழந்தை பிறந்தவுடன் காசநோய்த் தடுப்பூசி போடுதல்.
4. தொண்டை அடைப்பான், கக்குவான், இரண ஜன்னி ஆகிய மூன்று நோய்கள் வராமல் தடுக்க டிப்பிட்டி என்னும் முத்தடுப்பு ஊசி *3* தவணைகளில் அதாவது குழந்தையின் $1^1/_2$ மாதம், $2^1/_2$ மாதம், $3^1/_2$ மாதங்களில் தவறாமல் ஊசி போடுதல், முத்தடுப்பு ஊசி போடும்போது இளம்பிள்ளை வாதம் வராமல் தடுக்கப் போலியோ சொட்டு மருந்தை வாய் வழியாக விடுதல்.
5. தட்டம்மை நோய் வராமல் தடுக்கக் குழந்தை பிறந்த *9*வது மாதத்தில் தடுப்பூசி போடுதல்.

6. 16 மாதம் முதல் 24 மாதம் வரைக்குள் முத்தடுப்பு ஊசியும், போலியோ சொட்டு மருந்தும் ஊக்குவிப்புத் தவணையாகப் போடுதல்.

7. பொதுவான மருந்துகள் தருதல்.

8. குழந்தைகளின் வளர்ச்சி, எடை எடுத்துக் கவனித்து சத்துணவு தருதல்.

இத்தகைய சேவைகள் செய்தாலும் சிலரால், பெரும்பான்மை ஆண்களால் இவர்கள் மதிக்கப்படுவதே இல்லை. தஞ்சையில் ஒரு செவிலி ஒரு மருத்துவமனை காவலரால் தாக்கப்பட்டு இழிவுபடுத்தப்பட்டார் என்பது ஒரு செய்தி; மற்றொரு கிராம நலச் செவிலியை அவருடைய மருத்துவ அதிகாரி மிகச் கேவலமாகப் பேசினார்; நடத்தினார்; அவர் மீது கொலை முயற்சியும் செய்யப்பட்டது. அவ்வூர் ஆற்றுப்பாலம் அருகே அவர் நடந்து கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத சிலர் அவர் மீது கொலைக் கருவியினை வீசனர். சில காயங்களுடன் உயிர் தப்பினார். பதறிய நிலையில் மனம் சிதைந்து போயிருந்த அவரை இந்த கட்டுரை ஆசிரியர் பார்த்தபோது "பெண்களே! இங்கு ஆதிக்கத்துக்குட்பட்டு அழிந்துபோகப் பிறந்தவர்கள் அல்ல; நாம் இங்கு வாழும் வகைக்கு வழி செய்ய வேண்டும். பாலினரீதியான தாக்குதல் தொடுப்போரையும், நம்மை ஆட்டி வைக்க தாக்குதல் செய்பவர்களையும் தோல்வி அடையச் செய்வோம்" என்று வெகுண்டார். மற்ற பெண்களைக் காட்டிலும் செவிலியர்க்குப் பாலின ரீதியால் தாக்குதலும் கேவலப்படுத்தலும் அதிகம். கல்வியறிவில்லாத கிராமச் சூழலில் சற்றுப்படித்த பெண் கிளைசுகாதார நிலையத்தில் தங்கிப் பல கிராமப் பெண்களின் சுகாதாரயகியாய் இருப்பது பல ஆண்களுக்கு முக்கியமாக ஊர் பிரமுகர்களுக்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்கிறது. தங்களைப் பார்த்து எழுந்து நின்று அடங்கி ஒடுங்கிப் பயபக்தியோடு இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இந்த ஆண்களுக்கு. அது நடக்காத போது இவர்களைக் கொச்சையாகப் பேசி ஊர் இளைஞர்களைப் பாலின ரீதியான தாக்குதலுக்குத் தூண்டுகின்றனர்; அவமதிக்கின்றனர். சமூக கௌரவம் என்பது மனித உரிமை; அது இங்கே இவர்களுக்கு மறுக்கப்படுகிறது.

பெண்களை கௌரவமாக நடத்தும் ஒரு சமூக அமைப்புக்காகப் பெண்கள் இயக்கங்கள் போராட வேண்டியிருக்கிறது. இதற்காக ஒரு கோட்பாட்டைத் தேட வேண்டியிருக்கிறது. பெண்ணியம் என்பது ஒடுக்கப்படும் பெண்களாகிய எமது உணர்வு நிலையிலிருந்து உருப்பெற்றது. காலங்கள் தோறும் பெண்ணியம் வெவ்வேறு பொருள்களில் பயன்படுத்தப்பட்டது. பெண்ணியம் (Feminism) என்ற சொல் 17-ம்

நூற்றாண்டில் புழக்கத்திற்கு வந்தது. பரந்துபட்ட பொருளில் அந்தச் சொல் பெண்களின் சமத்துவத்தைக் குறித்தது; ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி பெண்ணியம் என்ற பொருள் தரும் ஆங்கிலச் சொல்லை இவ்வாறு விவரிக்கிறது.

'**Feminism** A movement for the recognition of the claim of women for right equal to those possessed by men'

மேற்கத்தியப் பெண்கள் தங்களது சமூக ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடினர். இன்றைய மேற்கத்தியப் பெண்ணியமும் தெற்காசியப் பெண்ணியமும் சிறிது வேறுபட்டது.

1. 'Separatism' - பெண்கள் தனியாக ஆண்களைச் சேர்த்துக் கொள்ளாமல் போராட்டக் களத்தில் இறங்குவது.
2. 'Non hierarchical collectives' - அதிகார வட்டாரங்கள் இல்லாத குழுமங்கள்.
3. 'Battered Homes' - பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அற ஆதரவு தருவதற்கான இல்லங்கள் என்ற கட்டமைப்புகளைக் கொண்டு மேற்கத்திய பெண்ணியம் வேறுபட்டிருக்கிறது.

இவை புறவேறுபாடுதான். தெற்காசியப் பெண்ணியம் ஆண்களின் துணை கொண்டுதான் பெண் விடுதலையை வென்றெடுக்க முடியும் என நம்புகிறது. ஒரே நிலையில் உள்ள பெண்கள் மத்தியிலும் கூட ஆண் ஆதிக்க உணர்வுகளின் காரணங்கள் பற்றியும் வர்க்க/இன/பாலினச் சார்பற்ற ஒரு சுரண்டலற்ற சமுதாயத்தை நிர்மாணிப்பது சம்பந்தமாகவும், மாறுபட்ட பெண்ணிய கருத்தோட்டங்கள் நிலவுகின்றன. எனவே பெண்ணியத்தை வரையறுப்பது சர்ச்சைக்குரியதாகிறது. எனினும் பெண்ணியத்தின் பரந்துப்பட்ட வரையறையாக இன்று இருப்பது இதுதான். “சமூகத்திலும் வேலைத்தளத்திலும், குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்கள் உணர்வு நிலைகளும், இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுப் பூர்வமான நடவடிக்கைகளும்” இந்த வரையறையை பங்களாதேஷ், இந்தியா, நேபாள், பாக்கிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளின் பெண்கள் ஒரு பட்டறையில் ஏற்றுக் கொண்டது பெண் ஒடுக்குமுறை வடிவங்களை அடையாளம் காணும் ஆணும், பெண்ணும் அவர்கள் ஒத்துக்கொண்டாலும் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் பெண்ணியவாதி ஆகின்றனர். பெண் ஒடுக்கு முறையை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எந்த வடிவத்தையும் எடுக்கலாம். உதாரணமாக ஒரு தனிப்பெண் தான் சிறுமைப்படுத்தப்படுவதை நிறுத்த முடிவு செய்வதை, ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்து பொருளீட்ட

முனைவதை, மதத்திற்குள் மறைந்துகொண்டுள்ள பெண்எதிர்ப்புக் கருத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பதை (தஸ்லிமா பானு) அல்லது குழந்தைகள் பெற்றுக் கொள்வதில்லை என்று தீர்மானிப்பதை மற்றைய நிறுவன ரீதியான போராட்டங்களைப் போலவே பெண்ணிய நடவடிக்கைளாகக் கருதுகிறோம். ஆக்கபூர்வமாகச் செயல்படுவதற்கு ஓர் அமைப்புத் தேவைப் பட்டாலும், எந்த அமைப்பைச் சாராதவரும் கூட பெண்ணியவாதியின் நிலைப்பாட்டை எடுக்கலாம்.

மேற்கத்திய பெண்ணியத்திற்கும் தெற்காசிய பெண்ணியத்திற்கும் உள்ள வேறுபாடு இதுதான். அவர்கள் புறநிலை சுதந்திரத்திற்காகப் போராடினர். இவர்களின் அக்கால மரம்போல் ஆழ்ந்து போயிருந்த தந்தை வழிச் சமூகம் நிலைநிறுத்தியிருந்த சகல அமைப்புகளிலுமிருந்த அடக்குமுறையிலிருந்து விடுதலை வேண்டுகின்றனர். உலகப் பெண்கள் ஒன்றிணைந்து ஒத்த பெண்ணியக் கோட்பாட்டை உருவாக்க முயற்சிக்கின்றனர். இப்போதைய ஒன்றுபட்ட பெண்ணியக் கோட்பாடு இதுதான். ஆங்கிலத்தில் 'Deconstruction' என்று கூறப்படுகிற சமூகத்தின் மத, கலாச்சார, குடும்ப அமைப்புகளைப் பெண் எதிர்ப்புப் பகுதிகளை அடையாளம் கண்டு அழித்து மறுதீர்மானம் செய்தல்.

பெண் உரிமைகளுக்காகவும், விடுதலைக்காகவும், சராசரி ஆண்களிலிருந்து சற்று வேறுபட்ட ஆண்கள் ஈடுபட்டிருக்கின்றனர். உதாரணமாக சீனாவின் ஹங்யு-வேய் என்பவர் பெண்களின் பாதக் கட்டுகளையும், பெண்கள் மீதான ஒடுக்குமுறையையும் தாக்கினார். எகிப்தில் அகமட்ஃபெயர் "ஒரு காலுக்கு மேல் இன்னொரு கால் (One leg crossed over the other) என்ற நூலை *1855*-ஆம் ஆண்டில் எழுதினார். அதே காலத்தில் காசிம் அமீன் என்பவர் "புதிய பெண்" (New Woman) என்ற நூலை எழுதினார். ஈரானில் *19*-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் பலதார மணம் பெண்களை ஒதுக்குதல் போன்றவற்றை எதிர்த்து பல ஆண்கள் பெண்களை ஆதரித்து நின்றிருக்கின்றனர்.

இந்தியாவில் இராஜாராம் மோகன்ராய் தம் அண்ணன் இறந்த போது அண்ணியை உயிரோடு சிதையில் போட்டதைப் பார்த்து எதிர்த்து குரல் கொடுத்திருக்கிறார். அப்போது குழந்தையாய் இருந்த அவர் குரல் எடுபடவில்லை. அனல் தாங்காமல் எழுந்து ஓடிவந்த அந்தப் பெண்ணைச் சுற்றியிருந்தவர்கள் தடியால் அடித்துச் சிதைக்குள் தள்ளினர். பெண்ணைத் தீக்குளிக்க வைக்கும் இந்த ஸ்திதி சீதையைத் தொட்டு, பெயர் குறிப்பிடப்படாத எத்தனையோ பெண்களை எரித்து ரூப்கன்வரைப் பற்றித் தமிழகத்தின் பலதாரப் பெண்களின் சில தாரங்களைத் தகித்து எரிந்து கொண்டேயிருக்கிறது. வரதட்சணை கொண்டுவராத பெண்களை

மட்டும்தான் இந்தத் தீ வாட்டும். ஸதியைப் பாராட்டும் சதிகாரக் கும்பல் ஒரு சங்கத்தையே வைத்திருக்கிறது என்று ரூப்கன்வரை எரித்தபோது பத்திரிகைகள் எழுதின. பெண் உயிர் பாதுகாக்கும் பொறுப்பு பெண்ணியம் பேசுவோர்க்கு ஏற்பட்டிருக்கிறது.

இராஜாராம் மோகன்ராயைத் தொடர்ந்து ராமகிருஷ்ணர், காந்தி, தமிழ்நாட்டில் திரு. வி.க., சுப்பிரமணிய பாரதி, பாரதிதாசன் போன்றவர்கள் தமது குரல்களை எழுப்பினர். பெண்மை இல்லையேல் ஆண்மை இல்லை என்றார் திரு.வி.க. பெண் விடுதலை பெறாதவரையில் நாடு விடுதலை பெறுதல் இயலாத ஒன்று என்று சொன்னார், காந்தியடிகள். இதையே "பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டு மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற் கொம்பே" என்று பாரதிதாசன் பெண் விடுதலைக்காகக் கோபக் குரல் கொடுக்கிறார். ஒரு தாயின் வயிற்றில் பிறந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் எத்தனை எத்தனை வேறுபாடான சமூக மரியாதை கிடைத்திருக்கிறது என்று கண்டவர்கள் பலர்; இருந்தாலும் சொன்னவர்கள் ஒரு சிலர் மட்டுமே.

பெண்களுக்கென விசேஷமாக வேலைகள் ஒதுக்கப்பட்டன. அவர்களுக்கென கை, கால்கள் சுதந்திரமாக அசையவிடாமல் பிணைத்துப் போடும் உடைகள் ஒதுக்கப்பட்டன. அவர்களுக்கென வீட்டுக்குள்ளே முடக்கிவைக்கும் உடல் வலுவை வளர்க்காத, தட்டாங்கல், பல்லாங்குழி, தாயம் போன்ற விளையாட்டுகள் ஒதுக்கப்பட்டன. அவர்களுக்கென வருமானம் தராத நகை போன்ற சொத்துக்கள் ஒதுக்கப்பட்டன. அவர்களுக்கென வீடுகளுக்குள்ளேயே கொண்டாடப்படும் சின்ன சின்ன மதப் பண்டிகைகள் ஒதுக்கப்பட்டன. அவர்களுக்கென மனையியல் கல்வி ஒதுக்கப்பட்டது. ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இவர்களுக்கென சில குணங்களும் ஒதுக்கப்பட்டன. "பெண் ஏன் அடிமையானாள்" என்ற நூலில் தந்தை பெரியார் பெண்களுக்குத் தனி குணங்கள் ஒதுக்கப்படுவதைச் சாடுகிறார். பெண்களுக்கு அடக்கமும் மென்மையும்; ஆண்களுக்கு வீரமும், கோபமும்; பெண்களுக்கு நாலு வகைக் குணம்; இல்லாத குணங்களை ஏற்றிச் சொல்வதால் பெண் இந்த குணங்களைக் கொண்டவளாகக் காட்டி நடிக்க வேண்டியிருக்கிறது. பொய்மைகளுடனும் சட்டிப் பானைகளுடனும் தான் விளையாட வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படுகிறாள். போலியான கீழ்ப்படிதலுக்கும் அடக்கத்திற்கும் பெண் நிர்ப்பந்திக்கப் படக்கூடாது. பெண்மையையும், தாய்மையையும் ஒன்றுபடுத்திப் பெண்ணின் இலக்கு தாயாவதில்தான் தங்கியிருக்கிறது என்று குழந்தை பெற்றுத் தரக் கட்டாயப்படுத்தப்படக் கூடாது. பெண்ணின் தனித்துவத்தையும், திறமையையும் முழுமையாகப் பயன்படுத்த சமூக

வாய்ப்புகள் வேண்டும்; சமமான வாய்ப்புகளின் அடிப்படையிலான ஒரு சுதந்திரமான தேர்வினைச் செய்து கொள்ள அவளுக்கு உரிமை வேண்டும். இவை போன்றவை பெண்ணியவாதிகளின் வெளிப்படையான நியாயமான அக்கறைகளாகும். மக்கள் தொடர்பு சாதனங்களாக சினிமாவும், விளம்பரங்களின் மூலம் தொலைக்காட்சியும், வானொலியும் ஆணாதிக்க சமுதாயத்தை நிலை நிறுத்துகின்றன. ஒரு ஆதிக்க நாயகன் சாதிக்க வந்தால் அடங்குதல் முறைதானே என்கிறது ஒரு சினிமா பாட்டு. அடுத்தவர்களின் பாராட்டைப் பெறுவதற்காகத் துணி துவைப்பவர்களாக, வருமானம் தராத தொழிலைச் செய்பவர்களாக வருபவர்கள் பெண்கள் மட்டுமே. இத்தகைய ஆணாதிக்க சமூகத்தின் அடக்கு முறை வடிவங்களை பெண்ணியவாதிகள் எதிர்க்கின்றார்கள். பெண்ணியவாதிகளான எமது உணர்வுகள் பல்வேறு கோணங்களில் விரிவடைந்து, விசாலமடைந்து இறுதியாக எல்லா விசயங்களும் எம்மைப் பாதிப்பதால் எம்மோடு சம்பந்தப்பட்டவை என்று நாம் உணர்கிறோம். எனவே கிராம சுகாதாரச் செவிலியரின் நடைமுறை வாழ்க்கையிலுள்ள பிரச்சினைகள் ஒரு தனிமனிதப் பிரச்சினை அல்ல. அவை எம்மைச் சேர்ந்தவை. அவர்கள் வாழ்க்கையில் மனித இறுக்கங்களும் வன்முறைகளும் மிக அதிகமாகவே காணப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தில் கிராம சுகாதாரச் செவிலித் தோழியர் ஒருவர் சுகாதார கிளை நிலையத்திலே தாக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டார். இக்கட்டுரையின் முன்பகுதியில் தோழியர் ஒருவர் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடப்பட்டது. தஞ்சை மாவட்டம் முருக்கங்குடியில் ஒரு தோழியர் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தப்பட்டது. சில மருத்துவர்கள் தங்கள் உடைகளைத் துவைத்துப் போடும்படியும் தங்கள் விருப்ப நாயகிகளாய் இருக்கும்படியும் வற்புறுத்துகின்றனர். வஞ்சிக்கப் படவும், கட்டளையிடப்படவும் மறுக்கும் பெண்கள் குழப்பங்களை உருவாக்குவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றார்கள். பெண்களையும், அவர்களுடைய ஆளுமைகளையும் கசக்கிச் சிதைக்கும் தந்தை வழிச் சமூக அமைப்பு இது.

எத்தனை பணிகளை இப்பெண்கள் செய்கின்றனர். குழந்தை பிறக்கும் முன்பே தாயை முன் கவனிப்பு செய்தல், குழந்தை சரியான வளர்ச்சியடைகிறதா என்று கவனிக்கக் கருவுற்ற பெண்ணின் வயிற்றை அளவு நாடாவால் அளவெடுத்தல், பிறந்தவுடன் குழந்தை $2^1/_2$ கிலோவில் இருந்து 3 கிலோவுக்குள் இருக்கிறதா என்று எடை பார்த்தல், வளரும் குழந்தைக்கேற்ற உணவு முறைகளைச் சொல்லித்தருதல், இந்தந்த சத்துக்கள் இந்தந்த உணவுகளில் இருப்பதைக் கிராமப் பெண்களுக்கு விளக்குதல், இத்தனை செய்யும் செவிலி தான் தாயாகும் போது என்ன

நிலை? கும்பகோணத்தைச் சேர்ந்த ஒரு பெண் கருவுற்றிருந்த நிலையில் சரியான சரிவிகித உணவு கொள்ள வழியில்லாமல் உணவுப் பற்றாக்குறையினால் அவர் உயிர் பிரிந்தது என்பது எவ்வளவு வேதனை தரும் செய்தி. பெண்களில் உயிர்கள் எவ்வளவு மலிவாக்கப்பட்டிருக்கின்றன.

கிராம சுகாதாரச் செவிலியர் கிராமப் பெண்களின் அறியாமையோடு போராட வேண்டியிருக்கிறது. குழந்தைக்கு நோய்வந்தால் சாமியின் சோதனை என்று நோய்க்கு வைத்தியம் செய்வதில்லை. குழந்தைக்கு வரும் ஆறு கொடிய நோய்களில் (காசநோய், தொண்டையடைப்பான், கக்குவான் இருமல், இரண ஜன்னி, இளம்பிள்ளை வாதம், தட்டம்மை) மிகக் கொடிய பின் விளைவுகளை உண்டாக்கக்கூடியது தட்டம்மை. இதை கிராமப் பெண்கள் "மாரியாத்தாவின் விளையாட்டு" என்று கருதுகின்றனர். பூசாரியைக் கூட்டி வந்து வேப்பிலை அடித்துக் குழந்தையை மேலும் தொந்தரவு செய்கின்றனர்.

நமது நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 220 லட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. இவற்றில் ஒரு வயதாகும் முன்பே 22 லட்சம் குழந்தைகள் இறந்துவிடுகின்றன. தமிழ்நாட்டில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சம் குழந்தைகள் ஒரு வயது முடியும் முன்பே இறந்து விடுகின்றன. இதற்குக் காரணம் குழந்தைகளைப் பாதிக்கும் முன் குறிப்பிடப்பட்ட ஆறு கொடிய தொற்றுநோய்கள்; இவைகளைப் பற்றி கிராமப் பெண்களுக்கு விளக்கிச் சொல்லி, தடுப்பூசிப் போடுகின்றனர் இந்தச் செவிலியர்.

குடும்ப அட்டைபோட்டு அடுத்தவரின் குடும்பத்தைப் பேணிக்காக்கும் இவர்களில் பெரும்பாலோர்க்கு, குடும்ப வாழ்க்கை சரியாக அமைவதில்லை. வேலைப்பளு காரணமாகத் திருமணம் வேண்டாம் என்றிருக்கும் சிலர் வரதட்சணை காரணமாக நின்றுபோன திருமணங்கள், பொருளீட்ட விட்டுச் சென்றிருக்கும் கணவன், வெளிப்படையாகவே மனைவி வேண்டாம் என்று விட்டுச் சென்றிருக்கும் கணவன், திருமணம் அமையாததாலோ, அமைந்த திருமணம் வெற்றி பெறாததாலோ, இரண்டாந்தரமான, இரண்டாந்தாரமாய் வாழ வேண்டிய நெருக்கடி நிலை சிலருக்கு.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பணிபுரியும் கிராம சுகாதாரச் செவிலியர் சில செய்திகளைத் தெரிவித்தனர். கருவுற்ற பெண்ணின் வயிற்றமைப்பைக் கவனித்து வயிற்றிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்று சில பெண்கள் சொல்லிவிடுவார்களாம். பெண் குழந்தையானால் கரு கலைப்பு செய்துவிடுவார்கள். அப்படியும் பெண் கரு தப்பினால் பிறந்தவுடன் கோழிக்குழம்பு, எருக்கம்பால் அல்லது நெல்மணி போட்டுக்

குழந்தையைக் கொன்று விடுவார்களாம். கிராமங்களில் இந்த நிலை என்றால் நகரங்களில் கரு *15* வாரங்கள் வளர்ந்தவுடன் அமினோசிந்தஸ் என்ற முறையில் குழந்தை ஆணா பெண்ணா என்று கண்டுபிடித்து பெண் கருவானால் அதைக் கலைத்துவிடுகின்றனர். அதையும் மீறிப் பிறக்கும் பெண் குழந்தைகள் வீதியோரங்களில் வீசி எறியப்படுகின்றனர்.

'மங்கையராகப் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை சொன்னார். ஆனால் இங்குப் பெண்ணுக்கு பிறக்கும் உரிமை கூட மறுக்கப்படுகிறது. பெண்ணைப் பிறக்க விடாமல் தடுப்பது, பிறந்த பின் கொலை, வளரும் போது நிராகரிப்பு, திருமணத்தில் வரதட்சணைக் கொலை, தற்கொலைகள், கற்பழிப்புக் கொலைகள், இப்படியாகப் பெண்களின் மரண விகிதம் அதிகரித்துக் கொண்டே போகிறது.

*32,87,263* சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்தியாவில் *1981*ஆம் ஆண்டில் இந்திய மக்கள் தொகை *68,33,29,097*. இந்த மக்கள் தொகை வளர்ந்து கொண்டே வந்து *1991*ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி *84,39,30,861* ஆக அதிகரித்துள்ளது. மொத்த ஜனத்தொகை அதிகரித்தாலும் ஆண் பெண் விகிதாச்சாரத்தில் பெண்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. *1901*இல் இந்தியாவில் *1000* ஆண்களுக்கு *972* பெண்கள் இருந்தனர். இந்த விகிதாச்சாரம் குறைந்து கொண்டே வந்து *1981*-இல் *1000* ஆண்களுக்கு *934, 1991*இல் *929* பெண்கள் ஆகவும் குறைந்தது. தமிழக மகளிர் நிலையும் இப்படிப்பட்டதுதான். *1981*இல் *1000* ஆண்களுக்கு *977* பெண்கள் இருந்தனர். *1991*ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை *972* ஆகக் குறைந்துள்ளது. தமிழகத்தின் மொத்த எண்ணிக்கை *1981*இல் *4,84,08,077*. இது, *1991*ல் *5,56,38,318* ஆக அதிகரித்தது. ஆனாலும் பெண்கள் விகிதம் குறைந்தது.

பெண்கள் உடல் வலுவுள்ளவர்கள்; எந்த நோயையும் எதிர்த்து வாழும் சக்தி இவர்களுக்குத்தான் அதிகம். அதனால்தான் இந்த அளவு விகிதமானது இருக்கிறது. மதுரை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், மட்டுமல்ல; பரவலாக எல்லா இடங்களிலும் பெண் குழந்தைகள் தாய்ப்பால் கிடைக்காமலும், வேறு உணவு கிடைக்காமலும், நோய் வந்தால் கவனிக்கப் படாமலும் கன்னியாய் இருக்கும் காலத்தில் கற்பழிக்கப்பட்டால் பெற்றோரேக் கொலை செய்துவிடுவதும், மாமனார் வீட்டில் அடுப்பு வெடித்து சாவதும் ஆகிய செயற்கையான மரணங்களால் பெண்கள் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. இப்படியே விட்டுவிட்டால் இந்தியா மறுபடியும் மகாபாரதம் ஆகிவிடும். இராமாயணக் காலத்தில் ஓர் ஆண் மூன்று பெண்களை மணக்க முடிந்தது. பின்னர் பெண்களின் எண்ணிக் குறைந்து

கொண்டே வந்திருக்க வேண்டும். மகாபாரதத்தில் காந்தாரிக்கு *100* ஆண் குழந்தைகள், மாதரிக்கும் குந்திக்கும் சேர்ந்து *5* ஆண் குழந்தைகள். பெண்கள் எண்ணிக்கை குறைவாக இருந்ததால் *5* ஆண்களும் ஒரு பெண்ணை மனைவியாக்கி வாழவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கலாம். பெண்ணியமும் மனிதாபிமானம் உள்ள மற்றவர்களும் பெண்கள் சாவைத் தடுக்காவிட்டால் இந்தியாவுக்கும், தமிழகத்திற்கும் அயல்நாடுகளில் இருந்து பெண்ணை இறக்குமதி செய்ய வேண்டியதாகிவிடும்.

அண்டை மாநிலமான கேரளாவில் பெண்கள் மதிக்கப் படுகின்றார்கள். அங்குப் பெண்கள் எண்ணிக்கை ஆண்களை விட அதிகமாக இருக்கிறது. *1881*-ல் *1000*க்கு *1032* பெண்கள்; *1991*-ல் *1000*த்திற்கு *1040* பெண்கள் உள்ளனர். கேரளத்தில் பெண்ணாயிருப்பது சிறுமைக்குரிய செய்தியல்ல. தமிழகத்தில் ஓர் ஆணைப் பார்த்து ஐயா நீங்க பெண் மாதிரி என்று சொல்லுங்கள்; அவர் கோபம் கொள்வார். ஒரு பெண்ணைப் பார்த்து அம்மா நீ ஆண் மாதிரியாய் இருக்கிறாய் என்று சொன்னால் அவள் பெருமை கொள்வாள்.

இந்தச் சமூகத்தில் ஆணாய் இருப்பதும், ஆண் மாதிரி இருப்பதும் பெருமைக்குரியது. பெண்ணாய் இருப்பதும், பெண் மாதிரி இருப்பதும் சிறுமைக்குரியது என்ற கருத்துகள் நிலவுகின்றன. இது ஆண்களால் மட்டும் நிறுவப்பட்ட திருமணம், கலாச்சாரம், மதம், மொழி, வர்க்கம், இனம், இலக்கியம், குடும்பம் போன்ற அமைப்புகளைக் கொண்ட சமுதாயம் இங்கே நிலவுகின்ற கருத்துகள் ஆண்களால் பரப்பப்பட்டவை. பெண் ஆணின் வசதிக்காக இயக்கப்படுகின்ற கருவி; ஊதியமில்லாமல் உழைத்து உழைத்து ஆண்களுக்கு அறிவியல், கலை, அரசியல், பொருளியல் போன்றவற்றில் ஈடுபட நேரத்தைப் பெண்கள் தந்திருக்கின்றனர். ஆண்கள் வரலாறு படைக்க, பெண்கள் வீட்டில் முடங்கிக் கொண்டனர். இந்த பாரபட்சத்தில் உலகில் என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது?

வரலாறு சில ஆண்கள் செய்த அக்கிரமங்களின் வெளிப்பாடேயாகும். மிக அதிகமான மனித உயிரைக் கொன்றவர்கள் மிகச் சிறந்த வீரர்கள் என்று பாராட்டப்பட்டு உலகின் முக்கிய இடங்களில் இவர்களுக்குச் சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவர்களுக்கு நாட்டை ஆளும் அதிகாரமும் தரப்பட்டிருக்கிறது.

ஆண்கள் பெருமைப்படுத்தப்பட்டார்கள்; பெண்கள் சிறுமைப் படுத்தப்பட்டார்கள்; இலக்கியங்களும், மதங்களும் பெண்ணைப் பெருமைப் படுத்துவது போல் சிறுமைப்படுத்தின. பெண் விடுதலை பாடிய பாரதி கூட பெண்களின் உணர்வு நிலைகளைப் புரிந்து கொள்ளவில்லை; 'மாதர்

அறங்கள் முன்பைவிட மாட்சிமை பெறச் செய்து வாழ்வமடி' என்று மாதருக்கென அறங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்கிறார். 'காதலொருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யானினும் கைகொடுத்து' என்பதில் பெண் ஆணின் உதவியாளராக வர்ணிக்கப்படுகிறாள். "பாட்டுக் கலந்திடவே அங்கே ஒரு பத்தினிப் பெண்வேண்டுமென்பதும்" பெண் ஆணின் அனுபோகப் பொருளாக, பத்து பன்னிரண்டு தென்னை மரங்களோடு, காணி நிலத்தோடு, கத்தும் குயிலோசையோடு அனுபோகப் பொருள்களின் வரிசையில் சேர்க்கப்படுகிறாள். பெண்ணின் புற அழகைப் பாடிப் பாடி கவிஞர்கள் சலிக்கவே இல்லை. இந்தப் பாடல்கள் எமது மனநிலைகளை, தன்மானத்தைப் பாதிப்பதாக நாங்கள் உணர்கிறோம். கிராமச் சுகாதாரச் செவிலியர் நடந்துபோகும் போது கிளை சுகாதார நிலையங்களில் அமர்ந்து ஏடுகளில் பதிவுசெய்யும்போது அவர்களை நோக்கிப் பாடல்களை வீசுகின்றனர். பெண்களின் ஆளுமையை, தனித்துவத்தை, திறமையை, தீர்மானிக்கும் திறனை ஓர் அச்சுறுத்தலாகவே ஆண்கள் பார்க்கின்றனர்.

எல்லா மதங்களுமே பெண்ணை இரண்டாந்தர குடிமகளாகவே கருதுகின்றன. இதை எதிர்க்கும் அல்லது மறுக்கும் பெண்களை ஒரு சமூக விரோதியாக மதவாதிகள் கருதுகின்றனர். மதங்கள் ஆண்களே மனிதப் பிறவிகள் என்றும், பெண்கள் மனிதன் உய்யும் வழியில் தடைக்கல் என்றும் கருதின. மண், பெண், பொன் இந்த மூன்றின் மேலுள்ள ஆசையை ஆண்விட வேண்டும் என்றும் பெண்கள் மாயைப்பேய் என்றும் சமயங்கள் வர்ணித்தன. அதனால் பெண்களின் வாழ்க்கை நெறியிலே கொந்தளிப் பேற்பட்டது.

பெண்கள் சில மந்திரங்களைச் சொல்ல அருகதையற்றவர்கள் என்று தடை செய்தனர்; வீரத்திற்குப் பெண் தெய்வம், ஆனால் வீட்டில் இருக்கும் பெண்ணோ அஞ்சியவளாக இருக்க வேண்டும். கல்விக்குப் பெண் தெய்வம்; வீட்டில் பொருள் கஷ்டம் வந்தால் பெண் படிப்பைத்தான் முதலில் நிறுத்த வேண்டும். செல்வத்திற்குப் பெண் தெய்வம்; வீட்டில் செலவு செய்ய பெண் ஆணை எதிர்பார்க்க வேண்டும். நடைமுறை வாழ்க்கைக்கும் மதத்திற்கும் எவ்வளவு முரண்பாடுகள். தெய்வங்களிலும் ஆண் தெய்வங்கள் உயர்வுடையவர்கள். பெண் தெய்வங்கள் கணவனுக்கு அடங்கி ஒடுங்கி நடக்க வேண்டும். இல்லாவிட்டால் கடவுளே மனைவியரைத் தள்ளிவைத்துவிடுவார். சிவபெருமான் தம் சொல்லுக்குக் கட்டுப்படாமல் தன் தந்தை தட்சனைப் பார்க்கச் சென்றதற்காகப் பார்வதி தேவியை வெறுத்து ஒதுக்கினார். பெண் ஆணைச் சார்ந்துதான் இருக்க வேண்டும் என்ற கருத்தை மதங்கள் நிலைநிறுத்துகின்றன.

நியாயப்படுத்துகின்றன. இதை முன்னுதாரணம் காட்டி, பல ஆண்கள் மனைவியை அவள் தாய் தந்தையரைப் பார்த்து வர அனுமதிப்பதில்லை.

பெண்ணைச் சிறுமைப்படுத்துவதில் வாழ்க்கையின் எல்லா அமைப்புகளும் ஒட்டு மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்துக்கொண்ட மாதிரி தோன்றுகின்றது. இதில் தமிழ் மொழியும் தன் பங்கைச் செய்கிறது. கிராம சுகாதாரச் செவிலியர் தற்காலக் கருத்தடை, நிரந்தர கருத்தடை பற்றிப் பேசும்போது, பெண்களை ஊக்குவிக்கும்போது சில ஆண்கள் இவர்களை ஏளனமாகப் பேசுகின்றனர். பெண் என்று பொருள் தரும் சொல்லுக்கே சிறுமையைச் சேர்த்துப் பேசுகின்றனர். 'என் மனைவி கருத்தடை செய்துகொண்டு நலம் குன்றிப் போனால் நீ எனக்கு மனைவியாவாயா என்று கொச்சையாகப் பச்சையாகப் பேசுகின்றனர்.

குடும்பக் கட்டுப்பாடு செய்ய ஆள் அழைத்துச் செல்வதில் பல சங்கடங்கள் உண்டு. அரசு ஒராண்டுக்கு இவ்வளவு பேர் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள வேண்டும் என்று ஒரு இலக்கை நிர்ணயிக்கிறது. இந்த இலக்கை எட்ட மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியரும், ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் கிராம நல அலுவலர் தையல் ஆசிரியைகள் போன்றே களப்பணியாளர்களும், பள்ளி ஆசிரியர்களும் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஆட்களைக் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துக் கொள்ளத் தயார்செய்யவேண்டும்.

இந்த ஆள் பிடிக்கும் போட்டியில் கிராம சுகாதாரச் செவிலியர்களும் பங்குகொள்ள வேண்டியிருக்கிறது. யாராவது ஆள் கிடைத்தால் அரசு கொடுக்கும் பணத்தோடு தங்கள் சம்பளத்திலிருந்தும் அவர்கள் ஒரு தொகையைக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை நேரிடுகிறது. குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நபர் கிராக்கி செய்து கொள்கிறார். இந்தச் சங்கடம் காரணமாகவும் ஏற்கனவே அவர்களுடைய வேலைப்பளு காரணமாகவும் அவர்கள் நிரந்தர குடும்பக் கட்டுப்பாட்டுக்கான ஆள்பிடிக்கும் வேலையை செய்ய விரும்பவில்லை. இது அவர்கள் வேலைப்பளுவில் சேர்ந்ததல்ல என்கின்றனர். எங்கள் வேலையல்லாத வேலையை எங்களைச் செய்யச் சொல்லி வற்புறுத்தி நாங்கள் செய்ய முடியாமல் போனபோது எங்களுக்குத் தண்டனை தருவதாக இடமாற்றம் செய்வது சரியல்ல என்கின்றனர். எங்கள் பணி கிராமக் குழந்தைகள் வயிற்றில் இருக்கும்போதும், பிறந்த பின்னரும் அவர்களுக்கு நோய்கள் வராமல் தடுப்பூசிகள் போட்டு குழந்தை வளர்ச்சியை எடைபோட்டு பார்த்து அறிந்து சத்துணவும், நீர்ப்போக்கு ஏற்பட்ட காலத்தில் உப்புச் சர்க்கரை நீர் கொடுத்தும் பாதுகாத்து குறிப்பிட்ட

வயது வந்தவுடன் ஊட்டச் சத்துப் பணியாளர்களில் பொறுப்பில் விடுகிறோம். அதே மாதிரி, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள தகுதியானவர்களின் முகவரியைத் தருகிறோம்.

நாங்கள் தகுதியான தம்பதியர் பதிவேடு வைத்திருக்கிறோம். அறுவை சிகிச்சை முடிந்தவுடன் அப்பெண்ணின் உடல் நலனைக் கவனித்துக் கொள்கிறோம். இது தவிர தற்காலிகக் குடும்பக் கட்டுப்பாட்டு முறை பற்றியும் சொல்லித் தருகிறோம். நிறைய வேலைகள் இருந்தால் எந்த வேலையையும் சரியாகச் செய்ய முடியாது என்றனர். இப்படியாக வேலைத் தளத்தில் இப்பெண்களுக்கென உள்ள பிரச்சினைகள் பல. தங்கள் பிரச்சினையிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள இவர்கள் தனிப் போராட்டங்களும் நடத்துகின்றனர். இவர்கள் போராட்டங்கள் பெண்ணியப் போராட்டத்தின் ஒருபடி நிலையே.

தங்களுடைய விடுதலைக்காவும் உரிமைகளுக்காகவும் போராடும் கிராமச் சுகாதாரச் செவிலியர் தங்கள் இயக்கத்தைக் கட்டுப்படுத்தாத, எளிதாக இயங்க வாய்ப்பாயிருக்கின்ற உடை வேண்டும்; தாங்கள் வேலைத் தளத்திற்குச் செல்ல பொருட்களைத் தூக்கிச் செல்வதற்கென்றே வடிவமைக்கப்பட்ட சைக்கிள்கள் வேண்டும்; கிளை சுகாதார நிலையம் அடிப்படை வசதிகளோடு ஊருக்குள்ளே பாதுகாப்பான இடத்தில் கட்டப்பட வேண்டும். ஊருக்கு வெளியே நிலையங்கள் இருப்பதால் தங்களுக்கு ஆபத்து என்கின்றனர். இப்போது பெண்கள் தேவையான நேரத்தில் தேவையானவைகளைப் பற்றிப் பேச ஆரம்பித்திருக்கின்றனர். இது மாற்றத்தின் முதற்படி.

பெண்ணியம் இலக்கை அடைய சமூக சாராம்சத்தையே மாற்ற வேண்டியிருக்கிறது. ஆண்கள் மனநிலையையும் மாற்ற வேண்டியிருக்கிறது. நல்ல திடகாத்திரமுள்ள நோய் நொடியில்லா வயது வந்த ஆணும் கூட தன்னை ஒரு பெண் பராமரிக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கின்றான். தற்சார்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் வேண்டும். பெண்ணைப் போலவே ஆணும் சமூக நிர்பந்தங்களின் கைதிகளாகி ஒரு போலித்தனத்தை ஏற்றுக் கொள்கிறான். இது வரையில் ஆண்கள் மட்டும் ஆட்சியை எடுத்துக் கொண்டு போர்க்களத்தை ஒரு கொலைக்களமாகக் கண்டார்கள். இனி அமைதி வேண்டும். இதுவரை பல கோட்பாடுகள் மனித குலத்தின் பாதியை செயலாக்கத்திற்காக இணைத்துக் கொள்ளவில்லை; இப்போது பெண்ணியம் ஆண்களையும் சேர்த்துக் கொண்டு பிற கோட்பாடுகள் காட்டத் தவறிய இலக்கை செய்து காட்டுவதற்கான புறநிலை உண்மைகளையும் அகநிலை உண்மைகளையும் ஒன்றுபடுத்திப்

பொருளாதார/சமூக/அரசியல்/கலாச்சாரம் போன்ற அனைத்துக் கோணங்களிலும் ஒரு தொலைநோக்குத் திட்டத்தை உருவாக்க முயன்று கொண்டிருக்கிறது. அந்த மறு நிர்மாணம் பெற்ற சமுதாயத்தில்,

1. ஆண்களோடு, பெண்களும் செழித்து வளர அனுமதிக்கப்படுவர்.

2. கலாச்சாரப் பொய்மைகளின் வேர்கள் கிள்ளி எறியப்பட்டு புதிய கலாச்சாரம் உருத்தோன்றும்.

3. அனைத்து மொழிகளிலுமுள்ள ஆண்-பெண் பாரபட்சத்தன்மைகள் அழிக்கப்பட்டு மொழி இயல்பானதாக இருக்கும்.

4. ஆணோ, பெண்ணோ தன் வாழ்வைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள அனுமதிக்கிற ஒரு சமுதாயமாக இயங்கும்.

5. வாழ்க்கைத் தேவைகள் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

6. குறைவான அதிகாரத் தலையீடு இருக்கும்.

7. பொருளாதார வேறுபாடுகள் குறைக்கப்படும்.

"பெண்ணிய சமுதாயத்துக்கான விதை இன்று
விதைக்கப்பட்டுவிட்டது; விளைவு நாளை நிச்சயம் தானே!"

பயன் நூல்கள்

1. புதிய குரல், (பதி) உதயா.

2. பெண் ஏன் அடிமையானாள்? ஈ.வே.ரா. பெரியார்.

3. பெண்நிலை வாதம்; சில கேள்விகள், மொலீனா தேன்மொழி.

4. மனுஷி, (பதி) மது. சிஷ்வார்.

5. மனோரமா இயர் புக், 1991, 1992.

# பணிச்சந்தையில் பால் அடிப்படை பேதம்

நேன்சி டேவிட்

பேதங்காட்டல், பாரபட்சமாக இருத்தல், வேற்றுமை பாராட்டல் என்பது மனித இயல்புகளில் ஒன்றாக இருக்கலாம். ஆண்டவன் கூட சில சமயங்களில் 'எவன்மேல் இரக்கமாயிருக்க சித்தமாயிருக்கிறேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன். இல்லாதவனிடமிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்' என்கிறார். பலன் கருதா தாயன்பு கூட சில நேரங்களில் பிள்ளைகளில் பாரபட்சம் காட்டத்தான் செய்கிறது. விருப்பு வெறுப்பின்றி சமநோக்கில் காணுதல், நடைமுறையில் செயல்படல் என்பது பண்பட்ட முழுமையான வளர்ச்சியின் முதிர்ச்சியில்தான் எதிர்பார்க்க முடியும். இதை மனித உளவியல் அடிப்படையைச் சார்ந்த ஒரு விளக்கமாகக் கொள்ளலாம்.

ஏற்றத்தாழ்வுகள் மலிந்து கிடக்கின்ற இன்றைய சமுதாயத்தில் சுரண்டல் *(Exploitation)*, பேதங்காட்டல் *(Discrimination)*, சமமின்மை *(Inequality)* போன்ற இடர்ப்பாடுகள் தோன்றுவதோடு வேரூன்றிக் கொண்டும் இருக்கின்றன. ஏற்றத்தாழ்வுகள், வேறுபாடுகள், சமமின்மை போன்றவை தோன்றக் காரணமாக இருப்பவை மனிதனின் மனப்போக்கு, சமுதாய அமைப்பு, பழக்கவழக்கங்கள், பண்பாடு, நம்பிக்கை முதலியனவே. ஆண் பெண் என்ற பாலடிப்படையில் எழுந்த பேதங்கள் காலம் காலமாகப் போற்றப்பட்டு, வளர்க்கப்பட்டு இன்று அசைக்க முடியாத வகையில் ஆணித்தரமாக இடம்பெற்றுள்ளது. இன்று பாலடிப்படையில் எழுகின்ற வேறுபாட்டோடு எப்படி இசைந்து வாழ்வது என்ற முயற்சி செய்து வாழ வழி வகுத்துக் கொள்ளுகிறோமே தவிர அவ்வேறுபாட்டினைப் போக்கும் வழியைச் சிந்திக்க, செயலாக்க முடியாத நிலையில் இருக்கிறோம்.

பேதங்காட்டல் ஒரு சில கட்டங்களில் சூழ்நிலைகளில் நல்ல விளைவுகளைத் தந்தால் அதனால் ஒரு வகுப்பினரோ பிரிவினரோ பாதிக்கப்படாதிருந்தால் அதனை ஒரு வேறுபாடு எனக் கொள்ளாமல் வேண்டியது எனக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக சில பண்டங்கள்

ஒரே தரமாக இருந்தபோதிலும் வெவ்வேறு விலையில் வேறுபட்ட பிரிவினருக்கு அளிக்கப்படுகிறது. இத்தகைய பேதங்காட்டல் சமூக நீதியை நிலைநாட்டவே. ஆனால் இங்குக் கருப்பொருளான பேதம், சமுதாயம் பெண்களைப் பாகுபடுத்துவது மட்டுமல்லாமல் அவர்களுக்குச் சேரவேண்டிய சில உரிமைகளை மறுத்துவிடுகிறது என்பதை விளக்க முற்படுகிறது.

சமூகத்தில் பல்வகையான பாரபட்சங்கள் பெண்களுக்கு உண்டு. ஆனால் இப்பொழிவு பொருளாதாரப் பாகுபாட்டை மட்டுமே கோடிட்டுக் காட்டி மற்ற சமூக, அரசியல் மற்றும் உள்ளம் சார்ந்த பாகுபாட்டினை எதேச்சையாகக் காட்டிச் செல்லவே விழைகிறது.

பொருளியலைப் பொறுத்தமட்டில் வேலை, வருமானம், வருவாய், ஊதியம் இவைதாம் ஒருவரின் வாழ்க்கைத் தரத்தை, பொருளாதாரச் சுதந்திரத்தை நிர்ணயிக்கும் முக்கிய அளவுகோலாகக் கருதப்படுகின்றன. பணி அல்லது வேலை என்பது இந்திய நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவருக்குமான தனி உரிமை. இத்தனி உரிமையைத் தவிர்க்க, நிராகரிக்க எந்தச் சக்திக்கும் அதிகாரத்திற்கும் உரிமையில்லை; ஆகவே, பணிச்சந்தை (Labour Market) எல்லோருக்கும் பொதுவானதொன்று. இச்சந்தை இடர்ப்பாடின்றி இயங்கினால் ஆண் பெண் இருபாலருக்கும் வேலைக்கானத் தகுதிகள் இருப்பின் தங்கு தடையின்றி வேலை கிட்டியே ஆகவேண்டும். ஆனால் நடைமுறையில் வளர்ந்த தொழில் மயமான நாடுகளிலும், வளர்ந்துவருகின்ற மூன்றாம் உலக நாடுகளிலும் பணிச்சந்தையில் பெண்களின் பங்கு (Participation) ஆண்களைவிட வேறுபட்டு குறிப்பாக குறைவாக உள்ளது. இந்நிலையை விளக்க முற்பட்ட பன்னாட்டுத் தொழில் நிறுவனம் (ILO, 1980) உலக மக்கள் தொகையில் பெண்கள் 50 விழுக்காடு இருந்தபோதிலும், உலக மொத்த உழைப்பு நேரத்தில் மூன்றில் இரண்டு பங்கு உழைத்த போதிலும் உலக வருமானத்தில் 10 விழுக்காடு மட்டுமே பெறுகின்றனர். அதுமட்டுமன்றி, உலகச் சொத்தில் 1 விழுக்காடு மட்டுமே அவர்களுக்குச் சொந்தமாக இருக்கிறது. இந்நிலை அவர்கள் பெண்ணாக இருக்கும் ஒரே காரணத்தால்தான் என்று தன் அறிக்கையில் கூறியுள்ளது. இத்தகைய சமமின்மையை விளக்க முற்படுவோமாயின் முதலில் பணிச்சந்தையில் பேதங்காட்டும் செயலுக்கு அடிப்படையாக அமைகின்ற சில கோட்பாடுகளை (Concepts) தெரிந்துகொள்ளுதல் அவசியமாகியது.

புராதன பொருளாதார வல்லுனர்கள் (Classical Economists) பணியாளரின் தேவையும் அளிப்பும் ஊதியத்தை நிர்ணயிக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்தத் தேவை என்ற முக்கியக் காரணி தொழிலாளரின் உற்பத்தித்திறனைச் சார்ந்தது. உற்பத்தித்திறன் மிக்க

தொழிலாளரை முதலாளி அல்லது நிறுவனம் கரம் நீட்டி இழுத்துக் கொள்கிறது. அளிப்பு என்பது தொழிலாளிக்கு அளிக்கப்படும் ஊதியத்தைப் பொறுத்தது. அதிகமான உயர் ஊதியம் என்றால் தொழிலாளி தன் உழைப்பைக் கொட்டிக் கொடுக்கிறான். ஆகவே, பணிச்சந்தை சமநிலையில் (Equlibrium) செயல்பட, பணிச் சந்தையில் பங்கு பெறும் தொழிலாளர்கள் ஒரே சீரான உற்பத்தித் திறனைக் கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்பது அன்னவர் கூற்று. பணிச்சந்தையில் ஆண் பெண் இருவரும் உழைப்பை விற்று ஊதியத்தை வாங்குகிறார்கள். உழைப்பு வேறுபாட்டால் ஊதியம் வேறுபடும். இத்தகைய ஒரு கோட்பாட்டைப் பின் பொருளாகக் கொண்டு பணிச்சந்தை பெண்களைப் பாகுபடுத்துகிறது; பாரபட்சம் காட்டுகிறது. எப்படியெனில், பண்டங்கள் உற்பத்தி செய்யும் பெண்களின் திறன் ஆண்களைவிடக் குறைவு என்பது அன்றைய ஆழமான கருத்து. இன்று அந்தக் கருத்தின் அழுத்தம் ஓரளவு குறைந்தாலும், குறைவான உற்பத்தித் திறனைக் காரணம் காட்டிப் பெண்களுக்கு ஆண்களைவிடக் குறைவான ஊதியம் அளிக்கப்படுகிறது. உண்மையிலேயே பெண்களின் உற்பத்தித் திறன் குறைவா என்ற கேள்வி நிச்சயமாக நம்முள்ளத்தில் எழும். அடிமைப்படுத்துகின்ற, அதிகாரம் செய்கின்ற ஆணின் அபிப்பிராயமும், அவர்களுக்குத் துணைபோகும் இந்தச் சமுதாயத்தின் ஒருதலைபட்சமான கருத்தேயன்றி, உண்மையில் அப்படி அல்ல. பெண் தன் உற்பத்தித் திறனைப் பெருக்கத் தேவையான சில அடிப்படைப் பயிற்சிகள் அவளுக்குக் கிட்டவில்லை. இதனை மனித மூலதனக் கோட்பாடு (Human Capital Theory) தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. ஒவ்வொரு தொழிலாளியும் தனது இயல்பான திறமையோடு மேலும் குறிப்பிட்ட திறமையைக் கல்வி, பயிற்சி மூலம் பெற்று அதனைப் பெருக்கி அதனால் உற்பத்தித் திறமையைப் பெருக்குகிறான் என்று கூறுகிறது. ஆண்களுக்குப் பல்வேறு தொழிலுக்கான கல்வியும் திறமையும் பயிற்சியும் பெற வாய்ப்பு இருப்பதுபோல் பெண்களுக்கு இல்லை. இந்தச் சூழலில் குறிப்பாகக் கல்வியும் பயிற்சியும் ஆணைப்போல் பெண்ணுக்கு ஏன் அளிக்கப்படவில்லை என்ற கேள்வி நம் உள்ளத்தில் எழும். இதை விளக்க முற்பட்ட மின்சர் என்பர் பெண்ணின் தேர்ந்தெடுப்பு (Choice) பணிச்சந்தையில் கிட்டும் பணி மட்டும் அன்று; ஓய்வுநேர வேலையோடு ஊதியம் கிட்டாத வீட்டு வேலை என்று மூன்று சுமையாக அவள் திக்குமுக்காடிப் போகிறாள். ஆகவே முடிந்தால் ஊதியத்தோடு கூடிய வேலை; இல்லையெனில் ஊதியம் இல்லாத வீட்டுவேலை என்று சமூகம் அங்கீகரித்த பெண்ணிற்கான கடமைகளான வீட்டுவேலை, குழந்தை வளர்ப்பு என்று அவைகளில் தன்னை அர்ப்பணித்துகொள்ளுகிறாளே தவிர பணிச்சந்தை எதிர்பார்க்கும் திறமையைப் பெறவும் முடிவதில்லை; வாய்ப்பும் கிட்டுவதில்லை. ஆகவே,

பணிச்சந்தையில் அவள் குறைவாக ஊதியம் பெறும் ஒரு தற்காலிகத் தொழிலாளியாக நிற்கவேண்டியதாகிறது.

பணிச்சந்தையில் பேதங்காட்டலை விளக்க முற்பட்ட மற்றொரு கோட்பாடு, **பெண்கள் ஒருசில பணிகளில் மட்டும் அதிகமாக ஈடுபடுகிறார்கள்.** அங்கு அவர்கள் எண்ணிக்கைச் கூடுதலாகி (Over Crowding) ஊதியம் குறைந்துவிடுகிறது என்று கூறுகிறது. இந்த நிலைக்குக் காரணங்கள் பல. பெண்கள் தொடர்ச்சியாக ஒரு வேலையில் பங்கேற்க முடியாமல் அவர்களின் உடற்கூறு சார்ந்த பொறுப்புகள் தடைசெய்கின்றன. ஆகவே அத்தகைய பொறுப்புகளைச் செய்து முடித்து பணிச்சந்தையில் நுழையும்போது நுழைவுத் தடைகள் பல உள்ளன. ஆகவே இலகுவாகக் கிட்டக்கூடிய ஒழுங்குபடுத்தப்படாத தொழில் அமைப்பில் (Unorganised Sector) அவர்கள் பெருமளவில் பங்கு ஏற்க வேண்டியதாகிறது. அதுமட்டுமன்றிப் பெண்கள் ஒருசில பணிகளுக்கு மட்டும் ஏற்றவர்கள் என்ற கருத்தைச் சமுதாயம் வளர்த்து, பெண்களுக்கென்று ஒருசில பணிகள் ஒதுக்கி உள்ளது. இதை பால் அடிப்படையிலான தொழில் பாகுபாடு (Sexual Division of Labour) எனக் கொள்ளலாம்.

இந்திய பொருளாதாரத்தை நோக்கின் ஒரு அமைப்பு ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும் (Organised) மற்றொன்று ஒழுங்குபடுத்தப் படாமலும் (Unorganised) இருக்கிறது. ஒழுங்குப்படுத்தப்பட்ட அமைப்பில் வேலைகளின் ஊதியங்கள் சமமாக நிர்ணயிக்கப்பட்டு ஊதியம் ஒரு அளவுக்குக் கீழ் எக்காரணம் கொண்டும் குறையாமல், வேலைக்குப் பாதுகாப்பு, தொழில் சங்க அமைப்புகள் போன்றவைகள் இருக்கின்றன. இங்கு, பெண்ணின் வேலைக்கும் ஆணின் வேலைக்கும் வேறுபாடு இல்லை. இங்கு எழும் பிரச்சினைகள் வேலை உயர்வு, பயிற்சி அளித்தல் போன்றவையாகும். ஆனால் ஒழுங்குபடுத்தப்படாத அமைப்பு வருவாய் வித்தியாசத்துடனும், தற்காலிக வேலைகள் நிரம்பியதாகவும், பணிப்பாதுகாப்பு இல்லாமலும், பணி உயர்வு வாய்ப்புகள் இல்லாமலும் இருக்கும். இங்குதான் பெண்கள் வேலை வாய்ப்புகள் பெற்று பெருமளவில் பணிபுரிய வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளனர். இதை இருதரப்பட்ட பணிச் சந்தை என்று (Dual Market) கூறுகிறார்கள்.

**கார்ல் மார்க்ஸ்** தமது கோட்பாட்டில் **சேமப்படை** (Reserve Army) என்ற கருத்தைப் புகுத்தி விளக்குகையில், முதலாளிகள் புதிய இயந்திரங்களைப் புகுத்தி இலாப நோக்கில் தொழிலை நவீனப்படுத்தும் பொழுது தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வர். அந்த நீக்கப்பட்ட வேலையாட்கள் சேமப்படையாய் குறைந்த ஊதியத்திற்கும் வேலை செய்யத் தயாராக இருப்பார்கள் என்று கூறுகிறார். இந்த விளக்கத்தைப்

பெண்களுக்குப் பயன்படுத்திய பீக்சி என்பவர் வீட்டுக்காரியம் செய்யும் திருமணமான பெண்கள் இந்த சேமப்படையில் இருக்கும் தொழிலாளரை நிகர்ப்பர். அவர்கள் குடும்ப வருவாயைக் கூட்ட, குறைந்த ஊதியத்திற்கும் தங்கள் உழைப்பை அளிக்கத் தயங்கமாட்டார்கள் என்று குறிப்பிடுகிறார்.

ஆகவே இதுவரை நாம் கண்டது பால் அடிப்படையில் பேதங்காட்டும் பொருளாதாரக் கோட்பாடுகள். **பெண்ணியவாதிகள்** (Feminists) பணிச் சந்தையில் பேதம் என்ற பிரச்சினையை வேறுவிதமான அணுகுமுறையில் நோக்குகின்றனர். பெண்கள் வீட்டுப் பணிகள் குறிப்பாகக் குழந்தை பராமரிப்பு, வளர்ப்பு இவற்றால் பணிச்சந்தையில் நுழையமுடியாமல் முடிக்கப்படுகின்றனர் என்கின்றனர். இதையே ஹார்ட்மேல் என்பவர் பெண்கள் கிடைக்கும் சமயத்தைப் பயன்படுத்திச் சிறிய குறைந்த ஊதிய வேலையில் நுழைய ஆயத்தமாகி விடுகின்றனர். குறைந்த வருவாய்க்குப் பணிபுரிய இசைவு தரும் பெண்கள் ஆண்களின் ஒரு அச்சுறுத்தல் என்று கருதிய ஆண்களின் தொழிற் சங்கங்கள் பெண்களுக்கான வேலை வாய்ப்புகளைத் தடுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்கிறார். இந்த குறைந்த வருமானம் மற்றும் தற்காலிகமான வேலை என்பது பெண்கள் ஆண்களைச் சார்ந்து வாழவும், வீட்டு வேலையைத் தங்களுக்காக்கிக் கொள்ளவும் அதே சமயம் ஆண்கள் நிலையான முதன்மைப் பிரிவு பணிகளை ஆக்கிரமிக்கவும் வழிவகுக்கின்றது.

இனி இக்கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட **நடைமுறை** அனுபவத்தை நோக்குவோம். பேதங்காட்டுதலுக்குக் கருப்பொருளாக அமைவது ஆண் பெண் இருவருக்கும் பொதுவான வருமானம். இந்த வருவாய் இடைவெளி வெவ்வேறு இனத்தவருக்கிடையே காணப்பட்டாலும் பாலடிப்படையில் பெருமளவில் காணப்படுகிறது. இவ்விடைவெளிக்கான காரணக் கூறுகள் முக்கியமாக மூன்று எனக் கொள்ளலாம். *1.* தனிமனிதனால் உருவாக்கப்பட்டது (Individual) *2.* அமைப்புகளால் ஏற்படுத்தப்பட்டது (Institutional) *3.* சமுதாயத்தாலானது (Societal).

ஒரு தனிமனிதனின் வருவாய் ஈட்டும் திறன் அன்னவர் குடும்பத்தில் வளர்க்கப்படும் விதத்தைப் பொறுத்து மேம்படுகிறது. பேதங்காட்டலுக்கான வித்து குடும்பத்தில் குழந்தைகள் வளரும்போதே விதைக்கப்படுகிறது. ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் ஒரே மாதிரியாக வளர்க்கப்படுவதில்லை. வாழ்க்கையைப் பணியின் அடிப்படையில் பிரித்து அவர்கள் வெவ்வேறு போக்கில்/கோணங்களில் ஆயத்தப்படுத்தப் படுகிறார்கள். பெண் பெறும் கல்வி அதைப் பெற்றுக் கொள்ளும் இடம், திறமைக்கான கல்வி, தொழில் பயிற்சி ஆகியவை ஆண்களின்றும் வேறுபடுகின்றன. பெண், குறிப்பாக ஒருசில வேலைகளுக்கு மட்டும் பயிற்றுவிக்கப்படுகிறாள். அதுமட்டுமன்று, பெண் ஆணைச் சார்ந்து

செயல்படும் அளவுக்குத்தான் அவள் திறமை வளர்க்கப்படுகிறது. பொதுவான மனித வள மேம்பாடு (Human Resource development) மனித வளத்தை ஒரு மூலதனமாக (Human Capital) மாற்ற முயலுகிறது. இந்த முயற்சியில் பெண்களை மாற்ற முடிவதில்லை. அவர்கள் பின்தங்கிவிடுவது இன்றைய யதார்த்த நிலை. இல்லற வாழ்வுக்கும், குழந்தைப் பேற்றுக்கும், பெரியோரைப் பேணலுக்கும் பெண்கள் தங்களைத் தயாரித்துக் கொள்ளும் அளவுக்கு, பொருளீட்டலுக்கும், தம்முள் மறைந்துகிடக்கின்ற ஆக்கப்பூர்வமான சக்தியை வெளிக்கொணரவும் முயல்வதில்லை. ஏனெனில் அவர்கள் ஆர்வம், ஆற்றல் சமூகத்தாலும் பண்பாட்டாலும் முடக்கப்பட்டுவிடுகிறது. ஆகவே பெண் ஒரு தனிநபராகத் தனித்து இயங்கக்கூடிய சக்தியை இழந்து, குடும்பம் என்ற கூட்டுக்குள் (web) பின்னிப்பிணைந்து எதிர்பார்ப்பிற்கு ஏற்பத் தன் கடமைகளை நிறைவேற்றுகிறாளே தவிர தனது திருப்திக்கு ஏற்ப செயல்பட முடிவதில்லை; அதற்கான வாய்ப்புமில்லை.

இனி, அமைப்புகள் எவ்வாறு பெண்களை ஓரங்கட்டுகிறது (Marginalise) என்பதை ஆராய, பொருளாதார வளர்ச்சி பெண்களின் வேலை வாய்ப்புகளையும், பொருளீட்டலையும் மேம்படுத்துகிறதா என்ற கண்ணோட்டத்தோடு நோக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சி பல கோணங்களில் விளக்கப்படுகிறது. முக்கியமாக ஒரு வேளாண்மை நாடு தொழில்மயமாக மாறும்பொழுது வளர்ச்சியின் நுழைவாயில் தாண்டிப் பூரண அல்லது முழு வேலைவாய்ப்பை (Full employment) நோக்கிச் செல்கிறது என்ற பொருள் கொள்ளலாம். வளர்ச்சியின் வேகம் அதிகரிக்கும்பொழுது ஒழுங்குபடுத்தப்படாத (Unorganised Sector) பிரிவுகளில் இருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக் குறைந்து, ஒழுங்குபடுத்தப்பட்ட (Organised Sector) பிரிவுகளில் அவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். பெண்களைப் பொறுத்தவரையில் இந்த மறுசீரமைப்பு அவர்களுக்குப் பாதகமாகவே உள்ளது. வேளாண்மையில் 'நிலச் சொந்தக்காரர்கள்' என்று இருந்த பெண்கள் தங்கள் சிறிதளவு நிலங்களையும் விற்று கூலிக்காரர்களாக மாறியிருக்கின்றனர். ஆண்களுக்கும் இந்நிலை ஏற்படுகிறது. ஆனால் பெண்களுக்குப் பெருமளவில் இந்நிலை ஏற்படுகிறது. அதுமட்டுமன்றிப் பாரம்பரியமாகப் பெண்கள் ஈடுபட்டுவந்த நெசவு, உணவுப்பொருட்கள் பதப்படுத்தல் போன்ற துறைகள் இன்று நவீனமாக்கப்பட்டு ஆண்களுக்கு வேலைவாய்ப்பை அளித்து வருகிறது. நவீன தொழில் நுட்ப வளர்ச்சி பெண்களுக்கு நன்மை தரவில்லை.

இதை மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களை ஆதாரமாகக் கொண்டு நோக்கின் இதன் காரணத்தின் உண்மை தெள்ளெனப் புரியும்.

**இந்தியாவில் 1981-இல் உற்பத்திப் பணியில் ஈடுபட்டிருந்த பெண்களின் எண்ணிக்கை - சதவிகிதத்தில்***

| தொழில் வகைகள் | %கிராமப்புறம் | %நகர்ப்புறம் |
|---|---|---|
| 1. மாமிசம் வெட்டுதல், பதப்படுத்துதல் | 10.76 | 8.71 |
| 2. உணவு உற்பத்தி | 44.63 | 14.86 |
| 3. கொழுப்பு எண்ணெய் தயாரிப்பு | 12.55 | 6.49 |
| 4. காபிக்கொட்டை வறுத்தல், பொடி ஆக்குதல் | 61.56 | 27.43 |
| 5. முந்திரிப்பருப்பு தயாரித்தல் | 24.50 | 21.99 |
| 6. உணவுப்பொருள் தயாரித்தல் | 47.98 | 17.27 |
| 7. பானங்கள், புகையிலைப் பொருட்கள் தயாரித்தல் | 14.79 | 83.97 |
| 8. பருத்தித்துணி தயாரிப்பு | 35.31 | 16.30 |
| 9. கம்பளம், பட்டு, செயற்கைப்பட்டு தயாரிப்பு | 39.33 | 19.91 |
| 10. சணல் பொருட்கள் தயாரிப்பு | 10.95 | 2.57 |
| 11. ஆடைகள் தயாரிப்பு | 18.40 | 11.46 |
| 12. மரச்சாமான்கள், மரப்பொருட்கள் | 24.04 | 8.70 |
| 13. காகிதப் பொருட்கள் | 5.44 | 5.11 |
| 14. தோல், தோல் பொருட்கள் | 4.86 | 3.85 |
| 15. ரப்பர், பிளாஸ்டிக், பெட்ரோலியம், நிலக்கரிப் பொருட்கள் | 11.49 | 7.02 |
| 16. இரசாயனப் பொருட்கள் | 29.25 | 17.73 |
| 17. அலோக தாதுப்பொருட்கள் | 27.18 | 17.67 |
| 18. மின்சார இயந்திரங்கள், உபகரணங்கள் | 2.69 | 7.30 |
| 19. மற்ற தயாரிப்புகளைச் செய்யும் தொழிற்சாலைகள் | 7.36 | 4.39 |
| 20. இதர பொருட்கள் | 30.58 | 11.02 |
| 21. கட்டிடம் மற்றும் கட்டுமானப் பணிகள் | 13.14 | 9.37 |

* 1981 மக்கள் தொகைக் கணிப்பு அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டது.

ஒழுங்குபடுத்தப்படாத துறையில் பெண்கள் பெரும்பாலும் விவசாயக் கூலிகளாக, ஆடு மாடுகளைக் கவனித்துக் கொள்பவர்களாக, கட்டிடத் தொழிலாளிகளாக, பீடி, தீப்பெட்டி, தையல் வேலை, உணவு தயாரித்தல், துப்புரவுத் தொழில், தெருவில் கூவி விற்றல் போன்ற வேலைகளில் ஈடுபட்டவர்களாக இருக்கின்றனர். சமீபகாலத்தில் பெண்கள் குறைந்த அளவில் சுய வேலை செய்பவர்களாக இருக்கின்றனர். பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் கீழ்மட்டத்தில்தான் கிட்டுகிறது என்பது இங்குப் பெறப்படும் கருத்து.

வேலையை வாழ்வுக்கென்று (Career) தெரிந்தெடுப்பதில் பெண்கள் ஒருசில பணிகளிலேயே மையங்கொண்டுள்ளது போல (Concentration) ஒரு தோற்றம் புலப்படுகிறது. இதற்குச் சான்றாகக் கீழே மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் புள்ளி விபரம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 1971, 1981இல் பிற பணிகளில் ஈடுபட்டிருக்கும் பெண்களின் எண்ணிக்கை சதவிகிதத்தில்*

| பிற பணிகள் | 1971 (%) | 1981 (%) |
|---|---|---|
| 1. அரசு நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு | 3.34 | 5.74 |
| 2. துப்புரவுப் பணி | 43.44 | 40.91 |
| 3. கல்வி, அறிவியல், ஆராய்ச்சி | 27.46 | 35.52 |
| 4. மருத்துவம், சுகாதாரம் | 30.59 | 34.80 |
| 5. சமூக சேவை | 6.92 | 9.72 |
| 6. ஓய்வு நேர கலாச்சார சம்பந்தமானவை | 7.28 | 7.04 |
| 7. தனிப்பட்ட வேலைகள் | 30.05 | 37.61 |
| 8. வீட்டு வேலைகள் (Household activities) | 60.15 | 88.42 |
| 9. துணி சலவை, இஸ்திரி | 42.21 | 33.10 |
| 10. பன்னாட்டு வேலைகள் | 24.15 | 12.43 |
| 11. மற்றும் பிற இதுதான் என்று வகையறுக்க முடியாதவை | 16.24 | 14.71 |

* மக்கள் கணிப்பு அறிக்கை மற்றும் சிறப்பு அறிக்கை அட்டவணையிலிருந்து எடுக்கப்பட்டது.

வளர்ச்சி வளர்ச்சி என்று பறைசாற்றித் திரியும் இக்காலக் கட்டத்தில் பெண்களின் பெயர்ச்சி (Mobility) எல்லா வேலைகளிலும் ஒரே சீராக இல்லாமல் ஒருசில வேலைகளில் மட்டும் குவியலாக இருப்பதைக் காண்கிறோம்.

இதுகாறும் பெண்களுக்கான வேலை பகுப்பில் பேதம், வாய்ப்பில் பேதம், வேலை கிட்டுதலில் பேதம் என்று கண்டோம். இனி ஊதியத்தில் பாலடிப்படையில் பேதம் உண்டா என்று வினவினால் ஆம் என்றே விடை கூற வேண்டிய நிலை இன்று. முதலில் ஊதிய பேதம் எழுகின்ற மூன்று முறைகளைக் காண்போம். ஒன்று, வேறுபட்ட வேலைக்கு வேறுபட்ட ஊதியம், ஊதியம் கூடுதலான வேலையில் அமர பெண்களுக்கு வாய்ப்பில்லை. இரண்டாவது, வேலை பார்க்கும் நேரத்தில் வித்தியாசம், விவசாயத்திலோ அல்லது வீட்டுப் பணியிலோ ஈடுபடும் பெண்கள் அதிகமான மணிக்கூறுகள் வேலை செய்கின்றனர். ஆனால் அவர்களுக்கு அதற்குரிய ஊதியம் கிடைப்பதில்லை. மூன்றாவதாக, ஒரே வேலையில் ஊதிய அளவு ஆண், பெண்ணுக்கிடையே வித்தியாசமாக இருப்பது. இத்தகைய ஊதிய பேதங்கள் நடைமுறையில் பரவலாகக் காணப்பட்டாலும் இடத்திற்கு இடம்

பாரம்பரியத்தினாலும் கலாச்சாரத்தினாலும் வேறுபட்டு காணப்படுகிறது. மூன்றாவது முறையான பேதங்காட்டல் அகற்ற *103* நாடுகள் பன்னாட்டு தொழில் நிறுவனத்தில் சாசனத்தில் கையெழுத்திட்டும் பெரும்பாலான நாடுகள் ஊதியத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுபாடு காட்டிக் கொண்டுதான் இருக்கின்றன. வளர்ச்சி அடைந்த நாடான அமெரிக்காவில் *1976*ல் பெண்களின் ஊதியம் *39.8%*. இது ஆண்களை விடக் குறைவாகத்தான் இருந்தது. பெண்களின் விழிப்புணர்ச்சியும், செயலாக்கமும் இத்தகைய வேறுபாட்டை முறியடிக்குமே தவிர ஆண் சமுதாயம் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கத் தயங்கவே செய்யும். ஏனெனில் சம ஊதியத்துடன் தொடர்வது சம உரிமை என்பதையும் இங்கு உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

ஊதிய வேறுபாட்டை மற்றொரு கோணத்திலும் நோக்கலாம். பெண்கள் வீட்டில் கிராமப்புறங்களில் பெண்கள் செய்யும் பணிகள் பல மதிப்பீடு செய்யப்படவில்லை. பல பெண்ணியக்கங்கள் இதை வன்மையாகக் கண்டித்தமையால் *1991*ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கீட்டில் வீட்டைச் சார்ந்த வேலைகளையும் (கணிப்பில்) சேர்த்துள்ளனர்.

தமிழக மகளிர் என்ற தொடர் கருத்தரங்கத்தில் பொதுவாக இந்திய மகளிரை மையமாகக் கொண்டு இப்பொழிவு செல்லா நின்றாலும் இந்திய மகளிருக்கான கருத்துகள் யாவும் தமிழக மகளிருக்கும் பொருந்தும். இருப்பினும் தமிழக மகளிர்கான ஒருசில குறிப்புகளைச் சொல்லவேண்டுமென நினைக்கிறேன். அது மற்ற புள்ளிவிவர அடிப்படையில் பேதங்காட்டலை முழுமையாக எடுத்துக்காட்டும். முதன்மைச் சான்றாதாரமான புள்ளியியல் (Primary Data Source) தேவைப்படுகிறது. அதற்கான ஆராய்ச்சி இதுவரை மேற்கொள்ளவில்லை என்றே கூறலாம்.

தமிழ்நாட்டில் ஆடவரும் மகளிரும் ஈடுபட்டுள்ள தொழில் விபரங்கள் (விழுக்காட்டில்) வருமாறு:*

| **தொழில் வகை** | 1971 | 1981 | 1991 |
|---|---|---|---|
| *1.* சுரங்கத் தொழிலும், கல்லுடைத்தலும் | *16* | *18* | – |
| | *(84)* | *(82)* | |
| *2.* உற்பத்தி தயாரிப்பு, மேற்பார்வை, செப்பனிடுதல், | *28* | *38* | *44* |
| வீட்டுடன் சார்ந்தவை | *(72)* | *(62)* | *(56)* |
| வீட்டுடன் சாராதவை | *11* | *15* | *18* |
| | *(89)* | *(85)* | *(82)* |
| *3.* கட்டிட வேலை | *12* | *12* | *10* |
| | *(88)* | *(88)* | *(90)* |
| *4.* வர்த்தகம், வாணிபம் | *8* | *9* | *8* |
| | *(92)* | *(91.53)* | *(92)* |

| | | | |
|---|---|---|---|
| 5. போக்குவரத்து, சேமிப்பு, தகவல் தொடர்பு | 4 | 4 | 4 |
| | (96) | (98) | (96) |
| 6. இதரப் பணிகள் | 18 | 22 | 26 |
| | (82) | (78) | (74) |

* அடைப்புக்குள் இருக்கும் எண்கள் ஆண்களின் வேலை விகிதத்தைக் காட்டுகிறது. மக்கள் தொகைக் கணக்கீடு *1971, 1981, 1991.*

தமிழகத்தில் பெண்கள் ஈடுபட்டுள்ள பிற வேலைகளைப் பற்றிய புள்ளிவிபரங்களைத் துறை வாரியாகத் (Departmentwise) தமிழ்நாடு பெண்கள் வளர்ச்சிக் கழகம் (Tamilnadu Women's Development Corporation) தருகிறது. அதில் பெண்கள் பெரும்பாலும் எழுத்தர்களாகவும், தட்டெழுத்தர்களாகவும் இருக்கின்றனர் என்பதைக் காணமுடிகிறது. தமிழகத்தில் *1991* மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பெண்களின் வேலை பங்கு ஏற்பு (Participation rate) *15 (1971)* விழுக்காட்டிலிருந்து *30 (1991)* விழுக்காடாக உயர்ந்துள்ளது. இந்த உயர்வு பெண்களின் நிலையை உயர்த்தி உள்ளதா; இதுவரை வேலைக்குப் போகாத பெண்களும் வேலைக்குப் போகவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளதா என்பன ஆராய்ச்சிக்குரியன என்று பல வல்லுனர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இறுதியாகப் பணிச்சந்தை பேதம் பாராட்டாமல் இருக்க வேண்டுமாயின் பாலடிப்படைப் பேதம் எங்கே உருவாகின்றதோ அது சீர்படுத்தப்பட வேண்டும். சமுதாயத்தில் அடிப்படை அமைப்பான குடும்பம் அதன் பணிகள் மாறுபட்ட ஒரு நோக்கில் காணப்பட வேண்டும். குடும்பப் பணிகள் (Family activity), வீட்டை நிர்வாகித்தல் (Home Management) என்று நோக்கப்பட வேண்டும். வீட்டை நிர்வாகித்தல் ஒரு இயற்கையான/ இயல்பான பணியாகக் கருதப்படாமல் ஒரு சமூகப் பொறுப்பாக (Social Responsibility) எண்ணப்பட்டு ஆண் பெண் இருபாலரின் சம பங்கு ஒப்புக்கொள்ளப்படவேண்டும்.

பணி செய்யும் இடமும் குறிப்பிட்ட சில வீட்டின் இலக்கணங்களையும் கொண்டுள்ளது. சமீப காலத்தில் உற்பத்தித் திறனை உயர்த்தத் தேவையான வழி வகைகளைக் கண்டறிய முற்பட்ட ஜப்பான் நாடு தொழிற்சாலை மனித நேயத்தை (Human Relation) வளர்க்க வேண்டும் என்று கண்டறிந்துள்ளது. இந்த மனித நேயம் இயல்பாக இதுகாறும் குடும்பச் சூழலில் வளர்க்கப்பட்டு வந்தது. அந்தச் சூழல் வேலை செய்யும் இடத்திலும் தேவை என்றால் வீடு தொழிற்சாலைக்குப் போகலாம். தொழிற்சாலை வீட்டிற்குள் வரலாம். அதுபோல் பெண்களும் ஆண்களும் தத்தம் பங்குநிலையை Complement என்று Supplement செய்தால் வளர்ச்சியில் எதிர் சக்திகள் முறியடிக்கப்பட்டு பேதம் நீங்கி வாழ்வாங்கு வாழ முடியும்.

# பெண்ணிய நோக்கில் இலக்கியப் படைப்பும் வாசிப்பும்

அ. மங்கை

பெண்ணியம் என்பது குறித்த வேறுபட்ட வரையறைகள், விளக்கங்கள், புரிதல்கள் உள்ள சூழல் இது. பெண்ணியங்கள் குறித்து உலக அளவில் பேசத்தொடங்கியுள்ளனர். அந்தப் பரிசீலனைகளுக்குள் அதிகம் செல்லாமல் பெண்ணியம் சமூக மாற்றத்திற்கான அரசியல் இயக்கம் என்ற குறைந்தபட்ச வரையெல்லையை நான் இங்கு மேற்கொள்ளுகிறேன். அந்த அடிப்படையில் இலக்கியத்தில் நாம் பெற்றுள்ள புதிய வெளிச்சங்களைக் காண முயற்சிப்போம்.

இன்றைய கல்வி அமைப்பில் புதிதாக வரக்கூடிய சிந்தனை மரபுகளைப் பத்தோடு பதினொன்றாகச் சேர்த்து 'சனநாயகத்தன்மையை' நிலைநிறுத்தும் போலித்தனம் விரவியுள்ளது. நமது கல்வி நிறுவனங்களுக்குள் பெண்ணியம் நுழைந்து நிலைபெறும்போது, இன்னுமொரு முறையியலாக (Methodology) நீர்த்துப் போகக்கூடிய ஆபத்து உள்ளது. அதிகமாக விற்பனை ஆகக்கூடிய புதுச்சரக்காகப் பெண்ணியம் பேசுபவர்களும், கொஞ்சம் புதுமை தூவுவதற்காக ஊறுகாயாகத் தொட்டுக்கொள்ளுபவர்களும் நிறைந்துள்ள இச்சூழலில், பெண்ணிய நோக்கிலான இலக்கியப் படைப்பிற்கும் வாசிப்பிற்கும் பின்னுள்ள தத்துவார்த்த முறையியல் வினாக்களை முன்னிறுத்துவது அவசியமாகிறது.

- பெண்ணிய அணுகுமுறைக்கென்று தனித்த குணநலன்கள் உள்ளனவா?
- பெண்ணிய நோக்கு மரபுவழிப்பட்ட கண்ணோட்டங்களுக்குச் சவால் விடுகிறதா? அல்லது விட்டுப்போனவற்றைச் சேர்க்கின்றதா?

ஆகிய இருவினாக்கள் இங்கு முக்கியமாகப் பார்க்கப்படவேண்டியவை.

பெண்ணிய நோக்கு இதுகாறும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அனைத்தையும் மறுபரிசீலனைக்கு ஆட்படுத்துகிறது. இந்த மறுபரிசீலனை உண்மைக்கானத் தேடல்; அல்லது தத்துவார்த்த சிந்தனை மட்டுமல்ல. எந்தவொரு ஒடுக்கப்பட்டக் குழுவின் கேள்விகளும் அரூபமான தளத்தில் இயங்க வாய்ப்பே இல்லை. முழுமையான உண்மையில் (absolute truth) அதற்கு நம்பிக்கையும் இல்லை. அக்குழுவின் தேவை ஒடுக்கும் சக்திகளை மாற்றுவது; ஒடுக்குதலுக்கான காரணிகளை அறிந்து அவற்றைக் களைவது. இந்த வகையில் பெண்ணிய நோக்கு பழக்கப்பட்ட அதனாலேயே இயல்பானதாகக் கருதப்படுகிற அனைத்தையும் தலைகீழ் ஆக்குகிறது. இந்த முயற்சியில் கருப்பின, தலித்திய, பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டங்களோடு பெண்ணியத்திற்கு ஒத்திசைவு உண்டு.

அதே நேரத்தில் இந்த அடக்கப்பட்ட வகைகளை மீறிய தளத்தில் பாலின (Gender) அநுபவ அடிப்படையில் பெண்களைப் 'பெண்கள் என்ற பால் வகைக்குள்' தனித்துப் பார்க்கவேண்டிய தேவை உள்ளது. எனவே மேற்குறிப்பிட்ட கருப்பின, தலித்திய, பாட்டாளி வர்க்க நோக்கங்களோடு பெண் பாலின நோக்கிற்கான புதிய கருத்தாக்கங்கள் தேவைப்படுகின்றன. சுருங்கக் கூறின், பெண்களைப் பெண்களாக வரையறுக்கும் சங்கேதங்கள் (Codes) தேவை. அதாவது பெண்ணியம் தனித்துறையாகத் (Seperate) திகழவேண்டிய அதே நேரத்தில், தன்னாட்சி (autonomous) பெற்று பிற ஒடுக்கப்பட்ட குரல்களிலிருந்து அந்நியப்பட்டு நிற்க இயலாது/கூடாது.

இந்நோக்கில் பெண்கள் என்ற பன்மை முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். உலகை எதிர்வுகளாகப் (Binary opposites) புரிந்துகொள்ளும் ஆணிய நோக்கிலிருந்து மாறுபட்ட பார்வையைத் தொடங்கும்போது, தனிநிலைத் தன்மைகளிலிருந்து மேம்பட்ட கூட்டுத் தன்மைகளை (Collectivism) முன்வைக்க வேண்டிய தேவை உள்ளது.

உடலியல் ரீதியாக ஆணுக்குரிய நேர்க்கோட்டு அநுபவங்கள் பெண்ணிற்கு சாத்தியமில்லை. தொடர்பற்ற உயிர்த்துவம் (Continuous being) பெண்ணிற்கு உடற்கூறு ரீதியாகவே தவிர்க்கவியலாததாகிறது. எனவே ஆண் நோக்கில் வரையறுக்கப்படும் தான் (Self), இணைவு (Unity) போன்றவற்றை ஏற்கவேண்டிய கட்டாயம் இங்கு இல்லை.

பெண்ணியத்திற்குரிய இத்தத்துவார்த்த பின்னணியோடு பார்க்கையில் இதுவரை புழங்கிவரும் முறையியல்களுக்குப் பெண்ணியம் பெரும் சவால்களை முன்வைக்கிறது. ஆனால் நமது துரதிஷ்டம், நாம் வெகுசுலபமாகவும் சீக்கிரமாகவும் திருப்தி அடைவதற்காகப் பெண்ணியக் கல்வியை நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட கூடுதல் துறை ஆக்குவதில்

காட்டும் முனைப்பை, அத்துறைக்குரிய அடர்த்தியை நிலைநாட்டுவதில் காட்டாமல் இருப்பது ஆகும்.

இந்தப் புரிதலோடு பெண்ணிய நோக்கில் இலக்கியத்தை அணுகும் போது, பெண்ணிய இலக்கிய வரலாறு, பெண்ணிய இலக்கிய விமர்சனம், பெண்ணிய இலக்கியக் கோட்பாடு போன்ற பல தளங்களில் செயல்பட வாய்ப்புண்டு. இலக்கியக் கல்வியில் இதுவரை நாம் பெற்றுள்ள புரிதல்கள், மனநிலைகள் போன்றவற்றை விட்டொழித்து புதிதாய்க் கற்கவேண்டிய தேவை நம்முன் உள்ளது. இன்றைய இலக்கியக் கல்வியில் பெண்ணிய நோக்கு இல்லாதது மட்டுமல்ல; பெண்களது இருப்பையே தவிர்க்கின்ற போக்கை நாம் காணலாம். இந்தப் பின்புலத்தில் பெண்ணியப் படைப்பும்-வாசிப்பும் செயல்படும் களன்களைப் பின்கண்டவாறு அணுகலாம்.

1. பெண்களது பங்களிப்பு
2. இருபால் பொதுமைப்பண்புகளை முன்னெடுத்தல்
3. பெண்களைப் பலியாடுகளாகச் சித்திரித்தல்

பெண்களுக்கும் இலக்கிய உலகிற்கும் இடையே சிக்கலான உறவு நிலவுவதை நாம் கணக்கில் கொள்ள வேண்டும். எழுத்தாளர்களாகவும் வாசகர்களாகவும் பெண்களை ஏற்கின்ற இவ்வுலகம் வாழ்நிலை நோக்கில் பெண் தன்மைகளை ஆண் நிலை நோக்கில் இருந்தே பதிவு செய்து வந்துள்ளது. இந்தப் பின்புலத்தில் மேற்குறித்தவற்றை விவாதிப்பது அவசியமாகும்.

பெண்களது பங்களிப்பு பற்றிப் பேசுகையில், பெண் எழுத்தாளர்கள், இதுவரை ஆண்கள் சாம்ராஜ்ஜியம் எனக் கோடிட்டு வைக்கப்பட்டிருந்த துறைகளில், முதல்முறையாகக் கோட்டைக் கதவுகளைத் தாண்டி நுழைவதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

சமகால எழுத்தாளர்களாக இருந்த ஜேன் ஆஸ்டின், ஸ்காட் இருவருக்கும் இடையில் இருந்த ஊதிய வேறுபாடு, விக்டோரிய காலத்தில் இருந்த ஒழுக்க நூல்கள், நாவல்கள் இடையிலான ஒற்றுமைகள் போன்றவற்றைப் பெண்ணியலாளர்கள் ஆய்வு செய்துள்ளனர். இன்றுவரை நமது கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பாடநூல்களாக எழுதப்பட்டிருக்கும் இலக்கிய வரலாற்று நூல்களில், விடப்பட்ட அல்லது விளிம்புகளில் செருகப்பட்ட பெயர்களாக மட்டுமே பெண் எழுத்தாளர்கள் இருப்பதை நாம் எதிர்கொள்ள வேண்டும். முற்போக்கு முகம் காட்டும் சு. சமுத்திரம் பெண் எழுத்தாளர்கள் எல்லாம் முந்தானை விரிப்பவர்கள் என்று பேசித் தன் நிஜத்தைக் காட்டியிருப்பதையும் காண்கிறோம். இப்பின்னணியில்

இராஜாத்தி அம்மாள் *(1897)*, பண்டிதை விசாலாட்சி அம்மாள் *(1905)*, தேவகுஞ்சரி அம்மாள் *(1907)*, வை.மு.கோ. *(1927)* போன்ற எழுத்தாளர்கள் இலக்கிய உலகில் நுழைந்தது; அங்கீகாரம் பெற்றது; அவர்கள் எதிர்கொண்ட சிக்கல்கள் போன்றவை பெண்ணிய இலக்கியப் படைப்பில் இட்டு நிரப்ப வேண்டிய இடைவெளியாகவே உள்ளன.

பெண் எழுத்தாளர்கள் பெண்கள் என்ற முறையில், பெண்மைய வாதிகளாக (Gyno Critics) இருக்கிறார்களா? எனப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. இலிங்க மைய கருத்தாடல்களை (Phallo Centric) விமர்சனபூர்வமாக அணுகிப் பன்முகப்பட்ட புதிய மொழியை இவர்களால் உருவாக்க முடிந்துள்ளதா? அல்லது நசித்துப்போன மரபுகளை அப்படியே ஏற்கும் சோம்பல் நிறைந்த கருத்தாடல்களை மறுபிரசவங்கள் செய்கிறார்களா? என்பதை நாம் கவனிக்க வேண்டியுள்ளது.

மொழிபற்றி ரௌ பாத்தம் குறிப்பிடுவது இங்குக் கணக்கில் எடுக்கப்பட வேண்டியதாகிறது.

> "மொழி, ஆள்பவர்களின் அரசியல் தத்துவார்த்த ஆதிக்கத்தின் ஒரு பகுதியாகும்...... நாம் புழக்கத்தில் இருக்கும் சொற்களை அப்படியே ஏற்க முடியாது. அச்சொற்களின் அர்த்தங்களை மாற்றிய பின்பே அவற்றை நாம் கையில் எடுக்க வேண்டும் "

(Woman's Consciousness, Man's World; 1973:32-33).

இந்த அடிப்படையில், தமிழில் பெண்பால் எழுத்தாளர்கள் பயன்படுத்தும் மொழியைக் கொண்டு அவர்கள் வெளிப்படுத்தும் உலகியல் நோக்கை நாம் உணரமுடியும்." ....... உதடு புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டிருக்கிறது. அந்த உயரமும் பச்சை டி ஷர்ட்டும் முகத்தை மறைக்கிற பெரிய கண்ணாடியும் முன்நெற்றியில் விழும் தலைமுடியும்", என்று ஒரு வர்ணனை. "ஆறடிக்குக் குறையாத உயரம்; மீசை இல்லை; தலையில் ஒரு பீக் வைத்த தொப்பி மாட்டியிருந்தான்" என்பது வேறொரு வர்ணணை. படைப்பாளியின் பெயர் தெரியாமல் இரண்டையும் படிக்கும்போது, இரண்டிலும் ஒரே வகை அழகியல் வெளிப்படுவதைக் காணமுடியும். இந்த வர்ணனைகள் மில்சன் பூன்ஸ் பாணியிலானவை. தமிழில் பாக்கெட் நாவல்கள் சுவீகரித்துக்கொண்ட பாணி இது. முன்னது இந்துமதி; பின்னது பட்டுக்கோட்டைப் பிரபாகர்.

இத்தகைய சிக்கல்கள் பெண்ணிய இலக்கிய வாசிப்பில் எதிர்ப்படுவதை தவிர்க்க இயலாது. எழுத்து உலகில் பெயர்பெறுவதைச் சமூக அங்கீகாரங்களுள் ஒன்றாகக் கருதும் முனைப்பு மேலெழும்போது,

மொழி வெளிப்படுத்தும் வாழ்வியல் கூறுகள் பற்றிய சிரத்தை இல்லாமல் போவதைக் காணமுடிகிறது.

மொழியின் அரசியல் பற்றிய புரிதலோடு பெண் மைய நோக்கில் இலக்கியம் படைக்கும் எழுத்தாளராக அம்பையைக் குறிப்பிடமுடியும். தனது எழுத்து மூலம் பழகிப்போன புனைவுகளைக் கேள்விக்கு ஆளாக்கும் தன்மைகளை அம்பை சர்வசாதாரணமாகக் கையாளுவதைக் காணலாம். எடுத்துக்காட்டு 'புணர்'.

பெண்ணின் அநுபவங்களை மையப்படுத்துபோது ஆண்நிலை அநுபவ வெளிப்பாடுகள் தலைகீழாகப் (invert) புரட்டப்படுகின்றன. அதன்மூலம் அரூபமான ஆண் மைய மதிப்பீடுகளில் உள்ள அரைகுறைத் தன்மைகளும் வக்கிரங்களும் வெளிப்படுகின்றன. மனித செயல்பாடுகளை மதிப்பிடும் தன்மையை (Valuation) தலைகீழ் ஆக்கும் பகடி (Parody) இதில் சாத்தியமாகிறது. தமிழில் கிருத்திகாவின் 'வாசவேச்சுவரம்' நாவலில் அவ்வூர் ஆண்களின் ஆன்மிக-பாலியல் தன்மைகள் வெளிப்படும் பாங்கு இத்தகு ஏளனத் தன்மை கொண்டதாகும்.

பெண்களது பங்களிப்பில் பெண்ணிய வாசிப்பு முக்கிய இடம்பெறுகிறது. பெண்களது வாசிப்பு, பெண்ணிய வாசிப்பாக இருப்பது அவசியமா? என்பதை இங்கு விவாதிக்கலாம். வாசிப்பின் அரசியல் பற்றி தமிழில் பல சிந்தனைகள் பரவியுள்ள சூழலில், அதைப் பற்றி பெண்ணியலாளர்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய அவசியமுள்ளது. வாசிப்பை பால், இனச் செயல்பாடாக (Gendered activity) உணரும், புரியும் தன்மை வளர்க்கப்பட வேண்டும்.

ஒரேவகை வார்ப்புகளாகப் பெண்களைச் சித்திரிக்கும் தன்மைகளைப் பெண்ணிய ஆய்வுகள் அடையாளம் காட்டுகின்றன. பெண் எழுத்தாளர்களின் படைப்புகளும் இங்கு விதிவிலக்கல்ல.

அழகும் குணமும் ஒருங்கே நிறைந்த கதாநாயகி காலம் முழுதும் துன்பத்தில் உழன்றும், பொறுமையாகக் காத்திருக்க, விதியின் துணையால் துன்பம் எல்லாம் பனியாய் மறைவது ஒருவகை.

கொடுமையின் சொரூபமாய்-மாமியாராய் - சின்னம்மாவாய் - விபச்சாரியாய் - தானும் கெட்டு பிறரையும் நோகடிப்பது இரண்டாவது வகை. இந்தச் சீதை - சூர்ப்பனகை பிம்பங்களுக்குள் பெண்களை அடக்கிவரும் எளிய வாய்பாட்டுச் சூத்திரங்கள், பெண்ணிய வாசிப்பில் சாடப்படவேண்டியவை.

இதுதவிர உட்கிடக்கையாய், பூடகமாய் வெளிப்படும் பல்வேறு தன்மைகள் இலக்கியக் கருத்தாடல்களில் செயல்படுகின்றன.

இக்கட்டுரையாளர், வ.ரா.வின் 'கோதைத் தீவு' பற்றிய ஆய்வுக்கட்டுரை ஒன்றில் அதனைக் குறித்து எடுத்துக்காட்டுக்களோடு விளக்கியுள்ளார் *(நிகழ்)*. லிண்டா கிறிஸ்டி வேதநாயகம்பிள்ளையின் நாவல்கள் பற்றிய கட்டுரையில் *(மேலும்'; அக் 1989-1-8)* அவரது சீர்திருத்தக் கருத்துகளும் ஆணாதிக்கக் கருத்துக்களும் ஒருங்கே வெளிப்படுவதைக் காட்டியுள்ளார். இவரது கதைகளில் எல்லாவித திறமைகளும் பெற்ற பெண் நாயகிகள், ஆண்வேடம் புனைந்து புகழ் ஈட்டுவார்கள். ஞானம்பாள் "இருக்கிற இடம் தெரியாமல், எவ்வளவோ அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டிய ஸ்திரீ ஜாதி ஆகிய நான் புருஷ வேஷம் பூண்டுகொண்டு எத்தனை நாளைக்குக் கஷ்டப்படுவேன்" என்று வருந்துவாள். இத்தகு சித்திரிப்பில் ஆண்தான் மாதிரிப் படிவம் (norm) பெண் ஆண் - அற்றவள். ஆணின் அலகால் அங்கீகரிக்கப்பட்ட நிர்ணயங்களின் அளவுகோல்படி, பெண்ணும் அளக்கப்படவேண்டும். அதனால்தான் ராணி லட்சுமிபாய், ஆணைப் போல வீரம் செறிந்தவளாக நம் பாட நூல்களில் சித்திரிக்கப் படுகிறார்.

அம்பை, 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' மூலம், வீட்டின் கட்டிட அமைப்பில் சமையல் அறை பெறும் அந்தஸ்து, அதன் அர்த்தங்கள் (Implications) போன்றவற்றைக் கேள்விக்கு ஆளாக்குகிறார். நீதிமன்றம், பாராளுமன்றம், தேர்தல்கள் போன்றவற்றை வைத்து அரசியல் செயல்பாடுகளை அளவிடுதல் ஆண்நிலைச் சிந்தனை மரபை ஒட்டியதாகும். சமையல் அறைக்கும், படுக்கை அறைக்கும் அரசியல் மதிப்பு கொடுக்க வேண்டிய தேவை இன்று உள்ளது. சுதந்திரப் போராட்ட காலத்தில் சமபந்தி போஜனம் நடத்திய வீடுகளில் சமையல் சமைத்துப் பரிமாறிய தாய்மார்களை அரசியல்வாதிகளாக அங்கீகரிக்கிறது, கமலா விஸ்வேஸ்வரனின் பெண்ணிய மானிடவியல் ஆய்வு.

பெண்ணிய வாசிப்பு, குடும்பம், திருமணம், தாய்மை, பாலியல்பு போன்றவற்றின் நிறுவனப் பண்புகளை முன்னிறுத்த வேண்டும். இந்நிறுவனங்களைப் பற்றிய சித்திரிப்பில் விடப்பட்டுள்ள (Exclusions) பகுதிகளையும் விளக்கப்படாத மௌனங்களையும் பெண்ணிய வாசிப்பு முதன்மைப்படுத்த வேண்டும். குடும்ப நிறுவனத்தைப் பற்றிய பாலியல் மையத்திலிருந்து விவாதிக்கும் கட்டுரைகள் தமிழில் வந்துள்ளன *(நிறப்பிரிகை)*. பாலுறவு முறைகளைப் பற்றி தீவிரமாக அலசுகின்ற இவர்கள், குடும்ப நிறுவனத்தில் ஆண்-பெண் வகிக்கும் பாத்திரங்களை எந்த

அளவிற்கு விமர்சனத்திற்கு ஆட்படுத்துகிறார்கள் என்பது அய்யத்திற்கு உரியது. இத்தன்மையை விடுபடலுக்கு ஒரு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

சிவகாமியின் நாவல்களில் தலித்திய சிந்தனைகள் சுயபரிசீலனைகளோடு வெளிப்படுகிறது. தலித்திய சித்தாந்தத்திற்கு இவரது நாவல்களின் பங்களிப்பு பற்றி முரண்பட்ட கருத்துகள் நிலவுகின்றன. ஆனால், அவை வெளிப்பட்ட அளவிற்குக்கூட பெண்ணிய சிந்தனைகள் வெளிப்படாமல் இருப்பதை மௌனத்திற்கான எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

இன்றுவரை இலக்கிய உலகின் ஜாம்பவான்களாக உள்ள பலரது எழுத்துக்கள் பெண்ணிய வாசிப்பில் புனைவு நீக்கம் செய்யப்பட்டு (de-mystify) அவர்களது அதிகாரத்தன்மை அம்பலப்படுத்தப்பட வேண்டும். ஆங்கில இலக்கியத்தில் லாரன்சு, ஹெமிங்வே போன்ற எழுத்தாளர்கள் இவ்விதமே அணுகப்பட்டுள்ளனர்.

இருபால் பொதுமைப்பண்புகளை (Andro-Centric) இயல்பாகக் கருதும் தன்மை, நம் எழுத்தாளர்கள், வாசகர்கள் மத்தியில் காணப்படுகிறது. அந்த அடிப்படையிலேயே புரட்சிகர எண்ணம் கொண்ட 'கூட்டுக்குஞ்சுகள்' விஜி, முதற்பார்வையிலேயே காதல்வயப்பட முடிகிறது. படித்த, பணக்கார இளைஞனிடம் தன்னை இழந்து, பின்னர் தனிப்பட்ட - பொதுவாழ்வில் போராட்டம் நடத்த முடிகிறது. ஆங்கில இலக்கியத்தில் இத்தன்மையை முன்னிறுத்தியவர் வெர்ஜீனிய உல்ஃப். ஷோவால்டர் இதைப் பற்றிக் குறிப்பிடுகையில், "இருபால் பொதுமைப்பண்பு, தனி இடம் (Private space), அழகியல் போன்றவை பாலியல் அரசியல் கிளப்பும் சிக்கல்களுக்குப் போதுமான பதில்கள் அல்ல" என்பர்

பாலின வேறுபாட்டிற்கு அப்பாற்பட்ட அழகியல், சமூகப்பொறுப்பு பற்றி நமது எழுத்தாளர்கள் - குறிப்பாகப் பெண் எழுத்தாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இலக்கியப் படைப்பில்/வாசிப்பில் ஆணா? பெண்ணா? என்பதல்ல கேள்வி - என்ற நோக்கோடு, நடுநிலை வாசகர்களாக இனம் காணுவதை நம்மில் பலர் சனநாயகத் தன்மையாகப் பார்க்கிறோம். உண்மையில் இது ஒருவகைத் தப்பித்தல் பாங்கே. தர்க்கவியல் அடிப்படையில், அங்கீகரிக்கப்பட்ட மேல்நிலைப் பண்புகள் நோக்கிய தாவல் முயற்சியாகவே இதனைக் காணலாம். இருபால் பொதுமைகளைக் கேள்விக்கு ஆளாக்கும் இந்நோக்கு, ஆண்களைப் புறக்கணிக்கும் பார்வையன்று. ஆதிக்கக் குரலின் வெளிப்பாடாக, விழிப்புணர்வோடு பரிசீலனைக்கு ஆட்படுத்தும் முயற்சியாகவே இதனைக் காணலாம். எடுத்துக்காட்டாக, பாலகுமாரன் நாவல் மேம்போக்கான வகையில், பெண்

சார்பு காட்டினாலும், பெண் உடலை/உழைப்பை ஆண்நிலை நோக்கில் வெளிப்படுத்தல்; ஆண்மையப் பாலியலை நிலைநிறுத்துதல் போன்றவை உள்ளீடுகளாகும். இவற்றை மேலெழுந்தவாரியான கதை கேட்கும் அணுகுமுறைகளில் கண்டறிய இயலாது.

பெண்கள்பால் பரிவைத் தூண்டும் முயற்சியில், பெண்களைப் பலியாடுகளாகச் சித்திரிக்கும் போக்கு எழுத்தாளர்கள் கையாளும் உத்திகளுள் ஒன்று ஆகும். இலட்சுமியின் கதைகள் பெரும்பாலும் அத்தகைய நாயகிகளையே தந்துள்ளன. சிவத்தம்பி அவற்றைக் 'கண்ணீர் இழப்பிகள்' என்பார்.

கருப்பின, அமெரிக்கப் பெண் எழுத்தாளர்கள் மத்தியில் இப்போக்கு தீவிர மறுபரிசீலனைக்கு ஆளாகியுள்ளது. டோனி மாரீசனின் 'பிலவ்ட்' நாவல், நீக்ரோ-அடிமை வாழ்வை எதிர்கொண்டு, மீளும் பெண்களின் கதையை எவ்விதமான உணர்ச்சிக் கொந்தளிப்பும் (Sentimentalising) இன்றிக் காட்டியுள்ளது. அம்பையின் 'கருப்புக் குதிரைச் சறுக்கம்' சிறுகதையில் வரும் பலாத்காரத்திற்கு ஆளான பெண், அத்தகு வீரியத்தோடு வெளிப்படுகிறாள்.

பெண்ணியத்தை ஆண் ஆதிக்க எதிர்ப்பாகக் காணாமல், ஆண் இன எதிர்ப்பாகக் காணும் தன்மை நிறைந்த சமூகத்தில், பெண்ணியத் துறைக்கு ஆண்களது பங்களிப்பு பற்றி கேள்வி எழுவது தவிர்க்க இயலாது. இக்கேள்வி அடிப்படையில் 'ஆண்களால் பெண்களைப் போல் சிந்திக்க இயலுமா?' என்ற அய்யத்தை வெளிப்படுத்துகிறது. எதார்த்த வாழ்வில் ஆதிக்கச்சக்தியாக வாழும் பேறுபெற்ற ஒருவன் அடிமைப்படும் குழுவின் நிலையில் தன்னை வைத்துப் பார்க்க விரும்புவானா? விரும்பினாலும் அவனால் இயலுமா? என்பவை சமூக உளவியல் சார்ந்த வினாக்கள் ஆகும்.

பெண்ணியம் ஆண்பாலரை விலக்கும் தத்துவமன்று (Lesbianism தவிர). ஒட்டுமொத்த ஆதிக்கச் சட்டகத்தை மாற்றுகிற பணியை மேற்கொண்டுள்ள பெண்ணியம், அதே பணியில் பிராயச்சித்த உணர்வோடு பங்கேற்கும் ஆண்களை உள்ளடக்க வேண்டிய தேவை உள்ளது. அதே நேரத்தில் அவர்களுக்குப் பழகிப்போன அதிகாரத் தொனி வந்துவிடக்கூடும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இத்தகைய சேர்க்கையை (inclusion) மறுத்து, ஆணால், பெண்ணாக வாசிக்க முடியாது என்று கொண்டால், தந்தை ஆதிக்க சமூகத்தில் பெண்கள், ஆணாக வாசிக்கக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்பது மறுக்க முடியாதது ஆகிவிடும்.

அதனால், ஆண்பெண் வகைப்பாடுகளை விடுத்து, ஆணிய, பெண்ணிய பாலினக் கூறுகளை முதன்மைப்படுத்துவது அவசியமாகும். இதே கேள்விகள் தலித்துகளால் கிளப்பப்படும் நியாயத்தையும் நாம் பொருத்திப் பார்க்கலாம். எசமான தன்மைகள் மறைந்து பரிகாரம் தேடும் முனைப்போடு வரும் ஆண் பெண்ணியலாளர்களை இணைத்துப் பெண்ணிய ஆய்வில் ஈடுபடுவது அவசியமாகிறது.

பெண்ணியம் குறித்த தத்துவார்த்தப் பின்னணியில் ஊடுருவக் கூடிய காலனி ஆதிக்கப் போக்குகளைப் பற்றி காயத்திரி ஸ்பிவாக் எச்சரிக்கை செய்துள்ளார். அதிலும் நிறுவனமயமாக்கப்படுவதில் எழக்கூடிய சிக்கல்கள் இங்குக் கணக்கில் எடுத்தல் வேண்டும். பெண்ணிய இலக்கியப் படிப்பில் இதனினமும் மையப்படுத்தப்பட்ட ஐரோப்பிய வெள்ளையர் கருத்தாக்கங்களே நிலவுகின்றன. கூடியவரை இருக்கின்ற சட்டகத்திற்கு உள்ளாகச் செயல்படுவதே பாதுகாப்பானது என்ற பார்வை நிலவுவதால், அதிலிருந்து மீள இயலாமல் போகிறது. அதனால்தான் பெண்ணியம் பற்றி படிப்புலகிற்கு வெளியே காரசாரமான விவாதம் நடந்த வேளையில், நம்மால் வாளாவிருக்க முடிந்தது. பெண்ணியத்தை முறையியலாக மட்டுமே அங்கீகரிக்க வைத்திருக்கிறோம். பெண்ணியத்தை வாழ்வியலாக ஏற்க வைத்திருந்தால், அதற்கு எழக்கூடிய எதிர்ப்புகள் இப்போது இருப்பதைவிட கூடுதலாகும். நிறுவனப் படிப்பிற்கு இச்சக்தி இருக்கிறதா? என்பதும் சந்தேகம்தான். நான்கு சுவர்களுக்கு அப்பால் உள்ள சமூகத்தைப் பற்றிய அக்கறையும் செயல்பாட்டு விளக்கமும் இல்லாத 'நாற்காலி ஆய்வுகள்' கவைக்கு உதவப்போவதில்லை. நிறுவனமயமாக்கலில் உள்ள, இந்த நீர்த்துப் போக வைக்கும் கூறுகளைக் கவனத்தில் கொண்டு, அதற்கு எதிரான உட்போராட்டங்கள் பெண்ணிய கல்வியாளர் மத்தியில் எழவேண்டிய தேவை உள்ளது.

இச்சிந்தனைப் பகிர்தலில், சிக்கல் மையப்பகுதிகளாகக் கீழ்க்காணும் வினாக்களை முன்வைக்கலாம்.

- பெண் எழுத்தாளர்கள்/வாசகர்கள், பெண்ணிய எழுத்தாளர்கள், வாசகர்களாக இருக்கின்றனரா?
- இலக்கியப் படைப்பில் முக்கியப் பங்கேற்கும் மொழி, கூற்றுவகை, பாத்திரச் சித்திரிப்பு போன்றவற்றில் பெண்ணிய பங்களிப்பு எவையெவை?
- அங்கீகரிக்கப்பட்ட இலக்கியப் பனுவல்களில் வெளிப்படும்/ உள்ளீடாகத் தெரியும் பெண்ணின்/பெண்ணிய எதிர்ப்புத் தன்மைகளை இனம் காணுவது எப்படி?

- ஆண்களின் இராச்சியமாகத் திகழும் எழுத்துலகில் பெண் படைப்பாளர்கள் எவ்விதம் செயல்படுகின்றனர்?

இவற்றை விரிவான விவாதத்திற்கு உங்கள்முன் வைக்கிறேன்.

**துணைநூற் பட்டியல்**


1. சுந்தரராஜன், பெ.கோ., சோ. சிவபாதசுந்தரம், தமிழ் நாவல்: நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும், சி.எல்.எஸ்., *1977*.
2. பெண்கள் படைப்பில் பெண்கள், அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம், *1986*.
3. நிறப்பிரிகை *(*பெண்ணியம் குறித்த கட்டுரைகள்; விவாதங்கள்*)*, எண்கள் *2-6*.
4. மேலும், எண் *10*, மே *1991*.
5. Eagleton, Mary (Ed.), Feminist Literary Criticism, Longman, New York, 1991.
6. Harding, Sandra (Ed.), Feminism and Methodology (Social Science issues), Indiana University Press and Open University Press, 1987.
7. Keohane, O.Nannerl and et.al.(Eds.), Feminist Theory: A Critique of Idiology, University of Chicago, 1982.
8. Mantefiore, Jan. Feminism and Poetry, Pandora, London, New York, 1987.
9. Miles, Rosalind, The Female Form, Women Writers and conquest of Novel, Lexington: Kentucky University Press, 1975.

# பெண்ணியக்கத்தில் ஔவையின் போக்கு

**வேனிலா ஸ்டாலின்**

உலக வரலாற்றில் எஞ்ஞான்றும் தீராப் போராட்டமாகத் திகழ்வது இனப்போராட்டம். ஆடவர், பெண்டிர் என்ற பாகுபாட்டுச் சிக்கலும் இத்தகைய நிலைபேறு உடையதாகும். இச்சிக்கலைத் தீர்க்க வேண்டுமாயின் பெண்டிர் முனைப்பு கொள்ள வேண்டும். மகளிரே முனைந்தால் அன்றி மகளிர் முன்னேற்றம், உரிமை இவற்றைப் பெற இயலாது. இதனையே தந்தை பெரியார் தமது பெண்ணியக் கருத்தாகக் கூறுகிறார் (*பெண் ஏன் அடிமை ஆனாள்?*). இந்த நோக்கில் பெண்ணினத்தின் உயர்வை உணர்த்த, உழைத்த பகுத்தறிவுப் பெண்பாற் புலவர் ஔவையார் ஆவார்.

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் மட்டுமன்றிப் பிற்காலங்களில் வாழ்ந்த ஔவைப் பெருமக்களும் இத்தகைய பெருமைக்கு உரியவர் ஆவர். எளிமைப் பண்பும், உண்மை உள்ளமும், வீர உணர்வும் உடையவராக ஔவையார் அனைவரும் திகழ்ந்துள்ளனர். பெண்களின் உள்ளத்து உணர்வுகளை உள்ளவாறு உரைத்த ஔவையார் அவர்களின் போக்கில் அமைந்த பெண்ணிய நோக்கங்களை இக்கட்டுரை கூறுகிறது.

**பெண்ணியம் - சொல் விளக்கம்**

உயிரினங்களின் தொடர் மரபுச் சங்கிலியாக விளங்குவது பெண்ணினம். எனவே, பெண்ணினம் உலக இயக்கத்திற்கு முதற்பொருளாக விளங்குகிறது. கருவுயிர்த்தலால் முதற்பொருளாக மதிக்கப்படவேண்டிய இவ்வினத்திற்கு உரிப்பொருளாக உரிமை வேட்டல் அமைந்துள்ளது. தமக்குரியவற்றையும் போராடிப் பெறவேண்டிய கட்டத்தில் பெண்டிர் வாழ்கின்ற இச்சூழ்நிலை தற்காலத்தில் வலுப்பெற்றுள்ளது.

தொல்காப்பியரின் மொழிநூற் கொள்கைகளின் தொகுப்பைத் தொல்காப்பியம் என்று பெயரிட்டமை போன்று, பெண்டிர் நலக் கொள்கைகளின் தொகுப்பான பெண்டிர் உரிமை வேட்டலைப்

பெண்ணியம் எனலாம். (நச்சினார்க்கினியம், பெரியாரியம் என்ற பெயர் மரபுகள் இங்கே ஒப்பிட்டுக் கூறத்தக்கவை).

**பெண்ணியக்கக் கோட்பாடுகள்**

மகளிர் உரிமைகளை உரிய நிலையில் பெற்று நிலைநிறுத்துவதே பெண்ணியக்கத்தின் குறிக்கோளாகும். கற்பு, காதல், திருமணம், விதவைகள் நிலைமை, மறுமணம், கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், சொத்து, ஆண்மைக்குப் பணிந்து தம் கருத்துக்களைக் கரத்தல், செயலாக்காநிலை எனப் பல கோணங்களில் பெண்ணியக்கக் கோட்பாடுகளை வரையறுக்கலாம்.

**பெண்ணியக்கப் பணி**

மக்கள் தொகுதியில் நிகர்பாதியினராகிய மகளிர், ஆடவர்க்கு இணையான அறிவும், அருமையும், பெருமையும், உரனும் பெற்றிருத்தலின் தகுதியும் இணையாகப் பெற்றவர் என்பதைச் சமுதாய நடப்பில் பதியவைக்க வேண்டும் என்பது பெண்ணியக்கத்தினரின் தலையான பணியாகும். எக்காலத்திலும் மகளிர், தங்கள் அகவாழ்வில் இல்லறக் கிழமையை உறுதிப்படுத்தல், புறவாழ்வில் நல்லறம் போற்றல், நட்புறவு காத்தல் என்று சிறப்புப் பணியாற்றி வருகின்றனர். எனினும், கல்வி கலையறிவு அளிக்கவும், பொருளியல், திருமண உரிமை அளிக்கவும், கருத்து வெளிப்படுத்தவும் முழு உரிமைகள் அளிக்கப் பெற்றனரா என்பது பெரும் வினாவாகவே உள்ளது.

**உரிமைப் போராட்டம்**

ஆடவரும், பெண்டிரும் தங்கள் கடமைகள், உரிமைகள் எவையெவையெனப் பகுத்தறிய இயலா நிலையில் ஏற்பட்ட குழப்பத்தாலேயே பெண்டிர் உரிமை அவ்வப்போது மறுக்கப்பட்டு போராட்டம் ஏற்படுகிறது. இதனைச் சங்ககாலப் பெருமக்கள் அறிந்தே வரைமுறைப்படுத்திக் கூறியுள்ளனர்.

**கடமைகள்-உரிமைகள்**

ஏடறியாக் காலந்தொட்டே ஆடவர் மகளிர் இடையே உரிமை முதன்மைப் போராட்டம் தொடர்ந்து நிலவி வருகிறது. முறையான குடும்பம் என்ற அமைப்பை மக்களினம் பெற்ற பின்னர், உடற்கூற்றின் அடிப்படையில் மகளிர்க்குக் குடும்பப் பொறுப்பு முதன்மையாயிற்று. தான் ஈன்ற குழந்தைகளுக்கு உணவளிக்கும் பொறுப்பு தாயையே பெரிதும் சார்ந்ததால் இப்பொறுப்பு ஏற்பட்டது.

எனவே, புறக்கடமையாகிய பொருளீட்டல் ஆடவனை வலிந்து வந்து சேர்ந்தது. குடும்பத்தினரின் உணவு முதலான இன்றியமையாத தேவைகளுக்கான பொருளை ஆடவன் ஈட்டுவதால், தானே குடும்பத்தை இயக்குகின்ற அச்சு எனக் கருதத் தலைப்பட்டான். எனவே முதலாளி, பாட்டாளிகளின் நட்பு முறையே ஆடவர்-பெண்டிரிடையே நிலவலாயிற்று. சான்றுகளாக ஆடவர் உண்ட பின்பே பெண்டிர் உண்ணுதல், கணவன் உண்ட இலையில்தான் மனைவியும் உண்ணுதல் முதலான உணவுமுறை தொடக்கமாகப் பலநிலைகளில் பெண்ணடிமைத்தனம் குடும்பத்தில் ஏற்படத் தொடங்கியது.

வினையே ஆடவர்க்கு உயிராக இருக்குமாயின், மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் எனச் சங்க காலத்தவர் மக்களின் கடமைகளை வரையறுத்துக் கூறியுள்ளனர். சங்ககாலச் சான்றோர், ஈன்று புறந்தருதலைத் தாயின் கடமை என்றும், சான்றோன் ஆக்குதலைத் தந்தையின் கடமை என்றும் எல்லை வகுத்தனர்.

மனையாட்சியை மகளிர் உரிமையாகவும், புறவாழ்வின் செயல்பாடுகளை ஆடவர் உரிமையாகவும் சமுதாயம் போற்ற வேண்டினும் தெளிவான வரைமுறையறிவு இன்மையால், ஆடவர் தங்கள் உரிமைகளை மீறிவிட்டனர்; அல்லது பெண்டிர் தம் உரிமைகளை ஆடவர்க்கு அளித்தனர். ஆகவே இருபாலாரும் கடமைகள், உரிமைகள் பற்றித் தெளிவுபெறாத வரையில் உரிமை மீறல், உரிமை வேட்டல் நிலைபெற்று இருக்கும் எனலாம்.

இத்தகைய சமுதாயச் சிக்கல் சங்க காலத்தில் தமிழகத்திலும் இருந்திருக்கலாம். எனினும் இதனைச் சமுதாயச் சிக்கல் என்று உணராமல் தனிப்பட்டவர் சிந்தனை என எண்ணி ஒதுக்கி இருக்கலாம். ஆயினும் புலமைப் பெருமாட்டியர் பாக்களுள் பெண்ணுரிமை விழைவை மெல்லிய கோடாகக் காண இயலும். சங்க காலப் புலமைப் பெருமாட்டியருள் தலைசான்ற தகைமையாளரான ஔவையாரின் பெண்ணியக்கப் போக்கை இக்கட்டுரை இனி ஆராயும்.

**சங்ககால ஔவையாரின் பெண்ணியப் போக்குகள்**

மனையுறை வாழ்க்கையும், ஈன்று புறந்தரும் தாய்மைக் கடனையுமே சங்ககால மகளிர் தம் அறமாகக் கொண்டொழுகினர். அக்காலத்தில் வாழ்ந்த சங்கப் புலமைப் பெருமாட்டியரான ஔவையாரின் இல்லற வாழ்க்கை, காதலுறவு ஆகியன பற்றிய குறிப்புகள் எதனையும் அவர் பாக்களின் வாயிலாக அறியக் கூடவில்லை. அகப்பாக்கள்

பாடியிருப்பினும் வெள்ளிவீதியார், ஆதிமந்தியார் போன்று அல்லாமல் சிறிதும் காதல் வாழ்வில் மனந்தளர்ந்தவராக ஔவையார் வாழவில்லை.

**பெருமையும் உரனும்**

பாணர் குலத்தைச் சேர்ந்தவராகிய ஔவைப் பெருமாட்டியார்,

"காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை"

என்றும்,

"எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே"

என்றும்,

"உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை"

(புறநானூறு. 206)

என்றும் பாடுகிறார். இப்பாடலடிகளால் ஔவையாரின் பற்றற்ற மனப்பண்பும், தன்னம்பிக்கையும், உள்ள உறுதியும் புலப்படுகின்றன. அச்சமும், நாணமும், மடனும் உடையவர் என்று கூறப்படும் பெண்டிர் குலத்தவராயினும் ஔவையாரின் முரண்பட்ட இயல்பும், வாழ்க்கைப் போக்கும் பெண்ணியக்கக் கோட்பாடுகளின் எல்லைக்குள் முதன்மை தாங்குகின்றன.

**ஆடவர்-பெண்டிர் நட்பு**

ஆடவன், பெண் ஆகிய இருவருள் ஒருவரின் சிறப்பியல்பால் ஈர்க்கப்பட்ட மற்றவர் அன்பு காதலில்தான் முடியும் என்பது மக்கள் தொகுதியின் கருத்தாகும். இதனையொட்டியே,

"நரந்தம் நாறுந் தன்கையாற்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே"

(புறநானூறு.235)

என்ற ஔவையாரின் பாடலடிகளைக் கொண்டு அதியமானுடனான இவர்தம் நட்புறவு காதலாக இருக்கலாம் எனக் கருத்து உரைப்பர்.

"யாழொடும் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்கு
அருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை
என்வாய்ச் சொல்லு மன்ன வொன்னார்
கடிமதிலரண்பல கடந்த
நெடுமா னஞ்சிநீ யருளன் மாறே" (புறநானூறு, 92)

என்ற ஒளவையாரின் இப்பாடல், அதியமானுடன் அவர் கொண்ட அன்பின் தன்மையைத் தெளிவுபடுத்துகிறது.

செந்தமிழ்ச் செல்வியாராகிய ஒளவையார், தம் நட்பைப் பிறர் பிழைபட எண்ணக்கூடும் என்பதால் இங்ஙனம் கூறியது போன்று அமைந்துள்ளது இப்பாடல். ஒளவையாரின் மொழி வன்மையால் அதியமானும், அவனுடைய வள்ளன்மை, வழுவில் வீரம் ஆகிய சிறப்பால் ஒளவையாரும் ஈர்க்கப்பட்டு நட்புக்கிழமை பூண்டனர்.

இங்ஙனம், ஆடவர் பெண்டிரின் நட்பில், காதல், இன உணர்வு ஆகியன கலந்து நட்புத் தூய்மைக் கேட்டை விளைத்தல், சமுதாயத்தில் உள்ளதொரு களையாகும். இத்தகைய சூழலால், பெண்டிர் ஆடவர்க்கு இணையாகப் புறவாழ்வில் செயலாற்ற இயலாமற் போகிறது. எனவே நட்பு மரபிலும் பெண்ணியக் கோட்பாட்டுக்கு இணங்கிய ஒளவையின் செயலாக்கம் புலனாகிறது.

**உண்டாட்டு**

சங்கப் புலமைப் பெருமாட்டியர் எவருமே பாடத் துணியாத உண்டாட்டுத் துறையில் ஒளவையார் பாடியுள்ளார். அறிவுப் புலத்தெழுந்த துணிவால் பெருமாட்டியார்,

"ஒன்றிரு முறையிருந் துண்ட பின்றை
உவலைக் கண்ணித் துடியன் வந்தெனப்
பிழிமகிழ் வல்சி வேண்ட மற்றிது
கொள்ளா யென்ப கள்ளின் வாழ்த்தி" (புறநானூறு, *269)*

என்று பாடுகிறார். மறவர்கள் எல்லை மீறிக் கள்ளை உண்டால், எண்ணியது இயற்றாமற் தோல்வியில் துவள்வர் என்பதைக் குறிப்பிடுகிறார் ஒளவையார். எனவே ஆடவரையும் நெறிப்படுத்தும் பெண்மையின் உயர்வுச் செம்மலாக விளங்குகிறார் ஒளவையார்.

**பெண்மை போற்றல்**

வெறும் ஆடம்பரப் புனைவுகளுக்காகவும் அழகுப் பேற்றுக்காகவும் மகளிர் மதிக்கப்பெறாமல், அறிவாற்றலுக்காக, ஆக்கத் திறனுக்காகப் போற்றப்பட வேண்டியவர் என்பது தற்காலப் பெண்ணியலார் கருத்தாகும். சங்ககால ஒளவையார் இக்கொள்கைக்குத் தக்க சான்றாக விளங்கினார்.

அமைச்சருக்குரிய அறிவாற்றலும், தூதர்க்குரிய தூதுச் சிறப்பும், சொல்லாற்றலும் உடையவராக இலக்கியப் பெருமையும் கொண்டு

விளங்கியவர் ஔவையார். "இருபேராண்மை செய்த பூசல்" என்ற குறுந்தொகையடிகளில் *(43)* தலைவியின் எண்ணப் போக்கை ஆண்மையின் பாற்பட்டதாகக் குறிப்பிடுகிறார். எனவே ஆண்மை என்பது உறுதி என்ற பொருள்படப் பாடும் ஔவையார். ஆடவரின் உடல் வலிமையை ஆண்மை எனக் குறிக்கவில்லை.

ஆகவே, சங்ககால ஔவையார் தன்னுடைய வாணாளில் அறிவு, ஆளுமைத் திறன் இவற்றால் சங்ககால மங்கையரின் மணிவிளக்காகத் திகழ்ந்தார். தற்காலப் பெண்ணியக் கோட்பாடுகள், ஔவையின் வாழ்க்கைப் போக்காக அமைந்தமையின் அவர், மகளிர் குலத் தலைவியாக விளங்கினார் எனலாம்.

**பிற்கால ஔவையார்கள் - பெண்ணியக்கப் போக்கு**

சமயச் சூறைக் காற்றால் அடித்துச் செல்லப்பட்ட மகளிர் உரிமைகள் மறுக்கப்பட்ட இடைக்காலத்தைச் சேர்ந்த பிற்கால ஔவையார்கள், பெண்ணியக்கத்திற்கு முரணான செய்திகள் தருகின்றனர்.

1. "உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு" (கொன்றை வேந்தன் *5)*
2. "தையல் சொல் கேளேல்" (ஆத்திசூடி, *62).*
3. "பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
   எத்தாலுங் கூடி இருக்கலாம்-சற்றேனும்
   ஏறுமா றாக இருப்பாளே யாமாகிற்
   கூறாமற் சந்நியாசங் கொள்" (தனிப்பாடல், *15)*
4. "மாடில்லான் வாழ்வு........
   ........... குணமில்லாப் பெண்டு
   ......... வீழல்" (தனிப்பாடல், *66)*
5. மனையாளைப் பஞ்சணையில் மட்டுமே புகழ வேண்டும். (தனிப்பாடல், *67).*

இக்கருத்துக்கள் எல்லாம் பெண்டிரை இழிவு செய்யும் போக்கில் அமைந்துள்ளன. பிற்கால ஔவையின்,

"நல்லார்கள் எல்லாரும் நல்லவரே தன்மையால்
வல்லாரார் கேடு படாராயின் - நல்லறி
வாண்மக்கள் பற்பலர்க்கே யுண்டாகும் பெண்டீரும்
மாண்பு கெடுக்கா விடின்" (தனிப்பாடல், *68)*

என்ற பாடலில் ஆடவர் மகளிர் இருவருமே தத்தம் நெறி பிறழாமல் வாழ்தல் வேண்டுமென்ற வலியுறுத்தல் காணப்படுகிறது. பிறிதோரிடத்தில்,

"அற்றதலை போக அறாததலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனோ - வற்றன்
மரமனையா னுக்கிந்த மாணை வகுத்த
பிரமனையான் காணப் பெறின்" *(தனிப்பாடல், 14)*

என்று பாடுகிறார் பிற்கால ஔவையார். இப்பாடலில், பெண்மைக்கு உரிய மதிப்பைத் தராத ஆடவனைக் கடிகிறார். எனவே, ஆடவராயினும், பெண்டிராயினும் அவரவர்க்கு உரிய தகுதியும், மதிப்பும் ஏனையோர் போற்ற வேண்டிய கருத்துக்களை ஔவையார் பாக்களின் வாயிலாக உணரலாம்.

பெண்டிரை இழிவு செய்யும் வகையில் அமைந்த பாக்களின் போக்கை இனி ஆராயவேண்டும்.

**கருத்து**

இல்லுறை மகளிர்க்கு நடத்தல் பயிற்சி குறைவாக இருத்தலால் உண்டியின் அளவுப் பெருக்கம் உடலூறு விளைக்கும் என்பது உடற்கூறு பற்றிய அறிவியற் செய்தியாகும். 'தையல் சொல் கேளேல்' என்பதில் ஒழுக்கமற்ற பெண்டிரான பரத்தையர் சொல் கேட்டு ஒழுகுதல் ஆடவராயினும், குலப்பெண்டிராயினும் சமுதாயக் கேடு விளைக்கும் என்னும் கருத்து உள்ளடக்கமாகும். மிகையாகப் புனைந்து கொள்ளும் தையல் ஆகிய பரத்தை எனக்கொண்டு ஔவையின் இச்செய்யுள் கருத்தையும் ஏற்கலாம்.

கணவனுக்கு ஏற்ற மனைவியும், மனைவிக்கு ஏற்ற கணவனும் இல்லற வாழ்வின் பேறு என்பதைப் பிற்கால ஔவையார் பாடல்கள் வழி நின்று அறிய முடிந்தது. எனவே இல்லறத்தில் தொடங்குகின்ற இணையுரிமை, எல்லா நிலைகளிலும் பரவும் என்பது உறுதியாகும்.

தற்காலத்தில் புறவாழ்விலும், அகவாழ்விலும் ஆடவரும், மகளிரும் இணையான பங்கேற்றுள்ளனர். பணிக்குச் செல்லும் புறவாழ்வின் பயனான பொருளீட்டல் பெண்டிரும் மேற்கொள்வதால், ஆடவரே இல்லறத்தின் முதலாளி என்ற நிலை மாறிவிட்டது.

ஆகவே, முதலாளித்துவப் போக்கை ஆடவர் மாற்றிக் கொண்டனராயின், பாட்டாளிகளின் அடிமைப்போக்கை மகளிர் ஏற்றுக் கொள்ளாதவராயின் பெண்ணியம் வெற்றி பெறும். தங்கள் பகுத்தறிவின் பயனைத் துய்த்து அறிவார்வம், ஆற்றல் பெருக்கினால் மகளிர் பெருமையுறுவர்.

## துணைநூல்கள்

1. பெண் ஏன் அடிமையானாள், தந்தை பெரியார்.

2. குடும்பம், சொத்து, உரிமை - ஏங்கெல்ஸ்.

3. புறநானூறு, கழக வெளியீடு.

4. குறுந்தொகை, கழக வெளியீடு.

5. நீதிநூற் கொத்து, முதற்பாகம், கழக வெளியீடு.

6. ஔவையார் தனிப்பாடல்கள் (பதி.) புலியூர்க்கேசிகன், பாரி நிலையம், சென்னை.

# பெண்ணிய நோக்கில் பெருங்கதை

பாக்யவதி சங்கரலிங்கம்

'பெண்மை என்பது அநாதியாக முழுமுதற் பொருளின் ஒரு கூறாயிருப்பது. அப்பெண்மை தண்மைச் சத்தியாய்த் தனக்குரிய கடனை ஆற்றிவருகிறது. அச்சத்தியின் கூறே பெண்ணுலகென்பது. பெண் மகளாகப் பிறந்து, பின்னை மனைவியாகி, பின்னைத் தாயாகி முடிவில் இறையாகின்றாள்'[1]. இந்நாட்டில் இவ்வாறு பெண்மை இறைமையுடன் இணைத்துப் போற்றப்படுவதும், 'பெண் பிள்ளைகளுக்கு நகை வேண்டும், நல்ல சேலைகள் வேண்டும். சமையல் தெரிய வேண்டும். மற்றபடி வேறொன்றும் வேண்டியதில்லை'[2] என்று பெண் அஃறிணை போல் கருதி ஆளப்படுவதும் காலங் காலமாகத் தொடர்ந்துவரும் வேதனைக்குரிய வேடிக்கை.

இன்று பெண்கள் நிலை, பெண்ணுரிமை, பெண் விடுதலை, பெண் முன்னேற்றம், பெண்ணியம், பெண்மைக் கோட்பாடு, சமத்துவம், ஆணாதிக்கம் போன்ற சொற்கள் உலகெங்கும் ஒலிக்கின்ற நிலையில் பெண்மை மதிக்கப்படவேண்டுமெனப் போராடும் நிலையில் காலத்தின் கண்ணாடியாய் இயங்கும் இலக்கியங்கள் இவை பற்றி என்ன பகர்கின்றன என்பதனை அறிதல் பொருத்தமானது. அப்பொழுதுதான் இந்நிலைக்கான ஆணிவேரினைக் கண்டறிந்து ஆவன செய்ய இயலும். புதியதொரு சமுதாயம் மலர்தல் இயலும்.

பழம்பெரும் இலக்கியங்கள்-குறிப்பாகக் காப்பியங்கள் பாடுபொருளின் அகலமும், பாத்திரங்களின் பெருக்கமும் காரணமாக இவ்வாணிவேரினைப் பன்முக நோக்கில் அடையாளம் காட்ட முடியும். ஆதலின் கொங்கு வேளிரின் பெருங்கதையினை, பெருமளவிற்கு ஆரியத் தொடர்புடைய காப்பியத்தை ஆய்தல் இன்றியமையாததாகின்றது.

---

1. திரு.வி.க. *பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை*, ப.298.
2. கோ.வெ. கீதா, *வ.ரா. அவர்களின் பெண்ணியச் சிந்தனை*, ப.5.

பொதுவாகக் காப்பியங்களில் காணலாகும் கவிதை நயங்களும் கற்பனையும் இக்காப்பியத்தும் விஞ்சி நிற்பினும், பிற காப்பியங்களின் கதை போன்று பலரும் அறிந்த கதையன்று இப்பெருங்கதை. காப்பியத்தின் தொடக்கமும் (முதற் காண்டத்தில் முதல் *31* காதைகள்) இறுதிப் பகுதியும் கிடைக்காமையும், நடை சற்றே கடின நடையாய் அமைந்திருப்பதும் இதற்குக் காரணமாகலாம். பெண்ணிய நோக்கிற்கு இவை ஒன்றும் பெருந்தடைக் கற்கள் அல்ல.

இலக்கியங்கள் எல்லாம் ஆடவர்கள் வரலாறாகவே அமைகின்றன[3]; இலக்கியங்கள் எல்லாம் ஆண் பார்வையிலேயே உருவாக்கப்பட்டிருப்பதால்[4] மனித இனத்தின் ஒரு பாதியாகிய பெண்களைப் பற்றி ஒன்றுமே பெரிதாகச் சொல்லாமல் விடுவது;[5] போன்ற கூற்றுகள் இலக்கியங்களில் பெண் பெறும் இடத்தினைத் தெளிவாகக் கூறுகின்றன. பெருங்கதையும் இதற்கு விதிவிலக்கன்று. இதன்கண் இடம் பெறும் மகளிரின் படைப்பும் அவர்களின் பங்கும் குறுகிய எல்லையினை உடையன என்பதும் சுட்டப்பட வேண்டிய ஒன்று.

வாசவதத்தை, சாங்கியத்தாய், பதுமாபதி என்ற மூவரே கதையில் ஓரளவு சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பவர்கள். அடுத்து காஞ்சனமாலை, நருமதை, யாப்பியாயினி, அயிராபதி, பதுமை, மானனீகை, விரிசிகை, மதன மஞ்சிகை ஆகியோர் கதைப்போக்கில் நேரடியாக ஓரளவு இடம் பெறுபவர்கள். கோப்பெருந்தேவியர் தோழியர், பணி மகளிர் போன்று சிலர் ஆங்காங்கு சுட்டப்படுபவர்கள். தமிழக மகளிர் பற்றிய ஆய்வில் வடமொழியைப் பின்பற்றி எழுந்த காப்பிய மகளிர் ஆய்வுக்கு உட்படுத்தப்படலாமோ என்ற கேள்வி எழலாம். இதனை இயற்றியவர் தமிழர் ஆதலானும், தழுவல் இலக்கியங்கள் நம் நாட்டுப் பண்பாட்டைத் தழுவியே அமைகின்றன ஆதலானும் இவ்வாய்வு பொருத்தமுடையதே.

இவ்வாய்வின் முதற்பகுதி குறிப்பிடற்குரிய மகளிரின் அறிமுகமாக அமைகின்றது. அவர்களின் பண்பு நலன் பற்றிய முழு ஆய்வாக அமையின் பெருகும் என்பதனால் சிறப்பாகக் கூறத் தகுந்தவை மட்டும் சுட்டப்படுகின்றன. மகளிர்வருணனை பிற இலக்கியங்களில் உள்ளவை போன்றே அமைகின்றமையின் இதில் கருதப்பெறவில்லை. அடுத்துத் தொடரும் பகுதி, 'பெண்களுக்குத் திருமணம் ஒன்றே முடிந்த முடிவு'[6]

---

3. சரசுவதி வேணுகோபால், பெண்ணியம்–ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு, இ.ப.த.ம. வெள்ளி விழா மலர், ப.*1*.

4. பஞ்சு, பெண்ணியம்–ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு, ப.*109*.

5. சரசுவதி வேணுகோபால், பெண்ணியம், இ.ப.த.ம. வெள்ளி விழா மலர், ப.*1*.

6. இரா. காஞ்சனா; தமிழியல் ஆய்வு, ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றம், ப.*368*.

என்ற நிலை இருந்து வருவதனால் திருமணம் என்பதில் தொடங்கி அதனோடு தொடர்புடைய கற்பு, நீதி, கொடைப் பொருள், பழிவாங்கலில் பெண், பெண்ணின் உணர்வு மதிக்கப் பெறாமை, பெண் பற்றிய இழிந்த மதிப்பீடு, சொத்துரிமை, உடன்கட்டை ஏறல், கைம்மை நோன்பு, கைவிடப்பட்ட மகளிர் எனப் பெண்ணின் பாதிப்புகளைப் பதிவு செய்கின்றது. மூன்றாம் பகுதி இதன் மறுபக்கமாகப் பெண்ணுக்குச் சாதகமாய் அமையும் பெண்கல்வி, தொழில், அரசாட்சியில் பெறும் பங்கு, பாராட்டு, கருத்து அறிதல், இன்ப துன்பங்களைப் பகிர்தல், சூலுற்ற மகளிரின் விருப்பம் நிறைவேற்றல் எனத் தொடர்கின்றது. இறுதிப் பகுதி இவற்றினைச் சீர்தூக்கி நோக்குங்கால் எழுந்த எண்ணங்களைத் தருகின்றது.

## மகளிர் அறிமுகம்

### வாசவதத்தை

கதைத் தலைவனின் கோப்பெருந்தேவி என்ற முறையில் தலைமையிடம் பெறுபவள் இவள்.

> 'ஒண்மையும் நிறையும் ஓங்கிய ஒளியும்
> பெண்மையும் பெருமையும் பிறவும் உடைமையின் *(1 : 4 : 151-2)*

என அறிவும், பண்பும் நிரம்பியவளாகக் கூறப்படினும், அதற்கேற்ற பெருமிதம் உடையவளாக அன்றி அச்சம் நிறைந்தவளாகவே இருக்கின்றாள்; ஊசலில் ஏறி ஆடவும் அஞ்சுவள். தோழியர் குரவைக் கூத்தாடினும் அஞ்சுவள்*(1: 46:184)*. அதனால்தான் யூகியின் சொற்கேட்டு உதயணனை, அவன் நன்மைக்காகவே பிரியினும் தான் செய்தது சரியா தவறா என்ற முடிவுக்கு வரமுடியாமல், அவனை மீண்டும் அடையும்வரை அஞ்சிக்கொண்டே இருக்கின்றாள். நற்பண்பினள் ஆயினும் தனித்துச் சிந்தித்துச் செயலாற்றுபவள் அல்லள்.

### பதுமாபதி

இவள் தத்தைக்கு நேர்மாறாகத் துணிவு நிரம்பியவள். உதயணனைக் கோவிலிலிருந்து பல்லக்கில் மறைத்து அந்தப்புரத்துக்கு அழைத்துவந்து, தன்னறையில் ஒருமாத காலத்திற்கும் மேல் யாரும் அறியாவண்ணம் உடன் வாழ்ந்தவள். தான் விரும்பியவனை அடையவேண்டும் என்ற வேட்கை இவளுக்கு அதற்குரிய மனத்துணிவைத் தந்தது எனலாம். வாசவதத்தை திரும்பி உதயணனிடம் வந்தபின், 'இதுவரை தத்தையைப் பிரிந்திருந்த கால அளவு அவளுடன் இனிது வாழ்க' என்று உதயணனிடம் உரைப்பது இவளது பெருந்தன்மையைக் காட்டுகின்றது. ஆனால் அவன் மானனீகையை விரும்பும்போது எந்தவித

எதிர்ப்புணர்வும் இன்றி, கோபம் கொள்ளும் தத்தையையும் பொறுமையாக இருக்க என்று வேண்டுவது இவளை மிகச் சாதாரணமான பெண்ணாகவே காட்டுகின்றது.

### மானனீகை

மன்னன் மகளாயினும் அவன் போரில் தோற்றமையால் முதலில் ஆருணி மன்னன் தேவியின் ஒப்பனைப் பெண்ணாகவும், அதன் பின் அவன் உதயணனிடம் தோற்க அவன் மனைவியின் ஒப்பனைப் பெண்ணாகவும் ஆகின்றாள். பின் உதயணன் விருப்பத்திற்கும் பணிய வேண்டியவளாகின்றாள். கலைகளில் பெருந்தேர்ச்சி பெற்ற இவள் மன்னர்களின் பகைமையுணர்விற்கிடையில் பந்தாடப்படும் பரிதாபத்திற் குரியவள். வருவதை அப்படியே ஏற்கும் பொறுமையின் உறைவிடம்.

### சாங்கியத் தாய்

இக் கதையில் இடம் பெறும் மகளிரில் செயல் நிலையில் பெரும்பங்கு வகிப்பவள் இவளே. பெண்மை மிதிக்கப்படுவதைப் பொறுக்கமாட்டாது கிளர்ந்தெழுந்து, பழி உணர்வில் தவறி, பின் தவம் செய்து பிறர் போற்ற வாழ்பவள்; பொதுநலம் பேணுபவள்; யூகியின் சூழ்ச்சிகளைச் செவ்வனே நிறைவேறத் துணை புரிபவள்; அறிவும், ஆற்றலும் சூழ்ச்சித் திறனும் உடையவள். வாசவதத்தையும் உதயணனும் ஒருவர்பால் ஒருவர் அன்பு கொண்டிருப்பது உணர்ந்து இருவரும் இணைவதற்கு ஆவன செய்பவள்; சிறந்த செவிலி.

'கருமக் கிடக்கையும் கலங்காச் சூழ்ச்சியும்
மறைபுலப் படாமையும் மறைஉண் ணாமையும்
வாசவ தத்தைக்கு வழித்துணை யாய
தாய்மையும் தவமும் வாய்மையும் நோக்கி' *(1:46:117-120)*

என்று உதயணனால் போற்றப்படுபவள். ஆடவர் தவறுக்கு முதன்முதலாக எதிர்ப்புக் குரல் கொடுத்தவள்.

### நருமதை

இவள் கணிகையர் குலத்தில் தோன்றிக் குலமகளிர் போன்று கற்பு நெறியில் செல்ல விரும்பியவள்; உதயணன் 'சூழ்ச்சியால் இன்னலுக்கு ஆளானவள்; உதயணன் நண்பன் வயந்தகன் இவளை வலியப் பற்றித் தேரிலேற்றிச் செல்லும்போது தனக்கு இழைக்கப்படும் அநீதிக்காக எதிர்ப்புக் குரல் எழுப்பி ஊரையே துணைக்கழைப்பவள். இருப்பினும் பிறந்த குலத்தால் பழிப்புரைகளையே பரிசாகப் பெறுபவள்.

யாப்பியாயினி

பதுமாபதியின் தோழி. சாங்கியத்தாய் போன்று இவளும் நுண்ணறிவும் திறனும் நிரம்பியவள். முகக்குறிப்பிலேயே எதனையும் புரிந்து கொள்பவள். தன் தோழி அந்தண வடிவில் வந்த உதயணன்பால் மனம் இழக்க அவன் நலன்களை ஆராய்ச்சி செய்து பொருத்தம் பார்ப்பவள். உதயணனுக்குத் தருசகனின் அரண்மனை, அதன் மதில் அமைப்பு, கோபுரம், சுரங்கம், எந்திரவாவி, இளமரக்கா, சோலைகள், அந்தப்புரம், படைக்கலக் கொட்டில், கூலக் களஞ்சியம், அவை மண்டபம், கூத்தாட்டம்பலம், வழிபாட்டிடம், குதிரை, யானை, காலாட்படை தங்குமிடம், செங்குன்றம், இருட்டறை என்று அனைத்தையும் வரைந்து காட்டி விளக்குவதை நோக்கின் இவளது ஆற்றல் நன்கு புலப்படும். இவளது தகுதியறிந்தே தன் நண்பன் இசைச்சனுக்கு இவளை மணம் முடிக்கின்றான் உதயணன்.

பதுமை

பிரச்சோதன மன்னனிடமிருந்து உதயணனிடம் தூதுவரும் இவள் பற்றிய புலவர் கூற்று வியக்க வைக்கின்றது. *23* அடிகளில் இவள் இயல்பு இயம்பப்படுகின்றது. 'நூலறிவுடையவள்; புலனடக்கம் நிரம்பியவள்; விருப்பு வெறுப்பு அற்றவள்; கண்களாலேயே பிறர் நெஞ்சம் நினைப்பதை அறிபவள்; தெளிவாக ஆய்ந்து காணும் நுட்ப அறிவினள்; உடல் உறுப்பை அரியினும் அஞ்சாதவள்; ஊசியேற்றினும் மறைமொழி உரையாதவள்; பல்வேறு சிறப்புச் செய்யினும் மனம் பிறழாதவள்; அரசன் குறைப்படினும் அடக்கம் உடையவள்; அரசன் ஏவியதன்றியும் பிறவற்றையும் செய்து முடிப்பவள்; கல்லாப்புல்லர் மொழி போற்றாதவள்; ஆன்றோர் உரையினைச் செவி வாயாக நெஞ்சு களனாக ஏற்பவள்; இன்சொல், பொருள் பொதியப் பேசுபவள்' *(4:10:13-35).* இவ்வளவு விரிவாக இவளன்றி வேறு யாரும் புகழப்பெறவில்லை. பெண்களில் தனித்து ஒளிர்பவள் இவள். வாய்ப்பளிப்பின் எச்செயலையும் திண்ணிய மனதுடன் செய்து முடிக்கும் ஆற்றல் பெண்ணுக்கு உண்டென உலகுக்கு உரைப்பவள்.

இவர்களையும் இந்நூலில் இடம் பெறும் பிற மகளிரையும் நோக்க, 'சமுதாயத்தில் உயர் சாதியினர் என்று குறிக்கப்பெறும் பெண்கள் செயல் வேகமற்றவர்களாக, மென்மையும், அடக்கமும் உடையவர்களாகப் பயிற்சி அளிக்கப் பெற்றுச் சிறு வயதிலிருந்தே வளர்க்கப் பெறுவதால் எதிர்ப்புக்குரல் எழுப்பும் பாடல்களும் கதைகளும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த பெண்கள் பாடுவனவாக, செய்வனவாக இருக்கக் காண்கிறோம்'[7]

7. சரசுவதி வேணுகோபால், பெண்ணியம்-ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு; இ.ப.த.ம. வெள்ளி விழா மலர், ப.5.

என்ற கூற்றிற்கேற்ப அரச மகளிர் மென்மையும் அடக்கமும் நிரம்பியவராக இருக்க, பிற மகளிர் எதிர்ப்புக் குரல் எழுப்புவோராக, செயலாற்றுவோராக இருக்கக் காண்கிறோம்.

## பெண்களைப் பாதித்தவை

### திருமணம்

உதயணன் நான்கு மகளிரை மணத்தல், அவன் நண்பர்கள் மூவருக்குத் திருமணம் புரிவித்தல், மகன் நரவாணன் திருமணம் ஆக எட்டுத் திருமணங்கள் இந்நூலில் இடம் பெறுகின்றன. உதயணன் வாசவதத்தை, பதுமாபதி, மானனீகை மூவரையும் தானாக விரும்பி மணம் புரிகின்றான். விரிசிகை உதயணனையன்றிப் பிறனொருவனை மணம் புரியேன் என்று கூற, அவள் தந்தையும் 'கன்னி மகளிர் யாவரேயாயினும் அவர்தம் காமத்துன்பம் தீரும்படி அவர்பால் அளிசெய்தல் சான்றோர் வழக்கம்' *(4:15:7)* எனக் கூறி உதயணனை அவளை மணந்து கொள்ளுமாறு வேண்டுகிறார். திருமணம் நடைபெறுகிறது. உதயணன், நண்பர்களுக்குத் தானாகத் தன் விருப்பத்தின்படி மணம் முடிக்கின்றான். மகன் நரவாணன் மதனமஞ்சிகை என்ற கணிகையை விரும்ப அவனும் வாசவதத்தையும் ஏற்க இருவருக்கும் திருமணம் நடைபெறுகிறது.

இத்திருமணங்களை நோக்க, மன்னன் திருமணம் இருவரும் விரும்ப நடைபெறுகின்றது. பெண்ணின் விருப்பம் நிறைவேற்றப் பட்டிருப்பதும் தெரிகின்றது. இருப்பினும் உதயணன் தன் நண்பர்களுக்கு நடத்திவைக்கும் திருமணங்களில் பெண்ணின் விருப்பம் மட்டுமல்ல; அவனது நண்பர்களின் விருப்பமும் கேட்கப்படவில்லை. அரசன் என்ற முறையில் அவன் அவர்களுக்குச் செய்யும் சிறப்புகளில் ஒன்றாகவே திருமணம் அமைகின்றது. பதுமாபதியைத் தான் மணக்குங்கால் அவளுடன் அவள் தோழி வரவேண்டும் என்பதற்காகத் தன் நண்பனுக்கு யாப்பியாயினியை மணம் முடிப்பது இருமனம் இணைந்தது திருமணம் என்ற கருத்திற்கு அங்கே இடமேயில்லை என்பதை மட்டுமன்றி அது அரசன் ஆணைபோல அமைவதையும் காட்டுகின்றது.

உதயணன் - வாசவதத்தை திருமணம் மட்டும் நூலில் விரிவாகப் பாடப்பட்டுள்ளது. அச்சடங்குகளையும், திருமணம் தொடர்பாகப் பெண்களின் எண்ணங்களையும் காண சில கருத்துகள் தோன்றுகின்றன.

மணம் காண வந்த மக்கள் பலரும் கூடியுள்ள பந்தலில் நன் முகூர்த்தத்தில் தெய்வங்களை வாழ்த்தி, வேள்வித் வளர்த்து, அந்தணன் மறை மொழி ஓத, அம்மி மிதித்து, மணமகன் மணமகள் கைப்பற்றித் தீவலம் வந்து, அருந்ததி காட்டி, அந்தணர்க்குத் தானம் வழங்கி, நான்கு

நாட்கள் நோன்பியற்றியபின் மணவிழாச் சடங்குகள் இனிதே முடிவு பெற்றன *(2:3)* என்கிறார் புலவர். 'ஒருயிர் என்னும் உரிமை தரும் மணவேள்வி' *(2:3:5)* என்பதும், 'திருமணம் விருந்தோம்பல் முதலிய அறச் செயல்களைச் செய்யும் உரிமை தருவது *(3:21:7)* என்பதும், மோகமும் கற்பும் புணர்ந்துடன் நிற்க' *(2:3:87)* எனக் கூறி அம்மி மிதித்தலும், 'மறுவில் காதல் மக்களைப் பெறுக' *(2:3:110)*, 'அல்லற் காலம் வந்துழியும் மாறாத காதலொடு அமைக' *(2:3:112)* என வாழ்த்துவதும், 'உன்னைப் போன்றே மன்னிய உலகில் கற்புடன் வாழ என் வயின் அருள்' என அருந்ததியை வேண்டலும், 'நீ நின் கணவன் எப்பொழுதும் விரும்புவதற்குக் காரணமான இயல்புடையவளாய், பிற மகளிரை அன்பினால் தழுவி, குறையாத அறிவு உடையவளாய் மனைக்கிழத்திக்குரிய உரிமையின் கண் மிகவும் உயர்ந்து திகழ்ந்து மேம்படுக' *(2:5:91)* என மங்கலப் பெண்டிர் வாழ்த்தலும், தன் கணவன் தன்னை விரும்பவேண்டுமெனக் காமன் நோன்பு நோற்றுத் தானம் வழங்கலும் *(3:13:33)*, பெண் தன் சுய விருப்புத் துறந்து, பிற மகளிரை அவன் மணம் புரியினும் அவர்களை அன்புடன் ஏற்றுத் தான் கற்பு நெறியினின்றும் பிறழாதவளாக இல்லத்து அமைதி காக்க வேண்டும்; பெருமை காக்க வேண்டும் என மறைமுகமாக வற்புறுத்துதல் காணலாம். இதனைக் காலங்காலமாகக் கேட்டு வருதலின் அதுவே தங்கட்கும் பொருந்தியதென, மகளிரும் இயல்பாக ஏற்றுக்கொண்டமையினை இதனைப் பின் தொடரும் கற்பு பற்றிய சிந்தனைகளும் காட்டுகின்றன.

### கற்பு

'கற்பு' மிக ஆழமாக மகளிர் மனத்துப் படிந்திருப்பதனை இந்நூல் பலவிடத்தில் பறை சாற்றுகின்றது. புள், விலங்கு போன்றவற்றின் ஆண்பாற் பெயரைக் கூடக் கூறுவதற்கு நாணல் *(1:3:78)*, உதயணன் பால் மனம் ஈடுபட்டபின் தெய்வம் வணங்காது அவன் நிற்கும் திசை நோக்கித் தத்தை தொழல் *(1:42:108)*, 'உடன்போக்கு-தாய் தந்தையரால் தவறாகக் கருதப்படினும் கற்புடை மகளிர்க்கு அதுவே அறம்' எனல் *(1:55:15)*, பிரச்சோதனன் மனைவியரைக் கதிர் இருக்கும் திசை நோக்கித் திரும்பும் நெருஞ்சி மலர் எனக் குறிப்பிடல் *(3:4:13)*, உதயணன் உலாவருங்கால் கற்புடை உத்தம மகளிர் தவிர ஏனைய கணிகையர் காமன் துரந்த கணையால் வருந்தினர் என வகுத்துரைத்தல் *(3:7:54)*, மகதத்து மகளிர் பெருங்கற்பினர், பதுமாபதியும் நெஞ்சினை விரும்பும் வழி விடாது தடுக்கும் ஒழுக்கினள் என உரைத்தல் *(3:8:100)* என்று இன்னபிற இடத்தும் மகளிர் போற்றப்படுங்கால் அவர்தம் கற்பே முன்னிறுத்தப்படுதலை நோக்க மகளிரையும் கற்பினையும் இணைத்தே எண்ணும் சிந்தனையினராய்

ஆடவர், மகளிர் இருவருமே இருந்ததை உணரமுடிகின்றது. ஆடவர் மனம்போன வழி ஒழுகுதல் போன்று மகளிரும் நிறை தவறி நடந்தால் இல்லம் என்னவாகும் என்ற அச்சமே இங்ஙனம் வற்புறுத்திப் பேச வைத்தது எனலாம்.

மகளிர் சிந்தனையும் செயலும் அந்நோக்கிலேயே சென்றமையைக் காண முடிகின்றது. உதயணனை மணக்க இயலாது போயின் பிறன் ஒருவனை மணந்து வாழ்வேனோ? உயிர் துறப்பேன் அல்லது நோன்பு நோற்று மறுபிறவியிலாவது அவனை அடைவேன் என்கிறாள் வாசவதத்தை *(1:36:115)*. மேலும் உதயணன் தன் கடமைகளை கவனிக்க வேண்டும் என்பதற்காக அவளை யூகி மறைந்து உறையச் செய்யும்போது அஞ்சிப் பலவாறாகச் சிந்தித்துப் பின் வேறு வழியின்றிச் சம்மதிக்கின்றாள். (கணவன் கட்டளையை மட்டுமே ஏற்க வேண்டும் என்ற எண்ணம்) *(2:17:170)*. பதுமாபதி உதயணன் அனுப்பிய ஓவியத்தினை அவன் ஓவியம்தான் அது என அறியாது ஆடவர் ஓவியத்தைக் காண மாட்டேன் என மறுத்தல் *(3:22:105)*, விரிசிகை சிறுமியாக இருந்த காலை, தனக்கு மாலை தொடுத்துச் சூட்டிய உதயணையன்றிப் பிறனை மணவேன் எனப் பருவம் எய்திய பின் உறுதியாய் நிற்றல் ஆகிய அனைத்தும் மேற்கருத்தினை வலியுறுத்தும். தம் கற்பில் இந்த அளவிற்குக் கவனமாக இருந்த இம்மகளிர், ஆடவர்தம் பலதார மணத்தைப் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளும் இயல்பினராயும் இருந்தது (அன்புடைக் கணவர் அழித்தகச் செயினும் பெண் பிறந்தோர்க்குப் பொறையே பெருமை) *(4:8:98)*, பெண் எனில் மென்மை, அமைதி, அறியாமை, (அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு) கீழ்ப்படிதல், விழிப்புணர்ச்சியின்மை, கற்பு போன்றவைகளைக் கொண்டவளாக ஆண்டாண்டுக் காலமாகக் கற்பிக்கப்படுவதால் தனக்கு இரண்டாம் தரமான பாத்திரங்களே சமூகம் அளித்தாலும் அதை ஏற்கும் மனநிலையைப் பெண்களிடம் ஏற்படுத்திவிடுகின்றது"[8] என்ற கூற்றினை மெய்ப்பிக்கின்றது.

இங்ஙனம் குலமகளிர்க்கும் கற்பினை வலியுறுத்தும் உலகம், கணிகை ஒருவனை மனதாரவிரும்பி அவனுடன் வாழ முயலல் அதர்மம் எனப் பழிப்பது விந்தையாக உள்ளது. கணிகை குலத்துத் தோன்றிய நருமதை சேணிகன் மகன் ஒருவனை விரும்ப அவளை 'ஒருவன் பாங்கர் உளம் வைத்தொழுகும் அதன்மி *(1:35:69)* என்கிறது. ஆனால் மதனமஞ்சிகை என்ற கலைத்துறையில் கற்றுத் துறைபோகிய கணிகையின் மகளைத் தன் மகன் விரும்ப, உதயணன் வாசவதத்தையுடன் கூடி 'நலத்தகு கிழமைக்கு யாவரும் உரியோர் இவளின் இல்லென' *(5:8:150)* திருமணத்திற்குப் பரிசுப் பொருள் அனுப்பி வைக்கிறான். இங்குக் கணிகை

8. இரா. காஞ்சனா; தமிழியல் ஆய்வு; ப.16.

பட்டத்துப் பெருந்தேவியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றாள். அரசன் மகனால் விரும்பப்பட்டமையே இம்முரண்பாட்டிற்குக் காரணம் எனில் ஆள்பவனுக்கு ஒரு நீதி, ஆளப்படுபவர்க்கு ஒரு நீதி என்றாகின்றது. அஃது எவ்வாறேனும் கற்பு என்பது மகளிர் மனதில் கல்லில் வடித்த எழுத்துப் போலப் பதிந்திருந்தமையும், ஆணுக்கும் அக்கற்பிற்கும் ஒரு தொடர்பும் இல்லாத நிலையே அன்றிருந்தது என்பதையும் அறிய முடிகின்றது.

### நீதி*

தவற்றுக்கான தண்டனை வழங்குமிடத்தும் ஆணிற்கு ஒரு நீதி, பெண்ணிற்கு ஒரு நீதி என்பதனைச் சாங்கியத் தாயின் வரலாறு தெளிவாகக் காட்டுகின்றது. சாங்கியத் தாயின் கணவன் அவளை விட்டுவிட்டுச் செல்ல சினம் கொண்ட அவள் 'அவன், அவன் மனம்போனபடி வாழ்வதைப் போல யானும் வாழ்வேன்' எனத் தன் விருப்பம் போல வாழ, உதயணனின் தந்தை, அதற்குக் காரணமான அவள் கணவனை ஒன்றும் செய்யாது 'இவள் இடுப்பில் மணற்குடத்தைக் கட்டி யமுனையாற்றின் நடுவில் இறக்கிவிடுங்கள்' எனக் கட்டளை இடுகின்றான். உதயணன் அத்தண்டனையிலிருந்து அவளை மீட்கின்றான்.

அரசன் மட்டுமென்ன? பெண்ணே பெண்ணுக்குத் தண்டனை வழங்குகின்றாள். உதயணனும் மானனீகையும் சந்திப்பதை அறிந்து சினம் கொள்ளும் தத்தை, அதற்கு முழுமுதற் காரணமான உதயணனை விடுத்து, மானனீகையைத் தூணுடன் சேர்த்துக் கட்டி அவள் அழகைச் சிதைக்கும் நோக்குடன் கூந்தலைக் கத்திரிக்கோலால் வெட்ட முற்படுகின்றாள். 'ஆண் செய்த தவறு சமூகத்தால் போற்றப்படவில்லை என்றாலும் அவனின் தவறான வாழ்க்கை அங்கீகரிக்கப்பட்டுள்ளது ...... ஆடவன் செய்யும் தவறுக்குப் பெண்ணே தண்டனை ஏற்கும் சமூக அவலம் இவ்வரலாற்றில் மறைந்துள்ளது'[9] என்ற கூற்றிற்குச் சிறந்த சான்றாக இவை அமைதல் காணலாம்.

### கொடைப்பொருள்

ஆவும், ஆடையும், அணிகலனும் பிற பொருள்களும் கொடையாக வழங்கப்பட்டமை போல மகளிரும் கொடைப்பொருளான கொடுமையினை இந்நூலில் பலவிடத்துக் காண முடிகின்றது. பிரச்சோதனன் உதயணன் தன் புதல்வர்களுக்கு வித்தை கற்றுக் கொடுத்ததற்காகப் பிற பல விலைமதிப்பற்ற பொருள்களோடு *320* நாடகக் கணிகையரையும் வழங்குகின்றான் *(1:37:320)*. புனல் விளையாட்டின்போது மக்கள்

9. இரா. பிரேமா, தமிழியல் ஆய்வு, ப99.

அந்தணர்க்கு மகளிரைத் தானமாக வழங்குகின்றனர் *(1:39:56)*. இவை தவிர உதயணன் வாசவதத்தைக்கும், பதுமாபதிக்கும் கலையிற்சிறந்த மகளிரை வழங்கல் *(4:9:68)*, பிரச்சோதனன் வாசவதத்தைக்கு *1000* மகளிரைச் சீதனமாக அனுப்பல் *(4:10:179)*, உதயணன் பிரச்சோதனன் தேவிக்கு *110* மகளிரையும் *(4:11:38)* அவன் புதல்வர் இருவருக்கு *120* மகளிரையும் வழங்கல் *(4:11:49)*, வணிகன் தன் மகளுக்கு வேற்று நாட்டு மகளிரை வழங்கல் *(1:40:347)* போன்றவையும் நோக்குங்கால் பரிசப் பொருளில் ஒரு பொருளாகப் பெண் கருதப்பட்டமையோடு மகளிரே மகளிரைத் தானமாகப் பெறுதலைக் காணுங்கால் இவ்வழக்கத்திற்கு அம்மகளிரும் உடந்தையாதலும் புரிகின்றது. 'மொத்தத்தில் பெண்ணையே பெண்ணுக்கு எதிராக அவள் அறியாமலேயே இறங்க வைத்து விடுகின்றது'[10] என்ற கூற்று இவண் கருதத்தக்கது.

**பழிவாங்கலில் பெண்**

மன்னர் இருவர் தம் பகை நடுவே மகளிரைப் பகடைக் காயாக்கியிருப்பது பெண்ணுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதிகளில் ஒன்றாகின்றது. உதயணனிடம் பகை மன்னனைச் சிறைப்பிடிக்க வேண்டும்; அல்லது அவன் நாட்டை அழிக்க வேண்டும்; இல்லையெனில் அவன் மகளைச் சிறைப்பிடிக்க வேண்டும் என்று அமைச்சன் ஆலோசனை கூறுகின்றான். அதன்படி அவன் பிரச்சோதனன் மகள் வாசவதத்தையைக் கடத்தி வந்து மணம் புரிந்து கொள்கின்றான். இங்கு இருவரும் மனமொத்த அன்புடையார் ஆதலால் பெண் பாதிக்கப்படவில்லை. ஆனால் கோசல மன்னனை வென்ற ஆருணி அரசன் அவன் மகளைச் சிறைப்பிடித்து வந்து அவளைத் தன் தேவிக்கு ஒப்பனை செய்யும் வண்ண மகளாக்குகின்றான். உதயணன் ஆருணி மன்னனை வென்றபோது அவளைத் தானும் சிறைப் பிடித்து வந்து வாசவதத்தைக்கு வண்ண மகள் ஆக்குகின்றான். அரசியல் சூழ்ச்சியில் எவ்வகையிலும் அதில் தொடர்பு கொள்ளாத அந்தப்புரமகளிர் இங்ஙனம் பாதிக்கப்படுதல் அரசன் தோற்ற வழி அவர்களது பாதுகாப்பின்மையைப் பகர்கின்றது.

பகைமையைக் களைதலிலும் மகளிர் இவ்வண்ணம் பாதிக்கப் பட்டுள்ளனர். கலை நலம் சான்ற கணிகையரைப் பரிசிலாக வழங்கியும், தங்கையைத் திருமணம் முடித்தும் பகையை நட்பாக்கியுள்ளமை *(3:17:48,55)* அறிய வருகின்றது. எனவே பெண் மனிதப் பிறவியாகவே மதிக்கப்படவில்லை என்பது உறுதியாகின்றது. 'ஆணுக்குப் பெண் நிகர் என்னும் எண்ண வித்து இன்று மரமாகிப் பூத்துச் செயலாகும்

10. பஞ்சு, பெண்ணியம்-ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு, ப.*110*.

இக்காலத்திலும் பெண்மை மனிதமாக நினைப்படவில்லை என்பது ஒப்புக் கொள்ள வேண்டிய ஒன்று![11] என்ற நிலையில், இதில் வியப்பொன்றும் இல்லை.

**பெண்ணின் உணர்வு மதிக்கப் பெறாமை**

பிரச்சோதனன் மகள் வாசவதத்தையைக் கண்டு காதல் கொள்ளும் உதயணன் உடல் நலிகின்றான். இந்நலிவின் காரணம் தன் மகள் என அரசன் அறிய நேர்ந்தால் அது அவளுக்கும் தனக்கும் துன்பமாக முடியும் என்ற நிலையில், நண்பன் ஒருவரை அனுப்பி நருமதை என்ற கணிகையை அவள்தான் தன் நலிவிற்குக் காரணம் என உலகிற்குப் பறை சாற்ற அழைத்து வரச்சொல்கின்றான். அவளோ பிறிதொருவன் பால் அன்புடை மனத்தினள் ஆதலினால் வரமறுக்கின்றாள். ஆனால் அவள் தாய் துணையுடன் நண்பன் அவளை வலியப்பற்றித் தேரிலிட்டு அழைத்து வந்துவிடுகின்றான். வழியில் எவ்வளவோ கூக்குரலிட்டு அவள் அழுது புலம்பியும் யாருமே துணைக்கு வரவில்லை. அன்று இரவு அவளைத் தன் அறையில் வற்புறுத்தித் தங்க வைத்து மறுநாள் அவளை அனுப்பி வைக்கிறான். உதயணன் தானாக அழைத்தும் மறுக்கும் இவள் பெண் அல்லள் போலும் என உலகம் அவளைப் பழித்ததேயன்றி உதயணன் செயல் தவறானது என்று உணர்ந்தும் அது பற்றிப் பேசவில்லை. தாயே, அழைப்பவன் உதயணன் என்றால் அவளை வற்புறுத்தி அழைத்துச் செல்லுங்கள் என ஆணையிடும்போது பிறர் பற்றி என்ன கூறுவது? இங்குப் பெண்ணின் எதிர்ப்பு பயனற்றுப் போகின்றது; உணர்வு மிதிக்கப்படுகின்றது *(1:35).*

இதே போன்று தானாக விரும்பித் தத்தையை, பதுமாபதியை மணந்தபின் மானனீகை மீதும் காதல் *(9)* கொள்கின்றான் உதயணன். தத்தையின் நெற்றியில் மானனீகை செய்த ஒப்பனை சரியில்லை என்று பொய் கூறித் தான் ஒப்பனை செய்வதுபோல நடித்து, யவன மொழி தெரிந்தவள் மானனீகை என்பதைத் தெரிந்து அம்மொழியில் அவளுக்கு மடல் எழுதி அனுப்புகின்றான். முதலில் மானனீகை மறுத்தும் மீண்டும் மீண்டும் புலம்பி அவளைப் பணிய வைக்கின்றான். தன் நெற்றியில் தானே பிறிதொரு பெண்ணுக்கு மடல் கொண்டு செல்வதை அறியின் அவள் மனம் என்னவாகும் என்ற எண்ணம் கடுகளவேனும் அவனுக்கு இல்லை. உண்மையறிந்து தத்தை, மானனீகையில் கூந்தலைக் கத்தரித்துத் தண்டிக்க முயலும்போது அத்தண்டனையைத் தடுத்து நிறுத்தப் பிறரை அனுப்பி வைக்கின்றானேயன்றி அப்பொழுதும் தத்தையின் உணர்வு பற்றிய சிந்தனையே அவனுக்கு இல்லை; அவளைத் தேற்ற வேண்டும் என்ற

11. இ. மதியழகி மனோகரன், தமிழியல் ஆய்வு, ப.105.

எண்ணமும் இல்லை *(4:14)*. பற்பல சிறப்புகள் செறிந்த மன்னனாக அவன் இருந்தும் பெண்களை அவன் வெறும் நுகர்பொருளாக மட்டுமே கருதியது அக்காலச் சமுதாயத்தில் மகளிர் இழிநிலையைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றது.

## பெண் பற்றிய இழிந்த மதிப்பீடு

பெண்கள் பற்றிய பொதுவான கருத்துக்கள் இந்நூலில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. பெண் பேதமை நிரம்பியவள் என்ற பொருளில் 'மகளிர்க்குப் பருவம் பல கழிந்தவிடத்தும் பேதமை மட்டும் கழிவதில்லை' *(2:12:94)* என வரும் கூற்றும், 'மாரியும் திருவும் மகளிர் மனமும் தகுந்த இடத்தன்றி விரும்பிய இடத்துச் சென்று சேரும் *(1:5:156)* என்ற கூற்றும், மென்மை நிரம்பியவள் என்ற பொருளில் 'மெல்லியன்மாதர்' *(3:14:159)* என்ற கூற்றும், 'பெண்ணின் சூழ்ச்சியின்கண் அகப்படுதலால் உண்டாகும் பிழைகள் மிகவும் பலவாகும் *(3:14:31)* என்று பெண் துன்பத்திற்கே நிலைக்களமானவள் என்பதுபோல் கூறப்படும் கூற்றும் பெண்ணிற்குப் பெருமை சேர்ப்பனவாக இல்லை; பொருத்தமானவையாகவும் இல்லை. ஆணினும் அறிவிலும் ஆற்றலாலும் குறைந்தவள் என்ற எண்ணம் இயல்பாக அனைவருக்கும் இருந்ததையே இவை அறிவிக்கின்றன.

## சொத்துரிமை

மகளிர் தானம் வழங்குவதையும், அதன் பொருட்டுப் பொருள் வழங்கப்படுவதையும் இந்நூலில் காண முடிகின்றது. புனல் விளையாடப் புறப்படுங்கால் தத்தையின் தோழியர்க்கு ஆடையும் அணிகலனும் பிறவும் அவரவர் தகுதிநோக்கி வழங்குகின்றாள் *(1:38:211)*; அதே போன்று தெரிவை மகளிர் உள்ளம் உவந்து உரியோர்க்குத் தானம் தருகின்றனர் *(1:41:94)*; காமன் நோன்பு நோற்கும் பதுமாபதி நோன்பின் தொடக்கத்திலும் முடிவிலும் பெரும் பொருளைத் தானம் செய்கின்றாள் *(3:6:108), (3:13:29)*; பதுமாபதியின் தாய் அவள் தோழி, யாப்பியாயினியின் திருமணச் செய்தியைக் கேட்டவுடன் அவளை வாழ்த்திப் பேரணிகலன்கள் வழங்க, பதுமாபதியும் அணிகலன்களும், சிவிகையும் வழங்குகின்றாள் *(3:22:71)*; மகளிர் இங்ஙனம் தானம் தரவும் செய்கின்றனர். மங்கல நாட்களிலும் மன்னர் போரில் வெற்றியடைந்து மீண்ட பின்னரும் பெரும்பொருளைப் பெறவும் செய்கின்றனர். *(4:9:61)*. அரசன் தன் மகளுக்குத் திருமணத்தின் பின்னும் வரிசைகள் வழங்குகின்றான். உதயணன் தன் தாய்க்கு வற்றாத வளத்தினை உடைய நாட்டினை வழங்குகின்றான் *(4:9:44)*. எனவே மகளிரிடத்து விலைமதிப்பற்ற பொருள்கள் இருப்பதை அறிகின்றோம். ஆயின் தந்தையின் சொத்தில் மகளுக்கு உரிமை இருந்ததாகத் தெரியவில்லை. அதை அவர்கள் தானமாக வழங்குவதைத் தவிர வேறெதும் செய்ததாகவும் தெரியவில்லை. உதயணனிடம் வழக்குக் கொணரும் உடன்

பிறந்தார் இருவர் தம் தமையன் கடல் கடந்து பொருளீட்டச் சென்றவன் திரும்பி வரவில்லையாதலால் அவனது சொத்துக்களையும் பொருட்களையும் யாது செய்வது என்று கேட்க, 'அப்பொருட்களின் மேல் மன்னனது இலச்சினையிட்டுக் காத்து வாருங்கள். ஓராண்டு கழித்தும் அவன் வரவில்லையெனில், தற்சமயம் கருவுற்றிருக்கும் அவன் மனைவி பெற்றெடுக்கும் குழந்தை ஆண் மகனாயின் சொத்து அவனுக்கு வழங்கப்படும். அன்றி மகளாயின் அவளது வளர்ப்பு, கல்வி, அணிகலன், திருமணம் போன்றவற்றிற்குச் செலவு செய்து எஞ்சியிருக்கும் சொத்தை நீங்கள் இருவரும் பங்கிட்டுக் கொள்ளுங்கள் என்கிறான். இதனால் கணவனின் சொத்தில் மனைவிக்கே உரிமையில்லை எனத் தெரிகிறது. சொத்தை அவளால் காக்க முடியாது என்பதாலோ அன்றிப் பெருக்க முடியாது என்பதாலோ இப்படியொரு நீதி வழங்கப்படுகின்றது. எது காரணம் ஆயினும் பெண் இங்கு வஞ்சிக்கப்படுகிறாள். கணவனை இழந்த இழப்புடன் இவ்வாறு பொருளுக்காகப் பிறரைச் சார்ந்திருக்க வேண்டிய இழிவும் இணைந்து கொள்கின்றது.

**கைம்மை நோன்பு**

கணவனை இழந்த நிலையில் அவர்களது நிலை விரிவாக நூலின் எவ்விடத்தும் காணப்படவில்லையெனினும் மங்கல நிகழ்வுகளில் அவர்கள் ஒதுக்கப்பட்டமையினை வாசவதத்தை, பதுமாபதி இருவரது திருமணத்தின் பின்னும் கட்டிலை 'வாலணிப் பொலிந்த மயிலியல் மாதர்' *(2:3:143)*, 'மணநல மகளிர்' *(3:22:268)*' அலங்கரித்தனர் எனக் குறிப்பிட்டுக் கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது. கைம்மை நோன்பு நோற்றமை ஆருணி மன்னன் மனைவியராலும் அறியப்படுகின்றது.

**உடன் கட்டை ஏறல்**

கணவனைப் பிரிந்த மகளிர் உடன்கட்டை ஏறியமையினை ஆருணி மன்னன் மாண்டபின் அவன் மனைவியர் சிலர் உயிர் துறந்தமையினால் அறியலாம் *(4:1:27)*. பகை மன்னனால் சிறைப்பிடிக்கப்பட்டுப் பணிமகளிராகும் இழிநிலையிலிருந்து விடுபடற்பொருட்டு உடன்கட்டை ஏறியிருக்கலாம். பாதுகாப்பின்மையே இதற்குக் காரணமாகின்றது.

**கைவிடப்பட்ட மகளிர்**

அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, அக்னி சாட்சியாக மணந்தும் மகளிரைக் கைவிட்டுச் சென்றிருக்கின்றனர். இம் மகளிரும் கைம்மை நோன்பினர் போன்று அணிகலன் துறந்து வாழ்ந்தனர் போலும். கொங்குவேளிர் இவர்களைக் குறிப்பிடுங்கால் மணந்த கணவன் கைவிட வாழ்விழந்து தமது சான்றாண்மையையே அணிகலனாகக் கொண்டு உயிர்த்திருக்கும் மகளிர் என்கிறார்.*(4:2:34)*. இம் மகளிர்க்கு ஆட்சியைத்

திரும்பப்பெற்ற உதயணன் பொருள் வழங்குகின்றான்; அவர்கள் வாழ்வினை மீண்டும் பெற மன்னன் என்ற முறையில் யாதும் செய்ததாகத் தெரியவில்லை.

## பெண்ணுக்குச் சாதகமாக அமைந்தவை

### பெண் கல்வி

அரச மகளிர் பல்துறை அறிவு உடையவராகக் கலைகளில் தேர்ச்சி பெற்றவராக இருந்திருந்தனர். பிரச்சோதனன் மகளிர் சமையல், யாழிசைத்தல், மலரால் உருவம் செய்தல், மறைந்துறைதல், ஓவியம், பல்வேறு குரலால் பேசல், ஒப்பனை போன்றவற்றை அவன் முன் செய்து காட்டி மகிழ்கின்றனர். மானனீகை யவன மொழியறிவு பெற்றவளாகக் காட்டப்படுகின்றாள். 'தெரிமதியாட்டி' சாங்கியத் தாய் நூலறிவு மிக்கவள்; மறைபயின்றவள். யாப்பியாயினி கட்டிடங்களை அவற்றின் அமைப்பு புலப்படும்படியாகத் திறம்பட வரைதலில் வல்லவள். பதுமையும் நூற்பொருள் தெளிந்தவள். இதேபோன்று 'நூலியல் நுனித்த அந்தண மகளிர்' என அந்தண மகளிரும் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களேயன்றித் தன்னிடத்து வழக்குரைத்த ஆடவரிடம் அவர்களது தமையன் மனைவி பெண் குழந்தை பெறின் அவளது வளர்ப்புக்கும், கல்விக்கும் திருமணத்திற்கும் செலவு செய்தது போக எஞ்சிய செல்வத்தை இருவரும் பங்கிட்டுக் கொள்ளலாம் எனக் கூறுவதிலிருந்து பெண்ணுக்குக் கல்வி கற்பித்தது புலனாகின்றது.

### தொழில்

மகளிர் அரண்மனையில் பல்வேறு தொழில் புரிந்திருக்கின்றனர். அடைப்பை தாங்கல், கவரி ஏந்தல் முதலாகப் பலவகைப் பணிகளை ஆற்றியதோடு அரண்மனைக் காவல் மகளிராகக் கையில் வாளுடனும் பெண்கள் பணி புரிந்திருக்கின்றனர். 'அரசன் உலா வருங்கால் மகளிர் கூட்டத்தை விலக்குவதையும் மகளிரே செய்திருக்கின்றனர். மன்னர் தேவியர், பெண்மக்கள் வண்டியினைத் தார்க்கோலைக் கையில் கொண்டு செலுத்தியிருக்கின்றனர். தினைப்புனம் காத்திருக்கின்றனர். இவை தவிர கள் காய்ச்சுதல், கொள்ளையடித்தல் போன்ற இழிதொழிலிலும் ஈடுபட்டிருந்திருக்கின்றனர். பொருளீட்ட, தம் காலில் தாம் நிற்க இத்தொழில்கள் இவர்களுக்குத் துணை செய்தமையின் இதனை அவர்களுக்குச் சாதகமாகக் கொள்ளுதல் பொருந்தலாம்.

### அரசுப்பணி

உதயணனின் கண் போன்று விளங்கிய யூகி தீட்டும் திட்டங்கள் அனைத்திலும் சாங்கியத்தாய் துணை நிற்கின்றாள். பிரச்சோதன மன்னனது ஊரைத் தீயிட்டுக் கொளுத்தும் முடிவு எடுத்தபின் நீர் விளையாட்டிற்கு நகர மக்கள் அனைவரும் சென்றால்தான் அது இயலும்

என்ற நிலையில் தெய்வம் ஏறியவள் போல் நடித்து ஒருபெண் உடனே நீர் விழா எடுக்கச் செய்கின்றாள். ஒரு கட்டுவிச்சியும் இதற்கு உதவி செய்கின்றாள். அதன் பின் ஆங்காங்குத் தீயிட்டவரும் பெண்களே. பிரச்சோதனன் அவையில் தூது செல்பவளாகப் பதுமை விளங்கியதும் முன்பே கூறப்பட்டது. அரசியல் சூழ்ச்சிகள் செவ்வனே நிறைவேற இவர்கள் துணை புரிந்திருக்கின்றனர். அரசியலில் இவர்களுக்கு இடம் இருந்ததை இதனால் அறியலாம்.

பாராட்டு

திறம்படக் கட்டிலை அலங்கரிக்கும் மகளிர் எட்டிப்பட்டமும் காவிதிப் பட்டமும் பெற்றிருந்திருக்கின்றனர். உதயணன் சாங்கியத்தாயை யூகிக்கு அறிமுகப்படுத்த ஓலை அனுப்புங்கால் அவளைப் பாராட்டி எழுதியதோடு அவளைக் காக்கவும் வேண்டும் என்கிறான். அதே போன்று யூகி தான் தீட்டிய திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி வாசவதத்தையை உதயணனிடம் ஒப்படைக்குங்கால் இவையனைத்தும் இச்சாங்கியத் தாயாலேயே இனிது நிறைவேறின எனப் பாராட்டுகின்றான். உதயணனும் தன் நன்றியுணர் வினை நெஞ்சால் வணங்கி அருள்மொழி பல கூறிப் பாராட்டுமாற்றால் உணர்த்துகின்றான்.

**இன்ப துன்பங்களைப் பகிர்தல்**

வாழ்க்கைத் துணையெனப்-பெண்ணை-மணம் புரிந்து கொண்டபின் இன்பத்தையும் துன்பத்தையும் அவளுடன் பகிர்ந்து கொள்ளுதல் அவள்பால் அவன் கொண்டுள்ள அன்பினையும், அவள் உணர்விற்கு அவன் தரும் மதிப்பினையும் காட்டும். அவ்வகையில் பிரச்சோதனன், அவையில் தன் புதல்வர்கள் உதயணனிடமிருந்து கற்ற வித்தைகளை வெளிப்படுத்தியபோது தானும் மகிழ்ந்து அதனைத் தன் கோப்பெருந்தேவியுடன் சென்று உரைத்து இன்புறுகின்றான். அதைக் கேட்டு அவளும் ஈன்ற பொழுதினும் பெரிதும் உவக்கின்றாள். அதே போன்று வாசவதத்தையை உதயணன் யானை மீதேற்றிக் கடத்திச் சென்றபோது பிறர் கூறுமுன் தானே இதனை அவளிடத்துச் சென்று கூற வேண்டும் என,

'மன்னருள் மன்னன் மனத்தில் தேறி
இடந்தோ ளென்ன விடற்கு அரும் காதல்
உரிமைத் தேவிக்குப் பட்டதை யெல்லாம்
ஏனோர் உணர்த்துதல் நீக்கிக் கோமான்
தானே உணர்த்தும் தன்மையன் ஆகி' *(1:47:149-154)*

அவளது உவளகம் வந்து, முதலில் அவளை நலம் பாராட்டி மகிழ்வித்து, உணவினையும் உண்டு முடித்த பின் உதயணன் பற்றி அவள் கொண்டுள்ள கருத்தினை அறிந்து அதன் பின் அவளை உதயணன் கடத்திச்

சென்றதனைக் கூறுகின்றான். சுமையினைத் தாங்குவது தோள் எனக் கருதப்படுதலின் கணவனின் துன்பச் சுமையினை ஏற்கும் தோளாக மனைவியைக் கருதினான் போலும். உளவியல் நுட்பத்துடன் இங்குத் தன்துணையிடம் வருத்தத்திற்குரிய நிகழ்வினை அமைதியாகத் தெரிவிப்பது பாராட்டிற்குரியது. இதனை நோக்க மனைவி என்ற உறவு நிலையில் பெண்ணிற்கு, அவள் உணர்விற்கு மதிப்பளித்தமை புலப்படுகின்றது.

### கருத்துக் கேட்டல்

திருமணம் புரியும் பெண்ணின் கருத்து கேட்கப்படவில்லையெனினும் அது குறித்துத் தாயிடம் கருத்துக் கேட்கப்பட்டிருக்கின்றது. பதுமாபதியை உதயணனுக்கு மணம் புரிவித்து அவளது தோழியை அவனது நண்பனுக்கு மணம் முடிக்கக் கருதும் பதுமாபதியின் தமையன் தன் தாயின் கருத்தினை அறிந்து வரும்படிச் சான்றோரை அனுப்புகின்றான். தாய்மை இங்கு மதிக்கப்படுகின்றது.

உதயணன் மகட்பேறு விரும்பியகாலை வாசவதத்தையும் அவ்விருப்பினளா என வினவி அவள் கருத்தறிந்து மகிழ்ந்தனன் என்பதை நோக்க மனைவியின் கருத்தினை உணர்ந்து நடந்தமை தெரிகின்றது.

### சூல் கொண்ட மகளிர் விருப்பம் நிறைவேற்றப்படல்

உதயணன், வாசவதத்தை கருவுற்றதன்பின் அவளுடைய விருப்பத்தை நிறைவேற்றல் தன் கடனெனக் கருதி 'நீ வேண்டுவதை ஆழ்கடலில் இருப்பதாயினும் அறிவித்தால் எதுவாயினும், அதனை உடனே நிறைவேற்றுவேன்' என்கிறான். அவள் 'விச்சாதரரைப் போல விண்ணில் பறந்து மகிழ்தலை என் நெஞ்சம் விரும்பி என்னை வருத்துகின்றது; இது நகைப்பிற்குரியது ஆதலின் இதுவரை கூறவில்லை என்கிறாள். அதைக் கேட்ட உதயணன் இதனை எப்படியும் நிறைவேற்றுவேன் என்றுரைத்து நண்பர்களுடன் கலந்துரையாடி உருமண்ணுவா மூலம் ஒரு இயக்கனைப் பற்றி அறிகின்றான். அந்த இயக்கன் மூலமாக இயந்திர ஊர்தியினை அடைகின்றான். அதன்பின் தன் நண்பர்களது சூலுற்ற மனைவியரும் தத்தை போன்றே வானில் பறந்து செல்ல விரும்பினர் என்பதறிந்து அவர்களையும் உடன் அழைத்துச் சென்று அனைவரது வயா நோயினையும் நீக்கி இன்புறச் செய்கின்றான்.

### கருத்துரை

மேற்கூறியவற்றை நோக்க முழுமையாக மகளிர் அடிமைப்படுத்தப் பட்டு ஆற்றாது அழுது புலம்பினர் என்று சொல்வதற்கும் இடமில்லை. சம உரிமையோடு மதிப்போடு எவ்வித இடையூறுமின்றி இன்பமாக வாழ்ந்தனர் என்று சொல்வதற்கும் இடமில்லை. மேலும் பெண்களின் இந்நிலைக்கு

ஆடவர் மட்டுமின்றி மகளிரும் துணை நிற்றலும் காரணமாதலையும் காண்கின்றோம். 'இயற்கையிலேயே பெண் என்பவள் ஆணை விட ஒருபடி தாழ்வாகப் படைக்கப்பட்டுள்ளாள் என்று உருவாக்கிவிடப்பட்ட நம்பிக்கைதான் அவளுக்கு எதிரான அடக்குமுறைகளை ஆழப்படுத்தி உள்ளது'[12] என்ற கருத்து இவண் இணைத்து நோக்கற்குரியது. ஒரு பெண் பிறரால் மதிக்கப்படும் முன் தன்னைத்தானே மதிக்கக் கற்றுக் கொள்ளல் இன்றியமையாதது. அரசகுலப் பெண்ணாகிய தத்தையே 'பிறிதொரு பெண்பால் அவன் மனம் ஈடுபட்டிருப்பினும் அவன் கால் செருப்பாவேன்' *(1:36:310)* என்கிறாள். ஆனால் வேற்று நாட்டு மன்னன் தன்னை மணம் பேச வந்துள்ளான் என்று கேள்விப்பட்ட உடன் பிறிதொரு மன்னனை மணந்து வாழ்ந்தாள் தத்தை எனக் கூறக் கேட்பேனோ *(1:36:112)* என்கிறாள். இவை மட்டுமல்ல; மானனீகையை மன்னன் விரும்பின் அவன் விருப்பத்தை நிறைவேற்றுவதே நமது கடமை என்கிறாள் பதுமாபதி. விரிசிகையோ அறியாப் பருவத்தில் மாலை சூட்டியவனே (அவன் பிற மகளிரை மணந்திருப்பதை அறிந்தும் கூட) தனது கணவன் என்கிறாள். இவற்றை நோக்க மகளிர் ஆடவரது கற்புப் பற்றிச் சிந்திக்கவேயில்லை என்பதும், ஒருவனுக்கு ஒருத்தி என்ற எண்ணமே எழவில்லை என்பதும், தமது கற்பில் மட்டும் உறுதியாய் நின்றனர் என்பதும் தெரிகின்றது. மேலும் அவர்கள் தவறு செய்பினும் பொறுத்தல் தமது தலையாய கடமை என்று கருதுவதையும் காண்கின்றோம்.

இவற்றையெல்லாம் நோக்கும்போது மகளிர் தம்நிலை இவ்வாறு இரங்கத்தக்கதாய் உள்ளது என்பதனை உணராமலே இருந்தது புரிகின்றது; தாழ்வைத் தாமாக ஏற்றுக் கொண்டது தெரிகின்றது.

**துணை நூற்பட்டியல்**


1. பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை, திரு.வி.க., பூம்புகார் வெளியீடு, சென்னை, பன்னிரண்டாம் பதிப்பு, *1982*.
2. பெண்ணியம், ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு, சு. சண்முகம் சுந்தரம், (பதி) பெங்களூர், காவ்யா, *1994*.
3. பெண்ணியம், இபதம வெள்ளிவிழா மலர்; மதுரைக்காமராசார் பல்கலைக்கழக வெளியீடு, *1994*.
4. சு. சமுத்திரம் படைப்புகளில் பெண்ணியம், சா. தியாகமணி, கருணா பதிப்பகம், வ.ஆ.அ. மாவட்டம். *1993*.
5. எண்பதுகளில் தமிழ்ப்புனைகதைகளில் பெண்ணியம், சு. வேங்கட்ராமன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, *1993*.


12. சு. வேங்கட்ராமன், எண்பதுகளில் தமிழ்ப் புனை கதைகளில் பெண்ணியம், ப.*91*.

6. தமிழியல் ஆய்வு, ஞானத் தமிழ்ப்பண்பாட்டு ஆய்வு மன்றம், மதுரை, 1994.

7. வா.ரா. அவர்களின் பெண்ணியச் சிந்தனை, கோ.வெ. கீதா, 'தமிழக மகளிர்' திங்கள் தொடர் கருத்தரங்கக் கட்டுரை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 8.6.94.

8. பட்டுக்கோட்டையாரின் பெண்ணியச் சிந்தனைகள், இரா. கஸ்தூரி, 'தமிழக மகளிர்' திங்கள்தொடர் கருத்தரங்கக் கட்டுரை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 13.4.94.

9. ஜீவாவின் பெண்ணியச் சிந்தனைகள், பா. தமிழ்ச்செல்வி, 'தமிழக மகளிர்' திங்கள் தொடர் கருத்தரங்கக் கட்டுரை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 11.5.94.

10. பெண்ணியப் பார்வையில் கம்பராமாயணம், ச. சிவகாமி, 'தமிழக மகளிர்' திங்கள்தொடர் கருத்தரங்கக் கட்டுரை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 13.10.93.

# பெண்ணியப் பார்வையில் கம்பராமாயணம்

ச. சிவகாமி

ஆணாதிக்கத்தினின்று விடுதலை, சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையான உரிமை, இழிநிலையிலிருந்து முன்னேற்றம் ஆகியவற்றை மையமிட்டுப் 'பெண்ணியம்' இயங்குவதாகக் கொள்ளலாம். சமுதாய முன்னேற்றம் என்பது உண்மையில் பெண்களின் முன்னேற்றத்தில் இருப்பதை இன்று பலரும் உணரத் தலைப்பட்டுள்ளனர். எனவே பெண்ணியக் கல்வி இன்றியமையாததாகிறது. இதற்குப் பெண்ணிய இலக்கியத் திறனாய்வும் பெரிதும் பயன்படுகிறது. இது, பெண்ணிய நோக்கில் கால, இட, மொழி, இன, வகைமை என எத்தகு வேறுபாடுமின்றி அனைத்து இலக்கியங்களையும் ஆய்வு செய்தலாக உட்படுத்தும்.

'பெண்ணிய நோக்கு இதுகாறும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அனைத்தையும் மறுபரிசீலனைக்கு ஆட்படுத்துகிறது. இந்த மறுபரிசீலனை உண்மைக்கான தேடல், அல்லது தத்துவார்த்த சிந்தனை மட்டுமல்ல......... பழக்கப்பட்ட, அதனாலேயே இயல்பானதாகக் கருதப்படுகிற அனைத்தையும் தலைகீழ் ஆக்குகிறது'[1] என்பர். இதனால், 'மகளிர் பின்னடைவிற்குக் காரணமான தொன்மப் படிமங்கள், குறியீடுகள், தாய்மை, பெண்மை ஆகிய கருத்தாக்கங்கள் சோதனைக்குட்படுத்தப்படுகின்றன......... பண்பாட்டின் எந்தெந்தக் கூறுகள் பெண்ணடிமைப் போக்கினை நிலைநிறுத்தும் பணியைச் செய்கின்றன; இலக்கிய உத்திகள் எங்ஙனம் இதற்குத் துணைநிற்கின்றன போன்றவற்றை அறுதியிடலாம்.[2]

'பெண் விடுதலை' இயக்கத்தின் செயற்பாடுகளுள் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு என்பதும் ஒன்று......... பெண்ணியத் திறனாய்வு என்பது மரபு வழிவந்த இலக்கியங்களில் எடுத்தாளப்பட்டுள்ள பெண்

---

1. அ. மங்கை; பெண்ணிய நோக்கில் இலக்கியப் படைப்பும் வாசிப்பும், தமிழக மகளிர் திங்கள் தொடர் கருத்தரங்கம்-5, உலகத் தமிழ்ழாராய்ச்சி நிறுவனம், தட்டச்சுப்படி; 12.5.93, ப. 4.

2. தி. கமலி, பெண்ணிய இலக்கியத் திறனாய்வும் தமிழாய்வும், ஓங்கு தமிழ்; 15.7.93.

பற்றிய போலியான கருத்தாக்கங்களை உடைத்தெறிவதையும், இலக்கிய வடிவத்திலான பெண் அடக்கு முறையை 'Womens oppression in literary terms' வெளிப்படுத்துவதையும் பல காலமாக ஒதுக்கப்பட்டு வந்த பெண்களுக்கு, நவீன இலக்கிய வரலாற்றில் இடம்பெற்றுத் தருவதையும் அடிப்படை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.[3]

இச்சிந்தனைகளின் அடிப்படையில் இங்குக் கம்பராமாயணம் பெண்மைத் தேடலுக்குக் களமாகிறது. தமிழகத்தின் தலைசிறந்த கவிஞருள் ஒருவராகக் கம்பரை இனங்காட்டுவது அவர் படைத்த இராமகாதை. இன்று பட்டிதொட்டியெங்கும் அவர் படைப்பு புகழ்மணம் பரப்பி வருவது, இடைக்கால இலக்கிய வரலாற்றில் தனிவீறுடன் திகழ்வது, 'கம்ப நாடன் கவிதையில் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே' (மிகை. 27) எனப் போற்றப்படுவது, தழுவலாயினும் தமிழகத்தில் ஆழ வேரூன்றியது எனப் பலவாறான புகழுக்குரியதாதலின் இங்கு ஆய்வுப் பொருளாகிறது.

பன்னெடுங்காலமாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டுவரும் மரபுகள், மக்கட் குருதியில் இரண்டற ஒன்றிவிட்ட மரபுகள் இவற்றைக் களைதல் அல்லது மாற்றுதல் என்பது எளிதல்ல. மிக நீண்ட போராட்டமும் விடா முயற்சியும் இன்றியமையாதது. இதற்கு முதற்கண் ஆழமாகப் புரையோடிப் போயுள்ள புண்களின் வேரினை ஆணிவேர், பக்கவேர், சல்லிவேர் என முற்றிலுமாக இனங்கண்டபின் அழித்தற்கு முற்படவேண்டும். இம்முயற்சிக்கு அல்லது இத்தேடலின் வெற்றிக்கு உறுதுணையாவன பழங்கதைகள். இந்நோக்கிலும் பெண்ணிய ஆய்விற்குத் துணைநிற்கக் கூடும் என்ற கருதுகோளடிப்படையில் கம்பரது ராமாயணம் தேர்ந்து கொள்ளப்பட்டது.

இம்முயற்சியில் கிடைத்த தரவுகள்,

1. பெண் (காட்சிதரு நிலை)
2. பெண்ணியப் பார்வையில் சில கதைநிகழ்வுகள், கதைமாந்தர்
3. கம்பரும் பெண்ணியச் சிந்தனையும்.

**பெண் *(காட்சிதரு நிலை)***

பொதுநிலையில் பெண் என்பவள் யார்? அவள் எவ்வாறு மதிக்கப்பட்டுள்ளாள்? அவளது உரிமைகள் கடமைகள் யாவை? எதிர்கொள்ளும் சிக்கல்கள் யாவை? சமுதாயத்தில் அவள் இடம் ஏது? என்பன போன்ற வினாக்களுக்கு விடை காண்பதாக இப்பகுதி அமைகிறது. இதனைக் கம்பர் காலத் தமிழக மகளிர் நிலையாகக் கொள்வதற்கும் இடனுண்டு.

3. இரா. பிரேமா, *பெண்ணியம் - ஓர் அறிமுகம் (அறக்கட்டளைச் சொற்பொழிவு), தட்டச்சுப்படி.*

மானிடர், வானவர், வானரர், அரக்கர் எனப் பல இன மகளிர் இராமகாதையுள் இடம்பெறினும் பெண்மைக்கு என வரையறுக்கப் பட்ட விதிகள் அனைவருக்கும் பெரும்பாலும் பொதுவானதாக அமைவது இவண் சுட்டத்தக்கது. கற்பு நிலையில் மட்டும் வானரர் நிலையில் நெகிழ்ச்சி காணப்படுகிறது.

'பெண்' என்பவள் எப்படியிருக்க வேண்டும்; அவள் இயல்புகள் யாது என்பனவற்றிற்கான பதிலுரைகள் 'பெண்' யார் என்பதை உணர்த்துகின்றன. 'அளவு இலா ஆற்றல் ஆண்மை' *(4147)* என்பதன் மாறுபாடாக 'எளியள் பெண்' *(547)* என நவின்று இருசாராருக்கும் இடையேயான அடிப்படை வேறுபாடு புலப்படுத்தப்படுகிறது. இதுவே பெண்ணடிமைத்தனத்திற்கு முதன்மைக் காரணியாய் நிற்றலைப் பிறவற்றாலும் உய்த்துணர முடிகிறது. ஆண் சார்பு நிலை வாழ்க்கையைப் பெண்மைக்கு வலியுறுத்துவதற்கும் காரணியாயிற்று. தான் பேசும் பேச்சிலும் பெண் கட்டுப்படுத்தப்பட்டதை, 'பெண்மைக்கு ஏய்ந்தன அல்ல, வெய்ய மாற்றங்கள் இனைய சொன்னாள்' *(5183)* என்பதால் அறியலாம்.

ஒரு குலத்திற்குப் பெருமை என்பது ஆடவர் செயலால் மட்டுமே வரையறுக்கப்படுவதை, இராமனின் குலமுறை *14* தலைமுறை ஆடவர் பெருமையால் பறைசாற்றப்படுவது *(637-649)* கொண்டுணரலாம். பெண் இரண்டாந்தரக் குடிமகள் என்பதையே இது காட்டுகிறது.

ஆடவரின் உடைமைப் பொருட்களுள் ஒன்றாகக் கருதப்பட்ட நிலை மிக வெளிப்படையாக அமைந்துள்ளது. கணவன் உயிருடன் இருக்கையில் மங்கலவணி மட்டுமன்றிப் பிறவற்றைக் களைதல் இழுக்கு என்பது, இராமனின்,

"விலங்கு எழில் தோளினாய், வினையினேனும் இவ்
இலங்கு வில் கரத்திலும் இருக்கவே, அவள்
கலன் கழித்தனள், இது, கற்பு மேவிய
பொலன் குழைத் தெரிவையர் புரிந்துளோர்கள் யார்?" *(3920)*

எனும் கூற்றால் பெறலாம். பெண் தன்னை அலங்கரித்தல்கூட அவளுக்காகவன்றி அவளை மணந்தானுக்குத்தான். ஆடவரே, குறிப்பாகத் துணைவனே எல்லாமாக வாழவேண்டிய கட்டுப்பாட்டில், 'நின்பிரிவினும் சுடுமோ பெருங்காடு' எனும் வினா *(1827)* பிறக்கிறது. அவன் விருப்பத்தையே தன் விருப்பமாக ஏற்றுக்கொண்டு இறப்பினும் பின்தொடர்பவள் பெண் என்பது சரபங்கன் தன் மனைவியோடும் எரிமூழ்கி வானுலகடைதல் *(2628)* தெளிவாக்குகிறது.

பேராபத்துச் சூழலிலும் தன்னுயிரைக் காத்துக்கொள்வதற்காக மாற்றான் மேனியை எள்ளளவும் மன விகற்பமின்றித் தீண்டுதல் கூடப் பெருங்குற்றமாகிறது *(5363)*. இத்தகு சூழலில் அவள் தன் உயிரைப் போக்கிக்கொள்வதே அவளுக்கும், அவள் பிறந்த, புகுந்த குலங்களுக்கும் பெருமைபயப்பதாகவும் வேண்டப்படுவதாகவும் அறிவுறுத்தலும் காணமுடிகிறது. ஆனால் ஆண்மகன் பிற மகளிரின் மன உணர்வுகளுடன் விளையாடுவது குற்றமாகக் கருதப்படவில்லை *(2769-2787)*. 'வந்து இடை ஓர்பழி வந்தால், அது துடைப்பர், தம் உயிரொடும் - குலத்தின் தோகைமார்' *(10019)* என்பதால் ஆடவரால் உண்டாக்கப்படும் கொடுமைகளுக்கும் பெண்ணே பொறுப்பாளியாக்கப்படுதல் பெண்ணடிமை நிலைக்குச் சான்றாகிறது.

இத்தகு கட்டாயங்கள், கொடுமைகளினின்றும் தம்மைக் காத்துக் கொள்ளவே பெண்டிரும், 'உயர் கேள்வர் பொன்றா முன்னம் பொன்றினர் என்னும் புகழ்' வேண்டினர் *(1531)* போலும். கணவன் இறந்தவுடன் அவனுடன் மறையும் பெண் இம்மையில் மட்டுமின்றி மறுமையிலும் பெருமையடைகிறாள் என்றனர். 'தம் கணவர் பின்செலும் நங்கைமார் புகும் உலகம் நண்ணினள்' *(2239)* என்பது போன்ற கற்பித நம்பிக்கைகள் ஆணாதிக்கத்திற்குப் பெண்களை உடன்படச் செய்துள்ளன.

இவற்றினின்று முரண்பட்டு, தன் வலிமையை நிலைநிறுத்தி ஆண்மையை எதிர்க்கின்ற பெண், பெண்ணாகவே மதிக்கப்படவில்லை என்பதை, விசுவாமித்தரரின்,

"நாண்மையே உடையார்ப் பிழைத்தால் நகை,
வாண்மையே பெற்ற வன்திறல் ஆடவர்
தோண்மையே இவள்பேர் சொலத் தோற்குமேல்
ஆண்மை என்னும் அது ஆரிடை வைகுமே?" *(377)*

எனும் கூற்றால் தெளியலாம். இன்றும் தொடரும் இந்நிலையைப் பெண்-ஆண் சமத்துவத்தை விரும்பாத ஆணாதிக்க நெறியின் வெளிப்பாடாகக் கொள்வதில் தவறில்லை.

இவற்றை ஒருங்கிணைத்து நோக்கும் பொழுது 'பெண்' என்பவள் ஆண் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி நிற்கும் உயிருள்ள இயந்திரம் என்பதாக அன்று வழிநடத்தப்பட்டாள் எனலாம்.

இங்ஙனம் இனங்காட்டப்பெற்ற பெண்ணின் மதிப்பு சமுதாயத்தில் எப்படியிருந்திருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். குழந்தை, திருமண உடன்பாட்டிற்கு முன், பின், தாய்மை, கணவன் மறைவின்பின் எனப் பல்வேறு நிலையில் பெண்ணின் வாழ்க்கை அமைகிறது. தாய், மகள்,

தங்கை, மனைவி எனப் பல்வேறு உறவுகளையும் ஒருத்தி பெறுகிறாள். குழந்தை நிலை தவிர ஏனையவற்றினை இராமகாதை கொண்டுள்ளது. இராமன் மற்றும் அவன் தம்பியர் பிறப்பு முதல் படிப்படியாகக் கல்வி முதலான கற்று வளர்வதைச் சுருக்கமாகவேனும் கூறியுள்ள போதிலும் *(280-315)* கதைத் தலைவியாம் சீதைக்கு இன்மை எண்ணற்பாலது. ஆண்மைக்கு அளித்த முதன்மைச் சிறப்பே இதற்குக் காரணமெனில் மிகையில்லை.

பெண் தாய் என்ற நிலையில் பெரிதும் மதிப்பிற்குரியவளாகப் போற்றப்பட்டுள்ளாள். ‘தாயினும் உயிர்க்கு நல்கும்’ *(3696)*, ‘தாய் சொல் கேட்டலும்...... ஈசற்கே கடன்’ *(10187)*, ‘தாய் ஒக்கும் அன்பின்’ *(171)* எனப் பலவிடங்களைச் சான்றாக்கலாம். எனினும் இப்பெருமையைத் தந்தவர் உண்மையில் படைப்பாளியாம் கம்பரா? அல்லது அவர்காலச் சமுதாயமா? என்னும் வினாவும் இங்கு எழத்தான் செய்கிறது. விரிந்த மேலாய்வில்தான் இதனை உறுதி செய்யவியலும்.

தன் வாழ்க்கைக்குத் துணையாக வந்த பொழுதிலும் ஆண்மை அதற்குரிய சிறப்பினை, இறப்பிலும் தன்னுயிருடன் ஒன்ற வேண்டும் என விழைந்தபோதிலும் தன்னொத்த நிலையினை அவளுக்கு அளிக்கவில்லை. பெற்றோர், உடன்பிறந்தோர், நண்பர், சுற்றம் என இவை அனைத்தின் பின்தான் அவனுக்குரியவளாகிறாள். இராமன்,

‘தாதையை இழந்தபின் சடாயு இற்றபின்
காதலின் துணைவரும் மடிய காத்து உழல்
கோது அறு தம்பியும் விளிய, கோள் இலன்
சீதையை உவந்துளான் என்பர் சீரியோர்’ *(8789)*

என மொழிவது நோக்கத்தக்கது. பெண் மட்டும் திருமணத்தின்பின் ‘கொண்டானை அல்லால் வேறு இலாள்’ ஆக, ஆண் தன் உடைமைகளுள் ஒன்றாக மட்டுமே அவளைக் காண்கிறான்; உயிருள்ள, உணர்வுள்ள பெண்ணாகக் கருதுவதில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. இந்தக் கூற்றை இவ்விடன் மட்டுமின்றிப் *(6932, 8782)* பிறவிடங்களிலும் காண்பதால் இதனை ‘உணர்ச்சிவேக உரை’ என ஒதுக்கிவிடுதற்கில்லை.

பெண் தனிப்பட்ட நிலையில், தனக்குப் பெரிதும் உதவிய ஓர் ஆண் மகனுக்கு அன்பளிப்பு வழங்குதற்குக் கூடக் கொண்டவனின் அனுமதி வேண்டியுள்ளது’ *(10353)*. வீண் பழியினின்று தன்னைக் காத்துக் கொள்வதற்கும், தான் கணவனுக்குக் கீழ்ப்படிந்தவள் என்பதனைப் புலப்படுத்தற்கும் இக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டதாகக் கருதலாம்.

விதவையர் கோலத்தில் அரசியரையே இராமாயணத்துள் காண முடிகிறது. பிற மகளிர் பற்றி அறிய இயலவில்லை. அரசியர் என்பதால் போலும் இவர்தம் விதவைக் கோலம் பெரிதும் துன்பநிலைக்கு ஆளாக்கப் பட்டதாகத் தெரியவில்லை. அரசியலில் தாரை ஈடுபடுதலும், தசரதன் தேவியர் அரண்மனையுள் முடங்காது, பிறவிடங்களுக்குச் சென்று வருதல் அமைகிறது. ஆனால் இதனைப் பிறருக்குமாக ஏற்றுக்கொள்ளுதல் ஆய்விற்குரியது. எனினும் அவரும் அமங்கலச் சின்னங்களாகவே கருதப் பட்டுள்ளனர். சில உரிமைகள் தவிர்க்கப்பட்டுள்ளன *(8699).*

'பெண் உரை மறாது போகலால், ஆயது, இப்பழியுடைய மரணம் அன்பனீர்' *(8773);* 'தெண்திரை உலகம் தன்னில் செறுநர் மாட்டு ஏவல் செய்து பெண்டிரின் வாழ்வர் அன்றோ! *(3525);* 'வெங்கொலை அம்பின் கொன்றார்க்கு ஆள் தொழில் மேற்கொண்டீரேல். . . மங்குலின் பொலிந்து ஞாலம் மாதுமை உடைத்து மாதோ' *(8592);* 'பிழைத்தனை பாவி நின் பெண்மையால்' என்பன போன்ற உரைகள் *(3965)* பொதுநிலையில் பெண் மிகத் தாழ்வாகக் கருதப்பட்டதையே மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றன. இவ்வெண்ணமே பெண்ணுக்குத் தண்டனையாக உயிர் கோடலைத் தடை செய்துள்ளது. பெண் கொலை புரிதல் தீது என்பதுடன் பழிக்குரியதாகவும் கருதப்பட்டது *(9243, 8871-73).* இவ்வெண்ணம் சங்க காலம் (புறம் *: 157)* தொட்டே தொடரக் காண்கிறோம். கொடுவினை புரிவோருக்கு உறுப்புக் குறைத்தல் தண்டனையாக்கப்பட்டுள்ளது. *(3632).* பெண் கொலை புரிவோர் தீ எரி நரகத்துக் கடிது செல்வர்' *(2202)* என்ற நம்பிக்கையும் உருவாக்கப் பட்டுள்ளது.

பெண், ஆண் என இணைந்ததே உலகமாக இயங்குகின்ற இயற்கையில் ஆணை உயர்த்தியும் பெண்ணை அடிமையாக்கியும் வாழ்கின்ற மதிப்பற்ற சூழலில் அவர் தம் உரிமை எங்ஙனம் அமைந்திருந்தது என நோக்குதலும் வேண்டற்பாற்று.

கம்பனில் பெண்பாலார் ஆண்களை எப்படி அழைக்கின்றனர் என ஆய்ந்த அறிஞர், 'பெண்களும் ஏனைய தாழ்ந்தோரும் ஆண்களையும் உயர்ந்தோரையும் பெயர் இட்டு அழைப்பது மரியாதைக் குறைவு எனவும், உறவு, உடைமை, ஊர், பண்பு இவைகளைப் பற்றிக் குறிப்பிடலே முறை என்றும், குழு இன உடைமைச் சிறப்புகளைப் பாராட்டும் இன்றைய சமூகத்தினரும் கருதுகின்றனர். பண்டைய தமிழ் முறையும் இது ஆகலாம்'[4] என எடுத்துக்காட்டுகிறார். பெயர் சுட்டுவதற்கே உரிமையற்ற நிலையில், பெரிய அளவில் பிற உரிமைகளை எதிர்பார்த்தல் வீணே.

*4.* நா. வரதராஜுலு நாயுடு, வால்மீகியும் கம்பனும் கண்ட சமூகங்கள், கம்பன் கழகம்; சென்னை, *1987*, ப.*141*.

பெண்களுக்கு அன்பளிப்பாக நாடு வழங்கப்பட்டதை *(1256)* அறிகிறோம். ஆனால் அவற்றை ஆட்சி செய்யும் உரிமை அவளுக்கு இருந்ததாகச் சிறு குறிப்பும் இல்லை. சீதைக்குப் பரிசிலாகக் கிடைத்த நாட்டினை அவள் பார்வையிட்டதாகக் கூட சுட்டப்படவில்லை. இராவணன் கூட, 'தளை அவிழ் குழல் இவட் கண்டு தந்த என் இளையவட்கு அளிப்பென் என் அரசு' என்று எண்ணியதாகக் *(3350)* குறிப்புளது. இவ்வெண்ணம் எந்த அளவிற்குப் பொருளுடைத்து என்பது தெளிவில்லை. 'பெண் கொடு வினை செயப் பெற்ற நாட்டினில் கண் கொடு பிறத்தலும் கடை' எனும் *(1790)* மொழி பெண்கள் ஆட்சிக்கு உரியோராகக் கருதப்படவில்லை. அவர்களுக்குரியதாக அறிவிக்கப்படும் பகுதிகளை அவர் சார்பில் பிற ஆண் ஆளுவதே ஏற்கப்பட்டது எனத் துணியலாம்.

இங்கே இராவணன் ஏவலில் தாடகை தண்டகாரண்யத்தைக் காவல் புரிதலும் *(364)*, பிரமனின் கொடுமொழியில் இலங்காதேவி இலங்கையைக் காவல் புரிதலும் *(4927, 28)*, இந்திரன் கொடுமொழியில் சுயம்பிரபையைப் பிலநகர் காக்கச் *(4582)* செய்வதும் எண்ணற்பாலன. முன்னவள் அரக்கர் குலத் தோன்றலாகவும் பின்னவர் வான்மகளிராக நிற்றலும் உன்னத்தக்கது. இயல்பு நிலையில் இச்செயல் அன்றைய சூழலில் அரியதொன்றாகவே எண்ணத் தோன்றுகிறது. சீதை சிறை வைப்பால் அவளருகில் காவல் தொழில் புரிவோராக அரக்கியரும் சற்றுத் தொலைவில் சிறையிருந்த அசோகவனக் காப்பாளராக அரக்கரும் அமைகின்றனர்.

அரசனின் பட்டத்துத் தேவியர் கூட அரசன் செய்யும் யாகங்களில் கலந்து கொள்ளவோ, நாட்டு நலன் கருதி நடத்தும் அரசவைக் கூட்டங்களில் கலந்து கொள்ளவோ உரிமை பெறவில்லை. இப்படியிருக்கப் பொதுவாழ்க்கையில் பிற மகளிர் உரிமை நிலையும் வினாவிற்குரியதே. சீதை இராமனின் திருமணச் சடங்கின் போது பொதுமக்களைக் காட்டினும் அவ்விடத்தில் அரசன் தேவியர் இன்மை சுட்டத்தக்கது'. 'மழைக் குன்றம் அனையான் மௌலி கவித்தனன் வரும் என்று தழைக்கின்ற உள்ளத்து அன்னாள்முன் ஒரு தமியன் சென்றான்' *(1606)* எனும் காட்சி வருணனையும் அரசன் தேவியர் விலகி நிற்றலையே காட்டுகிறது. தன் மகன், மகளின் வாழ்வுச் சிறப்பு நிலைகளை நேரில் காணும் பேறு ஏன் மறுக்கப்பட்டுள்ளது என்ற கேள்வியும் இங்குப் பிறக்கிறது.

பெண் தன் வாழ்க்கைத்துணையைத் தேர்ந்துகொள்ளும் உரிமையில்லை என்பது அழுத்தமாகப் பலவிடங்களில் காட்டப்பட்டுள்ளது. சீதை, 'வில்லொடித்தவன் தன் மனங் கவர்ந்தவன் இன்றாகில் உயிர் விடுவேன்' என எண்ணுவதும் *(728)*, வாயு குசநாபன் மகளிரிடம் தன்னைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் பொழுது 'எந்தை

அடித்தலத்து உரைத்து, நீரோடு அளித்திடின் அணைதும்' என்ன அவர்களை அவன் முதுகை ஒடித்துத் தண்டிப்பதும் *(401),* சூர்ப்பணகை தன் உண்மை உள்ளத்தைத் தமையன்மாரிடம் மறைப்பதும் *(2880, 3133),* தான் விரும்பிய மயனுடன் மறைவு வாழ்க்கை மேற்கொண்ட ஏமையையும் அவளுக்குத் துணைநின்ற சுயம்பிரபையையும் இந்திரன் தண்டிப்பதும் *(4581, 82)* போதுமான சான்றுகள். புராணக்கதைகளை இவண் இணைத்து நோக்கலாமோ எனின், பெண்ணடிமைத்தனத்திற்கு அவையே வித்திட்டு உரப்படுத்தியுள்ளன என்ற உண்மை உணரின் தவறில்லை என்பது பெறப்படும்.

பலதார மணம் மிக இயல்பான நிலையில் ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்கக் கோட்பாட்டை நிலைநிறுத்த இராமாவதாரம் என்பது ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. எப்பிறவியலும் இப்பிறவியில் துணைவனாக வாய்த்தவனே வர வேண்டும் *(5379)* என்று பெண்ணை இப்பிறப்பிற்கு அப்பாற்பட்ட நிலையிலும் அடிமைப் படுத்த விழைந்த சமுதாயத்தில் இராமன் மிக முன்னெச்சரிக்கையாக, 'இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்' என்று செவ்வரம் *(5378)* சாற்றுகின்றான். ஆழ்ந்து நோக்கின் பெண்மை சிறுமைப் படுத்தப்பட்டுள்ளது புலனாகும்.

பலரை மணப்பதன் காரணமாகப் பெண்மை மாசுபடுத்தப் பட்டுள்ளது. அவர்களிடையே ஆடவர் காட்டிய வேறுபாடு அவர்தம் மனத்தளர்ச்சி, அழுத்தங்களுக்கு இடனாகிறது. 'அத்தவனும், வேந்தனை, உய்ந்த நல், அமிர்தினை உரிய மாதர்கட்கு அத்தகு மரபினால் அளித்தியால்' *(266)* என்பது வசிட்டர் கூற்று. மனைவி என்ற பதவியில்தான் ஒற்றுமையே தவிர உரிமைப் பகிர்வில் வேறபாடிருந்தமை தெளிவு. இராமன் காடேகுவதற்கு இதுவே முதன்மைக் காரணம்.

பெண்கள் தவறிழைத்தால் தொடர்புடைய ஆண் உடனே தண்டிப்பதைக் காண்கிறோம். ஆனால் ஆண் தவறிழைத்தால் தொடர்புடைய பெண்ணிற்கு அவ்வுரிமையில்லை என்பது மண்டோதரியின் மௌனம், தன் மகன் இறப்பில் பொங்கும் தான்யமாலி 'பேதை ஆய் காமம் பிடிப்பாய் பிழைப்பாயோ? *சீதையால் இன்னம் வருக சிலவேயோ?'* *(7997)* எனப் புலம்புதல் போன்றவற்றால் வெளிப்படுகிறது. இது, 'பெண்' என இழிவாக நோக்கியதின் விளைவேயாகும்.

அரசவையிலும் *(1118)* அரசமகளிரைச் சுற்றிலும் *(794)* கணிகையர் ஏவல் மகளிராக இருந்தமை கருதத்தக்கது. அரசர் தம் வீரத்தால் நினைத்ததைச் சாதிக்க இயலாச் சூழலில் இவரைக் கொண்டு

முடித்திருப்பது பெண்ணடிமைத்தனத்தின் உச்சமாகிறது. தன் நாட்டிற்கு மழைவருவிக்கக் கலைக்கோட்டு முனிவனை வரவழைக்க உரோமபதன் தன்னவைக் கணிகையரை அனுப்புதலை *(215-233)* எடுத்துக்காட்டலாம். அரசவையில் இவர் இடம் பெறுதலும் பெரியோரை எதிர் கொள்ளுதல் *(227, 236)*, சிறப்பித்தல் *(8207)*, விழவுகள் *(4954)* போன்றவற்றில் மகளிர் அரசனோடு சூழ்ந்து சென்று அல்லது தனித்துச் சென்று பலவிடங்களில் பல்லாண்டுரைத்தலும் பல விடங்களில் காணப்படுகிறது. பாலியல் இனக் கவர்ச்சிக்காகப் பெண்ணை இங்ஙனம் பயன் படுத்தியுள்ளனர் என ஊகிக்கலாம். இவற்றில் எந்த அளவிற்கு மகளிர் தம் விருப்புடன் செயல்பட்டனர்; எந்த அளவிற்குச் கட்டாயப்படுத்தப்பட்டுத் தன்னுரிமையிழந்தனர் என்பதும் சிந்திக்கற்பாலது. 'பெண்டிரின் ஏவல் செய்தி' என்ற இழிவுக் கூற்றும் இணைத்து நோக்கத்தக்கது.

பெண்டிர் கடமைகளாகச் சில வலியுறுத்தப்பட்டுள்ளன. சங்க காலப் பண்பாட்டின் தொடர்ச்சி நிலையில் விருந்தோம்புதல் மகளிர் கடமைகளுள் ஒன்றாக அமைகிறது *(4184, 5083)*. குழந்தை வளர்ப்பும் இவர்தம் கடமை *(159)*. எதிர்பாரா இடர்ப்பாடுகளில் ஆடவர்க்குத் துணையாக நிற்றலும் தாரை வழி காணப்படுகிறது *(4310)*. இயலா காலங்களில் பணிவிடை செய்தலும் *(1624)* கடனாகிறது. இவற்றிற்கு எல்லாம் மேலாக, தலையாயதாகத் தம் கற்பினைக் காப்பாற்றிக் கொள்ளுதல் பெருங்கடமையாக *(3450)* அறிவுறுத்தப்பட்டுள்ளது. "கற்பு எனும் அவ்வரம்பு அழித்து, உமை அகத்துளே வைத்த வெம் அரம் பொருதவேல் அரசை வேர் அறுத்து, இவ்வரம் கொண்ட நீர் இனி என் கோடிரோ?" *(2176)* எனப் பரதன் கைகேயியை நோக்கி வினவுகிறான். இதில் 'கணவனது விருப்பம் ஒன்றே மனைவியின் விருப்பமாகவும் கடமையாகவும் அமைதல் வேண்டும்; தனக்கென மாற்றுக்கருத்தோ விருப்போ இருத்தல் கூடாது; அதுவே உண்மைக் கற்பு எனும் கட்டுப்பாடு இறுகி நிற்கக் காணலாம். இதனால் கணவனுக்கு நலன் பயப்பது மட்டுமே, மனைவிக்கு எத்துயர் தரினும் அவளால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற கட்டளை ஆழமாகப் பதிந்துள்ளது வெளிப்படுகிறது. பெண் தனக்கெனத் தனித்த நோக்குடையவளாக, வாழ்க்கையளாக நிற்காது, தன்னை வீழ்த்திக் கணவனுக்காக மட்டுமே வாழுதல் என்பது அவளின் வாழ்நாள் கடமையாகக் கற்பிக்கப்பட்டுள்ளது.

பெண்ணுக்கு இடர் வரும்பொழுது அதிலிருந்து அவளை மீட்கும் பொறுப்புக் கணவனுக்குரிய கடமையாகிறது. அதுவரை தன்னால் இயன்ற காலையிலும் காத்திருத்தல் பெண்ணின் கடமையாகிறது.

'அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ?
எல்லை நீத்த உலகங்கள் யாவும், என்
சொல்லினால் சுடுவேன்; அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்' *(5362)*

எனச் சீதை பேசுவது பெண்ணிற்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை. அடிமைத் தளையைப் பெண்டிரும் விரும்பி ஏற்றுக் கொண்டிருந்தனரோ என இதனால் எண்ண வேண்டியுள்ளது. எச்சூழலிலும் பெண் இயலாமை உடையவளாகவே அமைய வேண்டும்; ஆண் தன் உயர்வினைப் பறைசாற்றிக் கொள்வதற்கு வாய்ப்பாகச் செயல்பட வேண்டுமேயல்லால் தாழ்வுறும்படி வினையாற்றல் கூடாது; அப்படிச்செய்யின் கொண்டவனுக்குத் தீங்கிழைத்தவளாகிறாள் என்பன இங்குப் பெறும் எண்ணங்கள். இவ்வெண்ணங்களே பெண் முன்னேற்றத்திற்கான பெரிய தடையாகின்றன.

தந்தையின் பகைமுடித்தல் தனையனுக்கே உரிய கடமையாகிறது *(8419)*. அதில் மகளுக்குப் பங்கில்லை. பிறப்பிலேயே குழந்தைகள் எனக் கருதாது ஆண், பெண் வேறுபாடும், உயர்வு தாழ்வும் கற்பிப்பது இதற்கு அடிப்படையாகிறது. 'ஆண்-பெண் சமத்துவம் என்ற உயரிய நிலைக்கு, உண்மை நிலைக்கு இவை போல்வனவே இரும்புத் திரையிடுகின்றன. உரிமைப் பகிர்வு சமன்படும் பொழுது கடமையிலும் சமனிலை தோன்றும். அதன் வழி, பால் சமனிலையும் எளிதாக வந்தடையும்.

பெண்கள் எதிர்நோக்கிய வாழ்வியற் சிக்கல்கள் பலவாய் அமைகின்றன. அவற்றையும் இவண் நோக்கலாம். பாலியலில் ஆண்மகன் செய்யும் தவற்றிற்குப் பெண்மகள் பழித்துரைக்கப்படுவது சங்கம் தொட்டு இன்றுவரை தொடரும் கொடுமையாக அமைகிறது.

தூமகேது புவிக்கு எனத் தோன்றிய
வாம மேகலை மங்கையரால் வரும்
காமம் இல்லை எனில் கடுங்கேடு எனும்
நாமம் இல்லை நரகமும் இல்லையே *(1427)*

எனும் வசிட்டன் அறிவுரை ஆணாதிக்கத்தின் உச்சத்தினைச் சுட்டுகிறது. இராவணனின் 'பெண்பால் வைத்த ஆசைநோய் கொன்றது என்றால் ஆண்மைதான் மாசுணாதோ?' எனும் உரையும் இதன் பாற்படுவதே. சமத்துவமின்றிக் கட்டுப்பட்டு அடங்கிக் கிடத்தல் என்ற இழிநிலை மேலும் கீழிறங்கும் வகையில் மகளிர் நிலை இப்பழியால் இடருறுகிறது.

ஆடவன் நினைத்தால் எந்நேரத்திலும் தன் மனைவியை ஒதுக்கித் துன்புறுத்தலாம் என்பதைத் தசரதன், 'சொன்னேன் இன்றே, இவள் என்

தாரம் அல்லள், துறந்தேன்; மன்னே ஆவான் வரும் அப்பரதன் தன்னையும் மகன் என்று உன்னேன் முனிவா! அவனும் ஆகான் உரிமைக்கு' *(1654)* என்பதால் உணர்த்துகின்றான். இதனால் அப்பெண் மற்றும் அவள் மகவும் துன்பத்திற்கு இடனாகின்றனர். இங்கு மற்றொன்றும் சிந்திக்கத்தக்கது. தயரதன் தான் கைகேயியைத் துறக்க முடிந்ததே தவிர, கைகேயிக்கு என்றும் அவனே கணவன் என்ற நிலை மாறாது என்பதை அவளது விதவைக் கோலம் உணர்த்துகின்றது. தசரதன் இறக்க, அவனுக்குரிய ஈமச்சடங்கு செய்ய பரதன் அனுமதிக்கப்படவில்லை; ஆனால் கைகேயியின் கைம்மை ஏற்றுக்கொள்ளப்படுகிறது; யாவராலும் தடுக்கப்படவில்லை.

கற்பு நெறி பெண்ணிற்கு மட்டுமே உயிர்நிலையாக்கப்பட்ட போழ்தில் ஆடவர் கட்டற்ற நிலையில் திரிந்தனர்; ஆணுக்கு அஃது தரக் குறைவாக்கப்படவில்லை. வஞ்சகரால் வஞ்சியர் வஞ்சிக்கப்படும் பொழுதும் கூட அவலநிலையைப் பெண்மையே பெறுகிறது. இல்லத்தாராலும், ஊராராலும் ஒதுக்கப்படும் *(5241, 5246, 5247)* கொடுமை நிகழ்கிறது. எனவே இச்சூழலில் அவள் தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளுதலே வேண்டப்பட்டது *(5390)*. பெண்ணிற்குப் பெருமை தருவது அவளது கற்பொழுக்கே என்று வலிந்து புனைந்துரைக்கப்பட்டதன் *(5034)* காரணமாக, கணவன் உட்பட மாற்றார் ஐயுற்றவழித் தன்னைத் தூயளாக அக்கினி புகுந்து உறுதிப்படுத்துதல் இன்றியமையாததாகக் கற்பிக்கப் பட்டது *(10043, 10044)*. பெண்ணடிமைத்தனத்தை என்றென்றுமாக நிரந்தரப் படுத்தவே இத்தூய்மைநிலை ஆடவர்க்கு வழங்கப்படவில்லை.

தன்னுடைய தன்மானத்தினையே முழுமையாக வீழ்த்தும் இவ்வரக்க நிலையின் பின்னும் பெண் 'ஓர் முனிவு இன்மையை மனங்கொளவே' *(10075)* இன்றும் அவ்மீளா நரகத் துயரில் மூழ்கியுள்ளாள். பெண்ணின் தன்மானவுணர்வு விழித்துக் கொள்ளும் பொழுதே இதனின்றும் விடுபெற முடியும். தனது இவ்வுலக நிலைக்கு, 'யான் இழைத்த வினையினின் இவ்விடர் தான் அடுத்தது' *(9986)* என மன அமைதி கொண்டமை அல்லது காட்டியமை பெண்விடுதலை பெறும் மீட்சியைக் கடினப் படுத்தியுள்ளது. அவ்வகை உணர்வே பெண்களிடம் தோன்றாதிருக்கத் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டக் கொடுஞ்செயலாகவே இது அமைகிறது.

இம்முறைகேடான திட்டமிடலுக்குச் சிகரம் வைத்தாற் போலமைவது அவளது கற்புத் தன்மைக்குத் தெய்வத் தன்மையை ஏற்றியது ஆம்.

> வெற்பினால் இயன்றது அன்ன மேனியை விழுங்கி, வெந்தீ
> நிற்பினும் சுடாது நின்ற நீர்மையை நினைவின் நோக்கி
> அற்பின் நார் அறாத சிந்தை அனுமனும் சனகன் பாவை
> கற்பினால் இயன்றது' என்பான் பெரியது ஓர் களிப்பன் ஆனான்
> *(5935)*

என்பதுடன் மற்ற சில இடங்களிலும் *(6145)* இத்தெய்வத்தன்மை பேசப்படுதலைக் காணலாம்.

மாற்றானை வென்று அவன் மனைவியை வெளவுதலை வீரச் செயலாக ஆண்வர்க்கம் போற்றுகின்றது.

'புறத்து இனி உரைப்பது என்னே? புரவலன் தேவி தன்னைத்
திறத்துழி அன்றி, வஞ்சித் தெய்துதல் சிறுமைத்து ஆகும்;
அறத்து உளது ஒக்கும் அன்றே? அமர்த்தலை வென்று கொண்டு உன்
மறத்துறை வளர்த்தி மன்ன' *(3272)*

எனும் மாரீசன் அறிவுரை நோக்கற்பாலது. இடைக்காலத்தே தமிழ்நாட்டு மன்னர் போரில் வெற்றி பெறும்பொழுது பகைவனின் பெண்டிரை மகள், மனைவி, தாய், உடன்பிறந்தாள் என எவ்வேறுபாடுமின்றிக் கவர்ந்து வந்து தம் அரசு மகளிருக்கு ஏவற்பெண்டாக்கியக் கொடுமையை மெய்க் கீர்த்திகள் காட்டுகின்றன. அவர்களின் மூக்கரிந்து அவமானப்படுத்திய கொடூரத்தினையும் அதில் காண்கிறோம்.[5] அரசர் குலப் பெண்டிருக்கே இந்நிலை எனின் சாதாரண மகளிரின் நிலை உன்னுதற்கு அச்சந் தருகிறது. ஆணின் அடாத போக்கினை வீரச் செயல் என்றும், அதையே பெண்ணுக்கு உயிர்க்கொல்லியாகவும் வருணித்தல், ஆணாதிக்கத்தின் நச்சுவேரை இனங்காட்டுவதாகும். மீட்க வரும் துணைவர்க்கும் அவளது உடல், உளநலனை விட, உயிரினும் பெரிதாக வலியுறுத்தப்பட்ட கற்பு சிதையாது நிற்றல் வேண்டப்பட்டது *(6024)*.

இதுகாறும் கண்டவற்றால் கம்பன் காட்டும் பெண்மை பாராட்டுக்குரியதாகவோ முழுநிலையில் பின்பற்றத்தக்கதாகவோ இல்லை. விளக்கைச் சுற்றும் விட்டில்களாக, பெண்ணடிமைத் தளையிலிருந்து மீள வேண்டும் என்ற தன்னுணர்வின்றி ஆணாதிக்கத்தில் கட்டுண்டு நிற்றலையே காண முடிகிறது. கம்பன் காட்டும் பெண் இங்ஙனமே காட்சி தருகிறாள்.

---

*5.* கவ்வையுற் றோடிக் காதலியொடுந் தன்
தவ்வையைப் பிடித்துத் தாயை மூக்கரிய — இராசாதிராசன் மெய்க்கீர்த்தி *2.*

மற்றவன் ஒருமகளாகிய இருகயன் தேவி
நாகலை என்னும் தோகையஞ் சாயலை
முகத்தொடு மூக்கு வேறாக்கி — வீரராசேந்திரன்

பாராள் வேந்தர் உரிமை அரிவையர்
இருமருங்கு நின்று விரிபெருங் கவரியின்
அந்தளிர்க் கரங் கொண்டு அசைய வீச — சடையவர்மன் சுந்தரபாண்டியன்

பூ. சுப்பிரமணியம், மெய்க்கீர்த்திகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், *1983*, ப.*41*.

**பெண்ணியப் பார்வையில் சில கதை நிகழ்வுகள்**

கதைப்போக்கில் நிகழும் காட்சிகள் சில பெண்விடுதலைக்கு முரண்பட்டு நிற்கக் காண்கிறோம். அவை தொடர்பாகச் சில எண்ணங்களும், ஐயங்களும், வினாக்களும் எழுகின்றன. சிந்தனைக்குரியதாக அவை இங்கே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**வில்லொடிப்பு**

சீதையைத் திருமணம் செய்து கொள்பவன் அதற்காகக் கார்முகம் எனும் சிவன் வில்லை ஒடிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு ஆடவரின் உடைமைப் பொருள் பெண் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இந்நிலை அவள் மீது அவன் ஆதிக்கம் செலுத்துதலுக்கு வழியமைக்கிறது. சங்க இலக்கிய ஏறுதழுவுதலை *(கலி : 102:9-12)* இதனுடன் ஒப்பு நோக்கலாம். பந்தயப் பொருளாகக் கருதப்பட்டமையால், வளர்க்கப் பட்டமையால்தான் உயிருள்ள அஃறிணைப் பொருளிலும் தாழ்ந்த நிலையில் பெண் இழிவுபடுத்தப்பட்டுள்ளாள்.

**எரிமூழ்கல்**

தயரதன் தேவியர் அறுபதினாயிரவர். அவன் ஈமச்சடங்கின் போது தாமும் உடன் எரியில் மூழ்கினர். இதனைக் கம்பர்,

அங்கி நீரினும் குளிர, அம்புயத்
திங்கள் வான்முகம் திருவிளங்குற
சங்கை தீர்ந்து தம் கணவர் பின்செலும்
நங்கைமார் புகும் உலகம் நண்ணினார் *(2239)*

என வருணிக்கின்றார். போர்க்காட்சியிலும் பல சூழல்களில் அரக்க மகளிர் கொழுநன் மறைவறிந்து தாமும் மறைகின்றனர். *(5711-12)* மண்டோதரியும் இராவணனின் பொன் தழைத்த பொரு அரு மார்பினைத் தன் தழைக் கைகளால் தழுவிடத் தனி நின்று அழைத்து உயிர்த்தாள், உயிர் நீங்கினாள் *(9946)*. தானியமாலினியின் நிலை அறிய இயலவில்லை. தயரதன் தேவியர் மூவரும், வாலி மனைவி தாரையும் தம் கணவர் இறப்பின் பின்னும் உயிர் வாழ்கின்றனர். எனினும் இவர்தம் கற்பும் பிறருடன் ஒப்பவே உயர்த்தப்படுகிறது. இதன் காரணம் எண்ணுகையில் குழந்தைகள் பராமரிப்பிற்குரியோரும், தம்மைப் புரப்பதற்குரியோர் இருந்தோரும் கைம்மை நோன்பு நோற்க, பிறர் உடன்கட்டை ஏறினரோ எனத் தோன்றுகிறது.

**காடேகல்**

இராமன் தாதை ஏவலில் வனம்புகும் பொழுது உடன் இலக்குவனும் பின்செல்கின்றான். இராமனுடன் அவன் துணைவி சீதை செல்கையில் இலக்குவன் தன் மனைவி (ஊர்மிளை) பற்றிய அக்கறையின்றி,

உணர்வின்றிச் செல்லுதல் எவ்வளவு கொடுமை. தன்னுடன் வர விரும்பிய கோசலையிடம் இராமன்,

'என்னை நீங்கிட இடர்க்கடல் வைகுறும்
மன்னர் மன்னனை வற்புறுத்தாது உடன்
துன்னு கானம் தொடரத் துணிவதோ?
அன்னையே! அறம் பார்க்கிலை ஆம்' என்றான் *(1624)*

இவ்வறம் ஆண்மகனுக்குக் கிடையாதா? விடை கேட்கும் மகனிடம் தாய் சுமத்திரையும் அவன் தலைமைப் பொறுப்பினை உணர்த்தாது,

ஆகாதது அன்றால் உனக்கு; அவ்வனம் இவ் அயோத்தி;
மாகாதல் இராமன் நம் மன்னவன்; வையம் ஈந்தும்
போகா உயிர்த்தாயர் நம் பூங் குழல் சீதை என்றே
ஏகாய்; இனி, இவ்வயின் நிற்றலும் ஏதம் என்றாள்.

பின்னும் பகர்வாள், 'மகனே' இவர் பின் செல்; தம்பி
என்னும்படி அன்று, அடியாரின் ஏவல் செய்தி,
மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா; அது
அன்றேல் முன்னம்முடி' என்றனள். *(1751-52)*

எவ்வளவு கொடுமை இது. ஒரு பெண்ணே தன்னொத்த பெண்ணின், தன்னில் வந்தவளின் நிலை ஓராதது வியப்பாக உள்ளது. எச்செயலிலும் முடிவெடுக்கும் உரிமை ஆண்மகனுக்குரியதாகவும், தன்னைப் பாதிக்கும் நிலையில் கூட பெண் எதிர்க்கவியலாது என்பதும் புலனாகிறது; பெண்ணுக்குச் சம உரிமையின்மையே இத்தகு கொடுமைகளுக்குக் காரணம்.

பரத, சத்ருக்கனர், பரதனின் பாட்டனார் இல்லிற்குச் சென்றபோதும், இராமனைத் தேடிக் காட்டிற்குச் சென்றபோதும் அவர்தம் மனைவியர் உடன் அழைத்துச் செல்லப்படவில்லை என்பதும் குறிப்பிடற்பாலது. மற்றும் இராமன் வரவில் காலத்தாழ்வு காரணம் ஆகப் பரதன், தன் மனை மறந்து எரிபுகுந்து உயிர்விடத் துணிவதும் எண்ணத்தக்கது! பெண் ஆடவரால் உயிருள்ள, உணர்ச்சியுள்ள மானிடமாக மதிக்கப்படவில்லை என்பதையே இவை சுட்டுகின்றன.

**இராமன் - சூர்ப்பணகை உரையாடல்**

எரி மூழ்கி வந்து, அக்னிதேவன், பிரமதேவன், சிவன் எனப் பிறரும் *(10042-51, 10062, 64)* அவள் தூய்மையை எடுத்துரைத்த பின்பே ஏற்றுக் கொள்ளும் இராமன், சூர்ப்பணகையுடன் உரையாடுவது ஆண்வர்க்கத்தின்

ஆணவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. தன்பின் ஒரு மாது வருகின்றாள் என்பதை உணர்ந்த இராமன் அவளைத் திரும்பிப் பார்த்து அவளழகில் தன்னை இழக்கிறான்.

'நூபுரமும் மேகலையும் நூலும் அறல் ஓதிப்
பூமுரலும் வண்டும் இவை பூசலிடும் ஓசை
தாம் உரைசெய்கின்றது; ஒரு தையல் வரும்' என்னா
கோமகனும், அத்திசை குறித்து எதிர்விழித்தான்' *(2765)*

'ஆருழை அடங்கும், அழகிற்கு அவதி உண்டோ?
நேரிழையார் யாவர், இவர் நேர்' என நினைத்தான்' *(2767)*

எனக் கம்பன் எடுத்துக்காட்டுகின்றான். 'தீது இல் வரவு ஆக, திரு நின் வரவு' எனத் தொடங்கி *(2769-87)* அவன் அவளுடன் உரையாடுவது அவன் பெருமைக்கு இழுக்கேயாம். ஆனால் இதற்கு நேரெதிர் நிலையில், பிற ஆடவனைக் கண்டளவில் மனம் நெகிழ்ந்தாள் என சமதக்னி முனிவன் தன் மனையாளைக் கொல்லத் தன் மகன் பரசுராமனை ஏவ அவனும் செய்து முடிக்கிறான். அறத்தினை நோக்கி, ஈன்ற தாய்வினை செய்ய அன்றோ கொன்றனன் தவத்தின் மிக்கான் எனச் சமுதாயம் *(7415)* போற்றுதல் சிந்திக்கத்தக்கது. ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என வேறுபாட்டினை உருவாக்கிச் சமனிலை மறுக்கப்பட்டது இதனால் தெளிவாகும்.

சான்றுக்குச் சில இவண் சுட்டப்பட்டுள்ளன. ஆழ்ந்து கற்கின் இதுபோன்று மற்றும் பல சிறுமைகள் புலப்பட இடனுண்டு.

**கதைமாந்தர்**

பெண்ணியப் பார்வையில் கதைமாந்தரை நோக்கும் போழ்து மற்றும் சில உண்மைகள் வெளிப்படுகின்றன. கதை மாந்தரும் மறு ஆய்விற்கு உட்படும் பொழுது புதிய கருத்துகள் பிறக்கின்றன.

***சீதை :*** பெண்ணடிமைத் தனத்திற்கு உறுதியான சான்று.

**கைகேயி :** பல மனைவியரிடையே ஏற்படும் போராட்டங்களில் பாதிக்கப் படுவரின் பிரதிபலிப்பு. முதல் மனைவிக்கும் அவள் வழித்தோன்றும் குழந்தைகளுக்கும் உள்ள உரிமைநிலை மாற்றாளுக்கும் அவளது தோன்றல்களுக்கும் இல்லை என்பதால் இயல்பாக எழக்கூடிய மன உளைச்சல், மன அழுத்தம், எதிர்காலம் பற்றிய அச்சம் எனப் பல காரணங்களால் பெண் பாதிக்கப்படுகிறாள் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

**கோசலை, சுமத்திரை, மண்டோதரி :** ஆடவர் பிழையறிந்தாலும் அதனை அப்படியே ஏற்றுக்கொள்வதைத் தம் பெருமையாகக் கருதும் தன்மான உணர்வற்றவர்கள்.

**தானியமாலி :** கணவன் செய்யும் தவறுகளின் பாதிப்பில், அதனை உணர்த்த இயலாநிலையில் உளப் புழுக்கத்திற்கு ஆளானவள்.

**தாரை :** பிற மகளிரை விட இவளிடத்தில் பெண்மை நோக்கில் கம்பன் மிகுந்த அக்கறை காட்டியுள்ளது வெளிப்படுகிறது.[6] பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் நிலையில் இவள் படைக்கப்பட்டுள்ளாள். பெண்ணின் பெருமையை ஆண்மை போற்றல் வேண்டும்; உயர்வும் தாழ்வும் பிறப்பில் இல்லை - எண்ணும் எண்ணம், சொல்லும் சொல், செய்யும் செயல் இவற்றில்தான் என்பதை அழுத்தம் திருத்தமாகக் கம்பன் இவ்வானரகுல நங்கை நல்லாள் வழி இயம்பியுள்ளார்.

பெண்மைக்கு வாய்ப்பளித்தால் நல்லதொரு ஆட்சியை வழங்க முடியும் என்பதற்கான நம்பிக்கையை, தோற்றுவாயை இவளில் காண்கிறோம். பின்னாளில் ராணி ஜான்சிபாய், ராணிமங்கம்மாள் ஆகியோரின் செயற்பாடுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. இராஜராஜனின் பெருவெற்றியில் அவளது தமக்கை குந்தவை தேவியாருக்கும் பெரும்பங்கிருந்தமையை வரலாறும் காட்டுகின்றது.

**ருமை :** தாரையின் உயர்வில் சிந்தை செலுத்திய கம்பர், வானர குல மங்கையர் இயல்பிலேயே இவளைப் படைத்திருப்பது ஏன் என்ற வினா இவளை நோக்க எழுகிறது.

**திரிசடை :** ஆடவர் பிழையை எதிர்த்து நிற்கும் துணிவில்லாவிடினும், அதற்காக அவர் அடையவிருக்கும் தண்டனையை மகிழ்ச்சியோடு எதிர்நோக்குபவள்.

**சபரி :** துறவு நிலையிலும் அரசியலில் ஈடுபாடு காட்டுவது வியப்பைத் தருகிறது. கதையை வழிநடத்திச் செல்வதான உத்தியாக இவள் பயன்பட்டாளா? அன்றி உண்மையில் அரசியல் அக்கறை கொண்ட மகளா? என்பது இவள் பற்றிய முழுமையான வரலாறு அறியும் பொழுதுதான் உணர முடியும்.

**அகலிகை :** ஆடவரின் சூழ்ச்சிக்கும், அடக்குமுறைக்கும் பலியானவள் பெண் என்பது இவளால் விளக்கமாகிறது.

---

6. ச. சிவகாமி, பெண்ணியப் பார்வையில் கம்பன் தாரை, வெள்ளிக் கருத்தரங்கக் கட்டுரை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, *16.4.93.*

**கம்பரும் பெண்ணியச் சிந்தனையும்**

புலவர் தம் படைப்பில் எவ்வகையிலேனும் தம்மை உணர்த்தி விடுதல் இயல்பு. அது மறைமுகமாகவோ அன்றி நேரிடையாகவோ அமையலாம். இங்ஙனம் பெறும் முடிவுகள் பெரும்பாலும் கவிஞரை உண்மையில் காட்டுவதாகவும் இருக்கலாம் அல்லது கருதுகோளாகவும் அமையலாம். பெண்ணியம் பற்றிய கம்பன் உணர்வுகளாக இங்குக் காட்டுவனவும் இத்தகையனவே.

கோசல நாட்டு வளமுரைக்கையில் மங்கையர் மாண்பினைத் தனித்து எடுத்துக்காட்டுகிறார் கம்பர். கோசலம் அவரது இன்பக் கனவுலகு என்பது வெளிப்படை. அதில் அவர்,

பெருந்தடங் கண்பிறை நுதலார்க்கு எலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே *(67)*

என மொழிகிறார். இதில் இரு செய்திகள், பெண்ணுக்குத் தேவை மற்றும் கடமை என்பன அடங்கியுள்ளன. பெண்ணுக்குத் தேவையாகச் செல்வத்தையும், கல்வியையும் குறித்திருப்பது குறிக்கத்தக்கது. பெண் விடுதலைக்கு இவையிரண்டும் அடிப்படைத் தேவை. இவை ஒவ்வொரு பெண்ணிற்கும் கிடைக்கும் பொழுது பெண் முன்னேற்றம் இயல்பாகிறது. இவற்றை நோக்கப் பெண் முன்னேற்றம் பற்றி இவர் சிந்தித்துள்ளார் என்றே தோன்றுகிறது. தாரை படைப்பும் இக்கருத்தை வலியுறுத்துகிறது.

ஈதலையும், விருந்தோம்பலையும் கடமையாக அறிவுறுத்தியுள்ளமையையே அவர்தம் முதன்மைப் பொறுப்பாகக் கருதியதாகத் தெரிகிறது. அவர் காலச் சமுதாயம் இதற்கு மேல் எண்ண இடமளிக்கவில்லை போலும். காப்பியத் தொடக்கம் முதல் இறுதிவரை கற்பு நிலையை மிக அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துள்ளமை மரபுப்பிடியிலிருந்து மீற முடியாமையும் அவரும் ஓர் ஆண்மகன் என்பதாலும்தான்.

வெற்றிகரமான இல்வாழ்விற்கு, 'உயிரும் ஒன்றே இருவரது உணர்வும் ஒன்றே என்றபோது யாவர் வெல்வார்' *(1019)* என வழிகாட்டியிருப்பது எடுத்துக்காட்டத் தகுந்தது. ஆண், பெண்ணுக்குச் சமனிலை அளிக்கும் பொழுதுதான் இந்நிலை உருவாகக் கூடும் என்பது உண்மை.

இங்கே கம்பரிடம் இரு வினாக்களை எழுப்புதல் தேவையாகின்றது. சீதையைத் தேடிச் செல்லும் அனுமனிடம் மிக விரிவாக, இராமன் பேசும் அங்க வருணனை *(4479-512)* வேண்டியதுதானா? ஒரு ஆண் மற்றொரு

ஆணிடம் இங்ஙனம் தன் மனையாளை விரித்துரைக்கலாமா? இது இரு சாராருக்கும் பெருமையா என்பது ஒன்று.

மற்றொன்று அவரது மறதி குறித்தது. சீதையை மீட்டபின் அனைவரும் அயோத்தி ஏகுகின்றனர். எழுபது வெள்ளக் குரக்குப்படை, அரக்கர் படையென அனைத்திற்கும் இடமிருக்க, அசோகவனத்தில் சீதைக்கு உயிரளித்துக் கொண்டிருந்த திரிசடையை விட்டுச் செல்வது ஏன்? கிட்கிந்தை மகளிரை ஆடவர் நடுவண்தானொரு பெண் மட்டும் நிற்றல் அழகில்லை *(10125)* எனக் கூறி வழியிடையில் அழைத்துச் செல்லும் சீதை இலங்கையிலேயே திரிசடையை விட்டுச் செல்வதேன்? கணவனுடன் இணைந்த களிப்பில் அவள் மறந்தாள் எனல் பெருமையா? அயோத்தி வந்த அனைவருக்கும் விடைகொடுக்கும்பொழுது இராமன் துணை நின்ற அனைவருக்கும் பரிசில் அளிக்கிறான். தனித்தூதன் அனுமனுக்குச் சீதையையும் அளிக்கச் செய்கிறான். அங்கும் திரிசடை எண்ணப் படவில்லையே ஏன்? திரிசடை சீதைக்கு ஆற்றிய உதவி குறைத்து மதிப்பிடப் படுமோ? பாராட்டப்படுதலிலும் ஆண், பெண் வேறுபாடா? பெண்ணின் அருஞ்செயல் பாராட்டப்படல் கூடாது என்ற உணர்வா? சிறு விடுபாடாயினும் பெண்ணியப் பார்வையில் மிகப் பெரிய குறையாக, ஒருவகையில் சீதையின் நன்றி மறந்த செய்கையாக எண்ண வேண்டியுள்ளது.

வண்ணான் ஐயுறவால் மீண்டும் சீதை காட்டுக்கு அனுப்பப்படுவதை விரும்பாமல்தான் கம்பர் உத்தர காண்டம் பாட வில்லையோ?

**ஆய்வுத் தேவை**

பெண்ணிய ஆய்வு, இயக்கம் என்பது இந்நூற்றாண்டு எண்ணமாக இருக்க அதனைப் பழந்தமிழ் இலக்கியத்துள் காணல் பொருந்துமா என்ற வினா எழலாம். கதாசிரியை திலகவதி, 'பெண்ணியப் போக்கில் தாம் சிந்தித்துப் படைக்காவிடினும் விமர்சகர் அந்நோக்கினைக் காண்கின்றனர்' என்று நவில்கிறார்.[7] வாழ்கின்ற படைப்பாளிகளிடமே இந்நிலை எனில் முன்னோர் படைப்புகளில் காணப் புகல் தவறில்லை.

இலக்கியங்களைப் பால்பாகுபாட்டில் ஆய்தல் தேவையா என்ற கேள்வியும் பிறக்கிறது. "இராமாயணக் காப்பியம் ஒரு வகையில் பெண் காப்பியம்; பெண்ணின் சிறுமையால் தாழ்ந்து பெண்ணின் பெருமையால் உயர்ந்த காப்பியம்; கூனி, கைகேசி, சீதை, சூர்ப்பணகை என்ற நாற் பெண்களாலும் தொடர்ந்து நீளும் காப்பியம்; கைகேசியால் தயரதனும்,

7. *12593* தமிழக மகளிர் திங்கள் தொடர் கருத்தரங்கக் கலந்துரையாடற் கருத்து.

சீதையால் இராமனும், சூர்ப்பணகையால் இராவணனும் நிலை தடுமாறியதைப் புலப்படுத்தும் ஆடவர்தம் அவலக் காப்பியம் என்றும் இராமாயணத்தை நோக்குவர்' எனும் கூற்று,[8] பெண்ணியப் பார்வையில் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது. ஆணாதிக்க உணர்வுடன் இலக்கிய ஆய்வுகள் அமையும் பொழுது அதனை எதிர்த்து உண்மையை நிலைநாட்டலுக்குக் கண்டிப்பாகத் தேவையாகிறது.

பெண்கள் முன்னேற்றத்திற்கான தடையரண்களை உடைத்து, தேவைகளையுணர்ந்து செயல்படவும், ஆணுக்குச் சரிநிகர்சமானமாய் வாழவும் இன்று இத்தகு ஆய்வுகள் பழமை இலக்கியங்களிலும் தேவையே.

**முடிவுரை**

இறைவி, தேவமங்கையர் என மீவியற்கை நிலையிலும் ஆண்ாதிக்கம் வலுப்பெற்ற நிலையினைக் காணும்பொழுது மகளிரின் அடிமை வாழ்விற்குப் புராணங்கள் பெரும் பங்கேற்றுள்ளன என்பது தெளிவாகிறது.

முதல் நூல் தொல்காப்பியம் முதற்கொண்டே மகளிர் கற்பு வற்புறுத்தப்படினும், மிகுதியான அடக்குமுறைக்கு உட்பட்ட நிலைக்கு, கற்புக் கோட்பாட்டு வரையறைகள் விரிந்து சென்றமைக்குத் தமிழகத்தில் ஆரியர் பெற்ற செல்வாக்கும் சிறப்புக் காரணமாக இருக்கலாமோ என்ற ஐயமும் எழுகிறது.

கற்பித நம்பிக்கைகளும் பெண்ணடிமைக்குத் துணை செய்துள்ளன.

எல்லாம் அவனே என ஒன்றிய நிலையில், சார்பு வாழ்வில் மன நிறைவு கொண்டு வாழ்ந்த வாழ்வால் பெண்களிடையே தற்சிந்தனை எழவில்லை என்ற கருத்தும் எழுகின்றது. எனவேதான் வேண்டாத முறையற்ற கட்டுப்பாடுகளை உணர்ந்து அவற்றை எதிர்க்கவோ, முறிக்கவோ முயலவில்லை எனவும் கருதலாம்.

எனவே பெண்களுக்குப் பொருளாதார உரிமையும், கல்வியும் மட்டுமின்றித் தற்சிந்தனையும் தன்மான உணர்வும் மிக இன்றியமையாதது. அப்பொழுதுதான் தாழ்வுமனப்பான்மை மறைந்து தன்னம்பிக்கை தோன்றி உண்மையான, உறுதியான பெண் விடுதலை மலரும்.

**கருவி நூல்**

கம்பராமாயணம்-இராமாவதாரம், கம்பன் கழகம், சென்னை, மு.ப. *1976.*

---

8. வ. சுப. மாணிக்கம், கம்பர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், *1967*, ப. *121.*

**துணை நின்றவை**


1. பெண்ணிய இலக்கியத்திறனாய்வும் தமிழாய்வும், தி.கமலி, ஓங்கு தமிழ். *15.7.93; (35-43)*

2. பெண்ணியக் கலைச்சொல் விளக்கக் கையேடு, தேவதத்தா, தி. கமலி, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், சென்னை, நவ. *1992.*

3. பெண்ணிய நோக்கில் இலக்கியப் படைப்பும் வாசிப்பும், அ. மங்கை, தமிழக மகளிர் திங்கள் தொடர் கருத்தரங்கம்-5, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், *12.5.93.*

4. பெண்ணியப் பார்வையில் கம்பன் தாரை, வெள்ளிக்கிழமை கருத்தரங்கக் கட்டுரை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, *16.4.93.*

5. பெண்ணியம் -ஓர் அறிமுகம், இரா. பிரேமா. உ.த.நி. அறக்கட்டளைச் சொற்பொழிவு, *1993.*

# பழமொழிகளில்......

ந. கடிகாசலம்

பழமொழி என்பது அனுபவத்தின் குரல். உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் ஒலிப்பது. 'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது' என்பது போல சிறிய வடிவத்தில் பெரிய ஆற்றலை உள்ளடக்கியிருப்பது பழமொழி'* 'ஒருவன் உள்ளத்தை அறிய வேண்டுமானால் அவன் சொற்களைக் கவனி' என்பது சீனப் பழமொழி. அதுபோல, ஒரு சமுதாயத்தின் கருத்தை அறிய வேண்டுமானால் அதன் பழமொழிகளைக் கவனி என்று கூடக் கூறலாம். தமிழ்ப் பழமொழிகள்வழி அறியலாகும் மகளிர் பற்றிய எண்ணத்தை அறிவது இக்கட்டுரை நோக்கமாகும்.

### தமிழில் பழமொழிகள்

பழைய மொழியே பழமொழி எனப்படுகிறது. ஆயிரக்கணக்கான பழமொழிகள் தமிழில் வழங்கி வருகின்றன. அவற்றுள் 'மகளிர்' பற்றியவை, தமிழ்ச் சமுதாயத்தில், மகளிர் பெற்றிருந்த பெருமையைப் *(?)* பறைசாற்றுவதைக் காண முடிகிறது. 'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை' என்று தாயை வெகு உயர்வாகப் பாராட்டுவது தமிழ்ப் பழமொழிக்கே உரிய சிறப்பாகும்.

### பெண்

'அகத்துக்கு அழகு ஆமுடையாள்' என்று இல்லாளின் பெருமையைப் பழமொழி பேசுகிறது. 'அணி இலாக் கவிதை-மணி இலாத வனிதை' எனப் பாராட்டுகிறது. ஆனால் பெண்ணைப் பழித்திடும்/ தூற்றிடும் பழமொழிகளும் இல்லாமல் இல்லை.

ஆணாய்ப் பிறந்தால் அருமை
பெண்ணாய்ப் பிறந்தால் எருமை;

பெண்டுகள் சமர்த்து அடுப்பங்கரையில்தான்

---

* சாலை இளந்திரையன், சமுதாய நோக்கில் பழமொழிகள், ப.2.

பெண்டுகள் இருந்த இடம்
சண்டைகள் பெருத்திடும்

என்பனவற்றைச் சான்றாகச் சுட்டலாம்.

'ஆணும் பெண்ணும் சமம்'

என்ற எண்ணம் முழுமையாக நிலவியதாகக் கூறுவதற்கில்லை. ஏனெனில்,

பெண் புத்தி பின்புத்தியே;

அடுக்களைப் பெண்ணுக்கு
அழகு வேண்டுமா?

அடுக்களைக்கு ஒரு பெண்ணும்
அம்பலத்துக்கு ஓர் ஆணும் இருக்கிறதென்கிறான்.

பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்.

என்றெல்லாம் பழமொழிகள் வழங்கி வருவதே சான்றாகும். ஆணுக்கு நிகரானவள் பெண் என்னும் எண்ணம் நடைமுறையில் சிக்கலானதாகத் தோன்றுவதற்கு அடிப்படை ஆண்களின் மனப்போக்கே தவிர வேறெதுவும் இல்லை எனலாம்.

**கிராம-நகரப் பெண்**

பெண் என்பவளை, அவள் இருக்கும் இடத்தை வைத்துப் பிரித்துப் பார்க்கும் நிலை காணப்படுகிறது.

கூழைக் குடித்தாலும்
குப்பை சுமந்தாலும்
குப்பைக்காட்டுப் பெண்கள் ருக்குமணி

என்பதாக ஒரு பழமொழி கிடைக்கிறது. கிராமப் பெண்ணை உயர்த்திப் பேசும் அதே வேளையில் பட்டணத்துப் பெண்ணைப் பழித்துப் பேசுவதை அறிய முடிகிறது.

பாலைக் குடித்தாலும்
பட்டைக் கட்டினாலும்
பட்டணத்துப் பெண்கள் பறக்கை

கிராமத்தைச் சார்ந்தவர் உருவாக்கிய இப்பழமொழிக்கு எதிராக, பட்டணத்தார் பழமொழி ஏதும் உருவாக்கவில்லை போலும்.

இத்தகைய பெண் ஒருவனுக்கு மனைவியான பின்பு, மற்றவரால் பழிக்கப்படும் போது கணவன் வீறுகொண்டு எழுவது புலனாகிறது. பெற்ற

தாயை வசைபாடினாலோ, உடன்பிறந்தாரைப் பழிதூற்றினாலோ ஒருவனுக்குக் கோபம் வராமலிருக்கலாம். ஆனால் மனைவியைப் பற்றிப் பேசத் தொடங்கினால் உடனே அவனுக்கு ஆத்திரம் பொங்கிவிடும் என்பது

ஆத்தாள் என்றால் சும்மாயிப்பான்
அக்காள் என்றால் சும்மாயிருப்பான்
பெண்டாட்டி என்றால் மீசைமேல்
கைபோட்டுச் சண்டைக்கு வருவான்

எனும் பழமொழியின் மூலம் தெரியவருகிறது.

**தாய்-மகள்**

ஒரு பெண் வளர்ந்து, ஒருவனை மணம் முடித்து, தாரமாகிப் பின் தாயாகிறாள்; அடுத்து மாமியார் ஆகிறாள். இந்தப் படி நிலையில், மாமியார் என்பது மூர்க்கத்தனமான பதவியாகிறது.

மாமியார் நன்மையும்
வேம்பு இனிப்பும் இல்லை

என்பதனால் இது தெளிவாகின்றது.

*(மாமியார் இல்லாத மருமகள் உத்தமி;)*
மருமகள் இல்லாத மாமியார் குணவதி

என்பது யதார்த்த நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. 'மாமி மெச்சிய மருமகள் இல்லை' என்று ஒரு பழமொழி முடிவுகட்டுகிறது.

மாமியாரும் சாகாளோ
மனக்கவலையும் தீராதோ

என ஏங்கும் மருமகள்கள் எண்ணிக்கை அதிகம் எனத் தோன்றுகிறது.

அன்பற்ற மாமியாருக்குக்
கால்பட்டால் குற்றம்
கைபட்டால் குற்றம்

என்பதால்தானே என்னவோ,

மாமியார் செத்த ஆறாம் மாதம்
மருமகள் கண்ணில் தண்ணீர் வந்ததாம்.

என்கிறது மற்றொரு பழமொழி. 'மாமியாரும் ஒரு வீட்டு மருமகள்' என்பது மறக்கப்படாமல் இருப்பதே இந்த அவல நிலைக்கு அடிப்படையாகலாம்.

## அக்காள்-அத்தான்-தங்கை

அக்காளும் தங்கையும் உடன்பிறந்தவர்களாயினும் திருமணத்திற்குப் பிந்திய உறவில் சிக்கல்கள் ஏற்படுவது தெரிகிறது.

அக்காள் ஆனாலும்
சக்களத்தி சக்களத்திதான்;

அக்காள் வீட்டுக்குப் போனாலும்
அரிசியும் பருப்பும் கொண்டுபோக வேண்டும்

என்பன போன்று பல பழமொழிகள் வழக்கில் இருந்து வருகின்றன.

அக்காள் அரிசி கொடுத்தால்தானே
தங்கை தவிடு கொடுப்பாள்?

என்று இருவரின் பண்புநலனும் வெளிப்படுத்தப்படுகின்றது. அக்காளின் கணவனின், மச்சானின் உறவு குறித்துப் பல பழமொழிகள் வழக்கில் உள்ளன.

அக்காள் இருக்கிற வரையில் மச்சான் உறவு
அக்காளோடு போயிற்று அத்தான் உறவு.

ஆகியவை மச்சானுடனான உறவு அக்காளை மையமிட்டு அமைந்திருப்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன.

அக்காள்தான் கூடப் பிறந்தாள்
மச்சானும் கூடப் பிறந்தானா?

என்பதன் மூலம் மச்சானிடம் அக்காளைப் போல அதிகமாக எதிர்பார்த்தல் கூடாது என்பது வெளிப்படுகிறது.

ஆண்பிள்ளைகள் ஆயிரம் ஒத்திருந்தாலும்
அக்காளும் தங்கையும் ஒத்திரார்

என்ற உண்மையைப் பழமொழி பகர்கிறது.

தவிர, அக்காளின் கணவனுடனான தங்கையின் 'உறவு' சில பழமொழிகளில் மையப்பொருளாகின்றது.

அலுத்துச் சலித்து அக்காள் வீட்டுக்குப் போனாளாம்
அக்காள் இழுத்து மச்சானிடம் விட்டாளாம்

என்பதைக் காட்டாக்கலாம்.

**உறவு மணம்**

அக்காள் மகள், அத்தை மகள் ஆகியோரை மணம் முடிப்பது இயல்பானதாகக் காணக்கிடக்கிறது. உறவு விட்டுப்போகக் கூடாது என்பதற்காக இந்நிலை நீடிக்கிறது.

அக்காள் மகள் ஆனாலும் சும்மா வரக்கூடாது என்பது ஒரு பழமொழி. உறவு என்பதால் மணப்பெண் வெறுங்கையுடன் புகுந்த வீடு வரலாம் என்பது தவிர்க்கப்படுவதைக் காணமுடிகிறது.

அஞ்சும் மூன்றும் எட்டு
அத்தை மகளைக் கட்டு

ஒன்றும் இல்லாவிட்டால்
அத்தை மகள் இருக்கிறாள்.

ஆகியவற்றின் மூலம் அத்தை மகளை மணம் கொள்ளும் வழக்கம் தெளிவாகிறது.

சொத்து மூன்றாவது (புதிய) நபருக்குக் கைமாறிடக் கூடாது என்பது இத்தகைய திருமணங்களின் அடிப்படை நோக்கமாகும். தனக்கு உரிய கணவனைத் தான் தேர்ந்தெடுக்கும் உரிமை கூட இங்குப் பெண்ணுக்கு மறுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**கணவன்-மனைவி**

பெண் இன்றிப் பெருமையும் இல்லை
கண் இன்றிக் காட்சியும் இல்லை

எனப் 'பெண்ணானவள் கண் போன்றவள்' என்று புகழ்ந்துரைக்கிறது இப்பழமொழி. அவளே ஒருவனைத் திருமணம் செய்து கொண்டு 'பெண்சாதி'யாக மாறிய பின்னர் ஏளனத்துக்கு ஆளாகும் நிலை தென்படுகிறது. அவள் பேச்சைக் கணவன் கேட்கக் கூடாது என்பதில் சமூகம் ஒற்றுமை காட்டுகிறது.

பெண்சாதி பேச்சைக் கேட்பவன்
பேய்போல் அலைவான்

என்று அச்சுறுத்துகின்றது.

'தையல் சொல் கேளேல்'

'தையல் சொல் கேட்டால் எய்திடும் கேடு'

என்று ஒரு கோட்பாட்டினையும் உருவாக்கிவிட்டது.

அதே வேளையில்,
புத்தியுள்ள மனைவி
புதையலுக்குச் சமம்

என்று புகழ்ந்திடவும் செய்கிறது.

கணவன் தரும் துன்பத்தை மனைவி தாங்கிட வேண்டும்; எப்படியிருந்தாலும் அவன்தான் கணவன் என்பதில் உறுதி தெரிகிறது.

அடித்தாலும் புருடன்
புடைத்தாலும் புருடன்.

கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருஷன்;

எனும் பழமொழிகள் சான்றாகின்றன.

மேலும், கோபப்படுவது என்பது கணவனுக்கு இயல்பானது என்று கூறப்படுகிறது.

கோபம் இல்லாத புருஷனும் புருஷன் அல்ல
கொதித்து வராத சோறும் சோறல்ல

என்று பழமொழி பகர்கிறது. எப்படிப்பட்ட கணவனாக இருப்பினும் அவனுடன் மனைவி ஒத்துப்போக வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கிறது.

குணக் கேடானாலும் கொழுநன்
நலக் கேடானாலும் நாயகன்

என்ற பழமொழியின் வாயிலாக இக்கருத்து உறுதிப்படுகிறது.

**பெண் தாழ்வு**

பெண்மையின் மேன்மை பேசும் பழமொழிகள் பெண்ணைத் தாழ்வாகப் பார்ப்பது பற்றியும் பேசாமலில்லை. பெண் குழந்தை பிறந்தது என்றால் தம்பதிக்கு ஏற்படும் கவலை அளவிட முடியாதது. இது காலங் காலமாக நிலவி வருவதாகத் தோன்றுகிறது.

பெண்ணாய்ப் பிறப்பதிலும்
மண்ணாய்ப் பிறக்கலாம்.

என்று மனம் ஒடிந்து போவோரும் உண்டு.

அஞ்சாவது பெண் பிறந்தால்
அரசனும் ஆண்டியாவான்

என்று, பெண் குழந்தை பிறந்ததால் நேரிடும் கதியை இப்பழமொழி எடுத்தியம்புகிறது.

பெண் குழந்தை பிறந்த செய்தி கேட்டதும் மனம் ஒடிந்து போகின்ற தம்பதியரை இன்றும் காண முடிகிறது. அவள் திருமணத்துக்காகும் செலவு பெற்றோர்கள் முன் விசுவரூபம் எடுத்துவருகிறது போலும்! வரதட்சணை என்ற பெயரில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமையை 'அரசனும் ஆண்டியாவான்' என்பது கோடிட்டுக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

**பெண் கல்வி**

பெண்ணாகப் பிறந்தவளுக்குக் கல்வியறிவு தேவை இல்லை. எவ்வளவுதான் படித்தாலும் அடுப்புத்தானே ஊத வேண்டும் என்ற எண்ணம் சமூகத்தில் நிலவி வந்துள்ளது.

சேலைமேல் சேலைகட்டும் தேவரம்பை ஆனாலும்
ஓலைமேல் ஆணி ஊன்றும் ஆண் ஆகாது

என்பதாகப் பழமொழி கூறுகிறது.

அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு

என்று கேள்வி கேட்ட காலமும் உண்டல்லவா?

அடுப்பங்கரையே கைலாசம்
அகமுடையானே சொர்க்கலோகம்;

அடுப்பங்கரையே சொர்க்கம்
அகமுடையானே தெய்வம்

எனும் பழமொழிகள், பெண் என்பவள் அடுப்பங்கரைக்கு உரியவள் என்று உறுதிப்படுத்துகின்றன.

பெண்டுகள் சமர்த்து அடுப்பங்கரையில்தான்

என்ற பழமொழியும் ஈண்டு எண்ணத்தக்கது.

அடுக்களைப் பெண்ணுக்கு
அழகு வேண்டுமா?

என்பதன் மூலம், பெண்ணுக்குப் படிப்பறிவு மட்டுமல்ல அழகும் தேவையற்றது என்ற எண்ணம் சமூகத்தில் நிலவியிருந்தது தெரிகிறது.

**கற்பு**

தமிழிலக்கியம் கற்பின் பெருமையை வலியுறுத்தி வருகிறது. பழமொழிகளில் கற்பின்மை காட்டப்பட்டுள்ளது. ஆணாயினும்

பெண்ணாயினும் கற்பு நிலையில் நிற்க வேண்டும் என்பது சமூகத்தின் எதிர்பார்ப்புகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. ஒரு பெண் இழந்த கற்பு மீட்கப்பட முடியாதது என்று,

அரைக்காசுக்கு அழிந்த கற்பு
ஆயிரம் பொன் கொடுத்தாலும் கிடைக்குமா?

அரைக் காசுக்குப் போன மானம்
ஆயிரங் கொடுத்தாலும் வராது

ஆகிய பழமொழிகள் வலியுறுத்துகின்றன.

ஒரு பெண் கற்பு இழக்கும்போது ஓர் ஆணும் கற்பிழக்கிறான் என்பதை மறக்காமல் ஆண் கற்பின்மை பற்றியும் பழமொழிகள் எடுத்தியம்புகின்றன.

கண்டால் காமாட்சி நாயக்கர்
காணாவிட்டால் காமாட்டி நாயக்கன்;

அறுப்புக் காலத்தில் ஐந்து பெண்சாதி

ஆகியவற்றைச் சான்றாக்கலாம்.

பெண் இழக்கும் கற்பு மீட்கப்பட முடியாதது என்று கூறும் அதே வேளையில், கற்பிழக்கும் உரிமை ஆணுக்கு உண்டு எனப் பின்வரும் பழமொழி தெரிவிக்கிறது.

ஆயிரம் பேரிடத்தில் சிநேகம்
பண்ணினாலும் ஆண்களுக்கென்ன?

பாரதியார் கூறியது போல, கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக இருக்க வேண்டும்.

மறு மங்கையருக்கும் மறு மன்னர்க்கும்
மார்பும் முதுகும் கொடாமலிரு

என்று ஆண்களுக்கு அறிவுரை கூறும் பழமொழி இங்கு நினைவு கூரத்தக்கது.

**உரிமை மறுப்பு**

மனைவி இறந்தவுடனே மறுமணம் செய்து கொள்கிறான் ஆண். இதை, 'பெண்சாதி இறந்தால் புதுமாப்பிள்ளை' எனும் பழமொழியால் உணரலாம். ஆணுக்குத் தரும் இவ்வுரிமை, கணவனை இழந்த

பெண்ணுக்குத் தரப்படுவதில்லை. உரிமை மீறல் குற்றத்திற்குப் பெண்கள் ஆளாவதோடு வசைமொழியையும் வாங்கிக்கட்டிக் கொள்ள நேரிடுகிறது. அவள் உடன்கட்டை ஏற வேண்டும் என்று கருதப்பட்ட காலமும் உண்டு என்பதை,

சுட்ட சட்டி தொடாதவளா
உடன்கட்டை ஏறப்போகிறாள்

எனும் பழமொழியால் அறியலாம்.

பேச்சுரிமை கூடப் பெண்ணுக்கு வழங்கப்படுவதில்லை என்பதை,

பெண்டிர்க்கழகு பேசாதிருத்தல்

பிடிவாதமும் எதிர்வாதமும் பெண்களுக்காகாது

பேசா மடந்தை பேசும் தெய்வம்

ஆகிய பழமொழிகள் உணர்த்துகின்றன. காலப் போக்கில், கல்வியறிவு, சட்டம் ஆகியவற்றின் துணைகொண்டு இந்நிலை மாறிவருவது சுட்டத்தக்கது.

பொருத்தமில்லாத திருமணத்திற்கு மறுப்பு தெரிவிக்கும் உரிமைகூட பெண்களுக்கு இல்லை என்பதைப் பழமொழிகள் அறிவிக்கின்றன. இளமை மணம் நடைமுறையில் இருந்த காலகட்டத்தில் இது பெருமளவில் வழக்கத்தில் இருந்தது.

ஐம்பது வயசு ஆனவனுக்கு
அஞ்சு வயசுப் பெண்ணா?

என வியக்கும் பழமொழி உண்டு.

கிழவனுக்கு வாழ்க்கைப் படுவதைவிட
கிணற்றில் விழுந்து சாகலாம்

என்கிறது மற்றொரு பழமொழி. ஆனால்,

கிழவனைக் கல்யாணம் பண்ணிக்கொண்டால்
கடைசி வரையில் சாப்பாடு

என்று வழி கூறுகிறது, இன்னொரு பழமொழி.

### ஆண்-பெண் சமத்துவம்

மேலே குறிப்பிடப்பெற்ற பழமொழிகளின் அடிப்படையில் ஆணுக்குப் பெண் சமம் என்ற கருத்து தமிழகத்தில் நிலவியது என்று கூறுவதற்கில்லை.

பிறக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்பதைப் பொறுத்து, மதிப்பு வழங்கப்படுகிறது. 'சாண்பிள்ளையானாலும் ஆண் பிள்ளை' என்பது ஆணாதிக்கச் சமுதாயத்தின் வெளிப்பாடு எனலாம். ஒரு பெண்ணுக்கு,

அடுப்பங்கரையே திருப்பதி

என்ற நிலைக்கு ஆண்களை மட்டுமே காரணமாகக் கூறிவிட முடியாது. கல்வியறிவு பெறாத பெண்கள் அடுப்பங்கரையைக் கட்டி மாரடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பெண்கள் கல்வியறிவை பெற்ற பின்னரும், அலுவலகங்களில் வேலையில் ஈடுபடத் தொடங்கிய பின்னரும், பழைய நிலைதான் நீடிக்கிறது. சமையலுக்குப் பயன்படும் பொருட்கள் நவீனமயமானவையாக இருக்கலாம்; ஆயினும் பெண்ணுக்குப் பணிச்சுமை குறைந்து விட்டதாகக் கூறிட இயலாது.

இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில், 'ஊதியம் வாங்காத பணிப்பெண்தான் மனைவி' என்னும் எண்ணம் மாற வேண்டியது மிகமிக இன்றியமையாதது.

**பெண்ணை ஏற்காத பெண்**

பெண்கள் பொதுவாக இன்னொரு பெண்ணின் தலைமையை முழுமையாக ஏற்றுக் கொள்ளும் பக்குவமற்றவர்களாகவே காணப் படுகின்றனர். மாமியார் - மருமகள் பிரச்சினையும், அண்ணி-நாத்தனார் பிரச்சினையும் உளவியல் அடிப்படையில் ஆராய்வதற்குரியவை. தான் பெற்ற பிள்ளை இன்னொருத்தியின் சொற்படி நடக்கக் கூடாது என்று தாய் விரும்புகிறாள். தாலி கட்டியவன் என்பதால் கணவனிடம் சம உரிமை கேட்கிறாள் மனைவி. இரு பெண்களுக்கிடையே இருதலைக் கொள்ளி எறும்பு போல ஆண் தவிக்க நேரிடுகிறது.

மாமியார் உடைத்தால் குழவிக்கல்
மருமகள் உடைத்தால் வைரக்கல்

எனும் பழமொழி ஏன் உருவாயிற்று?

மகன் செத்தாலும் சாகட்டும்
மருமகள் கர்வம் அடங்கினாற் போதும்

எனும் பழமொழியும்,

மாமியார் செய்யும் கொடுமை
மருமகள் வாழ்க்கை அடிமை

எனும் பழமொழியும் இரு பெண்களுக்கு இடையிலான பகைமை நிலையை வெகு அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

**அடக்கம்-அழகு-கற்பு**

'அடக்கமே பெண்ணுக்கு அழகு'

என்று, பெருமையாகப் பேசுவதாக நினைத்துப் பெண்களை உண்மையிலேயே அடக்கி வைத்திருந்த நிலை தெளிவாகப் புலப்படுகிறது.

அடக்கமுடைய பெண்ணுக்கு அழகு ஏன்?

இது அடுத்த வினா. ஒரு பெண்ணை எவ்வகையில் வேண்டுமானாலும் 'அடக்கி' வைக்க இயலும் என்பது தெரியவருகிறது.

கணவனுக்கு மிஞ்சித் தெய்வம் இல்லை

கற்பு எனப்படுவது கணவன் சொல் தவறாமை

கற்பெழில் மடவார் கணவனை அகலார்

எனும் பழமொழிகள், பெண்ணுக்கு இடப்பட்ட வேலி பற்றிக் குறிப்பிடுகின்றன. இத்தகைய வேலி கணவனுக்கு இல்லாதது ஏன்?

ஆயிரம் பேரிடத்தில் சிநேகம்
பண்ணினாலும் ஆண்களுக்கென்ன?

என்று உரிமை வழங்கப்பட்டது ஏன்? அவன் முட்டாளாக இருந்தாலும் இரு மனைவியர் அமைவது,

முட்டாள் பையனுக்கு இரட்டைப் பெண்டாட்டி

துப்புக்கெட்ட மாப்பிள்ளைக்கு இரட்டைப் பெண்டாட்டி

என்பதன் வாயிலாகப் புலனாகிறது.

**கைம்மை – மறுமணம்**

தாலி கட்டிய கணவன் இறந்துவிட்டால், மனைவியானவள் விதவைக் கோலத்தில் எஞ்சிய வாழ்நாளைக் கழித்திட வேண்டும். ஆனால், மனைவி இறந்துவிட்டால் கணவன் மட்டும் மறுமணம் செய்து கொள்வதைச் சமூகம் அனுமதிக்கிறது; ஆதரிக்கிறது. பிரச்சினை ஒன்று; தீர்வு மட்டும் வேறு வேறு.

பெண்சாதி இறந்தால் புதுமாப்பிள்ளை

எனும் பழமொழியானது, மனைவியை இழந்தவன் உடனே புது மாப்பிள்ளையாகிடும் வாய்ப்பு இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

விதவை துடுப்பில்லாத மரக்கலம்

என்கிறது சீனப் பழமொழி. அழகுள்ள விதவையைத் திருமணம் செய்து தரவேண்டும்; அல்லது புதைக்கக் வேண்டும்; அல்லது கன்னிகா மாடத்தில் சேர்த்திட வேண்டும் என்பது ஸ்பெயின் நாட்டுப் பழமொழி. ஆண் மறுமணம் செய்து கொள்வது என்பது இன்றளவும் ஏற்கப்பட்ட செயலாகவே உள்ளது. பெண்ணின் மறுமணம் என்பது, விழிப்புணர்வு ஏற்பட்டுள்ள நிலையில் எதிர்பார்க்கும் அளவுக்கு நடைமுறைக்கு வரவில்லை.

மனைவியைப் பிரிந்து வாழும் கணவன் எதைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை; ஆனால், கணவனைப் பிரிந்து வாழும் நிலையில் மனைவி மட்டும் கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்திட வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கிறது.

வாழாத பெண்ணுக்கு
மை ஏண்டி, பொட்டு ஏண்டி
மஞ்சள் குளி ஏண்டி

என்று கேள்விக்கணை தொடுக்கிறது; சமூகம் மட்டுமல்ல, பிறந்த வீடும் பெண்ணுக்கு மதிப்பளிக்கத் தவறுகிறது.

வாழ்ந்த மகள் வந்தால்
வர்ணத் தடுக்கு இடு
கெட்ட மகள் வந்தால்
கிழிந்த தடுக்கு இடு

எனும் பழமொழி இதனைத் தெளிவாகக் காட்டுகிறது.

பெண்ணென்றால் பேயும் இரங்கும்

என்பது பழமொழி. பேய் இரங்கினாலும், இந்தச் சமூகம் பெண்ணுக்காக இரங்க மாட்டாது போலத் தோன்றுகிறது.

**சில எண்ணங்கள்**

பழமொழிகளில் ஒரு சில மட்டுமே பெண்ணின் பெருமை பேசுகின்றன. பெரும்பாலானவை பெண்ணைப் பழித்துரைப்பதாக, எள்ளி நகையாடுவனவாக அமைந்திருக்கக் காண்கிறோம். எனவே, இந்தப் பழமொழிகள் யாரால் எப்போது ஏன் படைக்கப்பட்டன என்பதில் ஐயம் ஏற்பட வாய்ப்புண்டு.

பழமொழிகள் மனைவி, தாய், மாமியார் என்ற படிநிலைகளைப் பற்றிப் பேசுகின்றன. "பெண்" என முழுப் பார்வை பார்ப்பதாகத் தோன்றவில்லை. அவளின் தனித்தன்மை பற்றிய சிந்தனையே

பழமொழிகளில் காணப்படவில்லை. பிறந்து வளர்ந்து பிறர்க்காக உழைத்த போதிலும் 'தனித்தன்மையற்ற ஜீவன்' என்றே பெண் நின்றுவிடுகிறாள். 24 மணி நேரமும் சுரண்டப்படுகிற மனைவி எனும் பெண், கணவன் எனும் ஆணின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப வடிவமைக்கப்படுகிறாள். 'தந்தைக்கு அடங்கி நடத்தல், கணவனுக்கு அடங்கி நடத்தல், மகனுக்கு அடங்கி நடத்தல்-இம்மூன்றுமே ஒரு பெண்ணுக்குரிய மூன்று பண்புகள்' என்னும் சீனப்பழமொழி இங்கு எண்ணத்தக்கது.

பெண்மை சிறப்பிக்கப்படும் அதே வேளையில் இழிபடுத்தப்படுகிற இரு துருவ நிலையைப் பழமொழிகளில் காண முடிகிறது. பெண்வழிச் சேறல் எனும் அதிகாரத்தைப் படைத்த திருவள்ளுவர், 'பெண்ணின் பெருந்தக்க யாவுள' என்று கூறியிருப்பதும் நினைக்கத்தக்கது.

> மனைக்கொடி இல்லா மனை பாழ்

என்று சிறப்பித்துப் பேசும் பழமொழி,

> உழைத்துப் போட ஆண்
> உட்கார்ந்து திங்க பெண்

என்று பெண்ணின் கையாலாகாத நிலையைக் கூறுகிறது.

> பொம்பளை சிரிச்சா போச்சு
> புகையிலை விரிச்சா போச்சு

என்றொரு தடா/தடைச் சட்டத்தைப் பெண்களுக்கு விதித்துள்ளது.

பெண்ணுக்கு உரிய பங்கு (Role) உரிய முறையில் வரையறுக்கப் படவில்லை - ஏதோ அடுப்பங்கரைக்கு மட்டுமே உரியவள் - என்பது பழமொழிகளின் வழி புலனாகிறது. பெண்ணின் தகுதி, அவளுடைய சமூக மதிப்பு ஆகியவையும் பழமொழிகளில் முறையாக உணர்த்தப்படவில்லை. பெண்ணை இழிவாகப் பேசும் மொழிகள், உயர்ந்த ஆசிரியர், சிறந்த அமைச்சர் என்று பெண் எவரையும் வெளிப்படுத்தவில்லை. பிறரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஏளனத்திற்கும் உரிய பிறப்பெடுத்தவள் பெண் என்னும் போக்கில் பழமொழிகள் அமைந்துள்ளன.

ஒரு காலக்கட்டத்தில் பெண்களைப் பற்றிய பழமொழிகளை அறிந்து கொள்வதில் பழமொழி நானூறு துணை புரியவில்லை. பொது நிலையில் வழக்கத்தில் இருந்துவரும் பழமொழிகள் தரும் மேற்குறித்த சிந்தனைகள் (பெண்ணிய நோக்கில்) ஏற்கப்படத்தக்கன அல்ல-எதிர்க்கப்படத்தக்கன எனலாம். தவிர, பெண்மை இழிக்கப்படுவதற்கு இப்பழமொழிகள் துணை

போவதால் ஆணின் மனப்போக்கையே (பழமொழியைப் படைத்தவர்கள் ஆண்கள் எனில்) இது காட்டுவதாகக் கருதலாம்.

கல்யாணம் பண்ணும் வரை பிள்ளை
கண்ணை மூடும் வரை பெண்

என்று பாராட்டப்படும் பெண் பற்றிய இழிவான நிலையை/சிந்தனையை வெளிப்படுத்தி நிற்பவை பழமொழிகள் எனத் துணியலாம்.

## பயன் நூல்கள்


1. கழகப் பழமொழி அகர வரிசை, கழகம், சென்னை, *1970*.
2. சமுதாய நோக்கில் பழமொழிகள், சாலை இளந்திரையன், பாரி நிலையம், சென்னை, *1972*.
3. தமிழ்ப் பழமொழிகள், கி.வா. ஜகந்நாதன், அமுத நிலையம், சென்னை, *1989*.
4. பெண்களைப் பற்றிய பழமொழிகள், சரளா ராசகோபாலன், ஒளிப்பதிப்பகம், சென்னை, *1991*.

# தமிழ் அச்சுச்சாதனமும் பெண் நாவலாசிரியைகளும் (1920க்கு முன்)

வீ. அரசு

ஒவ்வொரு காலச்சூழலிலும் அச்சுச் சாதனத்தின் சமூகப் பின்புல அடிப்படையில் இலக்கியத்தின் வரலாறு/இலக்கிய வரலாறு ஆகியவற்றை உருவாக்க வேண்டும். இங்குத் தமிழ் அச்சுச்சாதன வரலாற்றையும், அதில் பெண் நாவலாசிரியைகளின் பங்களிப்பு குறித்தும் விவாதிக்க முயலுவோம்.

தமிழ்ப் படைப்பிலக்கிய உருவாக்கத்தில் அச்சுச்சாதனச் செயல் பாட்டைப் பின்வருமாறு தொகுத்துச் சொல்லலாம்.

நீதி புகட்டுதல் என்ற தன்மையை, சமயச் சார்பு அடிப்படையில் செயல்படுத்தினர். இதற்காகக் கதைகளை உருவாக்கலும், இருக்கும் கதைகளைத் தொகுத்து வெளியிடலும் நடைபெற்றன. பஞ்சதந்திரக் கதைகள், புராணக்கதைகள், பல்வகை நாட்டார் வடிவங்கள் ஆகியவை இவ்வகையில் அச்சுவழி வெளிவந்தன. வாய்மொழி வடிவங்களின் பல்வேறு கூறுகள் புதிதான அச்சு வழி கொடுக்கப்பட்டன. கதை சொல்லும் முறை, அதில் உள்ள நுணுக்கத் தன்மைகள், நிகழ்த்தல் தன்மைகள் ஆகியவை அச்சாக்கப்படும்போது பல்வேறு மாற்றங்களைப் பெறுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். இவ்வகையில் அச்சுவடிவத்தில் இலக்கிய உருவாக்கம் உருப்பெற்றது. ஐரோப்பியப் பின்புலத்தில் உருவான புனைகதைத் தன்மையும் மேற்குறித்த தன்மையும் இணைந்து தமிழில் புனைகதை உருவானது. இதற்கானச் சான்றுகளைத் தொடக்ககாலப் புதினங்கள் அனைத்திலும் காணமுடியும்.

அச்சுச்சாதன செயல்பாட்டில், மேற்குறித்த தன்மை உருவான வரலாற்றைத் தொகுத்தல் அவசியமாகும். அச்சுச்சாதன வெளிப்பாடு பெரும்பான்மை இதழ்கள் வழிதான் செயல்பட்டது. அரசாங்க அறிக்கைகள், விளம்பரங்கள் ஆகியவற்றிற்கும், சமயப் பிரச்சாரம், வணிக விளம்பரம் போன்றவற்றிற்கும் உரிய வடிவமாகவே இதழ்கள் உருவாயின. அதற்குள்

ஒரு பகுதியாகக் கதைகளும் வெளிவந்தன. பெண்கள் தொடர்பான கதைகளும் பிற செய்திகளும் இடம் பெற்றன.

தொடக்ககால இதழ்களில் பெண்கள் பகுதி மட்டுமல்லாது, பெண்களுக்காக இதழ்களும் வெளிவந்தன. சுகுணபோதினி *(1883)*, மஹாராணி *(1887)*, பெண்மதி போதினி *(1891)*, மாதர் மனோரஞ்சனி *(1899)*, சக்கரவர்த்தினி *(1905)* போன்றவைகள் அவ்வகை இதழ்களாகும். 'பெண்மதி போதினி' என்ற இதழ் தமது நோக்கமாகப் பின்கண்ட செய்திகளை வெளிப்படுத்தியது.

> "பெண்களுக்கு அறிவு உதயமாகாத காலத்தில் அவர்கள் நடக்கவேண்டிய ஒழுங்கைப் பற்றி அவர்களுக்குப் போதிக்க வேண்டிய இடத்தில் போதிப்போம். அறிவு உதயமான வாலைப் பெண்கள் தந்தை வீட்டிலிருக்கும் போது ஒழுகவேண்டிய விதம் இப்படி என்றும், பெண் வித்தியார்த்திகள் அல்லது படிக்கும் பெண்கள் பாடம் படிக்க வேண்டிய விதம் இன்னபடி என்றும், இன்ன காலம் என்றும், மாதா, பிதா, உபாத்தியாயர், பந்துக்கள், சினேகிதர், அயலார் அவர்களிடமிருந்து இன்னபடி வசனித்தல் வேண்டும் என்றும், இவர்களுக்கு இன்னின்னபடி ஒழுகல் வேண்டுமென்றும் பெண்மதி போதினி போதிக்கும். கலியாணம் செய்யப்பெற்ற பெண்கள் வீட்டில் மாமனார், மாமி, மூத்தார், கணவன், மைத்துனர், ஓரகத்திமார் இவர்களோடு இன்னின்னபடி வசனித்தல் வேண்டுமென்பதையும், இவர்களிடத்தில் இன்னின்னபடி நடந்து கொள்ள வேண்டுமென்பதையும் விநோத கதைகளாலும் திருஷ்டாந்தங்களாலும் இப்பத்திரிகை போதிக்கும். பெண்கள் காலையில் துயில் எழுந்தவுடன் செய்ய வேண்டிய கருமங்கள் இன்னின்னவென்றும், கடன்கள் இன்னின்னவென்றும், ஸ்நான பானம், தந்த சுத்தி முதலியன செய்ய வேண்டிய முறைகளைச் சரித்திரங்களாலும் கதைகளாலும் விவரித்துக் கூறும். இதனை

வாசிக்கும் ஸ்திரீகளுக்கு யோசனையும் கவனமும் விருத்தியாகும் பொருட்டு விடுகதைகளும் விநோத சிறுகதைகளும் புதிதுபுதிதாக எடுத்துக் கூறப்படும். தையல் வேலை, பாக சாத்திரமுறை, சீர்திருத்தம், பிள்ளைகளை ஆரோக்கியமுடையவர்களாய் வளரும்படி பாதுகாக்கும் முறை, வீடு வாயில்களை அலங்கரித்தல் இன்னும் இவை போன்ற அரிய விஷய மார்க்கங்களையும் இப்பத்திரிக்கை வாயிலாய் வெளியிடுகிறோம்.... இதனோடு இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா முதலிய தேசப் பெண்களின் ஜீவியத்தையும், அவர்கள் செய்த காவியத்தையும், அவர்களின் உடையாதிகளையும் காட்டும்படி எழுதியுள்ள ஒவியத்தையும் முறையே பிரசுரித்து வருவோம்" (மா.ரா.இளங்கோவன், பக். 123-124, 1979).

எனவே, மேற்குறிப்பிட்ட வகையில், தமிழ் அச்சுச் சாதனத்தில் பெண்களுக்கான இடம் மிகுதியாகவே ஒதுக்கப்பட்டது. பெண்களுக்கு அறிவு கூறுதல், விதவைக்கொடுமை, குழந்தைமணக் கொடுமை போன்ற சீர்திருத்தங்களும் மிக விரிவாகவே பேசப்பட்டது. இவ்விதம் பெண்கள் பற்றிப் பேசப்பட்ட அச்சுச் சாதனத்தில் பெண்களின் செயல்பாடுகள் எவ்வகையில் இருந்தன? படைப்பிலக்கிய உருவாக்கத்தில் எவ்வளவு பேர் ஈடுபட்டனர்? இதழ் ஆசிரியர்களாக எத்தனைப் பெண்கள் இருந்தனர்? என்ற விவரங்களையும் திரட்டுதல் அவசியமாகும். மிக விரிவான இப்பணி இங்குத் தேவை என்றாலும், விரிவு கருதி அதனைப் பிறிதொரு தருணத்தில் விரிவாகப் பார்க்கலாம். மேற்குறித்த பின்புலத்தில் பெண் படைப்பாளிகள் எவ்வாறு உருவானார்கள்? அவர்கள் எழுதியவை புத்தக வடிவத்தில் எவ்வகையில் வெளிவந்தன? என்ற அடிப்படையில் இங்கு நாம் செய்திகளைப் பகிர்ந்துகொள்ள முயலலாம்.

இதழியல் என்பதும் புத்தகத் தொழில் என்பதும் இன்றைய சூழலில் வேறுபட்ட நிலையில் இருப்பதைப்போல், தொடக்க காலத்தில் செயல்பட்டதாகக் கூறமுடியாது. இரண்டிற்கும் நெருக்கமான தொடர்பு இருந்தது. மிகுதியான நூல்களை வெளியிட்டவர்கள் எல்லாம் இதழ் நடத்தியிருப்பதைக் காணலாம் (எ-டு. வை.மு.கோ.). இந்த அடிப்படையில் புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் எவ்விதம் செயல்பட்டன? குறிப்பாகப்

பெண்கள் படைப்புகளை வெளியிடுவதில் அவை எவ்விதம் செயல்பட்டன? என்ற வினாக்களுக்கான தரவுகளைச் சேகரிப்பதும் அவசியமாகும். இப்பணிகள் தமிழில் மிகக் குறைவாகவே நிகழ்ந்துள்ளன. இந்தப் பின்புலத்தில் *1920*-க்கு முன்பு எழுதிய நாவலாசிரியைகள் குறித்த சில செய்திகளை இங்கு விவாதிக்க முயலலாம். இந்தக் காலச் சூழலில் எழுதிய நாவலாசிரியைகளின் பட்டியல் (முழுமையானது அன்று) இத்துடன் இணைத்துள்ளேன். அவர்கள் தொடர்பான முழு விவரங்களையும் சேகரித்து விரிவாக ஆய்வு செய்யவேண்டிய அவசியம் நம்முன் உள்ளது. பட்டியலில் காணும் பதின்மூன்று பேரில் மூவரின் படைப்புக்களை மட்டும் இங்கு அடிப்படையாகக் கொண்டு விவாதிக்கலாம். இம்மூவரை மட்டும் தெரிவு செய்ததற்கான அடிப்படைகளைப் பின்கண்ட வகையில் காணலாம்.

> ஐரோப்பியர் வருகையால் உருவான எழுத்தறிவும், மிக அதிகமானபேர் எழுத்தறிவு பெற்ற கிறித்தவப் பெண்களின் பின்புலமும், அந்த அடிப்படையில் செயல்பட்ட பெண் படைப்பாளிகளையும் இனம் காணுதல்.
>
> சமூகத்தில் ஆங்கிலக் கல்வியைப் பெறும் வாய்ப்புள்ள பின்புலத்தில்/சாதியில் பிறந்து, அதன்மூலம் கிடைத்த அனுபவத்தால் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமை களைப் படைப்பில் வெளிப்படுத்தியோர்.
>
> அந்தக் காலச் சூழலில் எழுத்தறிவு பெற்றோரின் நுகர்வை மட்டும் முதன்மைப் படுத்தி, ஐரோப்பிய பாணியில் அமைந்த துப்பறியும் போக்கில் கதை சொல்லும் முறையில் எழுதியோர், படைப்பில் அதற்குமேல் எவ்வித அநுபவச்செழுமையும் வெளிப் படுத்தாதவர்கள்.

மேற்குறித்த அடிப்படைகளில் அமைந்த மூன்று நாவலாசிரியைகளின் பல்வேறு பரிமாணங்களை நாம் புரிந்துகொள்ள முயலலாம். இதனை வெளிப்படுத்துவதற்கு அக்காலத்தில் எழுத்தறிவு பெற்ற பெண்களின் புள்ளி விவரங்களும் மிக முக்கியமாகும். பாரதியின் 'சக்கரவர்த்தினி'யில் *(*தொகுதி*:2,* பகுதி *7,* பிப்ரவரி*, 1907)* வெளிவந்த 'பெண் கல்வியைப் பற்றிய ஸர்க்கார் ரிப்போர்ட்' குறிப்பிடத்தக்கது.

> "........எப்.ஏ. பரீட்சைக்கு, பிராமணரல்லாத இந்து-*1*, ஐரோப்பியர்கள்-*3*, சுதேச கிறித்தவர்கள்-*9*. இந்தப் பரீட்சையில் இது வரையில் *6* பிராமணர்கள், பிராமணரல்லாத இந்து *1*, ஐரோப்பியர்கள் *66*, சுதேச கிறித்தவர்கள் *26* ஆகமொத்தம் *99* பெண்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள்......" (தேவதத்தா *(பதி.) 1990).*

இதன்மூலம் எந்தப் பின்புலத்தில் எழுத்தறிவு பெண்களுக்கு ஏற்பட்டது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். மேற்குறித்த பகுதியில் சுதேச கிறித்தவப் பெண்களின் எழுத்தறிவு குறித்து அறிந்துகொள்ள முடிகிறது. இந்தப் பின்புலத்தில் உருவானவர் கிருபை. சத்தியநாதன் *(1802-1894)* ஆவார். அவரின் நாவல்கள் பற்றிய விவாதத்தை முன்வைக்கலாம்.

*1892, 1893*ஆம் ஆண்டுகளில் சென்னைக் கிறித்தவக் கல்லூரி இதழில், கமலா - ஓர் இந்துப் பெண்ணின் வாழ்க்கை, சகுணா - ஒரு கிறித்தவப் பெண்ணின் வாழ்க்கை என்ற தொடர்களை எழுதினார். இவை சாமுவேல் பவுல் பாதிரியார் அவர்களால் மொழியாக்கம் செய்யப்பெற்று இந்தியக் கிறித்தவ இலக்கியச் சங்கம் மூலம் - *1896, 1898*ஆம் ஆண்டுகளில் முறையே வெளியிடப்பட்டன. 'கமலா', புதினத்தில் ஒரு இந்துப் பின்னணியில் உள்ள பெண்ணின் படப்பிடிப்பைச் செய்துள்ளார்.

> "இந்து மார்க்கத்தின் குடும்பக்கட்டுப்பாட்டின் படி புருஷனுக்கும் மனைவிக்குமுள்ள சம்பந்தம் பொதுவாக இறுக்கமானதாக இருக்கின்றது. புருஷனிடம் பேசிப்-பழகுவது தகாததாக எண்ணப்பட்டது. . . . . புருஷன் மனைவிக்கு இருக்கவேண்டிய பாசத்தைப் பற்றிய ஆங்கில ஜாதியாரின் போக்கையும், அறிவு விருத்தியையும் பற்றி அவளுடைய கணவன் பார்த்து, கமலத்தின் மனதை முற்றிலும் வேறுமாதிரியாகத் திருத்தித் தனக்குச் சரியான துணைவியாக்கிக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டான். ஆனால், அதற்குப் பெரிய தடைகள் இருந்தன. அவன் மனைவிக்குப் படிப்பித்து வந்தது குடும்பத்தில் பெரிய குழப்பத்தை உண்டுபண்ணிற்று. அவன்

> வீட்டுக்கு அடங்காத பிள்ளை என்று பேரெடுத்தான்" (தி. பாக்கியமுத்து, (பதி.), ப. *10, 1979).*

இதன்மூலம் படிப்பறிவுக்கும் பெண்களுக்குச் சமூகத்தில் ஏற்படும் நிகழ்வுகளுக்குமான தொடர்பைப் புரிந்துகொள்ள முடியும்.

மராட்டியப் பெண்ணாகப் பிறந்து, மருத்துவக் கல்விக்காகச் சென்னை வந்து, கிருபை. சத்தியநாதன் என்ற கிறித்தவரை மணம் புரிந்தவர். இந்தப் பின்புலத்தில் தமது படைப்புக்களில் ஈடுபட்டவர், சொந்த வாழ்க்கையில், ஒரு நிலையில் இருந்து பிறிதொரு நிலைக்குத் தன்னை மாற்றிக்கொண்டபோது கிடைத்த அநுபவங்களைப் படைப்பாக்கியுள்ளார். தனக்குக் கிடைத்த இரு வேறுபட்ட சூழல்களைப் பதிவு செய்தார் கிருபை. இவ்வகையில் அவரின் 'சகுணா' குறிப்பிடத்தக்கது. 'ஒரு சுதேச கிறித்தவக் குடும்பத்தின் ஜீவியக் கதை' என்று குறிப்பிடப்பட்டு வெளிவந்திருக்கும் அப்படைப்பில் தமது சொந்த அநுபவங்களைப் படைப்பாக நம்மிடம் பகிர்ந்து கொண்டுள்ளார். இந்நூலின் மொழிபெயர்ப்பாளர் பின்வரும் செய்தியைக் குறித்துள்ளார்.

> "கிருபையம்மாள் இப்பிரபந்தத்தின் கடைசியில், 'அந்நியன்' என்று சொல்லும் ஒரு வித்வ சிரோமணியை சென்னையில் மணம் புரிந்து சிலகாலம் அவருடன் வாழ்ந்து, தன் புத்திரியைத் தனக்குமுன் மோட்ச லோகத்துக் கனுப்பிவிட்டு, இந்திய ஸ்திரீகளுக்கென்று சில பிரபந்தங்களை எழுதி முடித்து அகால மரண நதி வழியாய் நித்தியத்துக்குள் பிரவேசித்தாள்" (எஸ். பவுல், முகவுரை, ப. IV)

முப்பத்திமூன்று வயதில் இவ்வுலக வாழ்வை இழந்த அவரின் தன்வெளிப்பாடுகள் ஆழமானவை. இதனை உறுதிப்படுத்தும் வகையில் அவரின் வரிகள் அமைந்துள்ளன.

> "என் தாயார் தன் போக்கின்படி நல்லவளானாலும் நான் பெண்களுக்கு உதவாத படிப்பைப் படித்துச் சுயாதீனமாய் வளர்ந்ததால் முற்றிலும் கெட்டுப் போவேன் என்று நினைத்து வந்தாள். நான் ஒருக்காலும் விரும்பாத சமையல் வேலைகளில் தனக்கு உதவி செய்ய வரும்படிக் கூப்பிட்டு, 'என்ன

> பிள்ளை நீ? புஸ்தகம், புஸ்தகமென்று மண்டையைக் கெடுக்கிறாயே. பெண்ணுக்குப் படிப் பென்னத்துக்கு? பெண்டுகள் பள்ளிக் கூடம் அடுப்பாங்கரைதானே; எத்தனை படித்தும், கடைசியாகப் பெண்டுகள் அடுப்பாங்கட்டியைத் தானே முட்டவேண்டும்' என்று சொன்னாள். நான் எப்போதாவது தீட்டிப் புடைத்து, தூர்த்து மெழுகி, அரைத்துக் கலக்கி, அடுப்பாண்டை அம்மாவோடு அற்பசொற்ப வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் போது என் சின்ன அண்ணன்மார் கண்டால், என்னை மேற்கொண்டவர்களைப்போல் அகமகிழ்ந்து, சமயற்கட்டண்டை வந்து கொக்கரித்துச் சிரித்து, என்னைச் சாட்டி, "அம்மா, அதுதான் சரியான மாதிரி; அவளை அடுப்பண்டை உட்காரப் பண்ணுங்கள்; பெண்ணாகப் பிறந்தால் ஆக்கப்பொரிக்கத்தான் தெரிய வேண்டும். தங்கச்சியம்மாளே சாப்பாடெல்லாம் தயாராகட்டும்; எல்லாம் தயாரானவுடனே நம்மை வந்து கூப்பிடு" என்பார்கள். நான் அவர்களைக் கோபித்து, அவர்கள்மேல் வர்மம் வைத்துக் கொண்டிருந்தேன்". *(சகுணா, ப. 5, 1898).*

தன் வரலாற்றுப் போக்கில் எழுதப்பட்டுள்ள இந்நூலில் மேற்காணும் செய்திகள் ஒரு பெண், காலம் காலமான நிலைகளிலிருந்து வேறுபட்டு நிற்கும்போது எதிர்கொள்ளும் உலகை நாம் காணமுடியும். இந்நாவலில் இடையிடையே பல குட்டிக் கதைகளைக் கிளைக் கதைகளாக எழுதிச் செல்கிறார். அக்கதைகள் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை வெளிப்படுத்துகின்றன *(சகுணா, பக். 11-12).* நாவல் முழுதும் கிறித்தவம் மற்றும் ஐரோப்பியப் பண்பாடு ஆகியவற்றின் விளைவுகள் பெண்களிடம் ஏற்படுத்தும் விளைவுகளையும், அவற்றால் அவர்கள் பெறும் இன்னல்களையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. இந்நாவலின் மூலம் கிறித்தவம் சார்ந்த அச்சு வளர்ச்சி, அதன்மூலம் படைப்பை வெளியிட வாய்ப்புபெற்ற, மருத்துவக் கல்விபெற்ற ஒரு இந்தியப் பெண்ணை நாம் கண்டு கொள்கிறோம். இதில் ஒடுக்கப்பட்ட உணர்வுகள் வெளிப்படுவதற்கான வாய்ப்பே அற்ற சூழலில் அதனை

வெளிப்படுத்தக் கிடைத்த ஒரு வாய்ப்பாக இந்நாவல் அமைந்துள்ளது. மௌனத்தின் மிக ஆழமான குரலாக இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

பெண்ணிய விமரிசன நோக்கில், அகவயப்பட்ட அரசியல் (Personal Politics) மொழியாக இதனைப் புரிந்துகொள்ளலாம். தன்வரலாற்றுப் போக்கில் அமைந்த இப்படைப்பில் மிக ஆழமான தர்க்கப் போக்கினையும் புறவய அணுகலையும் அறியமுடிகிறது. சொல்லப்படும் செய்திகள் சொந்த அநுபவம் என்ற தரவாக அமைந்து இருப்பதால் உண்மைத்தன்மை (Authenticity) ஆழமாக இடம்பெற்றிருக்கிறது. குடும்பம் என்ற தளத்திலிருந்து உறவுகள் தொடர்பான கருத்தாக்கங்களைப் புரிந்துகொள்ள இதில் பேசப்படும் செய்திகள் பெரிதும் உதவும். சொந்த அநுபவமும் சமூகம் தந்த விமரிசன அநுபவமும் இணைந்து ஒரு மூன்றாம்வகை அநுபவத்தை இப்படைப்பு வெளிப்படுத்துகிறது. இவ்வகைத் தன்மைகள் பெண்ணிய நோக்கில் அண்மைக் காலங்களில் ஆழமாக விவாதிக்கப்படுவதையும் நாம் இங்குப் புரிந்துகொள்வது அவசியம். அச்சு சாதனம் பெண்ணுக்குக் கொடுத்த விடுதலையாகவும் இதனை நாம் இனம்காணுதல் அவசியம்.

புதிய இலக்கிய வகை உருவாக்கம் எப்போதும் மரபின் செழுமைகளை உள்வாங்கும். நாவலுக்கு அத்தன்மைகள் உண்டு. இந்நாவலில் அமைந்திருக்கும் கூற்றுவகை சிறப்பானது. கதைக்குள் கதையாகவும் கிளைக்கதையாகவும், ஒழுங்குபடுத்தப்பட்ட வெளிப்பாடாக அமையாது, உள்ளத்தின் குரல்கள் சுதந்திரமாக வெளிப்படும் போக்கிலும் அமைந்துள்ளது. பல குரல்கள் இணைந்த ஒரு ஒருமையை நாம் காண முடிகிறது. இந்தப் பின்புலத்தில் 'சகுணா' ஒரு முக்கியமான படைப்பாகும்.

கிறித்தவக் கல்வி மற்றும் பெண்களுக்கான விடுதலை பெறுதல் ஆகிய நிகழ்வுகள் நடந்துகொண்டிருந்த அதே சூழலில், பிறிதொரு பக்கம், சமூக நிகழ்வுகளை உடனுக்குடன் அறிதல், அதனை தர்க்கப் போக்கில் விவாதித்தல் போன்ற பண்புகளைப் பெற்ற எழுத்தறிவுடைய பெண்களும் உருவானார்கள். இவர்கள் பெரும்பகுதி ஆதிக்கச் சாதியைச் சேர்ந்தவர்கள். இந்தப் பின்புலத்தில் உருவான படைப்பாளியாக திருமதி. மீனாட்சி சுந்தராம்பாள் அவர்களைக் காணமுடியும்.

ஆங்கிலேயருக்கு இணையாக அனைத்து நிலைகளிலும் பிராமணர்கள் இருப்பதாகத் தமது 'ஜயசீலன்' நாவல் மூலம் வெளிப்படுத்துகிறார். ஐரோப்பியர் வருகையால் பிராமணர்கள் பெற்ற கல்வி அவர்களை மேலும் அறிவாளிகள் ஆக்கியுள்ளது என்ற கருத்து

வெளிப்படும் வகையில் இவர் நாவல் அமைந்துள்ளது. இந்நாவல் பெண்களின் நிலைகளை எவ்வித விமரிசனமும் இன்றி, சீர்திருத்தக் கண்ணோட்டத்தில் வெளிப்படுத்துகிறது.

பல்வேறு தகவல்களையும், செய்யுள் வரிகளையும் இடையிடையே இப்புதினம் எடுத்தாளுகிறது. கதை கூறும் தன்மை குறைந்து, உரையாடல் தன்மை மிகுந்து அமைந்துள்ளது. சகுணாவில் காணும் ஒரு ஆத்மாவின் குரல் இதில் இல்லை. அறிந்ததை வெளிப்படுத்தும் ஒருவகையான மேட்டிமைத்தனம் நாவலில் அமைந்துள்ளது. சீர்திருத்தத்தை ஆங்காங்கே பேசும் இந்நாவல் ஜோதிடம் பற்றிப் பின்வருமாறு வெளிப்படுத்துகிறது. கோபாலய்யரும் ஜோதிடரும் உரையாடுவதாக இப்பகுதி அமைந்துள்ளது.

**கோபாலய்யர் :**

> ". . . . நீங்கள் செய்கிற காரியமெல்லாம் அநேகமாக முடிவில் தற்கொலை செய்து கொள்ளும்படியாய் விடுகிறது. ஒரு பெண் இருக்கும்போதே அந்தப் பெண்ணின்பேரில் குற்றம்சாட்டி அதைத் தள்ளிவிடும்படி செய்கிறதும், வேறு ஒரு பெண்ணை தரகு பணத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்கிறதும், ஜாதகத்தை மாற்றுகிறதும், ........ உங்கள் பிழைப்பாய் இருக்கிறது. இவைகள் எவ்வளவு கெடுதலானது. நீங்களே யோசித்துப் பாருங்கள்.

**ஜோதிடர் :**

> நீங்கள் சொல்லுகிறது சரிதான். ஆனால் ஜாதகத்தில் ஏற்படுகிற மாறுபாடுகளுக்குக் காரணம் உங்களைப் போலொத்தவர்களே யொழிய நாங்கள் அல்ல. ஒரு பெண்ணுக்கு வயதாகிவிடுகிறதென்று அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு ஊர் ஊராய் அலைகிற தங்களைப்போலொத்தவர்கள் பெண் ஜாதகத்தை நாங்கள் மாற்றாவிட்டால் எங்களை விடுகிறார்களா? நீங்கள்

> எங்கள் பேரில் பாவத்தைச் சுமத்த வேண்டாம்" *(மீனாட்சி சுந்தராம்பாள், 'ஜயசீலன்', ப.193, 1912).*

இதன்மூலம் திருமணம் என்பதில் சமூகச் சீரழிவுகளை இவர் வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது. மேலும், பெண்ணின் படிப்பு என்பது, அவளின் விடுதலை சார்ந்த நிலையில் அமையாது, குடும்ப நலன், கணவனின் சமூக அங்கீகாரம் என்ற சூழலில் விதந்து பேசப்படுவதும் உண்டு. இவ்வகையில் இப்புதினத்தில் பல இடங்களில் பெண்ணின் எழுத்தறிவு பற்றி இவர் பேசுகிறார். இலண்டனில் படித்துக் கொண்டிருக்கும் கணவன் மனைவிக்கு எழுதும் கடிதம் பின்கண்டவாறு அமைகிறது.

> "எனது பிரியமுள்ள ஸரஸ்வதி............ நீ உனது படிப்பை நிறுத்த வேண்டாம். அந்த விஷயத்தில் உனது தகப்பனார் சற்றுப் பின்வாங்கினாலும் நான் கொஞ்சமும் தடை சொல்ல மாட்டேன்............ கலியாணம் ஆய்விட்டதென்று உனது படிப்பை நிறுத்தவேண்டாம். நீ இவ்வளவு புத்திசாலி என்று நான் கொஞ்சமும் அறியாமல் உன்னைக் கலியாணம் செய்துகொள்ள எவ்வளவோ விதத்தில் தடைசொன்னேன்..............."

இதன்மூலம் பெண்ணின் புத்திசாலித்தனத்தை அறுவடை செய்யும் ஆண்களின் கருணை உள்ளத்தை நாம் கண்டுகொள்ளலாம்.

இந்நாவல் ஆண்நிலைப் பார்வையில் அமைந்த ஒரு பெண்ணின் வெளிப்பாடாகும். அவருடைய சொந்த வெளிப்பாடாக எதனையும் நாம் காணமுடியாது. இவ்வகையான அச்சுச் சாதனத்தில் அச்சுப் போடுவதற்கான வாய்ப்பும், எழுத்தறிவு வழி பெற்ற எழுதும் ஒருவகையான பயிற்சியும் இணைந்து உருவான ஒரு படைப்பாக நாம் இதனைப் பெண்ணிய நோக்கிலான விமரிச அணுகுமுறையில் புரிந்துகொள்ளலாம். இதனை ஒரு சிறந்த இலக்கியத்தரமான சமுதாய விமர்சன நாவலாக சிட்டி. சிவபாதசுந்தரம் போற்றிப் புகழுவதையும் *(பக். 79-84)* நாம் புரிந்து கொள்ளுதல் அவசியம்.

*1920*-க்கு முன்பும் பின்பும் மிகுதியான நாவல்களை எழுதியவர் பண்டிதை விசாலாட்சி அம்மாள். இவர் எழுதி வெளியிட்ட *14* நாவல்கள் நமக்குக் கிடைக்கின்றன. இவை அனைத்தும் துப்பறியும் போக்கில் அமைந்த கதைப்பின்னலை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு

பெற்றவர்களின் நுகர்வை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டவர் இவர். 'லோகோபகாரி' என்ற இதழில் துணை ஆசிரியராகவும் ஹிருதய காரிணி' என்ற இதழ் ஆசிரியராகவும் இருந்தவர். சொந்தமாக நூல்களை வெளியிடும் வசதி பெற்றவர். இவரது நாவல்களைத் தொடர்ந்து 'லோகநாதம் பிரதர்ஸ்' என்பவர்கள் வெளியிட்டுவந்தார்கள். இவர் நாவலின் முகப்புப் பக்கத்தில் தம்மை நாவலாசிரியை என்றே அச்சிட்டுக்கொண்டவர்.

இவரது எழுத்துக்களில் பெண்கல்வி, பெண்கள் சிக்கலுக்கான தீர்வுகள் அனைத்தும் ஆண்நிலைப் பார்வையில் முன் வைக்கப்படுவதைக் காணலாம். பல நிகழ்வுகளைப் பதிவு செய்யும் இவர், அதற்கான நிலைப்பாடுகள் எதுவுமின்றிச் செயல்பட்டுள்ளார். பெண்களுக்கான பல்வேறு மனநிலைகளை அப்படியே வெளிப்படுத்துகிறார்.

இவரது படைப்புகளை நாம் பெண்ணிய விமரிசன நோக்கில் அணுகும்போது, அச்சுச் சாதனத்தில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முயன்ற பெண் என்ற அளவில் அந்தக் காலச் சூழலோடு இணைத்துப் பார்க்கவேண்டிய தேவையுள்ளது. தொடர்புச் சாதனம் சமூகத்தில் ஒரு ஆணைப் போல பெண்ணையும் செயல்பட அனுமதித்த நிலையை நாம் இன்றைய கண்ணோட்டத்தின் செல்வாக்கால், புறம்தள்ளும் அணுகல் சரியாக அமையாது என்றே கூறத் தோன்றுகிறது.

*1920*-க்கு முற்பட்ட காலச்சூழலில் அச்சுச்சாதன செயல்பாடு பெண்களுக்கும் செயல்பட வாய்ப்பளித்திருக்கிறது. ஆண் ஆதிக்கக் கருத்தாடலே முற்றும் முழுதும் செயல்படும் சூழலில், ஒரு புதிய சாதனம் உருவாகும் தருணத்தில், ஆண் கருத்தாடலை மேற்கொண்ட பெண்ணும், தனக்கான கருத்தாடலை வெளிப்படுத்திய பெண்ணும் அமைந்திருக்கும் வரலாற்றை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

**பெண்ணிய நோக்கில் இலக்கிய** வரலாறு உருவாக்கவேண்டிய அவசியம் நம்முன் உள்ளது. அப்பணிக்கு மேற்கூறிய செய்திகள் அடிப்படையில் நாம் செயல்படும்போது, **பெண்ணிய நோக்கிலான இலக்கிய விமரிசனத்தையும்** நாம் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும். அதற்கு அச்சுச்சாதன இலக்கிய உருவாக்க வரலாறு அடிப்படையாக அமையும். அந்தப் பின்புலத்தில் மேலும் தரவுகளைத் தொகுத்துச் செயல்படுவது அவசியம்.

## இணைப்பு

*1920*-க்கு முன் எழுதிய பெண் படைப்பாளர் பட்டியல்

| பெயர் | படைப்பு வெளிவந்த ஆண்டுகள் |
|---|---|
| *1.* கிருபை. சத்தியநாதன் | *1886, 1898* |
| *2.* ஆண்டாள் அம்மாள் | *1911, 1915* |
| *3.* கஜாம்பிகையம்மாள் | *1912, 1912* |
| *4.* தேவகுஞ்சரி அம்மாள் | *1911, 1912, 1917* |
| *5.* பாலம்மாள் | *1915, 1916, 1917, 1918* |
| *6.* மலைமகள் | *1913, 1914* |
| *7.* மீனாட்சி சுந்தராம்பாள் | *1913, 1917* |
| *8.* பண்டிதை விசாலாட்சி அம்மாள் | *1911, 1913, 1922* |
| *9.* கமலாசனி அம்மாள் | *1914* |
| *10.* பிரகாதாம்பாள் | *1916, 1917* |
| *11.* எட்டி செர்வுட் | *1920* |
| *12.* பத்மாசனி அம்மாள் | *1917, 1918* |
| *13.* ருக்மணி அம்மாள் | *1919, 1920* |

### சான்றாதாரங்கள்

இளங்கோவன், மா.ரா., முற்காலத் தமிழ் இதழ்கள் - ஓர் அறிமுகம், சேகர் பதிப்பகம், சென்னை, *1979*.

கிருபை. சத்தியநாதன், சகுணா, இந்திய கிறித்தவ இலக்கியச் சங்கம், சென்னை, *1898*.

சம்பந்தன், மா.சு., அச்சும் பதிப்பும், தமிழர் பதிப்பகம், சென்னை, *1980*.

சுந்தரராஜன், பெ.கோ., சோ. சிவபாதசுந்தரம், தமிழ் நாவல். நூற்றாண்டு வரலாறும், வளர்ச்சியும், கிறித்தவ இலக்கியச் சங்கம், சென்னை, *1977*.

தேவதத்தா (பதிப்பாசிரியர்), இதழ்கள் சித்திரிக்கும் பெண்கள் நிலை, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், சென்னை, *1990*.

பாக்கியமுத்து, தி., (பதிப்பாசிரியர்), நூற்றாண்டு தமிழ் நாவல் தரும் செய்தி, கிறித்தவ இலக்கிய சங்கம், சென்னை, *1979*.

மீனாட்சிசுந்தராம்பாள், ஜெயசீலன், *1912* (பதிப்பகம் இல்லை).

# வ.ரா. அவர்களின் பெண்ணியச் சிந்தனைகள்

கோ.வெ. கீதா

"இந்தியப் பெண்கள் பெருமைபடுத்தப் படவேண்டும். மனிதன் முழு மனிதனாவது பெண்மை போற்றப்படும் போதுதான். லைப் பார்ட்னர் (Life Partner) என்றும், தாய்க்குப்பின் தாரமென்றும் கூறியது சமைப்பதற்காக அல்ல".[1]

"பெண் விடுதலை பற்றிய பொறுப்புத்தான், மனிதர்களின் மேலோட்டமான தன்மையை மாற்றி அவர்களைச் சக்தி படைத்தவர்களாகச் செய்வதாகும். இந்தப் பொறுப்பை, நாம் பெண்களிடமிருந்து பறிமுதல் செய்தது தவறு"[2] என இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே துணிவுடன் பெண்ணினத்திற்காக ஓங்கிக் குரலெழுப்பியவர்; பாரதியால், 'உரை நடைக்கு வ.ரா'. என்றும், அறிஞர் அண்ணாதுரையால், 'அக்கிரகாரத்தில் உதித்த அதிசய மனிதர்', 'சீர்திருத்தச் செம்மல்' என்றும் சிறப்பிக்கப்பட்டவர்.

நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், நாடகாசிரியர், வாழ்க்கை வரலாற்றாசிரியர், உரைநடையாசிரியர், இதழாசிரியர், சிறந்த மொழிபெயர்ப்பாளர் எனப் பல்துறைச் சிறப்புக்களமைந்த வ.ரா. எனும் வ. ராமசாமி ஐயங்கார் தஞ்சை மாவட்டத்திலுள்ள திங்களூரில் 1889-இல் பிறந்து, 1951-இல் சென்னையில் தமது அறுபத்திரண்டாம் வயதில் காலமானார். 20-ஆம் நூற்றாண்டில் பாரதி கவிதை வழியாக நிகழ்த்திய சமுதாயப் புரட்சியை, பாரதியின் தலைமாணக்கரான வ.ரா. உரைநடை வழியாகச் சாதித்துக் காட்டினார்.

பெண் விடுதலைக்காக, சமத்துவத்திற்காக, முன்னேற்றத்திற்காக என்று இன்றைக்கு எழுபதாண்டுகளுக்கு முன்பாகவே தம் எழுத்தால் செயலால் முன் நின்றவர்; போர்க்கொடி உயர்த்தியவர் வ.ரா.

---

1. திரு அ.கி. செயராமன் கட்டுரையாளர்க்கு 7.5.94 அன்று அளித்த நேர்காணல்.

2. வ.ரா. (வ. ராமசாமி), சு. வேங்கட்ராமன் பக். 43-44.

வ.ரா. எழுதி நூலாக வெளிவந்தவை இருபத்து மூன்று படைப்புகள் மற்றும் நூல் வடிவு பெறாத கட்டுரைகள் *10*-உம் சிறுகதைகள் *5*-உம் உள்ளன. பெண்ணியச் சிந்தனை அவரது எழுத்தில் ஓரிழையாக அனைத்திலும் பின்னிப் பிணைந்துள்ள போதிலும், இங்குச் சிறப்பாக அவரது நான்கு நாவல், ஐந்து சிறுகதைகளில் பேசப்படும் பெண்ணியம் மட்டுமே சிறப்பான ஆய்விற்குட்படுத்தப்படுகின்றது. நாவல் - விஜயா, சுந்தரி, கோதைத்தீவு, சின்னச் சாம்பு, சிறுகதை - நர்ஸ் பவானி, குப்பிப்பாட்டி, கமலி விமலி, வண்ணார வீரம்மாள், பெரிய கலேக்டர் சாமி.

**பின்புலம்**

வ.ரா. வாழ்ந்த காலம் விடுதலைக் காலம். நாட்டு விடுதலையுடன் பெண்விடுதலையும் இணைத்தே பேசப்பட்ட காலம். பாரதி, அரவிந்தர், காந்தி போன்றவர்களின் அண்மை வ.ரா.வின் எண்ணங்களைப் பட்டை தீட்டும் பணியைச் செய்தது எனில் மிகையில்லை.

*1914*ஆம் ஆண்டு பங்கிம் சந்திர சட்டர்ஜியின், 'ஜோடி மோதிரம்' என்றே நாவலை மொழிபெயர்த்த வ.ரா.வுக்கு, அக்கதைத் தலைவி, உஹிரண்மயி கல்வி கற்று நாட்டின் அரசனையே வாதத்தில் வென்றது, பெண் கல்வி பற்றிய சிந்தனையை விதைத்தது. "மேலும் சகோதரி சுப்புலட்சுமி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி போன்றவர்களின் சமூகச் சீர்திருத்தம் பெண் விடுதலை முயற்சிகளும் வ.ரா.வுக்குத் தூண்டுதலாக அமைந்தன."[3]

**வ.ரா.வின் பார்வையில் பெண்மை**

பெண்ணைச் 'சனியன்' என்று ஆணுலகம் கூறினாலும் பெண்ணில்லாது உலகம் இல்லை என்பதை வ.ரா. உணர்ந்தவர். அவ்வுணர்வு தமிழ்ப் பெண், பிறப்பு முதல் இறப்பு வரை பெற்றுள்ள தகுதியை அல்லது இச்சமுதாயம் அவளுக்கு அளித்துள்ள இடத்தை எண்ணிப்பார்க்க வைத்துள்ளது.

'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்', என்று கவிமணி பாடினாலும், பெண்ணை விட ஆண்மகன் பிறப்பதையே சமூகம் அன்றும் இன்றும் ஏற்புடையதாக நினைக்கிறது. வ.ரா.வின் காலத்திலும் பெண் பிறந்தால் பெற்றோர்கள் வருந்தினர்; ஆண் பிறந்தால் மகிழ்ந்தனர். இது குறித்து வ.ரா. *1943*-இல் ஆனந்த விகடனில் "பெண் பிறந்தால் அவ்வளவு மனவேதனை. இது பிராமணத் தெருவுக்கு மட்டும் சிறப்பானது என்று நினைக்க வேண்டாம். குடியானவத் தெருவிலும்

3. வ.ரா. (வ. ராமசாமி), சு. வேங்கட்ராமன் பக். *33-34*.

இப்படித்தான். பொட்டை (பெண்) வேணும்னு எந்தக் கோயிலுக்கு மாவிளக்குப் போட்டோம்' என்று குடியானவத் தெருவில் சொல்லுவார்கள். சேரியிலும் (தீண்டாதார் வசிக்குமிடம்) இதே பேச்சை வேறு விதமாகக் கேட்கலாம்" எனச் சுட்டியுள்ளார்.

பெண் அச்சம், அறியாமை காரணமாகத் துன்பப்படுவதை, "இந்நாட்டு அநாதைப் பெண்கள் கூழுக்கு உப்பு வேண்டுமென்று கூக்குரலிடக் கூடிய தைரியம் இல்லாமல் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டிருக்கிறார்கள்" (விஜயம் ப. 98). "பேதைமை என்பது மாதர்க்கு அணிகலன் என்ற முட்டாள் பழமொழிக்குச் சாதகமாகப் பெண்ணும் ஆணை நம்பி ஏமாந்து போகிறாள்" (விஜயம் ப. 124) என வருந்துகிறார்.

அவதூறு, பழி கூறுவது என்பது இராமாயணப் பழமையானது. பெண்கள் இதற்கு மிக எளிதாக ஆட்படுகின்றனர். பெண்களின் இந்நிலையை வ.ரா. உணர்ந்து மிகுந்த இரக்கம் கொண்டுள்ளார். "பெண்கள் தெருவிலே நடந்தால் அவர்கள் காது கேட்கும்படியாகவே அவதூறு பேசுவார்கள். பெண்களின் கர்ப்பத்தைப் பற்றி வம்பு பேசுபவர்கள், 'ஆண் கலப்பில்லாமல் பெண் கர்ப்பமாவதில்லை' என்பதை மறந்து பேசுவதில் எதுவும் அவர்களைப் பாதிப்பதில்லை என்று அதற்குரிய காரணத்தையும் எடுத்துக்காட்டியுள்ளார் (விஜயம். ப. 11).

பெண்கள் சமூகத் தொண்டு செய்தால், அவர்களின் நல்ல நோக்கத்தைத் தவறாக விமர்சிப்பதோடு, எளிதில் பட்டம் கட்டி விடுவார்கள். பெண்ணின் இளமை, அழகு பலருடைய கண்களை உறுத்துவதாக அமைகின்றன என்று பெண்ணின் நிலை கண்டு வருந்துகிறார் வ.ரா.

ஒரு பெண் பிற ஆடவருடன் பேசிப் பழகினால் அவள் மீது வீண்பழி சுமத்தி, அவளது மனநிம்மதியைக் குலைத்து, தற்கொலை செய்து கொள்ள வைக்கும் சமூகத்தை, 'வண்ணார வீரம்மாள்' என்ற சிறுகதை வழி உணர்த்துகிறார்.

வ.ரா.வின் காலத்தில் குழந்தைத் திருமணம் எனும் 'மிட்டாய்க் கல்யாணம்' வழக்கிலிருந்தது. அறியாப் பருவத்திலே மணம் செய்வித்து, வாழ்க்கையின் தொடக்கத்திலேயே உதிர்ந்த மலர்களின் இளம் விதவைகளின் நிலை அவரைப் பெரிதும் பாதித்ததொன்று. "எனக்கு இப்பொழுது கல்யாணம் எதற்காக? எனக்கோ, இப்பொழுது பத்து நிரம்பிப் பதினோராவது வயசு, கல்யாணத்திலே ஆசை என்று யாரிடமாவது முறையிட்டுக் கொண்டேனா?.......... இன்னும் இரண்டொரு வருஷமாகிலும் பொறுத்துச் செய்தால் என்ன?" என்று வாழ்க்கையை நடத்துவதற்கு,

தன் வாழ்க்கையைத் தானாகத் தேர்ந்து கொள்வதற்கு, பெண்ணுக்கு உரிமை மறுக்கப்படுவதை இதன் வழி எடுத்துரைக்கிறார் (விஜயம் ப. 40).

சாரதா சட்டத்தை ஆதரித்து, 'பெண்கள் வயதிற்கு வந்த பிறகே திருமணம் செய்ய வேண்டும் எனும் வ.ரா., இதற்குப் பெண்களே குரல் கொடுக்கவேண்டும் என்பதற்காகத் தன் கதைத்தலைவி விஜயம் வழி குரலெழுப்புகிறார்.

பெண், புகுந்த வீட்டிலும் மாமியார், நாத்தனார் போன்ற அங்கத்தினரின் கொடுமைகளையும் ஏற்க வேண்டியுள்ளது (விஜயம். பக். 56-57, சுந்தரி, ப. 244). கணவனால் வீட்டைவிட்டு வெளியேற்றப்படும் அவலத்திற்கும் பெண்கள் ஆளாகின்றனர் (நர்ஸ் பவானி).

"எனக்கு வயது பன்னிரண்டு. நான் இன்னும் பெரியவள் ஆகவில்லை. எந்த நாட்டிலேனும் இத்தகைய கொடுமை உண்டா? புண்ணிய பூமியான இந்த அபூர்வதேசத்தில்தான் இந்த மாதிரி விபரீதங்கள் நடைபெறுகின்றன. விளையாட்டுக் கல்யாணம் ஆயிற்று என்ற சாக்கை வைத்துக் கொண்டு, கட்டாய விதவைக் கோலம் கொண்ட பன்னிரண்டு வயசுப் பெண்ணுக்கு இனிப் பிற்காலம் முழுவதும் இன்பக்குடும்ப வாழ்க்கை கிடையாது என்று திட்டமான தீர்ப்பு வழங்கப்பெறும் நாடு, நாகரிக மனிதர்வாழும் நாடல்ல, கடும் புலிகள் வாழும் காடு என்றுதான் சொல்ல வேண்டும்....... நேற்றைக்குத் தலை நிறைய மல்லிகை மலரை அணிந்து கொண்டு நறுமணச் சுகத்தை ஆனந்தத்துடன் அனுபவித்த நான் இன்றைக்கு அனுபவிக்கலாகாது என்று தடுக்கப்பட்டிருக்கிறேன்......." (விஜயம் பக். 74-76) என்று ஒரு பெண்ணுள்ளத்தின் ஏக்கத்தை, வேகத்தைப் படம்பிடித்துக் காட்டும் வ.ரா., இக்கைம்பெண்களின் வாழ்க்கையைச் சீர்படுத்த, 'ஒரு மருந்து இதற்கில்லையோ' என்று நெஞ்சுருகும் வ.ரா., 'விதவை பழுதாய்ப் போன சொத்து; அவள் மூலையில் பதுங்கிக் கிடப்பதுதான் உசிதம்; அதுவும் முக்காடிட்டு, மூலையில் இருப்பது இன்னும் விசேஷந்தானே? என்று கனன்றுரைக்கிறார் (விஜயம், பக். 87-88).

"சுமங்கலியைக் கண்டிக்க ஒரு மாமியாரும் மாமனாருந்தான் உண்டு. ஆனால் பால்ய விதவைக்கோ உலகம் முழுதும் மாமியாரும் மாமனாரும்" (விஜயம். ப. 122).

இப்படிப்பட்ட பரிதாபமான, திக்கற்ற இளம் கைம்பெண்களை மேலும் துன்புறுத்தும் சடங்குகளை வ.ரா. காட்டுகிறார். தலைமுடியை மழிப்பது; வெள்ளைச் சேலை கட்டுவது; மஞ்சள், குங்குமம், மலர்கள் மறுக்கப்பட்ட

நிலை; கைம்பெண்கள் எதிரே வருவதோ, காண்பதோ சகுனத் தடையாக நம்பப்பட்ட நிலை; மங்களமான நிகழ்ச்சிகளுக்குக் கைம்பெண்களுக்கு அழைப்புக் கிடையாது போன்ற நாகரிகமற்ற செயலை வன்மையாகக் கண்டிக்கிறார்.

கைம்பெண்கள் என்ற பட்டத்துடன் இருண்ட வாழ்க்கையைப் பெண்களுக்கு அளிக்கிறது இச்சமூகம். ஆனால் அறுபது வயதிலும் நெஞ்சு துணிந்து நான்காம் திருமணம் செய்து கொள்ள விரும்பும் ஆண்களை இச்சமூகம் ஆதரிக்கிறது. *(விஜயம், ப.34)* என ஒருபாற்சார்பை, அநீதியைக் கண்டிக்கிறார் வ.ரா.

விதவையான பெண் ஆதரிப்பாரின்றி, சொத்துமின்றி, முதுமையிலே, தனிமையிலே வெம்பிக் கழிவதைச் சானுப்பாட்டி *(விஜயம்)*, 'குப்பிப்பாட்டி' *(சிறுகதை)* வழியாகக் காட்டி வாழ்க்கை முழுவதும் பெண், ஆணாதிக்கச் சமூகத்தால் துன்பப்படுவதை எடுத்துரைக்கிறார்.

பெண்ணிற்குக் கல்வி, உரிமை மறுக்கப்பட்ட நிலையில் வேலைக்குச் செல்லும் பெண்களைக் குறித்து நல்லெண்ணம் எங்ஙனம் எழும்? என்பதும் அவர் வினா. "தனியாக ஜீவனோபாயம் தேடும் மருத்துவச்சிகளும் வாத்தியார் அம்மாக்களும் கெட்டுப் போகிறார்கள் என்ற அபகீர்த்தி உலகத்தில் பரவியிருப்பது உனக்குத் தெரியாதா?" *(விஜயம், ப. 113)* என வினவுதலில் பெண்ணின் ஒவ்வொரு நிலையையும் அவர் ஊன்றிக் கவனித்து ஆழமாகச் சிந்தித்துள்ளதை உணரலாம்.

**பெண்ணடிமை நிலைக்கான காரணங்கள்**

"பெண்கள் தங்களுடைய அடிப்படை உரிமைகளை இழந்ததாலேயே மேம்பாடு அடைய முடியவில்லை", *(விஜயம் ப. 163)* சொத்துரிமை, பதவி உயர்வு, கௌரவம் முதலிய பக்க பலங்களில்லாத அடிமைப் பெண்களின் மனத்தை ஆண் பிள்ளைகள் எளிதில் கலக்கிக்குழம்பச் செய்து விடுகிறார்கள்" *(விஜயம், ப. 55)* என்று வ.ரா. கருதினார். இனி, இவற்றை விரிவாகக் காணலாம்.

1. **ஆணாதிக்கம்** பெண்ணடிமைத்தனத்தை நிலைக்கச் செய்வது ஆணாதிக்கம் என்பது அவரது ஆணித்தரமான எண்ணம். "எல்லா நிலைமைகளுக்கும் எல்லா மனிதர்களுக்கும் பொதுவாக க்ஷேமத்தை நாடாத மைல் கல்லைப் போல அசையாமல் ஆடாமல் நிற்கும் சட்டத்தை மாற்ற வகை அறியாமல், மாற்றத் தைரியம் இராமற் போய், நமது நாட்டிலே கோழைத்தனமும் கள்ள மனப்பான்மையும் ஆபாசத் தீச் செயல்களும் மலிந்து நிற்கின்றன" *(விஜயம், ப. 128)* என்று ஆணாதிக்கம் விளைவித்த

அடிமைத்தனம் சமுதாயத்தில் மட்டுமின்றி அரசியல் சட்டத்தாலும் வலியுறுத்தப்பட்டுள்ளதைக் காட்டுகிறார்.

பெண்கள் வாழையைப் போன்று தியாக உணர்வு கொண்டவர்கள். இதை உணராத ஆண்களை வரா. கடுமையாகச் சாடுகிறார். "ஆண்கள் பெண்களை அதட்டி, உருட்டி, திட்டி, அடித்து அதிகாரம் செலுத்துகிறார்கள். எச்சிலுக்குக் காத்துக் கொண்டிருக்கும் நாய்களில் கூட உடன்பங்குக்குப் பெண் நாய் வரின், ஆண் நாய் சிலசமயம் கடித்துத் தொந்தரவு செய்வதில்லை. நாய் இனத்திலே கூட பெண்ணுக்குச் சிறிது மதிப்பு இருக்கிறது. . . . . பகுத்தறிவுள்ள மனித வர்க்கத்தில்?" *(விஜயம், ப. 236)* என்பது அவரது சிந்திக்கத் தூண்டும் வினா.

'பெரிய கலேட்டர் சாமி' யெனும் சிறுகதை முதல் மனைவியிருக்க, கணவன் வேறொருத்தியை மணந்து கொள்ளும் ஆணாதிக்கத்தின் அவலத்தையும், 'கமலி, விமலி' எனும் சிறுகதை ஆண் என்பதாலேயே ஆணவத்தோடு செயல்படும் கணவனையும் காட்டுகின்றன.

**2. சம உரிமையின்மை** விடுதலையென்பதைப் பற்றிய சரியான அறிவுத் தெளிவு மனிதர்களுக்கு வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்பிய வ.ரா. "சுதந்திரம் என்பதை மனம்போன போக்கு என்றும், அது கட்டுப்பாட்டுக்கு அடங்காத ஒரு விநோத நிலை என்றும் அவர்கள் அர்த்தம் செய்து கொள்ளுகிறார்களோ என்னவோ? *(விஜயம், ப. 230)* எனக் கேட்டு இவ்வெண்ணமே அடிமைத்தனத்திற்கு வித்திடுவதாக வாதிடுகிறார்.

அடிமைத்தனம் பெண்களின் திருமணத்திலும் தலை நீட்டுகிறது. மணமகனைப் பார்க்கவோ, உரிய வயதில் மணம் புரிந்து கொள்ளவோ பெண்ணிற்கு உரிமை மறுக்கப்படுவதை வ.ரா. உணர்த்துகிறார்.

"எனக்கு வரப்போகும் புருஷனை நான் பார்த்ததேயில்லை 'சிறு குழந்தைகள் புருஷனைப் பார்த்துவிட்டுக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை' என்றார் என் தாத்தா. பார்க்கவேண்டிய தேவை இல்லையானால், சிறு குழந்தைகளுக்குக் கல்யாணத் தேவை மட்டும், எவ்வாறு ஏற்பட்டது?" என்று அவரைக் கேட்டேன் *(விஜயம், ப. 39).*

"சாவித்திரிக்கு என்ன தெரியும்? அவள் சிறிய குழந்தை. கல்யாணமென்றால் மணையில் உட்காரப் பாத்தியம் அவளுக்கு உண்டு. கொடுத்த நகைகளைப் போட்டுக் கொள்ளலாம். கொடுக்காத நகைகளைப் பற்றிப் பேசக் கூடாது. பட்டுப்புடவைகள் கட்டிக் கொள்ளலாம். புருஷன் கறுப்போ சிவப்போ என்று தெரியுமோ அவளுக்கு," *(சுந்தரி, ப. 117)* எனத் தம் கதை மாந்தர் வழி வ.ரா. அறிவிப்பது, அதுவும் பெண் கூற்றாக

அமைப்பது, அதனைப் படிக்கும் மகளிர் கடுகளவேனும் இதனைப் பற்றிச் சிந்திக் வேண்டும் என்ற உணர்வோடுதான் எனத் துணியலாம்.

3. **கல்வியின்மை** அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று கூறிப் பெண்ணிற்குக் கல்வி மறுக்கப்பட்டது. பெண் கல்வியறிவு இல்லாததும் அவளின் அடிமைத்தளைக்குரிய முதன்மைக் காரணிகளில் ஒன்றாகும்.

வ.ரா. பெண்கல்வி மறுக்கப்பட்டதைத் தம் நாவல்களில் காட்டுகிறார். "எவ்வளவோ மன்றாடிக் கேட்டுப் பார்த்தும், பெண்களுக்கு இங்கிலீஷ் சொல்லிக் கொடுக்க முடியாது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டார், தன் ஆசிரியர்" என்கிறாள், விஜயம்; அவளுக்கு வெளியூர் படிப்பும் மறுக்கப்படுகிறது *(விஜயம் பக். 24, 28).*

இளம் விதவையான விஜயம் *(12* வயது*)* பெண் ஆசிரியையாகவோ, மருத்துவராகவோ பயிற்சி பெறுவது நல்லது என்று நண்பர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கிறார். அதற்கு விஜயத்தின் தாத்தா, "புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா? யானை படுத்தாலும் குதிரை மட்டத்துக்குக் குறையுமா? இந்த யோசனை தம் குடும்ப கௌரவத்திற்கு இழுக்கு" என்கிறார் (விஜயம், ப. *112).*

பெண்கள் கல்வி கற்கத் தேவையில்லை, காரணம் அவர்கள் எந்த வேலைக்கும் தகுதியற்றவர்கள் என்று நினைக்கும் ஆணுலகை, 'பெண் பிள்ளைகளுக்கு நகைகள் வேண்டும், நல்ல சேலைகள் வேண்டும், சமையல் தெரிய வேண்டும் மற்றபடி வேறொன்றும் வேண்டியதில்லை" *(சுந்தரி, ப. 97)* என ஆண்குரல் வழியாகவே காட்டுகிறார்.

"படிப்புச் சொல்லித் தருவதே பிசகு; அதுவும் வயது வந்த, வரப்போகிற பெண்ணிற்கு வேறு சாதியைச் சேர்ந்தவன் சொல்லித் தருவது தவறு" *(சின்னச்சாம்பு, ப. 113)* என்பதில் பெண்கல்வி மறுப்பு மட்டுமின்றி இனப்பாகுபாட்டின் ஆழமும் அறியப்படுகிறது.

4. **பொருளாதாரத் துணையின்மை** பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும். பொருளாதார நிலையில் பெண் உரிமையற்றிருப்பது அவள் அடிமை நிலைக்கொரு காரணமாகும். எனவேதான் வ.ரா., சின்னச் சாம்புவில் "நம்ம அப்பா சம்பாதித்து மிச்சப்படுத்துகிற சொத்து எல்லாம் எனக்குத்தான் கிடைக்கும்; உனக்குக் கிடைக்காது. நீயும் அவருக்கு அருமைக்குழந்தை இல்லையோ", என்று சூரி கேட்க, சீதா, "நம்ம அப்பாவை மாத்திரம் ஏன் சொல்றே? எல்லா அப்பாவும் இந்த விஷயத்தில் ஓரவஞ்சனைக்காரர்கள் மாதிரிதான் நடந்து கொள்ளுகிறார்கள்;

எங்களுக்கெல்லாம் சொத்துக் கொடுத்தால் அது கசக்குமோன்னோ"! என்கிறாள் *(ப.60).*

படைப்பில் பெண் ஆணுக்கு உறுதுணையாக, உற்ற தோழியாகப் படைக்கப்பட்டதாகவே விவிலியம் கூறுகிறது. ஆனால் நடைமுறையில் உரிமை மறுக்கப்படவே, இச்சமூகம் பெண்ணிற்கு அடிமை வாழ்வை, அவல வாழ்வைத் தருகிறது.

"வெளியிலே கைகட்டிப் பிழைக்கிறான். வீட்டிலே வந்தால், பெண்டாட்டியை அடித்துத் தொல்லை பண்ணுகிறான். தன் செலவுக்குப் பணம் இல்லாவிடின், கடுவன் பூனையைப் போலச் சீறிப் பாய்ந்து நம்முடைய தாலியைக் கூட அடகு வைக்கத் துணிகிறான். நம் கைக் காப்புத்தோல் உரிந்து போய்ப் பழுது பார்க்க வேண்டுமென்றால்..... உன் அப்பன் வீட்டாரைப் பழுதுபார்க்கச் சொல்........ அவனுக்கு ஒரு நியாயம்; நமக்கு ஒரு நியாயம்; மகா அநியாயம்" *(விஜயம், ப.48)* எனப் பொங்குகிறார் வ.ரா.

5. **ஆண் மனநிலை** சின்னச்சாம்புவில் அவன் தாய் பரம்பரையாகப் படித்து வரும் வடமொழிக்குப் பதிலாக சாம்பு ஆங்கிலம் படிக்கட்டும் என்று கூற, சாம்புவின் தந்தை, மனைவிக்கு, தாய்க்கு மகனின் கல்வியைப் பற்றி முடிவெடுக்கும் உரிமையை மறுத்து 'இனி எனக்கு இந்த வீட்டில் இருப்புக் கொள்ளாது. சகல காரியங்களையும் நீதான் நிர்வகித்துப் பார்க்கிறாய் என்ற அகம்பாவம் உனக்கு வந்து விட்டது", *(சின்னச்சாம்பு, ப.20)* என்று முதல் முறையாகத் தன் மனைவி, தன் விருப்பத்தைத் தெரிவித்தவுடன் பிணங்குவதைச் சுட்டி, வ.ரா. வேதம் கற்ற போதிலும் ஆணின் மனோநிலையில் மாற்றமில்லையென்பதை உணர்த்துகிறார்.

மேலும் ஆணுக்கு உலகை அனுபவிக்க எவ்வளவு ஆசையுண்டோ அவ்வளவு பெண்களுக்கும் உண்டு என்பதுதான் உண்மை.

'பெண் அடிமையாகப் பாவிக்கப்படலாகாது என்றால் பெண்ணை ராணியாகப் பாவிக்கவேண்டுமோ என்று கிண்டலாக இடைக் குத்துவார்கள். தற்போதைய வாழ்வு நியாயத்தை இயற்கையைத் தழுவியதல்ல என்றால் பெண் புத்தியைக் கேட்டு நாங்கள் வாழ வேண்டியதில்லை என்று ரத்தத் திமிர் கொண்ட இளைஞர்கள் பதில் சொல்லுவர்கள், *(விஜயம், ப. 137)* என வளரும் சமுதாயமும் புரிந்து கொள்ளாமையை, ஏக்கத்துடன் புலப்படுத்துகிறார். இதன்வழி இவர்கள் மனம் முதலில் மாறும் பொழுதுதான் உண்மையில் விடுதலை பெண்களுக்குக் கிடைக்கும் என்பதை வாசகர் உணர வழிகாட்டுகிறார்.

இவ்வாறு பெண்ணடிமைத் தனத்திற்கான காரணிகளாக வ.ரா. ஆண், பெண்ணை மதிக்காமை, கல்வியின்மை, சொத்துரிமையின்மை,

உரிமையின்மை, போன்ற பல இன்மைகளே பெண்ணைச் சிறைப்படுத்தி வைத்துள்ளன என்று உணர்த்துகிறார்.

**பெண்ணுரிமைச் சிக்கல்களும் தீர்வுகளும்**

பெண்ணுரிமையை, மேன்மையைத் தடைசெய்யும் கூறுகளை, செயல்பாடுகளை, நிகழ்வுகளைச் சிக்கல்களாகப் பேசும் வ.ரா. அவற்றை நீக்குவதற்குரிய வழிமுறைகளையும் இயம்பியுள்ளார். அவற்றை இவண் வரிசைப்படுத்தலாம்.

*1.* ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் வாழ்க்கை இன்று வரதட்சணை முறையால் விலைபேசும் கேவலமான நிலையில் இருப்பதை, 'சட்டத்தில் தர்ம சாஸ்திரத்தில் வரதட்சணை கிடையாது. ஆனால் அது சம்பிரதாயத்தில் வந்துவிட்டது', *(விஜயம், ப. 28)* எனக் குறிப்பிட்டு, "கல்யாணம் சந்தையிலே ஆடுமாடு விலைக்கு வாங்குவது போலாய்விட்டது", *(சுந்தரி, ப. 123)* என்று வருந்துகிறார்.

'கல்யாணம் எதற்காக' என்ற சிறுகதை தந்தையால் மகனை மேல் படிப்பு படிக்கவைக்கவியலாத போது, அவர் மகனுக்குத் தரும் நல் ஆலோசனை, 'திருமணம் செய்து கொள்' என்பது. இங்கு அவனைப் படிக்க வைப்பது பெண்வீட்டாரின் கடமையாகிறது.

திருமணத்தில் வரதட்சணை வாங்குவதைத் துணிவோடும், சினத்தோடும் எதிர்க்கிறார் வ.ரா., அங்கதமாக அவற்றை வெளிப் படுத்துகிறார்.

"மாப்பிள்ளைக்கு என்ன பரிசம்? என்ன விலை கொடுத்து வாங்குகிறீர்கள்?

அப்பொழுதே சொன்னேனே, மாமனார் கோமுட்டி என்று, நாலாயிரம் ரூபாயில் ஒரு பைசாக் கூடக் குறைக்க மாட்டேன் என்று சொல்லி விட்டார்.

நாலாயிரம் ரூபாய்க்கு - மாப்பிள்ளை எட்டடி உயரம் இருப்பானோ! பதினாறு கைகள் இருக்குமோ!" *(சுந்தரி, ப. 121).*

இந்த அநாகரிகப் பழக்கம் ஒழிய வேண்டுமானால் ஆணும் பெண்ணும் கலந்து பேசி, ஒருவரையொருவர் புரிந்து கொண்டு எளிய முறையில் திருமணத்தை நடத்த வேண்டும் என்பதைச் சூரி, நாகம்மாள் பதிவுத் திருமணம் வழி அறிவுறுத்துகிறார். *(சின்னச்சாம்பு)* விஜயம் வாய்மொழியாக, கடன்வாங்கி ஆடம்பரமாக நடத்தப்படும் திருமணத்தின் தீமைகளை எடுத்துச் சொல்கிறார்.

*2.* **கைம்மை** வ.ரா. காலத்தில் மிகுதியாகக் குழந்தைத் திருமணம் நிகழ்ந்ததால் இளம் விதவைகளும் அதிகமிருந்தனர். இக்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டோருக்குக் கல்வி, சொத்துரிமை, வாழ்க்கை எதுவுமே இல்லை என்ற சமுதாயத்தில் இவர்களுக்கு வாழ்வு வேண்டும், இவர்கள் வாழ வேண்டும் என்பதற்கு வரா. உரக்கக் குரல் கொடுக்கிறார்.

விதவைகளுக்கு வாழ்வளிக்க மறுமணம்தான் சிறந்தவழி. கணவனையிழந்தால் கைம்பெண்; மனைவியை இழந்தால் புதுமாப்பிள்ளை; ஆணிற்கொரு நீதி பெண்ணிற்கொரு நீதியா? என வெகுளும் வ.ரா. "பலதாரங்களை அடுத்தடுத்து பொறுப்பும் கவலையுமின்றி மணக்கத் துணியும் ஆண்பிள்ளை, தோழமை இழந்த விதவைகளின் விபசாரத்தைக் கண்டிக்க எவ்வாறு உரிமை பெறுகிறான்? ஏக பத்தினி விரதம் பூண்டு மணப்பது தான், சத்தியத்துக்கும் பொருந்தியதாயின், ஆண் மறுதாரம் மணக்க எண்ணுவது, கல்யாணச் சாக்கை வைத்துக்கொண்டு, விபசாரம் செய்வது போலத்தானே!" *(விஜயம், ப. 70).*

"பெண்களுக்கு மறுமணம் கூடாது என்று ஸ்மிருதி விதித்திருக்கிறது என்பது உண்மை. ஆனால் மறுமணம் வேண்டுமென்று இயற்கை தூண்டுகிறது. சட்டம் இயற்கைக்கு இணையான எதிரியல்ல. சட்டத்தைப் பொடிப் பொடியாக்கும் சக்தி, இயற்கைக்குத்தான் உண்டு" *(விஜயம், பக். 120-121)* என மிகத் துணிவுடன் பேசுகிறார்.

ஆகவே இயற்கைக்கு எதிரானது விதவைக்கு மறுமண உரிமையை மறுப்பது என்று தெளிவுபடுத்துகிறார். இவ் உரிமை மறுக்கப்படுவதால் தான் உரிமை மீறல்கள் நிகழ்கின்றன. விளைவு விதவையின் குழந்தைகள் அவளுக்கும், உலகிற்கும் சிக்கலாகின்றன.

பாலுணர்வைக் கட்டுப்படுத்த முடியாத இளம் விதவைகள் ஈன்றெடுக்கும் குழந்தைகளுக்கு இந்த உலகில் இடமில்லை. எனவே தாய்களே தங்களது மழலையைக் கொன்றார்கள். குளங்களிலே, ஆறுகளிலே, அநாதைக் குழந்தைகளின் சவங்கள் அதிகமாகக் காணப்பட்டதற்குக் காரணம் இதுவே என்று நடுநின்று, சூழலறிந்து குற்றத்திற்கான காரணத்தைப் பொறுப்புணர்வுடன் ஆராய்கிறார் வ.ரா.

எனவேதான் வ.ரா. வின் கோதைத் தீவில் விதவைக்குழவி மட்டுமல்ல, குழந்தைகளைப் பெற்ற பின்பு விதவையாகும் மகளிரும் மறுமண உரிமை பெறுகின்றனர்.

*3.* **பாலியல் வன்முறை** வரலாறு அறியப்படா காலம் முதல் இன்றுவரை பெண்களை இழிவுபடுத்தும் பாலியல் வன்முறை குறித்து வ.ரா. பேசியுள்ளார். பாரதியின் வழி வரா. கற்பு இருபாலர்க்கும் பொதுவானது

என்பதை வலியுறுத்துவதுடன், ஆண் கற்போடு இருந்தால்தான் பெண் கற்போடு இருக்க முடியும் என்ற நடப்பியல் உண்மையையும் நினைவூட்டுகிறார்.

'கற்பை அவமதித்து, குதிகாலால் மிதித்து நசுக்கிவிட்ட ஆண்பிள்ளை, பெண்ணிடம் கற்பை வேண்டுகிறான்; பெண்களுக்குக் கற்பைப் பற்றிய நடிப்பு உபதேசம் செய்கிறான். தன் மனைவி கற்புடன் இருக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்தும் ஒருவன் பிறர் இல்லத்தில் புகலாமா? தன் மனைவிக்குத்தான் கற்பு அமுதமோ? வேற்றான் மனைவிக்குக் கற்பு விஷமா? பொறுப்பாளிகள் முதலில் கெட்டுப் போனாலொழிய ஏனையவர்கள் கெட்டுப்போக, அவர்களுக்கு ஒருநாளும் துணிவு கொடுக்காது' என்பது *(விஜயம், ப. 68)* அவரின் ஆழமான கருத்து.

*4.* **பொது மகளிர்** "பெண்கள் எவ்வளவு மட்டமாக ஹிந்து சமூகத்தில் கருதப்படுகின்றனர் என்பதை விலைமாதர் சமூகம் ஒன்று, ஆகம சாஸ்திர மூலமாய்த் தோன்றி நிலைத்திருப்பது சாட்சியாகும். எத்தகைய இழிவான நிலையிலும் பெண்களை வைத்து நடத்தலாம் என்பதற்கு தாசி ஸ்தாபனத்தைக் காட்டிலும் வேறு எதுவும் வேண்டுமா?" *(விஜயம், ப. 173)* என வேதனையுடன் வினவுகிறார் வ.ரா.

பொது மகளிடம் செல்லும் கணவனைத் திருத்த துணிந்த அவன் மனைவி, ஒரு நாள் தன்னை நன்கு ஒப்பனை செய்து கொண்டுப் புறப்பட, எங்கே போகிறாய்?' என்று கேட்கும் கணவனிடம், தானும் ஒரு குறிப்பிட்ட ஆணைப் பார்க்கச் செல்வதாகச் சொல்கிறாள். போகக்கூடாது என்று சொல்லும்போது மனைவியும் அவன் தாசி வீட்டிற்குப் போகக்கூடாது என்பதைக் கூற, அவன் திருந்துகிறான் என வ.ரா. ஓர் கதையமைத் துள்ளார். இக்கதை ஆணின் தவறான நடத்தையை அப்படியே ஏற்றுக்கொள்ளாது பெண் துணிந்து எதிர்க்க வேண்டும்; ஆணிற்குத் தன் தவறுபுரியும் வண்ணம் எடுத்துரைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தான் அமைகிறது எனக் கொள்ள வேண்டுமே அல்லாமல் பெண்களையும் தவறான பாதைக்கு வழி நடத்திச் செல்கிறார் என்பது பொருந்தாது. பெண்ணினத்தின் மீதுள்ள உயர்ந்த பற்றும் ஆணாதிக்கத்தின் மீதான ஆழ்ந்த வெறுப்பும் வ.ரா.வை இங்ஙனம் பேசத் தூண்டியது எனலாம்.

*5.* **சம உரிமை** காலத்திற்கேற்ப பல செயல்கள், எண்ணங்கள் மாறிய வண்ணம் உள்ளன. பெண்ணியமும் இதற்கு விலக்கல்ல என்ற உண்மையை வ.ரா. தம் கருத்துக்கள் வழி தெளிவாக்குவதுடன் ஆணினத்தின் சிந்தனையில் மாற்றம் தேவை என்பதைப் புரிய வைக்கிறார். "பெண்கள் ஆண்களோடு சரிசமானமாக வாழ்வதற்கான முயற்சிகளில்

ஈடுபடவேண்டுமென்பது எனது சங்கற்பம்" *(சின்னச்சாம்பு. 105)* என்று தன் கதைத்தலைவனின் வாயிலாக இளைஞர்களுக்குச் சொல்கிறார்.

பெண்களும் தங்கள் பங்கையாற்ற வேண்டிய காலம் வந்து விட்டது என்பது வ.ரா. வின் எண்ணம். "காலம் மீறிய சட்டத்தைப் பத்திரமான ஓர் இடத்தில் வைத்து வேண்டுமானால் சரஸ்வதி பூஜை செய்யலாம். அதற்குமேல் அதற்குப் பிரயோஜனம் கிடையாது" *(விஜயம், ப. 128).* "வீரமான செயல்களைச் சில பெண்களேனும் கட்டுப்பாடாகச் செய்தால் மற்றவர்களுக்கு அறிவு விளக்கம் தோன்றும்" *(விஜயம், ப. 133)* என்று பெண்களை ஆற்றுப்படுத்துகிறார்.

"தனக்காக எதுவும் பாவமில்லை, பிறர் பார்த்தால் பாவம் என்ற நிலைமைக்கு நம் ஆண்களின் மனச்சாட்சி வந்துவிட்டது....... பழைய ஏற்பாட்டை மாற்றினால் என்ன விபரீதம் விளையுமோ என்று மனம் கலங்குவார்கள். இது எதன் பயன்! யோசனைக் குறைவின், பலவீனத்தின் பயனாகும். இந்த யோசனைக் குறைவும் பலவீனமும், அர்த்தமில்லாமல் சம்பிரதாயத்தை அநுஷ்டிப்பதன் பயன்கள் என்பதை இவர்கள் தெரிந்து கொள்ளவில்லை'' *(விஜயம், பக். 133-134)* என்று தன் இனத்தின் அறியாமைக்காக வருந்துகிறார் வ.ரா.

"காலப்போக்கில் நடை, உடை, பாவனை மாறும் என்பதை எல்லோரும் உணரவேண்டும். எனவே மாறுதலைக் கண்டு அஞ்சுவோர்கள் கோழைகள்" *(விஜயம், ப. 148)* என்று, நல்ல மாறுதல் வரும் என்று, நம்பிக்கையுடன் மொழிகிறார்.

ஆண்கள் மாற வேண்டியதன் கட்டாயத்தை மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டும் முறையில், "பெண்களைப் பற்றியும் ஆண்பிள்ளைகள் தங்கள் பரம்பரை மனப்பான்மையை மாற்றிக் கொள்ள வேண்டும்; இல்லாவிடின், எதிர்காலம் சமுதாய வாழ்வு ரஸப்படாது........ மேலே வெள்ளம் வந்து கொண்டிருக்கையில், அதைத் தடுத்தால் அணை படீர் என்று உடைந்து போகும். பழைய மனப்பான்மைக்கு ஏற்ப அமைக்கப்பட்ட ஒரு ஸ்தாபனம் நாட்டில் எழுந்திருக்கும் புதிய புதிய மனப்பான்மையை அலட்சியமாய்க் கருதி, அதற்குத் தடையுண்டாக்கினால் அந்த ஸ்தாபனம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும் *(விஜயம், ப. 149)* என்று மாற்றம் இன்றியமையாதது, இயற்கையானது என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளும்படிக் கூறி, "பணபலம், உடல் பலம், அதிகாரபலம், பரம்பரை பலம் கொண்ட ஆணுக்கு, 'பலவீனப்' பெண், புத்தி சொல்ல முடியுமா என்று பலர் கேட்கலாம். புத்தி சொல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதைப் பலரும் உணரவேண்டும் *(விஜயம், ப. 144)* என்று ஐயமில்லாது தன் எண்ணத்தை வலியுறுத்துகிறார் வ.ரா.

**வெளியீட்டு உத்திகள்**

வ.ரா. தன் பெண்ணியச் சிந்தனைகளை வலியுறுத்தப் பல உத்திகளைக் கையாண்டுள்ளார்.

**புராண, இலக்கியப் படைப்புகளை மறுபரிசீலனை செய்தல்**

ராமன் வண்ணான் பேச்சைக் கேட்டுச் சீதையைக் காட்டுக்கு அனுப்பினதை, எதையோ எண்ணிக் கொண்டு வால்மீகி ராமாயணத்தில் எழுதிவிட்டார். ராமனை நல்ல அரசனாக்க எண்ணி, மனிதனுடைய சாதாரண அன்பு அவனிடம் இல்லாமல் அடித்து விட்டார் வால்மீகி. கர்ப்ப சமயத்தில் சீதையைக் காட்டுக்கனுப்புதல் அவளுக்குச் சாவை உண்டாக்கவும் கூடும் என்று ராமன் எண்ணினதில்லை போலும்! பிறர் வம்புப் பேச்சு, சிறிய மனிதர்களின் சோதனைக் கருவி. ராமன் இதைக் கைக் கொண்டு, ஸ்திரீக்கு உயிர்த்தோழன் என்று காட்டிக் கொள்ளத் தவறினான் என்று இராமனின் நடத்தை எவ்வளவு தவறானது என்பதைப் புலப்படுத்துகிறார். ஆணையும் பெண்ணையும் சிந்திக்கத் தூண்டுகிறார்.

அகலிகை தன்வாழ்வு கௌதமர் சாபத்தால் பாழாய்ப் போனதாகக் கூற, கௌதமர் தான் நிரபராதி என வாதிடுவதாகக் கோதைத்தீவில் காட்டி, புதிய விளக்கம் தரும் உரையாடல்களாக அமைத்து, அந்த வழக்கில் கௌதமன் குற்றவாளி எனக் கருதி விசாரித்ததே போதுமான தண்டனை எனக் கூறுகிறார்.

சத்தியவான், சாவித்திரி வ.ரா. விற்குப் பிடித்ததொரு கதை போலும். பல இடங்களில் இக்கதையைப் பற்றிய குறிப்புகள் பெண்ணிய நோக்கில் சுட்டப்படுகின்றன. அவற்றுள், உடன்கட்டை ஏறும் கொடும் வழக்கத்தைக் கண்டித்து சத்தியவான் சாவித்திரியின் வாழ்க்கை வழி பெண் உயர்ந்தவள் என்று, 'கோதைத் தீவில்' நிலைநாட்டுவது குறிப்பிடத்தக்கது.

கணவன் உயிரை மீட்பதற்காகக் காலனை எதிர்த்து உரையாடும் சாவித்திரியின் கூற்றாக, "நீ உடன்கட்டை ஏறியிருக்கலாமே என்று குத்தலாகக் கேட்டான். 'செய்திருக்கலாம்; செய்திருந்தால் காதல் பெரிது என்பது ருசுவாயிருக்கும். அத்தோடு கூட காதலைக் காட்டிலும் காலன் பெரியவன் என்பதும் ருசுவாயிருக்கும். அதனாலேதான் நான் உடன்கட்டை ஏறவில்லை" என்று மொழிகிறாள். இங்கு உடன்கட்டை ஏறுதல் சமத்துவத்திற்கு எதிராகவும், பெண்ணின் ஆளுமையைச் சிதைப்பதாகவும் அமைதலை உணர்த்துகிறார். நளாயினி போன்று எந்த ஆணாவது தன் கற்புடைய மனைவிக்காகத் துன்பப்பட்டான் என்று எங்கேனும் சொல்லக் கேட்டிருக்கிறோமா? *(விஜயம், ப. 68)* என்பது அவர் கேள்வி.

சிதம்பர ரகசியம் கூட, நடராசர் காளியைத் தனக்குச் சமமாக ஏற்றுக் கொண்ட உண்மையை விளக்குகிறதேயல்லாமல், பெண் ஆணிடம் தோற்ற கதையைக் கூறவில்லை *(விஜயம், பக் 152-156)* எனப் புதுக்குகிறார் வ.ரா.

**இலக்கியம்** ஆண்டாள் - கண்ணகி சந்திப்பைத் தம் கற்பனையில் காண்கிறார் வ.ரா. ஆண்டாள் மணம் செய்து கொள்ளாமல் இருப்பதற்குக் கண்ணகி காரணம் கேட்கும் போது, அக்காள் கண்ணகியின் வாழ்க்கையைப் பார்த்து, தங்கை ஆண்டாள் புத்தி கற்றுக் கொண்டாள்' என்கிறார்.

"உங்கள் வாழ்க்கையை ஆதிமுதல் அந்தம் வரையில் உன்னிப்பாகக் கவனித்துப் பார்க்கும் மானமும் ரோஷமுமுள்ள தமிழ்ப் பெண் கலியாணத்தைப் பெருமையாக நினைக்கலாமா? நினைப்பாளா? ஆண்பிள்ளையை மணந்து அலமலந்து கண்ணீர் வடிப்பதைக் காட்டிலும், அமரர்பிரான் அடிசேருவதே உத்தமம் என்று எண்ண வேண்டமா", என்று ஆண்டாள் பதிலளிக்கிறாள்.

மேலும், கோவலன், மனையறம் படுத்த காதையில் கண்ணகியைக் கொஞ்சியதையும் பின்பு பிரிந்ததையும் வன்மையாக ஆண்டாள் கண்டிக்கிறாள். "கொஞ்சுவது, பின்னர் கைவிடுவது, கைவிட்டபின்னர், இரக்கமின்றி, பெண்பேரில் பழி சுமத்துவதும் ஆண் பிள்ளைகளின் இயல்பு" என்கிறாள். தீவிரப் பெண்ணியவாதியாக வ.ரா. இவண் தோற்றமளிக்கிறார்.

இதுபோன்றே மாதவியும் - தமயந்தியும் சந்திக்கின்றனர். நளன் தன்னுடைய அரச கடமையிலிருந்தும், கணவன் என்ற நிலையிலிருந்தும் தவறி, பொறுப்பற்றவனாகத் தமயந்தியைப் பிரிந்து சென்றதை வன்மையாகக் கண்டிக்கிறார் வ.ரா. மாதவி, கோவலன் வேறொரு பெண்ணை நினைந்து கானல் வரி பாடியபோது தானும் பிறிதொரு ஆணை நினைத்தது போல் விளையாட்டாகப் பாட, சம உரிமையற்ற நிலையில் கோவலன் பிரிந்து போனது இன்று வரை தனக்கு விளங்கவில்லை என்கிறாள். பெண்ணடிமைத்தனம் வேரூன்றியதற்குப் புராணங்களும் அதனை அடியொற்றிய இலக்கியங்களும் ஓர் காரணம் என்பதை நன்கு உணர்ந்ததாலேயே வ.ரா., அவற்றையே தம் கருத்து விளக்கத்திற்குப் பயன்படுத்தி வலியூட்டுகிறார் எனக் கருதலாம்.

ஒப்பீட்டு முறையில், வரலாற்று மாந்தர்கள் வழி வ.ரா. தம் சிந்தனையை வெளிப்படுத்துகிறார். உரையாடல் வழி வினா விடையாகவும் தெளிவாக்குகிறார்.

ஒப்பீட்டு முறை பெண்கள் இந்தியாவிலும் மேல் நாட்டிலும் எவ்வாறு நடத்தப்பட்டனர் என்று காட்டி நம் நாட்டுப் பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துகிறார்.

பெண்ணின் திருமண வயது *16, 17* ஆக மேல்நாட்டிலிருந்தது. திருமணத்திற்கு முன்பு, ஒருவரையொருவர் சந்தித்துப் பழகினர். இருவரில் ஒருவர்க்கு விருப்பமில்லையென்றாலும் விடுபடலாம்.

மேலும், "வெள்ளைக்காரர்கள் தங்கள் பொம்மனாட்டிகளை நம்மைப்போல நடத்துகிறார்களா*?* இந்தத் தேசத்திலே, பெண்கள் அப்படிப்பார்த்தால் குற்றம்*!* இப்படிப்பார்த்தால் குற்றம் தலையைக் குனிந்தால் குற்றம்*;* நிமிர்ந்தால் குற்றம். இந்த தேசத்திலே பெண்ணாய்ப் பிறப்பதைக் காட்டிலும் கேவலமான புழுவாகப் பிறக்கலாம்" *(சின்னச்சாம்பு, ப. 102).*

இதையே விஜயம் சிறிது அழுத்தமாகத் தன் பாட்டிக்குச் சொல்கிறார் *(பக். 127-28).* ஒரு கருத்தின் வலிமைக்கு அல்லது பரவலுக்கு ஒப்பீடு மிக்க பயனளிக்கும் என்ற நோக்கில் இங்கு இதனை வ.ரா. கையாண்டுள்ளார்.

**வரலாற்று மாந்தர்**

காந்தி, பாரதி, அரவிந்தர் இம்மூவருடன் ஓரளவு நெருங்கிப் பழகியவர் வ.ரா. வங்க இலக்கியமும், ஆங்கில இலக்கியமும் நன்கு அறிந்தவர். ரவிந்திர நாத் தாகூர், பங்கிம் சட்டர்ஜி, விக்டர் யுகோவின் தாக்கம் பெற்றவர். எனினும் இவரை மிக அதிகமாகப் பாதித்த சக்தி காந்தியும், பாரதியுமே. பாரதியின் கருத்துக்கள் வேறு, வ.ரா.வின் கருத்துக்கள் வேறு என்று கண்டுணரவியலாத வண்ணம் வ.ரா.வின் அனைத்துப் படைப்பிலும் பாரதி கலந்து நிற்கிறார்.

காந்தியின் அவதாரமே பெண் தளையை உடைப்பதற்குத்தான் என்று எண்ணுகிறார் வ.ரா. "காந்தி வந்ததும், பெண் பிள்ளைகளுக்காக அவர் பரிந்து பேசியதைக் கேட்டதும், மகான், மகான்", என்று அவருடைய படம் ஒன்றை வாங்கி அதற்குத் தினமும் பூஜை செய்து வந்தாள் (விஜயம், ப. *57).* "காந்தி காலத்தில் பெண்களுக்கு நல்ல கதி ஏற்படாவிடின், பெண்கள் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ளத் தீர்மானம் கொண்டு பாடுபடாவிடின், "வேறு எந்தக் காலத்தில் அவர்களுக்கு உயர்வு ஏற்படக் கூடும்*?*" *(விஜயம், ப. 62)* என்பது அவரது அச்சம்.

காந்தி வழி, பெண்கள் சின்னச்சின்னச் செயல்களில் தம் ஒத்துழையாமையைப் பின்பற்ற வேண்டும் என்பது வ.ரா.வின் ஆணித்தரமான எண்ணமும், பெண் முன்னேற்றத்திற்கான வழிகாட்டலுமாகும்.

**வினாவிடை** தனது கருத்துக்களுக்கு வலிமையூட்ட வ.ரா. வினா விடையான உரையாடல் உத்தியையும் பயன்படுத்துகிறார். ஒரு புதிய கருத்தை சிந்தனையை விதைக்கும் போது அது தொடர்பாகப் பல ஐயங்களும்., தடைகளும் எழுதல் இயல்பு. அவற்றை முற்றிலுமாக அகற்றி உண்மையை முழுமையாகப் புரிய வைப்பதற்கு வினாவிடை அமைப்பு பெருந்துணையாகும். கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ள வேதத்திலேயே அனுமதித்திருப்பதை பீஷ்மர் வாயிலாக வினாவிடை வழியாகத் தருவதைச் சான்றாக்கலாம் *(சின்னச்சாம்பு, ப. 94).*

**வரா. கனவு கண்ட பெண்ணுலகு**

பாரதி கண்ட புதுமைப் பெண் வாழ்வதற்கு ஏற்ற உலகாகத் தனது கோதைத் தீவை அமைத்துள்ளார். அதன் பெருமை கருதி இவண் தனித்துரைக்கப்படுகிறது. தம் படைப்புகளில் இயலும் வழியனைத்தும் பெண்ணிற்காகக் குரல் கொடுத்த வ.ரா. தாம் விரும்பும் பெண்ணுலகிற்கு ஒரு வடிவமாக, 'கோதைத் தீவை'ப் படைத்துள்ளார்.

"வாய் விட்டுச் சொல்லச் சந்தர்ப்பமும், தைரியமும் உண்டாகுமாகில் பெண்கள் என்ன சொல்லுவார்கள் என்பதையும், என்ன செய்வார்கள் என்பதையும் கோதைத் தீவு என்ற கற்பனையின் மூலமாக என் சகோதர ஆண்மக்களுக்கு எடுத்துக் காண்பிக்க எத்தனித்திருக்கிறேன்", என்று அவர், கோதைத் தீவு முன்னுரையில் கூறுவது நோக்கத்தக்கது. அவரது படைப்புச் சிந்தனை முழுமையையும் பெண்ணின் முன்னேற்றமே ஆட்கொண்டிருந்தது என்பதற்கு இது மறுக்கவியலாத சான்று.

கோதைத் தீவில் பெண்ணியவாதிகளின் கோரிக்கைக்கேற்ப - பெண்களை இழிவுபடுத்தும் புராணங்கள், இலக்கியங்கள் தடை செய்யப்பட்டன, புராண இலக்கியங்கள் மறுபரிசீலனை செய்யப்பட்டன. விபசார விடுதிகள், கள்ளுக்கடைகள் கிடையாது. சக்தி கோவிலுண்டு. பாரதியின் ஆத்திசூடி எல்லோராலும் படிக்கப்பட்டது. ஆணுக்கும் பெண்ணிற்கும் சொத்தில் சம உரிமை இருந்தது. இருபாலர்க்கும் உடல் உழைப்பு, ராணுவப் பயிற்சி, சமையல் பயிற்சி ஆகியன கட்டாயமாக்கப்பட்டன. பெண்குழந்தைகளை ஆண்பிள்ளைகள் கேலி பேசுவது கடுந்தண்டனைக்குரிய குற்றமானது.

மனைவியை இழந்த கணவனை மோழை என்றும், கைம்பெண்ணை மூளியென்றும் புதுப்பெயர்கள் தருகிறார் வ.ரா.

முடிவில், "கொடுங்கோலனாக விளையாடும் ஆண்மகனுக்குக் கோதையே கோடாலி போன்றவள்" என்கிறார்.

தமிழில் எழுந்துள்ள இன்பக் கனவுலக இலக்கியங்களில் (utopian literature) இது மட்டுமே முழுக்க முழுக்க, பெண்ணின் பெருமையை,

மேன்மையை வலியுறுத்த எழுந்தது என்பது சுட்டத்தக்கது. எனவே வ.ரா. அவர்களின் பெண்ணியச் சிந்தனை என்பது வலிந்து பெறப்பட்ட பொருளல்ல. அவரது உட்கிடையும் அதுவே என்பது வலியுறுத்தப் பெறும்.

**பெண்ணியப் பார்வையில் வ.ரா.**

1. ஒட்டு மொத்தமாகப் பொதுப்பார்வையில், வ.ரா. வாழ்ந்த காலகட்டத்தை நோக்குகையில் அவர் மிகத் தீவிரமாகப் பெண்களுக்காகப் போராடியுள்ளதை உணர முடிகிறது.

2. அரை நூற்றாண்டுக்கும் முன்பே இன்று பேசப்படும் பெண்ணியச் சிந்தனைகளை, சிக்கல்களை சிந்தித்துச் சிறப்பாக வெளிப்படுத்தியதுடன் இயன்றளவு தீர்வுகளையும் துணிவுடன் எடுத்துரைத்துள்ளார் வ.ரா.

3. வ.ரா.வை மிக அதிகமாகச் சிந்திக்கவைத்தவை கைம்மைநிலை, பெண்கல்வி, பெண் சொத்துரிமை என்பன.

4. வ.ரா. திருமணம், குடும்பம் என்ற நிறுவனத்தை மதித்தார். அது இன்றியமையாதது என்பது அவர் எண்ணம். எனவேதான் விதவைக்கு மறுவாழ்வு வேண்டும்; குழந்தைகளுள்ள கைம்பெண்களும் மறுமணம் செய்து கொள்ளலாம் என்றவர், கைம்பெண் தன் பால் உணர்வைக் கட்டுப்படுத்த முடியாமல் ஈன்றெடுக்கும் குழவிக்கு வாழ்வில்லை யென்கிறார். இப்படிப் பிறக்கும் விஜயத்தின் குழந்தை இறந்ததாகக் கூறுவது இதனடிப்படையில்தான். நர்ஸ் பவானி பொருளாதார விடுதலை பெற்ற போதும் குடும்பவாழ்விற்கு ஏங்குவதும் இதுவே காரணம்.

5. காரைக்குடி, 'மாதர் மறுமண சகாய சங்கத்தில் சேர்ந்து செயற்பட்டதும், சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய அய்யர் *1899*இல் கணவனை இழந்த தன் மூத்த மகளுக்கு மறுமணம் செய்வித்ததும், பாரதியின் சந்திரிகை கதையும் வ.ரா. வை இச்சிக்கலைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டியது.

பிற்காலத்தில் விதவை காப்பு இல்லம் நடத்திய விழாவில், "சகோதரி சுப்புலட்சுமி மறுமணம் செய்து கொண்டிருந்தால் அது ஆயிரக்கணக்கான விதவைகளுக்கு வழி காட்டுவதாக இருந்திருக்கும். அவர் மறுமணம் செய்து கொள்ளாதது தப்பிதம்," என்று வ.ரா. பேசினார். மறுமணமே விதவை வாழ்விற்குத் தீர்வு என்பதில் அசைவில்லா நம்பிக்கை கொண்டிருந்தார்.

கைம்பெண்களுக்கு வாழ்வு தரவேண்டும் என்ற உணர்வு வ.ரா.வை எந்தளவிற்குப் பாதித்திருந்தது என்பது பின்வரும் குறிப்பினால் தெளிவுபெறும்.

"புருஷன் இறந்தால் பெண் மூளியாக வேண்டுமென்று தண்டனை விதித்தவன் மனிதனுக்குப் பிறந்தவனல்லன்! அவன் தேவகுழாத்திலோ, அசுர கணத்திலோ சேர்ந்தவனாக இருக்கவேண்டும்" (மழையும் புயலும், ப. *72).*

"கைம்பெண்களின் தலைமுடியை மழிப்பதற்குச் செல்லக் கூடாது என்று வ.ரா. நாவிதர்களைக் கேட்டுக் கொண்டார்," என்பது சொல்லும் செயலும் பெண்ணியச் சிந்தனையில் ஒன்றாக வ.ரா.விற்கு இருந்ததைத் தெளிவுபடுத்துகிறது.

*6. 1927*இல் வ.ரா., 'மாயா மேயாவிற்குச் சவுக்கடி' என்ற நூலை எழுதினார். அதில், "குடும்பச் சொத்தில் பெண்ணுக்கும் சமபங்கு வேண்டும்; சொத்து வந்து விட்டால் பெண்ணை ஆண் தன் அடிமையாக, நடத்த மாட்டான்" என்று கூறுகிறார்.

இவற்றை நோக்க வ.ரா., பெண் முன்னேற்றத்திற்கான தன் எண்ணங்களை விதைப்பதற்கும் பரப்புதற்கும் தம் படைப்பையே அதற்கான களன் என்றுணர்ந்து செயல்பட்டார் என நினைக்கத் தூண்டுகிறது.

பெண்கள் தம் நிலையுணர்ந்து தாமே முன் வந்து போராடினாலன்றிப் பெண்ணுரிமை அடையமுடியாது. ஆணாதிக்கத்தை ஒழிக்கவியலாது என்பதை வலியுறுத்தவே தமது படைப்புகளில் பெரும்பாலான, பெண்ணிய சிந்தனைகளை, அவ்வுணர்வுகளைக் கொண்ட கதை மாந்தர் வழியே மொழிகிறார் எனலாம்.

**முடிவுரை**

"பாதாதிகேச, கேசாதி பாதமாக வருணித்துப் பெண்ணை இன்பநுகர்வுப் பொருளாகப் படைக்கும் படைப்பாளர் மத்தியில் உண்மையான பொருளில் பெண்ணை வ.ரா. தான் தமிழ் உரைநடையில் இனங் காட்டியவர்"[4]

வ.ரா. பெண்ணின் உணர்வுடன் பெண்ணிற்காக வாதாடும் வழக்கறிஞராகவே தம் படைப்பு வழி வெளிப்படுகிறார்.

பெண்ணுரிமைச் சிந்தனை அவரைப் பெண்களுக்காகவே உயர்கற்பனை நாவலொன்றைப் (utopian) படைக்கச் செய்தது. தமிழில் கட்டுரையாளர்க்குத் தெரிந்தவரை இப்படியொரு பெண்ணிலக்கியம் இதற்கு முன்பும் இல்லை; இன்று வரையுமில்லையென்று கூறலாம்.

---

4. வ.ரா. (வ. ராமசாமி), சு. வேங்கட்ராமன் ப. *69*.

வ.ரா. செய்ததைச் சொன்னவர்; சொன்னதைச் செய்தவர் என்பது அவரது வாழ்க்கை உணர்த்தும் உண்மை.

வ.ரா. எடுத்துக் காட்டிய விதவைத்துயர் இன்று பெரிதும் ஒடுக்கப்பட்டுவிட்டது. இளம் குழந்தை விதவைகள் இன்றில்லை. மணமகனைப் பெண்களே தேர்ந்துகொள்ளும் உரிமை ஓரளவு தென்படுகிறது. கலப்பு, காதல் மணம் பெருகியுள்ள நிலை இன்றுள்ளது.

பெண்கல்வி இன்று பெருமிதப்படும் நிலையில் உச்சக் கட்டத்தை நோக்கி முன்னேறியுள்ளது. பட்டங்கள் பெறுவது மட்டுமல்ல, சட்டங்களும் பெண்கள் செய்கிறார்கள். பெண் அரசாட்சி செய்வதாக வ.ரா. முதல் பலர் கண்ட கனவு இன்று நனவாகியிருந்தாலும் முழுமையான பெண்ணுரிமை முன்னேற்றம் இல்லை என்னும் உண்மையும் உணர வேண்டியுள்ளது. பெண்ணுக்குச் சொத்தில் சம உரிமையுண்டு என்று சட்டம் இயற்றப்பட்டாலும் நடைமுறையில் எந்தளவிற்குச் செயற்பாட்டிற்கு வந்துள்ளது என்பதும் இன்று கேள்விக்குறியே.

அன்றும் இன்றும் தீராத சிக்கல் வரதட்சணை. இன்றும் இதன் கொடுமையால் பல மகளிர் மரணமடைவதைக் கேட்கிறோம்; பார்க்கிறோம்; படிக்கிறோம்.

சம உரிமை எல்லாவற்றிலும் இல்லையென்றாலும் மெல்ல ஆணாதிக்கம் தன் வலுக்குறைந்து வருவதை உணரமுடிகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் இன்று பெண் கல்வியும் பொருளாதார உரிமையும் பெற்றிருப்பதாகும் எனினும், வேலைக்குப் போகும் பெண்களின் அடிப்படை நிலையில் பெரிய மாற்றம் இல்லை.

முடிவாக, "பெண்களுக்கு நியாயம் செய்ய வேண்டும் என்பது மட்டும் என் கருத்தல்ல; உண்மையை மனிதர்கள் முழுதும் உணர்ந்து கொள்ள வேண்டும். என்ன உண்மை என்பீர்கள். சிருஷ்டியிலே ஆசை, அகங்காரம், சுக உணர்ச்சி, சுதந்திர உணர்ச்சி முதலிய யாவும் எல்லோருக்கும் பொதுவானவை என்ற உண்மை ஏற்றுக் கொள்ளப்படின், அப்பொழுது பிறப்பது நியாயமான சட்டமாகும். அது இயற்கைக்கு ஒத்து இருக்கும் என்று விஜயத்தின் *(ப.136)* வாயிலாக வெளிப்படும் கருத்துக்களே வ.ரா.வின் எண்ணமாகும். இதனை வலியுறுத்துவதே வ.ரா.வின் படைப்புகள்.

**கருவி நூல்பட்டியல்**

அ. **முதல்நூல்கள்** (இவை *11*-உம் *1990*-இல் அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, மறுபதிப்பு).

1. கற்றது குற்றமா?
2. கலையும் கலை வளர்ச்சியும்
3. சின்னச் சாம்பு (நாவல்)
4. சுந்தரி (நாவல்)
5. சுவர்க்கத்தில் சம்பாஷணை
6. நடைச்சித்திரம்.
7. மழையும் புயலும்
8. வசந்த காலம்.
9. வ.ரா. வாசகம்
10. வாழ்க்கை விநோதங்கள்.
11. விஜயம் (நாவல்)

## ஆ. துணை நூல்கள்

1. தமிழ்ச் சிறுகதைகளில் பெண்கள் பிரச்சனைகள் (அட்டவணைத் தொகுப்பு), 1990 பதிப்பாசிரியர் தேவதத்தா, அன்னைதெரசா மகளிர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

2. தமிழ் நாவல் வகைகள், தா.வே. வீராசாமி, 1979, தமிழ்ப்பதிப்பகம், சென்னை.

3. வ.ரா. (வ. ராமசாமி), சு. வேங்கடராமன், 1993, சாகித்ய அக்காதெமி வெளியீடு, தில்லி.

## இ. நேர்காணல்

திரு அ.கி. செயராமன் அவர்கள் 7.5.94.

# பாரதியாரின் பெண்ணியச் சிந்தனைகள்

ப. மகாலிங்கம்

பெண்ணுரிமையைக் குறித்த பெண்ணியச் சிந்தனைகள் இன்று உலகெங்கிலும் பரவி நிற்கின்றன. பெண்ணியத்தைச் செயல் வடிவமாக்கிட விழையும் பெண்ணுரிமை இயக்கங்கள் மேலைநாடுகளில் செல்வாக்குப் பெற்று விளங்குவதோடு, பிற நாடுகளிலும் பாரதத்திலும் கால்கொண்டு வருகின்றன. பெண்ணியம் - பெண்ணுரிமை பற்றி இன்று நிலவிடும் சிந்தனைகள் அறுபதுகளின் தொடக்கத்தில் வடிவுகொண்டு மலர்ந்துள்ளதாகப் பெண்ணியும் குறித்த அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

கடந்த நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் நிகழ்ந்த தொழிற்புரட்சியின் விளைவுகள் - பிரான்சின் பிரெஞ்சுப்புரட்சி - உருசியாவில் நிகழ்ந்த அக்டோபர் புரட்சி ஆகியன மனித சமுதாயத்தின் வாழ்வியல் சிந்தனைக்கு ஒரு புது வடிவத்தைத் தருவதாயின. சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம் என்னும் கோட்பாடுகள் மனித வாழ்வின் எல்லா நிலைகளிலும் எதிரொலிக்கத் தொடங்கின. மனித உரிமையும் அதற்கான தடைகளும் அத்தடைகளை உடைத்தெறிவதற்கான வழி வகைகளும் ஆராய்ந்து மேற்கொள்ளப்பட்டன. அவ்வகையில் மனித சமுதாயத்தில் சரிபாதியாக இருக்கின்ற பெண்ணின் உரிமை பற்றிய - பெண்ணின் விடுதலை பற்றிய சிந்தனைகளும் அதற்கான முயற்சிகளும் உலகெங்கிலும் படிப்படியாக மலரத் தொடங்கின.

இந்திய நாட்டில் அதே கால கட்டத்தில் - ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அடிமை இந்தியாவின் சமுதாயச் சூழலும் பெண்ணடிமையில் தான் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. சமூகச் சீர்திருத்தக்காரர்களும், நாட்டு விடுதலைக்காகப் போராடிய அரசியல் தலைவர்களும் தங்கள் தங்கள் நிலையில் பெண் விடுதலைக்கான முயற்சிகளில் ஈடுபடலாயினர். வட இந்தியாவில் சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் பல பெண்ணுரிமை பற்றி சிந்திக்கலாயின; அத்தகு இயக்கங்களுள் ராஜாராம் மோகன்ராய்

அவர்களின் பிரம்ம சமரசம் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கதாகும்.[1] இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் பெரும் மக்கள் தலைவராக விளங்கிய காந்தியடிகளும் பெண்ணுரிமைக்குக் குரல் கொடுக்கலானார். மேற்குறித்த பின்னணிக்கிடையில் பாரதத்தின் தென்பகுதியில் தமிழ்நாட்டில் தேசியக் கவிஞராகவும் சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளராகவும் விளங்கிய சுப்பிரமணிய பாரதியாரின் எண்ணமும் எழுத்தும் செயலும் பெண்ணுரிமை குறித்துப் பற்றிப் படரலாயின.

**பாரதியாரின் படைப்புகளும் பெண்ணியமும்**

பாரதியின் கவிதைகள் - கட்டுரைகள் - கதைகள் என இம்மூவகை வடிவங்களிலுமே பெண்ணுரிமை குறித்த சிந்தனைகள் - உரத்த சிந்தனைகளாகவே இழையோடி நிற்பதை உணரமுடிகிறது. இன்றைய நாளில் மேலைநாட்டவர் இயக்க ரீதியாக எண்ணி வரையறுத்துச் சொல்லுகின்ற பெண்ணியச் சிந்தனைகளுக்கு ஈடுகொடுக்கின்ற நிலையிலேயே பாரதியாரின் பெண்ணியச் சிந்தனைகள் வெளிப்படுகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதிகள் வரையில் வாழ்ந்து தம் கவிதைகள், கதைகள் வாயிலாகவும், இந்தியா போன்ற இதழ்களில் கட்டுரைகள் வாயிலாகவும் பாரதியார் வெளியிட்ட பெண்ணியக் கருத்துக்கள் வியக்கத்தக்கன. தாம் வாழும் தமிழ்நாட்டுப் பகுதியில் சரியாக அரும்பாத பெண்ணியம் குறித்து ஒரு விசாலமான பார்வையை உலகம் தழுவிய நிலையில்தான் பாரதி பெற்றிருந்தார். பெண்ணியம் பற்றிய எண்ணத்தைத் தாம் கொண்டிருந்ததோடு, அதனைச் சமுதாயம் முழுமைக்கும் உரியதாக்கும் முயற்சியில் அயராது தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். பல படைப்புகளின் வாயிலாக அதனை வலியுறுத்தி வந்துள்ளார். பாரதி கண்ட புதுமைப்பெண் பாரதியின் தொலைநோக்குப் பெண்ணியச் சிந்தனைக்கு நல்லதொரு எடுத்துக்காட்டு எனலாம்.

**பெண்ணடிமை நிலை**

தமிழ்நாடு, பண்டைய நாளில் தக்க வகையில் பெண்மையை மதித்துப் போற்றி பெண்ணுரிமையை நிலைநிறுத்தியிருந்ததாகவும், இடைக்காலத்தில் நேர்ந்துவிட்ட ஆண் ஆதிக்கச் சுயநலப்போக்குகளால் பெண் அடிமைக் குழியில் தள்ளப்பட்டதாகப் பாரதியார் கருதுகின்றார்.

1. எஸ்.ஸ்ரீதேவி, இந்தியப் பெண்குலத்தின் முன்னேற்றம், எஸ். சங்கரன் (மொ.), மல்லிகை பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1963, பக். 30-35.

> "இன்று தமிழ்நாட்டில் மாத்திரமே யல்லாது பூமண்டல முழுவதிலும், பெண்ணைத் தாழ்வாகவும் ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரம்; அநீதிகளுக்கெல்லாம் கோட்டை; கலியுகத்திற்குப் பிறப்பிடம்"[2]

எனப் பாரதியார், தமிழ்நாட்டிலும் மற்றும் உலகெங்கிலும் பெண் அடிமைப்பட்டுக் கிடக்கின்ற அவலநிலையைச் சுட்டிக்காட்டி எச்சரிக்கை செய்கின்றார்.

## பெண்ணடிமை நிலைக்கு எதிரான குரல்

அடிமைப்பட்டுக் கிடக்கின்ற பெண்ணின் நிலைக்குப் பல்வேறு காரணங்கள் கற்பித்துச் சொல்லப்படுகின்றன. எனினும் அவையெல்லாம் ஏற்றுக்கொள்ளத்தக்கன அல்ல எனப் பாரதியார் உறுதியாக மறுக்கிறார். மனித குலத்தில் ஆணைக் காட்டிலும் பெண் எவ்வகையிலும் தாழ்ந்தவள் அல்லள்; அப்படியிருக்கப் பெண்ணைக் குறைத்து மதிப்பிடுவது எங்ஙனம் பொருந்தும் என பாரதி இப்போக்கைச் சாடுகின்றார்.

> "ஸ்திரீகளுக்கு ஜீவன் உண்டு, மனம் உண்டு, புத்தியுண்டு, ஐந்து புலன்கள் உண்டு, அவர்கள் செத்த யந்திரங்களல்ல. உயிருள்ள செடி கொடிகளைப் போலவுமல்லர். சாதாரணமாக ஆண் மாதிரியாகவே தான் புறவுறுப்புக்களில் மாறுதல், ஆத்மா ஒரே மாதிரி"[3]

என பெண்ணின் இயல்புத் தன்மையை பாரதி குறிப்பிடுகின்றார்.

இப்படியிருக்க, பெண்களின் தன்மைகளை உணராத ஆணினத்தின் ஒரு சாரார், பெண்களை உடைமைப் பொருளாகக் கருதி அவர்களைச் செக்கு மாடுகளாகப் பாவிக்கின்றனர். மற்றொருசாரார் போகப் பொருளாக எண்ணி பஞ்சுத் தலையணைகளாகக் கருதுகின்றனர். இவ்விரண்டுமே பிழை எனப்பாரதி குறிப்பிடுகின்றார்.[4]

---

2. பாரதியார், தமிழ்நாட்டின் விழிப்பு, பாரதி தமிழ் வசனத் திரட்டு, பெ. தூரன் (தொ.) நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, புதுடில்லி, 1978, ப. 83.

3. மேற்படி, ப. 83.

4. மேற்படி, ப. 83

பெண்ணடிமை நிலை கண்டு வெகுண்டு எழுகின்ற பாரதி,

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்"[5]

என சூளுரைக்கின்றார்.

**பெண் விடுதலை**

பாரத சமுதாயம் முழுவதிலுமே நிலவிவருகின்ற பெண்ணடிமை நிலை மாறி, பெண்ணும் ஆணும்-சரிநிகர் சமானமாக வாழ்தல் வேண்டும் என்பதை பாரதி ஆணித்தரமாக வலியுறுத்துகின்றார்; விடுதலை முழக்கமாகத் தம் கவிதையில் முழங்குகின்றார்.

"வைய வாழ்வு தன்னில் எந்த
வகையி னும்ந மக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே"[6]

இக்கவிதை வாயிலாக, இன்றைய பெண்ணியவாதிகள், அடிப்படைக் கோட்பாடாகக் கொண்டிருக்கின்ற எல்லா நிலைகளிலும் சமத்துவம் என்ற கருத்தே, பாரதியின் பெண் விடுதலை குறித்த சிந்தனையின் அடிநாதமாக வெளிப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

பாரதியின் பெண்விடுதலை பற்றிய எண்ணங்களை விரிவாக அறிந்திட, பெண் கல்வி - விதவை மறுமணம் - பெண் கற்பு - பெண் சொத்துரிமையும் சமூகத்தொடர்புகளும் - பெண்ணும் இல்லறமும் என்பவை குறித்துத் தனித்தனியே அணுகுவது அவசியமாகின்றது.

**பெண் கல்வி**

பெண்ணடிமை நிலை அகன்றிட பெண்கள் கல்வியறிவு பெறுதல் தலையாயதாகும். மகளிரின் அறிவுத்துறை வளர்ச்சியைத் தடுத்து, அவர்களை அடிமைப்படுத்தியது மண்ணகத்திலுள்ள சில மூடர்களின் அடாத செயல் எனப் பாரதி சாடுகின்றார்.

"கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?

5. பாரதியார் கவிதைகள், சக்தி காரியாலயம், சென்னை, 1957, ப. 52.

6. மேற்படி, ப. 52.

பெண்க ளறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடுங் காணீர்"[7]

மேற்குறித்த கவிதைச் சிந்தனையின் வழி, பெண் கல்வியினால் இந்த உலகம் முழுவதுமே ஒளிபெற்றிடும் என்னும் நம்பிக்கையை பாரதி முன்வைத்துப் பேசுகின்றார்.

பாரதி படைத்த, 'புதுமைப் பெண்'ணின் சிந்தனையாக வெளிப்படும் கருத்துகள் வேண்டாத மரபுகளைத் தகர்த்தெறிவதாக உள்ளன. சமுதாயத்தை விட்டு விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை இனி வீரப்பெண்கள் ஒழித்து விடுவார்கள். அத்தோடு, உலக வாழ்க்கையின் நுட்பங்களைத் தேரவும், உயரிய பற்பல நூல் வகைகளைக் கற்கவும் வேண்டிப் பெண்கள் கடல்கடந்த நாற்றிசை நாடுகளுக்கும் செல்வார்கள்; அங்கிருந்து புதுமைகள் பலவற்றை இங்கு கொணர்ந்து, நம் பாரத தேசம் ஓங்கிட உழைத்திடுவார்கள் எனக் குறிப்பிடுகின்றார்.[8]

'முந்நீர் வழக்கம் மகடுவோடில்லை' என்னும் நம் தமிழகத்தின் பண்டைய மரபுநிலை, பெண்கள் அயல்நாடுகளுக்குச் சென்று கல்வி பயிலல் என்னும் பாரதியின் விருப்பார்வத்தின் வழி தகர்க்கப்படுகின்றது.

'மாதர் கல்வி கணக்கு' என்னும் தலைப்பில் *1906* ஆம் ஆண்டு பிப்ரவரி 'சக்கரவர்த்தினி' இதழில் பெண்கல்வியின் நிலை குறித்துப் பாரதி கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளார். *1901* ஆம் ஆண்டின் புள்ளிவிவரக் கணக்கெடுப்பின்படி, *10,000* பெண்களுக்கு *94* பெண்களே தொடக்க நிலையிலான கல்விப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் எனத் தெரியவருவதாகக் குறிப்பிடும் பாரதி, "தேச பக்தியுடைய ஒவ்வொருவனும் இந்தப் பரிதாபகர நிலைமையைக் கண்டு மனம் நடுங்குவானென நம்புகிறோம்" எனக் கூறுகின்றார்.[9]

'இந்தியா' பத்திரிகையில் தலையங்கமாக 'நாகரிக வளர்ச்சியில் ஸ்த்ரீகளுக்குரிய ஸ்தானம்' என்னும் கட்டுரையை வெளியிட்டுள்ள பாரதி, பெண்கள் பற்றி வாயளவில் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை; அதனை உடனடியாகச் செயல்வடிவில் விரைந்து நடைமுறைப்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றார்.[10]

---

*7.* மேற்படி, ப. *253.*

*8.* மேற்படி, ப. *259.*

*9.* பாரதியார், பாரதி புதையல் பெருந்திரட்டு, ரா.அ. பத்மநாபன் (தொ.), வானதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, *1982*, ப. *244.*

*10.* மேற்படி, பக். *245-247.*

**விதவை மறுமணம்**

சமுதாயத்தில் கணவனை இழந்த கைம்பெண்களின் நிலை இரங்கத்தக்கது. குழந்தை மணமே, கைம்பெண்களின் எண்ணிக்கைப் பெருக்கத்திற்கான காரணம் எனக் கருதும் பாரதியார், குழந்தை மணத்தைக் கண்டிக்கின்றார். அத்தோடு, ஆணுக்கு மறுமணத்தை ஏற்றுக் கொள்ளுகிற சமுதாயம், விதவை மறுமணத்தையும் ஏற்று அங்கீகரிக்க வேண்டியதன் அவசியத்தை தம் கட்டுரைகளாலும் பாரதி வற்புறுத்துகின்றார்.

பாரதி, 'சந்திரிகையின் கதை'யில் விசாலாட்சி என்னும் பாத்திரப் படைப்பின் வாயிலாக, விதவை மறுமணத்திற்கு உயிரூட்டி உலவ விட்டிருக்கிறார். பாரதியின் உள்ளம் கைம்பெண் மணத்தைப் பற்றி ஆழமாக சிந்தித்திருந்தமை இதன்வழி நன்கு புலனாகிறது.[11]

**பெண் கற்பு**

கற்பு என்னும் கோட்பாட்டைப் பெண்களுக்கு மட்டுமே உரியதாக ஆக்கி, அளவுக்கு அதிகமாகவே அதனை வலியுறுத்தி வந்து ஆண் இனம் மட்டும் தம் விருப்பம்போல வாழத் தலைப்பட்டது. பெண்ணியவாதிகள் சமுதாயத்தில் பெண்களின் தாழ்நிலைக்குப் பல்வேறு காரணங்களைக் குறிப்பிடுகின்றனர். ஏஞ்சல்சின் கோட்பாட்டின்படி, கற்பு என்னும் மதிப்பு ஆண் இனம் பெண் இனத்தை அடிமை கொள்வதற்காக ஏற்படுத்திய நியதி என்பதாகும். பொதுவுடைமைச் சமுதாயம் மாறி, தனி நபர் சொத்துரிமை வழக்கில் வந்த காலகட்டத்தில் ஆண் இனம் தன்னுடைய சொத்துக்களைத் தன்மூலம் பிறந்த குழந்தைகளுக்கு மட்டுமே கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கற்பைப் பெண்களின் வாழ்க்கை நெறியாக்கி பெண்ணினத்தின் சுதந்திரத்தைப் பறித்து, அவர்களை வீட்டிற்குள் அடைத்து வைத்தது. மேலும் கற்பைப் பற்றிய கோட்பாடுகளையும் உருவாக்கியது என்று ஏஞ்சல்ஸ் விளக்குகின்றார்.[12]

பாரதியார், பெண்களைக் கற்பு என்னும் போர்வையால், வீட்டிற்குள்ளே பூட்டி வைப்பதையும், பிற ஆடவருடன் பேசவிடாது தடுப்பதையும் வட இந்தியப் பகுதிகளில் 'பர்தா' எனப்படுகின்ற முகத்திரை அணிவித்துள்ள வழக்கத்தையும் வன்மையாகக் கண்டிக்கின்றார்.[13]

---

11. டாக்டர் தா.வே. வீராசாமி, சந்திரிகையில் கதையில் மறுமணம், பாரதி இலக்கியம் – ஒரு பார்வை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, *1982*, பக் *65-66*.

12. முனைவர் ச. முத்துச் சிதம்பரம், சமூக மதிப்புகளும் மகளிரும், தமிழக மகளிர் திங்கள் தொடர் கருத்தரங்கம் *-11*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, நாள் *10.11.'93*.

13. பாரதியார், பெண், பாரதி தமிழ் வசனத் திரட்டு, பக் *78-81*.

கற்பைப் பற்றிக் குறிப்பிடுகின்ற பாரதியார் பெண் ஆண் இருவருக்குமே அது உரியது என்கின்றார்.

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"[14]

எனப் பாரதி, கற்பு நிலை என்பதை ஆணுக்கும் வற்புறுத்துவதன் வழி கற்புநிலைச் சமத்துவத்தை உருவாக்க விழைகின்றார்.

ஏஞ்சல்ஸ் போன்றோரின் கருத்திலிருந்து பாரதியின் கற்பு பற்றிய கண்ணோட்டம் மாற்றம் கொண்டுள்ளது. பெண் கற்பு என்பதோடு ஆண் கற்பை வலியுறுத்துவதன் வாயிலாக, பாரதி, பண்பாட்டு மரபு வழி நின்றே கற்புக் கோட்பாட்டின் பெயரால் பெண்கள் மீது திணிக்கப்பட்டுள்ள மூடத்தனமான கட்டுப்பாடுகளிலிருந்து அவர்களை விடுவிக்க முயல்கிற எண்ணம் வெளிப்படுகிறது. அதே நேரத்தில் கற்பை இல்லற வாழ்வியலுக்கான ஓர் ஒழுக்கமாகக் கொண்டு பெண் ஆண் இருவருமே அதை ஏற்று நடக்கவேண்டும் என்பதன் வழி, நம் பண்பாட்டு நிலைகளில் நெகிழ்வு வந்துவிடக் கூடாதே என்ற எச்சரிக்கை உணர்வுடன் கூடிய பாரதியின் இந்த அணுகுமுறை அமைந்துள்ளது எனலாம்.

**பெண் சொத்துரிமையும் சமூகத் தொடர்புகளும்**

பெண்களின் நிலை சமுதாயத்தில் உயரவேண்டுமானால், அவர்கள் பொருளாதார உரிமைகளையும் பெற்றாக வேண்டும். பொருளாதார உரிமை எனில் முதலில் குறிக்கத்தக்கது பெண் சொத்துரிமை என்பது. பெண் சொத்துரிமை அமைந்திடின், பொருளை முன் வைத்துச் சுழல்கின்ற இவ்வுலகில் மற்றவையும் வந்தமையும் என்பது நம்பிக்கை. ஆதலின், பூர்வீகச் சொத்தில், ஆணுக்கு உள்ள உரிமை போலவே பெண்களுக்கும் சமபாகமாக அளிக்கப்படுதல் வேண்டும் என்பதைப் பாரதி வலியுறுத்துகின்றார். மலையாளத்தில் சொத்துடைமை பெண் சந்ததியாருக்கு மரபுவழிப்பட்ட வாரிசு உரிமையாக இருக்கின்ற நிலையை மனநிறைவுடன் சுட்டிக்காட்டுகின்றார். மலையாளத்து மாதர்கள் சொத்துரிமையோடு, கல்வி அறிவும் பெற்று, மிக உயர்ந்த சுதந்திர முடையோர்களாக இருப்பதனைப் பாரதியார் பெருமிதத்துடன் எண்ணுகின்றார். தமிழ்நாட்டு நாகரிகம் இங்குள்ள மாதர்களுக்கு இந்து தேசத்தின் மற்ற பகுதிகளிலுள்ள மாதர்களைக் காட்டிலும் அதிக சுதந்திரம் கொடுத்துக்கொண்டு வந்திருப்பதற்குக் காரணம் மலையாள நாகரிகத்துள் நெருங்கிப் பழகி ஊடாடிக்கொண்டு வந்திருப்பதுதான் எனக் கூறி,

14. பாரதி பாடல்கள், ப. 262.

மலையாள மாதர்களின் சுதந்திரத்தைப் பாரதத்திற்கே முன்னோடியாகச் சுட்டிக்காட்டி வியக்கின்றார்.[15]

மலையாளத்துப் பெண்கள் இத்தகு உயர்ந்த சுதந்திரம் கொண்டுள்ளமையைக் குறித்து பாரதியார் கொண்ட விரும்பத்தக்க வியப்புணர்வே,

"சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே"[16]

என்னும் அவர்தம் 'பாரததேசம்' பற்றிய கவிதை வரிகளுக்கு வித்தாகியிருக்கக்கூடும் என எண்ணிப் பார்ப்பது பொருத்த முடையதாகின்றது.

பெண்கள் கல்வி நிலையால் உயர்ந்து, அரசாட்சியில் எவ்வித உயர்பணியையும் ஏற்கவேண்டும் என்பதும், விரும்பும் தொழில் செய்து பொருளீட்டி வாழும் உரிமை அவர்கள் பெறவேண்டும் என்பதும் பாரதியின் சிந்தனைகளாக வெளிப்படுகின்றன.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"[17]

என்பது பாரதி கண்ட புதுமைப்பெண்ணின் கவிதை முழக்கமாக ஒலிக்கின்றது.

**பெண்ணும் இல்லறமும்**

ஆணும் பெண்ணும் ஒத்த அன்புடன் இணைந்து வாழ்கின்ற இல்லறத்தையே நல்லறமாகப் பாரதி குறிப்பிடுகின்றார். குடும்பத்தில் பெண்ணுக்கு உரிய உரிமைகள் அனைத்தையும் பெற்று வாழவேண்டுவதன் தேவையைப் பாரதி வலியுறுத்துகின்றார்.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கி இவ்வையம் தழைக்குமாம்"[18]

என்னும் சமத்துவக் கொள்கையைப் பாரதி இல்லறத்துக்கும் உரிய ஒன்றாகக் காட்டுகின்றார்.

15. பாரதியார், தமிழ்நாட்டு நாகரிகம், பாரதி தமிழ் வசனத் திரட்டு, ப. 98.

16. பாரதி பாடல்கள், ப. 6.

17. மேற்படி, ப. 262.

18. மேற்படி, ப 258.

இல்லற வாழ்வில் சமத்துவமின்றி பெண்ணை ஆண் அடிமை செய்கின்ற நிலை நேருமாயின், அப்படிப்பட்ட சூழலின் பெண்கள் துன்பத்தில் உழன்று வாழத்தலைப்படாமல் அதனை எதிர்த்துச் சாத்வீக முறையில் பெண்கள் போரிடுதல் வேண்டும் எனப் பாரதி அறிவுறுத்துகின்றார். ஸ்ரீமான் மோஹன்தாஸ் கரம்சந்த்காந்தி தென் ஆப்பிரிக்காவில் மனித உரிமைக்காகக் காட்டிய 'அதர்மத்தை தர்மத்தால் ஒழிப்போம்' என்னும் வழியையே இல்லறத்தில் பெண்களின் உரிமைப் போராட்டத்தில் நமக்குரிய வழியாகக் கைக்கொள்ள வேண்டுமெனப் பாரதி குறிப்பிடுகின்றார்.[19]

பெண்விடுதலையைக் குடும்ப நிலையிலிருந்து தொடங்க விழைகின்ற பாரதி

> "பரிபூர்ண ஸமத்வ மில்லாத இடத்தில் ஆண்மக்களுடன் நாம் வாழமாட்டோம்' என்று சொல்வதானால், நமக்கு நம்முடைய புருஷர்களாலும் புருஷ சமூகத்தாராலும் ஏற்படக்கூடிய கொடுமைகள் எத்தனையோ யாயினும், எத்தன்மை யுடையனவாயினும் அவற்றால் நமக்கு மரணமே நேரிடினும் நாம் அஞ்சக்கூடாது. ஸஹோதரிகளே ஆறிலும் சாவு, நூறிலும் சாவு. தர்மத்துக்காக மடிகிறவர்களும் மடியத்தான் செய்கிறார்கள், ஸாமான்ய ஜனங்களும் மடியத்தான் செய்கிறார்கள். ஆதலால் ஸஹோதரிகளே, பெண் விடுதலைக்காக இந்த க்ஷணத்திலேயே தர்மயுத்தம் தொடங்குங்கள். நாம் வெற்றி பெறுவோம். நமக்கு மஹாசக்தி துணை செய்வாள். வந்தே மாதரம்"[20]

என அடிமையுற்றுக் கிடக்கின்ற பெண்களை நோக்கி அறைகூவல் விடுக்கின்றார். பெண் விடுதலைக்கான அறப்போரைச் சமுதாயத்தின் அடிப்படை அலகாம் குடும்ப நிலையிலிருந்து தொடங்க முனைகின்ற பாரதியின் சிந்தனை, எழுச்சியும் உறுதியும் செய்து முடிக்கின்ற திறமும் கொண்ட ஆக்கப்பூர்வமான சிந்தனையாக வெளிப்படுகின்றது,

19. பாரதியார், பெண் விடுதலைக்குத் தமிழ்ப் பெண்கள் செய்யத்தக்கது யாது?, பாரதியும் சமூகமும், ம.ப. பெரியசாமித்தூரன் (தொ.), வானதி பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1982, பக். 57-58.

20. மேற்படி, ப. 60.

தெய்வபக்தியும் தேசபக்தியும் நிறைந்த நம்பிக்கையின் வெளிப்பாடாகவும் காட்சியளிக்கிறது.

குடும்ப வாழ்வில் உரிய உரிமையைப் பெற்றுவிட்ட பாரதியின் புதுமைப்பெண்,

காதல னொருவனைக் கைப்பிடித்தே, அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து,
மாத ரறங்கள் பழைமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி"[21]

என முழங்குகின்றார். பாரதியின் சிந்தனைவழி வெளிப்படுகின்ற பெண்களின் இல்லறக் கோட்பாடு, பண்பாட்டு மதிப்பையொட்டி சமத்துவமும் கொண்டு மலர்கின்ற கோட்பாடே எனலாம்.

## முப்பெரும் பாடல்களில் பெண்ணுரிமை

### பாஞ்சாலி சபதம்

பாரதி, குறுங்காப்பியமாக 'பாஞ்சாலி சபதத்தை'ப் படைத்துள்ளார். பாஞ்சாலியை மையப்படுத்தியுள்ள இக்காப்பியத்தில் பாஞ்சாலி படும் துயரங்களும், சூதில் வைத்து இழக்கத் தக்க உடைமைப் பொருளாக அவள் அல்லல்படுவதும், சமூகத்தில் பெண்கள் அடிமைகளாய்ப் படுகின்ற துன்பங்களுக்கு ஒரு குறியீடாகவே படைத்துக் காட்டியுள்ளார். அந்த அளவில் மட்டும் நின்றுவிடாது, அந்த ஆதிக்கங்களை யெல்லாம் மீறிக் கிளர்ந்தெழுகின்ற புதுமைப் பெண்ணாகப் பாரதியின் பாஞ்சாலி சித்திரிக்கப்பட்டிருக்கின்றாள்.[22] தடைகள் எவை வரினும் பெண் தன் வாழ்வை - விடுதலையை - உரிமையைப் பெற்றிட போர்க்குணத்துடன் சபதம் ஏற்றுச் சீறி எழவேண்டும் என்பதற்கான அறிவுறுத்தலே பாரதி படைத்துள்ள 'பாஞ்சாலி சபதம்' எனலாம்.

### கண்ணன் பாட்டும் குயில் பாட்டும்

கண்ணன் பாட்டிலும் குயில் பாட்டிலும் பாரதி காதலின் மேன்மைகளைச் சிறக்கக் காட்டியுள்ளார். ஆண் பெண் இவர்களுக் கிடையில் மலரவல்ல சமத்துவ அன்பின் சின்னமே காதல். ஆதலின், உண்மைக் காதல் வழி மனிதம் வாழத் தலைப்படுகிற நிலை அமையுமாயின் அங்குப் பெண்ணுரிமையும் நடம்புரிந்திடும் என்பது பாரதியின் உட்கிடக்கையாக இருந்திருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது.

---

21. பாரதியார் கவிதைகள், ப. 262.

22. டாக்டர் சாமுவேல் தாசன், பாரதியும் வள்ளத்தோளும் - ஒப்பியல் பார்வை, கவின்மலர் பதிப்பகம், கொட்டாரம், முதற்பதிப்பு, 1986, ப. 203.

கண்ணன் பாட்டில், பாரதி கண்ணனைக் கண்ணம்மாவாகவும் உருமாற்றம் செய்து படைத்துள்ளார். பாரதி, தன்னைக் காதலனாகவும், கண்ணம்மாவைக் காதலியாகவும் பாவித்துப் பாடியிருக்கிற நாயகி நாயக பாவம் இங்கே வெளிப்படுகின்றது. பெண்மையைத் தெய்வமாகப் போற்றுகின்ற பாரதி, தெய்வத்தைப் பெண்மையாகவும், காணவிழைந்து, அதன்வழி பெண்ணின் மேன்மையைச் சித்திரித்துள்ளார் எனலாம். அந்த அளவில் மட்டுமல்லாது, தெய்வ மேன்மைகளைப் பெண்ணின் - மனைவியின் வாயிலாகவே ஆடவன் - கணவன் எய்த முடியும் என்னும் நம்பிக்கையைப் பாரதி,

> "காதல்செயும் மனைவியே சக்தி கண்டீர்
> கடவுள்நிலை அவளாலே எய்த வேண்டும்"[23]

எனக் குறிப்பிடுகின்றார். தன்னை நாயகனாகப் பாவித்து, கற்பனைக் காதலியாக கண்ணம்மாவைப் படைத்து, பெண்மையின் வாயிலாகக் கடவுள்நிலை எய்துகின்ற வாய்ப்பினை அமைத்து, அதன் வாயிலாக மானுடத்திற்கு வழிகாட்ட பாரதி மேற்கொண்ட ஓர் அணுகுமுறையோ இதுவென எண்ணத் தோன்றுகிறது.

## புதிய ஆத்திசூடியில் பெண்மையின் மேன்மை

சமுதாயத்தின் - தளிர்களாம் குழந்தைகளுக்குப் போதிக்கக் கூடியதாகப் பாரதி படைத்துள்ள புதிய ஆத்திசூடியில்,

> "தையலை உயர்வு செய்"[24]

எனக் கற்பித்திருக்கும் திறம் எண்ணத்தக்கது. பெண்ணினத்தை மேன்மையுறச் செய்வதில் - எதிர்காலச் சமுதாயம் முழுமைக்குரிய பொதுமைச் சிந்தனையாக ஆக்குவதில் பாரதி கொண்ட ஈடுபாட்டை இது காட்டுவதாகின்றது.

## பெண் விடுதலையைச் செயலாக்குதல் குறித்துப் பாரதியார் அளித்திடும் சிந்தனைகள்

பாரதி தாம் வாழ்ந்த காலச் சூழலையொட்டிய நிலையில், பெண்கள் எல்லா உரிமைகளையும் பெற்று சமத்துவமாக வாழ்வதற்கான இன்றியமையாத ஆரம்பப்படிகள் எனக் கீழ்க்கண்டவற்றைப் 'பெண் விடுதலை' என்னும் கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

1. பெண்களை ருதுவாகும் முன்பு விவாகம் செய்து கொடுக்கக் கூடாது.

23. பாரதியார் கவிதைகள், ப. 338.

24. மேற்படி, ப. 247.

2. அவர்களுக்கு இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்துகொள்ளும் படி வற்புறுத்தல் கூடாது.

3. விவாகம் செய்துகொண்ட பிறகு அவள் புருஷனை விட்டு நீங்க இடங்கொடுக்க வேண்டும். அதன் பொருட்டு அவளை அவமானப் படுத்தக்கூடாது.

4. பிதுரார்ஜிதத்தில் பெண்குழந்தைகளுக்கு ஸமபாகம் கொடுக்க வேண்டும்.

5. புருஷன் இறந்தபின்பு ஸ்திரீ மறுபடி விவாகம் செய்துகொள்வதைத் தடுக்கக்கூடாது.

6. விவாகமே இல்லாமல், தனியாக இருந்து வியாபாரம் கைத்தொழில் முதலியவற்றால் கௌரவமாக ஜீவிக்க விரும்பும் ஸ்திரீகளை யதேச்சையான தொழில் செய்து ஜீவிக்க இடங்கொடுக்க வேண்டும்.

7. பெண்கள் கணவனைத் தவிர வேறு புருஷருடன் பேசக் கூடாதென்றும் பழகக்கூடாதென்றும் பயத்தாலும் பொறாமையாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்துவிட வேண்டும்.

8. பெண்களுக்கு ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.

9. தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்யோகம் பெற விரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக் கூடாது.

10. சீக்கிரத்தில் தமிழருக்கு சுயராஜ்யம் கிடைத்தால் அப்போது பெண்களுக்கும் ராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்க வேண்டும்.[25]

மேற்குறித்த பாரதியாரின் இந்தச் சிந்தனைகள் அவர்தம் ஆழ்ந்த அனுபவத்தின் பிழிவாகத் திகழ்கின்றன.

பாரதி பொதுவாழ்வில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட காலந்தொடங்கி அவர்தம் இறுதிவரையில் இழையோட்டமாக இருந்த உணர்வு பெண் விடுதலை எனலாம். அத்தகு பெண்விடுதலை குறித்த எண்ணம் தமிழ்நாட்டில் பல புத்திமான்களின் மனதிலே பட்டு, பெண் விடுதலைக் கட்சி தமிழ்நாட்டின் கண்ணே பலமடைந்து வருவதை நோக்குமிடத்து, தமக்கு அளவில்லாத மகிழ்ச்சி உண்டாவதாகப் பாரதி

25. பாரதியார், பெண் விடுதலை, பாரதி தமிழ் வசனத் திரட்டு, பக். 95-96.

குறிப்பிடுகின்றார். பெண் விடுதலை குறித்த உணர்விலும் தமிழ்நாடு பூமண்டலத்திற்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குமென்பதில் ஆட்சேபமில்லை என அவர் மொழிகிறார்.[26] இவ்வையகம் முழுமைக்குமே பெண்விடுதலையில் தமிழ்நாடு சிறந்த வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்னும் பாரதியின் கனவு எண்ணிப் போற்றத்தக்கது.

பாரதியாரின் இல்லத்தில் பெண்கள் சங்கம் ஒன்று நடந்து வந்ததாகவும், இச்சங்கத்தில், பல பெண்கள் ஒன்றுகூடிப் பெண் உரிமைக் கருத்துக்களை ஆராய்ந்ததாகவும் பாரதியாரின் புதல்வி சகுந்தலா பாரதி குறிப்பிடுகின்றார். 'பெண் விடுதலைக்குத் தமிழ்ப் பெண்கள் செய்யத்தக்கது யாது?' என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரை, பாரதியாரின் புதல்வியான தங்கம்மா ஒரு பெண்கள் கூட்டத்தில் பேசுவதற்காகப் பாரதியாரால் எழுதிக் கொடுக்கப்பட்டதாகவும் குறிக்கப்படுகின்றது.[27] பாரதியின் இல்லமே பெண்ணுரிமை இயக்கக் களமாகத் திகழ்ந்தமை ஆழ்ந்து கருதத்தக்கது.

## முடிவுரை

பாரதியின் கவிதைகள் - கட்டுரைகள் - கதைகள் என அனைத்து வடிவங்களிலுமே பெண்ணுரிமை பற்றிய சிந்தனைகளின் இழையோட்டத்தைப் பொதுப்பண்பாகக் காணமுடிகிறது.

பாரதியின் பெண்ணுரிமை குறித்த உணர்ச்சிக் கொந்தளிப்பை அவர்தம் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன; ஆழ்ந்த பல கருத்துக்களையும் செய்திகளையும் உள்ளடக்கிய அறிவனுபவப் பெட்டகங்களாக அவர்தம் கட்டுரைகள் அமைந்துள்ளன.

சமூகச் சீர்திருத்தக் கவிஞராகவும் தேச விடுதலைக் கவிஞராகவும் திகழ்ந்த பாரதியின் சிந்தனைகளில், அரசியல் விடுதலைக்காக எதிர்பார்த்திராமல் உடனடியாக மலர்ந்தாக வேண்டிய ஒன்றாக பெண்விடுதலை அமைந்திருந்தது எனலாம்.

பாரதி பண்பாட்டில் ஊறித் திளைத்திடும் சிந்தனையாளர் எனினும், வேண்டாத மரபுகளை விட்டொழித்துப் பெண்ணுரிமை நோக்கிய புதுமைகளை ஏற்றுக்கொள்ளும் பண்பாளர்.

பாரதியின் சிந்தனை பெண்ணுரிமைக்காகப் போராட மகளிருக்கு அழைப்புவிடுக்கும் உறுதியும் துணிவும் கொண்ட புதுமைச் சிந்தனையாக வெளிப்படுகின்றது. பெண்விடுதலை என்பது குடும்பத்திலிருந்து

26. பாரதியார், தமிழ்நாட்டின் விழிப்பு, மேற்படி, ப. 84.

27. டாக்டர் சாமுவேல் தாசன், பாரதியும் வள்ளத்தோளும் - ஒப்பியல், ப. 206.

தொடங்கவேண்டும் என்பதும், அதற்கான போராட்டத்திற்குக் காந்தியடிகளின் சாத்வீக வழிமுறையைக் கைக்கொள்ளுதல் வேண்டும் என்பதும் பாரதியின் எண்ணமாக மலர்கிறது.

சமயத்தை ஏற்றுக்கொண்ட பெண்ணியச் சிந்தனையாளராகப் பாரதி திகழ்கின்றார். சமய சன்னியாசியாக இருந்தும் மற்றவர்களைப் போலன்றி பெண்மையைப் போற்றி, பெண்ணுரிமையில் ஈடுபாடு கொண்டுள்ள சுவாமி விவேகானந்தரின் கருத்துக்கள் பாரதியின் பெண்ணியச் சிந்தனைகளுக்குத் துணையாவதை அறியமுடிகிறது. வட பாரதத்தில் பிரும்ம சமாசத்தைத் தோற்றுவித்த ராசாராம் மோகன்ராய் அவர்களின் பெண்ணுரிமைக் கருத்து பாரதியின் சிந்தனைகளில் பிரதிபலிக்கின்றன.

பாரதியின் பெண்ணியம் குறித்த அறிவும் சிந்தனையும் தமிழ்நாட்டளவிலோ இந்திய நாட்டளவிலோ மட்டுமல்லாமல் உலக நாடுகளையெல்லாம் சுட்டிக்காட்டுகின்ற பரந்துபட்ட விசாலப் பார்வை கொண்டதாக அமைந்துள்ளது.

பாரதி, இன்றைய பெண்ணியச் இயக்கச் சிந்தனையாளர்களின் கருத்துக்கு, ஈடுகொடுக்கத்தக்க வகையில் தாம் வாழ்ந்த காலத்திற்கும் சமுதாயச் சூழலுக்கும் ஏற்ப, பெண்ணுரிமை குறித்து உரக்கக் குரல் கொடுத்த புரட்சிச் சிந்தனையாளர் எனலாம்.

பாரதியின் பெண்ணியச் சிந்தனைகள், தனிமனிதரின் சிந்தனையாக மட்டுமல்லாமல், வெகுசன சாதனமான அவர்தம் பத்திரிகைகளின் துணையாலும், அவர்தம் ஆற்றல்மிக்க கவிதை வீச்சுகளினாலும் பெண்ணுரிமை இயக்கமாகவே மலர்ந்திருந்தது எனலாம்.

பாரதியார், தமிழ்நாட்டின் பெண்ணுரிமை இயக்கத்தாருக்கு திரு.வி.க., தந்தை பெரியார் போன்ற பெண்ணுரிமைச் சிந்தனையாளருக்கு முன்னோடி எனலாம்.

பாரதியாரின் பெண்ணுரிமை - பெண்விடுதலைச் சிந்தனைகள், 'தமிழ்நாட்டில் - இந்தியப் பண்பாட்டு வழிப்பட்ட, சமத்துவப் பெண்ணியப் பார்வை'யாக மலர்ந்துள்ளன என்பது பொருத்தமுடையதாகும்.

# பாரதிதாசனின் பெண்ணியச் சிந்தனைகள்

அரங்க. இராமலிங்கம்

இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் தமக்கென்றோர் இடத்தைத் தம் தகுதியால் பெற்றவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். புதியதோர் உலகம் காண விழைந்த பாரதிதாசன், சமுதாய மாற்றத்திற்கான பல்வேறு பாடுபொருள்களையும் தம் படைப்புகளில் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று பெண்ணியச் சிந்தனைகள்.

பெண்களுக்கு இயற்கையாக இருக்கவேண்டிய பண்புகளாக அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார்கள். இப்பண்புகளில் தலையாயதாகக் கற்பு எனும் பண்பினைச் சுட்டுகிறார்கள். தொல்காப்பியர் காலம் முதல் இற்றைநாள் படைப்பாளர் வரை இப்பண்புகளையே பெண்களுக்குரியதாகக் கூறிப் பெண்மைக்கு ஒரு வடிவம் தந்துள்ளார்கள். இவ்வாறு காலம் காலமாகக் கூறப் பெற்றுவந்த பண்புகளின் (கருத்தோட்டங்களின்) ஒருங்கிணைந்த வடிவமாகப் பெண்மை எனும் சொல் நடைமுறையில், வழக்கில் வழங்கி வருகிறது.

பெண்மை எனும் சொல் பெண்ணியம் எனும் சொல்லிலிருந்து வேறுபட்டு நிற்கிறது. அற்றைநாள் முதல் இற்றைநாள் வரை ஒரு பெண் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என ஆண்கள் (ஆணாதிக்க சமூகம்) விரும்பிய கருத்தோட்டங்களின் ஒட்டுமொத்த உருவாகப் பெண்மை எனும் சொல், பொருள் தந்து நிற்கிறது. அனைத்து நிலையிலும் (உடல், உணர்வு எண்ணம், பால்) பெண் ஆணுக்குச் சமம் என்றும் அதற்குரிய சிந்தனைகளின் தொகுப்பாகப் பெண்ணியம் என்ற சொல் பொருள் தந்து நிற்கிறது.

அரசியல், சமுதாயம், பொருளாதாரம் எனும் புறநிலையிலும் பால், உடல், உணர்வு (எண்ணம்), இல்லறம், துறவறம் எனும் அகநிலையிலும் இப்படி எந்நிலையிலும் ஆணுக்குப் பெண் சளைத்தவளல்லள்; சமமானவளே என உணர்த்துவது பெண்ணியம். இப்படிக் குறிப்பிடுவதால் ஆணைவிடப் பெண்ணை உயர்த்திக் கூறலாமா என்றால், அப்போக்கும் கூடாது.

ஆணைவிடப் பெண்ணை உயர்த்தவும் வேண்டாம்; பெண்ணைவிட ஆணை உயர்த்தவும் வேண்டாம்; ஒருவரிடமிருந்து ஒருவரைத் தாழ்த்தவும் வேண்டாம். இருவரும் எல்லா நிலையிலும் சமம் என்பதே பெண்ணியப் பார்வை.

சுருக்கமாகச் சொல்வதென்றால் ஆணுக்கென்று சில பண்புநலன்கள், பெண்ணுக்கென்ற சில பண்புநலன்கள் எனப் பிரித்துக் கூறுவதை விடுத்து, மானுடன் என்ற நிலையில் ஒத்த பண்புகள், ஒத்த கடமைகள், ஒத்த உரிமைகள் என இருபாலாருக்கும் சமமாகவே அமைய முடியும் எனப் பெண்களை மையப்படுத்திப் பார்ப்பதே பெண்ணியம்.

ஓதற் பிரிவும், தூதிற் பிரிவும் ஆணிற்கு மட்டுமே உண்டு; முந்நீர் வழக்கம் மகடுவோடு இல்லை என்பன போன்ற கருத்துகளைப் பெண்ணியம் ஏற்றுக்கொள்வதில்லை. ஒரு ஆண் தவறு செய்துவிட்டு வந்தால் அதை ஒரு பெண் பொறுத்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்துருவம் நிலைபெற்று வேரூன்றியுள்ளது. மாறாகப் பெண்கள் தவறே செய்யக்கூடாது என எதிர்பார்ப்பதைப் போலவே, ஆண்களும் தவறே செய்யக்கூடாது என எதிர்பார்ப்பது பெண்ணியம்.

ஆண் பலரோடு பழகலாம்; வெளியூர்களில் பல காலம் தங்கலாம்; இன்னபிறவற்றையும் செய்யலாம். இப்போக்கினை ஏட்டளவில் தவறு எனக் கண்டித்தாலும், நடைமுறையில் இதனை ஆணாதிக்கச் சமுதாயம் இன்றுவரை ஏற்றுக்கொண்டுதான் இருக்கிறது. இதுபோன்ற போக்குகளில் - பெண்கள் நிலையில் - கருத்தளவில்கூட இச்சமூகம் ஒப்புக்கொண்டு (Compramise) ஏற்றுக்கொள்ளவில்லை. இதுபோன்ற போக்குகள் மாற்றப்பட்டு, அனைத்து வாழ்வியல் நிலையிலும் ஆணும் பெண்ணும் சமமான வாழ்வையும், பாரபட்சமற்ற விமர்சனத்தையும் பெறவேண்டும் என்னும் நோக்குடையது பெண்ணியம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நிகழ்ந்த அரசியல், சமுதாய மாற்றங்களின் விளைவாகப் பல்வேறு இன மக்கள் ஒருங்கிணைந்து வாழும் சூழலும் அதனால் பண்பாட்டு மாற்றங்களும் நிகழ்ந்தன. இப்பண்பாட்டு மாற்றங்கள் பெருவாரியாக மனிதகுல முன்னேற்றத்திற்கே வித்திட்டன. அம்முன்னேற்றங்களுள் ஒன்று பெண்ணுரிமை இயக்கம். அரசியல், சமுதாய நிலைகளில் சமவுரிமை பெறுவதை நோக்காகக் கொண்டது இவ்வியக்கம். இவ்வியக்கக் கருத்துக்கள் இலக்கியத்திலும் இடம்பெறலாயின. இவ்வாறு இயக்கங்களின் தாக்குரவால் இலக்கியத்தில் நுழைந்தவையே இன்று பெண்ணியச் சிந்தனைகளாக மலர்ச்சி பெற்றுள்ளன.

அறிவியற் புரட்சியும், அதன் விளைவால் நிகழ்ந்த தொழிற்புரட்சியும் சமூக அமைப்பைப் பெருமளவில் பாதித்தன. தொழிற் புரட்சியின் காரணமாகச் செல்வம் சிலரிடம் குவியும் நிலை ஏற்பட்டது. செல்வம் மிகுதியாகச் சேரச் சேர குடும்பச் சொத்துக்களின் எண்ணிக்கை மிகுந்தது. இவற்றையெல்லாம் வீட்டிலிருந்துகொண்டு பாதுகாப்பதற்கும் ஒரு நபர் தேவைப்பட்டார். அவருக்குக் குடும்பத் தலைவி என்ற பட்டம் வழங்கப் பெற்றது. சேர்க்கப்பெற்ற சொத்து, தன் வழி வரும் மகனுக்கே சேரவேண்டும் என்ற எண்ணம் ஆண் ஆதிக்க சமூகத்திற்கு ஏற்பட்டது. அதன் விளைவாகக் கற்பு எனும் வைரக்கிரீடம் பெண்களுக்குச் சூட்டப்பெற்றது. இவ்வைரக்கிரீடம் ஆண்களுக்கும் சூட்டப்பெற்றதாக ஏடுகள் எடுத்துரைத்தன. ஆனால் நடைமுறை வாழ்வியல் பற்றி யாரும் அவ்வளவாகக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. சொத்துக்களைப் பாதுகாக்கும் காவலராகப் பெண்ணினத்தைப் பயன்படுத்திக்கொண்டு, சொத்தினை அடையும் உரிமையை மட்டும் தன்னிடத்தே வைத்துக் கொண்டது ஆணினம்.

பெண்நிலைவாதம் என்ற சொல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், இலக்கிய உலகில் புழக்கத்திற்கு வந்தது. பெண்களின் ஜனநாயக உரிமைகளுக்கானப் போராட்டத்தைக் குறிப்பதற்கு இச்சொல் பயன்படுத்தப் பெற்றது. கல்வி பெறுவதில் முன்னுரிமை, வேலைவாய்ப்பில் உரிமை, சொத்துக்களைச் சமமாகப் பெறுவதில் உரிமை, வாக்களிக்கும் உரிமை, சட்டமன்ற நாடாளுமன்றங்களுக்குச் செல்ல உரிமை, பிறப்புக்கட்டுப்பாடு செய்து கொள்ளும் உரிமை, மணவிலக்கு செய்யும் உரிமை எனப் பல நிலைகளில் பெண்நிலைவாதம் அமைந்திருந்தது.

இன்றைய பெண்நிலைவாதம், மேற்குறிப்பிட்ட எல்லைகளையும் கடந்து செல்கிறது. வீட்டில் பெண்கள் ஆண்களுக்குக் கீழ்ப்படிந்து இருத்தல், குடும்ப அமைப்பில் பெண் சுரண்டப்படுதல், தொழில் சமத்துவமின்மை, கலாச்சார அமைப்பில் பெண் தொடர்ந்து குறைவாக மதிக்கப்படுதல், தொழில் ரீதியில் ஆணுக்கு ஒரு கூலி, பெண்ணுக்கு ஒரு கூலி எனும் நிலை, குடும்பம் - பணி எனும் இருநிலைகளில் பெண்கள் இரட்டைச் சுமையினை ஏற்றல் போன்ற பல நிலைகளில் பெண்நிலைவாதம் இன்று தன் எல்லையை விரிவாக்கிக்கொண்டு செல்கிறது.

பெண்கள் அடிமைப்படுவதற்கு இரண்டு காரணங்களைக் காட்டுகிறார் அபர்ணா மகந்தா.[1] ஒன்று கருத்தியல் ரீதியான காரணங்கள்,

1. அபர்ணா மகந்தா, மார்க்சியமும் பெண்நிலைவாதமும், பக். 44-45.

மற்றொன்று உளவியல் ரீதியான காரணங்கள். இதில் முன்னது வழிவழியாக ஆணாதிக்கம் உருவாக்கிய கருத்துகளின் அடிப்படையில் நிகழ்வது; இரண்டாவது இயற்கையாக அமைந்துள்ள பெண்களின் பால், உடல், உணர்வுகளின் விளைவால் நிகழும் உளவியல் காரணங்கள்.

மார்க்சியப் பார்வையில்[2] ஆணாதிக்கத்தினை மூன்று நிலைகளில் கூறலாம்

1. Male Brutality : ஆணாதிக்க வல்லாண்மை (Physical & Mental)(உடல் மற்றும் மனம்)
2. Male Power : ஆணாதிக்கச் சக்தி அல்லது ஆணாற்றல் (பொருளாதாரம், அரசியல், படை)
3. Male Domination : ஆணாதிக்கம் (குடும்பத் தலைவன், பின் குடும்பத்தில் பெரிய பையன்-குடும்பம் மற்றும் சமூகத்தில் ஆணை வைத்தே வாழ்விற்கு முன்னிலையும் முதன்மையும் தருதல்)

மேலே காட்டப்பெற்ற கருத்துருவக் கோட்டுபாடுகள் தகர்க்கப்படுகிற பொழுது பெண்ணியச் சிந்தனைகள் வெற்றிபெறும் என நம்பலாம். "பொது வாழ்க்கைக்கும் சொந்த வாழ்க்கைக்கும் உள்ள தடுப்புச் சுவர்களை இக்கோட்பாடு தகர்க்கிறது. பெண்ணினம் ஆணினத்தால் ஒதுக்கி வைக்கப்பெற்று, கலாசார ரீதியாக அடிமைப்படுத்தப்பட்டதை உடைத்திட வேண்டுமென்றால் ஆண் இனத்தால் கட்டி அமைக்கப்பட்ட பெண் இனத்தின் இரகசிய உலகம் உடைக்கப்பட வேண்டும். இதற்குப் பெண்ணின் உணர்வு நிலையானது, உயர்த்தப்பட்டு, பொது வாழ்க்கைக்குள் அவர்கள் உந்தித் தள்ளப்படவேண்டும்"[3] என்னும் கருத்துரை கருதத்தக்க ஒன்றாகும்.

"சமூகத்தில் ஒரு ஆணுக்கு என்னென்ன உரிமைகளும் வாய்ப்புகளும் உள்ளனவோ அவையனைத்தும் பெண்ணுக்கும் உண்டு. உடற்கூற்றின் வேறுபாடு சமத்துவத்திற்குத் தடையாகக் கூடாது. மேலும், ஆண் ஒரு தனித்த, சுதந்திரமான உயிரியாகச் சமூகத்தில் அங்கீகாரம் செய்யப்படுவதைப் போலவே ஒரு பெண்ணும் செய்யப்பட வேண்டும்.

மதம், சமூகம், பண்பாடு ஆகியவற்றின் பெயரால் பெண் ஆணைவிடத் தாழ்ந்தவள் என்றோ, ஆணைச் சார்ந்து வாழ்பவள் என்றோ இல்லாமல் ஆணுக்கு நிகரானவளாக மதிக்கப்படவேண்டும். பெண்

---

2. Tombottomore (Ed.), A Dictionary of Marxist Thought, p.154.

3. அபர்ணா மகந்தா, மார்க்சியமும் பெண்நிலைவாதமும், ப. 38.

பலவீனமானவள், அறிவற்றவள் என்றெல்லாம் கூறப்படுபவை புறக்கணிக்கப்படவேண்டும். பெண்கள் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமையுடையவர்களாய்த் திகழவேண்டும். பெண்கள் தங்களையே சார்ந்து வாழும் தன்னம்பிக்கை உடையவராய் இருப்பது மிக அவசியம். அப்போதுதான் சமூக மாற்றம் ஏற்படும் எனப் பெண்ணியவாதிகள் கருதுகின்றனர்"[4] என்னும் கருத்துரை பெண்ணியச் சிந்தனைகளை முறைப்படுத்தும் கூற்றாகத் திகழ்கிறது.

"பெண்ணியப் பார்வை கொணர விரும்பும் இலக்கு, பெண்கள் பாரபட்சமற்ற முறையில் இலக்கியங்களில் படைக்கப்படவேண்டும் என்பதேயாகும்.

எந்த ஒரு திறனாய்வுப் பார்வையும் ஆண்களுக்கானது இது, பெண்களுக்கானது இது எனப் பிரித்துப் பார்க்க முடியாது. பெண்ணியப் பார்வையும் பெண்களுக்கு ஆதரவாகப் பேசுவதால், இது பெண்களுக்கானது, ஆண்களுக்கெதிரானது என்றும் கொள்ள முடியாது. இப்பார்வை பொதுவாக இலக்கியப் படைப்புப் பற்றியது என்று கொள்ளுதல் வேண்டும்"[5] எனும் கருத்துரை ஏற்புடையதாகும்.

இச்சிந்தனைகள் காலத்திற்கும், இடத்திற்கும் ஏற்ப மாற்றமடையக் கூடும். இலக்கியக் கொள்கை, இலக்கியத் திறனாய்வு எனும் இருதுறைகளிலும் நிலைபெற்றுள்ள இப்பெண்ணியச் சிந்தனைகள் தற்போது இருநிலைகளில் செயல்படுவதாக அறிஞர் அ.அ. மணவாளன்[6] அவர்கள் குறிப்பிடுகிறார். ஒன்று, பெண் வாசகர் நோக்கில் இலக்கியப் படைப்பை அணுகுதல், பிறிதொன்று பெண் எழுத்தாளர் நோக்கில் இலக்கியத்தைப் படைத்து ஆராய்தல். இவ்விரு நோக்கிலும், இன்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

"பெண் என்ற நிலையில், ஒரு பெண் உடல் கூற்றியலுக்கு அப்பால் சிந்திக்கும் திறம் பெற்ற, ஆறறிவு கொண்ட மனிதப்பிறவி என்ற மதிப்பீடு இலக்கியங்களில் வழங்கப்பெற்றிருக்கின்றதா, இல்லையென்றாலும் அந்த உணர்வை, இலக்கியங்களில் வரும் நாயகியர் பிரதிபலித்துக் காட்டுகின்றனரா என்ற வினாவை எழுப்பிக் கொண்டு ஆராய்வதே பெண்ணியப் பார்வை"[7] என்னும் கருத்துரைக்கேற்ப இக்கட்டுரை பெண்ணியச் சிந்தனைகளை ஆராய முயல்கிறது.

---

4. ம. ப. சித்ரா, பெண்ணியப் பார்வையில் அம்பையின் சிறுகதைகள், எம்பில். பட்ட ஆய்வுரை, பக்.5-6.
5. மேற்படி, ப.9.
6. டாக்டர் அ.அ. மணவாளன், சிலப்பதிகாரம்-ஒரு பெண்ணிய நோக்கம், ஆராய்ச்சி, ப.87.
7. ராஜம் கிருஷ்ணன், பெண்ணியம் தமிழ் இலக்கியங்களில், மேலும், ப.33.

இந்நூற்றாண்டில் எழுதப்பெற்ற படைப்புகளில் உள்ள பெண்ணியச் சிந்தனைகளை எதிர்மறையில் (Negative Approach) ஆராயும் போக்கும், இன்று ஆய்வாளர்களிடையே காணப்பெறுகிறது. பெண்கள் பற்றிப் படைப்பாளர்கள் கூறியுள்ள கருத்துகளை எடுத்துக்காட்டி, இவை பெண்ணியச் சிந்தனைக்கு முரணாக உள்ளன எனக் கூறும் போக்கும் இன்று உள்ளது. இக்கட்டுரையில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் சுட்டியுள்ள பெண்ணியச் சிந்தனைகளைக் கட்டுரையின் பக்க எல்லை கருதியும், கால (Time) நிலை கருதியும் உடன்பாட்டு நெறியிலேயே (Positive Approach) எடுத்துக்காட்டப்பெற்றுள்ளது.

கட்டுரையின் முதலில் குறிப்பிட்டதுபோல இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடங்கி அறுபதுகளில் முழுவளர்ச்சி பெற்றுத் தனக்கென ஒரு இலக்கணத்தை வரைபடச் சட்டத்தை உருவாக்கிக் கொண்டிருப்பது பெண்ணியம். காலத்தின் கட்டாயத் தேவைக்கேற்ப உருக்கொண்ட பெண்ணியப் பார்வையினை, இக்கால கட்டத்திற்கு முன்னால் தோன்றிய படைப்புகளோடும், இக்காலப் படைப்புகளோடும் பொருத்திப் பார்க்கும் முயற்சி இன்று மேற்கொள்ளப்பெற்று வருகிறது. அந்த வகையில் புரட்சிக்கவிஞரின் கவிதைகளோடு பெண்ணியச் சிந்தனைகளைப் பொருந்திப் பார்க்கும் முயற்சியே இக்கட்டுரையில் மேற்கொள்ளப் பெற்றுள்ளது. இன்றைய திறனாய்வாளர்களும், பெண்ணியல்வாதிகளும் கூறும் பெண்ணியல் கருத்தோட்டங்கள் முழுமையும் புரட்சிக்கவிஞரிடம் காணமுடியவில்லை யெனினும், பெண்ணியல் சிந்தனைகளின் வேர்கள் வேர்கொண்டிருக்கின்றன என்பதென்னவோ நிதர்சனமான உண்மை.

பல்வேறு கூறுகளில் பெண்ணியச் சிந்தனைகளை ஆராய்வதற்கு இடமிருக்கிறது. இருப்பினும் அடித்தளமாக இருக்கக்கூடிய மூன்று நிலைகளில் (உடல், உணர்வு, பால்) அமைந்துள்ள பெண்ணியச் சிந்தனைகளை மட்டுமே இக்கட்டுரை எடுத்துக் காட்டுகிறது.

## உடல்

உடலியல் நிலையில் ஆணைவிடப் பெண் சற்று இளைத்தவள், பலம் குறைந்தவள் என்ற எண்ணமே இன்றுவரை சமூகத்தில் நிலவி வருகிறது. ஆனால், இந்த போக்கு இன்று மாறிவருகிறது. காவல்துறை, இராணுவம், விமானம் ஓட்டுதல், இராக்கெட்டில் செல்லுதல் போன்ற பல நிலைகளிலும் பெண்கள் ஆணுக்குச் சமமாக உயர்வு பெற்றனர். பெண்களின் முந்தைய நிலையினை,

> "ஆடை அணிகலன் ஆசைக்கு வாசமலர்
> தேடுவதும் ஆடவர்க்குச் சேவித் திருப்பதுவும்

அஞ்சுவதும், நாணுவதும் ஆமையைப்போல வாழுவதும்
கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம்
மானிடர் கூட்டத்தில் வலியற்ற ஓர்பகுதி"[8]

எனப் படம்பிடித்துக் காட்டுகிறார் பாரதிதாசன். இன்றோ,

"செல்வப் பிள்ளாய் இன்று புவியில் பெண்கள்
சிறுநிலையில் இருக்கவில்லை விழித்துக்கொண்டார்"[9]

எனக் கூறும் பாரதிதாசன், பெண்கள் அணிவகுக்கும் படை ஒன்று உருவாகவேண்டும் என விரும்பினார்.

"தமிழ்ப் பெண்களின் படைஒன்று வேண்டும்,
தக்கைகள் உள்ளத்தைத் திருத்த வேண்டும்
உமியல்ல மாதர் வலக்கை - தீயர்
உயிரை இடிக்கும் உலக்கை"[10]

எனப் பெண்கள் உடல் நிலையிலும், ஆடவர்க்குச் சமமானவர் என்பதை உணர வைக்கின்றார்.

வீரத்தாய் எனும் கவிதை நாடகத்தில் வரும் இராணி விஜயராணி, தன் மகனுக்காகக் கிழவர் உடை தரித்து, மன்னனுக்குரிய பயிற்சிகள் அனைத்தையும் கொடுக்கிறாள். நாட்டின் சேனாதிபதியையே துரத்தியடிக்கக்கூடிய அளவிற்கு வாட்பயிற்சியில் சிறந்து விளங்குகிறாள்.

'தமிழச்சியின் கத்தி' எனும் கதைப்பாடலில், சுப்பம்மா பெரும் படையினைத் தனியொருத்தியாகவே எதிர்நின்று போரிடுகிறாள். பல வீரர்கள் உயிர்துறக்கின்றனர். அவளின் வாள் வீச்சுக்குமுன் பெரும் படையே கலங்கியது. உடல்வன்மை காரணமாக, ஆண்கள்தான் போர்க்களத்தில் வீரத்தை வெளிப்படுத்துவர். பாவேந்தர் படைத்த பெண்களோ ஆண்களைவிட வலிமைமிக்கவராக, போர்க்குணம் மிக்கவராக, வீரம் செறிந்தவராகத் திகழ்கின்றனர்.

தேசிங்கு மன்னனிடம்,

"வெற்பை இடித்துவிடும் - உனது
வீரத்தை யும்காணும்

8. பாரதிதாசன் கவிதைகள்-1, ப.39.(பாரதிதாசன் கவிதைகள், நான்கு தொகுதிகளும் அடங்கியது. பாரதி பதிப்பகம், சென்னை-600 017, முதற்பதிப்பு, 1992.)

9. மேற்படி, ப99.

10. தேனருவி, ப55.

நிற்க மனமிருந்தால் - நின்றுபார்
நெஞ்சைப் பிளக்கும் என்கை"[11]

எனச் சுப்பம்மா அஞ்சாது அவன் அவையிலேயே உரைக்கும் நிலையினைக் காணமுடிகிறது.

"பாவேந்தரின் பெண்கள் ஆணுடை தரித்து உலவினர். கையில் போர் வாளேந்திப் போர்க்களம் சென்றனர். தம்முடைய பகைவர்களைக் கொன்றனர். வில், வாள் போன்ற போர்க்கலை கற்றிருந்தனர். தன் மகனுக்குப் போர்ப் பயிற்சி தரும் அளவிற்குச் சிறந்திருந்தனர்"[12] என்னும் கருத்துரைக்கேற்ப, பாவேந்தர் படைத்த பெண்கள் ஆணுக்குச் சமமாக உடல்நிலையில் திகழ்ந்தனர். போர்ப்பயிற்சி தரும் பணியினை ஆடவரே இதுவரை செய்துவந்தனர். இன்றோ பெண்களும் அப்பணியினைச் செய்வர் என்பதை எடுத்துக்காட்டி பெண்கள் உடல்நிலையில் ஆடவர்களுக்குச் சளைத்தவர்களல்லர், சமமானவர்களே என உணர்த்துகிறார்.

**உணர்வு *(எண்ணங்கள்)***

தாய்மை, அன்பு, பொறுமை, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனப் பல்வேறு பண்புகளின் நிலைக்களனாகச் சித்திரிக்கப்பெற்ற பெண்மை அதிர்ந்து பேசுதல் கூடாது; உரிமைக்குரல் எழுப்புவதும், கேட்பதும் கூடாது என்ற நிலை கடந்த நூற்றாண்டுவரை இருந்தது. இந்நிலையினைப்,

"பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம்என் கின்றீரோ
மண்ணுக்குக் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை?
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற் கொம்பே.
ஊமைஎன்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைதான் ஆடவர்க்கும் உண்டு"[13]

எனப் புலப்படுத்தி, உரிமை கேட்கும் பெண்ணைப் படைத்துள்ளார் பாரதிதாசன்.

"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்"[14]

---

11. தமிழச்சியின் கத்தி, ப.38.
12. டாக்டர் சரளா ராசகோபாலன், புரட்சி கவிஞரும் பெண்மையும், ப.57.
13. பாரதிதாசன் கவிதைகள்-1, ப.5.
14. பாரதியார் கவிதைகள், ப.258.

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"[15]

எனும் மகாகவி பாரதியாரின் கருத்தாக்கம் பாவேந்தரிடம் ஏற்றம் பெற்றது எனில் மிகையன்று.

"ஆண் உயர்வென்பதும் பெண் உயர்வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை.
வாணிகம் செய்யலாம் பெண்கள் - நல்ல
வானூர்தி ஓட்டலாம் பெண்கள்.
ஏணை அசைத்தலும் கூடும் - அதை
யார் அசைத் தாலுமே ஆடும்"[16]

எனும் பாவேந்தரின் பாடல் பெண்ணியத்திற்கு விளக்கமாக அமைந்துள்ளது. யாருக்கும் யாரும் உயர்வில்லை. ஆணும் பெண்ணும் சமம் என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கிறார் பாவேந்தர். ஏணை அசைத்தலும் கூடும், அதை யார் அசைத்தாலும் ஆடும்-என்பதில் நகைச்சுவை இழையோடுகிறது. பெண் அசைத்தால்தான் ஏணை அசையுமா? ஆண் அசைத்தால் அசையாதா? என எள்ளல் தன்மையோடு புரட்சிக்கவிஞர் புகலுவது சிந்தனைக்கு விருந்து.

இல்லறப் பொறுப்பை ஏற்பதும், பெண்களுக்குப் பாதுகாப்பு தருவதும் ஆண்கள் என்ற பழைய கருத்தோட்டத்தைத் தகர்த்து, ஆண்களுக்குப் பாதுகாப்பு தருபவர் பெண்கள் எனப் பெண்மையை முதன்மைப்படுத்தியவர் பாரதிதாசன்.

"வாழ்க்கைப் பயிர் செழிக்க வந்த
வான்மழை அவளே - இன்பத்
தேன்மழை அவளே"[17]

"இடும்பை தீர்ப்பாள் என்மனை அவள்என்
குடும்ப விளக்கு வேறெது கூறுவேன்?"[18]

"புவிப்பெரியான் ஜார்ஜ் பெர்னார்ட் ஷாவுரைத்த
பொன்மொழியைக் கேளுங்கள் நாட்டில் உள்ளீர்

15. பாரதியார் கவிதைகள், ப.258.

16. இசையமுது-1, ப.52.

17. காதல் பாடல்கள், ப.102.

18, குடும்ப விளக்கு, ப.194.

உவந்தொருவன் வாழ்க்கைசரி யாய்நடத்த
உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்
அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்
அவளாலே மணவாளன் சுத்தி பெற்றான்
குவியுமெழிற் பெண்களுக்கே ஊறுசெய்யும்
குள்ளர்களே, கேட்டீரோ ஷாவின் பேச்சை"[19]

என்பன போன்ற அடிகளால், பெண்களே ஆண்களின் வளர்ச்சிக்கு வித்திட்டனர் எனக் கூறலாம்.

அன்பு செலுத்துவதிலும், சேர்ந்து வாழ்வதிலும் இருவரும் சமமே, ஒத்த உரிமையுடையவரே என்பதை,

"எனக்கு நீ துணை அன்றோ? - இங்
குனக்கு நான்துணை அன்றோ?
வழிதனி லுள தழகே - என்
அழகிலுனது விழியே
தொழுத பிறகுன் தழுவல் - நான்
தழுவிப் பிறகுன் தொழுதல்.
நீ உடல் உயிர்நானே - நாம்
நிறை மணமலர் தேனே
ஒப்விலை நமதன்பும் - இங்கு
ஒழியவில் லைபே ரின்பம்"[20]

எனப் புலப்படுத்துகிறார் பாரதிதாசன்.

சஞ்சீவிபர்வதத்தின் சாரலில் வரும் வஞ்சியும், புரட்சிக் கவியில் வரும் அமுதவல்லியும், வீரத்தாயில் வரும் விஜயராணியும், பாண்டியன் பரிசில் வரும் அன்னமும், தமிழச்சியின் கத்தியில் வரும் சுப்பம்மாவும் ஆணுக்கு நிகராக விளங்கி, பெண்ணியக் கருத்தோட்டத்திற்குச் சான்றுகளாய்த் திகழ்கின்றனர்.

பால்

பாலியல் நிலையில் பெண்களை வேறுபடுத்திப் பார்ப்பதோ, தாழ்வாக நினைப்பதோ கூடாது என்பது பெண்ணியச் சிந்தனையின் அடிப்படை நாதம்; அதுவே அதன் வேதம். வெளியில் சென்றுவரும் ஆடவனை எந்தப் பெண்ணும் சந்தேகப்படுதல் இல்லை. ஆனால், வெளியில் செல்லும்

19. பாரதிதாசன் கவிதைகள்-1, ப.92.

20. பாரதிதாசன் கவிதைகள்-2, ப.51.

பெண்ணைச் சந்தேகப்படும் ஆடவரின் நிலையினைச் சுட்டிக்காட்டுகிறார் பாரதிதாசன். தயிர் விற்கச் சென்று வந்த மனைவியிடம்

"தயிர் விற்கப் போனவளே
தட்டானிடம் பேச்சென்ன?
மோர் விற்கப் போனவளே
முத்தனிடம் பேச்சென்ன?[21]

எனக் கேட்கும் ஆடவனின் செயலைச் சுட்டிக்காட்டி, சமுதாய நிலையினைப் படம் பிடித்துக் காட்டுகிறார். ஆணும், பெண்ணும் இரு கண்களைப் போலச் சமமானவர்கள். அவர்களைப் பாலியல் நிலையில் வேறுபடுத்தல் கூடாது என்பதனைப்,

"பெண்ணுக்கு ஒரு நீதி கண்டீர்
பேதமெனும் மதுவை யுண்டீர்
கண்ணிலொன்றைப் பழுது செய்தால் கான்றுமிழாதோ?
கான்றுமிழாதோ? புவிதான் பழியாதோ?"[22]

எனப் புகன்று, ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்னும் சமுதாயக் கேட்டைச் சாடியவர் பாரதிதாசன்.

பாலியல் நிலையில் பெண் ஆணுக்குக் கட்டுப்பட்டவள் - அடங்கியவள் என்ற கருத்துருவம் நிலைபெற்ற இந்நாட்டில் பொருந்தாமணம் நிகழ்ந்ததில் வியப்பில்லை. இப்பொருந்தா மணத்தைக் கடுமையாகச் சாடியவர் பாரதிதாசன்.

"மண்ணாய்ப் போக மண்ணாய்ப் போக,
மனம் பொருந்தா மணம் மண்ணாய்ப் போக.
சமூகச் சட்டமே சமூக வழக்கமே
நீங்கள் மக்கள் அனைவரும்
ஏங்காதிருக்க மண்ணாய்ப் போகவே"[23]

என்றும்,

"ஆனைக்குக் காதில்லையாம் அளிப்பதுண்டோ நீர் இரவல்?
கூன்முதுகின் உச்சியிலே கொக்குக்கழுத்து முளைத்த தென்ன?
மாமா எங்கள் கொஞ்சுகிளியை நீர்மணக்க லாமா?
எட்டாள் எடுக்க ஒண்ணா இரும்புப் பீப்பாய் போலுடம்பு"

---

21. பாரதிதாசன் கவிதைகள்-4, ப.76.

22. பாரதிதாசன் கவிதைகள்-1, ப.104.

23. பாரதிதாசன் கவிதைகள்-1, ப.97.

கொட்டாப் புளிக் கால்களால் குள்ள வாத்துப்போல் நடப்பீர்
மாமா - எங்கள் கோகிலத்தை நீர் மணக்கலாமா?"[24]

எனக் குரல் கொடுத்தவர் பாரதிதாசன்.

குழந்தை மணத்தின் கொடுமையைக் கண்டு கொதித்தவர் பாரதிதாசன்.

கணவனை இழந்தவர்கள் மறுமணம் செய்துகொள்ளலாம் என்பதை,

"மறுமணம் புரிவது - சிறுமை என்றறைவது
குறுகிய மதியென - அறிஞர்கள் மொழிகுவர்"[25]

எனப் புரட்சிக்குரல் கொடுத்தவர் பாரதிதாசன்.

விதவைகள் மறுமணம் செய்துகொள்ள வேண்டும் எனக் கூறிய பாரதிதாசன், 'கைம்மை' என்ற சொல்லே தமிழில் இருக்கக்கூடாது எனப் பாடினார்.

"காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட
கைம்மையைத் தூர்க்காதீர் - ஒரு
கட்டழகன் திருத் தோளினைச் சேர்ந்திடச்
சாத்திரம் பார்க்காதீர்"[26]

என்றும்,

கைம்பெண்ணாய் வருந்தாதே பழிஎன்றன் மீதே
அடஞ்செய்யும் வைதிகம் பொருள்படுத் தாதே!
ஆசைக் குரியவனை நாடு - மகிழ்வோடு
தார் சூடு - நலம் தேடு"[27]

என்றும்,

"பைந்தமிழைச்சீ ராக்கக்
கைம்மை என்னுஞ்சொல் நீக்கப்
பறந்து வா"[28]

என்றும் பாடி, பெண்ணியத்திற்கு வித்திட்டவர் பாரதிதாசன்.

24. முல்லைக்காடு, ப.41.

25. பாரதிதாசன் கவிதைகள்-1, பக்.103.

26. மேற்படி, ப.94.

27. மேற்படி, ப.103.

28. மேற்படி, ப.105.

பெண்ணாகப் பிறந்துவிட்டதால் அவளின் முதன்மைப் பணி சமைப்பது என்றாகிவிட்டது. சமைப்பதும், பிள்ளை பெறுவதும், இல்லத்தில் இருப்போருக்குப் பணி செய்வதும் அவளின் முழுநேரப் பணியாகிவிட்டது. இதனை,

“சமைப்பது பெண்களுக்குத்
தவிர்க் கொணாக் கடமை என்றும்,
சமைத்திடும் தொழிலோ, நல்ல
தாய்மார்க்கே தக்க தென்றும்
தமிழ்த்திரு நாடு தன்னில்
இருக்குமோர் சட்டந் தன்னை
இமைப்போதில் நீக்க வேண்டில்
பெண்கல்வி வேண்டும்”[29]

எனக் கடுமையாகச் சாடுகிறார்.

“துணைவர் இலக்கணம்” எனும் கவிதையில் விருந்தினர் வருகைக்காகக் கணவன், மனைவி இருவரும் ஒருங்கிணைந்து சமைக்கும் திறத்தைக் கூறுகிறார். சமைப்பது பெண்களுக்குரியது எனும் சமுதாய வழக்கத்தை மாற்றி, ஆண்களும் சமையலில் ஈடுபட்டு, வரும் விருந்தினரைப் போற்ற வேண்டும் எனும் கருத்தைப் புகன்றவர் புரட்சிக்கவிஞர்.

பிள்ளைபெறும் இயந்திரமாகப் பெண்கள் இருப்பதைச் சாடி,

“காதலுக்கு வழிவகுத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோர் இதிலென்ன குற்றம்?”[30]

எனப் பாடினார் பாவேந்தர். அவரைப் போலவே, சமையலறையில் பணிப் பெண்களாகவும், கட்டிலறையில் போகப் பொருளாகவும் மட்டுமே ஆண்களின் பார்வையில் படுகின்ற பெண்களின் நிலையைக் கவிஞர் வைரமுத்து,

“பாவம் மனைவி
இந்த
இல்லறக் கிரிக்கெட்டில்
கட்டிலறைக்கும்
சமையலறைக்கும்

29. காதல் பாடல்கள், ப.178.

30. பாரதிதாசன் கவிதைகள்-1, ப.108.

ரன்கள் எடுத்தெடுத்தே
ரணமாய்ப் போனாள்"[31]

எனக் குறிப்பிடுகிறார்.

இக்கவிதையில் ஒரு வரியினைச் சேர்க்கலாம் என எனக்குத் தோன்றுகிறது.

"பாவம் மனைவி
இந்த
இல்லறக் கிரிக்கெட்டில்
கட்டிலறைக்கும்
சமையலறைக்கும்
அலுவலகத்திற்கும்
ரன்கள் எடுத்தெடுத்தே
ரணமாய்ப் போனாள்"

எனக் கூறுவது இன்றைய வாழ்விற்குப் பொருத்தமாகத் தோன்றுகிறது.

**இறுதியாக. . .**

இதுவரை குறிப்பிட்ட மூன்று நிலைகளில் மட்டுமன்றி, வேறு பல நிலைகளிலும் பாரதிதாசனார் பெண்ணியச் சிந்தனைகளைக் கூறியுள்ளார். அவற்றுள் சில. . .

1. காதல் வாழ்வையும், இல்லறச் சிறப்பையும் மிகச் சிறப்பாகப் புலப்படுத்தியுள்ள பாரதிதாசன், தம் படைப்புகளில் ஓரிடத்திலேயும் மணமகள் கழுத்தில் தாலி அணிவிப்பதாகக் குறிப்பிடவில்லை.
2. வீரன் என்ற ஆண்பால் சொல்லிற்கு, 'வீரி' என்ற பெண்பால் சொல்லைப் படைத்துக் காட்டியுள்ளார் 'நீரன்றோ வீரியார்' (வீரத்தாய்) என்பது அவர் பாடல் வரி.
3. காதல் உணர்வை வெளிப்படுத்துவதில் முதலில் ஆணே முந்தி வருவான். காரணம் ஆண்மை! பெண்ணோ, பெண்மை, நாணம், அச்சம் காரணமாக உள்ளத்தில் ஊறிவரும் அன்பிருந்தாலும், தன்னைப் புலப்படுத்திக் கொள்ளத் தயங்குவாள். இவ்வாறுதான் இன்றுவரை இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டிக்கொண்டிருந்தன. இந்நிலையினை மாற்றி, பெண் தன் காதலைத் தானே முதலில் வெளிப்படுத்துவதாகப் பாரதிதாசன் படைத்துள்ளார். இப்போக்கினை அவர் படைத்திருக்கும் பெரும்பான்மையான பெண் மாந்தர்களிடம் காணலாம். சான்றாகப் புரட்சிக் கவியில், கதைத்தலைவன்

*31.* கவிஞர் இரா. வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள், ப.19.

கவிஞன் உதாரன் தயங்குகிறான்; அச்சப் படுகிறான். தலைவி அமுதவல்லியோ தன் காதலை வெளிப்படுத்தி, காதலனுக்குத் துணிவையும் தந்து அன்பை வளர்க்கிறாள்.

4. ஒருவனுக்கு ஒருத்தி என்ற சட்டம் ஏட்டளவில்தான் உள்ளது; நடைமுறையில் இல்லை. ஆடவர் பல பெண்களோடு தொடர்பு கொள்வதும் பல பெண்களை மணந்துகொள்வதும் இன்றும் நடைமுறையில் இருந்துவருகிறது. இச்செயலைப் பெண்ணொருத்தி செய்தால் அதனைப் பழித்தும், இழித்தும் பேசுகிறது ஆடவருலகம். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தம் படைப்புகளில் ஆடவன் பல மகளிரை மணப்பதை இழித்தும், இடித்தும் கூறுவதுடன், பெண் ஒருத்தி மூன்று முறை திருமணம் செய்துகொள்வதாகக் காட்டுகிறார். 'எது பழிப்பு' என்னும் சிறுகதையில், முத்தம்மை என்பவள் மூன்று முறை திருமணம் செய்து கொள்கிறாள். இவ்வாறு பலதாரமணம், விதவை மணம், பகுத்தறிவு வழி நடைபெறும் புரட்சித் திருமணம், கலப்புத் திருமணம், எனப் பெண்ணியச் சிந்தனைகளை வெளிப்படுத்தியவர் பாரதிதாசன்.

5. "இருக்கும் குழந்தைகள் போதும்" எனக் குடும்பக் கட்டுப்பாட்டை வற்புறுத்திய பாரதிதாசன், குழந்தைகளை, பெற்ற தாய் மட்டுமே வளர்க்க வேண்டுமா? ஆடவர்கள் வளர்க்கக் கூடாதா? என்றும் சீரிய முறையில் குழந்தைகளை வளர்க்கப் பொது நிறுவனங்கள் (குழந்தை காப்பகங்கள்) அமைய வேண்டும் என்றும் பாடியுள்ளார்.

6. பெண்கள் உரிமையற்று – அடிமைப்பட்டதற்குக் காரணம் ஆண்களே என்பதைப் புரட்சிக் கவிஞர்,

> "புவிக்கொன் றுரைப்பேன் புருஷர் கூட்டம்
> பெண்களை ஆதிப் பெருநாள் தொடங்கித்
> திருந்தா வகையிற் செலுத்தலால் அவர்கள்
> சுருங்கிய உள்ளம் விரிந்தபா டில்லையே"[32]

எனப் புகலுவது புவியோர்க்குப் புரிந்தால் சரி!

**முடிவாக. .**

இற்றைநாள் பெண்ணியச் சிந்தனைகளைக் காலத்தால் முற்பட்ட பாவேந்தரின் சிந்தனைகளோடு பொருத்திப் பார்க்கும் முயற்சியே இக்கட்டுரை.

---

*32.* பாரதிதாசன் கவிதைகள்-*1,* ப.*55.*

**கட்டுரையின் வழி பெறப்பெற்ற முடிவு. . .**

அடடே! தாத்தாவின் சட்டை, பேரனின் விருப்பத்திற்கேற்பப் பொருத்தமாகவும் இருக்கிறதே!

தொலைநோக்குச் சிந்தனையோடு புதுமைக் கவிஞராய்ப் புத்துலகம் காண விழைந்த பாவேந்தர் பாரதிதாசனாரைப் புரட்சிக் கவிஞர் எனப் புகலுவது பொருத்தமுடையதுதானே.

# பட்டுக்கோட்டையாரின் பெண்ணியச் சிந்தனைகள்

இரா. கஸ்தூரி

பெண்ணும் ஆணும் கூடி வாழும் நிலையே சமுதாயமாகும். சமுதாயத்தின் ஓர் அங்கமான பெண், பண்டைக் காலத்திலிருந்து இன்று வரை, அறிவு, ஆற்றல், ஆளுமை, அன்பு, ஒப்புரவு, தொண்டு என்ற நிலைகளில் சிறந்திருந்தும், அவளுக்குச் சமஉரிமை தரப்படவில்லை. இவ்வுரிமையைப் பெற வேண்டும் என்பதே, பெண்ணியச் சிந்தனையாளர்களின் எண்ணமாகும்.

## பெண்ணியம்

சமூகத்தில், பெண்ணியம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. "பெண்ணியம் ஒரு சமூகக் கருத்தாக்கம். இது குறுகிய காலத்திற்குள் சமூக அறிவியலின் அனைத்துத் தத்துவங்களையும், சித்தாந்தங்களையும், மறுபரிசீலனைக்குட்படுத்தத் தூண்டுகின்ற எழுச்சி மிகு ஆற்றலாகப் பரிணமித்து வருகிறது."[1]

பெண், ஆண் என்ற வேறுபாடு இல்லாத, மிக உன்னதமான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதே முதன்மை நோக்கமாகும். மேலும், ஆணாதிக்கத்திலிருந்து விடுதலை, சமுதாயத்தில் ஆணுக்குச் சமமான உரிமை, அவர்களுக்குள்ள இழிநிலையிலிருந்து முன்னேற்றம், பெண்களுக்கென்று சமுதாயம் விதித்திருக்கும் சில விதிமுறைகளைப் பொதுமையாக்கல், உடலியல் வேறுபாடு காரணமாக விதிக்கப்பட்டிருக்கும் சில பழமையான விதிமுறைகளை உடைத்தெறிதல், பெண்களுக்கே, உரித்தாக வைக்கப்பட்ட அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, பேதமை, கற்பு போன்ற இலக்கிய மரபுகளைக் களைதல், குறிப்பாகப் பால் சமத்துவத்தை ஏற்படுத்தல் என்பன போன்ற கருத்துக்களை மையமாகக் கொண்டு பெண்ணியக்கம் இயங்குகிறது.

---

1. தி. கமலி, 'பெண்ணியக் கலைச் சொல்லாக்க முறைகள்', இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஆய்வுக் கோவை, புதுவை, முதற்பதிப்பு, *1992*, ப. *179*.

**பெண்ணியச் சிந்தனை**

சமுதாயத்தில், பெண்கள் நிலை மிகவும் பரிதாபகரமாகவே உள்ளது. பெண்களை ஆண்கள், ஆண்டான் அடிமை என்ற நிலையிலேயே நடத்தி வருகிறார்கள். பெண்களைப் பாவ பிறவி எனவும், பெண் குழந்தைகள் பிறப்பின் வருந்தத்தக்கதாகவும் கருதி வருகிறார்கள். பெண் என்பவள் குழந்தைப் பருவத்தில், தாய் தந்தை பாதுகாப்பிலும், திருமணமான பிறகு, கணவன் ஆதரவிலும், முதுமைப் பருவத்தில் மகன் உதவியிலும், வாழ வேண்டியவளாக, ஒரு உடைமைப் பொருளாகவே கருதும் நிலையுள்ளது. கல்வி கற்றுத்தரும் நிலையிலும் பாகுபாடுள்ளது. கணவனைத் தேர்ந்தெடுக்கும் நிலையில், பெற்றோர் விரும்பும் ஆடவனை மணக்கும் நிலையே, இன்றும் பெரும்பான்மையான குடும்பங்களில் நிலவி வருகிறது.

அவர்கள், பெண் திருமணமாகி, கணவனுடன் அனுப்பும்போது குடி, சூது போன்ற தீயவழிகளில் ஈடுபட்டவனாக இருந்தாலும், அவனைத் திருத்தி, நல்வழிபடுத்த நினைக்க வேண்டும், என்ற, புத்திமதியைக் கூறி அனுப்புகிறார்கள். தனித்து வாழும் துணிவு வேண்டும் என்று நவில்வதில்லை. சட்டப்படி பெண்களுக்குச் சொத்துரிமை இருப்பினும், அவர்களுக்கு, நடைமுறையில், அவ்வுரிமையில்லை என்பதே உண்மையான ஒன்றாகும்.

கணவன் இறந்து, பின் விதவையானால், இதுவரை அனுபவித்த எந்த சுகத்தையும், தன்னை அழகுப்படுத்திக் கொள்வதையும் கூட ஏற்றுக் கொள்வதில்லை.

பெண்கள் சமுதாயத்தின் மானிட சக்தி - அவள் சக்தியை வீணடித்தல் கூடாது - அவர்களைத் துன்புறுத்தல் கூடாது - அவர்களுக்குச் சம உரிமை தரல் வேண்டும் என்பதே பெண்ணியச் சிந்தனை எனலாம்.

மக்கள் கவிஞர், பாட்டாளி வர்க்கக்கவிஞர், முற்போக்குக் கவிஞர், புதுமைக் கவிஞர், இயற்கைக் கவிஞர், பாடல் மேதை எனப் பாராட்டப்பட்ட கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் (இக்கட்டுரையில் கவிஞர் என்றே தொடர்ந்து இவர் குறிக்கப்படுகிறார்). *19*-ஆம் வயதில் கவிபாடும் ஆற்றல் பெற்ற அவர், மேலும் பத்தாண்டுகள்தான் வாழ்ந்தவரெனினும் காலத்தால் அழிக்க முடியாத, புதுமைக் கருத்துக்களை அள்ளி வீசி, தனக்கெனத் தமிழிலக்கியவுலகில் தனியிடம் பெற்றவர். இவருடைய பாடல்கள் பெரும்பாலும் திரையிசைப் பாடல்களாகும். அவற்றுள் ஓரிரு கவிதைகள் தம் நண்பர்களுக்காக எழுதப்பட்டவையாகும்.

**கவிஞரின் கவிதைகள் - மலர்ந்த காலம்**

பட்டுக்கோட்டையார் பாடல்களில், பெண்ணியச் சிந்தனை என்பது பற்றி ஆய்வதற்குமுன், அவருடைய காலநிலையை, சமுதாய நிலையை அறிவது இன்றியமையாததாகும். "கவிஞரின் பாடல்கள் யாவும், *1951-60* ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மலர்ந்தவையாகும். இந்தப் பத்தாண்டுகளில், நமது நாட்டில் அநேகச் சம்பவங்கள் நிகழ்ந்தன. பெற்ற சுதந்திரத்தைப் பறிக்க, நாட்டின் அகமும், புறமும் சில சமூகத்துரோகிகள் திட்டமிட்டு முயன்றனர். மக்களின் வாழ்வைச் சிதைத்து, யுத்த பீதி உண்டாக்கி, உலக சமாதானத்தைச் சீர் குலைக்கவும், அவர்கள் தயங்க வில்லை. அதே சமயம், இத்தகைய நாச சக்திகளை, அம்பலப்படுத்தி, நல் வாழ்வுக்காகவும், உலக சமாதானம் நிலைநிறுத்தவும் மக்கள் போராடி வந்தனர். இச் சூழலில்தான் பட்டுக்கோட்டையாரின் பாடல்கள் தமிழ்த் திரைப்பட உலகில் இசையுடன் முழங்கின."[2]

பெண்ணின் பெருமை, பெண் படும்பாடு, பெண் தளிர், பெண்ணின் மறுபக்கம், பெண்கல்வி, அறிவொளி, பெண்ணுரிமை, மெய்யன்பு, பேரின்பம், பெண்ணடிமை, பெண்-முதன்மை, பெண்ணின் படிநிலைகள், பெண்ணும் இல்லறமும், பெண்ணொளி, பொதுமை, பெண்-அவலம் அனைத்தும் பெண் என்ற தலைப்புகளின் வழிப் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களில் உள்ள பெண்ணியம் பற்றிய கருத்துக்களைக் காணலாம்.

பெண்ணின உரிமைக்கு, முதலில் குரல் கொடுத்தவர் மாயூரம் வேதநாயகம்பிள்ளை, பாரதியார், பாரதிதாசன் போன்றவர்கள் ஆவர். இவர்களுடைய, வழிவந்தவர், நம் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள்.

சமுதாயம் முழு விடுதலை பெற்று உயர, பெண்கள் முன்னேற்றம் மிக அவசியமானதொன்றாகும். இதனையுணர்ந்த கவிஞர், தம் பாடல்களில், பெண்களின் உயர்வினைப் பற்றியும், அவர்களுக்குச் சமுதாயத்திலுள்ள நிலைமை குறித்தும், அவர்கள் படும் துயரம், அத்துன்பம் நீங்க பலவழிகள், இவைகளைத் தம் பாடல்களில் பாடியுள்ளார்.

**பெண்ணின் பெருமை**

மனிதனுடைய முதல் அறிமுகம் தாய் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இதனை,

---

*2*. பி.இ. பாலகிருஷ்ணன் (தொகு.), "மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரப் பாடல்கள்" (விரிவாக்கப்பட்ட பதிப்பு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, மூன்றாம் பதிப்பு, *1973*, ப.*9*.

"ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே" (ப. 102)

என்று தந்துள்ளார். (அடைப்புக்குறி எண்கள் "கவிஞர் பட்டுகோட்டைக் கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்கள்" என்ற நூலின் பக்க எண்கள்).

"மங்கையரின்றித் தனியாக
வந்தவர் கிடையாது
தந்ததும் பெண்ணையா
கொண்டதும் பெண்ணையா" (ப. 170)

என்று பெண்ணை முதன்மைப்படுத்தியுள்ளார். இப்பெண்மைப் பற்றி "பெண்மை என்பது அநாதியாக முழுமுதற் பொருளின் ஒரு கூறாயிருப்பது. அப்பெண்மை, தண்மைச் சக்தியாய்த் தனக்குரிய கடனை ஆற்றி வருகிறது. அச்சக்தியின் கூறே பெண்ணுலகென்பது"[3] என்கிறார் திரு.வி.க. பாரதியார், பெண்மையை உடலினை இயக்கும் உயிராகக் கூறுகிறார்.

"உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்த்திடும்
உயிருனுக் குயிராயின்ப மாகிடும்
உயிரினு மிந்தப் பெண்மை யினிதடா"[4]

**பெண் படும்பாடு**

ஆண்களை இயக்கும், பெண்களைச் சீரழித்து, அவர்களை ஆதரவற்றவர்களாக்கும் அந்நிலையை ஒரு பெண், எண்ணி வருந்துவதாகச் சித்திரிக்கிறார்.

"அழாதே பாப்பா அழாதே!
அழாதே பாப்பா அழாதே!
அம்மா இருந்தா பால் தருவாங்க!
அனாதை அழுதா யார் வருவாங்க?
என் தாயுமில்லை உன் தாயுமில்லை"

என்று வருந்தி அதற்குத் தீர்வாக,

"பேசாத நீதி நமக்காக பேசும்" (ப.218)

என்கிறார் கவிஞர். சமுதாயத்தில், கயவனொருவனால் ஏமாற்றப்பட்டு, தாயில்லாத குழந்தையைத் தாயறியாத ஒருத்தி தாலாட்டும் நிலையைக்

3. திரு. வி. கல்யாணசுந்தரம், "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை", சாது அச்சுக்கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1934, ப. 346.

4. பாரதியார், "பாரதியார் கவிதைகள்", வானவில் பிரசுரம், சென்னை, மறுபதிப்பு, 1986, ப. 503.

காட்டியுள்ளார். இச்சீரழிவைக் கண்டு பொங்கி எழுந்து, பேசாத நீதி பேச வேண்டுமென்று அறைகூவல்விடுகிறார்.

"ஸ்திரீகளுக்கு ஜீவன் உண்டு, மனம் உண்டு, புத்தி உண்டு, ஐந்து புலன்கள் உண்டு, அவர்கள் செத்த யந்திரங்களல்லர்....... சாதாரணமாக ஆண் மாதிரியாகவேதான். புறவுறுப்புக்களில் மாறுதல்"[5] என்ற எண்ணம் அனைவர் உள்ளங்களிலும் பதிய வேண்டும்.

**பெண் தளிர்**

> "பெண் சிசுவைக் கொன்றுவிடும் வழக்கம் சீன மக்களிடம் இருந்ததாகப் பதினேழாவது நூற்றாண்டில் பாதிரியார்கள் குறிப்பிடுவர். பெண் குழந்தைக்குத் தேவையான சத்துணவு தரப்படாததாலும், போதிய கவனம் செலுத்தப்படாததாலும், பெண் குழந்தை இறப்பு வீதம் அதிகரிக்கும் நிலை உலகெங்கும் உள்ளது. பங்களாதேசம், பர்மா, ஜோர்டான், பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து, லெபனான் ஆகியவிடங்களில் பெண் குழந்தை இறப்பு வீதம் மிகுதியாக உள்ளது"[6]

இன்று இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் பெண்கள் தமக்குப் பிறக்கும், பெண் குழந்தைகளைக் கொல்லும் செய்திகளைப் படித்தும், கேட்டும், வருந்துகிறோம். இந்நிலையை மாற்றக் கவிஞர் விழைகிறார். ஒரு மனையில், பெண் குழந்தை பிறக்கிறது. அனைவரும் மகிழ்ச்சியுடன் சீராட்டுகிறார்கள்.

> "செல்வம் செழிக்கவே
> சிந்தையெல்லாம் மகிழவே,
> மங்கையர் குலக்கொடி
> வந்தே பிறந்தனள்" *(ப.216)*

என்று பெண் குழந்தை பிறந்ததால், செல்வம் செழித்து, வீட்டில் மகிழ்ச்சி பொங்குகிறது; பொங்கும்; பொங்க வேண்டும் என்கிறார். பெண் குழந்தைகள், அனாதைக் குழந்தைகள் படும் துன்பம், சமுதாயத்தில் அவர்களுக்குள்ள மதிப்பு, அக்குழந்தைகள் அடையும் இன்னல்

5. பாரதியார், "மகாகவி பாரதியார் கட்டுரைகள்" வானதி பதிப்பகம், சென்னை இரண்டாம் பதிப்பு, *1986*, ப. *241*.

6. தேவதத்தா, தி. கமலி, பெண்ணியக் கலைச்சொல் விளக்கக் கையேடு, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழம், சென்னை, முதற்பதிப்பு, *1992*, ப. *42*.

இவைகளைக் காட்டிப் புதியதோர் இனிய சமுதாயம் உருவாக்க அன்புக் கட்டளையிடுகிறார்.

**பெண்ணின் மறுபக்கம்**

கவிஞர், தவறு செய்யும் பெண்களுக்கு அறிவுரை வழங்கவும் தயங்கவில்லை. சோம்பலின் காரணமாகத் தனக்குப் பிறந்த குழந்தையிடம், அன்பில்லாது, தின்று கொழுத்திருக்கும் பெண்களைச் சாடுகிறார்.

> "தனக்குப் பொறந்த கொழந்தையைத் தான் தாலாட்ட முடியாமே
> சம்பளம் கொடுத்து ஆள் பிடிப்பா பொம்பளே!" *(ப.87)*

என்ற அடிகளின் மூலம், பெண் குழந்தைகளை, அன்புடன் வளர்த்தல் வேண்டும், நாகரிக மோகம் கொண்ட, பொறுப்பற்ற பெண்களுக்கு நல்வழியும் காட்டுகிறார்.

வளர்ந்துவரும் சமுதாயத்தில், பெண் விடுதலை என்ற பெயரில், பெண்களில் சிலர், தம் பொறுப்பற்ற போக்கினால், இல்லறத்தைச் சிதைத்து விடக்கூடாது என்ற நோக்கில் சில அறிவுரைகளையும் வழங்குகிறார்.

> பெண் உடலென்றால் ஆண் உயிர் *(ப.136)*
> பெண் பூவென்றால் ஆண் மணம் *(ப.286)*
> பெண் தாமரையென்றால் ஆண் சூரியன் *(ப.135)*
> பெண் வீடென்றால் ஆண் தாங்கும் சுவர் *(ப.164)*

என ஒன்றோடொன்று இணைந்து, இன்பம் தரும் நிலையைக் காட்டி, பெண், ஆண் இருவரும் இணைந்து இல்லறத்தை நல்லறமாக்கி, வருங்கால சமுதாயத்தினருக்கும் வழிகாட்ட வேண்டுமென விழைகிறார்.

**பெண் கல்வி**

நாடு முன்னேற, பெண்கள் முன்னேற்றம் இன்றியமையாதது. பெண்கள் உரிமைபெற கல்வி வேண்டும். "ஆடவன் மட்டும் படித்துப் பெண் படிக்காமலிருப்பது, பாதியுடலில் உயிரும், பாதி உடலில் உயிர் இல்லாமலும் செய்கிற பாரிச வாயு போல"[7] என்று வேதநாயகம் பிள்ளையவர்கள், பெண் கல்வி வேண்டுமென வற்புறுத்துகிறார்.

> "கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்"[8]

7. மாயூரம் வேதநாயகம்பிள்ளை, 'பெண்கல்வி' திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை; மூன்றாம் பதிப்பு, *1953.* ப. *14*

8. பாரதிதாசன், "குடும்ப விளக்கு" *(முதற்பகுதியும், இரண்டாம் பகுதியும்),* பாரி நிலையம், சென்னை, *9*ஆம் பதிப்பு, *1979,* ப. *69.*

என்று பாரதிதாசன் கூறுகிறார். இங்குத் தூய்மையும், தெளிவும் காண இயலாது. கவிஞரும், சுற்றுப்புறத் தூய்மை பற்றிய, விழிப்புணர்வு வேண்டுமென்றால், கல்வி அறிவு வேண்டுமென்கிறார். அப்பொழுதுதான் திருத்தம் ஏற்படும் என்பதை,

"ஒரு கருத்தும் புரியாமே படிப்பும் வளராமே
திருந்து திருந்துன்னா திருந்திடுமா" *(ப.126)*

என்று கூறி, அவர்களை உயர்த்த, ஓர் அரிய வழியும் காட்டுகிறார்.

**எழுத்தறிவின்மை**

கிராமத்திலும், நகரத்திலும், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். இதனால், இன்றைய நாட்டுப் பொருளாதார அரசியல் நடப்புக்கள், தெரியாமல் வாழும் பெண்களைப் பார்த்து,

"கையெழுத்துப் போட கூடக் கல்வியறிவில்லாமே
கட்டைவிரல் முத்திரையில் - ஓங்க
கதைகளெல்லாம் நடக்குதடி" *(ப.88)*

என்று கேலி செய்து, எழுத்தறிவு பெற வேண்டும் என அறிவு கொளுத்துகிறார்.

**அறிவொளி**

ஆண்களின் அடக்குமுறை தளைகளிலிருந்து பெண் விடுதலை பெற கல்வி வேண்டும். அக்கல்வி கற்பதால், முதலில் தன்னம்பிக்கை ஏற்பட்டு, சமுதாயத்தில் தானொரு அங்கம் என்ற உணர்வு வளரும். கவிஞர் "சின்ன வீட்டு ராணி" *(ப.72-73)* என்ற பெண்ணின், கூற்றாகக் கூறுகிறார். தவறு செய்பவர்களைத் தண்டிப்பாள். பொய் கூறுபவர்களைப் புரட்டி எடுப்பாள், வம்புக்கார கும்பல்களைப் புயல் போலத் தாக்குவாள், வாளெடுத்து வீசி மானம் காப்பாள், தேவைக்கு மேல் பணம் வைத்திருப்பவர்களிடமிருந்து பிடுங்கி, ஏழைகளுக்குத் தருவாள். அப்படிப்பட்ட அறிவு மிகுந்த சின்ன ராணி போர்க்களம் சென்று போர் செய்து, வீர மரணம் அடைந்தாள்" என்று கூறித் தான் காண விரும்பும் புதுமைப் பெண்ணை, நம் கண் முன்னே காட்டுகிறார்.

"நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்

திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"[9]

பாரதி காட்டிய புதுமைப் பெண்ணை, இங்கு நினைப்பது இதமான ஒன்றாகும்.

**பெண்ணுரிமை**

ஆண்களுக்குச் சமமாகப் பெண்களுக்கு அனைத்து நிலையிலும் உரிமை வழங்கவேண்டும். குறிப்பாகத் தனக்கு நிகரான ஆடவனைத் தேர்ந்தெடுக்கப் பெண்களுக்கு உரிமை வழங்க வேண்டுமென்பது, கவிஞரின் விருப்பமாகும்.

"என்னத்தான் புடிச்சிருக்கா
இல்லையான்னு மனசுலே
இருக்கும் ரகசியத்தை
இழுத்துப் போடுங்க வெளியிலே
——— எண்ணத்தில்
பொருத்தம் வேணுங்க
அது இல்லேன்னா
இரண்டு பக்கமும் இன்பம் ஏதுங்க? *(ப.144)*

என்று, ஆண் மகனைப் பார்த்துப் பெண் கேட்பதாகப் புதுமையாக எழுதியுள்ளார். இதனையே, பாரதியாரும், ஒரு பெண்

"நான் எல்லா வகையிலும் உனக்கு சமமாக வாழ்வதில்
உனக்குச் சம்மதமுண்டானால் உன்னுடன் வாழ்வேன்"

என்று கூறி, அதற்கான தர்மயுத்தத்தை இப்பொழுதே தொடங்கி வெற்றி பெறுமாறு கூறுகிறார்.[10]

**மெய்யன்பு**

காதலைப் பற்றிப் பாடாத கவிஞரே இல்லையெனலாம். காதல் என்பது சாதி, மதம், இனம், பொருளாதார ஏற்றத்தாழ்வு, நிறம் இவைகளைக் கடந்து நிற்பது. காதலில், இருபக்கமும் தூய்மை இருத்தல் வேண்டும். இக்காதலைப் பற்றி,

"ஒன்பது சுவையும் ஒண்ணாக் கலந்து உண்பதுதான் மெய்க்காதல்" *(ப.199)* என்கிறார். இதனை, "காதல் கண்ணுக்குப்

9. பாரதியார், "பாரதியார் கவிதைகள்", வானவில் பிரசுரம், சென்னை, மறுபதிப்பு, *1986*, ப. *501*.

10. பாரதியார், "மகாகவி பாரதியார் கட்டுரைகள்" வானதி பதிப்பகம், சென்னை இரண்டாம் பதிப்பு, *198*, ப. *258-259*.

புலனாகாத நுண்பொருள். அஃது அகத்தே நின்று அன்பு நீரை இடையறாது சொரிந்து கொண்டிருக்கும் அழியா ஊற்று. காதலால் விளையும் இன்பமே இன்பம். அவ்வின்பம் ஒப்பற்றது. அதன் முதிர்ச்சியே கடவுளின்பமென்பது" என்கிறார் திரு.வி.க.[11]

**பேரின்பம்**

கவிஞர் அவர்களும் பெண்மை தரும் இன்பம் பேரின்பமென்கிறார்.[12]

............................................................ மனம்
அன்பில் பிணைந்தால் பின் அதுவே பேரின்பம் *(ப.174)*

மனிதப் பிறவியின் பயன் வீடுபேறடைதலேயாகும். அறம், பொருள், இன்பம் இவற்றின் பயனும் அதுவேயாம். இல்லறம் வழித் துறவறம் என்பதே இந்து மதத்தின் தத்துவமாகும். இதனையே, கவிஞர் அவர்களும் வலியுறுத்துகிறார்.

**பெண்ணடிமை**

பேரின்பம் தரும் பெண்ணினம், குழந்தையைப் பெற்றெடுத்தல், பிள்ளையை வளர்த்தல், சமைத்தல், கணவனுக்கு வேண்டிய அனைத்துக் கடமைகளையும் செய்தல், என பல நிலைகளிலும் உதவும் இவர்கள் அடிமையாக இருக்கும் நிலையைக் கண்டு மனம் வருந்துகிறார். இவருடைய பாடல்கள் பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும், பெண்ணடிமை நீங்கி விடுதலை பெற வேண்டும் என்ற நோக்கிலேயே அமைந்துள்ளன.

"ஆணுக்குப் பெண்கள் அடிமைகள் என்று யாரோ
எழுதி வைச்சாங்க..... அதை அமுக்கிப் பிடிச்சிகிட்டு
விடமாட்டேன்ன ஆண்கள் ஒசந்து கிட்டாங்க -
பெண்கள் ஆமை போல ஒடுங்கிப் போனாங்க" *(ப.122)*

என்று கேலியாகப் பாடுகிறார்.

பெண்கள் முன்னேற சம உரிமை வழங்க வேண்டும் என்பதனை,

"உண்மையிலே அடி பெண் மயிலே - உன்
உரிமையில் என்றும் தடையில்லை" *(ப.185)*

என்று கூறி,

---

*11.* பி.எல். ராஜேந்திரன், "திரு.வி.க. சிந்தனைகள்" செல்வ நிலையம், சென்னை, முதற்பதிப்பு, *1982,* ப. *79.*

*12.* பி.இ. பாலகிருஷ்ணன், கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள், பக். *149-150.*

"இகத்தில் இருக்கும் இகம் எத்தனையானாலும்
இருவர்க்கும் பொதுவாக்கலாம்" (ப.138)

பெண்ணடிமை தீர வழியொன்றும் கூறுகிறார். கவிஞர் பெண்ணடிமை தீர, மூடநம்பிக்கைகள், பொய்மைக் கதைகள், சாத்திரங்கள் இவைகளைத் தகர்த்து எறிந்து வெளிவர வேண்டுமென்கிறார்.

"மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பாராம்
மூடக் கட்டுக்கள் யாவும் தகர்ப்பாராம்"[13]

என்ற பாரதியை அடியொட்டிவந்த கவிஞர்,

"தலைவலியும் நோயும் வந்தா
சாமிகளைச் சுத்துவீங்க,
இன்னும் - ஜாதகத்தைப் பார்த்துப்புட்டு
ஆடு கோழி வெட்டுவீங்க" (ப.88)

என்று பெண்களின் அறியாமையைச் சுட்டி மூட பழக்கவழக்கங்களைத் தூக்கி எறிந்துவிடில், பெண்ணடிமை தீரும் என்கிறார்.

**பெண்-முதன்மை**

பொதுவாகவே, பேச்சு வழக்கிலும், இலக்கிய வழக்கிலும் இருபாலரும் இணைந்திருக்கும் போது, தமிழில் விளிக்கும் நிலையில், ஆண், பெண் என்றே குறிப்பர். இம்முறையை மாற்றி, பெரும்பாலும் பெண், ஆண்[14] என பெண்ணுக்கு முதலிடம் தந்துள்ளார்.

**பெண்ணின் படிநிலைகள்**

அனைத்துத் துறையிலும், ஆற்றலுடைய பெண்ணையும், மனையின் கண்ணிலிருந்து மனையறம் நிகழ்த்தும் மனைவியையும், இல்லறத்தில் கடமையாற்றும் இல்லாளையும், வாழ்க்கைத் துணைநலம் என வள்ளுவர் போற்றும் வனிதையையும் தம் கவிதைகளில் பலவாறு பாராட்டியுள்ளார்.

---

13. பாரதியார், "பாரதியார் கவிதைகள்", வானவில் பிரசுரம், சென்னை, மறுபதிப்பு, 1986, ப. 502.

14. பி.இ. பாலகிருஷ்ணன், கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள், பக். 105-106.

**தாய்**

தாயை, பெண் தெய்வம், தொண்டு செய்து வாழும் தாதி என பலப்பட பாராட்டி, இவள் இல்லாவிட்டால் குழந்தையின் உருவமே சீராகாது எனக் கூறி அவளது பொறுப்பினையும் புகல்கின்றார்.

அருமையுடன் வளர்த்து அறிவுள்ள பெண்ணாக ஆக்கித்தரும் பொறுப்பு அன்னையிடந்தான் *(ப.173)* என்கிறார்.

**சக்தி**

"பதி விரதைக்கு அதிக வீரமும்
சக்தியும் உண்டு"[15]

கோழைக்கு வீரத்தைத் தருபவள்; மன இருளைப் போக்குபவள்; அவள் பார்வைபட்டு, மலை அசையும். ஈட்டியும் வாளும் பொடியாகும் என்கிறார் கவிஞர். மங்கையின் சொல்லில் அனைத்துத் தீமைகளும் அழியும் என அவளது ஆற்றலைப் பாரதிதாசன்[16] வழி விளக்குகிறார்.

"பாரினில் அதிகாரமுடைய
நாரியரிடம் உமது சக்தி
நீரில் விழும் தீ!
வேருடன் எல்லா விதிகளும்
மாறிவிடும் ஒரு மங்கை சொல்லில்" *(ப.162)*

என்று, பெண் பேசுவதாக, சக்தியே, சக்தியின் பெருமையைக் கூறுவதாகக் கவிஞர் அமைத்துள்ளார்.

**பெண்ணும் இல்லறமும்**

"நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்" *(ப.174)*

என்று, நல்ல குடும்பத்தின் இலக்கணம் கூறி, இல்லறத்தில் ஈடுபடும் ஆண், பெண் இருவருக்குமுள்ள உறவினைச் சில உவமைகள் மூலம் விளக்குகிறார்.

"உழவனும் ஓயாத உழைப்பும் போல்" *(ப.181)*

---

*15.* ஸ்ரீ.சி. சுப்பிரமணிய பாரதி, பாரதியார் நூல்கள் *(கட்டுரைகள்)*, பாரதி பிரசுராலயம், சென்னை, மூன்றாம் பதிப்பு, *1950*, ப. *199*.

*16.* பாரதிதாசன், 'பாரதிதாசன் கவிதைகள்' செந்தமிழ் நிலையம், திருச்சி, *11*ஆவது பதிப்பு, *1959*. ப.*4*.

"சக்கரம் சுழல்வது போல்" (ப.193)

"பல்பு அண்டு சுவிட்ச்" (ப.272)

இல்லறம் ஏற்று நடத்துபவர்கள், இதை மனதில் கொண்டு வாழ்ந்தால், அவர்கள் வாழ்வு இனிமை பயக்குமென்கிறார்.

**பெண்ணொளி**

நற்பண்புகளையுடைய அறிவு நிறைந்த அப்பெண் கணவனுக்குத் துன்பம் வந்த காலத்தே, மந்திரி போன்ற அறிவுரை கூறும் திறன் பெற்றவள் என்பதனை,

"அவரவர் மனைவிகளே அவர்களுக்கு மந்திரிகள்" (ப. 49)

"நேசனுக்குக் கதிக யோசனை புகலும்
நிலைக்கு நடக்கும் இணக்கம் உடையவள்" (ப. 172)

என்கிறார்.

**பொதுமை**

**கற்பு** : பெண்ணுக்குரிய உயர் குணம் கற்பு என்ற பழைய இலக்கிய மரபை மாற்றி, இக்கற்பு நிலையைப் பொதுவாக்கியவர் பாரதி[17]. இக்கால ஆண்களில் சிலருடைய கற்பின் நிலையைக் கவிஞர்,

"காதல் அறம் என்பார்
கற்பின் விலை என்னவென்பார்" (ப. 100)

என்று கேலி செய்யும் நிலையிலுள்ளதை மனம் வருந்தி எழுதுகிறார். மேலும் ஆண்களில் சிலர், கற்பைப் போற்றுவதாக வெளியிலே கூறி, அவர்களே பெண் பித்தர்களாக மாறிப் பெண்களை இழிநிலைக்குள்ளாக்கு வார்கள் என்பதனை,

"கற்பின் பலமென்றும் கண்ணகி குலமென்றும்
கச்சிதமாத் திட்டுவாங்க - அதை
அச்சடிச்சும் காட்டுவாங்க - சொன்ன
கருத்துக்கு மாறாகக் கற்பைக் களவாடக்
கன்னக் கோலைத் தீட்டுவாங்க" (ப. 123)

17. பாரதியார், "பாரதியார் கவிதைகள்", வானவில் பிரசுரம், சென்னை, மறுபதிப்பு, 1986, ப. 499.

தந்தை பெரியார் அவர்கள்,

"கற்பு - பெண்ணடிமை ஆயுதம்"[18]

என்று கூறியிருப்பது, இங்கு எண்ணத்தக்கது.

**தாலி**

இந்நிலை மாற, பெண்களைப் போல ஆண்களும் தாலி அணிய வேண்டும். திருமணமானவர் என்பதைக் காட்டும் அறிகுறியாக இது இருப்பதால் பெண்களை ஏமாற்றும் நிலை குறையும் எனப் புதுமை வழி காட்டுகிறார் கவிஞர்.

"போட்டுகிட்டா ரெண்டு பேரும்
சேர்ந்து போட்டுக்கணும் - ஒலகம்
புதுசா மாறும்போது பழைய மொறையை
மாத்திக்கணும்" *(ப. 205)*

**குடும்பக் கட்டுப்பாடு**

சமுதாயம் பின் தங்கியிருப்பதற்கு முக்கியக் காரணமாக அமைவது மக்கள் தொகைப் பெருக்கமாகும். பொதுவாகக் கவிஞர்கள் பெண்களுக்கு மட்டுமே குடும்பக் கட்டுபாட்டை அறிவுறுத்துகின்றனர். பாரதிதாசனைப்[19] போலவே இவரும் குடும்பக்கட்டுபாட்டினை வலியுறுத்துகிறார்.

**பெண்** : பொறப்பு வளர்ப்புச் சட்டம்

**ஆண்** : நாம சேர்ந்து போட்டுக்கணும் *(ப. 206)*

என்று கூறி இருவருக்கும், பொதுவான ஒன்றாக அமைக்கின்றார்.

**மறுமணம்**

கணவன் இறந்தபின் மனைவி நிலை, அக்காலம் முதல் இக்காலம் வரை கொடுமையாகவே உள்ளது. இவற்றை நீக்க வேண்டுமெனக் குரல் கொடுக்கிறார். இன்றைய நிலையை, "மனைவி இறந்தபின் வயதான

18. தந்தை பெரியார், 'மதமும் மங்கையரும்', 'பெரியார் அகராதி', 114ஆம் ஆண்டு பெரியார் பிறந்தநாள் வெளியீடு, திராவிடர் கழகம், சென்னை - 39, ப. 17.

19. பாரதிதாசன், 'பாரதிதாசன் கவிதைகள்' செந்தமிழ் நிலையம், திருச்சி, 11ஆவது பதிப்பு, 1959. ப.124.

தாத்தாவும் மறுமணம் பண்ணிக்கிட உரிமையுண்டு. இளம் மங்கையை முடிப்பதுண்டு, மண்டை வரண்டு - தன் கணவனை இழந்தவள் கட்டழகியானாலும் கடைசியில் சாகமட்டும் உரிமையுண்டு. இதில் கதைகளும் கட்டிவிடும் ஊர் திரண்டு" *(பக். 122-123)* என்று பாடி, பெண்கள் மறுமணம் செய்து கொண்டு, தம் வாழ்வு மலர வாழ வேண்டுமென்கிறார்.

**பெண் - அவலம்**

பெண்ணை ஆண் வர்க்கம் கொடுமைப்படுத்தும் நிலையைப் பல பாடல்களில் பாடியுள்ளார். திரௌபதி, தமயந்தி போன்றவர்கள் ஆண்களின் தீயநடத்தையால் துன்பமடைந்த நிலையைக் காட்டியுள்ளார். மேலும் பெண்களை அடிமைப்படுத்தியும், அவர்கள் விருப்பத்திற்கு இணங்கா விட்டால் அவர்களை விட்டுப் பிரிந்து விடுவேன் என பயமுறுத்தியும் வந்தார்கள். சமுதாயத்தில், பெண்கள் தனியாக வாழ இயலாது என அஞ்சும் அவர்களது மென்மைத் தன்மை உணர்ந்து, அவர்களைப் பயமுறுத்தியும் மிரட்டியும் வந்தார்கள். இதனை, ஆணும் பெண்ணும் பேசுவதாக உரையாடல் மூலம், அமைத்துள்ளார்.

**ஆண்** : வாண்ணா வந்திடடி, மரியாதையில்லாதவளே
ஏண்ணு கேக்காதே எதிர்த்துப் பேசாதே
எட்டி விரட்டிடுவேன் ..... உன்னை விட்டுப் பிரிந்திடுவேன்.

**பெண்** : என்னை மன்னித்தருள வேண்டும் என்கிறாள் *(ப. 208)*

**வரதட்சணை**

"பெண்ணைப் பெற்றவர்கள், பெண்ணின் திருமணத்தின் போது, கணவன் கைவிட நேர்ந்தால், அவளைப் பாதுகாக்க ஒரு தொகையை அந்தஸ்துக்கு ஏற்ப ஒதுக்கினார்கள். இதுவே "சுல்கம்" என்று கூறப்பட்டது. இதுவே பிற்காலத்தில் வரதட்சணையாக வளர்த்தது.[20] இதிலிருந்து, அக்காலத்திலேயே இக்கொடுமை மிகுந்திருந்தது என்பது விளங்குகிறது. வரதட்சணை பற்றிய குறிப்பு, கவிஞருடைய பாடல்களில் இல்லாவிட்டாலும், பெண்கள் திருமணம் செய்து கொள்வதற்குப் பொருளாதாரம் ஒரு தடையாக இருப்பதால், பெண்கள் வேலைக்குச் செல்லுமாறும்[21] பல

---

*20.* திருவாணன், "பெண்கள் பெருமை", வானதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு *1973,* ப. *132.*

*21.* பி.இ. பாலகிருஷ்ணன், கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள், ப. *46.*

கலைகள் கற்றுக் கொண்டு, பணம் சம்பாதிக்குமாறும் கூறியிருப்பதால், என்றுமே பெண்களின் திருமணம் பணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது என்பதை உணர முடிகிறது. வரதட்சணைக் கொடுமையால் பெண்கள் பல விதத்தில் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். இதனை,

> "இங்கே ஒவ்வொரு சாப்பாட்டு மேஜையிலும்
> பெண்களின் ரத்தம்தான் மறைமுகமாகப்
> பரிமாறப்படுகிறது"[22]

என்கிறார் வைரமுத்து.

**அனைத்தும் பெண்**

நாட்டை, விடுதலையை, சுதந்திரத்தை, தலைமைப் பண்பை, கலையை, இயற்கையை, ஆற்றை, பெண்ணாக உருவகித்திருப்பதாலும் பிற உயிர்களிடம் அருள் உள்ளம் கொண்டவராதலாலும் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்களைப் பெண்ணியச் சிந்தனை வழி நோக்கின், அவரைப் பெண்ணியக் கவிஞர் என கூறலாம்[23]

**முடிவுரை**

பட்டுக்கோட்டையாரின் பாடல்களை, ஆழ்ந்து நோக்கும்போது, அவரது உள்ளத்தில் பெண்களின் நிலை உயர, முதலில் அவளை அறிவு ஜீவியாக, மானிட சக்தியாக எண்ண வேண்டும் எனவும், அப்பொழுது தான் பெண்ணின் நிலை உயரும் என்று கூறும் வகையில் அமைந்துள்ளது.

1. பெண்ணின்றி இவ்வுலகத் தோற்றமில்லை;
2. பெண்கல்வி அறியாமையைப் போக்கும்;
3. பெண்ணியம் பேரின்பவாயில்
4. இல்லறம் வழித் துறவறம் (வீடுபேறு);
5. பெண்ணடிமை தீர சமஉரிமை, சமஅந்தஸ்து தரல் வேண்டும்;
6. பெண்ணின் திறமையுணர்ந்து, முதன்மை தரல் வேண்டும்;

---

22. கவிஞர் வைரமுத்து, "சிகரங்களை நோக்கி", சூர்யா பப்ளிகேஷன்ஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1992, ப.23.

23. பி.இ. பாலகிருஷ்ணன், "கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள்", பக். 44, 48, 77, 97.

7. கற்பு - தாலி - கருத்தடை பொதுமைக் கண்ணோட்டம்;

8. மறுமணம் - பெண் வாழ்வில் மறுமலர்ச்சியைத் தரும்;

9. பெண்ணுக்கு இழிவு வராது காத்தல்;

10. பெண்ணே உலகம், உலகமே பெண்.

# திரு.வி.க. அவர்களின் பெண்மைக் கோட்பாடுகள் - பெண்ணியப் பார்வை

தி. கமலி

உலக மக்கள் தொகையில் செம்பாதி மகளிர். மகளிரது சமூக, பொருளாதார அரசியல் நிலை உலகெங்கும் ஆடவரைக் காட்டிலும் தாழ்வாகவே உள்ளது. முன்னேற்றத்தின் உச்சத்தில் இருக்கும் அமெரிக்காவாக இருந்தாலும், பழமைக்குப் பழமையும், முன்னேற்றத்திற்கு முன்னேற்றமும் ஒருங்கே பெற்றிருக்கும் இங்கிலாந்தானாலும், புரட்சிக்குப் பெயர் பெற்ற சோவியத் நாடாக இருந்தாலும், மக்கள் தொகை பெருக்கத்திற்குப் பெயர் பெற்ற சீன தேசமாக இருந்தாலும், இஸ்லாமிய நாடாகிய இரானாக இருப்பினும், பெரிய ஜனநாயக தேசமாகிய இந்தியா என்றாலும் மகளிர் நிலை மட்டும் இவ்வெல்லா இடங்களிலும் இரண்டாமிடத்ததாகவே இருந்தது; இருக்கின்றது; இருந்து வருகிறது. இதை மாற்ற மேற்கொள்ளும் முயற்சிகளே பெண்ணியப் பிறப்பிற்கு வித்தாயின.

ஆண் - பெண் இடையே பாலின் அடிப்படையில் நிகழும் ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதே பெண்ணியத்தின் முதன்மை நோக்காக உள்ளது.

**பெண்ணியப் பரிமாணங்கள்**

பெண்ணியத்தை நில அடிப்படையில் இரண்டாக வகைப்படுத்தலாம்.

மேற்கத்திய பெண்ணியம் *(Western Feminism)*

ஆசியப் பெண்ணியம் *(Asian Feminism)*

என்பதே அது. மேற்கத்திய பெண்ணியத்தை மேலும் வகைப்படுத்தினால்,

புரட்சிப் பெண்ணியம் *(Radical Feminism)*

தாராளப் பெண்ணியம் *(Liberal Feminism)*

மார்க்சீயப் பெண்ணியம் *(Marxist Feminism)*

சமதருமப் பெண்ணியம் *(Socialist Feminism)*

இராணுவப் பெண்ணியம் (Militant Feminism)

என்று பகுக்கலாம்.

ஆசியப் பெண்ணியத்தை

இந்தியப் பெண்ணியம் (Indian Feminism)

மிதவாதப் பெண்ணியம் (Moderate Feminism)

பழமைப் பெண்ணியம் (Conservative Feminism)

கல்விச்சாலைப் பெண்ணியம் (Academic Feminism)

குடும்ப அமைப்பிற்கெதிர்ப் பெண்ணியம் (Anti-Family Feminism)

என்று வகைப்படுத்தலாம்.

**வரைவு விளக்கம்**

பெண்ணியம் சமூகப் பண்பாட்டு மாற்றத்தை ஏற்படுத்தவல்ல வலிமையான கருவி என்பதே ஆசியப் பெண்ணிய வரைவு விளக்கமாகும்.

தேசத்தின் மக்கள் தொகை முழுமையும் இவ்வகைப் பெண்ணியம் அரவணைத்துத் தழுவி நிற்கிறது.

செயல்படத் தூண்டுகிறதே அல்லாது, ஏட்டளவில், எழுத்தளவில், கருத்தாக்கமாகவோ, கொள்கையாகவோ மட்டும் நின்று விடுவதில்லை.

அக, புற மாற்றங்களுடன் கூடிய சமூக மாற்றத்திற்கு வழிவகுப்பது. அகமாற்றம் என்பதைத் தனிநபரின் மனம் மற்றும் சிந்தனையில் நேரிடும் நல்மாற்றம் என்றும், புறமாற்றம் என்பது தனிநபர், சமூகம் மற்றும் வாழ்வை நோக்கிக் கொண்டிருக்கும் கருத்தாக்கப் போக்கில் நேரும் மாற்றமும், அம்மாற்றத்தின் விளைவால், சமூக நிறுவன அமைப்புகளில் நேரும் மாற்றமாகும்.

இவை எல்லாம் ஆசியப் பெண்ணியத்தின் குறிக்கத்தக்கக் கூறுகளாகும். அநீதிகளைக் களைய முயற்சிக்கிறதே அல்லாமல், யாரையும் எதிரியாகக் கருதுவதில்லை என்பது இங்கு முதன்மையாகக் கொள்ளத் தக்கது.

**இந்தியப் பெண்ணியம்**

பெண்டிருக்கெதிரான அநீதிகளை அகற்றுவதைத் தனது நோக்கமாகக் கொண்டு பெண்ணியம் இந்தியாவில் கால்கோள் கொண்டது. அந்நோக்கம் இன்றளவும் தொடர்ந்து வருவது குறிக்கத்தக்கது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய சமூகச் சீர்திருத்தமும், மறுமலர்ச்சியும் தோன்றிய போது, பெண்ணியமும் இணை சேர்ந்து எழுச்சி பெற்றது. சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கம், விதவையரை அலங்கோலப்படுத்தும் கைம்மை, விதவையர் மறுமணத்திற்கு இருந்த சமூகத் தடை, ஆடவரது பலதார மணம், குழந்தைகளைச் சிறுவயதிலேயே மணமுடித்துத் தரும் குழந்தை மணம், பெண்களுக்குச் சொத்துரிமை இல்லாதிருந்த நிலை ஆகியவற்றுக்கு எதிராகக் கணைகள் தொடுக்கப்பட்டன.

பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜம், ஈஸ்வர சந்திர வித்தியாசாகரது விதவை மறுமண இயக்கம், ஆர்ய சமாஜம், ராமகிருஷ்ண மடத்தின் பணிகள், பகுத்தறிவுத் தந்தை பெரியாரது கருஞ்சட்டை இயக்கம், சுயமரியாதைத் திருமணமுறை போன்றவை மகளிர்க்கெதிரான அநீதிகளை அகற்ற முயன்று பாடுபட்ட இயக்கங்களாகும்.

ஊர்வலம், பேரணி, பொதுக்கூட்டம், விவாத மேடை, உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் இவைதாம் போராட்ட முறைகளாக இருந்தன.

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு? என்று வீட்டுக்குள்ளே பூட்டப்பட்ட நிலையிலிருந்த மகளிரை *1920*இல், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மகாத்மா காந்தி விடுத்த அழைப்பே வெளிக்கொணர்ந்தது.

மகளிரைச் சிறையிலிடல், சாலைகளில் இழுத்துச் செல்லுதல், லத்தி, மூங்கில், சாட்டை ஆகியவற்றால் அடித்தல், சேலையை உருவிக் கிழித்தெறிதல், இழிமொழிகளால் வசை பாடுதல், இரயிலில் ஏற்றிச் சென்று, மொழி தெரியாத தொலைதூரப் பிரதேசங்களில் விட்டு விடுதல், கைக்குழந்தைகளைத் தாய்மார்களிடம் இருந்து பிடுங்கி, வீசியெறிதல், கற்பழித்தல் என்று மகளிர்க்கு அளிக்கப்பட்ட தண்டனைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

சுதேசி இயக்கம் வெற்றி பெற மகளிர் பங்கு வெகுவாக உதவியது. அன்னி பெசன்ட் அம்மையாரும், சரோஜினி நாயுடுவும் அரசியலில் வழி நடத்தினர். சரோஜினி நாயுடுவின் தலைமையில் மகளிர் குழுவொன்று வாக்குரிமை கேட்க இங்கிலாந்திற்குச் சென்று வந்தது. பலதார திருமணத்திற்கெதிராக *25000* மகளிர் கையெழுத்திட்டு *1856*இல் அப்போதைய ஆங்கில அரசிற்குச் சமர்ப்பித்துத் திருமண வயதை நிர்ணயிக்கக் கோரினர்.

தில்லையாடி வள்ளியம்மை, நாகம்மை, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, மணியம்மை, சரோஜினி நாயுடு, சகோதரி சுப்புலட்சுமி, ருக்மணி தேவி லட்சுமிபதி ஆகியோர் தங்களால் இயன்ற பங்களிப்பினைச் செய்த தமிழக மகளிராவர்.

**பெண்ணிய இலக்குகள்**

பெண் அடக்குமுறை என்பது பழமையானது.

பெண்டிரின் வலிமையற்ற நிலையை ஆண் பயன்படுத்திக் கொண்டு அடிமைப்படுத்திக் கொள்ள முற்பட்டதன் விளைவே பெண்ணின் இரண்டாமிடம் ஆகும்.

அறிவிலோ, சிந்தனையிலோ பெண் குறைந்தவள் அன்று.

ஆடவரது உடற்பசியைத் தணிக்க உருவாக்கப்பட்டவள் அல்லள் பெண் என்பவள்.

பெண்டிர் விழிப்புணர்வு பெற வேண்டும்.

ஆண் - பெண் எனும் இருபாலருக்கும், தனித்தனியான விசேட ஆற்றல்கள் உள்ளன. எவரின் திறனும் எவருக்கும் குறைந்ததன்று.

ஆண் - பெண் சமத்துவம் சாத்தியமானதே.

சமகல்வி, சமவேலை வாய்ப்பு, சட்டபூர்வ உரிமைகள், விழுமிய மாற்றங்கள், மனப்போக்கு மாற்றங்கள் ஆகியவற்றின் மூலம் ஆண் - பெண் சமத்துவத்தைச் சாதிக்க முடியும்.

பெண்டிருக்குச் சட்டபூர்வ உரிமைகளைப் பெற்றுத் தருவது இன்றியமையாதது.

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்'; எனவே பெண்டிரை இரண்டாமிடத்தினராக வைத்தல் கூடாது. இதை அகற்ற வேண்டும்.

இவைதாம் இந்தியாவைப் பொறுத்த மட்டில் பெண்ணிய இலக்குகளாக இருந்தன.

கருத்தாக்கம் (Ideology), கோட்பாடு (Concept), கொள்கை (Theory) எனும் சொற்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. அதே தருணத்தில் அவை நுட்பமாக வேறுபடுவனவுங் கூட.

'காலம் காலமாக வழங்கி வரும் நம்பிக்கைகளின் தொகுப்பு கருத்தாக்கம்' என்று வரையறுக்கலாம். பழந்தமிழரது கருத்தாக்கங்களுள் (Ideologies) ஒன்றினை இங்குச் சான்று காட்டலாம்.

(உ-ம்) 'எவனொருவன் அறஞ் செய்தானோ அவன் துறக்கும் புகும்'

'எவனொருவன் தாயைக் கொன்றானோ அவன் நிரயம் புகும்'

ஓரினப் பொருளைப் பற்றிய கருத்தாக்கங்கள் சமூக ரீதியில் அங்கீகரிக்கப்பெற்ற நிலையில் கோட்பாடு (Concept) உருவாகிறது.

(உ-ம்) தமிழரது கற்புக் கோட்பாடு

முழுமைத் தன்மையும் நம்பகத் தன்மையும் மதிப்பிடப் பெற்று ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் கோட்பாட்டு விளக்கத் தொகுதி ஆற்றல்மிக்க கொள்கையாகப் பரிமளிக்கிறது.

பெண்மைக் கோட்பாடு வேறு; பெண்ணியக் கோட்பாடு வேறு. பால் சமத்துவத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதுடன் பால் வேறுபாட்டுச் சிந்தனைகளை எல்லாம் வினாவிற்குட்படுத்திப் பரிசீலிக்க முயல்வது பெண்ணியக் கோட்பாட்டின் தலையாய இலக்காகும். ஆனால் பெண்மைக் கோட்பாடு வேறுபொருளுடையது. 'பெண்மை', 'ஆண்மை' ஆகிய சொல்லாட்சிகள் பாலுக்குரிய பண்புநலன்களது தொகுப்புச் சொற்களாக மொழியில் வலுவாகக் கையாளப்பட்டு வருவன. அறிவும் உரனும் ஆடூஉ மேன, அச்சமும் மடமும் பொறையும் பயிர்ப்பும் நிச்சமும். . . . பெண்பாற் குணங்களென்று வரையறுத்து நிர்ணயிப்பன.

பெண்மை பற்றிய ஒருவரது கருத்தளிப்பில் அவரது சமூகப் பண்பாட்டுப் பின்புலத் தாக்கம் பெரிதும் இடம்பெறுவதுண்டு. அதற்கேற்ப பெண்மைக் கோட்பாட்டுச் சிந்தனைகள் வேறுபடச் சாத்தியக் கூறுகள் உள்ளன.

(உ-ம்) பாரதியின் புதுமைப் பெண் - (Bharathi's Concept of New Woman)

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத திமிர்ந்த ஞானச் செருக்கு . . . முதலிய பண்பு நலன்களைப் பெற்றிருக்கும் ஒரு இலட்சியப் படிமம் (Ideal Construct) அவர் காலச் சமூக மகளிரது எண்ணிக்கைச் சராசரி அன்று (New woman is not a statistical average of his period); அவர் கால நடைமுறைப் பெண்ணன்று; அவர் கண்ட பெண்ணும் அன்று; காண விழைந்த பெண்; அவ்வளவே. அதுபோன்றே, பாரதிதாசனுடைய உண்மைப் பெண் (True woman) இல்லத்திலும் இல்லத்திற்குப் புறம்பாக உள்ள பொருளாதார உலகத்திலும் ஒருசேரப் பங்கு வகிக்கும் குடும்ப விளக்கு, சொக்கத் தங்கம், அவளில்லா வீடு, இருண்ட வீடு ஆகும்.

அவ்வகையில் இவ்வாய்வுக் கட்டுரையில் தமிழ்த் தென்றல், திரு.வி. கலியாண சுந்தரனார் அவர்களது பெண்மைக் கோட்பாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பெண்ணின் இயல்பு இத்தகையது என்று ஆண் தான் கவனித்த அளவில் தன் உணர்வுகளைப் பதிவு செய்துவர வரலாற்றில் அப்பதிவுகளே பெண்ணைப் பற்றிய பதிவுகளாக இடம்பெற்றதுடன் அல்லாமல், ஒவ்வொரு மொழியிலும் அம்மொழி வழங்கும் சமூகத்தின் எழுதப்படாத விதிகளினால் எவ்வியல்பினராய் வாழ வரையறுக்கப்பட்டிருக்கின்றனரோ அவ்வியல்பினராக மட்டுமே வாழத் தூண்டப்படும் நிலை உள்ளது. இங்ஙனம் நீண்டகாலமாகச் செயல்பட்டு வரும் மொழியின் பால்சார்வாழ்வமைவுக் கோட்பாட்டைக் கண்டறிவதும், பெண்டிர் குறித்து இதுவரை ஆடவர் முன்வைத்துள்ள மதிப்பீடுகள் யாவும் இறுக்கமான பண்பாட்டுச் சமூக வரையறைக்குள் மகளிரைச் சிறைப்படுத்திச் சித்திரிப்பனவாக இருப்பதை மறுசோதனையிடுவதும், பெண் பெறும் இடம் என்ன என்பதைப் பற்றி ஆராய்ந்து பரிசீலிப்பதும் பெண்ணியப் பார்வையில் (Feminist Point of View) இலக்குகளாகும்.

இப்பெண்ணியப் பார்வையில், தமிழ்ப் பெருமகனாரது பெண்மைக் கோட்பாடுகள் இக்கட்டுரையில் பரிசீலிக்கப்படுகின்றன.

பெண்களுக்குக் கல்வி வேண்டும், உரிமைகள் வேண்டும், பெண்டிருக்கெதிரான அநீதிகள் அழிய வேண்டும், ஆணும் பெண்ணும் சமமாகக் கருதப்பட வேண்டும் என்ற ஒருமித்த குரல்களை இந்தியத் துணைக்கண்டத்தில் ஆண் சமூகச் சீர்திருத்தவாதிகளே முதன் முதலில் எழுப்பினர். இதுவே இந்தியச் சூழலாகும்.

இந்திய அரசியல் சாசனம் இந்தியர் அனைவருக்கும் எவ்வித வேறுபாடுமின்றி அடிப்படை உரிமைகளை உறுதி செய்திருக்கிறது. ஆனால் சட்டங்களில் தங்குதடையின்றி வழங்கப்பட்டிருக்கும் சமத்துவ உரிமைகள் சமூகத்திலோ, குடும்ப நிறுவனங்களிலோ போதிய அளவு நடைமுறைக்கு வராதிருப்பது சமகால முரணாகும்.

'பெண்' பெருமை பேசும் பேராளராக, பெண்ணுக்குச் சமத்துவம் வேண்டும் என்பதைவிட ஒருபடி மேலே போய் பெண்ணுக்கே முதலிடம் தரவேண்டும் என்ற கருத்தை முன்வைத்த முதன்மையாளராகத் தமிழறிஞர் திரு.வி.க. திகழ்கிறார்.

## ஆண் பெண் வேறுபாடு

பெண்ணின் சக்தி கூட்டும் சக்தி, ஆணின் சக்தி பிரிக்கும் சக்தி; பெண் தண்மையது, ஆண் வெம்மையது; இரண்டும் வெவ்வேறு. எனினும்,

இவ்விரண்டனுள் உயர்வு தாழ்வு கருதல் ஆகாது என்பது அவர் முன் வைக்கும் சிந்தனையாகும்.

பால் பங்களிப்பிற்கேற்ப, ஆண் பெண் உடலமைப்பு அமைந்துள்ளது. அதை வைத்து உயர்வு தாழ்வு பாராட்டாத 'மனித சமத்துவம்' வேண்டும் என்பது உலகெங்கும் பெண்ணியவாதிகள் எழுப்பும் சங்கநாதமாகும்.

**ஆண்மை - பெண்மை வரையறை**

'பெண் உறுப்புடையது' பெண் என்பது முறையன்று; 'பெண்மை' உடையதே பெண். பெண்மை என்பது, அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று. கரடு, முரடு, அவா, பொறாமை, தன்னலம், சீற்றம் முதலியன 'ஆண்மைக்' குணங்கள். ஆண்பிறவி தாங்கியோர் நல்வழியில் முயன்று 'பெண்மைக்குணம்' பெற முயலவேண்டும். 'பெண்மைக் குணமற்ற பெண் பெண்ணே அல்லள்', 'பெண்மைக் குணமுடைய பெண் அழகின் பிம்பம்'; 'கடவுளின் வடிவம்' என்கிறார்.

உடலமைப்பு தலைவிதியை நிர்ணயிக்கிறது (Anatomy is destiny). பால் (Sex) என்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே உடலியல் பூர்வமாக இருக்கும் இயற்கை வேறுபாடுகளைக் குறிப்பது.

ஆனால் பாலினம் (Gender) என்பது ஆண் என்பதாலும், பெண் என்பதாலும் பாலுக்கேற்ப ஒருவரிடம் எதிர்பார்த்துத் திணிக்கப்படும் உணர்வுபூர்வ, மனநிலைபூர்வ இயல்புகளைக் குறிப்பது.

குணங்களை, 'ஆண்மைக் குணங்கள்' என்றும், 'பெண்மைக் குணங்கள்' என்றும் பாலின அடிப்படையில் பகுப்பதும் வேறுபடுத்துவதுமான (Gender differences) நிலைகள் செயற்கையானவை.

எனவே, பாலின பாரபட்சம் (Gender bias) அகற்றப்பட வேண்டுமென்பது பெண்ணியக் குறிக்கோளாக உள்ளது.

**பெண் பிறவியின் நோக்கம்**

பெண் பிறவி காம வேட்கைக்கும், அடுப்பூதல் முதலிய வேலைகட்கும் என்று கோடல் அறியாமை என்று திரு.வி.க. கடிந்துரைக்கிறார்.

பெண்ணியவாதிகளும், பெண்ணைப் பாலியல் கவர்ச்சிப் பொருட்களாகக் (Sexual objects) கருதுவதை வன்மையாக எதிர்க்கின்றனர். அழகிப் போட்டிகளை மகளிர் புறக்கணித்துக் கண்டனக் குரல் எழுப்புவதும் இந்நோக்கத்தின் பொருட்டேயாகும்.

**பெண் உரிமையிழப்பு**

பழந்தமிழ்ப் பெண்டிர் கல்வியிலும், அறவொழுக்கத்திலும், வீரத்திலும் சிறந்திருந்தனர். பெண்ணுரிமை கடியப்பட்டதும், பெண்ணுக்கெதிரான அநியாயக் கோட்பாடுகள் உருப்பெற்றதும் ஸ்மிருதி காலத்தில்தான் என்பது திரு.வி.க. வின் முடிவாகும்.

பெண் தலைமைச் சமூக அமைப்புமுறை ஆதிநாளைய நடைமுறையாக இருந்தது. தானிய உற்பத்திப்பணியில் கருவிகளின் பயன்பாடு அபரிமித மாற்றங்களைத் தோற்றுவித்து ஆண் மேலாண்மைக்கு வித்திட்டது. ஆனால் பெண்ணின் மானுட உற்பத்தி *(Reproduction)* பங்கு நிலை அன்றிலிருந்து இன்றுவரை மாற்றமின்றி இருப்பது பெண்ணின் தாழ்வு நிலைக்கு *(Suppression)* காரணமாயிற்று என்றும் சைமன்-டி-பௌவோ *(Simone de Beauvoir)* தனது ‘மகளிரது இரண்டாமிடம்’ *(The Second Sex)* எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

**பெண்ணுக்கெதிரான கட்டுப்பாடுகள்**

ஆணைப் போல் பெண் படிக்கக்கூடாது என்ற கட்டுப்பாடு எதற்கு? பெண்ணுக்கெதிரான கோட்பாடுகளை எழுதிய ஆடவரது நெஞ்சம் கல்லோ? இரும்போ? பெண்ணுக்கு வீடில்லை; ஆன்மா இல்லை; ஆணிடமிருந்து படைக்கப்பட்டாளாம்; என்ன கொடுமை! பெண் தவறி நடந்தால் தண்டனை; ஆண் தவறி நடந்தால் தண்டனை இல்லை; இதென்ன நீதி? பிறப்பில் ஆணாகப் பிறந்தால் எல்லாம் செய்யலாம்; பெண்ணாகப் பிறந்தால் மட்டுமே விதிகள் - கட்டுப்பாடுகள் - தண்டனைகள்; ஆண்டவனே! கொடுமை பொறுக்க முடியவில்லை" என்று திரு.வி.க. அரற்றுகிறார்.

பாரபட்சக் கருத்தாக்கங்களை அகற்ற வேண்டும். ஆண்-பெண் சமத்துவத்துடன் வாழும் சமன்மைச் சமூகம் வேண்டுமென்று பெண்ணியவாதிகள் போராடியதன் விளைவாக, உலகெங்கும் இரட்டை நீதிகள் கடியப்படுவதுடன், சமத்துவச் சட்டங்கள் துறைகள் தோறும் உருவாக்கப்பட்டும் வருகின்றன.

**சமன்மை விதிகள்**

நான் பெண்மக்களது கூடாவொழுக்கத்தைப் போற்றிக் கூறவில்லை; அதற்குத் துணையும் நிற்கவில்லை; பெண் தவறுதலுக்கு விதிக்கப்பெற்றுள்ள தண்டனைகள் ஏன் ஆண் தவறுதலுக்கும் விதிக்கப்படவில்லை என்பதே எனது கேள்வியென்று தன்னிலையைத் திரு.வி.க. தெளிவு செய்கிறார்.

பால் வேறுபாடு காரணமாக மகளிர்க்கிழைக்கப்படும் தீங்குகளை அறிந்திருந்தும், அத்தீங்குகளால் தானும் பாதிக்கப்பட்டிருந்தும், அவற்றைச் சரிசெய்ய மனதார விரும்பினாலும்கூட, எங்கே தன்னையும் ஓரினச் கலவிப் பெண்ணியவாதி என்று பிறர் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடுமோ என்ற அச்சத்தால் மகளிர், 'நான் பெண்ணியவாதி அல்ல; ஆனால். . . . என்று பேசத் தொடங்குவதை (I am not a Feminist but. . . syndrome) 'ஒத்திசைவு நோய்க்குறி' என்று விமரிசிக்கும் நிலை பெண்ணியவாதிகளிடம் காணப்படுகிறது.

**சமன்மைப் பண்புகள்**

பேதமை என்பது எல்லோருக்கும் பொதுவானது. அதை ஒரு பாலாருக்கே உரித்தானது என்று சொல்லுவது தவறு. ஆண்-பெண் உடலமைப்பிற்கேற்பக் கடமைகள் வேறுபடலாம். ஆனால் உரிமையில் கட்டுப்பாடு இருத்தல் கூடாது. குழந்தைகள் உள்ளத்தில் ஆண்- பெண் எனும் நினைவே தோன்றாதவாறு பாரபட்சமின்றி வளர்க்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

பண்புகள் பால் வேறுபாடற்றவை. பாலின வேறுபாடற்ற குழந்தை வளர்ப்பும் (Unbiased child rearing) கல்வி முறையும், பாடத்திட்டங்களும் (Preparation of unbiased text book materials) நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று உலகெங்கும் பெண்ணியவாதிகள் போராடி ஓரளவு வெற்றி பெற்று வருகின்றனர்.

**மகளிர்க்கெதிரான அநீதிகள்**

பால்ய மணம், பலதார மணம், கைம்மைக் கோலம் பூணச்செய்தல் போன்ற அநீதிகள் அகற்றப்பட வேண்டும் என்கிறார் திரு.வி.க.

இந்திய ஆண் சீர்திருத்தவாதிகளது அரும் பெரும் முயற்சிகளால் மகளிர்க்கெதிரான இவ்வநீதிகள் (Agitation of male reformers against certain dreadful practices) சட்டத்தின் துணையால் ஒடுக்கப்பட்டுள்ளன.

வரதட்சிணைக் கொலை போன்ற புதுவகை அநீதிகள் மேலோங்கியிருப்பது சமகாலச் சீரழிவாகும். பெண்ணியவாதிகள் தம் கண்டனக் குரலை எழுப்புகின்றனர்.

**பெண் குழந்தை வளர்ப்புமுறை**

பெண்ணுக்குக் கல்வி தரவேண்டும். கற்பும் ஒழுக்கமும் நிறைந்தவராக வளர்க்க வேண்டும். திருமணம் வரையில் பெண்ணுக்குத்

தீக்கிளர்ச்சி எண்ணமே தோன்றாதவாறு வளர்க்கவேண்டும். ஆடவரோடு நட்பு கொள்ளலாம். ஆனால் தீநட்பு கூடாது. நன்கு துயில அனுமதிக்க வேண்டும். நீச்சல் முதலியவற்றில் பெண்ணுக்குப் பயிற்சி தரலாம். இயந்திரங்கள் பெண்களைச் சோம்பேறிகளாக்குவதால் அவை தவிர்க்கப்பட வேண்டும். நகைப்பித்து இல்லாத வகையில் வளர்க்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

**பெண்ணியவாதிகளில் திரு.வி.க. அவர்கள் பெறும் இடம்**

பெண்ணியவாதிகள் என்று எவரைக் குறிப்பிட முடியும்? என்ற வினாவை எழுப்பினால் கீழ்க்கண்டவாறு பதில் தரலாம்.

பெண் முன்னேற்றச் சிந்தனையாளர்கள்; பெண் விடுதலை இயக்கத்தில் பங்கேற்பவர்கள்; மகளிரது சிக்கல்கள் விலகப் பாடுபடுபவர்கள்; தந்தைவழிச் சமூக அமைப்பும், சமூக நிறுவனங்களும் எங்ஙனம் பெண்டிரைக் கட்டுப்படுத்துகின்றன என்றறிந்து அவற்றை மாற்றியமைக்க விரும்புபவர்கள்; தங்கள் ஆய்வுகளின் மூலமாகவோ, ஏனையோரது கண்டுபிடிப்புகளின் மூலமாகவோ, பெண்டிரைத் தாழ்வுறுத்தும் கருத்தாக்கங்களைக் கண்டறிந்து, அவற்றை அகற்றவும், அவற்றுக் கெதிரான மாற்று விழுமியங்களை மக்கள் மனத்தில் நிலைநிறுத்தவும் பாடுபடுபவர்கள். பெண்ணியவாதி பெண்ணாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. ஆணாகவும் இருக்கலாம். பெண்டிர் நலவாழ்வில் ஈடுபாடு காட்டுபவர்கள் பெண்ணியவாதிகள் ஆவர்.

முன்னேற்றம்தான் இலக்கு. மானுட முன்னேற்றம்தான் மைய இலக்கு; அநீதிகளைக் கிள்ளி எறிய முற்படும் அறிவார்ந்த செயல் திட்டத்தை உருவாக்கும் பெண்ணிய அணுகுமுறைக்கு இந்தியப் பெண்ணியவாதிகள் தத்தமக்கு உரிய வழிகளிலெல்லாம் வரைவு விளக்கமளிக்கும் செயல்பாடுகளில் இறங்கியுள்ளனர் எனில் மிகையில்லை.

நான்கு சுவர்களுக்குள் அடைபட்டிராமல் பெண்டிர் வெளியுலக வாழ்வில் பங்கேற்க வேண்டும்; செயல்பட வேண்டும். அதற்குரிய விழிப்புணர்வைப் பெண்டிரிடம் தோற்றுவித்தல் அவசியம்; கணவனுக்கு மனைவி அடிமையாக இருத்தல் தேவையற்றது என்று திடமாகக் கருதியவர் அண்ணல் மகாத்மா காந்தியடிகளாவர். அவரின் அழைப்பே மகளிரை இந்திய விடுதலைப் போரில் பங்கேற்கச் செய்தது. எனினும் பெண், ‘நல்ல மனைவியாகவும், தாயாகவும் திகழ வேண்டும்’ என்றும், பெண்ணால்தான் அங்ஙனம் செயல்பட முடியுமென்றும் கருதினார். ‘தமிழகத்துக் காந்தியடிகள்’

என்று போற்றப்பெறும் திரு.வி.க.வும், இக்கருத்தில் உடன்பாடு கொண்டிருப்பது குறிக்கத்தக்கது.

> "ஆணும், பெண்ணும் ஒன்று போன்றவரே என்பது உண்மையாயினும், இருவரது செயல்திறன்களிலும் வேறுபாடு உள்ளது. தாய்மைக்குச் சில பண்புகள் இன்றியமையாதன. அவை ஆடவரிடம் இருப்பதில்லை. பெண் இல்லத்தலைவி; எல்லாவற்றையும் அக்கறையோடும், பரிவோடும் கவனிப்பவள்'; பெண்ணால்தான் சிறுகுழந்தையை வளர்த்து ஆளாக்க முடியும். எந்த தேசத்தில் பிறந்தோமோ, அந்த தேசத்தில் மகிழ்ச்சியாக இருப்போம்; கடமையைச் செய்வோம்; அவரவர்க்கென்று இயற்கை விதித்திருக்கும் பணியைச் செயற்படுத்துவோம்"

என்பது காந்தியடிகளது கருத்தாக இருந்தது.

மகாகவி பாரதியார் பெண் விடுதலை பற்றிப் பண் இசைத்தவர். அடிமைப்படுத்துபவர் நம்முடன் இருக்கும் ஆடவரே; ஆதலால், சாத்வீக முறையில் போராடிப் பெண் உரிமைகளைப் பெறமுயல வேண்டும்' என்கிறார். பெண் உரிமை பெறத் தேவையான உரிமைகள் பற்றிப் பட்டியலே போட்டுள்ளார். பெண்டிர்க்குக் கல்வி கற்பிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இருந்தும், 'பெண்ணைச் சம்பாத்தியம் பண்ணிப் பிழைக்க விடுதல் பாவம்' என்று கூறுகிறார். இது கருதத்தக்கது.

பெண்கல்வியைப் பெரிதும் விதந்தோதி தமிழில் முதல் நூல் எழுதிய மாயூரம் வேதநாயகம் பிள்ளை, 'நல்ல கல்வியே பெண்ணைச் சிறந்த மனைவியாகவும், தாயாகவும் இருக்க வைக்கும்' என்று குறிப்பிடுகிறார்.

'பெண்ணின் பெருமை' பற்றி எழுதிய, கனிந்த இதயத்தினராகிய திரு.வி.க. 'பெண், உரிமை, விடுதலை என்று மேனாடுகளில் ஆடவரைக் கொடுமைப்படுத்துவது போன்று இங்குச் செய்தல் கூடாது' என்று உபதேசிப்பதும் கவனிக்கத்தக்கதே.

'குடும்ப விளக்கையும்', 'இருண்ட வீட்டையும்' ஒருங்கே எழுதிப் பாரதிதாசன் வலியுறுத்தியது, 'இல்லப் பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு, விருந்தினர் உபசரிப்பு' என்ற பரிமாணங்களில் தன்னை ஆழ்த்திக் கொண்ட இல்லத்தலைவியின் படிமத்தைத்தான். திருக்குறளில் கூறப்பட்ட படிமம் மீண்டும் புதுவேகத்துடன் எடுத்தாளப்பட்டுள்ளது.

'பெண்மை வாழ்க' என்று தனியாக நூல் எழுதிய, மு. வரதராசனார், 'பெண் தன் உடல் அழகால் ஆணை மயக்கி வசப்படுத்த நினைக்கும் வரை அடிமையாகத்தான் கிடந்து அல்லல்பட வேண்டும், மேலை நாடுகளில்

பெண்டிர் அறிவால் ஆடவரைக் கவர்வதால்தான் உரிமையோடு வாழ்கின்றனர்." என்று மேனாடுகளில் பெண்டிர் உரிமையோடு சுதந்திரமாக வாழ்வதாகவும், இங்குப் பெண்டிர், 'ஆடவரைச் சலனப்படுத்துவதாகவும்' குறிப்பிட்டுள்ளார்.

அலங்காரத்தம்மாள் (அம்மா வந்தாள்), அம்மிணி (மரப்பசு), ஜமுனா (மோகமுள்) என்று உறுதியும், வைராக்கியமும் கொண்ட வித்தியாசமான பெண் பாத்திரங்களைத் தன் நாவல்களில் படைத்திருக்கும் தி. ஜானகிராமன், 'மேனாடுகளில் பெண்,. ஆடவனைப் போல் ஆடை அணிந்து கொண்டும், தலைமுடியை வெட்டிக் கொண்டும் வாழ்வது போன்ற அவல நிலை இந்த நாட்டில் வரவே வேண்டாம்' என்கிறார்.

'பெண்உரிமை, விடுதலை, சமத்துவம்' பற்றிப் பேசியவர்கள், எழுதியவர்கள் அனைவருமே ஒரோவிடங்களில் வேறுபடுகின்றனர். சறுக்கு மரத்திலும், வழுக்கு பாறையிலும் பயணிப்பது போன்றுள்ளது. இதை மனதில் கொண்டு திரு.வி.க. வை அணுகலாம்.

அறிஞர் பெருமக்கள் பரந்த சிந்தனைத்தளம் அமையப் பெற்றவராக இருந்தாலும், அவரவரது காலச் சூழலுக்கேற்பத் தளைப்பட்டு இருப்பதும் மனிதவியல்பே.

பெண் அடக்குமுறைக்கெதிராக உண்மையுடனும் (Sincere) இரக்கத்துடனும் (Sympthetic) அணுகி, ஆய்ந்து, சிந்தித்திருக்கும் தமிழ்த் தென்றல் திரு.வி.க. பெண்ணின் மன உணர்வுகளை உணர்ந்து கூற முற்பட்டுள்ளார். அவ்விரக்கச் சிந்தனைக்குக் கீழ்க்காணும் கூறுகளும் தூண்டுகோல்களாகத் திகழ்ந்திருக்கக்கூடும்.

மகளிரது ஒருமித்த மௌனம் (The Silent majority)
ஒடுங்கிய நிலை (The Subjection of Woman)

தீமை கொல்ல நாணமென்ன என்ற வினாவோடு கிளர்ந்தெழுந்து மகளிர் போராட முற்படாத மௌனப் போக்கும், அவலங்களை அனுசரித்து, சகித்து, ஈடுகொடுத்து மடியும் வாழ்வமைப்பும் மனிதநேய மாண்பாளரான திரு.வி.க.வின் தாயுள்ளத்தை அசைத்திருத்தல் வேண்டும்.

மகளிரது ஒடுங்கிய நிலை அவருள் அனுதாபத்தைத் தோற்றுவித்து, முதலிடம் தருதற்குரியவர் மகளிர் என்ற வாதத்தை முன் வைக்க இட்டுச் சென்றிருக்கவும் வேண்டும். ஆவி. சிதம்பர சொக்கலிங்கனார், வெ. சாமிநாத சர்மா போன்றவர்களை, 'பெண்மையிலேதான் உயர்வு', 'பெண்மை

வாழ்க' என்ற தலைப்புகளில் நூலெழுதச் செய்தது திரு.வி.க. வின் கனிந்த நட்பே என்று அன்னோர் நினைவு கூர்வதை இங்குச் சுட்டலாம்.

பெண் தனது உணர்வுகளைத் தான் உணர்ந்து அனுபவித்தவாறு கூறுவதற்கும், ஆண் பெண்ணின் நிலையில் தன்னை இருத்திப் பெண்ணின் உணர்வுகளைத் தான் உணர முற்பட்டுக் கூறுவதற்கும் வேறுபாடு உண்டு. ஆணுடைய முயற்சியின் வெற்றி தோல்வி சர்ச்சைக் குரியவை. எவ்வளவோ எச்சரிக்கையாக இருந்தும், ஓரிரு இடங்களிலாவது 'தான் ஆண்' என்பதைத் தன்னையறியாது வெளிப்படுத்திவிட வாய்ப்புண்டு. 'ஆண் பெண்ணியம்' (Male Feminism) என்ற சொல் கொண்டு சுட்டலாம். அங்ஙனம் திரு.வி.க. அவர்களும் தன்னை அறியாது வெளிப்படுத்திக் கொண்ட இடங்கள் வருமாறு :-

"பெண்பிறவியின் விழுமிய நோக்கம் தாயாகித் தொண்டு புரிதல், அத்தொண்டிற்கென்றே பெண் பிறந்தாள், வளர்ந்தாள், படித்தாள், மணங் கொண்டாள், வாழ்கிறாள், பெண் மகளாகப் பிறந்து, பின்னை மனைவியாகி, பின்னைத் தாயாகி முடிவில் இறையாகிறாள்.

பிள்ளைப் பேற்றை விரும்பாத நெஞ்சம் ஈரமில்லாத வன்னெஞ்சம்" என்பது அவரது முடிவு.

இன்னாரின் மகள், இன்னாரின் மனைவி, இன்னாரின் தாய் என்பதைத் தவிர, 'தான்' 'இன்னார்' என்ற சுய அடையாளத்திற்கு வாய்ப்பற்ற நெருக்கடியால் (Identity Crisis) அலைப்புண்டு, முகம் தொலைந்தவராய், தன் தனித்தன்மையை வெளிப்படுத்த வழியற்றவராய் அல்லலுறும் மகளிரது ஆளுமைத்திறன் பற்றிய சிந்தனை இடம்பெறவில்லை. ஆளுமைத் திறனும், மேலாண்மையும் ஆடவர் வசமிருக்க, பிள்ளைப் பேற்றுப் பணியேற்று, இல்லஞ்சிறக்க வாழ்பவள் பெண் என்ற தந்தைவழிச் சமூகக் கருத்தாக்க விழுமியம் (Patriarchal Value) வெளியிடப்பட்டுள்ளது.

> பெண் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவள், குடும்பக் கொடுமைகளைப் பொறுத்துக் கொள்பவள், மாமன் முதலியோர்க்குத் தொண்டு - கணவனுக்குத் தொண்டு - பிள்ளைகளுக்குத் தொண்டு மற்றவர் கட்குத் தொண்டு என்று தொண்டில் தன்னைத் தியாகம் செய்பவள், வன்கண்ணர் குடும்பமாயின் அங்குத் துன்பம் பொறுத்துப் பணியாற்றுபவள், வருவாயில்லாக் குடும்பமாயின் பொருளீட்டும்

> துறையிலும் உழைத்துத் தொண்டாற்றுபவள். பெண்ணுக்குக் கணவன் பொருந்தா நாயகனாக வாய்க்கப் பெற்றால், பிரிதல் வேண்டும் என்று சொல்ல இந்தியாவில் பிறந்த எனக்கு நாவெழவில்லை. எப்படியாவது முயன்று அப்பொருந்தாத் தன்மையைப் போக்கவே பெண்மகள் முயலவேண்டும். கணவன் அலியாயின், நோயாளனாயின் குறைவுடைய நாயகனை நிறைவுடையவனாக்க, நாயகி தொண்டு செய்வது சிறந்த கடவுள் தொண்டு

என்கிறார்.

தாரம் சற்றே ஏறுக்கு மாறாக அமைந்தால் கூறாமல் சன்னியாசம் கொள்ளும் முறையே ஆணுக்கும், உடல் அழுகிக் குறைந்த குட்ட நோயாளனாய்க் கணவன் இருந்தாலும், இல்லத்திற்குக் கொண்டுசெல்லும் பதிவிரதா தர்மத்தைப் பெண்ணுக்கும் கற்பித்திருக்கும் சமூகப் பின்புலத்தின் தாக்கமாகக் கூட மேற்கண்ட அவரது கருத்து வெளிப்பட்டிருத்தல் கூடும்.

> மேனாட்டில் சின்னாளாகப் பெண்ணுலகில் ஓர் இயக்கம் தோன்றி இருந்தது. பெண்மக்கள் 'உரிமை' என்னும் பெயரால் சில கொடுமைகள் நிகழ்த்தி வருகிறார்கள். அவர்கள் ஆண்மக்கள் போல எல்லா வழியிலும் வாழ்வுபெறக் கிளர்ச்சி செய்கிறார்கள். அவர்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள ஆண்மக்கள் மீது கல் எறிதல், அவர்களைக் கருவியால் தாக்கல், வழிமறித்தல் முதலிய வன்செயல்கள் புரிகிறார்கள். பெண்ணுரிமை என்பது ஆண்மக்களோடு பகைமை கொண்டு, அவர்கள் பதவிகளைப் பெற மூர்க்கநெறியில் நின்று அவர்களைத் தாக்குவதன்று. மேல்நாட்டுப் பெண்கள் உரிமை என்னும் பெயரால் வாழ்வையே குலைத்துக்கொள்கிறார்கள். கீழ்நாட்டுப் பெண்களும், மேல்நாட்டுப் பெண்களது அடிச்சுவட்டைப் பற்றி நடக்க முயல்கிறார்கள். அது தவறு. பெண் உயர்வு தாழ்வு, போராட்டங்கள் முதலிய எண்ணங்களின்றி ஒருயிர் - ஒருடல் என ஆணுடன் ஒன்றி, வாழ்வு நடாத்தி உலகை வளர்ப்பாளாக!

என்று-பெண், 'உரிமைப் போரென்ற' கிளர்ச்சியில் இறங்கக் கூடுமோ எனும் அச்சவுணர்வை வெளிப்படுத்துகிறார்.

> உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு, நாச்சுவையில் அடக்கம் வேண்டும். 'பெண்' என்பதற்குக் 'கட்புலனாயதோர் அமைதித் தன்மை' என்பது பொருள். எனவே அவ்வமைதிக்குரிய பொருளையே உண்ண வேண்டும். புளி, காரம் கலந்த பதார்த்தங்கள், ஊறுகாய், புலால், காப்பி, தேயிலை, கொக்கோ, ஓவல்டைன், கள் முதலிய மயக்கப் பொருட்கள், இரஜோ குணத்தை எழுப்பவல்ல கார வகைகள், புலால் ஆகியவற்றைப் பெண்டிர் எக்காரணம் பற்றியும் உண்ணக்கூடாது. பெண்மக்கள் தலைமயிரை வெட்டிக் கெடுத்துக் கொள்ளக் கூடாது.

என்ற அறஞ்சார் நலவாழ்வு நெறிதனை இருபாலருக்கும் பொதுவானதாக வலியுறுத்தாமல், பெண்டிருக்கு மட்டும் வலியுறுத்துவது போன்ற ஒரோவழி இடங்கள், பெண்டிருக்கெதிரான தீங்குகளை அகற்றி, பெண்டிரது நல்வாழ்வை நாடும் மனித நேயப் பண்பாளரான தமிழ்த்தென்றலின் தாயுள்ளத்தையும் மீறி வெளிப்பட்டு விடுதலால் அவருடைய கோட்பாடுகள் 'ஆண் பெண்ணியம்' (Male Feminism) என்ற நிலையைப் பெறுகின்றன.

**துணை நூல்கள்**

1. திரு.வி. கலியாணசுந்தரனார், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, 1927.
2. டாக்டர் தேவதத்தா, தி. கமலி, பெண்ணியக் கலைச்சொல் விளக்கக் கையேடு, சென்னை, 1992.
3. Betty Friedan, The Femine Mystique, New York, 1962.
4. Olive Banks, Faces of Feminism, Oxford, 1981.
5. Simone de Beauvoir, The Second Sex, London, 1953.
6. Susan Bassnett, Feminist Experiences - The Women's Movement in Four Cultures, Bosten, 1986.
7. Bonnie, Kine Scott, Joyce and Feminism, Sussex, 1984.

8. Kumari Jayawardena, Feminism and Nationalism in Third World, New Delhi, 1986.

9. Maithreyi Krishnaraj, Women's Studies in India - Some Perspectives, Bombay, 1986.

10. Alice Jardine and Paul Smith, Men in Feminism, New York, 1987.

11. Kate Millet, Sexual Politics, London, 1969.

# ஜீவாவின் பெண்ணியச் சிந்தனைகள்

பா. தமிழ்ச்செல்வி

பிறப்பாலும் எண்ணிக்கையாலும் ஆணுக்கு நிகரானவள் பெண். மனித சமூகத்தைத் தன் கருவில் ஏற்றுச் சுமந்து தன் குருதியால் வளர்ப்பவள் அவள். நொந்து பெற்றுத் தன் பாலையும் அன்பையும் ஊட்டி மனிதப் பைங்கூழை இடையறவின்றிச் செழுமைப்படுத்துபவள் அவள். தாய் என்ற நிலையில் மனித சமூகத்தின்மீது தனது ஆளுமையைச் செய்பவள் பெண். மனைவி என்ற நிலையில் ஆணின் வாழ்வில் இன்பம் தந்து கலந்து நிற்பவள் பெண். மகள் என்ற நிலையில் தந்தை எனும் தகுதியைத் தருபவளும் பெண். இந்தத் தகுதியை மனைவியாகிய பெண்ணே, அவனுக்கு வழங்குகிறாள். இவ்வாறு இன்பத்தின் ஊற்றுக் கண்ணாகவும் மகிழ்வின் இருப்பிடமாகவும் மனைவியும் குழந்தையும் இருப்பது மனித வாழ்வின் இளமை நிலைப்புக்கு முதற்காரணம் என்பர் பிசிராந்தையாரும். இவ்வாறு பெருமைக்கும் புகழுக்கும் உரியதான இப்பெண்ணினம் நடைமுறையில் எவ்வாறு உள்ளது? பெண்களுக்கு இயற்கையாகக் கிடைக்கவேண்டிய உயர்வும் சிறப்பும் நடைமுறை வாழ்வில் இல்லாமைக்கான காரணங்கள் யாவை? இத்தகைய வினாக்களுக்கான விடைகளில்தான் பெண் விடுதலை அடங்கியுள்ளது எனலாம்.

**இரட்டை அடிமைத்தனம்**

ஆண்டாண்டுக் காலமாகப் பெண்ணினம் சட்டங்களாலும் சமூகத்தின் ஒழுக்க விதிகளாலும் ஒடுக்கப்பட்டு வந்துள்ளது. உடைமையாளர்களுக்கு உழைப்பவர் அடிமை என்பதில் ஒற்றை அடிமை முறைதான் உள்ளது. ஆனால் உழைப்பாளர் வகுப்பில் அதாவது அடிமையாகிய ஆணுக்கும் பெண் அடிமையானவள் என்ற வகையில் பெண்ணினத்தின்மீது இரட்டை அடிமைத் தன்மை சுமத்தப்பட்டுள்ளது. அப்பெண்ணின் உழைப்பைத் தந்தை, உடன்பிறந்தவன், கணவன், மகன் என்ற நிலைகளிலும் ஆண் இனம் சுரண்டுகிறது. தன் குடும்ப வறுமையின் காரணமாகச் சமூக உழைப்பில் பங்கேற்கும் உழைப்பாளிப் பெண் பேரளவில்

சுரண்டலுக்கு ஆட்படுகிறாள். ஆண் உழைப்பாளரைச் சுரண்டுவதிலும் கூடுதலாக உடைமையாளர் பெண்களின் உழைப்பைச் சுரண்டுகின்றனர். உழைப்பாளரிடம் எவ்வாறு குறைந்த அளவு அக்கறையைத் தம் நலத்தின் பொருட்டு உடைமையாளர் காட்டுகின்றனரோ அதைப்போலவே ஆண்களும் பெண்கள் நலனில் நாட்டம் செலுத்துகின்றனர்.

**மனித நலச் சிந்தனையாளர்கள்**

மனித சமூகம் குறித்த கவலையும் பொறுப்பும் இல்லாத சராசரி ஆண்கள் தன்னல முனைப்பை மரபுவழிச் சொத்தாகப் பெற்று உள்ளனர். அதனால் பெண்ணடிமைத்தனத்தால் தங்கட்கு நடைமுறையில் கிடைக்கும் கூடுதல் ஊதியம் கருதிப் பெண்ணடிமைத் தனத்தை ஒழிப்பதற்கு ஆடவர் முன்வருவதில்லை. இதற்கு நேர்மாறாகப் 'பெண்ணடிமை' என்பது 'மனித சமூக அழிவு' என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டவர்களே மனிதநலச் சிந்தனையாளர்களாவர் என்பர் இரா. சக்குபாய்.

மனிதாபிமானமும் சமுதாய முன்னேற்றத்தில் ஆர்வமும் உடைய ஆண்கள் பலர் பெண்களின் உரிமைப் போராட்டத்திற்குத் துணையாக நின்றனர். இந்தியாவில் வறுமை, சாதி, கல்வியின்மை, மூடநம்பிக்கை போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பாமர மக்களின் முன்னேற்றம் எவ்வாறு ஒரு சமுதாயப் பிரச்சினையாக இருந்ததோ அது போன்றே பெண்களுடைய முன்னேற்றமும் உரிமையும் சமுதாயச் சிக்கல்களாக விளங்கின.

நவீன காலத்தில் பெண்ணுரிமை வளரத் தொடங்கிய சூழ்நிலையில் மனிதாபிமான அடிப்படையிலும் சமத்துவ உணர்வு நோக்கிலும் பெண்ணைக் குறித்த பழமைக் கருத்துக்களுக்கு எதிர்ப்புகள் ஏற்படத் தொடங்கின. பெண்ணை அடிமையாக நடத்தும் போக்கினை மாற்றி ஆணுக்கு ஒப்ப அனைத்து உரிமைகளையும் பெண்ணுக்கு வழங்க வேண்டும் என்ற புதுமைக்குரல் நாட்டின் மரபுப்போக்கிற்கு எதிர்ப்பாக எழுந்தது. பெண்ணின் அடிமை வாழ்விற்கு எதிராக ஏற்பட்ட எழுச்சி பெண்ணடிமை வாழ்வில் இருந்த சிக்கலைக் கூர்மைப் படுத்தியது. இதனை இருபதாம் நூற்றாண்டின் முன்பகுதியில் தோன்றிய கவிதைகள் எதிரொலித்துள்ளன என்கிறார் பி.யோகீஸ்வரன்.

பெண்ணின் வாழ்வில் நிலவும் அடிமைத்தனத்தை அகற்றி, புதுமையை அவள் வாழ்வில் புகுத்தவேண்டும் என்ற பெண்ணுரிமைக் குரல் சமுதாய நலன் நாடுவோரால் எழுச்சி பெற்றுள்ளது. பெண்ணின் முன்னேற்றத்தை நாடிய புலவர்கள் அவ்வெழுச்சிக் குரலைத் தங்கள்

பாடுபொருளாகக் கொண்டனர். பெண்ணடிமைக் கூறுகளை இனங்கண்டு அவற்றுக்கு எதிராகத் தம் கருத்துக்களைக் கவிதையாக்கித் தந்துள்ளனர்.

அவர்கள் ஆக்கித் தந்த கவிதைகளின் தலைமைப் போக்கினை மூன்றாகப் பிரிக்கலாம். நடைமுறைச் சமுதாயச் சிக்கல்களைத் தொடுவதற்கே அஞ்சுதல், சமுதாயச் சிக்கல்களை அணுகி ஆராய்தல், சமுதாயச் சிக்கல்களை அணுகி ஆராய்வதோடு மட்டுமின்றி புரட்சி மிக்க மாற்றம் சொல்லுதல் என்பன அவை என்று பகுப்பர் து. மூர்த்தி. இவற்றுள் மூன்றாவது பிரிவில் அடங்கும் தமிழ்க் கவிஞர்களில் ஒருவராக இலங்குபவர் தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள். அவர் பெண்ணடிமைத்தனத்தை நீக்கவேண்டும் என்றும், அவற்றை நீக்குவதற்குரிய வழி யாது என்பதையும், அவை எங்கு நீங்கும், எவ்வாறு நீங்கும் என்பதையும் தன் கவிதைகளில் பல இடங்களில் சுட்டிச் செல்கின்றார்.

'சீவானந்தத்தின் தமிழ்த்தொண்டைச் செப்புகின்ற நா வானந்தத்தை நணுகும்' என்று நவில்கின்றார் பாவேந்தர். 'நீங்கள்தான் இந்தியாவின் சொத்து' என்று மகாத்மா காந்தியையே மனம் நெகிழ்ந்து கூற வைத்தவர் தோழர் ஜீவா.

"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கோர் காட்டிடைப் பொந்தினில் வைத்தேன்
வெந்து தணிந்தது காடு"

என்னும் கவிதை வரிகளின் இலக்கணமாகவே நாஞ்சில் நாட்டில் வாழ்ந்தவர் ஜீவா என்று குறிப்பிடுகின்றார் பொன்னீலன். *1925*லிருந்து *1962* வரையுள்ள தமிழக உழைக்கும் மக்கள் வரலாறு, தமிழக முற்போக்குச் சிந்தனை வரலாறு, தமிழக முற்போக்கு இலக்கிய வரலாறு ஆகிய மூன்று வரலாறுகளுமே ஓரளவுக்கு ஜீவாவின் வாழ்க்கை வரலாறுதான். அவ்வரலாற்றிடை முகிழ்த்த பெண்ணியச் சிந்தனைகளை இனி நண்ணுவோம்.

### கொள்கைப்பிடிப்புக்கு உற்றதுணை

'துன்பத்தை வென்றுவிடு, தூக்குமேடை துரும்பு' எனக் கருதும் இலட்சியக் காதலனுக்கு ஏற்ற இலட்சியக் காதலியையே ஜீவா படைத்துக்காட்டுகிறார். அவர் படைக்கும் தலைவன் மிக உயர்ந்த கொள்கைப்பிடிப்பு உடைய காதலன். அவன் தன் காதலியிடம் உரையாடும்போதுகூட அது வெறும் காதல் பேச்சாக, காதலியின் நடை, உடை, பாவனை, பார்வை பற்றிய பேச்சாக இருக்கவில்லை. தன்

இலட்சியத்துக்கு ஏற்ற - உற்ற துணையாகத் தன் காதலியை எண்ணி அவளிடம் - தன் கொள்கைப்பிடிப்புக்களை எல்லாம் படிப்படியாய் விளக்குகின்றான். அவளும் புரிந்துகொள்ளும் நிலையில் இருப்பதோடு அதற்காக வரும் இடுக்கண்களை எதிர்கொள்ளவும் தயாராகின்றாள். ஒளிகொட்டும் நிலவுக்குத் தங்கையான அவளிடம் மனம்விட்டுப் பேச ஆரம்பிக்கின்றான் அவன்.

"கண்மணி நான் ஜெயில் விட்டு முன்னம் வந்தநாள் முதலாய்
கர்மவீரர் அந்தமான் போய்க்காவலில் மடிகின்றாராம்
துன்பத்தில் கழிக்கின்றாராம் ஜென்மத்தைக் கழிக்கின்றாராம்
எந்தன்நல் தோழர்கள் தூக்குஏறிய கதையின்போக்கு
ஏந்திழையே எந்தன்நெஞ்சை இரும்பாக்கி ஊக்குதடீ"

என்று கூறிய தலைவன் தூக்குமேடை ஏறி நின்ற சிங்கம் தோன்றிய நம் நாடு பங்கம் சூழும்படியாய் உள்ளதைக் கண்டு மனம் பதைக்கின்றான். எனவே,

"காதற் கனிரசமே - எந்தன்
கண்மணியே பூங்குயிலே
சாதலும் கற்கண்டடி - சம
தர்மயுத்த வீரன் என்றே"

என்று தன் உள்ளக்கிடக்கையைத் தன் காதலியிடம் வெளிப்படுத்துகிறான். தன் இலட்சிய வாழ்வுக்கும் கொள்கைப் பிடிப்புக்கும் அவள் உறுதுணையாய் இருந்து தன் பிரிவையும் தாங்கவேண்டும் என்று உணர்த்தவே இந்த விண்ணப்பம் போலும். ஜீவா கனவு கண்ட பெண் இத்தகு 'இலட்சியப் பெண்தான்'. தலைவனும்கூட, வெறுமே 'தேனே! மானே! பொன்னே! மணியே!' என்றெல்லாம் பேசிக்கொண்டிராமல் வாழ்க்கைத் தத்துவங்களையும் உடன்பேசுகின்றான். அத்தத்துவங்களை உணர்ந்து கொள்ளும் உள்ளத்திறனை அந்தத் தலைவியும் பெற்றுள்ளாள். இத்தகு பெண்களே இன்றைய பாரதத்துக்குத் தேவை. அவர்களே பாரதி கண்ட புதுமைப்பெண்கள் எனில் தவறுண்டோ? இப்படிப்பட்ட இணையே வாழ்க்கைக்குத் துணையாகத் தேவை என்பதைச் சாலை இளந்திரையன் அவர்களும்,

'வாயுலர்ந்து மக்கள்கூட்டம்
வாடிவாடிச் சாய்கையில் - உன்
வாய்க்கும் கைக்கும் பாட்டு சொல்ல
வார்த்தை தேடி ஆய்வதோ'

என்ற வினாவின் வழி (தலைவன் கூற்றாக) வெளிப்படுத்துகிறார்.

**அடிமை விலங்கொடிக்க விழைதல்**

'பாரத நாட்டில் பெண்கள் பாடு சொல்லின் நொந்த புண்கள்' என்பதே உண்மைநிலை. இங்கு மகளிர் சாரமற்று வாழ்விழந்து தாழ்வடைந்துள்ளனர். கூண்டிலடைக்கப்பட்ட பறவையாய் உரிமையிழந்து நிற்கின்றனர். இங்குப் பெண் என்பவள்,

'வேண்டி வந்த வரமிதென்று
வெம்பிவேகின்றாள் - பாழும்
விதியை நோகிறாள்'

அந்த விதியால் எந்தப் பயனும் விளையாது. ஆலகால ஆண்கள் செய்யும் ஆதிக்கப்போக்கு நாளும் குறையக் காணோம். பெண்களை ஒவ்வொரு அம்சங்களிலும் அது பாதிக்கின்றது.

'அற்பர்தம் கேலிப்பேச்சு
ஐயகோ! பெருத்துப்போச்சு
'கற்பு' என்று மிரட்டி எம்மைக்
கசக்கிக் கொல்கிறார் பழம்
கதைகள் சொல்கிறார்' - அவற்றைக் கேட்டு
'காலமெல்லாம் துடிதுடிப்பு
கஷ்டத்தில் கண்ணீர்வெடிப்பு'

என்பது தானே மகளிரின் உண்மைநிலை. இதைப் பெண்கள் உணர்ந்து 'ஆணுக்கும் பெண் அடிமை' என்றும் எண்ணும் போக்கை மாற்றி அடிமை விலங்கை ஒடிக்கத் தயாராக வெளிவர வேண்டும். இதுவே ஜீவாவின் விழைவு. எனவேதான் 'பாப்பாப் பாட்டு' பாடிய பாரதியைப் போல் இவரும் 'பாப்பா, ஒரு சொல் கேட்பாய்' என்றழைத்து,

'பெண்ணே வாழ்வின் கண்ணே - எனப்
பேசி நல முன்னே
பித்தர் செய்த பெண்ணடிமை
இத்தரையிற் பொடி செய்வாய்'

என்று அறிவுறுத்துகின்றார் தன் கொள்கையை. அது மட்டுமா தாழ்வுக்குரிய காரணங்களை,

சாதி மதபேதம் - நம்மைத்
தாழ்த்தும் கேடநீதம்'

என்று மொழிந்து அவற்றைப் போக்குவதற்காக,

'வீராங்கனைகள் எல்லோரும்
போராட வரவழைப்பாய்'

என்று வேண்டுகோள் விடுக்கின்றார். நெடியதோர் போராட்டத்தில் இறங்குவதற்காகப் பெண்களை அறைகூவி அழைக்கின்றார்.

"விடுதலைக்கு மகளிரெல்லாரும் வேட்கைகொண்டனம்
வெல்லுவம் என்றே திடமனதின் மதுக்கிண்ணமீது சேர்ந்து
நாம் பிரதிக்கினை செய்வோம்"

என்ற பாரதியின் பெண்விடுதலைக்குரல் இங்கு மறுவடிவம் பெற்றுள்ளதெனலாம்.

**ஏழையர்க்கு இரங்கும் மனம்பெறல்**

ஆண்மக்கள் அழுவைத்து வேடிக்கைப் பார்ப்பதால் அழுகின்ற விதவைகள் மட்டுமில்லாமல் நாட்டில் செம்மை வளர்ச்சி இல்லாத காரணத்தால் கஞ்சிக்கும் கந்தைக்கும் அழுவோர் நம் நாட்டில் பல கோடிப்பேர் உண்டு. மேதினி கண்ட கொடுமையிலே மெத்த உண்டு இந்தியா தேசத்திலே, எண்ணையற்றுத் தலை ஈஞ்சு செடிபோன்றோர் எத்தனைகோடிப் பேர் உள்ளனர் இந்தத் தேசத்திலே. இவற்றைக் கண்டும் காணாமல் கண்ணிருந்தும் குருடராய்' காரிகையர் இருக்கக் கூடாது என்று ஜீவா கருதினார். ஏழைகளாய் ஈடின் மானிகளாய் நெஞ்சிளைத்தவன் தமைக்கண்டு மங்கையர் மனமுருக வேண்டும். அவர்களுக்காக - அவர்கள் ஏற்றம் பெறுவதற்காகப் பாடுபடவேண்டும் என்ற எண்ணம் உயர்ந்த குறிக்கோளாக ஏந்திழையாரிடம் இடம்பெறவேண்டும் என்பதை,

'ஏழை எளியவர் உன்னதம் - எய்திடப் பாடுவாய்'

என்ற வரிகளில் சுட்டிக்காட்டுகின்றார். தான், தன்வீடு, தன் குடும்பம் என்ற சுயநல வட்டத்தைவிட்டுச் சுற்றியுள்ள சமுதாயத்தின் நலத்தில் ஈடுபடும்படி இனிதின் அவர்களை அழைக்கின்றார். இத்தகைய பொதுநல நோக்குடைய பாவையரே இன்று பாருக்குத் தேவை என்று சாலை இளந்திரையன் அவர்களும்

நல்லை நீ என்நங்கை நீ என்
நன்மைநாடும் என்துணை
அல்ல வென்று சொல்லவில்லை
ஆயினென்றன் அன்னமே - நம்

அக்கம் பக்கம் பார்த்தலின்றி
ஆழ்வதோ இங்கின்னமே'

என்ற வரிகளின் விளக்குகின்றார்.

'நாதியிலையென ஓதிலுடனொரு
சேதியுரைபணி மொழியாளே'

என்ற ஜீவாவின் வரிகளும் இக்கருத்துக்கு அரண் செய்வதாகவே அமைந்துள்ளன.

**மகளிர் மேற்கொள்ளவேண்டிய பாதை**

'ஆணுக்கொரு வகைச்சட்டம் அரிவையர்க்கொருவகைச் சட்டம் கோணல் உலகத்தில் கொடுமை கொடுமையடீ! என்று மனம் நொந்து பாடிய ஜீவா இவற்றை முதலில் மகளிர் உணரவேண்டும் என்பதையும், அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளையும்

'சரிநிகர் சமமென்னும்
சர்க்கரைக் கட்டிக் கொள்கை
தெரிந்து கடைப்பிடிப்பாய் - கிளியே
செக மொன்றாய் வாழ்வமடி'

என்று தெளிவாக விளக்குகின்றார். உலக வரலாற்றில் தாய்வழிச் சமுதாயத்தின் வீழ்ச்சியால் பெண்ணினத்திற்கு ஏற்பட்ட தாழ்ச்சியையும் ஆணினத்திற்கு ஏற்பட்ட உயர்ச்சியையும் அவர்கள் அதன் காரணமாக ஆதிக்கம் செலுத்துவதையும் அறிந்த ஜீவா,

'ஆடவர் ஆதிக்கம் பெற்ற செய்கை - கொடும்
அக்ரமம் விளைத்த நச்சுப் பொய்கை'

என்று வன்மையாகச் சாடுகின்றார். அதுமட்டுமின்றி,

'சாண் பிள்ளை யானாலும்
ஆண் பிள்ளை எனும் ஜம்பம்
வீண் பிள்ளாய்'

என்று சமுதாயத்திடை உலவும் பழமொழியையும் கண்டிக்கிறார்.

மாதர் எத்தகு தோழர்களைத் தம் வாழ்க்கைத் துணைவர்களாகக் கொள்ள வேண்டும் என்பதை அவர்,

'தோகை நலமுற நீதிபெறவல
தோழர்களை யுற முயல்வாயே'

என்ற வரிகளில் கோடிட்டுக் காட்டுகின்றார். அவர்கள் பின்பற்றும் நெறி 'சுயமரியாதை' எனக்காட்டி

"அது பாரில் இனிதுறு பாதை
புகழ்தரும் பாதை"

என்றும் அறிவுறுத்துகின்றார்.

**பெண்ணுரிமை உண்மைநிலை**

மகளிர் பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் இன்று பெருகியுள்ளதெனினும் கண்ணீர்க்கடலில் மிதக்கும் காரிகையரின் எண்ணிக்கையும் இன்று அதிகம்தான். எவ்வளவு திறமைகள், அருமை பெருமைகள், அறிவுநலம், ஆற்றல் சிறந்திருப்பினும் ஆண் ஆதிக்கத்திலிருந்து அவர்கள் தப்பவே முடிவது இல்லை. மற்றவர்களிடம் பேசினால்கூடச் சந்தேகப் பார்வை சுற்றி வளைத்துக் கொள்கிறது. அவர்களின் 'கற்பு' சந்தேகிக்கப்படுகிறது'. வெளியே சொல்லமுடியாத அந்த ஊமைப் பெண்டிரின் மௌனங்கள் ஜீவாவுக்கு இவ்வுண்மைகளை உணர்த்தினபோலும். எனவேதான்,

'பேசிடில் பெண்கள் கற்பு
பிசகு மென்றே மிரட்டி
தோஷிகளாய் ஆடவர் - கிளியே
தோகையரைப் பழித்தார்'

என்று மனமிரங்கிப் பாடியதோடு மகளிரின் உண்மை நிலையை,

'பெண்களுக்கு ஒன்று மில்லை
பேச உரிமை யில்லை
மண்மிசைப் பெண் பிறப்பு
மண்பிறப் பாச்சுதடீ'

என்று படம்பிடித்துக் காட்டுகின்றார். 'மங்கை யராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா' என்ற கவிமணியின் வாக்கு இன்றும் ஏட்டுச் சுரைக்காயாகத்தான் உள்ளது. எனவே ஆவேசமாய் எழுந்து அடிமை விலங்கு ஒடிக்க அரிவையரை அழைக்கின்றார் ஜீவா.

'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்'

என்று பாடிய பாரதியின் வரிகளை ஒத்து இவரும்,

'காட்டுக் கரடி நகை
கைதி போல் கன்னியரை
வீட்டிலே பூட்டி வைத்தார் - கிளியே
வெஞ்சினம் பொங்குதடி'

என்று சினந்து பாடுகின்றார்.

**பெண்கள் இனிச் செய்யவேண்டியவை**

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்ட பெண்டிர் இனி என்ன என்ன குணங்கள் பெறவேண்டும், என்ன செய்யவேண்டும் என்பதையெல்லாம் கூறி விரைந்து செய்யவேண்டியது 'யாது' என்பதையும் கீழ்க்கண்ட வரிகளில்,

"பாவிகள் பெண்கள் என்னும்
பாதகர் வாய்க் கொழுப்பைத்
'தூ' வென் றுமிழும் திறன் வேண்டும்"

"பெண்ணைக் கன்னா பின்னாவாய்ப்
பேசித் திரியும் வம்பர்
கன்னத்தோர் அறைவிழவேண்டும்"

"சின்னத் தனமாய்ப் பெண்களைச்
சித்தரிக்கும் நூற்களை
இன்னே நெருப்பிலிட வேண்டும்"

என்றெல்லாம் பட்டியல் போட்டுத் தருகிறார்.

பாதகம் செய்பவரைக் கண்டால் - நீ
பயம் கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா'

என்ற பாரதியின் கருத்தும்,

'தனித்து வரும்போது கெட்ட
தறுதலை கண் வைத்தால்

இனிக்க நலம்கூறு - பெண்ணே
இல்லாவிட்டால் தாக்கு'

என்ற பாவேந்தரின் கூற்றும் மேற்கண்ட வரிகளில் எதிரொலிக்கத்தானே செய்கின்றன. பெண்களைச் சின்னத்தனமாய்ச் சித்திரிக்கும் நூல்களை "உடனே" 'இப்போதே' நெருப்பிலிட்டுக் கொளுத்த வேண்டும் என்று யாரும் இதுவரை கூறாத கருத்தையும் ஜீவா அன்றே கூறியுள்ளார். இன்று சீரழிந்து வரும் சமுதாயத்துக்கு அன்றே அவர் 'சிறு எச்சரிக்கை' விடுத்துள்ளார் என்பது இவற்றான் புலனாகின்றது அன்றோ.

**விஞ்ஞானம் ஏற்று அஞ்ஞானம் நீங்கல்**

பெண்களுக்கு வெந்தபோதும் நொந்தபோதும் வீறிட்டெழும் ரோஷம் வேண்டும். பாதகத்தை அம்பு போலப் பாய்ந்தடிக்கும் தன்மை வேண்டும். இன்ப லோகம் சமைத்திட பெண்கள் ஒன்று திரள வேண்டும். இன்றைய உலகம் கணிப்பொறி உலகம். எனவே நாமும் அதனுடன் இயைய விஞ்ஞானத்தை ஏற்க வேண்டும். கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போகவேண்டும். புதிய அறிவியல் பார்வையை நாம் பெறவேண்டும். அன்றெனின் நாம் உலகத்தின் வேகத்தோடு போட்டிபோட முடியாமல் பின்தங்கிவிடுவோம். எனவே மகளிரை நோக்கி,

'இன்பலோகம் பெற ஏற்பாய்
விஞ்ஞானவேகம்'

என்றறிவுறுத்துகிறார். அப்போதுதான் பாவையர் பாரில் தனக்குப் புதுப்பாதை காட்டிட இயலும் என்கிறார். பெண் என்பவள் கோழை உலகை வதைக்கும் கொடிய விதியைச் சாடுபவளாகவும், ஞானக்குளிர் தருவை வளர்ப்பவளாகவும் இருக்க வேண்டும் என்று பெண்கள் மேற்கொள்ள வேண்டிய நெறிகளை எடுத்தியம்புகின்றார்.

**பெண்கள் அகற்றவேண்டியவை**

பீத்தல் பழைமையைப் பேணிப் பெண்கள் கெடுவதையும் மூடநம்பிக்கைகளால் முக்காடிட்டுக் கிடப்பதையும் நகைச்சுவையாக,

"கொள்ளைச் சிரிப்பு வந்ததே
. . . . . . . . .
பிள்ளைவரம் பெற்றிடவென்று - வள்ளி
பேரரசு வேப்பமரம் சுற்றியபோது"

"புள்ளினக் கருடனைக்கண்டு - சீதை
பூமியில் விழுந்து 'கிருஷ்ணா' என்றிட்டபோது
கள்ளக் காவிவேட தாரிக்கே' - லீலா
கடவுள் பணிவிடைகள் செய்திட்டபோது"

என்று கூறும்போது பெண்கள் இம்மடமையற்று விளங்கவேண்டும் என்ற அவர் விழைவு தெள்ளிதின் புலனாகின்றது.

"முச்சந்தி காத்தானும் உண்டா - இதை
முணுமுணுப்பது நேரில் கண்டா
உச்சி இருட்டினில் பேய்வந்ததாக
உளறினால் அச்சமா? பேய் என்பதுண்டா"

என்று பாவையரின் பேதமையை நீக்கப் பாவேந்தர் புகன்ற வரிகளும் இவண் ஒப்புநோக்கத் தக்கன. பச்சைப் புளுகெல்லாம் மெய்யாக நம்பி மடமையின் காரணமாகப் பல்பொருள் இழக்கின்றனர் காரிகையர். வீணான மூட நம்பிக்கைகட்குப் பெண்கள் ஆளாகியிருப்பதை நகைச்சுவையாகவும் நயம்படவும் சுட்டிக் காட்டி 'பெண்கள்' இப்படி இருக்கக்கூடாது. மடமையை அகற்றி வாழவேண்டும் என்று உணர்த்துகின்றார் ஜீவா. செயத்தக்க அல்ல செயக்கெடும் அன்றோ?".

பெண்ணடிமை யொழிப்பு

பெண்ணடிமை நிலை மிகவும் பயங்கரமானது; கொடுமையானது; குரூரமானது; பாட்டாளி வர்க்கத்தின் விடுதலையோடு ஒப்பிடும் போது பெண்ணினத்தின் விடுதலை மிகவும் சிக்கலானதாகவும் பாட்டாளியின் விடுதலை எளிதாகவும் தோன்றுகிறது. பாட்டாளிகளை அடக்கி ஆள அரசு வன்முறையையும் அரசு யந்திரங்களையும் பயன்படுத்துவது போன்றே பெண்ணினத்தை ஆணினம் வன்முறையாலும் மதம், குடும்பம், கலை இலக்கியம் போன்ற கருத்தியல்களாலும் ஆண்டாண்டு காலமாக அடக்கி ஆண்டு வந்துள்ளது. எனவேதான் ஜீவா,

'உடனடிமை ஒழிய வேண்டும் - பெண்கள்
உரிமையடைய வேண்டும்
வேறென்ன வேண்டும்'

என்று ஓங்கிக் குரல் கொடுக்கின்றார். 'கைம்மையில் நீறுவோர் கோடியுண்டு' என்றும் வேதனைப்படுகிறார். 'எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்' என்று புதுக்கும்மி இசைத்த பாட்டுக்கொரு புலவனாம் பாரதியின் வழி வந்தவர் பாவேந்தர். எனவேதான்

அவர் 'ஆணுக்குப் பெண் சமம்' என்று கூறுங்கால் ஆணுக்கே முதன்மை தரப்படுகிறது என்பது அறிந்து இதை மாற்றித் தாம் படைத்த 'புதிய ஆத்திசூடியில், 'பெண்ணொடு ஆண் நிகர்' என்று புகன்று தாம் புரட்சிக்கவிஞர் என்பதை ஒற்றை வரியில் நிரூபித்துவிட்டார்.

பெண்ணடிமைத்தனத்தின் ஆரம்ப நிலையை 'ஆண் பெண்களிடையே ஏற்பட்ட வேலைப் பிரிவினையே சமுதாய வரலாற்றில் முதன்முதலில் தோன்றிய வர்க்க முரண்பாடாகும். இதைத் தொட்டு, உலகில் தோன்றிய முதல் அடிமை பெண்ணினமே என்று கு. கணேசலிங்கன் தம் 'பெண்ணடிமை தீர' என்ற நூலில் குறிப்பிடுகின்றார். சமுதாயத்தில் வீட்டு வேலை, சமையல் வேலை போன்றவை பெண்கட்கே என்று ஒதுக்கப்பட்டு அவளுக்கு 'இல்லாள்', 'மனையாள்', 'இல்லக்கிழத்தி' போன்ற பெயர்கள் இடப்பட்டுள்ளன. உணவு படைத்தல், வீட்டைப் பேணல், குழந்தைகளைப் பராமரித்தல், உடைகளைத் துவைத்தல். முதியோரைக் கவனித்தல், தண்ணீர் எடுத்தல் போன்ற வேலைகளைச் செய்யும் மனைவியின் உழைப்புக்குக் கூலி கிடைப்பது இல்லை. வேலைக்காரர் மேற்கண்ட பணிகளைச் செய்யும்பொழுது அவர்கட்குக் கூலி தரப்படுகின்றது என்பது யாவரும் அறிந்த உண்மை. பெண் நாள்தோறும் பல மணிநேரம் உழைக்க நேரிடுகிறது. களைப்பு மேலிடினும் பற்பல இடுக்கண்களையும் இடையறாது சுமக்க நேரிடுகிறது. எனவேதான்,

'சமைப்பதும் வீட்டுவேலை
சலிப்பின்றிச் செயலும் பெண்கள்
தமக்கேஆம் என்றுகூறல்
சரியில்லை ஆடவர்கள்
நமக்கும் அப்பணிகள் ஏற்கும்
என்றெண்ணும் நன்னாள் காண்போம்'

என்று குரல் கொடுக்கின்றார் புரட்சிக்கவிஞர். 'குடும்ப விளக்கும் குண்டுக் கல்லும்' என்ற நாடகத்திலும், 'நல்லதுணைவர்' என்ற பாடலிலும் இத்தகு கருத்துகட்கு அவர் மெருகூட்டுவதை நம்மால் காணமுடிகிறது.

உலகில் இன்றைய மகளிர் நிலை என்ன என்ற வினாவிற்கு ஐக்கிய நாடுகள் சபையின் *1985* ஆம் ஆண்டறிக்கை, "உலகின் குடித்தொகையில் பாதிப் பங்கினரான பெண்கள் ஆண்களிலும் பார்க்க இரு பங்கு நேரம் உழைக்கின்றனர். நாள்தோறும் சராசரி *15* மணி நேரத்திற்கும் குறையாது உலகின் மூன்றில் இரண்டு பங்கு வேலைகளில் உழைத்து, பத்தில் ஒரு பங்கு வருமானமும் நூற்றிலொரு பங்குக்கும்

குறைவான சொத்துரிமையும் கொண்டுள்ளனர்" என்று விடை பகர்கின்றது. சாதி ஏற்றத்தாழ்வைவிட ஆழமாகவும் அகலமாகவும் பரவியிருப்பது ஆண்பெண் ஏற்றத்தாழ்வாகும். இருவகை ஏற்றத்தாழ்வும் விரைந்து ஒழிக்கப்பட வேண்டும். சாதி ஏற்றத்தாழ்வை ஒழிப்பது காட்டாற்றில் எதிர் நீச்சல் போடுவது போலாகும். ஆண் பெண் சமத்துவத்தை அடைவது நெருப்பாற்றில் எதிர்நீச்சல் போடுவதற்கு ஒப்பாகும் என்ற நெ. து. சுந்தரவடிவேலு அவர்களின் கூற்று இவண் சிந்தித்துப் பார்க்கவேண்டிய ஒன்றாகும். இப்பெண்ணடிமைத்தனத்தை ஒழிக்க விழைந்த சாலை இளந்திரையன் அவர்கள் அச்சம உரிமை எங்குச் சாத்தியமாகும் என்பதை,

'பெண்ணுக்கும் ஆணுக்கும்
உரிமை என்னும்
மென்காற்று தவழுகின்ற
பெரிய கோட்டை
............ அதுவே எம்
பொதுமைக்கோட்டை'

என்ற வரிகளில் விளம்புகிறார். இக்கருத்தையே ஜீவாவும்,

'சமதர்மக் கொடியின்கீழ்
தையலரின்ப வாழ்வு
அமையும் உறுதியடி - கிளியே
ஆண்பெண் பிரிவேதடி'

என்ற வரிகளில் உறுதிப்படக் கூறுகிறார்.

**ஊற்றுகண்**

பெண்ணடிமைத்தனத்தின் ஊற்றுக்கண்ணைக் கண்டறிந்தால் அன்றி அதனை அழிக்க இயலாது. இதனால் மனித சமூக வரலாற்றில் அதன் ஊற்றுக்கண்ணைக் காணும் ஆய்வில் ஈடுபட்டனர் மார்க்சும், ஏங்கல்சும். ஆய்வின் முடிவில் 'குழந்தை பெறுவதற்காக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே இருந்த வேலைப் பிரிவினைதான் முதல் பிரிவினையாகும்" என்று தெளிந்தனர். குழந்தையைப் பெறும் வாய்ப்பு இயற்கையில் பெண்ணுக்கே அமைந்துள்ளது. இவ்வாய்ப்புதான் கடமைப் பாகுபாடுகளுக்கு அவளை இணங்குமாறு செய்தது. அதனால் குழந்தைப் பேற்றுக்காகவும் பின்னர் குழந்தை வளர்ப்புக்காகவும் வீட்டில் தங்கினாள். இதுவே அவளைச் சமூக உழைப்பில் பங்கு பெறாதவாறு தடுத்தது. பெண்களுக்குச் சமூகத்தில் முதன்மை கொடுக்கப்பட்டாலும்,

"ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"

என்ற சங்கப் பாடல் அடிகள் இவள் சமூக உழைப்பிலிருந்து விலகி நின்றதை உணர்த்துகின்றன. மேலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் நேர்ந்த கடமைப்பாகுபாட்டையும் தெளிவுபடக் காட்டுகின்றன. பெண்ணின் உழைப்பு முற்றாக்கக் குடும்ப உறுப்பினர்க்கே பயன்பட்டுப்போவதால் பொருள் வடிவில் மீதத்தைக் காட்ட முடியவில்லை. சமூக உழைப்பில் ஈடுபட்ட ஆண் பொருள் வடிவில் மீதம் காட்டினாள்.

மனைவியை ஏமாற்றி வலிந்து கொண்டதன் உடைமையின் காரணமாகக் கணவன் தனக்கு உயர்வைக் கற்பித்துக்கொண்டான். தன்னுடைய உழைப்பாலேயே மனைவி உண்கிறாள்; உடுத்துகிறாள்; இருப்பிடம் பெறுகிறாள் என்று நம்புமாறு செய்தான். மனைவியை வெறும் உடம்பாகக் கருதினான். இவ்வாறு ஆணுக்கு இணையாகத் தொடங்கிய பெண்ணின் வாழ்க்கை காலப் போக்கில் தாழ்வடைவதாயிற்று. ஆண்களின் வாழ்வில் ஏமாற்றம் ஏற்பட்டது. இவ்வேற்றத்தாழ்வால் மகளிர் கூட்டம் வலிமையற்றதாக்கப்பட்டது

ஆண்களைக் கவர்வதற்காகவே அவள் செய்கைகள் என்பதாயிற்று. ஆண்கள் கூட்டம் வலிவைப் பெற்றது. இதனைப் புரட்சிக்கவிஞர்,

'ஆடை அணிகலன் ஆசைக்கு வாசமலர்
தேடுவதும் ஆடவர்க்குச் சேவித்திருப்பதுவும்
அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப்போல் வாழ்வதும்
கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர்குலம்
மானிடர் கூட்டத்தின் வலிவற்ற ஓர்பகுதி
ஆன மற்றோர்பகுதி ஆண்மை'

என்று படம்பிடித்தும் காட்டுவர். மகளிர் உலகம் பெரிதும் மாறவேண்டும். சமுதாயத்தில் தாங்கள் எங்கு நிற்கிறோம் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். உடலியல் படி பெண் ஆணிலிருந்து வேறுபடுகிறாளே தவிர ஆற்றலிலோ, அறிவிலோ, ஆளுமையிலோ ஆண்களைக் காட்டிலும் சற்றும் குறைந்தவள் அல்ல என்பதைப் பெண்கள் முதலில் உணரவேண்டும். பிறகு பிறர்க்கும் உணர்த்தவேண்டும். இதைத்தான் பெரியார், "ஆணின் நலத்திற்குப் பயன்படுவதற்கும் ஆணின் திருப்திக்கும் ஆணின் பெருமைக்கும் பெண் ஓர் உபகருவி என்பதல்லாமல் வேறென்ன? பெண் என்பவள் ஓர் ஆணுக்குச் சமையற்காரி; ஓர் ஆணின் வீட்டிற்கு ஒரு வீட்டுக்காரி; ஓர் ஆணின் குடும்பப் பெருக்கத்துக்கு ஓர்

பிள்ளை விளைவிக்கும் பண்ணை; ஓர் ஆணின் கண்ணழகிற்கும் மனப்புளகாங்கிதத்திற்கும் ஓர் அழகிய அலங்கரிடக்கப்பட்ட பொம்மை என்பதல்லாமல் பெண்கள் பெரிதும் எதற்குப் பயன்படுகிறார்கள்? பயன்படுத்தப்படுகிறார்கள்? இது என்ன நியாயம்?'' என்று எடுத்துரைக்கின்றார். ஆண்களுக்காக நாம் என்று பெண்கள் நினைப்பதால்தான் இத்தகு இழிநிலைமை உள்ளது. கணவர், நகைநட்டு, நல்ல துணிமணிகள் வாங்கிக் கொடுத்தால் போதும் என்கிற அளவுக்குப் பெண்கள் தற்போது தங்களைக் குறுக்கிக்கொண்டு விட்டனர். இப்படி அவர்கள் முட்டாள்களாகிப் போனமைக்குக் காரணம் சமூகத்தின் சட்டதிட்டங்களும் ஆண்களின் சுயநலங்களுமே ஆகும். இவற்றை முதலில் பெண்கள் உணரவேண்டும். வாழ்வில் உடைத்தெறியவேண்டிய இத்தகு கட்டுக்களை அடிமை விலங்குகளை உடைத்து எறிந்தால்தானே மகளிர் முன்னுக்குச் செல்லமுடியும். எனவேதான் ஜீவா,

'ஆவேசமாய் எழுவோம்
அடிமை விலங்கொடிப்போம்'

என்றும்,

"பெண்கள் போர்புரிந்து வெற்றிபெறும் வேகம் கொண்டால்
பூழ்திபடும் ஆடவர் செய் துரோகம்'

என்றும் நவின்று பெண்கள் கொள்ளவேண்டிய செயல் வேகத்தினை முன்னிறுத்திக் காட்டுகின்றார். அதுமட்டுமன்றி அவர்கள் பெறவேண்டிய மன மாற்றத்தினை,

'மாதரசி - மன
மாற்றம் செய்தமிழரசி
கற்பென்று பூச்சி காட்டும்
கழுதைகளை நிந்தனைசெய்
கட்டற்ற சிட்டுபோற்
களித்திடவே சிந்தனைசெய்

என்றும் எடுத்து மொழிகின்றார்.

**புதிய பாதையில் பாதம் பதித்தல்**

மனித இனம் நடந்து வந்திருக்கும் பாதையைத் திரும்பிப் பார்க்கின்ற பொழுது எழுதப்பட்ட வரலாறுகள் எல்லாமே பெண்ணை ஒடுக்கிக்கொண்டு எழுந்து நிற்பதைப் பார்க்க முடிகிறது. சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் நம் நாட்டிலும் வாழ்ந்திருக்கிறார்கள் என தலை

நிமிர்த்திச் சொல்ல வருகின்ற அதே நேரத்தில் அவர்களின் பாடுபொருளாக இருந்ததெல்லாம் அகவாழ்வு சார்ந்தவையே என்ற பேருண்மையையும் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது (ஔவை நீங்கலாக). அனைத்து அரசியல் ஆதிக்கங்களும் பெண்களின் ஒடுக்கப்பட்ட அக வாழ்வுக்குள்தான் தங்கள் வேர்களை ஒளித்து வைத்திருக்கின்றன. தங்கள் நிலைமை குறித்து உணர்த்தலேயில்லாமல் இருக்கும் பெண்ணினத்தை நோக்கியே ஜீவா போன்ற கவிஞர்கள் குரல் கொடுக்கின்றனர்.

'பெண் விடுதலை' என்பது ஆணுக்கு எதிரானது அல்ல; அது ஒட்டுமொத்த சமூக விடுதலையை நோக்கி இயங்குவது; எனவே ஆண்களின் நலன்களையும் உள்ளடக்கியது என்பதை இருபாலாரும் உணர்தல் வேண்டும். பெண்ணுரிமை என்பது என்னவெனில் ஆணைப் போலவே பெண்ணுக்கும் வீரம், வலிமை, ஆற்றல், கோபம், ஆளும் திறமை உண்டென்பதை ஆண்மக்கள் ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதேயாகும். வன்மை, ஆற்றல், சினம் ஆண்களுக்குச் சொந்தம் என்றும் சொல்லப்படும் புனைவுச் சொற்களில் பயன் ஏதும் இல்லை. அவ்வாறு சொல்லிச் சொல்லிக் கோபப்படக்கூட உரிமையில்லாதவர்களாகப் பெண்களைப் பள்ளத்தில் நிறுத்தி வைத்து விட்டார்கள். ஏசுநாதரைச் சிலுவையில் அறைந்து விட்டுத் தேவகுமாரன் என வணங்குவது போலப் பெண்ணையும் சிலுவையில் அறைந்து கொண்டே 'பெண்ணின் பெருமை' பற்றி இன்றைய பண்டிதர்கள் பேசுகின்றனர். அவர்களை,

'கற்பின் குலமென்றும் கண்ணகி குலமென்றும்
அற்புதமாகத் தீட்டுவாங்க ஏன்
அச்சடிச்சும் காட்டுவாங்க
சொன்ன கருத்துக்கு மாறாகக் கற்பைக் களவாடக்
கன்னக் கோலைத் தீட்டுவாங்க'

என்று தோலுரித்துக் காட்டுவார் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம். பெண் விடுதலைக் கண்ணியில் ஜீவாவும் இக்கருத்தை,

'கண்ணற்ற ஆடவரால் - கிளியே
கட்டுண்டு பெண்கள் நைந்தார்'

என்றெடுத்து இயம்புகின்றார். அதுமட்டுமன்றி

'மடையர் பழமை மாயவேண்டும் அதற்குரிய
மார்க்கம் புதுமை பெறவேண்டும்'

என்று நவின்று புதுப்பாதை வகுக்க வேண்டியதன் அவசியத்தையும் வெளிப்படுத்துகின்றார்.

**பழந்தமிழ் இலக்கியங்கள் பகரும் உண்மைகள்**

மகளிர் ஆடவரின் உயிர் என்னும் கருத்து பழங்காலத்தில் இல்லை. கற்பு ஆடவர்க்கு வற்புறுத்தப்படவில்லை. பல பெண்களோடு ஒருவன் வாழ்தல் கடிந்துரைக்கப்படவில்லை. பொதுமகள் என்பதுபோல் 'பொதுமகன்' என்று ஆண்மகனின் தவறு சுட்டப்படவில்லை. கணவன் உயர்ந்தவனாகவே கூறப்பட்டுள்ளான். பெண் ஆணின் உடைமையாகக் கருதப்பட்டாள். இத்தகைய குறைகளைத் தக்க இலக்கியச் சான்றுகளோடு ஜீவா எடுத்துக்காட்டியுள்ளார் என்று ஜீவாவின் 'புதுமைப்பெண்' எனும் நூலுக்கு அளித்த முன்னுரையில் மு. வரதராசனார் நவில்கின்றார். இக்கூற்றை,

'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே'
(தொல்காப்பியம்; களவியல்; 2)

'கற்பு எனப்படுவது கரணமொடு புணர
கொளற்கு உரிமரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்கு உரிமரபினோர் கொடுப்பக் கொள்வதுவே'
(தொல்காப்பியம்; கற்பியல்; -1)

'பெருமையும் உரனும் ஆடூஉ மேன' (தொல். களவியல்; 7)

'அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப' (தொல். களவியல்; 8)

என்று வரும் அடிகள் மெய்ப்பிக்கவே செய்கின்றன. எனவேதான் ஜீவா பழைய காலத்து அறிஞர்களின் கருத்துக்களை இந்தக் காலத்து முன்னேற்றக் கொள்கைகளோடு ஒருங்கு வைத்துச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்கின்றார். எவ்வளவு பெருமைக்குரிய சான்றோர்கள் ஆயினும் அவர்கட்குத் தரவேண்டிய மதிப்பைத் தருவதோடு சுட்டிக்காட்ட வேண்டிய கருத்து வேறுபாடுகளை ஜீவா அவர்கள் நடுவுநிலைமையுடனும் அஞ்சாமையுடனும் சுட்டிக்காட்டிச் செல்கின்றார், தம் 'புதுமைப்பெண்' என்னும் நூலில். பழந்தமிழ் நூல்களில் ஒருசில இடங்களில் பெண்ணுக்குத் தரப்பட்டுள்ள பெருமையையும் சுட்டிக்காட்டிப் பொதுவாகவே ஆண்மகனுக்கே உயர்வும் சிறப்பும் கூறப்பட்டுள்ளமையால் புதுமைப்பெண் அந்தப் பழைய மரபுகளை ஏற்க முடியாது என்பதை ஆணித்தரமாக விளக்கியுள்ளார். தொல்காப்பியரையும் சங்கப்புலவர்களையும்

திருவள்ளுவரையும் நன்கு மதித்துப் போற்றும் ஜீவா முன்னோர்கள் பெண்கள் பற்றி நவின்றுள்ள கருத்துக்கள் பழைய கால வாழ்க்கைக்கு மட்டும் ஏற்றவை என்றும், இன்றைய சமுதாய முற்போக்குக்கு ஏலாதவை என்றும் தெளிவுபடுத்தியுள்ளார்.

### புதிய பார்வை பெறல்

இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கூட புதுமைப்பெண் வரவேற்கத்தக்க அளவிற்கு முன்னேற்றம் இல்லை என்பதையும் நாம் மறக்க இயலாது. தாலி பெண்ணுக்கு மட்டும் கட்டும் வழக்கம் ஏன் என்பதை நமக்குள் நாம் கேட்கும் நிலை இன்றும் உள்ளது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கணவன் பெயருக்குள் மனைவியின் பெயர் மறைந்துவிடுகிறதேயல்லாமல் மனைவியின் பெயருக்குள் கணவனின் பெயர் அமையும் வழக்கம் இல்லை. எட்வர்ட் என்பவனை மணந்த எலிசபெத் மிஸஸ் எட்வர்ட் ஆகிறாளே அல்லாமல் அவன் மிஸ்டர் எலிசபெத் ஆவதில்லை. இதுபோலவே பழைய மரபுகள் - கணவனுக்கு உயர்வு தரும் கூறுகள் இன்னும் சில நடைமுறையில் இருந்துவருகின்றன. ஏன்? பத்து மாதம் சுமந்து அங்கமெலாம் நொந்து குழந்தையைப் பெற்றெடுப்பவள் தாய்தானே? அவளின் பெயர் குழந்தைக்குத் தலைப்பெழுத்தாக இன்றும் அமைகின்றதா? இல்லையே. இவை போன்ற பல கூறுகள் இச்சமுதாயம் பெண்கட்கு அளிக்கும் இடத்தை நன்கு பறை சாற்றுகின்றன எனலாம். இன்றைய 'புதுமைப்பெண்' இவற்றையெல்லாம் கடந்து ஆணுக்கு நிகரான நிலையைப் பெறவேண்டும். பழைய இலக்கியத்தைக் கற்கும்போதும் புதுமைப் பெண்கள் அந்தப் பழைய மரபுகளைத் தெளிவாகப் பார்க்கும் பார்வை பெறவேண்டும் என்கிறார் ஜீவா.

### முடிவுரை

இவ்வாறு இலட்சியப் பெண்ணாக நாட்டுப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டவளாக, வீராங்கனையாக, மூடத்தன்மை அற்றவளாக, பெண்ணுரிமைக்குக் குரல் கொடுப்பவளாக ஏழை எளியோரிடம் இரங்கிய மனம் கொண்டவளாக அஞ்ஞானம் ஒழித்து விஞ்ஞான வேகம் ஏற்பவளாகப் பெண் இருக்கவேண்டும் என்று ஜீவா விழைவது அவர் பாடல்கள் வழி புலனாகின்றது. அவருடைய 'புதுமைப்பெண்' பல இலட்சியங்களின் - சீரிய சிந்தனைகளின் கொள்கலமாகத்தான் இலங்குகிறாள். மேலே நாம் கண்ட இவை போன்ற இன்னும் பல சிந்தனைகள் ஜீவாவின் பெண்ணியச் சிந்தனைகளாக அவருடைய கவிதைத் தோட்டத்தில் மலர்ந்து மணம் பரப்புகின்றன. அவற்றை விரிப்பின் பெருகும்; தொகுப்பின் எஞ்சும். இன்று

அடிமை நிலையிலுள்ள பெண்ணினம் ஒரு காலத்தில் உயர்நிலை அடையப் போவது உறுதியாகும். பெண்ணினத்தின் வரலாறு அடிமை விலங்குடன் தோன்றயதில்லை. அவ்வினத்தின் எதிர்காலம் அவ்விலங்குகளுடன் முடியப்போவதும் இல்லை. எனவே பெண்ணடிமை ஒழிப்பிற்குப் பாடுபட்ட ஜீவா போன்ற பெண்மை நலச் சிந்தனையாளர்களின் கனவுகள் ஒருநாள் நனவாகும் என்று முத்தாய்ப்பு வைக்கலாம்.

**பயன்நூல்கள்**


1. அரசு மணிமேகலை, 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகளில் பெண்கள், தமிழ்க்கடல் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1981.
2. இராமசாமிப் பெரியார் ஈ.வெ.ரா. 'பெரியாரின் சிந்தனைகள, செந்தில் பதிப்பகம், மதுரை, முதற்பதிப்பு, 1986.
3. கணேசலிங்கம், கு. 'பெண்ணடிமை தீர' பாரி நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, திசம்பர், 1989.
4. சக்குபாய், இரா., 'பாரதிதாசன் படைப்புகளில் மனித நேயம்', மனிதம் பதிப்பகம், திருச்சி, முதற்பதிப்பு, திசம்பர், 1990.
5. சாலை இளந்திரையன், 'பூத்தது மானுடம்', சாலை வெளியீடு, தில்லி, முதற்பதிப்பு, சூன், 1968.
6. சுப்பிரமணிய பாரதியார், 'பாரதியாரின் கவிதைகள்', மணிவாசகர் பதிப்பகம், சென்னை, திருத்திய பதிப்பு, 1990.
7. பாரதிதாசன், 'புகழ் மலர்கள்', பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஏப்ரல். 1978.
8. பாரதிதாசன், 'பாரதிதாசன் கவிதைகள்', (மூன்றாம் தொகுதி), பாரிநிலையம், சென்னை, பத்தாம் பதிப்பு, 1987.
9. பாலகிருஷ்ணன், பி.இ., (தொகுப்பாசிரியர்), 'பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை, ஐந்தாம் பதிப்பு, சூலை, 1977.
10. பொன்னீலன், 'ஜீவா என்றொரு மானுடன்', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, சனவரி, 1989.
11. மூர்த்தி, து., இக்காலக் கவிதைகள் - மரபும் புதுமையும், தமிழியியல் நிறுவனம் வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 1978.

12. யோகீசுவரன், பி., 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள்' நீலா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஏப்ரல், *1985*.

13. ஜீவானந்தம், ப., 'ஜீவாவின் பாடல்கள்', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, *1962*, மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி, *1975*.

14. ஜீவானந்தம், ப., 'புதுமைப்பெண்', நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, சனவரி, *1989*.

# பகுத்தறிவு இயக்கத்தின் பெண் குறித்த பார்வை

மப. சித்ரா

ஒரு சமூகத்தில், வெளிப்புறத் தாக்கங்களால் அல்லது அதன் உள்முரண்பாடுகளால் தோற்றம் கொள்வன இயக்கங்கள். இயக்கத்தின் கோட்பாடுகள் ஒரு குறிப்பான காலத்திய சமூக நிலையை எங்ஙனம் விளக்குவது என்பதிலிருந்து தோன்றுகின்றன. புறநிலைத் தேவைகளின் அடிப்படையில் அக்கோட்பாடுகள் உருவாகித் திடப்படுகின்றன. இத்தகைய சமூக அவசியத்தின் தேவைக்கும் தன்மைக்கும் ஏற்ப அக்கோட்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படும் சாத்தியமும் உண்டு.

தன் சமூக அமைப்புக்கான மாற்றத்தை இவை வரையறுக்க முனையும்போது பெண் குறித்த பிரச்சினைகளையும் முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகின்றன. பெண் பற்றிய புனைவுகளை, புதிதாகத் தோன்றும் கோட்பாடுகளின் தாக்குரவுக்கேற்ப அவை மறுபரிசீலனைக்குட்படுத்துகின்றன. இந்த மறுபரிசீலனை என்பது புனைவுகளின் மையமுடைப்பதாகவோ அல்லது அவற்றை முழுவதுமாக அடிப்படையிலிருந்தே கேள்விக்குட்படுத்துவதாகவோ அமையும் என்பதில்லை. மாறாக, அவற்றுக்கு மேலும் வலிவு சேர்ப்பதாக, வண்ணம் ஊட்டுவதாகக் கூட அமைந்து விடுவதுண்டு.

மதம், பண்பாடு, உயிரியல் ஆகியவை சார்ந்து வரலாற்று ரீதியில் கட்டமைக்கப்படும் பெண் குறித்த புனைவுகளை நியாயமானவை, இயற்கையானவை என நிறுவத் தேவையான சாத்தியப்பாடுகளை முன்னிறுத்த வேண்டிய கட்டாய நிலைக்கும் இவ்வியக்கங்கள் சில நேரங்களில் தள்ளப்படுகின்றன.

மாயை அழித்தல் (De-Mythification) என்ற செயல்பாட்டை உடைய பெண்ணியத்தின் பார்வைகொண்டு இவ்வியக்கங்களின் கோட்பாடுகளை ஆராயும்போது மேற்கூறிய விமர்சனங்களைச் செய்ய நேரிடுகிறது. பெண் பிரச்சினை குறித்த தீர்வுகளை, கோட்பாடுகளை இயக்கங்கள் மையக் கருத்தாக்கங்களாகக் கொண்டிருக்கின்றனவா அல்லது சுற்றெல்லைக்

கருத்தாக்கங்களாகக் கொண்டிருக்கின்றனவா என நோக்கும்போது, அவை இதில் காட்டும் தீவிரம் புரியத் துவங்கும்.

இந்த முன்னுரையின் அடிப்படையில், *1920*களில் தோற்றம் பெற்று *(1925)* தமிழகத்தில் மிகுந்த தாக்கம் ஏற்படுத்திய பகுத்தறிவு இயக்கத்தின் பெண் குறித்த பார்வையை நோக்குவோம். அவ்வியக்கத்தின் உயிர் நாடியான பெரியாரின் கருத்துகளையும், அவ்வியக்கச் செயல்பாடுகளையும் காண்பதன் மூலம் அதன் பார்வையை வரையறுக்க இயலும்.

**பெரியாரின் கருத்துகள்**

ஃபெட்டி பிரைடன் தனது 'Feminine Mystique' என்ற நூலில் 'The Problem that has no name' என்று பெண்களின் பிரச்சினைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்தியச் சூழலில் இன்னும் ஆழமான பரிமாணத்தோடு புரிந்துகொள்ள வேண்டியது இந்தக் கூற்று. இப்பிரச்சினைகளின் காரணங்களை அதன் அடிஆழத்திலிருந்தே நோக்காமல் மேம்போக்காக, அவற்றிற்கு மேலும் வர்ணம் பூசி அழகு படுத்திக் கொண்டிருந்த சூழலில் பெண்களில் பிரச்சினைகளைச் சரியான கோணத்தில், அதன் பன்முகப் பரிமாணத்தோடு நோக்கியவராகப் பெரியாரைக் குறிப்பிடலே பொருந்தும். பெண்களின் அடிமைத்தனத்துக்கும் இரண்டாந்தர குடிநிலைக்குமான காரணங்கள் இயற்கையானவை என்ற அடித்தளத்தில் அதற்குரிய சீரமைப்புப் பணிகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தபோது அவற்றை மறுதலித்து இயற்கையானவை அன்று; அவை வரலாற்று ரீதியானவை என்று பல்வேறு காரணங்களை முன்வைக்கும் பெரியார், அதனை மாற்றி அமைப்பதற்கான வழி முறைகளையும் எடுத்துரைக்கிறார்.

"சுயமரியாதைக்காரர்கள் பொதுவாக மனித சமுதாயத்துக்கும், சமூக சமத்துவ வாழ்வுக்கும் ஏற்றதையே ஒழுக்கமாகக் கொண்டு, முக்கியமாய் மனித சமுதாயத்திற்கு ஏற்ற வண்ணம் அன்னியனுக்கு உதவி செய்தும், அன்னியனுக்குத் தொந்தரவில்லாமல் நடந்து கொள்வதையே ஒழுக்கமாய்க் கருதுவார்கள்" (ஈ.வே.ரா. பெரியார் சிந்தனைகள், தொகுதி-*1*, சிந்தனையாளர் கழகம் வெளியீடு, திருச்சி, *1974* ப. *1081)* என்று பகுத்தறிவு இயக்கம் 'ஒழுக்கம்' என்பதற்குக் கொடுக்கும் வரையறையை விளக்கும் பெரியார், 'ஆண்', 'பெண்' என்ற இரு பாலினங்களை உருவாக்கும் சமூக ஒழுக்க வரையறைகளைப் பலவிதத்திலும் கேள்விக்குட்படுத்துகிறார்.

வன்மை, கோபம், ஆளுந்திறம் ஆண்களுக்குச் சொந்தமென்றும், சாந்தம், அமைதி, பேணுந்திறம் பெண்களுக்குச் சொந்தமென்றும் சொல்வதானது, வீரம், வன்மை, கோபம், ஆளுந்திறம் புலிக்குச்

சொந்தமென்றும் சாந்தம், பேணுந்திறம் ஆட்டுக்குச் சொந்தமென்றும் சொல்வது போன்றதொழிய வேறில்லை. நாம் வேண்டும் 'பெண்ணுரிமை' என்பது என்னவெனில், ஆணைப் போலவே பெண்ணுக்கும் வீரம், வன்மை, கோபம், ஆளுந்திறம் உண்டென்பதை ஆண்மக்கள் ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

அன்றியும், மனித சமூக வளர்ச்சிக்கு இருபாலருக்கும் இருபாலர் குணங்களும் சமமாய் இருக்க வேண்டுமென்பதே நமது கருத்தாகும். இருபாலருக்கும் சமமாக இருக்க இயற்கையில் இடமும் இருக்கின்றது. ஆனால் செயற்கையில் ஆண்களின் சூழ்ச்சியால் சுயநலத்தால் மாறுபட்டு வருகின்றது.

உண்மையான சமத்துவத்திற்கு மதிப்பு கொடுப்போமானால் – உண்மையான அன்பு இருக்குமானால் பிள்ளையைச் சுமந்து பெறும் வேலை ஒன்று தவிர, மற்ற காரியங்கள் இருபாலருக்கும் ஒன்று போலவே இருக்கும் என்பது உறுதி" (ஈ.வே.ரா. பெரியார் சிந்தனைகள், ப *121)*

உயிரியல் ரீதியான பால் பிரிவை ஒப்பும் பெரியார், அவற்றிடையே வேற்றுமைப்படுத்திக் காட்டும் பாலினங்களை உருவாக்கும் கருத்தாக்கங்களை அடியோடு மறுக்கிறார். பெண்ணடிமைத்தனத்திற்கும் இவ்வாறு உருவாக்கப்பட்ட தவறான கருத்தாக்கங்களே காரணம் என்றும் முடிவு கூறுகிறார். பெண் விடுதலைக்கான சமூகரீதியான செயற்பாட்டுக்கு முதற்கட்டமாக, அடிமன ஆழத்தில் இவ்வாறான தவறான கருத்தாக்கங்களின் தாக்கத்தால் பதிந்துபோயிருக்கும் எண்ண ஓட்டங்களை மாற்றி அமைக்க வேண்டியதே முதற்கட்டப்பணி என வலியுறுத்துகிறார்.

"அனேக வருடப் பழக்க வழக்கங்களால் தாழ்ந்த சாதியார் எனப்படுவோர் எப்படித் தாங்கள் தாழ்ந்த வகுப்பார் என்பதை ஒப்புக் கொண்டு, தாமாகவே கீழ்ப்படியவும், ஒதுங்கவும், விலகவும் முந்துகின்றார்களோ அது போலவே பெண்மக்களும் தாங்கள் ஆண்மக்களின் சொத்துக்களென்றும், ஆண்களுக்குக் கட்டுப் பட்டவர்களென்றும், அவர்களது கோபத்துக்கு ஆளாகக்கூடாது என்றும் நினைத்துக் கொண்டு – சுதந்திரத்தில் கவலையற்று இருக்கிறார்கள்" *(ஈ.வே.ரா. சிந்தனைகள், ப.117)* எனப் பெண்களின் நிலையை விமர்ச்சிக்கிறார் பெரியார்.

பருமையான செயற்பாடுகளுக்கு முன் அதன் அடித்தளத்தில் உள்ள நுண்மைகளை மாற்ற வேண்டியது அவசியம் என்ற பெரியாரின் கொள்கை

"ஆண்மை என்ற பதமே பெண்களை இழிவுபடுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது என்பதைப் பெண்கள் மறந்துவிடக் கூடாது. அந்த 'ஆண்மை' உலகில் உள்ளவரையில் பெண்மைக்கு மதிப்பு இல்லை என்பதைப் பெண்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். உலகத்தில் ஆண்மை நிற்கும் வரையில் பெண்கள் அடிமையும் வளர்ந்தேவரும். பெண்களால் 'ஆண்மை' என்ற தத்துவம் அழிக்கப்பட்டாலல்லது 'பெண்மை' விடுதலையில்லை என்பது உறுதி. 'ஆண்மை' யால்தான் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்" *(ஈ.வேரா. பெரியார் சிந்தனைகள், ப. 106)* என்ற அவரது வரிகளைப் பார்க்கையில் விளங்கும்.

ஒழுக்கக் கோட்பாடுகள் என்பவை அந்தந்தச் சமூக வாழ்வியல் முறைகளுக்கும், வாழ்க்கை நியதிகளுக்கும் ஏற்பவுமே வரையறை செய்யப்பட வேண்டும் என்ற கருத்துடைய பெரியார், "பெண் சமுதாயத் துறையில் வேறு வசதியில்லாமல் உரிமை இல்லாமல் அடிமையைப் போல நடத்தப்பட்டு விட்டபடியினாலேயே, ஏதோ சொத்துக்கு வாரிசான ஒரு பிள்ளை பெற்றுக் கொடுக்க வேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டு விட்டாள். இந்தத் திருமண முறை மூலம் இதைத் தவிர மற்றபடி அவசியமே இல்லை" *(ஈ.வே.ரா. பெரியார் சிந்தனைகள், ப.110)* என்று 'திருமணம்' என்ற நிறுவனம் எத்தகைய சூழலில் தோற்றம் பெற்று வளர்ந்து பெண் அடிமைக்கான முக்கியமான காரணமாகவும் திகழ்கிறது என விளக்குகிறார்.

நிறுவனமயமாக்கப்பட்டதாகத் *(Institutionalised)* திகழும் சமூகக் கட்டமைப்பு சீரமைக்க வேண்டுமாயின் அதனுடைய எல்லாக் கூறுகளையும் விமர்சனத்துக்குட்படுத்துவதன் மூலமும், அடியோடு அதனை மாற்றி அமைப்பதன் மூலமும்தான் அதன் முழுமையான மாற்றத்திற்கு வழிவகுக்க இயலும் என்ற கருத்துடைய பெரியார், அதற்கு முன் சமூகப் பின்னல்களில் இழையோடியிருக்கும் மதம் குறித்த கொள்கைகளை விமரிசிப்பதன் மூலமே அது சாத்தியம் என்கிறார்.

"ஆண்-பெண் ஒழுக்க ஏற்பாடுகளை நாம் நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் அவை யாவும் ஏதேனும் ஒரு முறையில் ஒரு மதக் கொள்கையைத் தழுவி நிற்பதைக் காணலாம்" *(ஈ.வே.ரா.பெரியார் சிந்தனைகள், ப-112)* என்று கூறும் அவர், பெண் குறித்த புனைவுகளுக்கும் அதுவே முழுமுதற் காரணம் எனக் குறிப்பிட்டு அதிலிருந்து நீங்குவது அதிலிருந்து விலகிய கல்வி முறையின் மூலமும் பகுத்தறிவின் மூலமும் சிந்தித்துச் செயல்படுவதே பெண் விடுதலைக்கு வழி வகுக்கும் என்கிறார்.

ஆணியப் பார்வையின் மூலம் புரிந்து கொள்ளப்பட்டு ஆணியச் சொல்லாடல்களால் உருவாக்கப்பட்டிருந்த பெண்களின் 'இருப்பு நிலை'

குறித்த கொள்கைகளையும் பரிந்துரைகளையும் முற்ற முழுக்க எதிர்ப்பவராகவும், அத்தகைய 'சீர்திருத்த நீரோட்டத்திலிருந்து' விலகி அந்த ஆணியப் பார்வைகளையும், சொல்லாடல்களையும் கேள்விக் குட்படுத்துவராகவும் பெரியார் முன்நிற்பதைக் காண முடிகிறது.

இனி, இவ்வியக்கத்தில் ஒரு சில அரசியல் செயல்பாடுகளைக் காண்பது, அதன் பெண் குறித்த பார்வையை மேலும் புரிந்து கொள்ள வழி வகுக்கும்.

**சுயமரியாதைத் திருமணங்கள்**

*1930*-இல் மரபு மீறாத இந்து குடும்பத்தைச் சேர்ந்த சிவகாமி என்ற இளம் விதவைக்கும், பகுத்தறிவு இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த தமிழறிஞரான சாமி. சிதம்பரனார் என்பவருக்கும் சுயமரியாதைக் திருமணம் செய்துவைக்கப்பட்டது. *(குடிஅரசு. மே.11, 1930).* ஈ.வெ.ரா. நாகம்மாள் தலைமையில் நடைபெற்ற இந்தத் திருமணத்தில் மரபு ரீதியான எந்த சடங்குகளும், 'தாலிகட்டுதல்' கூட இடம் பெறவில்லை. திருமணத்தில் பேசிய நாகம்மாள் இந்து திருமணத்தில் இடம்பெறும் சடங்குகளான தாலி கட்டுதல் போன்றவை எவ்வாறு ஒரு பெண்ணை அடிமைப்படுத்தும் குறியீடுகளாக விளங்குகின்றன என விளக்கினார். தம்பதிகள் மோதிரம் மாற்றிக் கொண்டதோடு தங்களிடையே தோழமையையும் சம உரிமையையும் வலியுறுத்தும் உறுதிமொழி ஒன்றையும் மேற்கொண்டனர். தங்களை வழக்கமான முறையில், 'கணவன்-மனைவி' என அழைத்துக்கொள்ளாமல் 'தோழர்' என்றே அழைத்துக் கொண்டனர். இதில் முக்கியமாக இத்திருமணத்தைப் பற்றி குறிப்பிட வேண்டியது இது இரண்டாவது சுயமரியாதை மாநாட்டிலேயே நடத்தப்பட்டது என்பதுதான்.

சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த செயல் வீரர்கள் எஸ். நீலாவதி மற்றும் இராமசுப்பிரமணியம் இருவருக்கும் இராமநாதபுரம் சார்ந்த பள்ளத்தூரில் *1930*ல் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. இந்தத் திருமணத்தில் இயக்கத்தைச் சார்ந்த சுமார் *2000* ஆண்களும் *500* பெண்களும் கலந்து கொண்டனர். உள்ளூர் மக்கள் *100* பேரும் கலந்து கொண்டனர். திருமண நிகழ்ச்சியின் ஒரு பகுதியாகப் பார்வையாளர்கள் ஆண்-பெண் உறவு, திருமணம், பெண் விடுதலை ஆகியவை குறித்த பல்வேறு கேள்விகளைக் கேட்க ஊக்கப்படுத்தப்பட்டனர். இதில் ஒரு பார்வையாளர் சுயமரியாதை இயக்கம் ஏன் இரண்டாம் திருமணத்தை ஆதரிக்கிறது எனக் கேட்க, அதற்குப் பெரியார் இவ்வாறு பதிலளிக்கிறார்; "திருமணம் என்பது கூடி வாழும் வசதிக்காக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தமே அன்றி வேறில்லை. அதனைப்

பிரிக்க முடியாததாகக் கருவது அறிவீனம். முதல் திருமணம் சரிவரவில்லையென்றால் விவாகரத்து செய்து விட்டு மற்றொருவரைத் திருமணம் செய்து கொள்ளும் உரிமை சரிசமமாக ஆணுக்கும் பெண்ணுக்கும் வழங்கப்பட வேண்டும்". (குடிஅரசு, *12*, அக்டோபர், *1930*).

சுயமரியாதை இயக்கம் தனது அரசியல் செயல்பாடாகப் பல்வேறு மாநிலங்களிலும் ஆயிரக்கணக்கான சுயமரியாதைத் திருமணங்களை நடத்தியிருக்கிறது. *1929*-க்கும் *1932*-க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் சுமார் *8000* சுயமரியாதைத் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன. (ஈ.சா. விஸ்வநாதன், The Political career of E.V. Ramasamy Naicker, Madras, 1983, p.99)

திருமணங்களில் புரோகிதர்களின் மேலாதிக்கத்தை ஒழிப்பது, வடஆரிய திருமண முறைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது போன்றவை முக்கிய நோக்கமாக இருப்பினும் சுயமரியாதைத் திருமணங்கள் ஏற்படுத்திய தாக்கம் மறுப்பதற்கில்லை. பார்ப்பன எதிர்ப்பின் காரணமாகத் திருமணங்கள் புரோகிதர் இன்றி நடைபெற்றன. தேவையற்ற சடங்குகளும் அகற்றப்பட்டன. திருமணங்களில் ஓதப்படும் மந்திரங்களில் பெண்ணை - எவ்வாறு ஆணுக்கு அடிமையெனச் சித்திரிக்கப்படுகின்றன என விளக்கிய சுயமரியாதைத் திருமணங்கள், பெண்ணும் ஆணும் சம உரிமையும், கடமையும் உடையவர்கள். இந்தத் திருமணம் வாழ்க்கை வசதிக்கான நட்பு ஒப்பந்தமே என விளக்கின. புனிதம் என்ற புனைவுகளிட்டு வடிவமைக்கப்பட்டிருந்த திருமணம் குறித்த, திருமணத்தில் ஆண், பெண் இவர்களின் பங்கு குறித்த பல்வேறு கருத்தாக்கங்களைக் கேள்விக்குட்படுத்தும் விதமாக, அசைக்கும் விதமாக சுயமரியாதைத் திருமணங்கள் அமைந்திருந்தன.

**தலைமைப் பொறுப்புகள்**

சுயமரியாதை மாநாடுகளின் போது தனிப்பகுதியாகவே மாதர் மாநாடுகளும் நடைபெற்றன. பெண்களின் தீவிரமான பங்கேற்பும் மாநாடுகளில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்பான பொறுப்புகளும் நோக்கத்தக்கவை. மாநாடுகளில் துவக்க உரை நிகழ்த்தும் பொறுப்பு பெரும்பாலும் இயக்கத்தின் பெண் தோழர்கள் பொறுப்பிலேயே விடப்பட்டிருக்கிறது.

*1931*, மூன்றாவது சுயமரியாதை மாநாட்டில் இந்திராணி பாலசுப்பிரமணியம் துவக்க உரை நிகழ்த்தினார் (குடிஅரசு, ஆகஸ்டு *16*, *1931*). *1932*இல் டி.எஸ். குஞ்சிதம் தஞ்சாவூர் மாநில மாநாட்டைத் துவக்கி வைத்தார். (குடிஅரசு, ஜூன் *20*, *1932*) *1934*இல் ஆர். அன்னபூரணி

திருச்செங்கோடு தாலுகா ஆதிதிராவிட மாநாட்டைத் துவக்கிவைத்தார். (குடிஅரசு, ஏப்ரல் *9, 1934) 1937*-இல் மீனாம்பாள் சிவராஜ் திருநெல்வேலி மாவட்ட மூன்றாவது ஆதிதிராவிட மாநாட்டைத் துவக்கிவைத்தார். (குடிஅரசு, மே. *27, 1937), 1938* இல் மதுரையில் சுயமரியாதை மாநாட்டை ராஜம்மாள் துவக்கிவைத்தார் *(1938,* பிப்ரவரி *7,* குடிஅரசு).

ஒவ்வொரு மாநாட்டிலும் செயற்குழுக்கள் அமைக்கப்பட்டபோது, பெண்களுக்கும் அவற்றில் முக்கியமான தலைமைப் பொறுப்புகள் வழங்கப் பட்டிருக்கின்றன. *1931*-இல் விருதுநகரில் நடைபெற்ற மூன்றாவது சுயமரியாதை மாநாட்டில் இந்திராணி பாலசுப்பிரமணியம் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். *1933*-இல் ஈரோட்டில் நடந்த சமதர்ம கட்சி மாநாட்டில் எஸ். லீலாவதி, கே. குஞ்சிதம் ஆகிய இருவரும் கிராமங்களில் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்புவதற்கான கொள்ளை பரப்பு செயலாளர்களாக நியமிக்கப்பட்டனர். ஆர். அன்னபூரணி, ராமாமிருதம் அம்மாள் போன்றோர் மாவட்ட அளவிலான கொள்ளை பரப்பு செயலாளர்களாக நியமிக்கப்பட்டனர் (குடிஅரசு, ஜூன் *18, 1933*).

**மாநாட்டுத் தீர்மானங்கள்**

பகுத்தறிவு இயக்கம் நடத்திய பல்வேறு மாநாடுகளில் முன்மொழியப்பட்ட தீர்மானங்களை நோக்குவதும், அவ்வியக்கத்தின் கருத்தாக்கங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள வழிவகுக்கும். அவ் வகைகளில் ஒரு சில மாநாட்டுத் தீர்மானங்களை, குறிப்பாகப் பெண்கள் குறித்து எடுக்கப்பட்ட தீர்மானங்களை நோக்குவோம்.

*1929*-ம் வருடம் செங்கற்பட்டு சுயமரியாதை மாகாண மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

1. பெண்களுக்கு ஆண்களைப் போலவே சமமாகச் சொத்துரிமைகளும், வாரிசு பாத்தியதைகளும் கொடுக்கப்பட வேண்டுமென்றும், பெண்களும் ஆண்களைப் போலவே எந்தத் தொழிலையும் மேற்கொண்டு நடத்தி வருவதற்கு அவர்களுக்கு சம உரிமையும் அவகாசமும் கொடுக்கப்பட வேண்டுமென்றும்,

2. பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் வேலையில் பெண்களே அதிகமாக நியமிக்கப்படுவதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், ஆரம்பக் கல்வி கற்றுக் கொடுக்கும் உபாத்தியாயர் வேலைக்குப் பெண்களையே நியமிக்க வேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது. (நமது குறிக்கோள், விடுதலை வெளியீடு, சென்னை, *1943,* பக். *5, 7)*

*1930*-இல் ஈரோட்டில் நடைபெற்ற இரண்டாவது சுயமரியாதை மாநாடு, தனியாக நடைபெற்ற மாதர் மாநாட்டுத் தீர்மானங்கள் :

1. ஆண், பெண் இருபாலருக்கும் கட்டாய இலவசப் படிப்பு சீக்கிரம் கொடுக்க் வேண்டுமென்றும், பெண்பாலரைக் குறைந்தது *16* வயது வரையிலாவது பள்ளிக் கூடங்களுக்குச் செல்லவிட வேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

2. சொத்தில் உரிமை பாத்தியம், குழந்தைகளுக்குக் கார்டியன் பார்த்தியம், ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளல் அவைகளில் ஆண் பெண் இரு பாலருக்கும் முழு சம உரிமை இருக்க வேண்டுமென்றும் இம்மாநாடு அபிப்ராயப்படுகிறது.

3. கடவுளின்மேல் பொட்டு கட்டியுள்ள தேவதாசி சகோதரிகள் தங்கள் பொட்டை அறுத்தெறிந்து விட்டு மனதிற்கிசைந்த ஒரு கணவனை மணந்துகொள்ள வேணுமாய் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

4. மணமகனும் மணமகளும் ஒத்து வாழ்க்கை நடத்துவதில் மனமுவந்து வாழ முடியாவிட்டால் விவாகத்தை ரத்துசெய்துவிட ஒரு சட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தை இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது *(நமது குறிக்கோள்ப.10).*

*1931*-இல் விருதுநகர் இரண்டாவது சுயமரியாதை பெண்கள் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்:

1) பெண்களின் கல்வியை *11*வது வயதிலேயே நிறுத்திவிடாமல் பெண்களை *30*வயது வரை படிக்க வைக்க வேண்டும்.

2) பெண்களை வைத்தியத் தொழிலுக்கும் உபாத்திமைத் தொழிலுக்கும் மாத்திரம் தற்பொழுது எடுப்பது போதாது; அவர்களைப் போலீஸ் இலாகாவிலும் இராணுவத்திலும் சேர்க்க வேண்டும். *(நமது குறிக்கோள், ப.15).*

*1931* ஆகஸ்டில் நடைபெற்ற விருதுநகர் சுயமரியாதை வாலிபர் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்:

1) பெண்களுக்கு ஆண்களைப் போலவே எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டாலொழிய பெண்கள் விடுதலை ஏற்படாதென்றும் இம்மாநாடு கருதுவதாகி எல்லாத் துறைகளிலும் பெண்களுக்குச் சமத்துவம் கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

2) பெண்கள் விடுதலைக்கும், அறிவுப் பயிற்சிக்கும் பிள்ளைப் பேறு தடையாயிருப்பதாலும் எதிர்காலத்தில் நாகரிக வளர்ச்சிக்குப்

பொறுப்பு ஏற்றுக்கொள்ளப் போகும் குழந்தைகளைப் போதிய போஷாக்குடனும் கல்வியுடனும் வளர்க்க வேண்டியதவசியமான -தாலும், பிள்ளைப் பேற்றை அவரவர்கள் தங்கள் தேகநிலை, பொருள் நிலை அறிவு நிலைமைகளுக்குத் தகுந்தவாறு அடக்கியாள வேண்டுமென்று இம்மாநாடு கருதுவதோடு கர்ப்பாட்சிக்கு வேண்டிய சாதனங்களையும் முறைகளையும் பற்றிய அறிவை போதிக்கத்தக்க ஸ்தாபனங்களை அரசாங்கத்தாரும் பொதுநல சேவைக்காரரும் ஏற்படுத்த வேண்டும் என இம்மகாநாடு தீர்மானிக்கிறது (நமது குறிக்கோள், ப.*17*).

*1944* ஆம் ஆண்டு பெரியாரின் தலைமையில் நடைபெற்ற சேலம் மாநாட்டுத் தீர்மானம் ஒன்று, சொத்துரிமையையும், கலியாண ரத்து உரிமையையும் கலப்பு மண உரிமையையும் அங்கீகரித்து அவைகள் சட்டமாக்கப்பட்ட வேண்டும் என வற்புறுத்துகிறது (நமது குறிக்கோள், ப.*38*).

ஓர் உயிரியைப் 'பெண்' என உருவாக்கி (பெண் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறாள்'-சிமோன் தி பெவார்) அதன் மீது புனிதம் என்ற புனைவுகளைச் சுற்றி வைக்கும் சமூகத்தின் பல்வேறு நிறுவனங்களைப் பற்றிய கேள்விகளையும் பகுத்தறிவு இயக்கம் எழுப்புவதைக் காண முடிகிறது. இவற்றுக்கான பதில்கள், விளைவுகளாய், சமூகத்தில் தோற்றம் கொடுக்க ஆரம்பித்தது. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் வட்டத்திற் குள்ளேயே அடங்கிவிட்டதெனினும் இதனுடைய சமகாலத்திய இயக்கமான விடுதலைப் போராட்ட இயக்கத்தின் கருத்தாக்கங்களோடு ஒப்பிட்டுச் காணுகையில் பகுத்தறிவு இயக்கத்தின் புரட்சி நோக்கு புலப்படும்.

பெண்ணுக்கான பல்வேறு பங்கு நிலைகள் (Role) குறித்தும் நிலவிய சமூகத்தின் கருத்தாக்கங்களைப் பகுத்தறிவு இயக்கம் மாற்றியமைக்க முற்பட்டது. பலவீனமானவள் எனவே சிறப்புச் சலுகை அளித்துப் பேணப்பட வேண்டியவள் என்றும், அவள் சக்தி ஸ்வரூபம்; எனவே வணங்கப்பட வேண்டியவள் என்றும் இரு துருவக் கொள்கைகள் விளங்கிவந்த சூழலில் 'மனிதம்' சார்ந்த உயிரியாகச் சமூகத்தில் பெண்ணின் இருப்பு நிலையைப் பார்க்கத் துவங்கியது பகுத்தறிவு இயக்கம் எனலாம்.

ஆயின், இவ்வியக்கத்தின் வளர்ச்சிப் போக்கில் குறிப்பாக *1944*களுக்குப் பிறகு சில பின்னடைவுகளைக் காண முடிகிறது. வர்க்க முரண்பாடுகளால் தோற்றம் கொள்ளும் இயக்கங்கள், தன்னைச் சுற்றியுள்ள சமூக உந்துதல்களின் அடிப்படையில் பெண்ணை

அடையாளப்படுத்தும் தனது கோட்பாடுகளை மாற்றிக் கொள்ள நேரிடுகிறது. பின்னாளில் அதுவரை தோழிகளே! என விளிக்கப்பட்ட பெண்கள் தாய்மார்களே! என அழைக்கப்படுகின்றனர். *1945* ஆண்டு நடந்த திராவிடர் கழக மாநாடு பெண்கள் இயக்கத்தில் பங்கேற்க வேண்டும் என அழைப்பு விடுப்பதோடு நிறுத்திக் கொள்கிறது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது (தமிழ் அன்னையாக, அவளைக் காக்க வேண்டியது வீரப் புதல்வர்களின் கடமையாக உருவகப்படுத்தும்போது) பெண் குறித்த அடையாளமாகத் திராவிடர் கழகம் முன்வைப்பது மரபு சார்ந்ததாகவே அமைகிறது.

## பயன் நூல்கள்


*1.* ஆனைமுத்து, வே.(ப.ஆ), பெரியார் ஈ.வே.ரா. சிந்தனைகள், தொகுதி, I, II, III, சிந்தனையாளர் கழகம், திருச்சி, மு.ப. *1974.*

*2.* 'நமது குறிக்கோள்'; சுயமரியாதை-ஜஸ்டிஸ்-சமதர்ம திராவிட கழக மாநாட்டுத் தீர்மானங்கள், 'விடுதலை' வெளியீடு, சென்னை, *1948.*

*3.* குடிஅரசு, விடுதலை நாளிதழ்கள்.

*4.* Viswanathan, E.Sa., The Political Career of E.V.Ramasami Naicker, Ravi and Vasantha Publishers, Madras. 1983.

# ஈ.வெ.ரா. பெரியார் அவர்களின் பெண்ணியச் சிந்தனைகள்

பா. புவனேசுவரி

நம் இந்தியா இன்றும் வளர்ச்சி நிலையிலேயே உள்ளது. இந்திய மக்கள் ஓரளவு காலத்திற்கேற்ற மாற்றங்களை அடைந்து வருகின்றனர். என்றாலும் இந்திய சமுதாயம் முழுவதும் இம்மாற்றங்களைப் பெற பல காலம் ஆகும். நூல்களாலும் சட்டங்களாலும் அறிவிக்கப்பெறும் சீர்திருத்தங்கள் மக்கள் மனமாற்றத்தின் அடிப்படையிலேயே அவர்களிடம் சென்று சேர இயலும். அத்தகைய மாற்றம் அவர்களின் அனுபவங்களின் விளைவாக இயல்பாக ஏற்பட வேண்டிய ஒன்று. இக்காரணத்தாலேயே இருபத்தோராம் நூற்றாண்டை எதிர்நோக்கியிருக்கும் இந்நிலையிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்த பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள் நம் இந்திய மக்களில் பெரும்பாலோருக்கு வேண்டத் தக்கனவாக உள்ளன.

## பெரியார் காலப் பெண்கள்

பெரியார் தம்காலப் பெண்கள் குறித்துக் கீழ்க்கண்ட கருத்துகளைத் தெரிவிக்கிறார்:-

இந்தியப் பெண்கள் கல்வியறிவில் பின்தங்கியவர்கள். அவர்களுக்குக் குடும்பக்கலை, கும்மி, கோலாட்டம், பாட்டு இவை தவிர அறிவு வளர்க்கும் கல்வி அளிக்கப்பெறவில்லை; சொத்துரிமை இல்லை; பெண்கள் பிள்ளை பெறும் இயந்திரமாக இருக்கிறார்கள். பெண் இளம்வயது திருமணங்களால் விரைவில் நோயுறுகிறாள்; இறக்கிறாள். சிசுமணத்தைத் தடைசெய்யும் சாரதா சட்டத்தினால் இக்கொடுமை நீக்கப்பட்டுள்ளது.

விதவைத்தன்மை பெண்ணுக்குச் செய்யப்படும் மற்றொரு கொடுமை. பெண் மறுமணம் செய்ய இயலாது. விவாகரத்தும் எளிதில் இயலாத

ஒன்றே. பெண் கணவனால் விலக்கப்பட்டால் ஜீவனாம்சம் என்ற உதவிப்பணம் பெறலாம். கணவனின் சுதந்திர வாழ்வில் மனைவி குறுக்கிட முடியாது. ஆண்மகன் தன் தாய்க்கு வயதானால் வீட்டு வேலைகளை மேற்கொள்ள மணம் செய்து ஒரு பெண்ணைக் கொணரும் போக்கு உண்டு. ஆண்களைப் போன்று பெண்கள் பல துறைகளிலும் கல்வி பெறவோ பதவி பெறவோ முடியாது. படித்த பெண்கள் ஆக்க முறையில் தங்கள் கல்வியைப் பயன்படுத்தவில்லை. கணவன் நிழலில், அவன் புகழில் அவர்கள் ஒதுங்கிவிடுகிறார்கள். நகை துணி இவற்றில் பற்று மிக்கோராய் பொதுநோக்கு இன்றி, உலகைப் பற்றிய கவலையின்றி வாழ்கின்றனர். பொதுப்பணி அவர்கள் அறியாத ஒன்று. பரத்தமை சமூக அனுமதியுடன் நடந்து வருகின்றது. இதனைச் சட்டமியற்றி அரசு தடுத்துள்ளது. கல்வியின்மை, சொத்தின்மை, விவாகரத்தின்மை, விதவை மணமின்மை, சுதந்திரமின்மை இவற்றால் மறைவான படிற்றொழுக்கமும், அதனால் பெண்களுக்கு அவலவாழ்வும் ஏற்பட்டுள்ளன. பெண்களுக்கு உறுதுணையாகச் சட்டங்களும் வாய்ப்புகளும் ஏற்படினும் அவற்றைப் பயன்படுத்தித் தங்கள் அடிமைத் தன்மையை விட்டு நீங்கும் மனநிலையும் நம் பெண்களுக்கு இல்லை.

இந்நிலையில் பெண்களுக்கான பல்வேறு அறிவுரைகளைப் பெரியார் வழங்குகின்றார்.

**பெண்ணடிமை**

உலகத்தில் ஆண்மை நிற்கும் வரையில் பெண்ணடிமையும் வளர்ந்துகொண்டே வரும். பெண்களால் ஆண்மை என்ற தத்துவம் அழிக்கப்பட்டாலன்றிப் பெண்மை விடுதலையடைய இயலாது. ஆண்மையும், பெண்ணடிமையும் கடவுளால் ஏற்படுத்தப்பட்டதாக ஆண்கள் கருதுகிறார்கள். பெண்கள் அதை நம்புகிறார்கள். தாங்கள் முழுவிடுதலைக்குரியவர்கள் என்ற எண்ணம் இன்னமும் பெண்களுக்குத் தோன்றவில்லை. அதுபோன்றே பெண் விடுதலைக்குப் பாடுபடுவதாக ஆண்கள் கூறுவதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்காகவே (குடி அரசு, *12.8.28*). சுதந்திரம், வீரம் இவை ஆண்களுக்குத் துணைபுரிகின்றன. ஆனால் திருமணம் செய்துகொள்வதே பெண்களின் அடிமை வாழ்விற்கு அடிகோலுவதாகிவிடுகிறது *(குடிஅரசு, 18.1.31)*. பிள்ளைகளைப் பெறும் தொல்லை பெண்களைப் பிணித்துவிட்டது. பிள்ளைகளைப் பெறாவிட்டால் பெண்களுக்கு இழப்பு ஏதும் இல்லை. இதனால் ஆண்களுக்கும் பொறுப்பு குறைகிறது. எனவே, பெண்கள் பிள்ளை பெறும் தொல்லையிலிருந்து மீளவேண்டும் *(விடுதலை, 25.5.58)*.

பெண்களுக்குச் சுதந்திரம் கொடுத்தால் ஆண்களின் பல துன்பங்கள் குறைந்து போகும் *(குடிஅரசு, 16,11,30)*. பெண் அடிமையானால் இந்தியக் குடிமக்கள் அடிமைகள் ஆகிறார்கள். தீண்டாமை, பெண்ணடிமை இவை இரண்டும் இந்தியாவை விட்டு நீக்கப்பட வேண்டியவை *(குடிஅரசு, 5.10.30)*. இந்தியா உலகத்தில் முன்னிலையில் நிற்கப் பெண் விடுதலை தேவை *(குடிஅரசு, 16.10.30)*. ஆண்டான் அடிமைத் தத்துவத்தைவிட மோசமானது பெண்ணடிமைத்தனம் *(குடிஅரசு, 18.1.31)*. உலகத்தில் அடிமைத்தத்துவம் ஒழிய பெண்ணடிமை ஒழியவேண்டும் *(குடிஅரசு, 22.8.26)*.

**கல்வி**

பெண்கள் அனைவரும் கல்வி பெறவேண்டும், கல்வியறிவின்மையே பெண்களை அலங்காரப் பிரியர்களாக, நகைப்பெட்டகங்களாக ஆக்கியிருக்கிறது. கற்ற பெண்களையே ஆண்கள் மணக்க வேண்டும்; கல்லாத பெண்கள் கன்னியராகவே இருத்தல் வேண்டும். பெண்கள் ஒழுக்கங்கெட கல்வி காரணம் என்று கருதும் போக்கு மாறவேண்டும் *(குடிஅரசு, 26.4.31)*. பெண்களுக்கு அறிவாற்றல் இல்லை என்று காரணம் காட்டிப் பெண்ணடிமையைப் புகுத்துவதற்காகவே பெண்கல்வி மறுக்கப்படுகிறது *(குடிஅரசு, 16.11.30)*. அடுப்பும், கட்டிலும், மருத்துவச் சாலையும் பெண்களின் வாழ்விடங்கள் என்ற நிலை மாறி கல்விச்சாலைகளில் பெண்கள் பயிலவேண்டும். இன்னின்ன துறைகளில் பெண்கள் பயிற்சி பெற வேண்டியவர்கள் என்று வரையறுத்து ஆண்களுடன் அவர்கள் சேர்ந்து பயில்வதைத் தடுத்து வருகின்றனர். ஆணும் பெண்ணும் சேர்ந்து பயின்றால் பல தீங்குகள் அகலும் *(குடிஅரசு, 29.1.33)*. அறிவு வளர்ச்சி, உடல் வளர்ச்சி இரண்டுமே இருபாலார்க்கும் பொதுவானவை. இன்ன துறைகளில்தாம் பெண்கள் அறிவு பெறவேண்டும் என்ற வரையறை கூடாது. கும்மி, கோலாட்டம், ஆடல்பாடல், தையல்வேலை, குடும்பக்கலை போன்றவற்றைத் தவிர்த்து ஓடவும், தாண்டவும், மல்யுத்தம் செய்யவும் பெண்களைப் பழக்கவேண்டும். பெண்கள் ஆண்களைப் போன்றே உடல்வலிமை பெறவேண்டும் *(குடிஅரசு, 26.4.31)*. உடற்பயிற்சி, படைக்கலப் பயிற்சி இவற்றை மேற்கொள்ள வேண்டும் *(குடிஅரசு, 17.7.32)*. தன்மானத்தைப் பாதிக்கக்கூடிய எந்தக் கட்டத்திலும் பெண்கள் போராட இந்தப் பயிற்சிகள் பயன்படும். அவர்கள் படையில் சேர்ந்து நாட்டுப்பணி புரியவேண்டும். தொழிற்கல்வியும் பெண்கள் பெறவேண்டும். நிர்வாகத்திலும் அரசியலிலும் அவர்கள் உயர்பதவி பெறவேண்டும் *(குடிஅரசு, 3.11.35)*.

பருவமெய்திய பெண்களும், இளம்வயதில் திருமணம் ஆகும் பெண்களும் படிப்பதில்லை (இந்நிலை இன்று மாறிவருகிறது). இனிவரும்

காலங்களில் அறிவியல் முன்னேற்றங்களால் வீட்டு வேலைகள் குறைந்துவிடும். பெண்கள் வீட்டு வேலைகளைத் தவிர்ப்பது நலம் (குடிஅரசு, *3.11.36)*.

பெற்றோர் ஆண்களைப் படிக்க வைக்காவிட்டாலும் பெண்களைப் படிக்க வைக்கவேண்டும் (விடுதலை, *23.8.56)*. ஓரிரு பெண்கள் படித்துப் பெரிய பதவிகளில் இருப்பதாலேயே பெண்கள் சமுதாயம் முழுவதும் படித்துவிட்டது என்று கூறமுடியாது. எல்லாப் பெண்களும் படித்து முன்னேற வேண்டும். இந்த வகையில் முன்னோர்கள் வாழ்ந்ததைவிட சிறப்பாக வாழ்ந்து பெண்கள் சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும். இதுவே நம் முன்னோர்க்கு நாம் செய்யும் கைம்மாறு (பகுத்தறிவு, *1936*, மலர்-*1*, இதழ்-*3)*.

### வேலைவாய்ப்பு

ஆண்களுக்கு இருக்கிற வேலைவாய்ப்புகள் பெண்களுக்கு இல்லை (விடுதலை, *18.11.46)*. பெண்கள் சமையலறையை விட்டு வெளியே வரவேண்டுமானால், நகைப்பித்து ஒழிய வேண்டுமானால், திருமணச் சிக்கல்கள் ஒழிக்கப்படவேண்டுமானால், பெண்கள் வேலையில் சேரவேண்டும். மக்கள் தொகை விகிதப்படி பெண்களுக்கு வேலை கொடுக்கப்பட வேண்டும் (விடுதலை, *18.3.47)*. ஆண்களுக்கு வேலை கொடுப்பது தவிர்க்கப்பெறலாம். ஆனால் பெண்களுக்கு வேலை இன்றியமையாதது (விடுதலை, *7.9.56)*. படித்த பெண்கள் கணவன் நிழலில் புகழில் ஒதுங்கித் தன்மானமற்ற வாழ்க்கை வாழ்கின்றனர் (விடுதலை, *6.3.60)*. வேலை செய்யப் பயன்படாத கல்வி வீணாகிறது. அத்தகைய பெண்கள் படிக்கவே வேண்டாம் (குடிஅரசு, *21.9.46)*. பெண்ணுக்கு எல்லா வசதிகளும் வாய்ப்புகளும் கொடுக்கப்பட்டால் அவளும் ஆண்களைப் போல எல்லா துறைகளிலும் முன்னேறுவாள் (குடிஅரசு, *10.1.48)*.

### சொத்துரிமை

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பெரியோர் கூறிவரும் பழக்கம் என்பதால் ஆண்களுக்குச் சொத்துரிமை உண்டு; பெண்களுக்கு இல்லை என்று கூறுவது தவறு. பெண்களுக்கும் சொத்துரிமை உண்டு என்று இந்திய அரசு சட்டம் கொண்டுவந்தது ஏற்புடைத்து. இது பெண்களுக்கு விழிப்புணர்வு வந்துவிட்டது என்பதை உறுதி செய்கிறது. பெண்கள் முன்னேற அவர்களுக்கும் சொத்துரிமை வேண்டும். கணவனை விட்டு விலகி வாழும் பெண்ணுக்கு வாழ்க்கைப்பணம் அளிக்கப்படுகிறது. விதவை

கணவனின் சொத்தை அடையலாம். மறுமணம் புரிந்துகொண்டால் அவளுக்கு அச்சொத்தில் உரிமை இல்லை என்ற நிலை மாறவேண்டும் (இன்று இந்நிலை மாறியுள்ளது). பெண்களுக்குப் பெற்றோர் செல்வத்தில் உரிமை இருப்பதால் வரதட்சணை வாங்கும் பழக்கத்தை நிறுத்தலாம் *(விடுதலை 1.4.59).*

**அலங்காரம்**

புனைவு செய்துகொள்ளும் பழக்கம் பெண்களை ஒரு பிணியாகப் பற்றியுள்ளது. இதனைத் தழை அடித்து மந்திரம் போட்டுப் போக்க முடியாது. அறுத்து ஆற்ற வேண்டிய நோய் இது. பெண்கள் பிறர் நெஞ்சு புகார் என்ற பெருஞ்சிறப்பு இந்த புனையும் திறத்தால் குறைந்துவிடுகிறது *(குடிஅரசு, 21.9.46).*

பெண்களுக்கு நகைகள் அணிவதில் பற்று அதிகம். இதனை தவிர்த்து வங்கிகளில், தபால் நிலையங்களில் பொருளைச் சேமிக்கலாம். அதிகமாகப் பொருள் இருந்தால் தொழிற்சாலை, மருத்துவநிலையம், கல்லூரி போன்றவற்றை நிறுவலாம். இன்றேல் உலகம் சுற்றலாம் *(பெரியார் களஞ்சியம், ப.193).*

ஆண்களைப் போன்று பெண்களும் வீரம், புகழ், பொதுநலத் தொண்டு இவற்றை நோக்கமாகக் கொள்ள வேண்டும். இவர்கள் உலக அனுபவமும் பகுத்தறிவும் பெறவேண்டும்; தன்னம்பிக்கையும் துணிவும் கொள்ள வேண்டும். ஆனால் இவர்களுடைய அலங்கார ஆசை இதற்குத் தடையாக உள்ளது. *(விடுதலை, 15.6.43).* தூய்மையும் கண்ணுக்கு வெறுப்பில்லாத எளிய அலங்காரமும் போதுமானது என்று பெண்கள் உணரவேண்டும். அத்தகையோரின் பண்புகளைத்தான் உலகம் மதிக்கும். அறிவும் பணமும் நாகரிகமும் உள்ளவர் மிகை அலங்காரத்தைத் தவிர்ப்பர் *(விடுதலை, 16.6.43).*

**காதல்**

காதல் என்ற உணர்வு நிலையானது இல்லை. காலத்திற்குக் காலம் மாறக்கூடியது. பொருளாதாரச் சுதந்திரம், பிள்ளைப்பேறு இவையே திருமண வாழ்வின் நோக்கங்கள். காதல் மணங்கள் இந்நோக்கங்களை நிறைவேற்றுவதில் சிக்கல்களை உண்டாக்கலாம். எனவே, கல்வி, தொழில், பொருளாதார நிலை இவற்றைக் குறித்த ஒரு தெளிவுடன் மனமொப்பி ஆண்பெண் இருவரும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்தால் அதுவே காதல் மணத்தைவிட சிறப்பாக அமையும் *(விடுதலை, 3.5.43).*

**திருமணம்**

ஆணும் பெண்ணும் இயற்கை இன்பம் நுகர, வாழ்க்கைத் துன்பத்தில் இளைப்பாற ஏற்பட்டதே திருமணம். இது மணமக்கள் முயற்சியால் ஏற்பட வேண்டும். திருமண வாழ்வில் சமத்துவம் வேண்டும். அடிமை வாழ்வோ மேல் கீழ் வாழ்வோ கூடாது (குடிஅரசு, *16.6.35*). திருமணம் தெய்வீகத் தன்மை உடையதன்று; மனித வாழ்வில் வேறு எந்நிகழ்ச்சியையும் விட திருமணமானது தெளிவானதாகவும், சுதந்திரமானதாகவும் அமையவேண்டும். உணவு, உடை இவைகளுக்காக ஒரு பெண் ஆணை மணந்தாளெனில் அவள் வேறு எந்த உரிமையும் பெற இயலாதவள் ஆகிறாள். திருமணம் வாழ்க்கை இன்பம் பெறவே ஏற்பட்டது. அடிமைத்தன்மையைப் புகுத்துவதற்கு அன்று (குடிஅரசு, *10.3.29*).

உறவு முறைத் திருமணங்கள் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. ஒருவர் முறையை மற்றொருவர் பழித்தலில் பயனில்லை (குடிஅரசு, *3.6.20*). செல்வம் சேர்த்தல், அதற்கான வாரிசு உண்டாக்கல் இவற்றின் அடிப்படையில் திருமணமுறை ஏற்பட்டது (குடிஅரசு, *2.6.45*). எனவே கடவுள் சமயம் இவற்றோடு திருமணத்திற்கு யாதொரு தொடர்பும் இல்லை (குடிஅரசு, *27.4.30*). கலப்புமணம், விதவைமணம், மறுமணம், மதம் மாறிய மணம், பரத்தையரை மணத்தல் இவை தேவையானவை (குடிஅரசு, *3.5.31*). ஆனால் குழந்தை மணம் கூடாது (குடிஅரசு, *17.4.32*).

கல்யாணம், திருமணம் என்ற சொற்களைவிட வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் என்ற சொல்லே ஏற்புடையது. கல்யாணம், கன்னிகாதானம், விவாக சுப முகூர்த்தம் இவற்றிற்கு அடிமை ஏற்றல், அடிமைபுகுதல், அடிமை விற்றல் இவைதாம் பொருள். ஆனால் வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் என்பது இரு நண்பர் சேர்ந்து நடத்தும் கூட்டு வாழ்க்கை என்ற பொருள் தருகிறது (விடுதலை, *19.9.49*).

தமிழ்த்திருமணம், புரோகிதர் நிகழ்த்தும் திருமணம் இரண்டிற்கும் வேறுபாடு இல்லை. சடங்குகளுடன் நிகழ்த்திப்பெறுவதால் இவை தேவையும் இல்லை. ஆடம்பரமான திருமணங்கள் பெற்றோரைக் கடனாளியாக்குகின்றன. பொருட்சிக்கனமும் காலச்சிக்கனமும் திருமணங்களில் தேவை (குடிஅரசு, *30.6.40*). இனிவரும் நாட்களில் மணமுறைகள் மாறலாம். மணமக்கள் திருமணத்திற்குப் பிறகு அதனைக் கடிதவழியோ அல்லது செய்தித்தாட்கள் வழியோ உறவினர்களுக்கு அறிவிக்கும் காலம் வரும். திருமணத்தை அஞ்சல் வழி பதிவு செய்யும் காலமும் வரலாம் (விடுதலை, *24.7.56*). பதிவுத்திருமணம் சட்டமாக்கப்பட்டுவிட்டால் பாராட்டுக்கூட்டத்துடன்

திருமணம் முடியும் (*விடுதலை, 13.3.50*). மணமக்கள் மருத்துவச் சான்றிதழ் பெறவேண்டும். (*விடுதலை, 24.7.56.*). கலப்புமணம் புரிவோர்க்கு அரசு தனிச்சலுகைகள் அளித்தல் வேண்டும். பெற்றோர் சொத்தில் அவர்களுக்கு உரிமையும் வேண்டும் (*விடுதலை, 19.50*).

வாழ்க்கைத் துணையைத் தேடுவதில் காதலோடு அறிவு, அன்பு, பொருத்தம், அனுபவம் இவையும் தேவை. மணமுறைக்குப் பழமையை நாடவேண்டாம். இன்றைய மனித அறிவு பழமைக்கு இளைத்ததில்லை (*குடிஅரசு, 10.1.48*). பெண்களுக்குக் கல்வியளிக்காமல் அவர்கள் தாமே கணவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை அளிக்கக்கூடாது. பெண்கள் தங்கள் கணவரைத் தேர்ந்தெடுக்கத் தக்க முறையில் பெற்றோர் அவர்களை வளர்க்க வேண்டும். நாம் பல்வேறு குழுக்களாகப் (இனங்களாகப்) பிரிந்துவிட்டோம். இனி நாம் இணைய இளைஞரே துணை தேடுவதுதான் தக்கத் தீர்வு (*குடிஅரசு, 9.6.45*).

பதிவுத்திருமணம் உறுதியானது; சிக்கனமானது; சுருக்கமானது. இதில் பெண்களுக்குச் சொத்துரிமை உண்டு. ஆண் வேறு திருமணம் செய்யவோ, ஒழுக்கக் குறைவாக நடக்கவோ இயலாது (*குடிஅரசு, 30.6.40*).

**சுயமரியாதைத் திருமணம்**

புரோகிதர், நாள்கோள் பார்த்தல், தீ வலம் வரல், அம்மி மிதித்தல், தாலி கட்டுதல் ஆகிய சடங்குகள் இன்றி மணமக்கள் மணமொப்பி ஒருவரை ஒருவர் தேர்ந்தெடுத்துப் பெரியவர் ஒருவர் ஆசியுடன் செய்யும் மன ஒப்பந்தம் சுயமரியாதைத் திருமணம் என்றழைக்கப்படுகிறது. இது தொடக்கக் காலத்தில் சட்டப்படி மறுக்கப்பட்டு பிறகு ஏற்கப்பட்டது (*பகுத்தறிவு, 7.10.34*).

**தாலி கட்டுதல்**

தாலி கட்டும் பழக்கம் பெண்கள் அடிமைகள், தன்மானமற்றோர் என்பதனைச் சுட்டுகிறது. திருமணமானவள் என்று அடையாளங் காட்டத் தாலி கட்டுவதாயின் ஆண்களும் இதனைக் கட்டிக்கொள்ள வேண்டும் (*குடிஅரசு, 11.5.30*).

**வரதட்சணை**

பெண்ணின் சொத்துரிமை காரணமாக அவளுக்குரிய பொருள் அவளைச் சாரும். வரதட்சணை என்று தனியே பெறல் வேண்டாம். தங்கள் படிப்பையும், காதலையும் தகுதிகளையும் இளைஞர் விலைபேச வேண்டாம்.

இந்தச் சுரண்டல் முறையால் பல பெண்கள் திருமணமின்றி இருக்கின்றனர் *(விடுதலை, 1.4.59).*

## குடும்பக் கட்டுப்பாடு

பெண்கள் விடுதலையடைய கருத்தடை தேவை. நாட்டின் வளத்திற்காகவும், குழந்தைகள், பெண்கள் உடல் நலத்திற்காகவும் அதிகக் குழந்தைகள் பெறக்கூடாது என்று பிறர் கூறலாம். இவற்றைவிட இன்றியமையாதது பெண் விடுதலை *(குடிஅரசு, 6.4.30).* பிள்ளை பெறும் துன்பத்திற்குத் துணையாகப் பிறர் உதவியைப் பெண்கள் நாடுவது ஆணாதிக்கம் ஏற்பட இடமளிக்கிறது *(குடிஅரசு, 12.8.28).*

வலிமையும் வீரமும் உள்ள நன்மக்கள் வேண்டுமானால் குழந்தைகளைக் குறைவாகப் பெறவேண்டும். உடல் வலிமையற்றோர், நோயுற்றோர், இளம்பெண்கள் ஆகியோர் தாய்மையடையக் கூடாது. பெண்கள் மகப்பேற்றுக்கு முன்னும் பின்னும் துன்பமடைவதோடு அவர்கள் சுதந்திர வாழ்வும் பாதிக்கப்படுகிறது *(குடிஅரசு, 1.3.31).*

சமயம் சாத்திரம் ஆகியவற்றை மகப்பேற்றுக்குக் காரணம் காட்டக்கூடாது *(குடிஅரசு, 5.2.33).* உடல்நலம், குடும்பநலம், நாட்டுநலம், கருதி மகப்பேற்றைத் தவிர்க்க வேண்டும் (விடுதலை, *5.7.50).* இது குறித்து ஆண்கள் முடிவெடுக்காமல் பெண்கள் முடிவிற்கு விட்டுவிட வேண்டும் *(விடுதலை, 12.2.59).* குடும்பக்கட்டுப்பாடு குறித்த முன்னெச்சரிக்கை தேவையே தவிர கருக்கலைப்பு கூடாது *(குடிஅரசு, 1.3.31).* குடும்பக்கட்டுப்பாட்டினால் ஆண்களுக்கும் பொறுப்புகள் குறைகின்றன. உணவு உற்பத்திக்குச் செலவிடுவதைவிட கருத்தடைக்கு அதிகப் பொருள்கள் செலவிட வேண்டும். அதிகம் பெற்றால் அபராதமும் விதிக்க வேண்டும் *(விடுதலை, 5.7.50).*

## விவாகரத்து

ஆண் பெண் இருபாலர்க்கும் மன நிறைவும், உண்மைக் காதலும், ஒழுக்கமும் ஏற்பட இருவரும் மணமுறிவு செய்யும் உரிமை பெறவேண்டும். இன்றேல் இருவரும் சுதந்திர வாழ்வு பெற்றவராக முடியாது. இவ்வுரிமை இருபாலர்க்கும் நன்மை பயக்கும். எனினும் பெண்களுக்கே மிகவும் பாதுகாப்பானது *(குடிஅரசு, 17.8.30).*

## மறுமணம்

மதங்கள் மறுமணத்தைத் தடுக்கவில்லை. காதல் ஒருவரிடம்தான் இருக்கும் என்பதும் முரண்பாடான கருத்து. இருபாலர்க்கும் மணமுறிவு

செய்யும் உரிமையும், மறுமணம் செய்யும் உரிமையும் வழங்கப்பெறல் வேண்டும். சமுதாயம் இதனைப் பெண்ணுக்கு மறுப்பது நீதியாகாது *(குடிஅரசு, 12.10.30).*

**விதவைத் தன்மை**

இச்சொல் ஆண்பெண் இருபாலர்க்கும் உரியதே. ஆனால் பெண்கள்தாம் விதவை என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றனர். பெண்கள் அடிமைகள் என்பதையே இந்தச் சொல் உணர்த்துகிறது *(குடிஅரசு, 13.7.30).* நம் நாட்டில் விதவைகள் நிலை எளியோரை வலியோர் அடக்கும் கொடுங்கோன்மையே *(குடிஅரசு, 22.8.26).* நாட்டில் விதவைகள் இருப்பதாலேயே கடவுளும் சாத்திரங்களும் சோதிடமும் பொய்யானவை என்று உறுதியாக்கப்படுகின்றன *(குடிஅரசு, 17.10.29).* உடன்கட்டையேறும் பழக்கம் இன்று இல்லை. இச்சீர்திருத்தத்தைக் கொண்டு வராதிருந்தால் இன்று விதவைகள் கொடுமைப்படுதல் இல்லாதிருந்திருக்கும் *(குடிஅரசு, 27.10.29).*

விதவைகள் கைம்மை காப்பதால் அவர்கள் கற்புக்குப் பாதுகாப்பு இல்லை. மறுமணத்தை விரும்பாத பெண்களைத் தவிர்த்து ஏனையோர் மணம் புரிந்துகொள்ளலாம் *(குடிஅரசு, 22.8.26).* மனைவியை இழந்தவர் திருமணமாகாத பெண்களை மணப்பதை விடுத்து விதவையை மணக்கலாம் *(விடுதலை, 6.4.59).* பெண்விடுதலை ஏற்பட்டுவிட்டால் கைம்மை அடியோடு ஒழிந்துவிடும் பொதுத்தொண்டு புரியும் மகளிர் ஒரு கைம்பெண்ணுக்காவது திருமணம் செய்துவைக்க வேண்டும் *(குடிஅரசு, 13.7.30).* இயற்கை உணர்வைக் கட்டுப்படுத்தும் எந்தச் சட்டமும் கொள்கையும் சமுதாயத்தில் ஏற்புடையதாகாது என்று அனைவரும் உணரவேண்டும் *(குடிஅரசு, 28.9.30).*

**கற்பு**

கற்பு நிலை என்ற சொற்கள் இருபாலர்க்கும் பொதுவானவை என்றாலும் அவற்றைப் பெண்களோடு சார்புபடுத்தி, அச்சொற்களுக்குக் கணவனுக்கு உண்மையாக நடத்தல் என்ற பொருளை வற்புறுத்துகிறார்கள். செல்வம், வருவாய், உடல் வலிமை இவற்றில் மிக்கோராய் இருப்பதால் ஆண்கள் கற்பு தனக்கில்லை என்று கருத இடமேற்படுகிறது. பெண்ணடிமையைக் குறிக்கும் சொற்களாக இவை வழங்குகின்றன *(விடுதலை, 24.7.56).* ஒருமுறை மணமாகிவிட்டால் கணவன் எத்தகு கொடியோனாக இருப்பினும், கற்பிற்காக வாழவேண்டிய நிலையில் பெண்

இருக்கிறாள். கற்புக்காக வாழும் வலுக்கட்டாய மணமுறை ஒழிய வேண்டும் *(குடிஅரசு, 8.11.28).*

உடல்நலம், பொது ஒழுக்கம் என்ற நோக்கில் கற்பினை ஏற்கலாம். இவ்வாறன்றிப் பெண்ணடிமையைப் புகுத்தவே இச்சொற்கள் வழங்குகின்றன. கற்பு என்பது தனிப்பட்டவரின் உணர்வு. இதில் பிறர் தலையீடு வேண்டாம் *(குடிஅரசு, 1.3.36).* கற்பின்மை பாவமானால் அதனைப் பெண்கள் அனுபவித்துவிட்டுப் போகட்டும். இதனால் ஆண்களுக்கு என்ன இழப்பு? ஏன் அவர்கள் கற்பு நெறி குறித்துப் பெண்களை வற்புறுத்தவேண்டும்? *(குடிஅரசு, 3.11.35).*

**விலைமகளிர்**

தொன்றுதொட்டு பொதுமகளிர், வரைவின் மகளிர், விலைமகளிர் என்று குறிப்பிட்ட ஒரு சாரார் சமுதாயத்தில் ஏற்கப்பட்டுள்ளனர். ஆண்கள் காதற்கிழத்தி, கணிகை இவரை நாடும் பழக்கம் இருந்தது. இவர்களுக்குச் சொத்துரிமை இருந்தது. பெண்ணடிமைக்கு வித்திட்டப் பழக்கங்களில் இதுவும் ஒன்று *(குடிஅரசு, 29.5.32).* கோவிலில் பொட்டுக் கட்டிக்கொண்டு சமுதாயத்தில் விலைமகளிராக்கப்பட்ட பெண்களேயன்றி வேறு சிலரும் படிற்றொழுக்கம் மேற்கொள்கின்றனர். ஆண்களுக்குக் கற்பு வற்புறுத்தப் பெறாமை, காதல் மணமின்மை, விதவை மணமின்மை, மறுமணமின்மை, மணமுறிவின்மை இவற்றால் படிற்றொழுக்கம் பரவுகிறது. சட்டங்கள் இயற்றினாலும் இதனைத் தடுக்க இயலாது. அவ்வடிப்படைக் காரணங்களை நன்கு உணர்ந்து மாற்றம் கண்டாலொழிய இதற்குத் தீர்வு இல்லை *(குடிஅரசு, 29.5.32).* தேவதாசி ஒழிப்புச் சட்டம் வந்துள்ளமை பாராட்டிற்குரியது *(குடிஅரசு, 30.3.30).*

**சுதந்திர வாழ்வு**

பெண்களைப் படிக்கவைத்து சொத்துரிமை கொடுக்க வேண்டும். கல்வியும் செல்வமுமற்றப் பெண்களால் அறிவும் நிறைவும் உள்ள பிள்ளைகளைப் பெற இயலாது *(குடிஅரசு, 14.7.35).* பொருளீட்டல், குடும்பப் பொறுப்பு, குழந்தை வளர்ப்பு இவையனைத்தையும் பெண் செய்ய முடியும் என்ற நிலையடைந்தால்தான் அவள் ஆணுக்குச் சமமான நிலை அடைகிறாள் *(குடிஅரசு, 1.3.36).* பெண்களுக்குப் பதினாறு வயது வரை கட்டாயக் கல்வி அளிக்கவேண்டும். இயற்கைக்கு மாறான அடக்கம், அடிமை உணர்ச்சி இவற்றைக் கற்பிக்கக் கூடாது *(குடிஅரசு. 28.9.30).* பெண்களைக் கீழ்மைப்படுத்தும் கருத்துகளையோ, சமயக் கொள்கைகளையோ, கதைகளையோ வழங்கக் கூடாது *(குடிஅரசு, 8.6.30).*

பெண்களும் ஆண்களைப் போல பொது இடங்களில் கூடிப்பேசி விளையாட வேண்டும். பல்வேறு இதழ்களைப் படிக்கவேண்டும். வீட்டு வேலையே தங்கள் கடமை என்று நினைக்கக்கூடாது *(குடிஅரசு, 13.7.30).* கூட்டுச்சமையலறை ஏற்படின் பெண்கள் சமையலறையை விட்டு வெளியே வருவர் *(விடுதலை, 13.3.50).* பெண்கள் கூந்தலை வெட்டிவிட வேண்டும். ஆண்களைப் போன்று குப்பாயம் அணிய வேண்டும் *(குடிஅரசு, 21.9.46).* தங்கள் வாழ்க்கைக்குத் தாங்களே ஒரு வழி வகுத்துக் கொள்ள வேண்டும் *(குடிஅரசு, 8.12.31).*

பெண்களுக்குச் சுதந்திர உணர்வும் உலக ஞானமும், கல்வியறிவும் ஏற்பட்டு விட்டால் மனித சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளில் பெரும்பங்கு நிறைவேற்றப்பட்டதாகிறது *(குடிஅரசு, 28.4.35).*

**இன்றைய நிலை**

பெண்கள் இன்று பலதுறைக் கல்வியும் பலதுறைப் பதவிகளும் பெற்றுள்ளனர். சொத்துரிமை உள்ளது. மணமுறிவு, மறுமணம், கைம்பெண் மணம் போன்ற உரிமைகளும் உள்ளன. உடைகளிலும் அணிகளிலும் எளிமை சார்ந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது. ஆனால் இவற்றை ஏற்பதில் விரைவு இல்லை. ஏனெனில் பெண்கள் சமுதாயத்தில் சிறுபான்மையினரே இந்த மாற்றங்களை உணர்ந்து ஏற்றுள்ளனர். பெரும்பாலோர் இன்றும் தயக்கத்துடன் பின்தங்கியுள்ளனர். காலமாற்றம் பெரியார் வழியில் பெண்களுக்கு நல்வழி காட்டும்.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2 | 110.00 |
| எட்டையபுரப் பள்ளு | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| நானும் என் எழுத்தும் | 50.00 |
| தமிழர் கொடிகள் | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி-2 | 55.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |

Pub.No. 418 தமிழக மகளிரியல் 80.00